ஸ்ரீ ஜினாய நம:

சமண அறப் பண்பாடு

(வினா விடை விளக்கு)

பகவான் அஜிதநாதர், ஸ்ரீ விசாகாசாரியர் தபோநிலையம், பொன்னூர் மலை

கடவுள் வாழ்த்து

ஜைன அறமே பவ்விய மக்களுக்கு நீதிநெறி நகையாம் **I**
அறத்தை கிரஹிக்கும் வாழ்க்கை முறையே ஆன்ம உயர்வுக்கு வழியாம் **II**
மும்மணி தரிக்கும் பவ்விய மக்கள் மஹாவீரரை வணங்குவரே **I**
ஜைன ஆகமம் வழிகாட்ட முக்தி நகர் நோக்கி விழைவாரே **II**

அதிகாரம் – 1

ணமோகார மந்திரத்தின் மகிமை

ணமோகார மந்திரம் 'தவளா' முதலான மிக உயர்ந்த ஸித்தாந்த நூல்களில் மிகுந்த சிரத்தையுடன் கடவுள் வாழ்த்தாக எழுதப்பட்டுள்ளது. வீரசேனாச்சாரியார் இம்மந்திரத்தை கட்டளை கடவுள் வாழ்த்தாக கூறி இது அசங்யாத (எண்ணிக்கையால் சொல்லமுடியாத) மடங்கு கர்ம நிர்ஜரை (அழித்தல்) செய்யவல்ல மகிமை வாய்ந்தது என்றும் இம்மந்திரத்தை எந்த நிலையிலும் சிந்தனை செய்ய வேண்டும் என்று வேண்டியுள்ளார். இப்படிப்பட்ட முதலும் முடிவும் இல்லாத ணமோக்கார மந்திரத்தின் இரகசியத்தை எல்லா பவ்வியர்களும் தெரிந்து கொள்வது மிக அவசியமாகும் என்பதால் 'ணமோகார மந்திரத்தின் மகிமை' என்ற முதல் அதிகாரம் பரம மங்கல வடிவமாக வைக்கப்பட்டுள்ளது.

1. மங்கலாசரணம் என்று எதை கூறுவார்கள்?

மிக உயர்ந்த பூஜிக்கத்தக்க ஐந்து பரமேஷ்டி வடிவ இஷ்ட தெய்வங்களுக்கு கூறும் வணக்கத்தை மங்கலாசரணம் என்று கூறுவர்.

2. மங்கலாசரணம் ஏன் கூறப்படுகிறது?

நாம் செய்யும் சுபகாரியம் இடையூறுகள் ஏதுமின்றி இனிதே முடிவடைய வேண்டும் என்ற பாவனையுடன் மங்கலாசரணம் கூறப்படுகிறது.

3. மங்கல் என்ற சொல்லுக்கு என்ன பொருள் ?

மங்கல் என்ற சொல்லுக்கு அறநூல்களில் இரண்டு விதமாக பொருள் கொடுக்கப்பட்டுள்ளது. முதல் பொருள்: மம் + கல் = மங்கல், மம் – பாபம், கல் – (கலயதீதி) நஷ்டம் செய்வது (அ) அழிப்பது. அதாவது பாபத்தை அழிப்பது மங்கல். இரண்டாவது பொருள்: மங்க + ல = மங்கல், மங்க – சுகம், ல–(லாதீதி) கொண்டுவருவது. அதாவது சுகத்தை கொண்டு வருவது மங்கல்.

4. மங்கலாசரணம் கூறுவதனால் நற்காரியங்கள் எப்படி இடையூறுகள் இன்றி முடிவடைகின்றன?

நாம் சுபகாரியம் செய்யும் போது நம்முடைய பாப கர்மத்தின் தீவிர உதயம் இருக்குமானால் இடையூறு ஏற்படுகிறது. ஆனாலும் நாம் உத்தம பாவனையுடன் மங்கலாசரணம் கூறும் போது நம் பாப கர்மத்தின் அழிவும் புண்ணிய கர்மத்தின் பெருக்கமும் நிகழ்கிறது. இப்படி பாப கர்மத்தின் ஆற்றல் குறைவதாலும், புண்ணிய கர்மத்தின் ஆற்றல் பெருகுவதாலும், பாப கர்ம தீவிர உதயத்தால் நிகழவிருந்த இடையூறு தூர விலகிப் போய் விடுகிறது. இதனால் நாம் செய்யும் நற்காரியங்கள் எந்தவித இடையூறும் இன்றி இனிதே நிறைவேறுகின்றன.

5. எல்லா மங்கலங்களிலும் முதன்மையான மங்கலம் எது?

எல்லா மங்கலங்களிலும் முதன்மையான மங்கலம் பஞ்ச ணமோகார மந்திரமாகும்.

6. பஞ்ச ணமோகார மந்திரம் என்று எதைச் சொல்லுவர்?

ணமோ அரஹந்தாணம், ணமோ ஸித்தாணம்
ணமோ ஆயிரியாணம், ணமோ உவஜ்ஜாயாணம்
ணமோ லோஎ ஸவ்வ ஸா ஹூணம்.

ஐந்து உயர்ந்த பஞ்ச பரமேஷ்டிகளுக்கு (இஷ்ட தேவதைகளுக்கு) நமோஸ்து (வழிபாடு) கூறுகின்ற தோற்றமும் அழிவும் இல்லாத மந்திரத்தை பஞ்ச ணமோகார மந்திரம் என்று சொல்வர்.

7. **ணமோகார மந்திரத்தில் எத்தனை பதங்கள், எழுத்துக்கள் மற்றும் மாத்திரைகள் உள்ளன?**

ணமோகார மந்திரத்தில் ஐந்து பதங்கள், 35 எழுத்துக்கள் மற்றும் 58 மாத்திரைகள் உள்ளன.

8. **பரமேஷ்டி என்று யாரைச் சொல்லுவர்?**

உலகத்தில் யாரெல்லாம் மிகச்சிறந்த அதாவது மிக உயர்ந்த பதவியில் (குண நிலையில்) இருக்கின்றார்களோ அப்படிப்பட்ட அரஹந்தர், சித்தர், ஆசாரியர், உபாத்யாயர் மற்றும் சாது (முனி) களை பரமேஷ்டி என்று சொல்லுவர்.

9. **அரஹந்த பரமேஷ்டி என்று யாரைச் சொல்லுவர்?**

யார் நான்கு காதி கர்மங்களையும் வேரோடு அழித்தவரோ, மேலும் பசி முதலான பதினெட்டு குற்றங்களும் அற்ற, விறுப்பு வெறுப்பற்ற (வீதராக) முழுதுணர்ஞானி (ஸர்வக்ஞர்) யரை அரஹந்த பரமேஷ்டி என்று சொல்லுவர்.

10. **அரஹந்த பரமேஷ்டி எத்தனை குணங்கள் உடையவர் ? அக்குணங்களின் பெயர்கள் யாவை?**

அரஹந்த பரமேஷ்டி பிறந்ததிலிருந்து (முக்தி அடையும் வரை) பத்து இயல்பாதிசய குணங்களையும், கேவலஞான உற்பத்தி சமயத்திலிருந்து பத்து கர்ம க்ஷயாதிசயகுணங்களையும் உடையவர். அந்த சமயத்திலிருந்தே தேவர்களால் செய்யப்படும் பதிநான்கு தெய்வீகாதிசய குணங்களும், மேலும் இந்திரனால் ஆக்கப்படும் எண்வகை அற்புத குணங்களும் நான்கு காதிகர்மங்களின் நிரந்தர அழிவால் உண்டாண நான்கு அனந்த நான்மை குணங்களுமாக மொத்தம் 46 குணங்கள் உடையவர். அவைகளாவன :

இயல்பாதிசய குணங்கள் : 10

1. ஸௌரூப்ய	–	மிக அழகான உடலோடு இருத்தல்
2. ஸௌரப	–	மிகு நறுமணமுள்ள உடலோடு இருத்தல்
3. நி:ஸ்வேதத்வ	–	வியர்வை இல்லாத உடலோடு இருத்தல்
4. நிர்மலத்வ	–	மலம், மூத்திரம் இல்லாத உடலோடு இருத்தல்
5. பிரிய ஹித வாதித்வ	–	இனிய இத, மித வசனம் பேசுபவராக இருத்தல்
6. அப்ரமித வீர்யத்வ	–	வரம்பற்ற வலிமை உடையவராக இருத்தல்
7. க்ஷீர கௌர ருதிரத்வ	–	பால் போல வெண்மை நிற இரத்தம் அவர் உடலில் இருத்தல்
8. ஸௌலக்ஷண்ய	–	அவர் உடலில் 1008 சுப லக்ஷணங்கள் இருத்தல்.
9. ஸம சதுரஸ்ர ஸமஸ்தான	–	தொப்புளுக்கு மேலும் கீழும் சமமாகவும் உத்தம வடிவான அழகான அவயவயங்களுடன் உடைய உடலில் இருத்தல்.
10. வஜ்ர வ்ருஷப நாராச ஸம்ஹனன	–	வஜ்ரம் போன்ற கட்டுக் கோப்பான அமைப்புடனும், எந்த ஆயுதத்தாலும் அழிக்க முடியாத உடலை பெற்றிருத்தல்.

கர்மக்ஷயாதிசய குணங்கள் : 10

1. ஸுபிக்ஷதா – அரஹந்தர் இருக்குமிடத்திலிருந்து 400 கோசம் தூரம் வரை பூமி பஞ்சமின்றி செழிப்பாக இருத்தல்.
2. ககன கமனம் – அரஹந்தர் தன் பாதம் பூமியில் படாமல் வான்வழி செல்லுதல்.
3. அப்ராணிவத – அரஹந்த பகவான் இருக்குமிடத்தில் எந்த பிராணிக்கும் ஹிம்சை நிகழாதிருத்தல்.
4. புக்தி அபாவ் – பகவானுக்கு நால்வகை உணவையும் உண்ணவேண்டும் என்ற பாவனை இல்லாமலிருத்தல் அதாவது பசி இல்லாமை.
5. உபஸர்க அபாவ் – பகவானுக்கு தேவர், மனிதர், விலங்கு, இயற்கை ஆகிய எதனாலும் இடையூறு (உபஸர்கம்) இல்லாதிருத்தல்.
6. சதுரஸ்யத்வ – நான்கு திசைகளிலும் பகவானின் முகதரிசனம் கிடைத்தல்.
7. ஸர்வ வித்யேச்வரதா – எல்லா வித்தைகளுக்கும் பகவான் முதல்வராதல்.
8. அச்சாயத்வ – பகவான் உடம்பு பளிங்குபோல் உள்ளதால் நிழல் இல்லாமலிருத்தல்.
9. அபக்ஷ்மஸ் பந்தத்வ – பகவானின் கண் இமைகள் இமைக்காதிருத்தல்.
10. ஸம்பிரஸித்த நக கேசத்வ – பகவானுடைய முடியும் நகமும் வளராது அப்படியே இருத்தல்.

தேவர்களால் செய்யப்படும் தெய்விகாதிசய குணங்கள்:14

1. ஸர்வார்த மாகதி பாஷா – எல்லா உயிர்களும் அமிழ்து உண்டதுபோலக் கேட்டு மகிழும் மொழி வெளிப்படுதல். அதாவது திவ்யத்தொணி எல்லா உயிர்களும் புரிந்து கொள்ளும்படி அவரவர்கள் மொழியில் வெளிப்படுதல்.
2. ஸர்வமைத்ரீ – இயல்பான பகை உணர்வுடைய உயிர்களிடத்திலும் பரஸ்பர நட்புணர்வு உண்டாதல். அதாவது புலியும் பசுவும் எந்தவிதப்பகை உணர்வுமில்லாமல் இருத்தல்.
3. தசதிசா நிர்மலதா – பத்துதிசைகளும் புகை, தூசு, இருட்டு முதலிய எந்த மலமுமில்லாமல் தூய்மையோடு விளங்குதல்.
4. நிரமல ககன் – பகவான் ஸ்ரீவிகார காலத்தில் வானம் மேக மூட்டங்கள் இல்லாமலிருத்தல்.
5. ஸர்வருதுஃபலபுஷ்பாதிதர்ஸதவ – எல்லா பருவகால பூ, பழங்கள் மரங்களில் தோன்றுதல், எல்லா வகை தானியங்களும் பூமியில் தோன்றுதல்.
6. ஆதர்ஷவத் பூமி தர்ஷத்வ – பூமி இரத்னமயமாகவும், அருமணிகள் நிறைந்த வடிவமாகவும் கண்டதும் மனம் மகிழத்தக்க வகையில் இருத்தல்.
7. ஸ்வர்ண கமல ரசனா – பகவான் ஸ்ரீ விகாரம் செய்யும் போது அவர் தம் திருவடியின் கீழ் அழகிய பொன் தாமரை மலர்கள் அமைதல் .
8. ஜய ஜய த்வனி – ஆகாயத்தில் ஜய ஜய கோஷம் ரீங்காரமிடுதல்.
9. மந்தஸுகந்தித்வாயுப்ரவாஹ் – பகவான் ஸ்ரீ விகாரம் செய்யும் திசையில் மென்மையான

நறுமணமிக்க தென்றல் போன்ற காற்று வீசுதல்.

10. கந்தோதக வ்ருஷ்டி – தேவர்கள் நறுமணமுள்ள கந்தோதக நீரைத் தெளித்தல்.
11. பூதல நிர்மலதா – பூமியில், தூசு, முள், புல், கல், புழு, பூச்சி முதலிய எந்த அசுத்தமும் இல்லாமல் இருத்தல்.
12. ஸர்வ ஜன பரமானந்தம் – எல்லா உயிர்களும் பரம ஆனந்தத்தை அடைதல்.
13. அக்ரகாமி தர்மசக்ர – பகவானுக்கு முன்னே சூரிய ஒளியை மிஞ்சும் 1000 ஆரக்கால் உடைய தர்மசக்கரம் செல்லுதல்.
14. அஷ்டமங்கலத்ரவ்யஸஂஹோ – பகவானுக்கு முன் 1. ஸ்வஸ்தீகம் 2. கலசம் 3. கொடி 4. சாமரை 5. ஜாரி 6. கண்ணாடி 7. விசிறி 8. குடை ஆகிய எட்டு வகை மங்கலப் பொருள்கள் விளங்குதல்.

அஷ்ட மஹாப்ராதிஹார்யங்கள் தொடர்பான குணங்கள் : 8

1. அசோக விருக்ஷம் – பசுமை நிறைந்த தாழ்ந்த கிளைகளுடன் கூடிய சோகத்தை நீக்கி இன்பத்தை தரும் குளிர்ந்த நிழல் கொடுக்கக்கூடிய அசோகமரம் பகவான் இருக்குமிடத்தில் சோபித்தல்.
2. ரத்ன ஜடித சிம்மாஸன் – இரத்தினங்கள் பதித்த ஸிம்மாசனம் பகவானுக்கு கீழே விளங்குதல்
3. சத்ரத்ரயம் – நிலவு ஒளிக்கு சமமான ஒளிவிடும் முக்குடை பகவானுக்கு மேல் விளங்குதல்.
4. ப்ரபா மண்டலம் – உயிர்களின் முக்காலத் தொடர்பான ஏழு ஏழு பிறவிகளைக் காட்டும் நிர்மல அமிழ்த கடல் போன்ற தூய்மையான கண்ணாடி போல விளங்கும் பிரபா மண்டலத்துடன் கூடி பகவான் அற்புத அழகோடு விளங்குதல்
5. சாமரை – கடகம், கடி சூத்ரம், குண்டலம் பலவகை அணிகளோடு கூடிய வியந்தர தேவர்கள் பகவானின் இரு பக்கமும் ஆகாயத்தில் மிதந்த வண்ணம் 64 சாமரைகளை வீசுதல்
6. திவ்ய த்வனி – பவ்வியர்களின் செவிகளில் அவர்களின் உயிரினும் மேலான இனிய ஜினேந்திர பகவானின் திவ்யத்வனி தெளிவாக ஒலித்தல்.
7. திவ்ய புஷ்ப விருஷ்டி – பகவானுக்கு அக்கம்பக்கத்தில் மேலே ஆகாயத்தில் இருந்து தேவர்கள் தூய மலர்களை மழையாகப் பொழிதல்
8. தேவதுந்துபி – மனதை ஆனந்தம் கொள்ளச் செய்யும் இனிய துந்துபி நாதத்தை தேவர்கள் வானத்திலிருந்து இசைத்தல்.

அனந்த சதுஷ்டய தொடர்பான குணங்கள் : 4

1. அனந்த ஞானம் – ஞான மறைப்பு வினை மீண்டும் பற்றாவண்ணம் வேரோடு நீக்கியதால் உலகம் மற்றும் அலோகத்தை ஒருசேர அறியும் அனந்த ஞானம் உடையவராக பகவான்விளங்குதல்.
2. அனந்த தரிசனம் – தர்சனமறைப்பு வினை மீண்டும் பற்றாவண்ணம் வேரோடு நீக்கியதால் அனந்த தரிசனம் உடையவராக பகவான் விளங்குதல்.

3. அனந்த வீர்யம் – வீரிய மறைப்பு வினை(அந்தராய வினை) மீண்டும் பற்றாவண்ணம் வேரோடு நீக்கியதால் அனந்த ஆற்றல் (வீர்யம்) உடையவராக பகவான் விளங்குதல்.

4. அனந்த ஸுகம் – மோஹனீய வினை மீண்டும் பற்றாவண்ணம் வேரோடு நீக்கியதால் அனந்த சுகத்தை உடையவராக பகவான் விளங்குதல்.

11. ஸித்த பரமேஷ்டி என்று யாரைச் சொல்லுவர்?

யார் எட்டு கர்மங்களும் இல்லாமல் இருப்பவரோ, யார் அருவமாக இருப்பவரோ, யார் ஸித்தாலயத்தில் எழுந்தருளியுள்ளாரோ அவரை ஸித்த பரமேஷ்டி என்று சொல்லுவர்.

12. ஸித்த பரமேஷ்டிக்கு எத்தனை குணங்கள்? அக்குணங்களின் பெயர்கள் யாவை?

ஸித்த பரமேஷ்டிக்கு எட்டுகுணங்கள். அவை :

1. ஸம்யக்த்வம் 2. ஞானம் 3. தர்ஸனம் 4. வீர்யம் 5. சூக்ஷமத்வம் 6. அவகாஹனத்வம் 7. அகுருலகுத்வம் 8. அவ்யா பாதத்வம்.

13. யாரை ஆசாரிய பரமேஷ்டி என்று அறிதல் வேண்டும்?

யார் ஐந்து ஆசாரங்களை (ஒழுக்கங்களை)யும், முனிகளது 28 மூலகுணங்களையும் குற்றமின்றி காத்து மூன்று குப்தி (அடக்கம்)களை கடைபிடித்து மேலும் முனி முதலான சீடர்களுக்கு தீக்ஷையும், சிக்ஷையும் கொடுக்கிறாரோ அவரை ஆசாரிய பரமேஷ்டி என்று அறிதல் வேண்டும்.

14. ஆசாரிய பரமேஷ்டிக்கு எத்தனை குணங்கள்? அவைகள் யாவை?

ஆசாரிய பரமேஷ்டிக்கு 12 தவம், 6 ஆவஸ்யகம் (அவசிய கடமைகள்) 5ஆசாரம் (ஒழுக்கம்), 10 தர்மம், மேலும் 3 குப்தி முதலான 36 மூலகுணங்களாகும்.

பன்னிரண்டு தவங்கள்: 1. அனசனம் (உபவாசம்) 2. அவமௌதர்யம் 3. விருத்தி பரிஸங்க்யானம் 4.ரஸபரித்தியாகம் 5. விவிக்த சய்யாசனம் 6.காயக்கிலேசம்.
7. பிராயச்சித்தம் 8. விநயம் 9. வையாவ்ருத்யம் 10. சுவாத்யாயம் 11. வியுத்சர்கம் 12. தியானம்.

ஆறு ஆவஸ்யகங்கள் : 1. சாமாயிகம் 2. ஸ்துதி 3. வந்தனா 4. பிரதிக்ரமணம்
5. பிரத்யாக்யானம் 6. காயோத்ஸர்கம்

ஐந்து ஆசாரமாவன: 1. ஞானாசாரம் 2.தர்சனாசாரம் 3.சாரித்ராசாரம் 4.தபாசாரம்
5. வீர்யாசாரம்.

பத்து தர்மங்கள்: 1. உத்தம க்ஷமா, 2. உத்தம மார்தவம், 3. உத்தம ஆர்ஜவம், 4. உத்தம சௌச்சம், 5 உத்தம சத்தியம், 6. உத்தம சம்யமம், 7. உத்தம தபம், 8. உத்தம தியாகம், 9. உத்தம ஆகின்ஞன்யம், 10. உத்தம பிரம்மச்சரியம்

மூன்று குப்திகளாவன (அடக்கங்கள்) : 1. மன குப்தி 2. வசன குப்தி 3. காயகுப்தி.

15. உபாத்யாய பரமேஷ்டி என்று யாரைச் சொல்லுவர்?

யாருக்கு முனிகளுக்குரிய 28 மூல குணங்களோடு கூடி பதினோரு அங்கம், பதினான்கு பூர்வம் ஆகியவைகளில் ஞானம் உள்ளவரோ அவரை உபாத்யாய பரமேஷ்டி என்று சொல்லுவர்.

16. உபாத்யாய பரமேஷ்டிக்கு எத்தனை குணங்கள்? அவற்றின் பெயர்கள் யாவை?

உபாத்யாய பரமேஷ்டிக்கு 25 குணங்கள் உள்ளன. (11 அங்கமும் 14 பூர்வமும் அறிதலினால் இவ்வாறு கூறப்படுகிறது. இவை அல்லாது 28 முனிக்குரிய மூல குணங்களையும் இவர் உடையவரே)

பதினோரு அங்கமாவன: 1. ஆசாராங்கம் 2. சூத்ரக்ருதாங்கம் 3. ஸ்தானாங்கம் 4. ஸமவாயாங்கம்5. வியாக்யா ப்ரஞ்ஜப்தியாங்கம் 6. தர்மகதாங்கம் 7. உபாஸகாத்யனாங்கம். 8. அந்தக்ருததசாங்கம் 9. அனுத்தரௌபபாதிக தசாங்கம் 10. ப்ரசனவ்யாகரனாங்கம் 11. விபாகசூத்ராங்கம்.

பதினான்கு பூர்வங்கள்: 1. உத்பாத பூர்வம் 2. அக்ராயணிய பூர்வம் 3. வீர்யானுப்ரவாத பூர்வம் 4. அஸ்தி நாஸ்தி ப்ரவாத பூர்வம் 5. ஞான ப்ரவாத பூர்வம் 6. ஸத்யப்ரவாத பூர்வம் 7. ஆத்மப்ரவாத பூர்வம் 8. கர்மப்ரவாத பூர்வம் 9. ப்ரத்யாக்யான பூர்வம் 10. வித்யானுப்ரவாத பூர்வம் 11. கல்யாணவாத பூர்வம் 12. பிராணவாத பூர்வம் 13. கிரியா விசால பூர்வம் 14. லோக பிந்து ஸாரபூர்வம்.

17. ஸாது பரமேஷ்டி என்று யாரைக் கூறுவர்?

எந்த திகம்பரமுனி ஐம்புல நுகர்பொருள்களை தியாகம் செய்துள்ளாரோ, யார் குடும்ப வேலைகளையும், குடும்பம் செய்ய தேவையான பொருள்களையும் தியாகம் (பற்று விடுதல்) செய்துள்ளாரோ, மற்றும் ஞானம், தியானம், மற்றும் தபத்தில் லயித்து இருக்கிறாரோ அப்படிப்பட்ட மஹாபுருடரை ஸாது பரமேஷ்டி என்று கூறுவர்.

18. ஸாது பரமேஷ்டிக்கு எத்தனை குணங்கள்? அக்குணங்களின் பெயர்கள் யாவை?

ஸாது பரமேஷ்டிக்கு 28 மூலகுணங்கள் உள்ளன. அவைகளாவன 5 மஹாவிரதம், 5 சமிதி, 5 இந்திரிய நிரோதம், 6 ஆவஸ்யகம் மற்றும் பிற 7 குணங்கள் எல்லாம் சேர்த்து 28 மூலகுணங்களாகும்.

ஐந்து மகாவிரதங்கள்: 1. அகிம்ஸா மகாவிரதம், 2. ஸத்ய மகாவிரதம், 3.அசௌர்ய மகாவிரதம் 4. பிரம்மசர்ய மகாவிரதம் 5. அபரிக்ரக மகாவிரதம்.

ஐந்து இந்திரிய நிரோதங்கள்: 1. ஸ்பர்சன இந்திரிய நிரோதம் 2. ரசன இந்திரிய நிரோதம், 3. க்ராணேந்திரிய நிரோதம், 4.சக்ஷு இந்திரிய நிரோதம், 5. கர்ணேந்திரிய நிரோதம்.

ஐந்து சமிதிகள்: 1. ஈர்யா சமிதி, 2. பாஷா சமிதி, 3. ஏஷணா சமிதி, 4. ஆதான நிக்ஷேபணா சமிதி, 5. பிரிதிஷ்டாபன சமிதி.

ஆறு ஆவஸ்யகம்: 1. சாமாயிகம், 2. சதுர்விம்ஸதிஸ்தவன், 3. வந்தனை 4. பிரதிகிரமணம், 5. பிரத்யாக்யானம், 6. காயோத்ஸர்கம்.

பிற ஏழு குணங்கள்: 1. கேசலோசனம், 2. நிர்வாணம், 3. குளிக்காமை, 4. தரையில் படுத்தல், 5. பல் விளக்காமை, 6. நின்று கொண்டு தன் கைகளையே பாத்திரமாகக் கொண்டு உணவு உண்ணுதல், 7. ஒருநாளில் ஒரு வேளை மட்டும் உணவு உண்ணுதல்.

19. எட்டு வினைகளையும் கெடுத்த ஸித்த பரமேஷ்டி குணங்கள் நோக்கில் எல்லாரைக் காட்டிலும் உயர்ந்தவர் என்று கூறப்படுகிறார். பிறகு ணமோகார மந்திரத்தில் ஸித்தருக்கு முன்னே அரஹந்த பரமேஷ்டிக்கு ஏன் வணக்கம் கூறப்படுகிறது?

அரஹந்த பரமேஷ்டி தம் திவ்யத்வனி மூலம் பவ்விய உயிர்களுக்கு மோக்ஷ நெறியை அருளுகிறார். வீதராக நிலையில் உடலோடு கூடி இருந்து நாம் பார்ப்பதற்கு ஆதாரமாக விளங்குகிறார். ஆகையால் ணமோகார மந்திரத்தில் ஸித்த பரமேஷ்டிக்கு முன்னர் அரஹந்த பரமேஷ்டிக்கு வணக்கம் கூறப்படுகிறது.

20. ஸர்வக்ஞன் (முற்றுணர்ந்தவன்) என்று யாரை குறிப்பிடுகின்றனர்?

யார் லோக அலோகங்களையும், அவற்றின் முக்கால (இறந்த, நிகழ், வருங்கால) நிலை

வேறுபாடுகள் அனைத்தையும் ஒருசேர ஒரே சமயத்தில் அறிபவரோ அவரை ஸர்வக்ஞன் (முற்றுணர்ந்தவன்) என்று குறிப்பிடுகின்றனர்.

21. உலகில் எத்தனை மங்கலங்கள், எத்ததை உத்தமங்கள் எத்தனை அடைக்கலங்கள் உள்ளன?

உலகில் அரஹந்தர், ஸித்தர், ஸாது மற்றும் கேவலி அருளிய தர்மம் (ஸாஸ்திரம்) என இந்த நான்குமே மங்கலங்கள், நான்குமே உத்தமங்கள், நான்குமே அடைக்கலங்கள் ஆகும்.

22. ஐந்து பரமேஷ்டிகளில் எத்தனை பரமேஷ்டிகளுக்கு தேவர் என்று பெயர்? எத்தனை பரமேஷ்டிகளுக்கு குரு என்று பெயர்?

ஐந்து பரமேஷ்டிகளில் அரஹந்தர், ஸித்தர் இவ்விரு பரமேஷ்டிகளுக்கும் தேவர் என்று பெயர். ஆசாரியர், உபாத்தியாயர், ஸாது ஆகிய மூன்று பரமேஷ்டிகளுக்கும் குரு என்று பெயர்.

23. அரஹந்த பிரதிமாவுக்கு (பிம்பத்துக்கு) அடையாளம் என்ன?

அரஹந்த பிரதிமாவுக்கு எட்டு பிரதிஹார்யங்கள் மற்றும் வீதராகத் தன்மை அடையாளமாகும்.

24. திகம்பர குருவுக்குப் புற அடையாளம் என்ன?

திகம்பர குருவுக்கு புற அடையாளம் ஆடை உடுத்தாமை (நிர்வாணமாக இருத்தல்), மயிர் பறித்தல் (தலை மற்றும் முகத்தில் உள்ள தாடி, மீசை முடிகளை தன் கையால் இரண்டு மாதத்துக்கு ஒரு முறை நீக்குதல்) சுத்திக்காக கமண்டலமும், உயிர்களை காப்பாற்ற பிஞ்சமும் வைத்திருத்தல், மற்ற பற்றுக்கள் ஏதும் இல்லாமை ஆகும்.

25. அரஹந்த பரமேஷ்டி உணவு (கவளாஹாரம்) உண்ணுகிறாரா?

அரஹந்த பரமேஷ்டி பசி முதலான குற்றங்கள் இல்லாத கேவலியாவார். அவருக்கு பசி உணர்வு எப்பொழுதும் வருவதில்லை, ஆகையால் அவர் எப்பொழுதும் உணவு உண்பதில்லை.

26. ஒவ்வொரு மனிதனும் பஞ்ச பரமேஷ்டி பதவியை அடையமுடியுமா என்ன?

ஆம், எந்த பவ்விய மனிதர் இல்லறத்தை துறந்து ஐந்து பெரிய பாபங்களை (கொலை முதலான) முழுவதுமாகத் தியாகம் செய்கிறாரோ அவர் நிச்சயமாக பஞ்ச பரமேஷ்டி பதவியை அடைய முடியும்.

27. ணமோகார மந்திரத்தின் பெருமை என்ன?

ணமோகார மந்திரத்தின் பெருமை தொடர்பாக ஆசாரியர் கூறியுள்ளார்.

ஏஸோ பஞ்ச ணமோயாரோ, ஸவ்வ பாவப்பணாஸனோ ।
மங்களாணம் ச ஸவ்வேஸிம் படமம் ஹோஇ மங்கலம் ॥

பொருள்: இந்த பஞ்சணமோகார மந்திரம் எல்ல பாபங்களையும் (அசுப வினைகளையும்) கெடுக்க வல்லது, எல்லா மங்கலங்களிலும் முதன்மையான மங்கலம் ஆகும். மேலும் மூலாசார் நூலிலும்

அரஹந்த ணமோக்காரம் பாவேண ய ஜோ கரதே பயதமதீ ।
ஸோ ஸவ்வ துக்க மோக்கம் பாவதி, அசிரேண காலேண ॥ (506)

என்று கூறப்பட்டுள்ளது.

பொருள்: எந்த முயற்சியுடைய பவ்விய உயிர் பாவனையுடன் அரஹந்தரை வணங்குகிறதோ அந்த உயிர் வெகு விரைவில் எல்லா துக்கங்களில் இருந்தும் விடுதலை அடைகிறது.

28. ணமோகார மந்திரத்தை சிந்திக்க குறிப்பிட்ட சமயம் உண்டா?

இல்லை! ணமோகார மந்திரத்தைச் சிந்திக்க குறிப்பிட்ட சமயம் என்று ஏதும் இல்லை

என்று தவளா நூலுள் குறிக்கப்பட்டுள்ளது. உண்ணும்போதும், உட்காரும் போதும், எழுந்திருக்கும் போதும், நடக்கும் போதும், சுற்றும்போதும், நலமாக இருக்கும் போதும், நலம் குன்றி இருக்கும் போதும் என எப்போது வேண்டுமானாலும் ணமோக்கார மந்திரத்தை முயற்சியுடன் சிந்திக்க முடியும்.

29. 'அரஹந்த், 'அரிஹந்த், 'அருஹந்த்'– இவற்றின் பொருள் என்ன?

அரஹந்த் – பூஜைக்குத் தகுதியுடையவர்
அரிஹந்த் – வினைப் பகைவரை அழித்தவர்
அருஹந்த் – மீண்டும் பிறவியில் பிறக்காதவர்

30. பஞ்ச பரமேஷ்டிகளை ஒருங்கே சேர்த்து கூறும் மங்கல எழுத்தினைக் கூறுக?

'ஓம்' என்ற மங்கல எழுத்தில் பஞ்ச பரமேஷ்டிகள் அடங்கியுள்ளனர்.

31. 'ஓம்' என்ற மங்கல எழுத்தில் பஞ்ச பரமேஷ்டிகள் எவ்வாறு அடங்கியுள்ளனர் என்பதை இலக்கண முறையில் விளக்குக?

'ஓம்' என்ற மங்கல எழுத்தில், பஞ்ச பரமேஷ்டிகளின் முதல் எழுத்துக்கள் இலக்கண முறையில் சேர்ந்து உள்ளது.

அரஹந்த பரமேஷ்டியில்	–	'அ'	அ + அ + ஆ + உ + ம் = ஓம்
ஸித்த (அசரீரி) பரமேஷ்டியில்	–	'அ'	என எழுத்துக்கள் எடுக்கப்பட்டு,
ஆசாரிய பரமேஷ்டியில்	–	'ஆ'	இலக்கண விதிப்படிச் சேர்த்து
உபாத்யாய பரமேஷ்டியில்	–	'உ'	"ஓம்" மங்கல எழுத்து
ஸாது (ம்முனி) பரமேஷ்டியில்	–	'ம்'	நிறுவப்பட்டுள்ளது

ஜைன ஆசாரியர் இயற்றிய 'காதந்த்ர' இலக்கணத்தில் 24ஆம் சூத்திரமாக 'ஸமான:ஸ்வர்ணேன தீர்கி பவதி பரச்ச லோபம்' உள்ளது. இதன் பொருள் ஒரே ஒலி உடைய சமான எழுத்துக்கள் சேரும் போது நெடிலாகிவிடும் என்பதாம். ஸித்த பரமேஷ்டியை 'அசரீரி' என்றும் கூறுவர். அசரீரியில் முதல் எழுத்தான 'அ'வும், அரஹந்தர் முதல் எழுத்தான 'அ'வும் சேர்ந்து 'ஆ' என்று நெடிலாகியது. இந்த 'ஆ'வுடன் ஆசாரியரில் உள்ள 'ஆ'வும் சேரும்போது இலக்கண விதிப்படி ஒரு 'ஆ வில் மற்றொறு 'ஆ' மறைந்துவிடுகிறது. நின்ற 'ஆ' வோடு உபாத்யாயரில் உள்ள முதல் எழுத்தான 'உ'வும் 'ம்முனி'யில் உள்ள முதல் எழுத்தான 'ம்' சேர்ந்து 'ஓம்'ஆயிற்று. 'காதந்த்ர' இலக்கண சூத்திரம் 30ல் உவர்ணே ஓ' என்பதால் 'ஆ' எழுத்துடன் 'உ' எழுத்து சேரும் போது 'ஓ' ஆக மாற்றமடைகிறது. 'ஓ' எழுத்தும் 'ம்முனி' என்பதில் உள்ள முதல் எழுத்தான 'ம்' சேர்ந்து 'ஓம் ஆகிறது. இப்படி 'காதந்த்ர' சமஸ்க்ருத மொழி இலக்கணப்படி பஞ்சபரமேஷ்டிகளைக் குறிக்கும் 'ஓம்' என்ற சொல் உண்டாயிற்று. பஞ்ச பரமேஷ்டிகளைக் குறிக்கும் 'ஓம்' என்ற சொல்லின் தொடர்பாக நம் ஆகமத்தில் ஒரு பழமையான காதை உள்ளது.

அரஹந்தா அசரீரா ஆயிரியா தஹ உவஜ்ஜாயாமுணிணோ ।
படமக்கர நிப்பணோ ஓம் காரோ பஞ்சபரமேட்டீ ॥

இதன் பொருள்: அரஹந்தர், அசரீரி, ஆசாரிய, உபாத்யாய மற்றும் முனி இவற்றின் முதல் எழுத்துக்களால் பஞ்சபரமேஷ்டிகளைக் குறிக்கும் ஓங்காரம் அமைகிறது என்பதாம்.

32. ணமோக்கார மந்திரத்தை எவரிடம் யார் கேட்டு நல்ல கதியை அடைந்தனர்? எடுத்துக்காட்டுகள் கூறுக.

பார்சுவநாதர் இளவரசராக இருந்த போது ஆண்பெண் பாம்புகள் இறக்கும் தருவாயில்

அவர் வாயிலாக பஞ்ச மந்திரம் கேட்டு தேவகதியை அடைந்தன.
ஜீவேந்திர குமாரரிடம் பஞ்ச மந்திரம் கேட்ட நாய் தேவகதியை அடைந்தது.

33. ணமோக்கார மந்திரத்தை அவமதித்ததால் யார் கீழ்கதியை அடைந்தார்?

ணமோக்கார மந்திரத்தை எழுதி அதனைக் காலால் அழித்த சுபௌம சக்கரவர்த்தி நரக கதியை அடைந்தான்.

34. ணமோகார மந்திரத்தில் உறுதியான நம்பிக்கையாலும் அதன் பெருமையாலும் "ஆகாஸகாமினீ" வித்தையை சாதித்து பின் முக்தி அடைந்தவர் யார்?

ணமோகார மந்திரத்தின் பெருமையாலும் அதன் மீதான உறுதியான நம்பிக்கையாலும் திருடன் அஞ்சனன் ஆகாஸ காமினீ வித்தையைச் சாதித்து, பின் முனிவராகி களங்கமில்லா (நிரஞ்சன) முக்திப் பதவியை அடைந்தான்.

35. இரண்டரைத் தீவில் இருக்கும் மூன்று குறைந்த ஒன்பது கோடி முனிவர்கள் எண்ணிக்கையில் எந்தெந்த பரமேஷ்டிகள் உள்ளனர்?

இரண்டரைத் தீவில், உத்க்ருஷ்ட வடிவில் ஆறாவது குணஸ்தானத்தில் இருந்து பதினான்காவது குணஸ்தானம் வரையிலுள்ள உள்ள மூன்று குறைந்த ஒன்பது கோடி முனிவர்கள் எண்ணிக்கையில் அரஹந்தர், ஆசாரியர், உபாத்யாயர், ஸாது என்னும் நான்கு பரமேஷ்டிகளும் பொதுவாக அடக்கப் படுகின்றனர்.

36. ஸாது பரமேஷ்டியை முனி என்கின்றனர். ஆனால் மூன்று குறைந்த ஒன்பது கோடி முனிவர்கள் எண்ணிக்கையில் அரஹந்தர், ஆசாரியர், உபாத்யாயர் பரமேஷ்டிகளையும் ஏன் அடக்குகின்றனர்?

ஏனெனில் அரஹந்தர், ஆசாரியர், உபாத்யாயர் எனும் இம் மூன்று பரமேஷ்டிகளும் முனியைப் போல மஹாவிரதம், ஆடை உடுத்தாமை முதலான குணங்களைத் தரித்துள்ளனர். ஆகையால் பொதுவாகக் கூறும் போது இம்மூன்று பரமேஷ்டிகளும் முனி எனப்படுகின்றனர். சிறப்பாக எடுத்துப் பேசும்போது இவர்களை அரஹந்தர், ஆசாரியர், உபாத்யாயர் எனும் பதவிகளோடு சிறந்த குணப்பெயரால் அழைக்கப்படுகின்றனர். மேலும் கடைசியில் இப் பரமேஷ்டிகள் தங்கள் பதவிகளைத் துறந்து முனி நிலையிலேயே தவம் இயற்றி எட்டு வினைகளையும் கெடுத்து முத்தி அடைகின்றனர்.

*****

உஸஹோ சௌதஸ திவஸே துதினம் வீரஸரஸ்ஸஸே ஸானம்
மாஸேண யாவிணியித்தே ஜோ காதோ முநி ஸம்பண்ணோ
உஸஹோயா வாஸுபஜ்ஜோ ணேமி பல்லங்க வத்கயாஸித்தா
காவுஸ்ஸக் கேண ஜிணா ஸேஸா முக்தி ஸமாவண்ணா

பொருள் : முதல் தீர்தங்கரர் விருஷப தேவர் 14 நாட்களும், கடைசி தீர்தங்கரர் வர்த்தமானர் இரண்டு நாட்களும், இடையிலுள்ள 22 தீர்த்தங்கரர்கள் ஒரு மாதத்திலும் நான்காம் சுக்லத் தியானத்தில் (வியுப்ரதக்ரியாநிவர்தியில்) ஆழ்ந்து முக்தியடைந்தனர். வாஸுபூஜ்யர், நேமிநாதர் பல்யாங்காஸநத்திலும், மற்ற 22 தீர்தங்கரர்களும் காயோத்சர்கத்திலும் நான்காம் தியானத்தை செய்து முக்தி பெற்றனர்.

அதிகாரம் – 2

தீர்த்தங்கரை அறிதல்

எண்ணிலடங்கா பவ்வியர்களின் நன்மைக்கு காரணவடிவமான தீர்தங்கர பிரபுவின் வாழ்க்கை வரலாற்றையும் அவருடைய பாவனைகளையும் அறியாமல், நம்மால் உத்தம மங்கலத்தை அளிக்கவல்ல சமவசரணத்தின் சிறப்பு மற்றும் பஞ்சகலியாண மகிமைகளை பற்றி எப்படி தெரிந்து கொள்ளமுடியும்? எனவே தீர்தங்கார் அறிமுகம் என்ற இரண்டாவது அதிகாரம் எழுதப்பட்டுள்ளது.

1. தீர்த்தங்கரர் என்று யாரைச் சொல்லுவர்?

தீர்த்தங்கர நாம வினையினது சிறப்பால் யாருக்கு தேவர்களால் ஐந்து கலியாணங்களும் மற்றும் யார் கேவலியானவுடன் சமவஸரணம் அமைக்கப்படுகிறதோ அவரைத் தீர்த்தங்கரர் என்று கூறுவர்.

2. ஸாமான்ய அரகந்தருக்கும் தீர்த்தங்கர அரகந்தருக்கும் என்ன வேறுபாடு?

ஸாமான்ய அரகந்தருக்கும் தீர்த்தங்கர அரகந்தருக்கும் குணநோக்கில் ஏதும் வேறுபாடு இல்லை. ஆனால், ஸாமான்ய கேவலிக்குக் கலியாணங்களும் இல்லை; சமவஸரண அமைப்பும் இல்லை. தீர்த்தங்கர அரகந்தருக்கு சிறந்த புண்ணிய வினையான தீர்த்தங்கர நாமவினையின் உதயத்தால் கலியாணங்களும், சமவஸரண அமைப்பும் உண்டாகின்றன.

3. கலியாணம் என்று எதனைக் குறிப்பிடுகின்றனர்?

தேவேந்திரன் வந்து ரத்னமழை, ஜன்மாபிஷேகம், மற்றும் சிறப்பு பூஜைகள் முதலியன செய்கிறானோ அதனைக் கலியாணம் என்று கூறுவர்.

4. கலியாணம் எத்தனை? அவற்றின் பெயர்கள் யாவை?

கலியாணம் ஐந்து ஆகும். அவை 1. கர்ப கலியாணம், 2. ஜன்ம கலியாணம்,
3. தீக்ஷா கலியாணம், 4. கேவலஞான கலியாணம், 5. மோக்ஷ கலியாணம்.

5. தீர்த்தங்கரருக்குச் செய்யப்படும் கர்ப கலியாணம் பற்றிச் சுருக்கமாகக் கூறுக?

தீர்த்தங்கரராகப் பிறக்க இருக்கும் உயிர் நற்குல பெண்ணின் கருவிலே வந்து தங்குவதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே குபேரன் முதலான தேவர் கூட்டம் சௌதர்ம இந்திரன் ஆணைக்கு ஏற்ப, தேவ உலகில் இருந்து பூலோகத்துக்கு இறங்கி வந்து, நகரத்தை ரத்ன மாலை முதலானவற்றால் மிகச் சிறப்பாக ஒப்பனை செய்கின்றனர். தீர்த்தங்கரர் தாயாரின் அந்தப்புரத்தில் நாள்தோறும் நான்கு முறை 3½ கோடி ரத்னங்களைப் பொழிகின்றனர். ஒரு நாள் சுப முகூர்த்தத்தில் பின்னிரவில் தீர்த்தங்கரரின் தாய் பதினாறு கனவுகள் காணுகிறாள். தன் கணவரிடம் கனவுகளின் பலனைக் கேட்கிறாள். கணவனான அரசன் தீர்த்தங்கர உயிர் அரசியாகிய அவளின் கருவில் வந்து தங்கியுள்ளது என்று கூறக்கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறாள்.

தேவ உலகில் இருந்து வந்த சௌதர்ம இந்திரன் முதலான தேவர்கள் தீர்த்தங்கரருடைய தாய் தற்தையர்க்கு மிகச் சிறப்பும் நல்ல நல்ல ஆடை அணிகளன்களையும் வழங்கி பெருமை செய்கின்றனர். பிறகு தீர்த்தங்கரருடைய தாய்க்குச் சேவை செய்வதற்காகப் பல தேவியரை அமர்த்திவிட்டு தேவஉலகம் நோக்கிச் செல்கின்றனர்.

6. தீர்த்தங்கரருக்குச் செய்யப்படும் ஜன்ம கலியாணம் பற்றிச் சுருக்கிக் கூறுக?

தீர்த்தங்கரன் ஆக இருக்கம் குழந்தை பிறக்கும் சமயம் சௌதர்மேந்திரன் முதலானனோர் இருக்கைகள் தாமே அசைகின்றன; இனிய இசை எழுகின்றது; எல்லா தேவர்களும் தீர்த்தங்கரன் பிறப்பைத் தம் அவதி ஞானத்தால் அறிந்து அங்கிருந்தபடியே, தலை வணங்குகின்றனர், பிறகு நால்வகை தேவர்களும் (பவனவாசி, வியந்தரர், ஜோதிஷ்கர்,

வைமானிகர்) தீர்த்தங்கரர் பிறந்துள்ள இடத்திற்கு வருகின்றனர்.
சௌதர்மேந்திரன் தன் இந்திராணி (சசி) யுடன் ஐராவத யானை மீது அமர்ந்து வருகிறான். அவன் வருவது சூரியனே பூமிக்கு இறங்கிவருவதுபோல பிரகாசமாக இருக்கிறது. தீர்த்தங்கரர் பிறந்துள்ள நகருக்கு வந்த இந்திரன் அந்த நகரை மூன்று முறை வலம் வருகிறான். இந்திராணி தீர்த்தங்கரன் தாய்க்கு ஏதும் துன்பம் நேரா வண்ணம் ஒரு மாயக் குழந்தையை அவள் அருகில் கிடத்தி விட்டு தீர்த்தங்கர குழந்தையை அவள் அறியா வண்ணம் எடுத்து வந்து சௌதர்மேந்திரனிடம் தருகிறாள்.

சௌதர்மேந்திரன் அக் குழந்தையை ஐராவத யானை மீது அமர வைத்து இனிய இசையை இசைத்துக் கொண்டும் நாட்டியம் ஆடிக் கொண்டும் தேவர்கள் புடைசூழ்ந்து வர சுமேரு மலைக்கு எடுத்துச் செல்கிறான். அங்கே பாண்டுக சிலையில் சிறந்த அரியணையில் குழந்தையை வீற்றிருக்கச் செய்கிறான். 1008 ஸ்வர்ண கலசங்களிலும் இரத்தின கலசங்களிலும் பாற்கடலிலிருந்து தேவர்கள் கொண்டுவரும் தூய நீரால் சௌதர்மேந்திரனும் அவருடைய பரிவார தேவர்களும் தீர்த்தங்கர குழந்தைகக்குத் திருநீராட்டு (அபிஷேகம்) செய்கின்றனர்.
திருநீராட்டைக் காணும் அழகிய தேவ மகளிர் மங்கல இசையுடன் நடனம் ஆடுகின்றனர். சௌதர்மேந்திரன் தன் இரு கண்களாலும் குழந்தையின் மேனி அழகைக் கண்டு திருப்தி பெறாமையால் ஆயிரம் கண்களைப் படைத்துக் கொண்டு அழகைக் கண்டு உவகை அடைகிறான்.

திருநீராட்டுக்குப் பின் குழந்தையை சௌதர்மேந்திரனிடமிருந்து இந்திராணி எடுத்து ஆடை அணிகளால் ஒப்பனை செய்கிறாள். பிறகு இந்திரன் பெயரையும் சின்னத்தையும் தீர்மானித்து குழந்தையை தாய் தந்தையரிடம் ஒப்படைத்து விடுகிறான். இதுவே பகவானுடைய கடைசி பிறந்த நாள் ஆகையால் மகிழ்ச்சியில் தாண்டவம் ஆடுகிறான். தீர்த்தங்கர குழந்தையை பாதுகாக்கவும், மகிழ்விக்கவும் தேவர்களை அமர்த்தி விட்டு பெருமகிழ்ச்சியான உணர்வுடன் சொர்க்கம் திரும்புகிறான்.

7. தீர்த்தங்கர பிரபுவுக்குச் செய்யப்படும் தீக்ஷா கல்யாணம் பற்றிச் சுருக்கமாகக் கூறுக:

பிறவியின் சாரமில்லாத தன்மையை ஏதேனும் நிமித்தத்தால் அறிந்து தீர்த்தங்கர குமாரன் வைராக்கியம் (மனத்தில் திடமான உறுதி) அடையும் போது ஐந்தாம் சொர்க்கத்தில் வசிக்கும் லௌகாந்திக தேவர்கள் தீர்த்தங்கர குமாரன் அருகில் வருகின்றனர். அவரை 'நீங்கள் மஹான், போற்றுதலுக்குரியவர்' என்று கூறித் துதிக்கின்றனர். பிரபுவினுடைய வைராக்யத்தை மிகவும் புகழ்ந்து பாராட்டுகின்றனர். பிறகு தமது இடம் திரும்புகின்றனர்.
பிறகு தேவர்களால் அமைக்கப்பட்ட சிறந்த ரத்தின பல்லக்கில் தீர்த்தங்கர குமாரர் புறப்படுகின்றார். முதலில் மனிதர்களும், பிறகு மனிதர்களில் சிறந்த வித்யாதரர்களும் கொஞ்ச தூரம் எடுத்துச் செல்கின்றனர். அதன் பிறகு சௌதர்மேந்திரன் முதலான தேவர்கள் பல்லக்கை எடுத்துக் கொண்டு காடு வரை செல்கின்றனர்.

காட்டை அடைந்தவுடன் தீர்த்தங்கர பிரபு உயர்ந்த பாறை மீது அமர்ந்து எல்லா ஆடை அணிகளையும் களைந்துவிட்டு 'ஓம் நம: ஸித்தேப்யஹ:' என்று கூறி பஞ்ச முஷ்டியால் (ஐந்து பிடியாக) தலைமயிர் பறித்தலைச் செய்கின்றார். பரம திகம்பர முனியாகி ஆன்ம தியானத்தில் ஆழ்கிறார்.

சௌதர்மேந்திரன் முதலான தேவர் கூட்டம் அந்தப் பரம வைராக்கியமான தீர்த்தங்கர மகா முனியைப் பலவாறாகத் துதித்து, பூஜை செய்தபின் தம் சொர்க்கம் திரும்புகின்றனர்.

8. தீர்த்தங்கரப் பிரபுவுக்குச் செய்யப்படும் கேவல ஞான கல்யாணம் பற்றிச் சுருக்கமாகக் கூறுக?

கடும் தபம் (ஆகமத்தில் கூறியபடி ஆஹார விதி, சாமாயிகம் முதலான) மேற்கொண்ட

தீர்த்தங்கர மஹாமுனி க்ஷபக சிரேணி ஏறும்போது சுக்கில தியானத்தில் ஆழ்கிறார். அப்போது நான்கு காதி வினைகளை அழித்து கேவல ஞானத்தை அடைகிறார். அவரது கேவல ஞானத்தில் உலகம், அலோகம் மற்றும் உலகத்தில் உள்ள எல்லா திரவியங்களும் தம்தம் குண மற்றும் முக்கால பரியாயங்களோடு ஒரே சமயத்தில் பிரதி பலிக்கின்றன.

பிறகு குபேரன் எனும் வைமானிக தேவன் சௌதர்ம இந்திரன் ஆணைக்கு ஏற்ப ஏழுவகை நில அமைப்புடனும், பன்னிரண்டு சபை முதலானவையுடனும் கூடிய அற்புதமான அதிசய அழகிய சமவஸரணத்தில் பகவான் வீற்றிருக்குமாறு செய்கிறான். பிறகு நால்வகை தேவர்களும் பெருஞ்சிறப்போடு மிகப்பெரிய கேவல ஞான பூஜை செய்கின்றனர்.
சமவஸரணத்தில் முனி, ஆர்யிகை, சிராவகர், சிராவகியர் மனமுடைய பவ்விய விலங்குகள் மற்றும் நால்வகை தேவ தேவியர்கள் உள்ளனர். பதினெட்டு பெருமொழி மற்றும் எழுநூறு சிறுமொழிகளில் வெளிப்படும் பகவானது நன்மை தரவல்ல மங்கல திவ்யத்வனி சமவஸரணத்தில் உள்ள அனைவருக்கும் மிகச் சிறந்த மன மகிழ்ச்சியைத் தருகிறது. பகவானது நன்மை தர வல்ல மொழியைக் கேட்டு பல நற்காட்சியுடைய உயிர்கள் ஸய்யமம் (புலனடக்கம்) ஏற்று மோக்ஷ புருஷார்த்தத்தில் உற்சாகம் கொள்கின்றனர்.
பகவான் மங்கல விஹாரம் செய்யும்போது தேவர்கள் பகவானது திருவடிகள் கீழே வான் வழியில்ஆயிரம் இதழ்களையுடைய பொன்மயமான தாமரை மலர்களைப் பரப்புகின்றனர். ரித்திகளோடு கூடிய கேவலி பகவான் உடல் பூமி மற்றும் பூவுக்கு மேலே வானத்தில் நிலவுபோல அழகுடன் விளங்குகிறது.

9. தீர்த்தங்கரருக்குச் செய்யப்படும் மோக்ஷ கலியாணம் பற்றி சுருக்கமாகக் கூறுக?

தம் அழியா கேவல ஞானத்தால் தம் ஆயுள் முடிதலை அறியும் போது பகவான் சமவஸரணத்தை விட்டு காடு சென்று யோகத்தைத் தடுத்து பரம சுக்கில தியானத்தில் ஆழ்கிறார். சுக்கில தியான நெருப்பால் பகவான் நான்கு அகாதி வினைகளையும் அழித்து எல்லா வினைகளிலிருந்தும் விடுபட்டவர் ஆகிறார். அவருடைய ஆன்மா பாலிலிருந்து நெய் திரண்டது போல மிகத் தூய்மையாகி ஒரு கணத்திலேயே உலக உச்சியில் உள்ள ஸித்தசிலைக்குச் சென்று அங்கேயே தன் கடைசி உடலின் அளவில் சற்று குறைந்த அளவோடு அனந்த காலம் வரை விளங்குகிறது.

பகவானுடைய உடல் கற்பூரம் போல ஆகாயத்தில் கரைந்து போகிறது. தங்கிப்போன அவருடைய நகத்தையும், மயிரையும் அக்னி குமார தேவன் தன் முடிமணி ஒளி கொண்டு எரித்து விடுகிறான். பகவான் மோக்ஷம் அடையும் அந்த மங்கல கணத்தில் புண்ணியசாலிகளான தேவர்கள் அனந்த ஞானம் முதலான குணங்களோடு கூடிய ஸித்த பரமேஷ்டிக்கு மிகச் சிறந்த முறையில் பூஜை, பக்தி செய்கின்றனர். சிறந்த கேவல ஞான பூஜையில் கலந்துகொண்டதால் தங்களைப் பெரும் பேறு உடையவர்களாகவும் சிறப்புடையவர்களாகவும் கருதுகின்றனர்.

10. நம் பரத க்ஷேத்திரத்தில் நான்காம் காலத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் தோன்றுகின்றனர்?

நம் பரத க்ஷேத்திரத்தில் ஒவ்வொரு நான்காம் காலத்திலும் இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றுகின்றனர்.

11. பரத க்ஷேத்திர நிகழ்கால விருஷபர் முதலான 24 தீர்த்தங்கரர் பெயர்கள், அவர்கள் பஞ்ச கலியாண மாதம், தேதிகளை முறையே கூறுக?

(16, 17ஆம் பக்கத்தில் உள்ள விவரமான அட்டவணைக் காண்க.)

12. பரத க்ஷேத்திர நிகழ்கால விருஷபாதி 24 தீர்தங்கரர் பெற்றோர் பெயர் மற்றும் அவர்கள் பிறந்த இடங்களை வரிசையாகக் கூறுக?

(18,19 ஆம் பக்கத்தில் உள்ள விபரமான அட்ட வணைக் காண்க)

13. பரத க்ஷேத்திர நிகழ்கால விருஷபாதி 24 தீர்த்தங்கரர் வைராக்ய நிமித்தம், சமவஸரண அளவு, முதன்மை கணதரர் பெயர், கணதரர் எண்ணிக்கை, சமவஸரணத்திலிருந்த முதன்மையான ஆர்யிகை பெயர் இவற்றை வரிசையாகக் கூறுக.

(19,20ம் பக்கத்தில் உள்ள அட்டவணைக் காண்க)

14. பரத க்ஷேத்திர நிகழ்கால விருஷபாதி 24 தீர்த்தங்கார் உடல் உயரம், ஆயுள், சின்னம், மோக்ஷமடைந்த இடங்கள் பற்றி முறையே கூறுக?

(21ஆம் பக்கத்தில் உள்ள அட்டவணைக் காண்க)

15. மேலே கூறிய எருது முதலான சின்னங்களுக்கும் தீர்த்தங்கரர்களுக்கும் என்ன தொடர்பு?

தீர்த்தங்கர பாலகனுக்கு ஜென்ம கலியான அபிஷேகம் செய்யும் போது இந்திரன் குழந்தையின் வலது பாதம் கட்டை விரலைப் பார்க்கிறான். விரலிலுள்ள விசேஷ (எருது முதலான) சின்னத்தைப் பார்த்து தீர்த்தங்கரர் யார் என்று அறிந்து உறுதி செய்கிறான்.அதாவது கால் விரலில் உள்ள சின்னம் தீர்த்தங்கர குழந்தையை எந்த தீர்த்தங்கார் என்று அறிய உதவுகிறது.

16. தீர்த்தங்கரர் உடலில் எத்தனை சுப லஷணங்கள் உள்ளன?

தீர்த்தங்கரர் உடலில் 1008 சுப லஷணங்கள் (சுபசின்னங்கள்) உள்ளன.

17. சௌதர்மேந்திரன் தீர்த்தங்கர பாலகனை எடுத்துச் சென்று எந்த மலைமீது ஜன்மாபிஷேகம் செய்கிறான்?

சௌதர்மேந்திரன் தீர்த்தங்கர பாலகனை எடுத்துச் சென்று சுமேரு மலைமீது ஜன்மாபிஷேகம் செய்கிறான்.

(அபிஷேகத்தைப் பகலிலேயே செய்கிறான்; இரவில் அன்று ஏனெனில், சூரிய வெளிச்சம் இல்லாத போது உயிர்கள் உற்பத்தி அதிகம் உண்டாகின்றன.)

18. தீர்த்தங்கர குமாரரை யாராவது தோற்கடிக்க முடியுமா?

தீர்த்தங்கர குமாரரை யாரும் தோற்கடிக்க முடியாது. ஏனெனில் அவர் மிகவும் வலிமையுடையவர்.

19. தீர்த்தங்கர குமாரர் தம் பெற்றோருக்கு ஒருவராகவே பிறக்கிறார் (உடன் பிறப்பார் யாரும் இலர்) இதற்குக் காரணம் என்ன?

ஏனெனில், தீர்த்தங்கரர் பெரும் அதிசய புண்ணியம் உடையவர். அவரிடம் தாய் தந்தையர் முழு அன்பு செலுத்துகின்றனர். அவர் பெற்றோருக்கு வேறு மக்கள் பிறப்பாரானால் பெற்றோர் தம் அன்பு மற்றவர்களுக்கும் பங்கிடப்படும்.

20. பரதக்ஷேத்திர கடந்த கால 24 தீர்த்தங்கரர் பெயர்கள், எதிர்கால 24 தீர்த்தங்கரர்கள் பெயர்கள், நிகழ்காலத்தில் விருஷபர் முதலான தீர்ந்ததங்கரர் காலத்தில் தோன்றிய 24 காம தேவர்கள் பெயர் மற்றும் அவர்கள் எந்த எந்த தீர்த்தங்கரர் காலத்தில் இருந்தனர் விவரங்களை வரிசையாக தருக?

(22 ஆம் பக்கத்தில் உள்ள விபரமான அட்டவணைக் காண்க)

21. ஒரிடத்தில் ஒரே சமயத்தில் இரண்டு முதலான தீர்த்தங்கரர் ஒரு சேர இருப்பதில்லை. இதற்குக் காரணம் என்ன?

ஒரு தீர்த்தங்கரருக்கு முன்பு அல்லது உடன்சேர மற்றோர் தீர்த்தங்கரர் தோன்றும் அளவுக்கு அல்லது அவருடைய அதிசய பிரபாவத்தில் கொஞ்சம் குறைவு வரும்படி அமைவதற்குத் தீர்த்தங்கரர் குறைந்த புண்ணியத்தை உடையவர் அல்லர்.

22. நிகழ் கால தீர்த்தங்கரருக்குள் எத்தனை பேர் மும்மூன்று பதவிகளை உடையவர்? அப்பதவிகளின் பெயர் என்ன?

சாந்திநாதர், குந்துநாதர், அரநாதர் ஆகிய இம்மூன்று தீர்த்தங்கரர்களும், 1. காமதேவன், 2. சக்கரவர்த்தி, 3. தீர்த்தங்கரர் எனும் இம்மூன்று பதவிகளை உடையவராக இருந்தனர்.

23. நிகழ்கால 24 தீர்த்தங்கரருள் எத்தனை பேருக்குத் திருமணம் ஆகவில்லை? அதாவது

பால பிரமசாரிகளாக இருந்தனர், அவர்கள் பெயர்களைக் கூறுக

நிகழ்கால 24 தீர்த்தங்கரருள் ஐவருக்குத் திருமணம் ஆகவில்லை – பால பிரமசாரிகளாக இருந்தனர். அவர்கள் பெயர் : 1. வாசுபூஜ்ய நாதர், 2. மல்லி நாதர், 3. நேமி நாதர், 4. பார்சுவ நாதர், 5. மகாவீர சுவாமி.

24. ஒன்றுக்கு மேல் அதிகமான பெயர்களையுடைய தீர்த்தங்கரர்கள் யார் யார்? அவர்கள் பெயர்களை எழுதுக?

ஒன்றுக்குமேல் அதிகமான பெயர்களையுடைய தீர்த்தங்கரர் நால்வர் ஆவர், அவர்கள்

1. விருஷபநாதர் – விருஷபநாதர், ஆதிநாதர், புருதேவர், வர்ஷீயஸர், ஜ்யாயஸர், ஆத்யதேவர், ப்ரஜாபதி, ஈக்ஷ்வாகு, காஷ்யபர், பிரம்மன், நாபிஜர், அக்ரஜர் முதலியான
2. புஷ்பதந்தர் – புஷ்பதந்த நாதர், ஸுவிதி நாதர்
3. அனந்தநாதர் – அனந்த நாதர், ஸிம்மசைன்யர் (ஆதாரம் பூஜ்ய பாதரின் 24 தீர்தங்கர் பக்தி)
4. மகாவீரர் – மகாவீரர், ஸன்மதி, வீரர், அதிவீரர், வர்தமானர், அந்திய காஷ்யபர், நாதான்வயர், மஹதி முதலியன.

25. விதேக க்ஷேத்திர நாடுகளுள் நிகழ்காலத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் உள்ளனர்? அவர்கள் பெயர்களைக் கூறுக.

நிகழ்காலத்தில் விதேக க்ஷேத்திர நாடுகளில் இருபது தீர்த்தங்கரர்கள் உள்ளனர். அவர்கள் பெயர்கள்: 1. சீமந்தரர், 2. யுகமந்தரர், 3. பாஹு, 4. ஸுபாஹு, 5. ஸுஜாதர் 6. ஸ்வயம்ப்ரபர், 7. விருஷபாநநர், 8. அனந்தவீர்யர், 9. ஸுர்யப்ரபர், 10. விசாலகீர்த்தி, 11. வஜ்ரதரர், 12. சந்த்ரா நந்தர், 13. பத்ரபாஹு, 14. புஜங்கமர், 15. ஈஷ்வரர், 16. நேமப்ரபர், 17. வீரஸேநர், 18. மஹாபத்ரர், 19. தேவயஷர், 20. அஜித வீர்யர்.

26 . இரண்டரை தீவில் ஐந்து விதேஹத்தில் உள்ள 160 க்ஷேத்திரங்களில் ஒரே சமயத்தில் எத்தனை தீர்த்தங்கரர்கள் தோன்ற முடியும்?

நூற்றறுபது நாடுகளில் நாட்டுக்கு ஒருவராக 160 தீர்த்தங்கரர்கள் தோன்ற முடியும்.

27. இரண்டரை தீவில் ஐந்து விதேகம் தொடர்பான 160 நாடுகள், ஐந்து பரதம், ஐந்து ஐராவதம் இவற்றில் ஒருசேர எத்தனை தீர்த்தங்கரர்கள் தோன்ற முடியும்?

மொத்தம் நூற்றெழுபது தீர்த்தங்கரர்கள் தோன்ற முடியும்.

28. தீர்த்தங்கர கேவலிக்கு யாராவது உபஸர்கம் செய்ய முடியுமா?

முடியாது, ஆசாரியர், உபாத்தியாயர், சாது எனப்படும் முனி நிலையில் உள்ளவரை உபஸர்கம் செய்ய வாய்ப்புண்டு, கேவல ஞான அதிசயத்தால் தீர்த்தங்கர கேவலிக்கு யாரும் உபஸர்கம் செய்ய முடியாது.

29. பரத க்ஷேத்திரத்தில் தோன்றும் எல்லா தீர்த்தங்கரர்களும் எங்கே மோக்ஷம் அடைகின்றனர்?

பரத க்ஷேத்திரத்தில் தோன்றும் எல்லா தீர்த்தங்கரர்களும் ஸம்மேதஸிகர ஸித்த க்ஷேத்திரத்தில் மோக்ஷம் அடைகின்றனர்.

30. நிகழ்கால 24 தீர்த்தங்கரருள் நால்வர் ஸம்மேதகிரியில் இல்லாமல் வேறு இடங்களில் மோக்ஷம் அடைந்ததற்கு என்ன காரணம்?

இது ஹுண்டா அவஸர்ப்பிணி காலத்தின் குறைபாடு ஆகும்.

31. இந்த க்ஷேத்திரத்தில் இந்த ஹுண்டாவ்ஸர்ப்பிணி காலத்தில் வேறு குறைபாடுகள் யாவை?

திலோய பண்ணத்தி /4/1615–1623–ன் படி ஹுண்டாவ்ஸர்ப்பிணி காலம் (கணக்கற்ற அவசர்ப்பிணி காலங்களுக்கு ஒரு முறை வருவதாகும்.) இந்த காலத்தில் பின்வரும் குறைபாடுகள் ஏற்படும்.

★ இந்த ஹுண்டா அவஸர்ப்பிணிகாலத்திற்குள்ளே நற்தீக்காலத்தில் கொஞ்சகாலம் இருக்கும் போது கூட மழை முதலியன பொழிந்து கொண்டிருக்கிறது மற்றும் விகலேந்திரிய உயிர்கள்

வரிசை எண்	தீர்த்தங்கரர் பெயர்	கர்ப கல்யாணம்	ஜன்ம கல்யாணம்
1	விரஷபநாதர்	ஆஷாட(ஆடி) தேய்பிறை, 2	சைத்ர (சித்திரை) தேய்பிறை, 9
2	அஜிதநாதர்	ஜ்யேஷ்ட(ஆனி) தேய்பிறை, 15	மாக (மாசி) வளர்பிறை, 10
3	ஸம்பவநாதர்	பால்குண(பங்குனி) வளர்பிறை, 8	கார்த்திகை வளர்பிறை, 15
4	அபிநந்தன நாதர்	வைசாக (வைகாசி) வளர்பிறை, 6	மாக (மாசி) வளர்பிறை, 12
5	சுமதி நாதர்	சிராவண(ஆவணி) வளர்பிறை, 2	சைத்ர (சித்திரை) வளர்பிறை, 11
6	பத்ம பிரபர்	மாக (மாசி) தேய்பிறை 6	கார்த்திகை தேய்பிறை 13
7	சுபார்ஸ்வ நாதர்	பாத்ரபத (புரட்டாசி) வளர்பிறை 6	ஜ்யேஷ்ட (ஆனி) வளர்பிறை 12
8	சந்திர பிரபர்	சைத்ர (சித்திரை) தேய்பிறை 5	பௌஷ (தை)தேய்பிறை 11
9	புஷ்பதந்த நாதர்	பால்குண (பங்குனி) தேய்பிறை 9	மிருகசீர (மார்கழி) வளர்பிறை 1
10	சீதள நாதர்	சைத்ர(சித்திரை) தேய்பிறை 8	மாக (மாசி) தேய்பிறை 12
11	சிரேயாம்ஸ நாதர்	ஜ்யேஷ்ட (ஆனி) தேய்பிறை 6	பால்குண(பங்குனி) தேய்பிறை 11
12	வாசுபூஜ்ய நாதர்	ஆஷாட (ஆடி) தேய்பிறை 6	பால்குண (பங்குனி) தேய்பிறை 14
13	விமலநாதர்	ஜ்யேஷ்ட(ஆனி) தேய்பிறை 10	மகா (மாசி) வளர்பிறை 4
14	அனந்த நாதர்	கார்த்திகை தேய்பிறை 1	ஜ்யேஷ்ட (ஆனி) தேய்பிறை 12
15	தர்ம நாதர்	வைசாக (வைகாசி)வளர்பிறை 13	மாக (மாசி) வளர்பிறை 13
16	சாந்தி நாதர்	பாத்ரபத(புரட்டாசி) தேய்பிறை 7	ஜ்யேஷ்ட (ஆனி) தேய்பிறை 14
17	குந்து நாதர்	சிராவண (ஆவணி) தேய்பிறை 10	வைசாக (வைகாசி) வளர்பிறை 1
18	அர நாதர்	பால்குண (பங்குனி)தேய்பிறை 3	மிருகசீர (மார்கழி) வளர்பிறை 14
19	மல்லிநாதர்	சைத்ர (சித்திரை) வளர்பிறை 1	மிருகசீர (மார்கழி) வளர்பிறை 11
20	முனிஸுவிரத நாதர்	சிராவண(ஆவணி) தேய்பிறை 2	சைத்ர(சித்திரை) தேய்பிறை 10
21	நமி நாதர்	ஆசிவன் (ஐப்பசி) தேய்பிறை 2	ஆஷாட (ஆடி) தேய்பிறை 10
22	நேமி நாதர்	கார்த்திகை வளர்பிறை 6	சிராவண (ஆவணி) தேய்பிறை 6
23	பார்ஸ்வ நாதர்	வைசாக (வைகாசி) தேய்பிறை 2	பௌஷ (தை) தேய்பிறை 11
24	மகாவீர நாதர்	ஆஷாட (ஆடி) வளர்பிறை 6	சைத்ர (சித்திரை) வளர்பிறை 13

வரிசை எண்	தப கல்யாணம்	ஞான கல்யாணம்	மோக்ஷ கல்யாணம்
1	சைத்ர (சித்திரை)தேய்பிறை 9	பால்குண(பங்குனி) தேய்பிறை 11	மாக (மாசி) தேய்பிறை 24
2	மாக (மாசி) வளர்பிறை 9	பௌஷ (தை) வளர்பிறை 11	சைத்ர (சித்திரை) வளர்பிறை 5
3	மிருகசீர(மார்கழி) வளர்பிறை 15	கார்த்திகை தேய்பிறை 4	சைத்ர (சித்திரை)வளர்பிறை 6
4	மாக (மாசி) வளர்பிறை 12	பௌஷ (தை) வளர்பிறை 14	வைசாக (வைகாசி) வளர்பிறை 6
5	வைசாக (வைகாசி) வளர்பிறை 7	சைத்ர (சித்திரை) வளர்பிறை 11	சைத்ர (சித்திரை) வளர்பிறை 11
6	கார்த்திகை தேய்பிறை 13	சைத்ர (சித்திரை)வளர்பிறை 15	பால்குண (பங்குனி) தேய்பிறை 4
7	ஜ்யேஷ்ட (ஆனி) வளர்பிறை 12	பால்குண (பங்குனி) தேய்பிறை 6	பால்குண(பங்குனி) தேய்பிறை 7
8	பௌஷ (தை) தேய்பிறை 12	பால்குண (பங்குனி) தேய்பிறை 7	பால்குண(பங்குனி) தேய்பிறை 7
9	மிருகசீர (மார்கழி) வளர்பிறை 1	கார்த்திகை வளர்பிறை 2	பாத்ரபத (புரட்டாசி) வளர்பிறை 8
10	மாக (மாசி) தேய்பிறை 12	பௌஷ (தை) தேய்பிறை 14	ஆசிவன் (ஐப்பசி) வளர்பிறை 8
11	பால்குண (பங்குனி)தேய்பிறை 11	மாக (மாசி) தேய்பிறை 15	சிராவண (ஆவணி) வளர்பிறை 15
12	பால்குண (பங்குனி) தேய்பிறை 14	மாக (மாசி)வளர்பிறை 2	பாத்ரபத (புரட்டாசி) வளர்பிறை 14
13	மாக (மாசி) வளர்பிறை 4	மாக (மாசி) வளர்பிறை 6	ஆஷாட (ஆடி) தேய்பிறை 8
14	ஜ்யேஷ்ட(ஆனி) தேய்பிறை 12	சைத்ர (சித்திரை)தேய்பிறை 15	சைத்ர (சித்திரை) தேய்பிறை 15
15	மாக (மாசி) வளர்பிறை 13	பௌஷ (தை) வளர்பிறை 15	ஜ்யேஷ்ட (ஆடி) வளர்பிறை 4
16	ஜ்யேஷ்ட (ஆனி) தேய்பிறை 14	பௌஷ (தை) வளர்பிறை 10	ஜ்யேஷ்ட (ஆடி) தேய்பிறை 14
17	வைசாக (வைகாசி) வளர்பிறை 1	சைத்ர (சித்திரை) வளர்பிறை 3	வைசாக (வைகாசி) வளர்பிறை 1
18	மிருகசீர (மார்கழி) வளர்பிறை 10	கார்த்திகை வளர்பிறை 12	சைத்ர (சித்திரை) தேய்பிறை 15
19	மிருகசீர (மார்கழி) வளர்பிறை	பௌஷ (தை) தேய்பிறை 2	பால்குண (பங்குனி) வளர்பிறை 5
20	வைசாக (வைகாசி) தேய்பிறை 10	வைசாக (வைகாசி) தேய்பிறை 9	பால்குண (பங்குனி) தேய்பிறை 12
21	ஆஷாட(ஆடி) தேய்பிறை 10	மிருகசீர (மார்கழி) வளர்பிறை 11	வைசாக (வைகாசி) தேய்பிறை 14
22	சிராவண(ஆவணி) வளர்பிறை 6	ஆசிவன் (ஐப்பசி) வளர்பிறை 1	ஆஷாட (ஆடி) வளர்பிறை 7
23	பௌஷ (தை) தேய்பிறை 12	சைத்ர (சித்திரை) தேய்பிறை 4	சிராவண (ஆவணி) வளர்பிறை 10
24	மிருகசீர (மார்கழி) தேய்பிறை 10	வைசாக (வைகாசி) வளர்பிறை 10	கார்த்திகை தேய்பிறை 14 (கார்த்திகை தேய்பிறை சதுர்தசிக்கான பிரமானமும் (சாட்சியும்) கிடைத்திருக்கிறது.)

வரிசை எண்	தீர்தங்கரர் பெயர்	தாய்	தந்தை
1	விரஷபநாதர்	மருதேவி	நாபிராஜ்
2	அஜிதநாதர்	விஜயாதேவி	ஜித சத்ரு
3	ஸம்பவநாதர்	சுசேனாதேவி	திருடராஜ் (ஜிதாரி)
4	அபிநந்தன நாதர்	சித்தார்த்தா	ஸம்வர்
5	சுமதி நாதர்	சுமங்கலாதேவி	மேகரதர் (மேகபிரபர்)
6	பத்ம பிரபர்	சுசீமாதேவி	தரண ராஜா
7	சுபார்ஸ்வ நாதர்	பிருத்வீதேவி	சுப்ரதிஷ்டர்
8	சந்திர பிரபர்	லக்ஷ்மீ மதி	மஹாசேனர்
9	புஷ்பதந்த நாதர்	ராமா தேவி	சுக்ரீவர்
10	சீதள நாதர்	நந்தாதேவி	திருடரதர்
11	சிரேயாம்ஸ நாதர்	வேணுதேவி	விஷ்ணுராஜ்
12	வாசுபூஜ்ய நாதர்	ஜயாதேவி	வசுபூஜ்யர்
13	விமலநாதர்	ஜயஷ்யாமா	கிருதவர்மர்
14	அனந்த நாதர்	ஸர்வயஷா	ஸிம்மஸேனர்
15	தர்ம நாதர்	ஸுவ்ரதா	பானுராஜர்
16	சாந்தி நாதர்	ஐராதேவி	விஷ்வசேனர்
17	குந்து நாதர்	ஸ்ரீமதிதேவி	ஸுரஸேனர்
18	அரநாதர்	மித்ராதேவி	ஸுதர்ஸனர்
19	மல்லிநாதர்	பிரபாவதி	கும்பராஜர்
20	முனிஸுவிரத நாதர்	பத்மாதேவி	ஸுமித்ரர்
21	நமி நாதர்	வப்ரிலாதேவி	விஜயராஜர்
22	நேமி நாதர்	சிவதேவி	ஸமுத்ரவிஜயர்
23	பார்ஸ்வ நாதர்	வாமா (வர்மா) தேவி	அஷ்வசேனர்
24	மகாவீர நாதர்	பிரியகாரிணி (திரிசலாதேவி)	ஸித்தார்தர்

வரிசை எண்	பிறந்த இடம்	தீர்த்தங்கரர் வைராக்யம் உண்டாகக் காரணம்	ஸமவஸரண பரப்பு
1	அயோத்யா நகர்	நீலாஞ்சானை மரணம்	12 யோஜனை
2	அயோத்யா நகர்	உல்கா பதனம்	11 ½ யோஜனை
3	ஸ்ராவஸ்தி நகர்	மேகபடல அழிவு	11 யோஜனை
4	அயோத்யா நகர்	கந்தர்வநகர அழிவு	10 ½ யோஜனை
5	அயோத்யா நகர்	ஜாதிஸ்மரணம்	10 யோஜனை
6	கௌசாம்பி நகர்	ஜாதிஸ்மரணம்	9 ½ யோஜனை
7	வாரணாசி நகர்	வசந்தலக்ஷ்மீ அழிவு	9 யோஜனை
8	சந்திரபுரம்	நிலையாமை ஆதிபாவனை	8 ½ யோஜனை
9	காகந்திபுரம்	உல்கா பதனம்	8 யோஜனை
10	பத்ரிலபுரம்	பனி மறைதல்	7 ½ யோஜனை
11	சிம்மபுரம்	வசந்தலக்ஷ்மீ அழிவு	7 யோஜனை
12	சம்பாபுரி	ஜாதிஸ்மரணம்	6 ½ யோஜனை
13	கம்பிலாபுரி	மேகபடல அழிவு	6 யோஜனை
14	அயோத்யா நகர்	உல்கா பதனம்	5 ½ யோஜனை
15	ரத்னபுரம்	உல்கா பதனம்	5 யோஜனை
16	ஹஸ்தினாபுரம்	ஜாதிஸ்மரணம்	4 ½ யோஜனை
17	ஹஸ்தினாபுரம்	ஜாதிஸ்மரணம்	4 யோஜனை
18	ஹஸ்தினாபுரம்	மேகபடல அழிவு	3 ½ யோஜனை
19	மிதிலாபுரி	அநித்யாதி பாவனை	3 யோஜனை
20	ராஜக்ரஹ நகர்	முன்பிறப்பு நினைவு	2 ½ யோஜனை
21	மிதிலாபுரி	முன்பிறப்பு நினைவு	2 யோஜனை
22	சௌரிபுரம்	கட்டிய விலங்குகள் காணல்	1 ½ யோஜனை
23	வாரணாசி	முன்பிறப்பு நினைவு	1 ¼ யோஜனை
24	குண்டலபுரம் (வைசாலீ)	ஜாதிஸ்மரணம்	1 யோஜனை

வரிசை எண்	தீர்தங்கரர் பெயர்	முதன்மையான கணதரர் பெயர்	கணதரர் எண்ணிக்கை	முதன்மையான ஆர்யிகை பெயர்
1	விரஷபநாதர்	விருஷபஸேனர்	84	பிராமி
2	அஜிதநாதர்	ஸிம்மஸேனர்	90	பிரகுப்ஜா
3	ஸம்பவநாதர்	சாருஷேணர்	105	தர்மஸ்ரீ
4	அபிநந்தன நாதர்	வஜ்ரநாபி	103	மேருஷேணா
5	சுமதி நாதர்	அமரர்	116	அனந்தா
6	பத்ம பிரபர்	வஜ்ரசமர்	110	ரதிஷேணா
7	சுபார்ஸ்வ நாதர்	பலர்	95	மீனா
8	சந்திர பிரபர்	தந்தர்	73	வருணா
9	புஷ்பதந்த நாதர்	விதர்பர்	88	கோஷா
10	சீதள நாதர்	அனகார்	81	தரணா
11	சிரேயாம்ஸ நாதர்	குந்து	77	சாரணா
12	வாசுபூஜ்ய நாதர்	தர்மர்	66	வரஸேனா
13	விமலநாதர்	மந்தரர்	55	பத்மஸ்ரீ
14	அனந்த நாதர்	ஸ்ரீஜயர்	50	ஸர்வஸ்ரீ
15	தர்ம நாதர்	அரிஷ்டஸேனர்	43	ஸுவ்ரதா
16	சாந்தி நாதர்	சக்ராயுதர்	36	ஹரிஷேனா
17	குந்து நாதர்	ஸ்வயம்பூ	35	பாவிதா
18	அரநாதர்	கும்பர்	30	குந்துஸேனா
19	மல்லிநாதர்	விசாகர்	28	மதுஸேனா
20	முனிஸுவிரத நாதர்	மல்லி	18	பர்வதந்தா
21	நமி நாதர்	சுப்ரபர்	17	மார்கிணி
22	நேமி நாதர்	வரதத்தர்	11	ராஜமதி
23	பார்ஸ்வ நாதர்	ஸ்வயம்பூ	10	சுலோகா
24	மகாவீர நாதர்	இந்திரபூதி கௌதமர்	11	சந்தனா

வரிசை எண்	உடல் உயரம்	ஆயுள்	சின்னம்	மோக்ஷம் அடைந்த இடம்
1	500 வில்	84 லக்ஷம் பூர்வம்	எருது	கைலாசமலை
2	450 வில்	72 லக்ஷம் பூர்வம்	யாணை	ஸம்மேதசிகரம்
3	400 வில்	60 லக்ஷம் பூர்வம்	குதிரை	ஸம்மேதசிகரம்
4	350 வில்	50 லக்ஷம் பூர்வம்	குரங்கு	ஸம்மேதசிகரம்
5	300 வில்	40 லக்ஷம் பூர்வம்	சக்ரவாகம்	ஸம்மேதசிகரம்
6	250 வில்	30 லக்ஷம் பூர்வம்	சிகப்பு தாமரை	ஸம்மேதசிகரம்
7	200 வில்	20 லக்ஷம் பூர்வம்	ஸ்வஸ்திகம்	ஸம்மேதசிகரம்
8	150 வில்	10 லக்ஷம் பூர்வம்	பிரைச் சந்திரன்	ஸம்மேதசிகரம்
9	100 வில்	2 லக்ஷம் பூர்வம்	முதலை	ஸம்மேதசிகரம்
10	90 வில்	1 லக்ஷம் பூர்வம்	கல்பத்தரு	ஸம்மேதசிகரம்
11	80 வில்	84 லக்ஷம் ஆண்டு	காண்டாமிருகம்	ஸம்மேதசிகரம்
12	70 வில்	72 லக்ஷம் ஆண்டு	காட்டெருமை	சம்பாபுரி (மந்தாரகிரி)
13	60 வில்	60 லக்ஷம் ஆண்டு	பன்றி	ஸம்மேதசிகரம்
14	50 வில்	30 லக்ஷம் ஆண்டு	கரடி	ஸம்மேதசிகரம்
15	45 வில்	10 லக்ஷம் ஆண்டு	வஜ்ஜிரம்	ஸம்மேதசிகரம்
16	40 வில்	1 லக்ஷம் ஆண்டு	மான்	ஸம்மேதசிகரம்
17	35 வில்	95 ஆயிரம் ஆண்டு	ஆடு	ஸம்மேதசிகரம்
18	30 வில்	84 ஆயிரம் ஆண்டு	மீன்	ஸம்மேதசிகரம்
19	25 வில்	55 ஆயிரம் ஆண்டு	கலசம்	ஸம்மேதசிகரம்
20	20 வில்	30 ஆயிரம் ஆண்டு	ஆமை	ஸம்மேதசிகரம்
21	15 வில்	10 ஆயிரம் ஆண்டு	நீலத்தாமரை	ஸம்மேதசிகரம்
22	10 வில்	1 ஆயிரம் ஆண்டு	சங்கு	கிர்நார் (ஊர்ஜயந்தகிரி)
23	9 முழும்	100 ஆண்டு	பாம்பு	ஸம்மேதசிகரம்
24	7 முழம்	72 ஆண்டு	சிம்மம்	பாவாபுரி

வரிசை எண்	கடந்தகால தீர்த்தங்கரர் பெயர்கள்	எதிர்கால தீர்த்தங்கரர் பெயர்கள்	24 காமதேவர் பெயர்கள்	காமதேவர்கால தீர்த்தங்கரர் பெயர்கள்
1	நிர்வாண	மகாபத்ம	பாகுபலி	விருஷப நாதர்
2	சாகர	சுரதேவ	அமிததேஜ	ஆஜித நாதர்
3	மகாசாது	ஸுபார்ஸ்வ	ஸ்ரீதர	சம்பவ நாதர்
4	விமலபிரப	ஸ்வயம் பிரப	யசோபத்ர	அபிநந்தன நாதர்
5	ஸ்ரீதர	ஸர்வாத்மபூத	ப்ரஸேனஜித	சுமதி நாதர்
6	ஸுதத்த	தேவபுத்ர	சந்திரவர்ண	பத்மபிரபு
7	அமலப்ரப	குலபுத்ர	அக்னிமுக்த	சுபார்ஸ்வ நாதர்
8	உத்தாரதேவ	உதங்க	ஸனந்குமார	சந்திரபிரபு
9	அங்கிரதேவ	ப்ரௌஷ்டில	வத்ஸராஜ	புஷ்பதந்தர்
10	சன்மதி	ஜயகீர்த்தி	கனகப்ரப	சீதள நாதர்
11	சிந்துதேவ	முனிசுவ்ரத	ஸித்தவர்ண	சிரேயாம்ஸ நாதர்
12	குசுமாஞ்சலி (பூஜாஞ்சலி)	அரநாதர் (அப்தம்)	சாந்திநாத	சாந்தி நாதர்
13	சிவகண	நிஷ்பாப	குந்துநாத	குந்து நாதர்
14	உத்ஸாஹஜிந	நிஷ்கஷாய	அரநாத	அர நாதர்
15	ஞானேஷ்வர	விபுலஜிந	விஜயராஜ	அர நாதர்
16	பரமேஷ்வர	நிர்மல	ஸ்ரீசந்திர	மல்லி நாதர்
17	விமலேஷ்வர	சித்ரகுப்த	ராஜாநல	மல்லி நாதர்
18	யசோதர	ஸமாதிகுப்த	ஹனுமான்	முனிசுவ்ரதர்
19	கிருஷ்ணமதி	ஸ்வயம்பூ	பலராஜ	நமி நாதர்
20	ஞானமதி	அனிவர்தக	வசுதேவ	நேமி நாதர்
21	சுத்தமதி	ஜயநாத	ப்ரத்யும்னகுமார	நேமி நாதர்
22	ஸ்ரீபத்ர	விமலஜிந	நாககுமார	பார்ஸ்வ நாதர்
23	அதிக்ராந்த	தேவபால	ஸ்ரீபால	மகாவீரர்
24	சாந்ததேவ	அனந்தவீர்ய	ஜம்பூஸ்வாமி	மகாவீரர்

பிறப்பதும் இருந்து கொண்டிருக்கிறது.

- ★ இதற்கு கூடுதலான இதே காலத்தில் கல்பதருக்களின் முடிவும் மற்றும் கரும பூமியினுடைய தொழில்கள் ஆரம்பமாகி விடுகின்றன.
- ★ அந்த காலத்தில் முதல் தீர்த்தங்கரர் மற்றும் முதல் சக்ரவர்த்தியும் கூட தோன்றி விடுகின்றனர்.
- ★ சக்ரவர்த்தி தோல்வி அடைகிறார்.
- ★ தீர்த்தங்கரருக்கு பெண்கள் பிறத்தல் (பிராமி, சுந்தரி)
- ★ அயோத்தி அல்லாமல் மற்ற இடங்களில் தீர்த்தங்கரர்கள் பிறத்தல்
- ★ ஒன்பதிலிருந்து (பதினைந்தை தவிர்த்து) பதினாராவது தீர்த்தங்கரை வரை ஏழு தீர்த்தங்கரர்களில் தீர்த்தகாலங்களில் இடையில் தருமமே இல்லாமலிருக்கிறது.
- ★ தீநற் காலத்தில் ஐம்பத்தியெட்டு சல்லாக புருஷர்களே இருக்கின்றனர்.
- ★ இதற்கும் கூடுதலாக எட்டாவது, இருபத்தி மூன்று மற்றும் கடைசி தீர்த்தங்கரர்களுக்கு (தீர்த்தங்கரர் ஆகும் முன்) உபசர்கம் ஏற்படுகிறது.
- ★ தீர்த்தங்கரர் காலத்திலேயே 363 மித்யா மதங்கள் தோன்றுதல்
- ★ ஐந்தாம் காலத்திலும் சிலர் முக்தியடைதல் (கௌதமர், சுதர்மர், ஜம்புகுமார்)
- ★ மூன்றாம், நான்காம் மற்றும் ஐந்தாம் காலத்தில் உத்தம அறத்தை அழிக்கக்கூடிய பலவிதமான தீயவர்கள், பாவிகள், குதேவர்கள் மற்றும் குலிங்கிகள் கூடக் காணப்படுகின்றனர்.
- ★ சாண்டாளர், சபரர், பாணர், புலிந்தர், லாஹலர் மற்றும் கிராதர் ஆகிய ஜாதிகள் தோன்றுகின்றன.
- ★ தீக்காலத்தில் 42 கல்கிகள் மற்றும் உபகல்கிகள் தோன்றுகின்றனர்.
- ★ அதிவிருஷ்டி (வெள்ளம்) அனாவிருஷ்டி (வறட்சி) பூவிருஷ்டி (பூகம்பம்) மற்றும் வஜ்ராக்ணி (எரிமலை) முதலியவற்றினால் வீழ்ச்சி போன்ற விசித்திரமான வேறுபாடுகள் இந்த ஹுண்டா அவஸர்ப்பிணி காலத்தில் தோன்றுகின்றன.

32. தீர்த்த க்ஷேத்திரம் என்று எதனை குறிப்பர்?

''ஸம்ஸாரஸாயரம் தரந்தித்தி ஏதாணி தித்தம்'' (தவளா–9)

எங்கிருந்து ஸம்ஸார (பிறவி) உயிர்கள் அதாவது தவத்தர், முனிவர்கள், பிறவிக் கடலைக் கடக்கின்றனரோ அதாவது மோக்ஷ பதவியை அடைகின்றனரோ அந்த இடத்தை தீர்த்த க்ஷேத்திரம் என்கின்றனர்.

33. ஸம்மேத சிகர மலையைத் தரிசிப்பதால் என்ன பயன்?

ஸம்மேதசிகர மலையை உத்தம பாவனையுடன் தரிசிப்பவர் நரககதி, விலங்குகதி போன்ற கெட்ட பிறவிகளில் தோன்றுவதில்லை என்று ஞானியர் கூறுகின்றனர்.

34. வடபாரத மத்ய பிரதேச பாவன்கஞ்சா க்ஷேத்திரத்தில் உள்ள 84 அடி உயர ஆதிநாத பகவான் நிர்வாண படிமையும், தென்பாரத கர்நாடக சிரவணபெலிகுளத்தில் உள்ள 57 அடி உயர பகவான் பாகுபலி நிர்வாண படிமையும் நமக்கு மௌனமாக என்ன உபதேசம் செய்கின்றன?

பகவான் ஆதிநாத தீர்த்தங்கரர் படிமையும், பகவான் பாகுபலிபடிமையும் அஹிம்ஸை, தியானம், ஸய்யமம் (ஒழுக்கம்), நிர்வாணம் (ஆடை முதலான எந்த உடைமையும் இல்லாமை) பற்றிய நல்ல உபதேசங்களை நமக்கு மௌனமாகத் தருகின்றன. (அந்த உபதேசம் மனிதரை மகாத்மாவாக ஆக்குகிறது.)

35. ஸமவஸரணம் என்று எதைச் சொல்லுகின்றனர்?

தீர்த்தங்கர கேவலியினுடைய திவ்யத்தொனி ஒலிக்கின்ற, பன்னிரண்டு சபை உள்ள, சௌதர்மேந்திரன் ஆணை கேட்டு குபேரனால் அமைக்கின்ற அமைப்பினை சமவஸரணம் என்று கூறுவர்.

36. ஓர் எளிய படத்தின் வழி தீர்த்தங்கர பகவானுடைய ஸமவஸரணத்தில் அமர்ந்துள்ள பன்னிரண்டு சபைகளின் பெயரைக் காட்டுக.



37. சமவஸரணத்தில் உள்ள பன்னிரண்டு சபையுள் முனிவர்கள் சபையில் அமரும் ஏழு வகையான முனிவர்கள் பெயர்களைக் கூறுக.

ஸமான்ய கேவலி, பூர்வதரர், சிக்ஷகர், விபுலமதி மனப்பர்யய ஞானி, விக்ரியா ரித்திதாரி, அவதிஞானி, தபோவாதி என ஏழுவகை முனிவர்கள் சமவஸரணத்தில் முனிவர் சபையில் அமர்கின்றனர்.

38. பகவான் மஹாவீரர் சமவஸரண முனி சபையில் இருந்த கேவலி முதலான ஏழு வகை முனிவர்கள் எண்ணிக்கையைத் தனித்தனி கூறுக.

பகவான் மகாவீரர் சமவஸரண சபையில் 700 கேவலஞானி, 300 பூர்வதரர், 1100 சிக்ஷகர், 500 விபுலமதி மனப்பர்யய ஞானி, 100 விக்ரியா ரித்திதாரி, 1300 அவதிஞானி, 400 தபோவாதி முனிவர்கள் இருந்தனர்.

39. இங்கே நாலாம் காலத்தில் தீர்த்தரங்குடைய தீர்த்த காலத்தில் எத்தனை சலாகா புருஷர்கள் தோன்றுகின்றனர்? அவர்களுடைய தனித்தனி எண்ணிக்கையைக் கூறுக.

இங்கே நாலாம் காலத்தில் தீர்த்தரங்கருடைய தீர்த்த காலத்தில் அறுபத்து மூன்று சலாகா புருஷர்கள் தோன்றுகின்றனர்.

தீர்த்தங்கரர்கள் 24 பேர், சக்கரவர்த்திகள் 12 பேர், நாராயணர்கள் 9 பேர், பிரதி நாராயணர்கள் 9 பேர், பலபத்திரர்கள் 9 பேர் என மொத்தம் 63 சலாகா புருஷர்கள்

40. ஆதிநாதர் முதல் மகாவீரர் தீர்த்தங்கரர் வரையான இருபத்து நான்கு தீர்த்தங்கரர்கள் தீர்த்த காலத்தில் உண்டான அறுபத்து மூன்று புருஷர்களுடைய பெயர்களைக் கூறுக.

இருபத்து நான்கு தீர்த்தங்கரர் : ஏற்கனவே பெயர்கள் கூறப்பட்டுள்ளன.

பன்னிரண்டு சக்கரவர்த்திகள் : 1. பரத சக்கரவர்த்தி, 2. ஸகர சக்கரவர்த்தி, 3. மகத சக்கரவர்த்தி, 4. ஸனத்குமார சக்ரவர்த்தி, 5. சாந்திநாத சக்கரவர்த்தி, 6. குந்தநாத சக்கரவர்த்தி, 7. அரநாத சக்கரவர்த்தி, 8. ஸுபௌம சக்கரவர்த்தி, 9. மஹாபத்ம சக்கரவர்த்தி, 10. ஹரிஷேண சக்கரவர்த்தி, 11. ஜயசேன சக்கரவர்த்தி, 12. பிரம்மதத்த சக்கரவர்த்தி.

ஒன்பது பலபத்திரர் : 1. விஜய பலபத்திரர், 2. அசல பலபத்திரர், 3. ஸுதர்ம பலபத்திரர், 4. ஸுப்ரப பலபத்திரர் 5. ஸுதர்ஸண பலபத்திரர், 6. நந்தி பலபத்திரர், 7. நந்திமித்ர பலபத்திரர், 8. ராமசந்திர பலபத்திரர், 9. பலிராம் பலபத்திரர்.

ஒன்பது நாராயணர் : 1. திரிபிஷ்ட நாராயணர், 2. த்விபிஷ்ட நாராயணர், 3. ஸ்வயம்பூ நாராயணர், 4. புருஷோத்தம நாராயணர், 5. புருஷஸிம்ஹ நாராயணர், 6. புண்டரீக நாராயணர், 7. தந்த நாராயணர், 8. லக்ஷ்மண நாராயணர், 9. கிருஷ்ண நாராயணர்.

ஒன்பது பிரதி நாராயணர் : 1. அஸ்வக்ரீவ பிரதிநாராயணர், 2. தாரக பிரதிநாராயணர், 3. மேருக பிரதிநாராயணர், 4. நிசும்ப பிரதிநாராயணர், 5. மதுகௌடப பிரதிநாராயணர், 6. பிரஹலாத பிரதிநாராயணர், 7. பலி பிரதிநாராயணர், 8. ராவண பிரதிநாராயணர், 9. ஜராஸந்த பிரதிநாராயணர்.

41. தீர்த்தரங்கரர்களாக எப்படி ஆகின்றனர்?

பதினாறு காரண(ஷோடசகாரண) பாவனைகளைப் பாவிப்பதால் (சிந்திப்பதால்) தீர்த்தங்கர்கள் ஆகின்றனர்.

42. பதினாறு காரண பாவனை என்று எதனைக் குறிப்பர்? சுருக்கமாக கூறுக.

1. தரிசன விசுத்தி : அரஹந்த பகவான் அருளிய வீதராக நிர்கிரந்த வடிவ முக்தி நெறியில் எட்டு உறுப்புகளுடன் கூடிய நற்காட்சியில் ஆழ்ந்த ஈடுபாடு (ருசி) கொள்ளுதல்.
2. விநய ஸம்பன்னதா : மும்மணி மற்றும் மும்மணியையுடைய ஆகம நெறிப்படிச் செல்லும் சாதுக்களிடம் உள்ளார்ந்த அன்பு பெருமதிப்புடன் பணிவு காட்டுதல்.
3. சீல வ்ரதேஷு அனதிசாரம் : கொல்லாமை, உண்மை முதலான விரதங்களையும், விரதங்களைக் காக்கும் சீலங்களையும் குறையின்றி கடைப்பிடித்தல்.
4. அபீக்ஷண ஞானோபயோகம் : எப்போதும் இடைவிடாது நல் ஞானத்தில் தன் உபயோகத்தைச் செலுத்துதல் அதாவது நன்ஞான படிப்பு, படிப்பித்தல் முதலானவற்றில் ஆழ்ந்து இருத்தல்.
5. அபீக்ஷண ஸம்வேகம் : பஞ்ச பரிவர்த்தனை வடிவமான பிறவி துக்கத்துக்கும், துக்க காரணத்துக்கும் அஞ்சுதல்; அல்லது மும்மணியினால் உண்டான மகிழ்ச்சியில் இருத்தல்.
6. சக்தித தியாகம் : தன் ஆற்றலுக்கு ஏற்ப சுவை முதலானவற்றை விடுதல், அல்லது விதி முறையுடன் தானம் செய்தல்.
7. சக்தித தபம் : தன் ஆற்றலுக்கு ஏற்ப ஜைன நெறிக்கு இசைவான தபம் செய்தல்
8. ஸாது சமாதி : தவ முனிவர்களுடைய தபத்துக்கு வரும் இடையூறுகளை நீக்கி அவருடைய ஒழுக்கத்தைக் காக்க உதவுதல்.
9. வையாவ்ருத்ய கரணம் : குணமுடைய நல் சாதுக்களின் கை கால் பிடித்து விடுதல், ஆஹார தானம், உபகரண தானம் முதலான தானங்களைத் தந்து அவர்களுக்குச் சேவை செய்தல்.
10. அர்ஹத் பக்தி : தூய எண்ணத்துடன் குண விருப்பு கொண்டு அருக பகவான் குணங்களைப் போற்றுதல்.
11. ஆசாரிய பக்தி : தூய எண்ணத்துடன் குண விருப்பு கொண்டு ஆசாரிய பரமேஷ்டி குணங்களைப் போற்றுதல்.

12. பஹுஸுருத பக்தி : தூய எண்ணத்துடன் குண விருப்பு கொண்டு இருபத்தைந்து (11 அங்கம், 14 பூர்வம்) குணமுடைய உபாத்யாய பரமேட்டி குணங்களைப் போற்றுதல்.

13. ப்ரவசன பக்தி : தூய எண்ணத்துடன் குண விருப்பு கொண்டு ஆகம குணங்களைப் போற்றுதல்.

14. ஆவஸ்யக அபரிஹாணி : சாமாயிகம், ஸ்தவனம், வந்தனை, பிரதிகிரமணம், பிரத்யாக்யானம், காயோத்ஸர்கம் எனும் இந்த ஆறு இன்றியமையாச் செயல்களை எப்போதும் குறை ஏற்படாமல் செய்தல், நாள்தோறும் குறித்த காலத்தில் நன்றாகச் செய்தல்.

15. மார்கப்ரபாவனை : நன்ஞானத்தாலும், நல் தபத்தாலும், ஜினேந்திர பகவான் பூஜையினாலும் உலகில் ஜின அறப்புகழை விளங்கச் செய்தல்.

16. பிரவசன வாத்ஸலத்வம் : கன்று கண்ட கறவை போல் தன் தர்மம் உடையாரைக் கண்டவுடன் மனம் மகிழ்தல்.

இந்த பதினாறு பாவனைகளையோ இவற்றுள் சிலவற்றையோ பாவிப்பதால் தீர்த்தரங்கரப் பிரகிருதி (நாமவினை) யின் ஆஸ்ரவம் உண்டாகிறது. இவற்றுள் தரிஸன விசுத்தி பாவனையைப் பாவிப்பது மிகவும் அவசியமாகும்.

43. ஸ்ரீ கிருஷ்ண நாராயணனை ஒன்றுவிட்ட சகோதரனாகப் பெற்ற தீர்த்தரங்கரர் யார்?
அவர் இருபத்திரண்டாம் தீர்த்தரங்கரான நேமி நாதர் ஆவார்.

44. எந்த தீர்த்தரங்கரர் தீர்த்த காலத்தில் ராமர், லட்சுமணர், அனுமான் (பஜ்ரங்கபலி) தோன்றினர்? ராமரும், அனுமானும் முனியாகி மோக்ஷம் அடைந்தனர்?
இது முனிசுவ்ரதநாதர் எனும் இருபதாம் தீர்த்தரங்கரர் தீர்த்த காலத்தில் ஆகும்.

45. எந்த தீர்த்தரங்கரருக்குத் தீக்ஷை ஏற்று ஆறு நாள் கழித்து கேவல ஞானம் தோன்றி ஸமவஸரணம் அமைந்தது?
அவர் பத்தொன்பதாம் தீர்த்தரங்கரரான பரம தபஸ்வி மல்லிநாத பகவான் ஆவார்.

46. எந்தத் தீர்த்தரங்கரருடைய பிள்ளைகளுக்குப் பரதன், பாகுபலி என்று பெயர்?
முதல் தீர்த்தரங்கரரான ஆதிநாதருடைய பிள்ளைகளுக்கு பரதன், பாகுபலி என்று பெயர்.

47. தம் தந்தை தம் காரணமாக எந்த சிராவகன் முன்னும் வணங்குதல் கூடாது என்று வாழ்நாள் முழுவதும் பிரம்மசரிய விரதம் ஏற்று சமவசரணத்தில் தீக்ஷையும் ஏற்ற பெண்கள் யார்? அவர்கள் தந்தை யார்?
அப்பெண்கள் பிராமியும், சுந்தரியும் ஆவர். அவர் தந்தை விருஷப தேவர். (ஆதிநாதர்)

48. தற்போது இங்கே (பரத க்ஷேத்திரத்தில்) எந்தத் தீர்த்தரங்கரருடைய தீர்த்த காலம் நடைபெறுகிறது?
தற்போது பகவான் மகாவீர சுவாமி தீர்த்தங்கரருடைய தீர்த்த காலம் நடைபெறுகிறது.

****

அதிகாரம் – 3

ஜைன இல்லறத்தார் கடமைகள்

(எட்டு மூல குணங்கள், இரவு உண்ணாமை, மற்றும் வடித்த நீர் குடித்தல்)

ஒருவர் பிறவியால் ஜைனன் ஆவதில்லை, அவருடைய செயலினால் ஜைனன் ஆகிறார் ஆகையால் உண்மையான ஜைனன் ஆவதற்கு இல்லறத்தார் (ஸ்ராவகர்கள்) கடைபிடிக்க வேண்டிய எட்டு மூல குணங்களைப்பற்றி அவசியம் தெரிந்துக் கொள்ள வேண்டும். எனவே மூன்றாவதாக ஜைன இல்லறத்தாரின் கடமைகள் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

1. இல்லறத்தாருடைய எட்டு மூலகுணங்கள் என்று எவற்றைச் சொல்லுவர்?

இல்லற நிலையை அடையாளம் காட்டும் முதன்மையான குணங்களை எட்டு மூல குணங்கள் என்று சொல்லுவர்.

2. எட்டு மூலகுணங்களின் பெயர்கள் யாவை?

இல்லறத்தாருடைய எட்டு மூலகுணங்களின் பெயர்கள் இருவகையில் அமைகின்றன.

1. கள், தேன், புலால் இவற்றை உண்ணாது விலக்குதல், ஆல், அத்தி, அரசு, கல்அத்தி, இரளி இவற்றின் பழங்களை உண்ணாது விலக்குதல், (இந்த எட்டுப் பொருள்களை விலக்குவதால் நம்முடைய ஆன்மாவில் எட்டு மூல குணங்கள் தோன்றுகின்றன)
2. கள், தேன், புலால் இவற்றை விலக்குதல், இம்சை, பொய், திருட்டு, தீயொழுக்கம், கடும்பற்று இவற்றை ஸ்தூலமாக விடுதல்.

3. 'ச்ராவக்' இச் சொல்லின் பொருள் என்ன?

'ச்ரா' என்றால் 'ச்ரத்தாவான்' (நற்காட்சியுடையவன்), 'வ' எனில் 'விவேகவான்' (நல் ஞானி), 'க' எனில் க்ரியாவான்' (நல்லொழுக்கமுடையவன்) நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் உடையவனை சிராவகன் என்று சொல்லுவர்.

4. கள் என்று எதைச் சொல்லுவர்?

பொருளை அழுக வைத்து, உயிர் வதையோடு கூடிய அழுகிய நீர் கொண்டு ஆக்கப்படும் மயக்கத்தைத் தரும் பொருளைக் கள் என்று சொல்லுவர்.

5. கள் குடிப்பதால் என்ன தீமை ஏற்படுகிறது?

கள் மயக்கத்தால் மனிதன் அற ஒழுக்கத்தை மறந்து விடுகிறான். தாயைத் தாரம் என்றும் தாரத்தைத் தாய் என்றும் சில நேரங்களில் உளறுகிறான்; அவன் வாயிலிருந்து தீமையான பயனற்ற சொற்களே வெளிப்படுகின்றன.

6. தேன் என்ன பொருள்?

தேனீக்கள் தம் உணவுக்காக தம் வாயில் கொண்டு வரும் பொருள்களின் சாற்றைத் தேன் என்பர்.

7. தேனை எடுப்பதிலும் உண்பதிலும் என்ன தீமை உண்டாகிறது?

தேனை எடுப்பதாலும் உண்பதாலும் ஏழு ஊர்களைக் கொளுத்திய தீமை (பாபம்) உண்டாகிறது என்று ஆகமத்தில் கூறப்பட்டுள்ளது.

8. தேனை எடுப்பதிலும், உண்பதிலும் ஏன் இவ்வளவு பெரிய தீமை கூறப்படுகிறது?

தேன் கூட்டில் எண்ணிலடங்கா இயங்கு உயிர்கள் வாழ்கின்றன. தேன் கூட்டை அழிப்பதனால் அவ்உயிர்கள் வதைப்பட்டு அழிகின்றன. அதனால் பெரிய பாபம் என்று ஆகமத்தில் கூறப்படுகிறது.

9. புலால் என்று எதனைச் சொல்லுவர்?

ஏழு தாதுக்களால் ஆன இரண்டு முதலான பொறிகளையுடைய உயிர்களது இறந்த உடலைப் புலால் என்பர்.

10. புலால் உண்பதால் என்ன தீமை உண்டாகிறது?

புலால் உண்பதால் அதிக அளவு இயங்கு உயிர்கள் கொல்லப்படும் தீமை உண்டாகிறது. மேலும் உண்பவரின் உடலில் பல நோய்கள் உண்டாகும் நிலைமை தோன்றுகிறது.
(வேக வைத்தாலும், பச்சையாக இருந்தாலும் மாமிசத்தில் (புலாலில்) உயிர்கள் தோன்றிக் கொண்டே இருக்கும்).

11. கள், தேன், புலால் உண்ணும் பிராணி எந்தக் கதியை அடையும்?

கள், தேன், புலால் உண்ணும் பிராணிகள் நரக, விலங்கு முதலான கெட்ட கதிகளுடைய பலனை அனுபவிக்கின்றன.

12. ஆல், அத்தி, அரசு, கல்லத்தி, இரளி எனும் இந்த ஐந்து மரங்களில் உண்டாகும் ஐந்து உதும்பர பழங்களைத் தின்பதால் என்ன தீமை ஏற்படுகிறது?

ஐந்து உதும்பர பழங்களின் உள்ளே எண்ணிலடங்கா இயங்கு உயிர்கள் தோன்றி வாழ்கின்றன. எனவே அப்பழங்களைத் தின்பதால் புலாலை உண்பது போன்ற தீமை உண்டாகிறது.

13. நீரை வடிக்காமல் குடித்தால் என்ன தீமை உண்டாகிறது?

நீரை வடிக்காமல் குடித்தால் திரஸ உயிர்களைக் கொல்லும் தீமை உண்டாகிறது. ஏனெனில் வடிக்காத நீரில் நம் கண்களுக்குப் புலப்படாத எண்ணிலடங்கா இயங்கு உயிர்கள் இருக்கின்றன.

14. விஞ்ஞானப்படி ஒரு துளி நீரில் எத்தனை உயிர்கள் உள்ளன?

இன்றைய விஞ்ஞானப்படி ஒரு துளி நீரில் 36,450 உயிர்கள் காணப்படுகின்றன. நம்முடைய ஜைன தரும விஞ்ஞானப்படி இந்த எண்ணிக்கையைக் காட்டிலும் அதிக எண்ணிலடங்கா உயிர்கள் உள்ளன.

15. எந்த நீரைக் குடிப்பதால் 'அஹிம்ஸா பரமோ தர்ம!' (கொல்லாமையே உயர்ந்த அறம்) என்பது பாதுகாக்கப்படுகிறது?

நதி அல்லது கிணற்று நீரை எடுத்து கெட்டியான (மோட்டா) துணியால் வடித்து, வடிசீலையில் உள்ள உயிர்களை மீண்டும் அந்த நதி அல்லது கிணற்றில் முறையாக விட்டு விட்டு, அப்படி வடித்த நீரைக் குடிப்பதால் 'கொல்லாமையே உயர்ந்த அறம்' என்பது காக்கப்படுகிறது.

16. இரவு உண்பதால் என்ன தீமை உண்டாகிறது?

இரவு நேரத்தில் உணவில் விழுந்துள்ள உயிர்களை நன்கு சோதனை செய்ய முடியாது. அதனால் இரவில் உண்பதால் மிகவும் இம்சை செய்யும் தீமை உண்டாகிறது.

17. தற்காலத்தில் மின் விளக்கு வசதி இருப்பதால் இரவில் உணவை நன்கு ஆயலாம். அதனால் இரவு உண்பதில் என்ன தடை இருக்க முடியும்?

இது சரி இல்லை. சூரிய ஒளியைப் போல விளக்கு ஒளியில் உணவை நன்கு சோதனை

செய்ய முடியாது. மேலும் விளக்கு ஒளியில் சிறியதும், பெரியதுமாக பல வகையான உயிர்கள் தோன்றுகின்றன. அவை உணவில் விழுந்து உணவுத் தூய்மையைக் கெடுத்து உணவை நச்சுத் தன்மை உடையதாக ஆக்கிவிடுகிறது. ஆகையால் இரவில் விளக்கு ஒளியில் உண்ணுதல் கூடாது. எடுத்துக்காட்டாக, சூரிய ஒளி நேரடியாகப் படாத ஒரிடத்தில் நாம் உணவருந்த உட்கார்ந்திருக்கிறோம், எனினும் பகலில் சூரிய ஒளி பிரதிபலிப்பதால், நாம் உணவு முதலான பொருள்களை நன்கு சோதித்து எடுத்துக்கொள்ளுகிறோம். ஆனால் மின்விளக்கின் பிரகாசம் சூரிய ஒளி பிரதிபலிக்கிற அளவிற்கு இருப்பதில்லை. அதனால் அவ்வொளியில் உணவை நன்கு சோதிக்க முடிவதில்லை. அப்போது மின்தடை எற்பட்டால் நிலைமை மேலும் மோசமடைகிறது. அதனால் இரவு உண்ணுதல் எவ்விதத்திலும் சரியன்று.

18. இரவு உணவு குறித்து அறிவியலார் கருத்துகள் யாவை? சில சிறப்பான கருத்துகளைக் கூறுக.

1. சூரியனது மறைவுக்குப்பின் நமது செரிப்பு ஆற்றல் வலிவு குறைகிறது அல்லது மந்தமாகிறது.
2. உணவு செரிப்புக்கு உதவும் பிராணவாயு இரவில் போதிய அளவு கிடைப்பதில்லை. ஏனெனில் பகலில் தாவரங்கள் கரியமிலவாயு ஏற்று பிராண வாயுவை வெளியிடுகின்றன. ஆனால், இரவில் இம்முறை மாறி பிராண வாயுவை ஏற்று கரியமிலவாயு வெளி ஏற்றுகின்றன. அதனால் நமக்கு போதிய பிராண வாயு கிடைப்பதில்லை. அதனால் இரவில் உண்ட உணவு நன்கு செரிப்பது இல்லை.
3. சூரியன் மறைந்தபின் சூரிய ஒளி இல்லாத சூழ்நிலையில் பல நுண்ணுயிர்கள் தோன்றுகின்றன. அவை உணவில் விழுந்து உணவை நச்சுத் தன்மை உடையதாக ஆக்கிவிடுகின்றன.
4. மனிதர் தம் வயிறு நன்றாக இருக்கும் பொருட்டு உண்ட உணவில் பாதி செரித்த பிற்பாடுதான் இரவில் உறங்க வேண்டும். உடல்நலம் உடையவர் உண்ட உணவு ஐந்தாறு ஏழு மணி நேரத்தில் செரித்துவிடுகிறது. அதனால் இல்வாழ்வோர் விஞ்ஞானப்படி மாலையில் சூரியன் மறையும் முன் தான் உணவு கொள்ள வேண்டும்.
5. இரவில் உண்ணப்படும் உணவு அதிக பிரமாதத்தையும் (சோம்பல்), அஜீர்ணத்தையும் தருகிறது. மேலும் இரவில் பல கெட்ட கனவுகள் தோன்றுவதற்கும் காரணமாகிறது,

19. இரவு உண்ணாமையால் நமக்கு என்ன நன்மை விளைகிறது? மூன்று நன்மைகளைக் கூறுக.

இரவில் உண்ணாமையால்.

1. ஓராண்டில் ஆறு மாத உபவாச பலன் ஏற்படுகிறது.
2. 'அஹிம்ஸா பரமோ தர்ம!' என்பது காக்கப்படுகிறது.
3. உடல் நலமாக இருக்கிறது.

20. இரவு உண்ணாமை குறித்து பிற மதத்தினர் ஏதேனும் கூறியுள்ளனரா?

ஆம்! அவர்கள் மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது:–

மத்ய மாம்ஸாசனம் ராத்ரி போஜனம் கந்த பக்ஷணம் I
யே குர்வந்தி வ்ருதா தேஷாம் தீர்த்த யாத்ரா ஜபஸ்தப II

அதாவது, 'கள் குடிப்போர், புலால் உண்போர், இரவில் உண்போர், கிழங்கு, வேர் உண்போர் தீர்த்த யாத்திரை, ஜபம், தபம் முதலியன செய்தல் வீணே' என்பதாம்.

21. கடைத்தெரு உணவை உண்பதால் என்ன என்ன தீமைகள் உண்டாகின்றன?

கடைத்தெரு உணவை உண்பதால் உண்டாகும் தீமைகள் :

1. நல்ல பொருள் அல்ல; உணவு தயாரிக்கப்படும் பொருள்கள் தூயதாக இல்லாது போதல்.
2. உடல் தூய்மை இன்மை : உணவு தயாரிப்போர் உடல் தூய்மையாக இல்லாது இருத்தல்.
3. ஜாதி தூய்மை இன்மை : உணவு சமைப்போர் சூத்திரர் முதலான குலத்தில் தோன்றி இருக்கக் கூடும்.
4. எண்ணத் தூய்மை இன்மை : உணவு சமைப்போர் வியசனிகளாகவும் இருக்கக் கூடும்.
5. நோய் உண்டாதல் : தூய்மை இல்லாத உணவை உட்கொள்ளுவதால் பல நோய்கள் தோன்றலாம்.
6. அற இழப்பு : தூய்மை இல்லாத உணவை உட்கொள்ளுவதால் ரத்னத்ரய தர்மத்துக்கு ஊறு ஏற்படுகிறது.

22. சேனைக்கிழங்கு, உருளைக் கிழங்கு, முள்ளங்கி, பச்சை இஞ்சி முதலானவற்றை உண்பதால் என்ன தீமை?

சேனைக்கிழங்கு முதலானவை அனந்த நுண்ணிய உயிர்கள் வாழ்வதற்கு இடமானவை. அதனால் இந்த கிழங்குகளை 'அனந்தகாய வனஸ்பதி' என்று கூறுவர். இவற்றை உண்பதால் அனந்தம் உயிர்கள் கொல்லப்படுகின்றன. மேலும் இவை வன்மையும், விழிப்பின்மையும் வளர்ப்பன வாகும்.

23. எட்டு மூல குணத்தை ஏற்று எந்த வேடன் மகாவீரராகி மோக்ஷ பதவியை அடைந்தான்?

புரூரவன் என்ற வேடன் எட்டு மூல குணத்தை ஏற்றுப் பிறகு சில பிறவிகளில் மகாவீராராகி முக்தி பதவியை அடைந்தான்.

24. இரவு உண்ணுதலை விட்டு விட்டு யார் செல்வந்தர் மகன் பிரதீங்கரனாகி பிறகு முனியாகி மோக்ஷத்தை அடைந்தான்?

இரவு உண்ணுதலை விட்டதனால் நரி செல்வந்தரின் பிள்ளை பிரதீங்கரனாகி முனியாகி மோக்ஷத்தை அடைந்தது.

****

நல்லார் வணங்கப் படுவான் பிறப்பாதி நான்கு
மில்லா னுயிர்கட் கிடர்தீர்த் துயரின்ப மாக்குஞ்
சொல்லான் றருமச் சுடரானெனுந் தொன்மையினா
னெல்லா முணர்ந்தா னவனே யிறையாக வேத்தி

– நீலகேசி

அதிகாரம் – 4



தேவனை வழிபடும் முறையும் சிறப்பும்

எந்த உதாரண புருஷரின் வாழ்க்கையை பார்க்கும் போது நம்வாழ்க்கையும் அவ்வாறே அமைகிறதோ, அப்படிப்பட்ட உதாரண புருஷ வடிவ பகவானின் கோயிலுக்கு நாம் எவ்வாறு செல்ல வேண்டும், அங்கு என்ன செய்ய வேண்டும், என்ற விதிமுறைகளையும் மகத்துவத்தையும் அறியாமல் அவருடைய உண்மையான பக்தனாக எப்படி ஆகமுடியும்? ஆகையால் இந்த நான்காம் அதிகாரம் நாம் ஜின பகவானின் கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும், அங்கு எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற விதிமுறைகளையும், தரிசனம் செய்வதால் உண்டாகும் மகத்துவங்களையும் விளக்குகிறது.

1. தேவ தரிசனம் என்று எதனைச் சொல்லுவர்?

நாம் பணிவுடன் வணங்கி வீதராக பகவானுடைய குணங்களை எண்ணி அவரைப் பார்ப்பது அல்லது நினைவு கூர்தலை தேவ தரிசனம் என்பர்.

2. ஜைன இல்லறத்தார் கோயிலுக்கு (சைத்யாலயத்துக்கு) எப்படி வர வேண்டும்?

ஜைன இல்லறத்தார் குளித்துவிட்டு, துவைத்த தூய (மடி) துணியை உடுத்திக் கொண்டு தூய மங்கலமான பூஜைப் பொருள்களை எடுத்துக் கொண்டு கோயிலுக்கு வர வேண்டும்.

3. கோயிலுக்கு வருவதற்கு முன் ஏன் குளிக்க வேண்டும்?

இல்லறத்தாரால் வீட்டில் ஆரம்பம் (தொழில்) முதலான செயல்களால் ஐந்து பாபங்கள் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன. அதனால் அவர்கள் உடல் தூய்மை இல்லாமல் போகிறது. அந்த அழுக்கை நீக்குவதற்கு குளித்துவிட்டுப் பிறகு புனிதமாக கோயிலுக்கு வர வேண்டும்.

4. தோலால் ஆன பொருளை தோலினால் செய்யப்பட்ட (பெல்ட், மணிபர்ஸ், முதலியன) அணிந்து கொண்டு கோயிலுக்கு ஏன் வருதல் கூடாது?

ஐந்து பொறியுடைய பிராணியின் இறந்த உடலையோ அதன் உறுப்பையோ தொட்டுவிட்டால் தன்னை அசுத்தனாகக் கருதி குளிக்கிறான். அதே போன்று தானாக இறந்த அல்லது கொல்லப்பட்ட பிராணியின் உடலிலிருந்து வந்த தோல் பொருளைத் தொடுவதால் அசுத்தனாகி விடுகிறான் என்று கருதுதல் வேண்டும். கோயில் போன்ற புனிதமான இடங்களுக்குச் செல்லும் போது தூய்மை மிகவும் அவசியம். மேலும் இறந்த உடலிலிருந்து வந்த தோல் முதலான பொருள்களில் எப்போதும் நுண்ணுயிர்கள் தோன்றிக் கொண்டே இருக்கும். அதனால் அதனைப் பயன்படுத்துவதால் பல உயிர்களுக்கு வதை (ஹிம்சை) உண்டாகின்றன.

5. கோயிலுக்குள் நுழையும் முன் கால்களை ஏன் வடித்த நீரால் கழுவிக் கொள்ள வேண்டும்?

வரும்போது வழியில் கிடந்த அசுத்த பொருள்கள் கால்களில் படிந்து இருக்கும். கால்களைக் கழுவாமல் சென்றால் கோயிலின் தூய்மை கெட்டுப்போகும். அதனால், கால்களைக் கழுவிக் கொண்டுதான் கோயிலுக்குள் போகவேண்டும்.

6. கோயிலுக்குள் நுழையும் போது என்ன சொல்ல வேண்டும்?

கோயிலுக்குள் நுழையும் போது நிஸ்ஸஹீ – நிஸ்ஸஹீ – நிஸ்ஸஹீ என்று மூன்றுமுறை கூறுதல் வேண்டும்.

7. கோயிலுக்குள் நுழையும் போது மூன்று முறை நிஸ்ஸஹீ என்று ஏன் கூற வேண்டும்?

மனிதர் புதிய இடத்துக்கோ அல்லது – பிறர் வீட்டுக்கோ செல்லும் போது நுழையும் முன் தன் வருகையைச் சொல் மூலமாகவோ அல்லது ஒலிக் குறிப்பு மூலமாகவோ தெரிவிக்கிறார். ஏனெனில், அவர் வருகையால் அங்குள்ள மனிதர்களுக்கோ, தேவர்களுக்கோ, விலங்குகளுக்கோ இடர் ஏற்படக்கூடாது என்பதே காரணம். அதே போன்று நாம் கோயிலில் நுழையும் போது மூன்று முறை 'நிஸ்ஸஹீ' என்று சொல்லி 'நான் உள்ளே வருகிறேன், எனக்கும் இடம் தாருங்கள்' என்று அங்குள்ளோருக்குக் குறிப்புச் செய்கிறோம்.

8. வலம் வருதல் யாருக்குச் செய்யப்படுகிறது? எத்தனை முறை செய்யப்படுகிறது?

வலம் வருதல் வீதராக பகவானுக்கும், பற்றற்ற குருவுக்கும் (முனிக்கும்) செய்யப்படுகிறது; மும் மூன்று முறை செய்யப்படுகிறது.

9. வீதராக தேவனையும், பற்றற்ற குருவையும் ஏன் மூன்று முறை வலம் வருதல் வேண்டும்?

வீதராக பகவானிடமும் பற்றற்ற குருவிடமும் மும்மணி (ரத்னத்ரயம்) இருப்பது போல தானும் மும் மணியைப் பெற வேண்டும் எனும் பாவனையுடன் மூன்று முறை வலம் வருகின்றனர்.

10. கோயிலில் தரிசனம் செய்யும்போது பகவானுக்கு எந்தப் பக்கத்தில் நிற்க வேண்டும்?

கோயிலில் தரிசனம் செய்யும்போது பகவானுக்கு முன்னே அல்லது பகவானுக்கு வலப்பக்கத்தல் நிற்க வேண்டும். அப்படி நிற்க இடமில்லை என்றால் அமைதியுடன் விருப்பு வெறுப்பு கொள்ளாமல் வேறு இடத்திலும் நிற்கலாம்.

11. ஜிந பகவானைத் தரிசிக்கும் போது முதலில் என்ன சொல்ல வேண்டும்?

ஜிந பகவானை தரிசிக்கும் போது எல்லாவற்றுக்கும் முதலில் ணமோகார மந்திரம், சத்தாரி மங்கலம், தர்ஸன ஸ்தோத்ரம் (துதி) சொல்ல வேண்டும்.

12. ஜிநேந்திர பகவானை என்ன பாவனையுடன் தரிசிக்க வேண்டும்?

ஜிநேந்திர பகவானை மூன்று பாவனைகளுடன் தரிசிக்க வேண்டும்.

1. ஏ! பகவன்! நானும் உம்மைப் போல் குணவானாக, பகவானாக ஆக வேண்டும்.
2. ஏ! பகவன்! என் பாப வினைகள் விரைந்து அழிவதாக!
3. ஏ! பகவன்! எனக்கு மோக்ஷ சுகம் கிடைப்பதாக!

13. பகவானைத் தரிசிக்கும் போது எந்த எண்ணங்களை விடுதல் வேண்டும்?

பகவானைத் தரிசிக்கும் போது கீழ்கண்ட எண்ணங்களை விடவேண்டும்.

1. செல்வச் சிறப்பு அடைதலை விரும்பும் எண்ணத்தை விடுதல் வேண்டும்.
2. மக்கள் பேறு விரும்பும் எண்ணத்தை விடுதல் வேண்டும்.
3. விருப்பு, வெறுப்பு பாவனையை விட வேண்டும்.

14. பகவானுக்கு முன்னே செல்வச் சிறப்பு, மக்கள் பேறு முதலான வேண்டுதலோ, பாவனையோ நாம் செய்யவில்லை என்றால் இந்த உலகியல் பொருள்களை நாம் பெறுவது எப்படி?

தானம், பூஜை முதலான அறச் செயலைச் செய்வதால் நாம் பந்திக்கும் புண்ணிய வினையாலோ, மற்றும் முன் பிறவியில் ஈட்டிய புண்ணியத்தாலோ நாம் இந்த உலக இன்பப் பொருள்களைத் தானாகவே பெறுகிறோம்.

15. பகவானைத் தரிசித்து வணங்கிய பிறகு சிராவகர் இன்னும் யார் யாரை வணங்க வேண்டும்?

வீதராக பகவானை வணங்கிய பிறகு சிராவகர், ஜினவாணி (சாஸ்த்ரம்) மற்றும் திகம்பர குருவை வணங்க வேண்டும். பிறகு ஐலகர், சுல்லகர், ஆர்யிகை, சுல்லகியரையும் தக்கவாறு வணங்க வேண்டும்.

16. கோயிலுக்கு வெளியே இல்லற (ஆசையுடைய) நற்காட்சியாளர் ஒருவருக்கொருவர் 'ஜெய்! ஜிநேந்த்ரா' எனச் சொல்லிக் கொள்ளலாமா?

ஒ! அப்படிச் சொல்லிக் கொள்ளலாம். அது ஆகமத்திற்கு எதிரானது அன்று.

17. ஜிநாலயத்தில் வேறு சிறப்புகள் என்னென்ன செய்ய வேண்டும்?

ஜிநாலயத்தில் வீதராகி தேவர், சாஸ்திரம், குருவுக்கு பூஜை, ஜபம், சாஸ்த்ரம் ஓதுதல், கேட்டல் ஆகிய சிறப்புகளைச் செய்தல் வேண்டும்.

18. ஜினாபிஷேகத்திற்குப் பிறகு கந்தோதகத்தினை எந்த விதிமுறைப்படி எடுத்துக் கொள்ளவேண்டும்?

ஜினாபிஷேக கந்தோதகத்தினை நமது நடு மோதிர இரண்டு விரல்களினால் எடுத்துக்கொண்டு (கீழே விழாமலிருக்க கந்தேதகம் எடுத்துக்கொண்ட இரண்டு விரல்களுக்கு கீழே இடது கையை வைத்துக்கெண்டு) தலைமீது தெளித்துக்கொள்ளவேண்டும். 'நிர்மலம் நிர்மலீகரணம், பவித்ரம், பாப நாசனம், ஜின கந்தோதகம் வந்தே அஷ்டகர்ம விநாசனம்' என்ற சுலோகத்தையும் சொல்ல வேண்டும்.

19. ணமோகார மந்திரம், அரகந்தர், சித்தர், ஓம் ஆகிய வீதராக மந்திரங்களை எப்படி ஜபம் செய்யவேண்டும்?

ஒன்றுபட்ட மனத்துடன் நின்று கொண்டு அல்லது பத்மாசனம் முதலான ஆசனங்களில் இருந்து கொண்டு அசையாது இருந்து ஜபம் செய்ய வேண்டும். பஞ்சணமோகார மந்திரம், 'ணமோ அரஹந்தாணம், 'ணம: ஸித்யேப்ய:', ' ஓம்' முதலான வீதராக மந்திரங்களை ஜபிக்க வேண்டும்.

20. இந்த வீதராக மந்திரங்களை ஜபிப்பதால் நமக்கு என்ன பயன் கிடைக்கிறது?

அப்படி ஜபிப்பதால் நமக்கு எண்ணிலடங்கா பாப வினைகளின் உதிர்ப்பும், அதிசய புண்ணிய பந்தமும் கிடைக்கின்றன.

21. ஸ்வாத்யாயம் ஏன் செய்ய வேண்டும்?

புண்ணியம், பாபம் மற்றும் மோக்ஷ நெறியைபற்றி அறியவும், விருப்பு வெறுப்புகளுக்கு பரிகாரம் தேடவும் ஸ்வாத்யாயம் (ஆகமம் ஓதுதல்) செய்ய வேண்டும்.

22. ஸ்வாத்யாயம் செய்வதால் என்ன பயன்?

ஸ்வாத்யாயம் செய்வதால் நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கத்தைப் பெறுவதுடன் பரம்பரையில் கேவலஞானத்தையும் அடைகிறோம்.

23. ஜிநாலயத்தை விட்டு வெளியே வரும்போது என்ன சொல்ல வேண்டும்?

ஜிநாலயத்தை விட்டு வெளியே வரும்போது 'அஸ்ஸஹீ, அஸ்ஸஹீ, அஸ்ஸஹீ' என்று சொல்ல வேண்டும்.

24. 'அஸ்ஸஹீ' என்றால் என்ன பொருள்?

'நான் இப்போது வெளிஏறுகிறேன்; 'நீங்கள் உங்கள் இடங்களுக்கு வரலாம்' என்பது அதன் கருத்தாகும்.

25. மானஸ்தம்பம் என்று எதனைச் சொல்லுவர்?

மான கஷாயத்தை அழிக்கும் சிறந்த ஸ்தம்பத்தை மானஸ்தம்பம் என்பர். (ஸமவஸரணத்தில் நான்கு திசைகளிலும் திசைக்கு ஒன்றாக நான்கு மானஸ்தம்பம்கள் இருக்கும்)

26. இங்கே பஞ்சம காலத்தில் மானஸ்தம்பத்தை ஏன் ஸ்தாபிக்கின்றனர்?

பகவானுடைய ஸமவஸரண நினைவாக மானஸ்தம்பத்தை ஸ்தாபிக்கின்றனர்.

27. மானஸ்தம்பத்தில் யாருடைய படிமம் உள்ளது?

மானஸ்தம்பத்தில் அரஹந்த பரமேஷ்டியின் படிமம் உள்ளது.

28. பகவான் மாகவீரர் ஸமவசரணத்தில் மானஸ்தம்பத்தைப் பார்த்ததால் மானம் அழியப்பெற்ற சிறந்த நபர் யார்?.

அந்தச் சிறந்தவர் பெயர் 'இந்திரபூதி கௌதமர்' (பிறகு அவரே முனிவராகி கணதர பரமேஷ்டி யானார்).

29. கோயிலின் மேல் ஏன் கோபுரம் கட்டுகின்றனர்? அதன் பெருமை என்ன?

கோயிலின் மேல் கோபுரம் கட்டுதற்கு முதன்மையாக நான்கு காரணங்கள் உள்ளன. அவை:

1. கோபுரம் கட்டுவதால் ஜிநாலயத்திற்கு முழுமையான அழகு உண்டாகிறது.
2. கோபுரம் இருப்பதால் ஜிநாலயம் இருக்கும் இடம் மனிதர், தேவர், வித்யாதரர் முதலான அனைவருக்கும் தெரிகிறது.
3. ஓங்காரம் முதலான மங்கல ஒலி கோபுரத்தில் எதிர்ரொலிக்கிறது.
4. கோயிலின் உயர்ந்த கோபுரங்களைப் பார்க்கும் போது மனிதர்களின் மான கஷாயம் அழிகிறது.

30. கொடி இல்லாமல் கோபுரம் சோபிப்பதில்லை என்று கேள்விப்படுகிறோம். கோபுரத்தில் முக்கோணம் நாற்கோணமான ஸ்வதிஸ்கம் போட்ட மஞ்சள் நிற கொடிகளை – சிராவகர்கள் ஏற்றுவதால் என்ன சிறந்த பயனை அடைகிறோம்?

அத்தகைய கொடிகளைக் கோபுரத்தில் ஏற்றுவதால் கீழ் வரும் பயன்களை அடைகிறோம்.

1. இது போன்ற கொடிகள் வெகு தூரத்திலேயே கோயில் இருப்பதை அறிய அடையாளமாகின்றன.
2. ஸ்வஸ்திகத்துடன் கூடிய இளம் மஞ்சள் கொடி சுபத்தின் அடையாளமாகும்.
3. ஸ்வஸ்திகத்துடன் கூடிய இளம் மஞ்சள் கொடி அஷ்ட மங்கலத்திற்குள் அடங்குகிறது.
4. இது போன்ற ஸ்வஸ்திகத்துடன் கூடிய இளம் மஞ்சள் நிறம் மங்கல சுப வடிவ கொடி ஜைன தர்ம பிரபாவனைக்கு அடையாளமாகும். இதுபோலவே பஞ்சவர்ண கொடியும் கூட ஜைன தர்மத்தின் அடையாளமாகக் கருதப்படுகிறது. ஆகையால் பஞ்சவர்ண கொடியும் ஏற்றலாம்.

31. நல்ல சிராவகர் கிணறுள்ள தன் வீட்டில் கழிவிடம் முதலான அசுத்த இடத்திலிருந்து விலகி சமையல் படுக்கை அறைகளில்லாத தனியான தக்க இடத்தில் தர்ஸனம் பூஜைக்காக 3 அங்குலம் முதல் ஏழு அங்குலம் வரையான ஜினேந்திர பகவான் பிம்பத்தை கிழக்கு அல்லது வடக்கு நோக்கி வைத்துக் கொள்ளலாமா? அதில் தவறு இல்லையே?

ஆம்! தக்க இடத்தில் இப்படிப்பட்ட பிரதிமைகளை அவசியம் வைத்துக் கொள்ளலாம்; தவறு இல்லை.

32. உண்மையான தேவர், நூல், குருவை பரமார்த்த மருத்துவர் என்று ஏன் குறிப்பிடுகின்றனர்?

உடல் நோயைக் குணப்படுத்துவோரை உலகியல் மருத்துவர் என்று குறிப்பிடுதல் போல ஆன்மாவில் தோன்றும் பிறப்பு, மூப்பு, இறப்பு பிணிகளைக் குணப்படுத்தும் உண்மையான தேவர், நூல், குருவை பரமார்த்த மருத்துவர் என்று குறிப்பிடுவர்.

33. பெண்டிர் பகவானையும், குருவையும் ஏன் தொடுதல் கூடாது?

குரு அதாவது மகாவிரதி முனி 18000 சீல விரதங்களை உடையவர். அந்த சீலங்களுள் பெண் வடிவ உயிரற்ற உருவங்களைத் தொடுதல் கூட விலக்கப்பட்டுள்ளது. பகவான் முனியைக்காட்டிலும் பெரியவர், சிறப்புடையவர். இதனை அறிந்து பெண்டிர் பாபம் மற்றும் தோஷம் வராமல் தப்பிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் மகாவிரதி 18000 சீலமுடையவரான பகவான் மற்றும் குருவைத் தொடுதல் கூடாது. குரு முதலானோரது விரதங்களுக்கு ஊறு ஏற்படுத்துதல் கூடாது.

34. ஜிநாலயம் சென்று ஜிநேந்திரரைத் தரிசிப்பதால் ஏற்படும் சிறப்புகளுள் ஐந்தினைக் கூறுக.

ஜிநாலயம் வந்து ஜிநேந்திர தேவனைத் தரிசிப்பதால் ஏற்படும் ஐந்து சிறப்புகளாவன:

1. பல உபவாசங்களுக்கு இணையான பயன் உண்டாகிறது.
2. எண்ணிலடங்கா வினைகள் அழிகின்றன.
3. பெரும் புண்ணிய வினை பந்தமாகிறது.
4. மனதிலிருக்கும் விகார உணர்வு அழிகிறது.
5. தரிசிப்போர் வாழ்வு மங்கல மயமான நலம் உடையதாக அமைகிறது.

35. தர்ஸன ஸ்தோத்ரம், கஷாயபாகுடம், தவளா முதலான நூல்களில் ஜிநேந்திர தேவனை தரிசிப்பதின் பெருமை பற்றி சிறப்பாக என்ன கூறப்பட்டுள்ளது?

இவ்வாசாரியர்கள் தர்ஸன ஸ்துதியில் குறிப்பிட்டுள்ளார்.

தர்ஸனம் தேவ தேவஸ்ய, தர்ஸனம் பாப நாசனம் ।
தர்ஸணம் ஸ்வர்க ஸோபானம், தர்ஸணம் மோக்ஷ ஸாதனம் ॥

பொருள் : தேவாதி தேவனது (வீதராக ஜிநேந்திர பகவானது) தர்ஸணம் பாப வினைகளை அழிக்க வல்லது; அந்த தர்ஸணம் ஸ்வர்க்கத்தை அடைய படிகளைப் போன்றது; மேலும் மோக்ஷத்தை அடைய கருவி (உபாயம்) ஆகும்.

கஷாய பாகுடத்தில் முதல் புத்தகத்தில் கூறப்பட்டுள்ளது.

அரஹந்த ணமோக்காரோ ஸம்பஹிய பந்தாதோ ।
அஸங்கேஜ்ஜ குண கம்மக் கயகார ஒத்தி ॥

பொருள்: தற்கால பந்த நோக்கில் அருகர் வணக்கம் அஸங்க்யாத மடங்கு வினை உதிர்ப்புக்குக் காரணம் ஆகும்.

தவளா நூலில் ஆறாவது புத்தகத்திலும் கூறப்பட்டுள்ளது;

ஜிண பிம்ப தம்ஸணேண ணிதத்த ணிகாசிதஸ்ஸ ।
வி மிச்சத்தாதி கம்ம கலாவஸ்ஸ கய தம்ஸ ணாதோ ॥

பொருள்: ஜிந பிம்ப தரிசனத்தில் நிதத்த மற்றும் நிகாசித வடிவமானாலும் மித்யாத்வம் முதலான கர்ம கலாபத்தின் அழிவு காணப்படுகிறது.

36. கல்லாலான மூர்த்தி எப்படிப் தொழத்தக்கதாக ஆகிறது?

பஞ்சகல்யாண பிரதிஷ்டையினாலும், மந்திர ஸம்ஸ்காரத்தினாலும் கல்லாலான பிம்பம் பூஜிப்பதற்கு உரியதாக ஆகிறது. மேலும், அந்த பஞ்சகலியாண பிரதிஷ்டையினால் அமைந்த படிமத்திற்கு அற்புத தன்மைகள் (சமத்காரம்) அமைவதையும் பார்க்காலம்.

37. ணமோகார மந்திரம் ஓதுவது, ஜைன அற நியமங்கள் ஏற்பது, ஜிநாலயம் போதல் முதலான நல்லற ஒழுக்கங்கள் மனிதர்களுக்கு எப்போது முதல் படிய வேண்டும்?

இந்த எல்லா நல்லற ஒழுக்கங்களும் மனிதர்களுக்குக் குழந்தை பருவம் முதலே படிதல் வேண்டும்.

38. மனிதர்களுக்கு குழந்தைப் பருவம் முதலே ஏன் இந்த நல்லறப் பண்புகளைப் படிய வைக்க வேண்டும்? சிறப்பான எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

குழந்தைப் பருவத்தில் சிறுவர் மனம் அல்லது உணர்வு மிகவும் மிருதுவாகவும் எளிமையானதாகவும் உள்ளது. அத்தகைய எளிய மிருதுவான மனத்தில் பெற்றோர் பதிய வைக்கும் அறப் பண்புகள் சிறுவர் தம் வாழ்நாள் முழுமையும் நிலைபெறுகின்றன.

அறப்பண்பாடு படியாமல் சிறுவர்கள் வளரும்போது அவர்கள் மனம் அதர்மத்தோடு கூடி கடுமை பெற்று வேறுபாடு அடைகிறது. அப்படித் திரிந்து போன மனத்தைத் திருத்துவது மிகவும் கடினமாகும். எடுத்துக் காட்டு:

1.திராக்ஷை கொடி முளைத்துப் படரும் போது கயிற்றைக் கொண்டோ, கழியைக் கொண்டோ இயல்பாகத் தக்கவாறு படரச் செய்ய முடியும். ஆனால் எந்த துணையும் இல்லாமல் வேறான திசையில் படர்ந்து விட்ட முற்றிய கொடியை தக்க திசையில் திருப்புவது என்பது மிகவும் கடினமாகும்.

2. மண் மென்மையாக இளகி இருக்கும் போது அதனை குடம், விளக்கு முதலான வடிவங்களில் வனைய முடியும். ஆனால் மண் காய்ந்து கடினமான பிறகு அதனை குடம் முதலாக வனைய முடியாது. இப்படி எண்ணும் போது சிறுவர்களுக்கு குழந்தைப் பருவத்திலேயே அறப் பண்புகளைப் பதிய வைப்பது அவசியமாகும் என்பது விளங்கும்.

39. சின்ன குழந்தையிடம் ணமோகார மந்திரம் ஓதுதல் எப்படிப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த முடியும்?

அப்படிக் கருதுதல் கூடாது. கல்லாலான உயிரற்ற படிமையில் ணமோகாரமந்திரம், சூரிய மந்திரம் முதலான ஸம்ஸ்காரம் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி அற்புதம் உடையதாக ஆக்கும் போது, உயிருள்ள குழந்தையிடம் ணமோகாரமந்திரம், ஸம்ஸ்காரம் ஏன் மாற்றத்தை ஏற்படுத்தாது? அவசியம் ஏற்படுத்தும்.

40. அறப் பண்பு படிய ஆலயத்தில் உள்ள தர்ம பாடசாலையில் படிப்பதால் என்ன என்ன புதுமையான பயன்கள் உண்டாகின்றன?

அறப்பண்பு படிய ஆலயத்தில் அமைக்கப்பட்ட தர்ம பாடசாலையில் படிப்பதால் நமக்கு பதினோரு புதுமையான பயன்கள் உண்டாகின்றன.

1. ஜைன தத்துவம் (Philosophy) பற்றி உண்மையான அறிவு கிடைக்கிறது.
2. பழைய மூட வழக்கங்களிலிருந்து விலகி விடுவோம்.
3. ஆலயம் செல்லும் முறையும் தரிசன முறையும் பற்றி நாம் அறிவு பெறுகிறோம்.
4. ஏழு வியசனமும் வாழ்வில் இராது.
5. ஐந்து பரமேஷ்டிகளின் குணம் பற்றியும் அவர்கள் வரலாறு பற்றியும் அறிகிறோம்.
6. ஜினாலயத்தில் நடைபெறும் உண்மையான பூஜை முதலானவைகளின் பெருமையை அடைகிறோம்.
7. அறநிலையங்களைக் காப்பாற்ற வேண்டும் எனும் தூண்டுதலை அப்பாடசாலை வழி பெறுகிறோம்.
8. முனி, சாதுக்களை வணங்கவும் அவருக்குச் சேவை செய்யவும் கற்றுக் கொள்கிறோம்.
9. பூர்வாச்சாரியர்கள் அருளிய ஜிந நூல்களை அப்பாடசாலையில் நன்கு பயிலுகிறோம். அநேகாந்த வடிவ ஜினாகமத்தால் நான்கு அநுயோகங்கள் பற்றியும் மூவுலக அமைப்புப்

பற்றியும் நாம் அறிவு பெறுகிறோம்.

10. பாடசாலையில் இருந்து அறச்செயல்களைச் செய்வதால் பாப வினைகளிலிருந்து விலகி இருக்கிறோம். மிகுந்த புண்ணியத்தை ஈட்டுகிறோம். எண்ணிலடங்கா வினைகளை உதிர்க்கின்றோம்.
11. பாடசாலையில் பெற்ற அறப்பண்பாட்டின் தாக்கம் வாழ்நாள் முழுவதும் நிலைத்து இருக்கிறது; ஆன்ம வளர்ச்சிக்கும், உயர்வுக்கும் காரணமாக அமைகிறது.

41. 'எனக்குப் பிறக்கும் பிள்ளைகள் அனைவருக்கும் முனியாகும் ஒழுக்கத்தைத் தருவேன்' என்று உறுதி கொண்டு அது காரணமாக 'நானும் அடுத்த பிறவியில் முனியாகி மோக்ஷம் அடைவேன்' என்று உதவிய தாயின் பெயர் என்ன?

அப்படி உதவிய தாயின் பெயர் 'மதாலஸா அம்மா.' ஆவார்.

****

முக்தாகிரி

அதிகாரம் – 5

வியசனம் விடுதல், ஆருகத உணவு

(ஜைனர் அடையாளம்)

மேற்கத்தய நாகரீகத்தையும் பழக்கவழக்கங்களையும் இன்றய சமுதாயம் ஏற்று வாழ்க்கை நடத்துவதால், உண்மையான ஜைனனாக வாழ வேண்டிய நடைமுறைகளை குழிதோண்டி புதைத்து மீள முடியாத கெட்ட பழக்க வழக்கங்களை ஏற்று கிடைப்பதற்கரிய மனித வாழ்க்கையை வீணடித்து கொண்டு இருக்கின்றது. இந்நிலையிலிருந்து விடுபட்டு சாத்வீக உணவு பழக்க வழக்கங்களை ஏற்கவும் மீளமுடியாத கெட்ட பழக்கங்களிலிருந்து விடுதலை பெறவும் உண்மையான ஜைனனாக வாழவும் இந்த ஐந்தாம் அதிகாரம் வழிகாட்டுகிறது.

1. ஜைனர் என்று யாரைச் சொல்லுவர்?

'இந்த்ரியாணி ஜயதீதி ஜிந: பொறிகளை வெல்பவன் ஜிநன். அந்த ஜிநன் – அதாவது ஜிந பகவான் அருளிய நெறிப்படி செல்பவர் ஜைனர் எனப்படுவர்; அதாவது அவரை ஜைன் என்பர்.

2. ஜைனரை (ஜைன தர்மத்தை கடைபிடிப்பவரை) அறிவது எப்படி?

ஜைனரை கீழ் வரும் ஐந்து செயல்களால் அறியலாம்.

1. ஏழு வியசனங்களையும் விட்டு இருத்தல்.
2. நாள்தோறும் வீதராக ஜிநேந்திர தேவனைத் தரிசித்தல்.
3. இரவு உண்ணாது இருத்தல்.
4. நீரை வடித்துக் குடித்தல்.
5. கொல்லாமை தர்மத்தைப் பாதுகாக்க பெரும் இம்சையால் உருவாகும் தோல் பொருள்கள், பட்டாடைகள் முதலானவற்றை பயன்படுத்தாது இருத்தல். (ஜைன பவ்யாத்மாக்கள் ஜினபகவன் பூஜையின் அற்பணிக்கப்பட்ட பொருள்களை (நிர்மால்யம்) பயன்கொள்ள மாட்டார்கள்.)

3. உலகில் வியசனம் என்று சொல்லுக்கு என்ன பொருள்?

கைவிடுவதற்கு மிகவும் அரிதான தீய பழக்கத்தை (வழக்கத்தை) வியசனம் என்று உலகில் சொல்வர்.

4. ஏழு வியசனங்கள் யாவை?

1. சூதாடுதல், 2. திருடுதல், 3. வேட்டை ஆடுதல், 4. புலால் உண்ணுதல், 5. கள் குடித்தல், 6. பிறர் மனை நயத்தல், 7. வேசையர் தொடர்பு.

5. ஏழு வியசனங்களால் உண்டாகும் ஐந்து தீமைகள் (தோஷங்கள்) யாவை?

வியசனத்தால் 1. மனிதன் உடல் பிணிக்கு இரையாகிறது; 2. எண்ணம் கொடியதாகிறது; 3. அற (தர்ம) நம்பிக்கை இல்லாது போகிறது; 4. உலகம் அவனை அருவருப்பாக பார்க்கிறது.

5. பாபவினை பந்தம் ஏற்பட்டு கீழ் கதிக்கு அவன் செல்லுகிறான் .

6. புகையிலையினால் என்ன தீமைகள் ஏற்படுகின்றன?

புகையிலை போடுவதால் மனிதருக்கு ஏற்படும் முதன்மையான இரண்டு தீமைகள் :

1. புகையிலையினால் மனிதனுக்குக் கேடு தரும் மயக்கம் உண்டாகிறது.
2. விஞ்ஞானியர் கருத்துப்படி புகையிலையில் உள்ள 'நிகோட்டின்' நச்சுத் தன்மையால் புகையிலை போடும் பெரும்பாலோருக்குப் புற்றுநோய் (Cancer) உண்டாகிறது.

7. ஆருகத (தாவர) உணவு என்று எதனைச் சொல்லுவர்?

தாவரத்தால் உண்டாகும் உணவைத் தாவர (ஆருகத) உணவு என்பர். தாவர உணவில் எல்லா வகையான தானியங்கள் பழம், பூ, காய், கீரை, பால் மற்றும் பால் தொடர்புடையன அடங்குகின்றன.

8. மனிதர் உணவு எது?

மனிதர் உணவு தாவர உணவாகும்.

9. தாவர (தாவர உணவை மட்டுமே உண்ணும்) பிராணிகளில் ஏதேனும் எட்டின் பெயர்களை கூறுக.

பசு, எருது, எருமை, குதிரை, யானை, மான், ஒட்டகம், வெள்ளாடு, முயல், வரிக்குரிரை முதலியன தாவர உணவை மட்டுமே உண்ணும் பிராணிகளாகும்.

10. மாமிச பிராணி என்று எதனைக் கூறுவர்?

முட்டை, மீன், ஆடு, கோழி முதலான உயிர்களின் இறைச்சி முதலானவற்றை உண்ணுவனவற்றை மாமிச பிராணி என்பர்.

11. ஏதேனும் ஐந்து மாமிச பிராணிகளின் பெயரைச் சொல்லுக.

புலி, சிங்கம், நரி, நாய், பூனை.

12. உடல் நோக்கில் தாவர – மாமிச பிராணிகளுக்கு இடையே உள்ள சில வேறுபாடுகளைக் கூறுக.

தாவர – மாமிச பிராணிகளுக்கு இடையே உள்ள சில வேறுபாடுகள்.

1. தாவர பிராணியின் பல் தட்டையாக இருக்கும். மாமிச பிராணியின் பல் கூர்மையாக இருக்கிறது.
2. தாவர பிராணியின் நகம் பட்டை போல இருக்கிறது. மாமிச பிராணியின் நகம் அகன்று கூர்மையாக அமைகிறது.
3. தாவர பிராணி உதட்டால் நீர் குடிக்கிறது. மாமிச பிராணி நாக்கால் நீர் குடிக்கிறது
4. தாவர பிராணி இயற்கையாகவே அமைதியான இயல்புடையதாக இருக்கிறது. மாமிச பிராணி கொடிய இயல்பு உடையதாக இருக்கிறது.

13. பால் எப்படி உண்டாகிறது?

பசு, எருமை முதலான தாவர பிராணிகளின் பால், அவை தின்னும் தாவரத்தின் ஒரு பகுதி பாலாக மாற்ற மடைந்து அவற்றின் மடிகளில் பாலாக சுறக்கிறது.

14. தாவர பிராணி தரும் பால் தாவர உணவே மற்றும் தூயது என்பதற்குத் தக்க சான்றுகள் தருக.

1. பசு முதலான தாவர பிராணிகளின் பால் அவை தின்னும் தாவரங்களில் ஒரு பகுதி நேரே பாலாக உருவாகிறது,

2. பசு முதலான தாவர பிராணிகளின் ரத்தம், மாமிசம் முதலான ஏழு தாதுக்களுக்கு பால் உற்பத்தியில் தொடர்பு இல்லை.
3. கறவைக்கு வேம்பு முதலான கொடுத்து சோதனை செய்தால் பால் கசப்பாக இருப்பதை அறியலாம்.
4. பால் சுரக்கும் மடி பிற அசுத்த உறுப்புகளிலிருந்து விலகியே உள்ளது.
5. சுரக்கும் பால் முழுவதையும் கன்று குடிக்க முடிவதில்லை. அப்படிக் குடிக்க வைத்தால் கன்றுக்கு நோய் வரும் என்று மாட்டு வைத்தியர் கூறுகின்றனர்.
6. பாலைக் கறக்காமல் விட்டு விட்டால் அது பசுவுக்கு வேதனையாக இருக்கும்.
7. இப்படித் தாவர பிராணி தரும் பால் மற்றும் பாலிலிருந்து உண்டாகும் தயிர், நெய் ஆறு ரசங்களில் அவற்றின் தூய்மை கருதி, மகா புருஷர்களும் அவற்றை உணவாக ஏற்றுள்ளனர்.

குறிப்பு : கன்றுக்குப் பால் மறுத்தலும், குறைவாக ஊட்டவிடுதலும், கொடிய வழிகளில் பாலைக் கறத்தலும் பெரும் பாபமாகும். புலால் உண்பார் வீட்டில் கறந்த பாலைப் பயன்படுத்துதல் கூடாது; குடிக்கத் தகுதி அற்றது அது.

15. தாவர உணவு உண்பதனால் ஏற்படும் நன்மைகள் ஐந்து கூறுக.

தாவர உணவு உண்பதால் 1. உடலில் பல நோய்கள் தோன்றுவதில்லை, 2. பரிணாமம் அமைதியாக இருக்கிறது, 3. அறத்தில் மனம் நன்கு ஈடுபடுகிறது, 4. வாயில் துர்நாற்றம் வீசுவதில்லை, 5. உடல் வலுவாக இருக்கிறது.

16. யாராவது மாமிச பிராணியான சிங்கத்தை தாவர பிராணியாக மாற்றியுள்ளனரா?

ஆம்! ஜெய்ப்பூரில் தன் ஆட்சிக் காலத்தில் திவான் அமர்சந் ஜெயின் சிங்கத்துக்கு ஜிலேபி கொடுத்து அதைத் தாவர பிராணியாக மாற்றியுள்ளார்.

17. தோலில் வைத்த பொருளை உண்பதால் என்ன குற்றம் ஏற்படுகிறது?

மாமிசத்தை உண்ட குற்றம் ஏற்படுகிறது.

18. தற்காலத்தில் பை, செருப்பு, பட்டை (Belt) முதலான தோல் பொருள்களைப் பயன்படுத்துவதால் என்ன குற்றம் ஏற்படுகிறது?

தற்காலத்தில் எல்லா தோல் பொருள்களும் மனமுள்ள ஐம்பொறி விலங்குகளைக் கொன்று அவற்றின் தோலால் செய்யப்படுகின்றன. அதனால், அவற்றைப் பயன்படுத்துவதால் மனமுள்ள ஐம்பொறியுடைய விலங்குகளைக் கொன்ற குற்றம் ஏற்படுகிறது.

19. தற்கால விஞ்ஞான உலகில் பயன்படும் பல்பசை (டூத் பேஸ்ட்) மயிர் நுரைப்பி (ஷேம்பூ) இதழ்ப்பூச்சு (லிப்ஸ்டிக்) நகப்பூச்சு (நைல் பாலிஸ்ஷ்) முதலான அழகு பொருள்களும் இம்சையால் தயாரிக்கப்பட்ட அசுத்தமானவைகளா என்ன?

ஆமாம்! சில நிறுவனங்கள் இந்தப் பொருள்களை எலும்புத்தூள், குருதி, கொழுப்பு முதலான சேர்த்துச் செய்வதால் பெரும் இம்சைக்குப் பிறகே இவை செய்யப்படுகின்றன.

20. குளியலுக்குப் பயன்படும் சோப்பும் அசுத்தமானது தானா?

ஆமாம்! சில சில சோப்புகளில் தற்காலத்தில் விலங்குகளின் கொழுப்பு கலக்கப்படுகிறது.

21. தற்கால விஞ்ஞான உலகில் இல்வாழ்வார் தம் நாள் ஒழுக்கத்தில் இந்தப் பெரும் இம்சையிலிருந்து எப்படித் தப்பிப்பது?

தேவையான பொருள்களை மக்கள் கடையில் வாங்கும் போது அப்பொருள் இம்சையால்

தயாரிக்கப்பட்டதா என்று விசாரிக்க வேண்டும். இல் வாழ்வோர் தம் நாள் ஒழுக்கத்தில் சற்று விவேகத்துடன் செயல்பட்டால் இந்த இம்சை குற்றங்களிலிருந்து நிச்சயம் தப்பிக்க முடியும்.

22. நேமிநாத பகவான் பிறவியில் ஏன் வெறுப்புற்று துறவு மேற்கொண்டார்?

நேமிநாத பகவான் கட்டப்பட்டிருந்த விலங்குகளுக்கு ஏற்பட இருந்த இம்சையை அறிந்து பிறவியில் வெறுப்புற்று வீட்டைத் துறந்தார். (இதிலிருந்து அகிம்சை எனும் உயர்ந்த அறத்தைப் பாதுகாக்க வேண்டும் என்னும் அறவுரை உலகத்தாருக்குக் கிடைக்கிறது.)

****

முக்தாகிரி – 24 தீர்த்தங்கரர்கள்

அதிகாரம் – 6.

பூஜையின் பெருமை

இந்த காலத்தில் ஏகாந்தவாதிகளும், நிச்சயவாதிகளும், ஜின பூஜையையும் அதன் பெருமையையும் குலைக்கும் பொருட்டு பக்தி இல்லாமலேயே, பகவான் ஆகலாம் என்று பொய்ப் பிரசாரம் செய்து கொண்டுள்ளனர். மேலும் நற்காட்சி இல்லாதவர்களும், மும்மூடங்களில் ஆழ்ந்து கிடப்பவர்களும் வீதராக அரஹந்த படிமேஷ்டிக்கு பூஜை செய்வதை விட்டு, விருப்பு, வெறுப்பு, மயக்கமுடைய தெய்வங்களை வணங்குவதும், பூஜை செய்வவதுமாக வாழ்க்கையையும், பொருளையும் வீணடித்துக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்டவர்களை பொய் நம்பிக்கை மயக்கத்திலிருந்து விடுவிக்கவும், நல்வழி படுத்தவும் வீதராக பூஜையின் பெருமை என்ற ஆறாம் அதிகாரம் அமைக்கப்பட்டுள்ளது.

1. பூஜை என்று எதனைச் சொல்லுகின்றனர்?

உத்தம குணங்களைத் துதிப்பது பூஜை என்று சொல்லுகின்றனர்.

2. பூஜைக்கு உரியவர் என்று யாரைச் சொல்கின்றனர்?

உண்மையான தேவன், உண்மையான குரு, உண்மையான நூல் இவர்களையே பூஜைக்கு உரியவர் என்று சொல்லுகின்றனர்.

3. பூஜிப்பவர் யாராக இருக்க முடியும்?

உண்மையான தேவன், உண்மையான குரு, உண்மையான நூல், மீது திடமான நம்பிக்கையுடையவர் பூஜிப்பவராக இருக்க முடியும்.

4. பூஜை செய்ய எது மிகச் சிறந்த நேரம்?

பூஜை செய்ய மிகச் சிறந்த நேரம் இளம் காலை நேரமாகும்.

5. சிராவகர்கள் நாள் பூஜையை இளம்காலையில் செய்தலே சிறந்தது. ஏன்?

1. இளம்காலை (சூரிய உதய) நேரச் சூழல் மனத்துக்கு இனிதாகவும் அழகாகவும் இருக்கிறது. அந்த இனியச் சூழலில் உயிர்களது பரிணாமம் அறத்துக்கு வேண்டிய மிகுந்த அமைதியை உடையதாயும், சோம்பல் இல்லாமலும் இருக்கிறது.
2. தர்ஸணம் அல்லது பூஜை ஒரு மங்கல நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சி மங்கலத்தைத் தருவதாகவும், இடையூறுகளை விலக்குவதாகவும் இருப்பதால், சிராவகர்கள் தங்கள் நாள் பணிகளைத் தொடங்குவதற்கு முன்பே (பணி தொடங்கும் போதும்) இளம் காலை நேரத்தில் அதனைச் செய்வது மிகவும் சிறந்ததாகும். பத்மநந்தி பஞ்சவிம்சதி நூலிலும் கூறப்பட்டுள்ளது:

யே ஜிநேந்த்ரம் ந பச்யந்தி, பூஜயந்தி ஸ்துவந்தி ந ।
நிஷ்பலம் ஜீவிதம் தேஷாம், தேஷாம் திக் ச க்ருஹாஸ்ரமம் ॥ (15)
ப்ராதரூத்தாய கர்தவ்யம் தேவதா குரு தர்சனம் ।
பக்த்யா தத்வந்தனா கார்யா, தர்ம ஸ்ருதிரூபாஸகை : ॥ (16)

பொருள்: ஜிநேந்திர பகவானை பக்தியுடன் தரிசிக்காத, பூஜிக்காத, துதிக்காத ஒருவரின் வாழ்வு

வீணானது. அவன் இல்லறத்தில் இருப்பது வெறுக்கத்தக்கது. சிராவகர் இளம் காலையில் எழுந்து பக்தியுடன் ஜிநேந்திர தேவனையும், பற்றற்ற குருவையும் தரிசித்து வணங்கி அறம் கேட்டல் வேண்டும். (பிறகு வேறு பணிகளில் ஈடுபடவேண்டும்.)

6. பூஜை எத்தனை வகைப்படும்? அவை யாவை?

பூஜை இரண்டு வகைப்படும். அவை 1. திரவிய பூஜை, 2. பாவ பூஜை.

7. திரவிய பூஜை என்று எதனைச் சொல்லுவர்?

இல்லறத்தார் வீதராக தேவன், நூல், குருவின் குணங்களை துதிசெய்து, தூய்மையான எட்டு பொருள்களை சமர்பணம் செய்யும் பூஜையை திரவிய பூஜை என்று சொல்லுவர்.

8. பாவ பூஜை என்று எதனைச் சொல்லுவர்?

தூய பாவனையுடன் தேவன், நூல், குருக்களைச் சிறப்பாக துறவியர் துதிப்பது, வந்திப்பது , பக்தி செய்வது பாவ பூஜை எனப்படுகிறது.

9. வேறு வகையாகக் கூறப்படும் பூஜை வகைகள் யாவை?

நூல்களில் 1. நித்ய பூஜை, 2. நைமித்திக பூஜை என இரண்டு வகை பூஜைகள் கூறப்படுகின்றன.

10. நித்திய பூஜை, நைமித்திக பூஜைகளின் லக்ஷணம் என்ன?

நித்திய பூஜை : உடலையும், உடையையும் தூய்மையாக வைத்துக் கொண்டு பஞ்ச கல்யாணத்தால் பிரதிஷ்டை செய்யப்பட்டு, தன் வீட்டிலோ அல்லது ஜிநாலயத்திலோ வைத்துள்ள உண்மையான வீதராகி தேவன், குரு, சாத்திரத்துக்கு நாள்தோறும் செய்யப்படும் பூஜை நித்திய பூஜை என்று கூறப்படுகிறது. மூர்த்தி அல்லது ஆலயம் தொடர்பாக தரப்படும் தானங்களும் இந்த பூஜையின் வகையாகும்.

நைமித்திக பூஜை : சிறந்த பருவ நாள்களில் செய்யப்படும் பூஜை நைமித்திக பூஜை என்று கூறப்படுகிறது. அது முதன்மையாக ஏழு வகையாகும்.

1. சதுர்முக பூஜை : மண்டலேஸ்வரர்களாலும், மகா ராஜாக்களாலும் செய்யப்படும் பூஜை சதுர்முக பூஜை எனப்படும்.
2. கல்பத்ரும பூஜை : ஆறுகண்ட அதிபதிகளான சக்ரவர்த்தியால் செய்யப்படும் பூஜை கல்பத்ரும பூஜை எனப்படும்.
3. ஆஷ்டானிக பூஜை : நந்தீஸ்வர பருவத்தில் பவ்வியர்களால் செய்யப்படும் பூஜை, ஆஷ்டானிக பூஜை எனப்படும்.
4. இந்தரத்வஜ பூஜை : இந்திரன் முதலான தேவர்களால் செய்யப்படும் பூஜை இந்தர த்வஜ பூஜை எனப்படுகிறது.
5. ஸோலஹ் காரண பூஜை : ஸோடசகாரண பருவத்தில் செய்யப்படும் பூஜை ஸோலஹ் காரண பூஜை எனப்படுகிறது.
6. தசலக்ஷண பூஜை : தசலக்ஷண (பர்யூஷண்) பருவத்தில் செய்யப்படும் பூஜை தசலக்ஷண பூஜை எனப்படுகிறது.
7. கல்யாணக பூஜை : பகவானுடைய கல்யாணத்தில் செய்யப்படும் பூஜை கல்யாணக பூஜை எனப்படும்.

11. திரவிய பூஜை செய்யும் போது ஏன் துவைத்த (தூய) ஆடையை உடுத்திக் கொள்ள வேண்டும்?

புறத் தூய்மையால் அகத் தூய்மையில் பெரும் சிறப்பு (பிரபாவம்) ஏற்படுகிறது. அதாவது

ஆடை முதலானவை தூய்மையாவதால் மனமும் தூய்மை (பவித்ரம்) அடைகிறது. அசுத்தமான இடத்துக்கு போவதினாலும், அசுத்தப்பொருளை தொடுவதினாலும் பாக்டீரியா அல்லது வைரஸ் கிருமிகள் உற்பத்தியாகின்றன என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

12. பூஜையின் எட்டுப் பொருள்களைக் கூறுக.

பூஜையில் பயன்படுத்தப்படும் 8 மங்கலப் பொருள்கள்:

1. நல்ல நீர், 2. நல்ல சந்தனம், 3. நல்ல அக்ஷதை, 4. நல்ல பூ, 5. நல்ல சரு, 6. நல்ல தீபம், 7. நல்ல தூபம், 8. நல்ல பழம் (நல்ல – திவ்ய)

13. பூஜை செய்யும் போது பவ்வியர்களுக்கு என்ன நோக்கம் உண்டாகிறது?

பூஜை செய்யும் போது பவ்வியர்களுக்கு நோக்கம் வினை அழிதலும், மோக்ஷம் அடைதலும் ஆகும்.

14. வீதராக தேவன், நூல், குரு திருவடி முன் எட்டுப் பொருளைச் சமர்ப்பிக்கும் போது என்ன பாவனை கொள்ள வேண்டும்?

வீதராக தேவன், நூல், குரு திருவடிமுன் சமர்பிக்குபோது கொள்ளவேண்டிய பாவனை :

1. நல்ல நீரைச்சமர்ப்பிக்கும் போது – பிறப்பு மூப்பு இறப்பு வடிவ எனது நோய் அழிவதாக என்றும்,
2. நல்ல சந்தனம் சமர்ப்பிக்கும் போது– எனது பிறவித் துன்பம் அழிவதாக என்றும்,
3. நல்ல அக்ஷதம் சமர்ப்பிக்கும் போது– எனக்கு அழியா மோக்ஷ பதவி கிட்டுவதாக என்றும்,
4. நல்ல பூ சமர்ப்பிக்கும் போது – எனது காம வாசனை (உணர்வு) அழிவதாக என்றும்,
5. நல்ல சரு சமர்ப்பிக்கும் போது – எனது பசிநோய் கெடுக என்றும்,
6. நல்ல தீபம் சமர்ப்பிக்கும் போது – எனது அஞ்ஞான வடிவு இருள் அழிவதாக என்றும்,
7. நல்ல தூபம் சமர்ப்பிக்கும் போது – எனது எட்டு வினைகளும் அழிவதாக என்றும்,
8. நல்ல பழம் சமர்ப்பிக்கும் போது – எனக்கு முக்தி பழம் கிடைப்பதாக என்றும் பாவனை கொள்ள வேண்டும்.

15. அஹிம்சயை முதன்மையாகவுடைய ஜைன தருமத்தில் பூஜையில் 'திவ்ய புஷ்பம்' என்று எந்த மலர்களைக் குறிக்கின்றனர்?

நமது அஹிம்ஸையை முதன்மையாகவுடைய ஜைன தரும பூஜையில் 'திவ்ய புஷ்பம்' என்று தேவர் செய்யும் பொன்னாலான, ரத்னங்களாலான பூக்கள் அல்லது பிருத்வீகாயிகமாகக் கருதப்படும் கல்ப விருக்ஷத்தில் கிடைக்கும் பூக்கள் (இரண்டு பொறி முதலான திரஸ உயிர்கள் இல்லாதவை) கருதப்பட்டுள்ளன.

16. தற்காலத்தே தேவர் செய்யும் பொன்னாலான ரத்னங்களாலான மலர்கள், கல்ப விருக்ஷத்தில் கிடைக்கும் மலர்கள் இல்லாத நிலையில் அருளுணர்வுகம் விவேகமுடைய சிராவகர் உண்மையான தேவ சாஸ்த்ர குருவுக்கு பூஜை செய்யும் போது உலர்ந்த லவங்க பூ அல்லது ஸ்தாபனா நிக்ஷேப விதிப்படி அரிசியை மஞ்சளாக்கி திவ்ய புஷ்பமாக ஸ்தாபனை செய்கின்றனர். அவர்கள் அப்படிச் செய்வது சிறந்ததா? புகழத் தக்கதா?

ஆம்! நிச்சயமாக சிறந்தது புகழத்தக்கது தான்.

குறிப்பு : சிராவகர் தவிர்க்க இயலாத ஒரு இந்திரிய ஸ்தாவர உயிர்கள் வதையை கை விடவில்லை. ஆனால் அவர்கள் இரண்டு பொறி முதலான திரஸ உயிர் வதையிலிருந்து அவசியம் தப்பிக்க வேண்டும்.

17. வீதராக தேவன், நூல், குருவின் திருவடியில் 'அர்க்கம்' சமர்ப்பிக்கும் போது என்ன கூறி சமர்ப்பிக்க வேண்டும்?

வீதராக தேவன், நூல், குருவின் திருவடியில் 'அர்க்கம்' சமர்ப்பிக்கும் போது கீழ் வரும் பாடலைச் சொல்ல வேண்டும்.

தேவன் : உதக சந்தன தந்டுல புஷ்பகை : சரு சுதீப சுதூப பலார்க்யகை : ।
தவள மங்கல கானரவாகுலே ஜிநக்ருஹே ஜிநநாத மஹம் யஜே ॥

ஓம் ஹ்ரீம் அர்ஹம் ஸ்ரீ ..... தீர்த்தங்கராய அனர்க்கபத ப்ராப்தாய அர்க்கம் நிர்வபா மிதி..

நூல் : உதக சந்தன தந்டுல புஷ்பகை : சரு சுதீப சுதூப பலார்க்யகை : ।
தவள மங்கல கானரவாகுலே ஜிநக்ருஹே ஜிநசாஸ்த்ர மஹம் யஜே॥

ஓம் ஹ்ரீம் ஸ்ரீ ஜிந சாஸ்த்ரேப்யோ அனர்க் பத ப்ராப்தாய அர்க்கம் நிர்வபாமிதி

குரு : உதக சந்தன தந்டுல புஷ்பகை : சரு சுதீப சுதூப பலார்க்யகை : ।
தவள மங்கள கானரவாகுலே முனிராஜ மஹம் யஜே ॥

ஓம் ஹ்ரீம் ஸ்ரீ 108..... முனிராஜேப்யோ அனர்க்கபத ப்ராப்தாய அர்க்கம் நிர்வபாமிதி.

(தன் வீட்டில் ஆஹார தானம் செய்யும் போது 'ஜிநக்ருஹே' என்பதற்குப் பதில் 'மமக்ருஹே' என்று சொல்ல வேண்டும்).

18. இப்படி வீதராக தேவ நூல் குரு திருவடிகளில் அர்க்கம் சமர்ப்பிக்கும் போது என்ன பாவனை இருத்தல் வேண்டும்?

உம்மைப் போல் எனக்கும் 'அனர்க்க' (மிக உயர்ந்த) பதவி (நிலை) கிடைக்க வேண்டும் என்னும் பாவனை இருத்தல் வேண்டும்.

19. 'அனர்க்க பதம்' என்று எதனைச் சொல்லுவர்?

பஞ்ச பரமேஷ்டிகளின் பதவியை அனர்க்க பதம் என்பர். (அனர்க்கம் என்றால் மிக உயர்ந்த சிறந்த என்று பொருள்.)

20. பூஜையில் 'ஸ்வாஹா' என்னும் சொல் வருகிறதே. அதன் பொருள் என்ன?

'ஸ்வாஹா' என்பதற்கு 'ஹூதாஸனாய' என்று ஜைன ஆசாரியர் ஸ்ரீ பாவசேனர் எழுதிய 'காதந்த்ரரூபாமாலா' என்னும் இலக்கண நூலில் வேற்றுமை இலக்கணம் கூறும் பகுதியில் கூறப்பட்டுள்ளது. 'ஹூதாசனாய' எனில் நெருப்பில் எரிப்பது என்று பொருளாகிறது. பிரதிஷ்டா ரத்னாகரத்தில் ''சாந்திகம் பௌஷ்டிகம் ச'' என்று கூட பொருள் காணப்படுகிறது.

(தூபம் தவிர மற்ற பொருள்கள் நெருப்பில் அற்பணம் செய்யப்படுவதில்லை. ஆகையால் தூபம் சமர்பிக்கும்போது மட்டும் ஸ்வாஹா சொன்னால் போதுமானது. இதுபோல் அக்னி சம்பந்தமில்லாத சிறப்பு ஜப மந்திரங்களை படிக்கும்போது ஸ்வாஹா என வரும் இடத்தில் நம: என்று சொல்லலாம், ஸ்வாஹா சொல்லுவதில் பிடிவாதம் ஏதுமில்லை, சற்று சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.)

21. ஜினேந்திர பகவானை ஆராதனை (பக்தி) செய்வதினால் எவ்வளவு ஆற்றல் கிடைக்கிறது என்பதைக் கூறவும்?

ஜினேந்திர பகவானின் ஒரு பக்தியினாலேயே தீயகதி தடுக்கப்படுகிறது. உயிர் புண்ணியத்தினால் நிரப்பப்படுகிறது மற்றும் இறுதியில் முக்தி வடிவமான இலட்சுமி அதாவது விடுபேறு முக்கியமானதாக செய்யப்பட்டு விடுகிறது. வீதராக பிரபுவினுடைய பக்தன் தீயகதிகளிலிருந்து விடுப்பட்டு, ஏற்றமிகு புண்ணிய செல்வத்தினை ஒருநாள் அடைந்து விடுகிறான். பூஜ்யபாத ஆசாரிய சுவாமிகள் சமாதிபக்தியில் கூறியிருப்பதாவது :

" ஏகாபி ஸமத்யேம் ஜின பக்தி துர்கதிம் நிவாரமிதும் ।
புண்ணியானி ச பூராயிதும், தாதும் முக்தி – ஸ்ரியம் க்ருதின:" ॥8॥

22. ஒரு சிராவகன் நீர் முதலான எட்டு தூய பொருள்களை நன்கு ஆராய்ந்து உண்மையான தேவ, குரு, நூலுக்கு நாள்தோறும் பூஜை செய்கிறான். அப்போது திரவ்ய பூஜையினால் அவனுக்கு இம்சையின் பாபம் வராதா?

பொருள்: ஆசாரிய ஸ்ரீ சமந்தபத்ரஸ்வாமி வாசுபூஜ்யபகவான் துதி செய்யும்போது கூறி இருப்பதாவது:–

பூஜ்யம் ஜிநம் த்வார்சயதோ ஜனஸ்ய ஸாவத்ய லேசோ பகுபுண்யராசௌ।
தோஷாய நாளம் கணிகா விஷஸ்ய ந தூஷிகா சீத சிவாம்புராசௌ ॥ (சுயம்பு தோத்திரம்)

பொருள்: 'ஏ! பகவன்! உனக்கு பூஜை செய்யும் போது மனிதர்களுக்குச் சற்று குறை உண்டாகிறது, ஆனால் மிகுந்த புண்ணிய பந்தம் ஏற்படுகிறது. கடலளவு அமிழ்தில் விழுந்த துளி நஞ்சு துச்சமாக ஆவது போல், பூஜையினால் மனிதர் கட்டிக் கொள்ளும் கடலளவு புண்ணியத்திற்கு முன் துளி ஆரம்ப (இம்சை) காரியங்கள் ஒன்றுமில்லாத தாகும். அந்தச் சிறு குறை கடலொத்த புண்ணியத்தால் நீங்கி மாறிப் போகிறது!

23. உண்மையான தேவ, நூல், குருவுக்கு சமானமாக நீர் முதலான எட்டுப் பொருள்களைக் கொண்டு விருப்பு வெறுப்புடைய யக்ஷ, யக்ஷிணி முதலான தேவர்களுக்குப் பூஜை செய்தால் என்ன குற்றம் ஏற்படும்? ஆகமத்திலிருந்து உதாரணத்துடன் கூறவும்.

மிகுந்த மித்யாத்வம் (மெய்யறியாமை) குற்றம் ஏற்படும் என்று 'ரத்னகரண்டக சிராவகாசாரம், 'அஷ்டபாகுடம்', 'கார்த்திகேயானுப்ரேக்ஷே', ஸ்ர்வார்த்தஸித்தி,' முதலான நூல்கள் வழி அறியலாம். இது பற்றி விளக்கத்தை 'மும்மணி தருமத்தின் பெருமை' அதிகாரத்தில் காணலாம்.

இது தொடர்பாக ஆசாரிய சோமதேவசூரி ' யஸஸ்திலகசம்பு காவ்ய' த்தில் இப்படிக் கூறுகிறார்.

தேவம் ஜகத்ரயீநேத்ரம், வ்யந்தராத்யாஸ்ச தேவதா: ।
சமம் பூஜா விதாநேஷு, பஸ்யன் தூரம் வ்ரஜேதத : ॥

பொருள் : மூவுலகத்தையும் அறிவதில் கண்ணாக விளங்கும் அரஹந்தரையும், வியந்தரர் (யக்ஷயக்ஷி) முதலான தேவ உலகத்தாரையும் சமமாக பூஜைக்கு உரியவராகக் கருதுபவர் மிகக் கீழே செல்வர் அதாவது நரகம் அடைவர்.

ஆசாரியர் குந்தகுந்தரும் மோக்ஷபாகுடத்தில் கூறியுள்ளார்.

ஸபராவேக்கம் லிங்கம், ராயிதேவம் அஸஞ்ஜதம் வந்தம் ।
மண்ணயி மிச்சாதிட்டி, ண ஹு மண்ணயி ஸுத்த ஸம்மத்தி ॥

பொருள் : பற்று முதலான விஷயங்களை நோக்கும் குலிங்கி குரு, விருப்பு முதலியன (ஆடை அணி) உடைய தேவர், ஒழுக்கமில்லாதவர், இவர்களை வணங்கத் தக்கவராக நம்புபவர் மித்யாதிருஷ்டி ஆவார். தூய நற்காட்சியாளர் இவர்களை நம்புவதில்லை, வணங்குவதில்லை.

24. மரம், வாகனம், பணம், எடைத்தட்டு முதலான பொருள்களுக்கு ஏன் பூஜை செய்தல் கூடாது? செய்தால் என்ன குற்றம் ஏற்படும்?

மரம் முதலியன ஒரு பொறியுடைய விலங்குயிர்கள். வாகனம் முதலியன உயிரற்ற ஜடப் பொருள்கள் இவற்றில் மந்திரத்தின் வழியாக பகவானை ஸ்தாபனம் செய்யவில்லை. மேலும் மும்மணி வடிவ குணங்கள் ஏதும் இவற்றில் இல்லை. அதனால் இவற்றுக்கு பூஜை முதலானவை

செய்வோருக்குக் கெட்ட கதியினை அடைவிக்கும் மித்யாத்வ குற்றம் ஏற்படும்.

25. பகைவரை வெற்றிகொள்ளவல்ல வாள் முதலான படைக் கருவியில் முதன்மையான சக்ர ரத்தினம் சக்கரவர்த்தியின் ஆயுதசாலையில் தோன்றும் போது சக்கரவர்த்தி அங்கு சென்று அந்த சக்கரரத்தினத்துக்கு மரியாதை செய்கிறாரா அல்லது எட்டு பொருள் கொண்டு பூஜை செய்கிறாரா?

1. அந்த சக்ரரத்தின ஆயுதம் பகைவர்களை இம்சிக்க பயன்படுவதால் அது இம்சாஉபகரணம்.
2. அது சடப்பொருள், பகவானது மூர்த்தி அன்று.
3. அது சக்ரவர்த்தி முதலானவர்களுக்கு மும்மணி முதலான தார்மீக குணங்கள் தோன்ற காரணமாவதில்லை.
4. அது உலகியல் பொருள். அதனால் அந்த சக்ரரத்தினம் ஆயுத சாலையில் தோன்றிய போது சக்ரவர்த்தி அதனை வரவேற்று மரியாதை மட்டும் செய்கிறான். அதற்கு எட்டு பொருள் கொண்டு அர்க்கம் முதலான செய்யவில்லை. ஏனெனில் ஜைனர் மும்மணி முதலான அற குணங்களையே உபாசிக்கின்றனர்.

சக்ரரத்தினம் இம்சை உபகரணம் என்று ஏன் சொல்லப்பட்டது என்றால் பரதசக்ரவர்த்தி பாகுபலியைக் கொல்ல அதை ஏவினான்; லக்ஷ்மண நாராயணன், ராவணனை சக்ரரத்தினத்தால் வென்றான். கிருஷ்ணன், ஜாராசந்திரனை சக்ரரத்தினத்தால் தோற்கடித்தான் என புராணங்களில் கூறப்பட்டுள்ளது.

26. தீபாவளி அன்று எந்த லக்ஷ்மிக்கு பூஜை செய்ய வேண்டும்?

தீபாவளி அன்று அனந்த நான்மை அதாவது கேவலஞான வடிவ லக்ஷ்மிக்கு அதாவது ஆகமத்திற்குப் பூஜை செய்ய வேண்டும்.

27. விருப்பு வெறுப்புடைய பெண் வடிவ உலகியல் லக்ஷ்மிக்கு பூஜை செய்வதால் மித்யாத்வ குற்றம் ஏன் வருகிறது?

ஏனெனில், உலகியல் லக்ஷ்மி பெண் பிறவியாக இருப்பதால் பிறவி உயிராகிறாள். ஆடை அணிகளுடன் கூடி இருக்கிறாள். அத்தகைய அலங்காரத்துடன் கூடிய பெண் வடிவ லக்ஷ்மிக்கு அணுவிரதம் மற்றும் மகாவிரதம் முதலான குணமும் இல்லை. ஆகையால் கேவல ஞான வடிவ லக்ஷ்மி அதாவது ஆகமம் தவிர வேறு உலகியல் லக்ஷ்மிக்கு பூஜை செய்வதால் தீவிர மித்யாத்வ குற்றம் ஏற்படுகிறது.

28. தீபாவளி அன்று இல்லறத்தார் ஆகமத்துடன் வேறு யாருக்கு பூஜை செய்ய வேண்டும்? பூஜை பகலில் செய்ய வேண்டுமா? இரவில் செய்ய வேண்டுமா?

தீபாவளியுடன் தொடர்புடைய நிர்வாண கல்யாணம், பகவான் மகாவீரர், ஆகமம் மற்றும் கணதர பரமேஷ்டிகளுக்கு பூஜை செய்தல் வேண்டும். பூஜையைப் பகலில் தான் செய்தல் வேண்டும். இரவில் எந்த வித திரவிய பூஜையும் செய்தல் கூடாது. ஏனெனில், அதனால் பெரிய இம்சையின் குற்றம் வருகிறது.

29. தீபாவளி நன்னாளில் மக்கள் நிர்வாண கல்யாணம், பகவான் மகாவீரர், ஆகமம், கணதர பரமேட்டிகளுக்கு ஏன் பூஜை செய்கின்றனர்?

ஏனெனில், தீபாவளி நன்னாளில் அமாவாசை விடியலில் பகவான் மகாவீரகேவலி மோக்ஷம் அடைந்தார். அதாவது மோக்ஷ லக்ஷ்மியை அடைந்தார். அமாவாசை மாலையில் மகாமுனி கணதர பரமேட்டி கேவலஞானம் அடைந்தார். அதாவது அவர் அனந்த சதுஷ்டயம் (அனந்த நான்மை)

அல்லது கேவலஞானலக்ஷ்மியை அடைந்தார். ஆகையால் அனைவரும் தீபாவளி அமாவாசை காலையில் நிர்வாண கல்யாணம், பகவான் மகாவீரர் பூஜை செய்கின்றனர். அன்று மாலை கேவல ஞானலக்ஷ்மி வடிவ ஆகமத்திற்கும் கணதர பரமேட்டிக்கும் பூஜை செய்கின்றனர்.

30. ஜைனர்களாகிய நமக்கு நித்ய பரம பூஜ்ய தாய் இருக்கிறாரா?

ஆமாம்! நம்முடைய நித்ய பரம பூஜ்ய தாய் ஜினவாணி மாதா (சாஸ்திரம்) இருக்கிறாள்.

31. தீர்தங்கரர் ஜினேந்திர பகவானை ஜைனர்களுக்கு குலதேவதை என்று ஏன் கூறுகின்றனர்?

''இந்த்ரியாணி ஜயதீதி ஜின:'' ஐந்து பொறிகளையும் வென்றவரை ஜினேந்திர பகவான் (ஜினன்) என்கின்றனர். அந்த ஜினேந்திர பகவானது ஆணையை அல்லது நெறியை ஏற்றுக் கொள்ளுபவரை ஜைனர் என்கின்றனர். அதாவது நம்முடைய ஜைன குல முன்னோடியாக / நிறுவனராக பகவான் ஆகிறார். ஆகையால் ஜினேந்திர பகவானை ஜைனர்களுடைய குலதேவதை என்று நாம் கூறுகிறோம்.

32. நம்முடைய உயர்ந்த தசலக்ஷண பர்வம் முடிந்த பிறகு ஜைனரல்லாதார் நவராத்ரி கொண்டாடுகின்றனர். அதுபோல் ஜைனர் ஏன் நவராத்ரி கொண்டாடக் கூடாது?

கூடாது. ஏனெனில், நற்காட்சியுடைய ஜைனர் தீர்த்தரங்கரர் அல்லது பஞ்சபரமேஷ்டிகள் தவிர ஆசையுடையவர்களுக்கு (தேவ தேவியருக்கு) பூஜை செய்வதில்லை. நம்முடைய ஜைன சாஸ்திரத்தில் எங்கும் நவராத்திரி கொண்டாட வருணனை இல்லை. ஆகையால் ஜைனர் மறந்தும் ஜைனர் அல்லாதார் கொண்டாடும் நவராத்திரியைக் கொண்டாடுதல் கூடாது.

33. வீதராக தேவ சாஸ்த்ர குருவுக்கு பூஜை செய்யும்போது இல்லறத்தார் அக்ஷதம் முதலான எட்டுப் பொருள்களை தேவ சாஸ்த்ர குருவுக்கு எத்தனை தொலைவில் சமர்ப்பிக்க வேண்டும்?

அக்ஷதம் முதலான பொருள்களை தேவ சாஸ்த்ர குருவுக்கு குறைந்தது 3 அல்லது 4 முழம் தொலைவில் இல்லறத்தார் சமர்ப்பிக்க வேண்டும்.

34. வீதராகி கேவலி ஜினேந்திர பகவானுக்கு மிக அருகாமையில் அக்ஷதம் முதலான பொருள்களைச் சமர்ப்பித்தால் என்ன குற்றம் வருகிறது?

நம்முடைய வீதராக கேவலி ஜினேந்திர பகவான் பசி, தாகம், விருப்பு, வெறுப்பு முதலான பதினெட்டு குற்றங்கள் இல்லாதவர். ஆடை, அணிகலன் மற்றும் உயிருள்ள பொருள்களைத் தியாகம் செய்தவர். பசி, தாகம், முதலானவை இன்மையால் கேவலி பகவான் உணவு உண்பவர் அல்லர். அப்படிப்பட்ட கேவலி பகவானுக்கு மிக அருகில் அல்லது அவர் மேலே அக்ஷதம் முதலான பூஜை பொருள்களைச் சமர்ப்பித்தால் பிறர் நம்முடைய வீதராக பகவானை ஆசையுடையவர் என்றும், உணவு உண்பவர் என்றும், உயிருள்ள பொருள்களைச் தொடுபவர் என்றும் இது போன்று குற்றவடிவமுடையவர் என் கருதக் கூடும். ஆகையால் விவேகம் உள்ள இல்லறத்தார் அக்ஷதம் முதலான பூஜை பொருள்களைப் பகவானுக்கு குறைந்தது 3 அல்லது 4 முழம் தொலைவில் சமர்ப்பிக்க வேண்டும்.

35. ஐந்து சிறப்புகளால் (பஞ்ச கல்யாணங்களால்) நிறுவப்பட்ட கேவலி வீதராக பகவான் மூர்த்தி (சிலை) மீது மீண்டும் கர்ப, ஜன்ம கல்யாண விதிகளை மட்டும் செய்ய முடியுமா?

முடியாது. நிச்சயமாக முடியாது. ஐந்து சிறப்புகளால் நிறுவப்பட்ட தியாகமய கேவலி வீதராக

பகவான் மூர்த்தி மீது மீண்டும் கர்ப, ஜன்ம கலியாண – பகவான் நிலையை எய்தாத நிலையில் செய்யப்படும்.– விதிகளை மட்டும் செய்தால் வீதராக பகவான் மூர்த்திக்கு செய்யப்பட்ட பிரதிஷ்டை மற்றும் வீதராக தன்மை மறைந்து விடும். அந்த நிலையில் அந்த மூர்த்தியைத் தரிசிப்பது வணங்குவது முதலானவற்றை நற்காட்சியுடையவர்களும் முனிவர்களும் எப்படிச் செய்ய முடியும்? செய்ய முடியாது என்பதாம்.

வீதராக பகவான் மூர்த்திக்கு திருத்தம் செய்தல், பூசுதல் முதலான திருத்தப் பணிக்குப் பிற்பாடு செய்யப்படும் பஞ்ச கல்யாணம் இங்கே மறுக்கப்படவில்லை. ஆனால் தீர்த்தங்கரருடைய பிறந்த நாள் விழாவைக் (ஜன்ம ஜயந்தி) கொண்டாடும்போது கல்யாணங்களால் நிறுவப்பட்ட வீதராக பகவான் மூர்த்தியைக் கர்பத்தில் வைத்தல், தாலாட்டுதல், ஆடை அணிகாளல் பூஜித்தல் முதலானவற்றைச் சிலர் தற்காலத்தே செய்தல் ஆகமத்திற்கு எதிரானது ஆகும். முற்றும் தவறானது ஆகும்.

36. பூஜையின் பரியாய பெயர்கள் எவை?

அர்ச்சனை, உபாஸனை, பக்தி, துதி, விநயம், வையாவிருத்தம், பரிசர்யை, ஸபர்யா, ஆராதனை முதலானவை பூஜைக்கு பரியாய பெயர்களாம்.

37. பூஜை செய்வதால் ஏற்படும் பயன் என்ன?

வீதராக தேவ சாஸ்த்ர குருவுக்கு பூஜை செய்வதால் ஏற்படும் பயன்: 1. துக்கங்கள் விலகுதல் 2. வினைகள் அழிதல், 3. புண்ணியம் ஈட்டுதல், 4. பரம்பரையில் மோக்ஷ பதவி அடைதல்.

38. மகனை பாம்பு தீண்டிய செய்தியைக் கேட்ட பிறகும் வீதராக பகவானுடைய பூஜையை விட்டுவிட்டு தன் மகனிடம் செல்லாது பூஜையில் ஆழ்ந்திருந்த சிறப்பால் மகன் உடலில் ஏறிய நஞ்சு இறங்கி விட்டது. அப்படி பூஜையில் ஆழ்ந்திருந்த வித்வான் யார்?

அந்த வித்வான் மகாகவி தனஞ்சயர் ஆவார்.

39. ஸமவசரணத்துக்குச் செல்லும் போது வழியில் அரசன் சிரேணிகன் யானையின் காலில் மிதிப்பட்டு இறந்து பூஜை பாவனையால் தேவ உலகில் பிறந்து சிரேணிகன் வரும் முன் ஸமவசரணம் சென்று பகவான் மகாவீரருக்கு பூஜை செய்தது எந்த உயிர்?

அது விலங்குயிரான ஒரு தவளையாகும்.

40. தேவ சாஸ்த்ர குரு ஜிநாலயம் முதலான அற நிலையங்களுக்கு பூஜை, திருத்தப்பணி முதலான காரணங்கள் நிமித்தமாகத் தரப்பட்ட தானப் பொருள்களை, தேவ சாஸ்த்ர குருவுக்கு அர்ப்பிக்கப்பட்ட பூஜை பொருட்கள் ஆகியவற்றை (அப்பொருள் மீது இருந்த உரிமை விடுபட்டு விட்டதால்) 'நிர்மால்யம்' என்பர். அந்த நிர்மால்யப் பொருளை மீண்டும் அனுபவிப்பதால் ஆகமப்படி என்ன குற்றம் வருகிறது?

நிர்மால்ய பொருள்களை அனுபவிப்பதால் வரும் தீமைகள் அல்லது குற்றங்கள்:

1. ரயணஸாரம் நூல்படி:

ஜிணுத்தார பதிட்டா, ஜிநபூஜா, நித்யவந்தணம் விஸேய தனம் I
ஜோ புஞ்ஜதி ஸோ புஞ்ஜயி, ஜிநதிட்டம் – நிரயகதி – துக்கம் II (ர.ஸா. 32)

பொருள்: ஜிநாலய திருப்பணி, ஜிநபிம்பம் நிறுவுதல், ஆலயம் அமைத்தல், ஜினேந்திர பூஜை, தீர்த்த வந்தனை, (முதலான அறச்) செயலுக்காகத் தரப்பட்ட அல்லது அர்ப்பிக்கப்பட்ட கொடைப் பொருளை அனுபவிப்பவன் நரக கதி துன்பத்தை அடைவான் என்று ஜினேந்திர பகவான் அருளியுள்ளார்.

புத்த – களத்த – விதூரோ, தாரித்தோ பங்கு – மூக பஹிரந்தோ ।
சாண்டாலாஇ குஜாதோ, பூஜா தாணாஇ – தவ்வ ஹரோ ॥ (ர.ஸா 33)

பொருள்: பூஜை, தானம், முதலானவற்றுக்கான பொருளை அபகரிப்பவன் மனைவி மக்கள் இல்லாமல் போவான்; ஏழ்மை, நொண்டி, ஊமை, செவிடு, குருடு ஆவான்; சாண்டாளன் முதலான இழிந்த குலத்தில் பிறப்பான்.

கய – குட்ட – மூல – ஸுலா – ரூய – பயந்தர – ஜலோயரக்கி – ஸிரோ ।
ஸீதுண்ஹ – வாஸிராஈ – பூயாதானந்தராய – கம்மபலம் ॥ (ர.ஸா. 36)

பொருள்: பூஜை, தானத்துக்கு இடையூறு செய்பவன் (பூஜை தானங்களுக்கு ஊறு விளைவிப்பது அல்லது பூஜை தானத்துக்காகத் தரப்பட்ட பொருளை அந்த பூஜை தானங்களுக்குப் பயன்படுத்தாமல் தன் உலகியல் வாழ்வுக்காக பயன்படுத்துதல்) க்ஷயரோகம், குஷ்டம், மூலம், சூலம், வாதம், குதநோய், ஜலோதர், கண்நோய், தலைநோய் முதலான பல நோய்களைப் பல பிறவிகளில் அடைவான்.

2. பிரபோத ஸாத தத்துவ தர்ஸன் நூல்படி :

நாரக திரியக் யோனிஷு, பஹுகால – துக்க பரதி பவார்ணவே ।
விச்ராந்தி – மொ – க்ஷணமபி – பூஜா – தானாதி – திரவ்ய ஹரம் ॥ (பி.த. 72)

பொருள்: பூஜை தானம் முதலான பொருளை அபகரிப்பவர் நரக விலங்கு யோனி முதலான இழிந்த கதிகளில் துக்கங்களை அனுபவித்துப் பிறவிக் கடலில் வெகுகாலம் உழல்வர். அந்த பாபவினை அவரை ஒரு கண நேரமும் அமைதியாக இருக்க விடாது.

ஸதுர்காந்தம் காத்ரம் ப்ரபவதி நரா துர் புனரபி ।
ந கிஞ்சித் விஸ்ராந்தி ஸுலப – ந்ரு–பவேSமங்கலமிதம் ॥
முஹுர் பக்தோச்சிஷ்டெள – ர்பரதி ஜடரம் மா களு ஸுகம் ।
ப்ரதிஷ்டா ஜீர்ணோத்தார, தனம் ஹரணாதாந்தி மனுஜா: ॥ (பி. த. 74)

பொருள்: அறநிலையம், பிரதிஷ்டை, ஜினாலயம் முதலானவற்றைச் சீர் செய்ய வந்த பொருளை எடுப்பவன் இறந்து துர்நாற்றம் உள்ள உடலை அடைந்து உலகோரால் இகழப்படுவான்; அவனுக்குக் கொஞ்சமும் சுகம் அமைதி கிடைப்பதில்லை. அவன் வாழ்வில் எப்போதும் அமங்கலமும் அபசகுனமும் உண்டாகும். பிறரால் வீசப்பட்ட மீதி எச்சில் உணவால் தன் வயிற்றை நிரப்புவான். இப்படி அவன் வாழ்வு மிகவும் துக்கம் உள்ளதாக இருக்கும்.

41. ஒரு பையன் முன் பிறவியில் நிர்மால்யத்தை உண்டதால் இந்தப் பிறவியில் தன் தாயின் கருவில் வந்தவுடன் அந்த வீட்டில் எல்லா செல்வங்களும் அழிந்து போயின. அவன் தந்தை காமவ்ருஷ்டியும் இறந்து போனான். குடும்பத்தாரும் ஒருவருக்குப்பின் ஒருவராக இறந்து போயினர். அவன் தாய் பிறர் வீட்டில் மாவு அரைத்தல் முதலான பணிகளைச் செய்து தன்னையும் பையனையும் காப்பாற்றி வந்தாள்.

ஒரு நாள் அந்தப் பையனை வேலைக்காக ஒருவர் நிலத்துக்கு அனுப்பினாள். அவன் காலை முதல் மாலை வரை வேலை செய்த பிறகு நில உரிமையாளன் ஸுக்ருத புண்ணியன் கூலி தரும்போது அவன் முகத்தைப் பார்த்து 'நீ யாருடைய பிள்ளை' என்றான். பையன், 'நான் காமவ்ருஷ்டி செல்வருடைய பிள்ளை' என்றான். அதைக் கேட்ட அவன், 'அட! அவர் இந்த நகரின் பெரும் செல்வராயிற்றே! நான் அவருடைய ஊழியனாக இருந்தேன். அவரால் தான் இந்த நகரில் செல்வந்தன் ஆயினேன். உனக்கு எப்படி இந்த நிலை வந்தது?' இப்படி

அப்பையனைப் பற்றி வருத்தத்துடன் எண்ணிப் பார்த்து, பையன் கைகளில் பொன் காசுகளைக் கொடுத்தான். கொடுத்த அளவிலே அவை நெருப்பாகி யைனுடைய கைகளைச் சுட்டன. அதைப் பார்த்து உரிமையாளன் மிகவும் வியப்படைந்தான். இந்தப் பையன் புண்ணியம் இல்லாதவன் என்று கருதினான். பிறகு அவன் அந்தப் பையன் விரும்பியபடி கடலையைக் கொடுத்தான். அந்தக் கடலையைத் துணியில் மூட்டைக் கட்டிக் கொண்ட பையன் வீடு நோக்கி நடந்தான். துணி கிழிந்து கந்தலாக இருந்ததால் அவன் வீட்டை அடைந்த போது ஒரு பிடி கடலையே இருந்தது? மீதி எல்லாம் வழியில் சிந்திவிட்டன. வீட்டில் வந்தவுடன் அவன் தாய் தன் மகனிடம் 'என்ன கூலி கொண்டு வந்தாய்' என்றாள். 'ஒரு பிடி கடலை' என்றான் பையன். அவள் வியப்படைந்து, 'நாள் முழுதும் உழைத்து ஒரு பிடி கடலையா?' என்றாள். வியப்படைந்த தாயைப் பார்த்து, 'நிறையவே கிடைத்தது. ஆனால்.....' என்றான் பையன். அதைக் கேட்ட தாய், 'நீ எப்போது வந்தாயோ அப்போதே இந்த வீட்டு செல்வம் எல்லாம் அழிந்தது. தந்தையும், உறவினரும் இறந்து போயினர். உன் வினை இன்னும் விடவில்லை. பெரும் பாபத்தோடு வந்துள்ளாய். முன் பிறவியில் புண்ணியம் செய்யவே இல்லை. உனக்கு வைத்த பெயர் பொருத்தம் தான்' என்றாள். அந்த பையன் பெயர் என்ன?

அந்தப் பையன் பெயர் 'அக்ருத புண்ணியன்

42. விருஷப நாத பகவான் தீர்த்த காலத்தில் அயோத்யா நகர அரசன் ரத்னவீர்யன் ஆட்சிக்காலத்தில் சுரேந்திரதந்தன் என்ற செட்டி தான் வெளிநாடு செல்லும் 12 ஆண்டுகளில் வரும் அஷ்டமி, சதுர்தசி, ஆஷ்டாணிக, சாதுர்மாத சிறப்புப் பூஜைகளுக்காகத் தந்த பொருளை ஏழு வியசனங்களில் அழித்த அந்த தன் கொடிய பாபத்தால் 33 கடல்காலம் வரை நரக துக்கத்தை அனுபவிக்க ஏழாம் நரகத்தை அடைந்தான். பிறகு அந்தக வ்ருஷ்டி பெயருடையவனாக (வசுதேவனுடைய தந்தையாக) வந்து பிறந்தான். (ஹரிவம்ச புராணம் சருக்கம் 18. ஸுப்ரதிஷ்ட கேவலி பகவான் அருளிய வரலாறுபடி) அந்த நபர் பெயர் என்ன?

அவன் பெயர் ருத்ர தத்தன்.

****

மூவுலக வுயிர்க்கெல்லாம் இன்ப மீயும்
முதன்மைபெறு நல்லறமே மொழிந்தான் மற்றும்
தாவிலவாம் குணங்கட்கே உறையு ளானான்
தண்ணியவாம் நீர்வற்றாக் கடலைப் போல
ஓவருதீக் குற்றங்கள் இல்லா னாகி
ஒழிக்கரிய பகையழித்து விழிமூன்றுற்று
வீவிலிசை வீட்டுணுவாய் ஈசனான
விடபனெனும் முதலிறையை வணங்குவேனே!

– ஆதிநாத காவியம்

அதிகாரம் – 7.

ஜைன தரும பெருமை

ஜைன தர்மத்தில் தானம், பூஜை, சீலம், உபவாசம் முதலிய உத்தம லக்ஷணங்கள் தருமம் என கூறப்பட்டிருக்கிறது. அவற்றினுடைய பெருமை (மஹத்துவம்) எவ்வாறு விளக்கப்பட்டு இருக்கின்றனவோ அவற்றை அறிந்து கொள்வதால், பவ்வியர்களுக்கு இந்த உயர்ந்த பெருமை வாய்ந்த தருமத்தினை விதிமுறைப்படி ஏற்று ஒழுக வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறது. இதனால் ஜைன தர்மத்தின் பெருமை என்ற ஏழாம் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

1. தருமம் என்று எதைச் சொல்லுவர்? அதருமம் என்று எதைச் சொல்லுவர்?

ஸத்த்ருஷ்டிஜ்ஞானவ்ருத்தாணி, தர்மம் தர்மேச்வரா விது : ।
யதீய ப்ரத்யணீகானி பவந்தி பவ பத்ததி : ॥ 3 ॥

என்று ஸ்ரீ சுவாமி ஸமந்தபத்ராசாரியர் 'ரத்னகரண்டக சிராவகாசார்' நூலில் கூறியுள்ளார்.

பொருள்: **தர்மேச்வரா**–தருமஸ்வரனான ஜிநேந்திர தேவன், **தானி** – அந்த, **ஸத்த்ருஷ்டி ஜ்ஞான வ்ருத்தாணி** – நற்காட்சி, நல்ஞான, நல்லொழுக்கத்தை, **தர்மம்** – தர்மம் என்று, **விது:** –அறிகிறார் அருளுகிறார், **யதீயப்ரத்யணீகாணி** – இவற்றுக்கு எதிரான தீக்காட்சி, தீயஞானம், தீயஒழுக்கம், **பவ பத்ததி:** – பிறவிக்கு **வழி, பவந்தி** –ஆகின்றது.

(கருத்து) நற்காட்சி, நல்ஞான, நல்லொழுக்கத்தைத் தருமம் என்று கூறுகின்றனர். தீக் காட்சி, தீயஞானம், தீயஒழுக்கத்தை அதருமம் என்று கூறுகின்றனர்.

2. 'தருமம்' என்ற சொல்லுக்கு என்ன பொருள்?

'தரதீதி தர்ம:' அதாவது, பிறவித் துன்பத்திலிருந்து விடுவித்து சொர்க்க, மோக்ஷசுகத்தை அடையச் செய்வதனைத் தருமம் என்று கூறுகின்றனர்.

3. அஹிம்ஸையும் க்ஷமை முதலான பத்து பாவனைகளும் தருமம் என்று சில நூல்களுள் கூறப்பட்டுள்ளன. அவை எதில் அடங்குகின்றன?

அஹிம்ஸையும், க்ஷமை முதலான பத்தும் நல்லொழுக்கத் தருமத்தில் உள்ளடங்குகின்றன.

4. உலகில் யாராவது நற்காட்சியின் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளனரா? ஆம் எனில் எப்படி வெளிப்படுத்தினார்?

ஆம்! அரசி சேலினி வெளிப்படுத்தினாள். மித்யா நெறியில் இருந்த பௌத்த சிரேணிகனை நற்காட்சியாளனாக மாறச் செய்தாள். அதனால் அரசன் சிரேணிகள் புனித ஸமவஸரணத்தைத் தரிசிக்கும் பேறு பெற்றான். அவன் எதிர்காலத்தில் தீர்த்தங்கரனாக வர இருக்கிறான்.

5. எந்த ஆசாரியர் நற்காட்சியுடன் தீர்த்தங்கரர் துதி செய்ததால் காசியில் சிவலிங்கம் வெடித்து அதில் சந்திரபிரபு பகவான் படிமம் வெளிப்பட, அதனால் அரசன் சிவகோட்டி ஜைன தருமத்தின் பெருஞ் சிறப்பைக் கண்டு பலரோடு ஜைன தருமத்தை ஏற்றுக் கொண்டான்?

அவர் பெருமை மிகு ஆசாரியர் சுவாமி ஸமந்தபத்திரர் ஆவார்.

6. இந்த பஞ்சம காலத்தில் நல்ஞான வடிவ தருமத்தின் பெருமையை யார் வெளிப்படுத்தினார்?

இந்தப் பஞ்சம காலத்தில் திகம்பர ஆசாரியர் ஸ்ரீ அகளங்க தேவர் பௌத்தரை வென்று அவர் செருக்கை அழித்து நல்ஞான தருமத்தின் சிறப்பை வெளிப்படுத்தினார்கள்.

7. நல்ஞானத்தின் பெருமையால் பலி முதலான அமைச்சர்களை வென்று முனிவர்களுக்கு உபஸர்கம் செய்ய முற்பட்ட போது கையில் கத்தியுடன் நின்று கிடக்கச் செய்த முனிவர் பெயரைக் கூறுக.

அவர் அகம்பன ஆசாரியருடைய சீடரான சுருதசாகர முனிவர் ஆவார்.

8. நல்லொழுக்க தருமத்தின் பெருமையை வெளிப்படுத்திய ஒருவரை எடுத்துக் காட்டுக.

காட்டில் மலைப் பாம்பினால் துன்பம் விளைந்த போதும் அணுவிரத ஒழுக்கத்தைக் காத்து நின்ற 'அனங்கசரை' என்னும் பெயருடைய இளமங்கை நல்லொழுக்க தருமத்தின் பெருமையை வெளிப்படுத்தினாள்.

9. பத்து அறங்கள் எவை எவை? அவற்றைச் சுருக்கமாக விளக்குக.

பத்து அறங்களின் பெயரும் சிறு குறிப்பும் வருமாறு:

1. உத்தம க்ஷமை : சினம் இல்லாமையும் சாந்த பரிணாமம் கொள்ளுதலும்.
2. உத்தம மார்தவம் : மானம் இல்லாமையும் மென்மை பரிணாமம் கொள்ளுதலும்.
3. உத்தம ஆர்ஜவம் : மாயம் இல்லாமையும் சரள பரிணாமம் கொள்ளுதலும்.
4. உத்தம சௌசம் : லோபம் இல்லாமையும் மகிழ்ச்சி பரிணாமம் கொள்ளுதலும்.
5. உத்தம சத்தியம் : நல்லோரோடு ஆகமத்தை ஒட்டி ஆன்ம நல உரையாடுகை.
6. உத்தம ஸய்யமம் : ஐம்புலனாசை, நிலை, இயக்குயிர் இம்சை இவைகளுக்கு அஞ்சுதல்.
7. உத்தம தபம் : உலக ஆசையை விட்டு 12 தபங்களைக் கைக்கொள்ளுதல்.
8. உத்தம தியாகம் : ஞானம், உபகரணம் (பிச்சி, சாஸ்த்ரம்) முதலான தானம் செய்தல்.
9. உத்தம ஆகிஞ்சன்யம் : முழுமையாக அகப்புற பற்றுகள் இல்லாமை.
10. உத்தம பிரம்மசரியம் : தீயொழுக்கம் இன்றி நல்லொழுக்க வழி ஆன்மாவில் ஆழ்தல்.

10. இப்பத்து அறங்கள் ஒவ்வொன்றோடும் 'உத்தம' ஏன் சேர்க்கப்படுகிறது?

இப்பத்து அறங்களும் உலகியதோடு தொடர்புடையன அல்ல. மாறாக இவை வினை அழிதலும், மோக்ஷம் அடைதலிலும் தொடர்புடையன. இதனால் இவற்றோடு 'உத்தம' சொல் சேர்க்கப்பட்டுள்ளது.

11. இப்பத்து அறங்களின் பெருமையை வெளிப்படுத்துபவர் யார்?

மும்மணியோடு கூடிய மகாவிரதி, மகாதபஸ்வி, திகம்பர முனிவரே இப்பத்து அறங்களின் பெருமையை வெளிப்படுத்துபவர்.

12. ஜைன தருமத்தில் வேறு எவற்றை எல்லாம் தருமம் என்று கூறியுள்ளனர்?

'தானம் பூஜா சீல முபவாஸோ சேதி சவுத் விஹோ ஸாவய தம்மோ' – தானம், பூஜை, சீலம், உபவாசம் என இவை சிராவகரது நான்கு தர்மம் என்று ஜயதவளா சித்தாந்த நூலுள் கூறப்பட்டுள்ளது. (இந் நான்கு தர்மங்களும் மும்மணி வடிவ தருமத்தில் அடங்கிப் போகின்றன.)

13. தான தர்மம் எத்தனை வகைப்படும்?

தான தருமம் நான்கு வகைப்படும். 1. ஆஹார தானம், 2. ஔஷத தானம், 3. உபகரண தானம் (ஸம்யமம், ஞானத்துக்கான உபகரணங்கள்) 4. ஆவாச தானம்.

14. அர்க்ககீர்த்தி மற்றும் அமிதகதி எனப் பெயருடைய சாரண பரமேஷ்டிகளுக்குப் பக்தியோடு ஆஹார தானம் தந்து அந்த தானச் சிறப்பால் தன் பத்தினி ஸத்யபாமாவுடன் போக பூமியில் பிறந்து பரம்பரையில் சாந்திநாத பகவானாக ஆன அரசர் யார்?

அவர் 'சிரீஷேண' அரசர் ஆவார்.

15. முன் பிறவியில் நாகஸ்ரீ எனப் பெயருடைய கன்னிகையாக இருந்த போது முனிதத்தர் எனும் முனிவருக்கு ஔஷத (மருந்து) தானம் தந்து அந்தத் தானச் சிறப்பால் பிற்பிறவியில் ஔஷத ரித்தி பெற்றிருந்த பெண் யார்?

அப் பெண் 'விருஷப சேனை' ஆவாள்.

16. கௌண்டேசர் என்ற முனி பெரும் ஆகமங்களில் கரை கண்டவராக (பேரறிஞராக) விளங்கியது எந்தத் தானத்தின் பயன் ஆகும்?

கௌண்டேசர் பெயருடைய முனி தன் முன் பிறவியில் கோவிந்தன் எனும் இடையனாக இருந்த போது பத்மநந்தி எனும் பெயருடைய முனிக்கு சாஸ்த்ர தானம் (ஞான உபகரணம்) தந்ததின் பயனாகும்.

17. எந்த இரு முனிவர்களுக்கு ஒரு காட்டுப் பன்றி தான் இருந்த குகையில் இடம் தந்து, புலியினால் இடையூறு நேர்ந்த போது அதனோடு போராடி தான் தந்த அடைக்கல தானத்தின் சிறப்பால் சுவர்கத்திற்குச் சென்றது?

அந்த இரு முனிவர்கள் பெயர் 'சமாதி குப்தர்' மற்றும் 'திரி குப்தர்' ஆகும்.

18. தீர்த்தரங்கரனாக வர இருக்கும் எந்த அரசனது பக்தியின் பெருமையால் மகிழ்ந்து தேவர்கள் சைலாக மலையில் இரண்டு வித்தைகளைக் கொடுத்தனர்?

அவன் இலங்கை அரசனான 'இராவணன்' ஆகும்.

19. ஸித்தசக்ர மண்டல பூஜை சிறப்பால் தன் கணவன் ஸ்ரீபாலன் குஷ்ட நோயைப் போக்கிக் கொண்ட பெண் யார்?

அவள் பெயர் ஸதி 'மைனாசுந்தரி'.

20. தன் ஒழுக்க சிறப்பால் தூக்குக் கயிற்றை ஸிம்மாஸனமாக மாற்றிக் கொண்ட பெருமையுடைய புருஷன் யார்?

அந்தப் பெருமை அடைந்தவர் செல்வர் 'சுதர்ஸனர்' ஆவார்.

21. தேவ மகளிரால் ஏற்பட்ட காமத் தொல்லைகளைப் பொருட்படுத்தாமல் அவற்றைப் பொறுத்து ஒழுக்கத்தைக் காத்து அந்தப் பிறவியிலேயே கேவல ஞானம் அடைந்த முனிவர் யார்?

அப் பிறவிலேயே மோக்ஷம் அடைபவராக இருந்த முனிவர் 'ராமர்' (லக்ஷ்மணன் அண்ணன்) ஆவார்.

22. ஓராண்டு காலம் தொடர்ந்து உபவாசம் இருந்து உபவாசத்தின் பெருமையை எடுத்துக் காட்டிய மகா புருஷரின் பெயரைக் கூறுக.

அம் மகாபுருஷர் முதல் காம தேவரான 'பாகுபலி' முனிவர் ஆவார்.

23. சாரண முனிவரிடம் அஹிம்ஸை அறத்தின் பெருமையைக் கேட்டு புலால் தின்னுதலை விட்டு விட்டு பரம்பரையில் தீர்த்தரங்கர மகாவீரராக அவதரித்த விலங்கு யாது?

அந்த விலங்கு காட்டு அரசனான 'சிங்கம்' ஆகும்.

24. இருமுறைகேள்வியராக இருந்து ஜைன அறத்தைக் காப்பதற்காக உயிரை விட்ட பெருமையுடையவர் யார்?

அப் பெருமையுடையவர் 'நிகளங்கர்' ஆவார்.

25. 'பக்தாமர' துதி பாடி ஆதிநாத பகவான் பக்தியால் தன் உடலில் 48 பூட்டுக்களோடு பூட்டப்பட்டிருந்த விலங்கினை உடைத்து திகம்பர ஜைன தர்மத்தின் பெருமையை உலகில் விளங்கச் செய்த ஆசாரியர் யார்?

அந்த ஆசாரியர் திகம்பர முனிவரான 'மானதுங்கர்' ஆவார்.

26. பக்தாமர ஸ்தோத்ரம் எந்த சந்தத்தில் எழுதப்பட்டுள்ளது?

பக்தாமர ஸ்தோத்ரம் 'வசந்த திலகா' சந்தத்தில் எழுதப்பட்டுள்ளது.

27. பக்தாமர ஸ்தோத்திரத்தில் 'வசந்த திலகா' பெயருடைய சந்தங்கள் எத்தனை உள்ளன?

பக்தாமர ஸ்தோத்திரத்தில் 'வசந்த திலகா' பெயருடைய 48 சந்தங்கள் உள்ளன.

28. பெரும்புகழையுடைய ஆசாரியஸ்ரீ சுருதகேவலி பத்ரபாஹு சுவாமி சங்கத்தில் எத்தனை முனிவர்கள் இருந்தனர்? அவர்களுள் முதன்மையான சீடர் யார்?

ஆசாரியர்ஸ்ரீ சுருதகேவலி பத்ரபாகு சுவாமி சங்கத்தில் 12000 முனிவர்கள் இருந்தனர். அவர்களுள் முதன்மையான சீடர் விசாகாசாரியார் ஆவார்.

29. ஸ்ரீ சுருதகேவலி பத்ரபாகு சுவாமி திருவடியில் முனி தீக்ஷை ஏற்ற புகழ்பெற்ற பேரரசன் யார்?

அவர் திருவடியில் பேரரசன் 'சந்திரகுப்தன்' நிர்வாண திகம்பர முனி தீக்ஷை எடுத்தார்.

30. சிரவணபெலிகுளா மலையில் உள்ள திகம்பர மூர்த்தியை நிறுவியர் யார்?

சிரவண பெலிகுளா மலையில் உள்ள திகம்பர மூர்த்தியை நிறுவியர் ஜைன அரசரான 'சாமுண்டராயர்'.

31. தமிழ்நாடு திருமலையில் உள்ள நேமிநாத பகவான் திகம்பர மூர்த்தியை நிறுவியர் யார்?

தமிழ்நாடு திருமலையில் உள்ள நேமிநாத பகவான் திகம்பர மூர்த்தி பஞ்சபாண்டவர் காலத்தில் நிறுவப்பட்டது என்கின்றனர்.

****

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு
– திருக்குறள்

அதிகாரம் – 8.
மும்மணி இயல்பு

ஜினாகமத்தில் சம்யக் தர்சனம், சம்யக்ஞானம், சம்யக் சாரித்ரம் இம்மூன்றும் இரத்னத்ரையம் (மும்மணி) என்று சொல்லப்பட்டுள்ளது. இம்மூன்றும் சேர்ந்தது முக்தி மார்கமாகும். மோட்ச வடிவ மாளிகையை அடைய மும்மணியாகிய மூன்றும் சேர்ந்த இரத்னத்ரயமே வழியாகும். சரியான வழியில் சென்றால் நாம் அடைய வேண்டிய இலக்கை அடைவதுபோல, இரத்னத்ரையத்தின் வழியே முக்தி மாளிகையை அடையவேண்டும். அப்படிப்பட்ட இரத்னத்ரையத்தையும், தியாகம், அடக்கம் வடிவ மோக்ஷமார்கத்தையும் அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும், என்பதற்காகவே எட்டாவது அதிகாரமாக ''மும்மணி இயல்பு'' கொடுக்கப்பட்டுள்ளது.

1. இரத்னத்ரையம் என்று எதைக் கூறுகிறோம்?

சம்யக்தர்சனம் (நற்காட்சி), சம்யக்ஞானம் (நன்ஞானம்), சம்யக் சாரித்திரம் (நல்லொழுக்கம்) இம் மூன்றையும் இரத்னத்ரையம் அல்லது முன்மணிகள் என்று கூறுகிறோம்.

2. இரத்னத்ரையம் எத்தனை வகைப்படும்? அவைகளின் பெயரைக் கூறுக.

இரத்னத்ரையம் இரண்டு வகைப்படும். அவை 1. நிச்சய இரத்னத்ரையம், 2. வியவகார இரத்னத்ரையம்.

3. நிச்சய இரத்னத்ரையம் என்று எதைக் கூறுகிறோம்? அதை யார் பெற முடியும்?

ஆன்மத் தூய்மையுடன் கூடி உண்மைத் தூய ஆன்மனிடத்தில் நம்பிக்கை வைத்தல், உண்மைத் தூய ஆன்மாவை அறிதல், உண்மைத் தூய ஆன்மாவில் ஆழ்ந்திருத்தல் இவை நிச்சய இரத்னத்ரையம் என்று கூறப்படுகிறது. இப்படிப்பட்ட இந்த நிச்சய இரத்னத்ரையத்தை, வியவகார இரத்னயத்ரையத்தில் தூய்மையும், ஐம்புல நுகர்ச்சிகளைத் துறந்தவரும், மகாவிரதியும், ஆன்மாவில் ஆழ்ந்த திகம்பர முனிமகாராஜ் தான் பெற முடியும். ஸ்ராவகர்கள் (இல்லறத்தார்) இப்படிப் பட்ட நிச்சய இரத்னத்ரையத்தை அடைவதற்கான பாவனை மட்டும் பெற முடியும்.

4. வியவகார இரத்னத்ரையம் என்று எதைக் கூறுகிறோம்? அதை எத்தகையோர் பெற முடியும்?

உண்மையான விருப்பு, வெறுப்பு அற்ற தேவ, சாஸ்திர, குரு இவர்களிடத்து மிகுந்த நம்பிக்கை வைத்தல், ஜினேந்திர தேவனின் வாணி (உண்மையான சாஸ்திரம்) யை உள்ளத்தில் ஏற்றல், ஜினேந்திர தேவன் மூலமாகச் சொல்லப்பட்ட முழுமையான முக்திப் பாதையில் செல்லுதல் இவை வியவகார இரத்னத்ரையம் என்று சொல்லப்படுகிறது.

இப்படிப்பட்ட இந்த வியவகார இரத்னத்ரையத்தை சுத்தாத்மாவில் நிலைக்காத திகம்பர முனிவர்களும், மற்றும் தகுதி வாய்ந்த பவ்விய சிராவக புண்ணியாத்மாக்களும் அடைய முடியும்.

5. மித்யா தர்சனம், மித்யா ஞானம், மித்யா சாரித்திரம் இவை எப்படிப்பட்ட வியவகாரம்? எத்தகைய மார்க்கம் (வழி)?

மித்யா தர்சனம் (பொய்க் காட்சி), மித்யா ஞானம் (பொய்மை ஞானம்), மித்யா சாரித்திரம் (பொய்மை

ஒழுக்கம்) இவை உண்மையற்ற (மித்யா) வியவகாரம். இவை பிறவிச் சுழற்சிக்கே வழி கோலும்.

6. **நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் இவை எப்படிப்பட்ட வியவகாரம்? எத்தகைய வழி?**
வியவகார இரத்னத்ரையத்தில் நிலைபெற்ற ஜீவனுடைய நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் இவை உண்மையான வியவகாரம். இது முக்திப் பாதையாகும்.

7. **நிச்சய இரத்னத்ரயத்தாலேயே முக்திப் பதவி கிடைக்கும் என்று கூறும் பொழுது வியவகார இரத்னத்ரையத்தற்கான அவசியம் தான் என்ன?**
நிச்சய இரத்னத்ரையத்தாலேயே உண்மையான முக்திப் பதவி கிடைக்கிறது. இது முற்றிலும் சரியானதே. ஆனால் நிச்சய இரத்னத்ரையத்தைப் பெறுவதற்காக வியவகார இரத்னத்ரையம் நிமித்த காரணமாகும். அதாவது வியவகார இரத்னத்ரையத்தின் மூலமாக நிச்சய இரத்னத்ரையமானது கிடைக்கிறது. மேலேயுள்ள படியில் ஏறுவதற்கு கீழே உள்ள படியானது உதவியாக அதாவது நிமித்தமாக இருக்கிறது. அதுபோல வியவகார இரத்னத்ரையம் பரம்பரையில் முக்திக்குக் காரணமாகிறது.

வியவகார இரத்னத்ரைய வடிவ நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் இவற்றின் வருணனை அடுத்த மூன்று அதிகாரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

வியவகாரம் இரண்டுவகையாக உள்ளது. ஒன்று உண்மையான (சமீசீன்) வியவகாரம். மற்றொன்று உண்மையற்ற (அசமீசீன்) வியவகாரம். வீதராகிதேவர், சாஸ்திரம், குரு இவைகளில் சிரத்தையுடன் கூடிய பூஜை, தானம் முதலான நியம விரதங்களை அனுசரித்தல் உண்மையான வியவகாரம் எனப்படுகிறது. மற்றும் உலகியல் தொடர்பான ஆரம்பம் (சமையல் தொழில் முதலியன செய்வதால் உண்டாகும் ஹிம்சை) ஸாரம்பம் (தொழில் ஹிம்சை, விரோதி ஹிம்சை) முதலான ஹிம்சை, பொய், களவு, காமம், மற்றும் பொருள் பற்று வடிவமான ஐந்து பாபங்களைச் செய்தல் உண்மையல்லாத வியவகாரமாகும். ஆதலால் எதுவரை இல்லறம் தொடர்பான ஐந்து பாபவடிவ உண்மையல்லாத வியவகாரத்தினை விட்டு, சாது நிலையடைந்து சுத்தோபயோகம் மூலமாக சுத்தாத்மனை அடையவில்லையோ அதுவரை நிச்சய இரத்னத்ரையத்தை அடைய முடிவதில்லை.



****

அதிகாரம் – 9.

நற்காட்சியின் பெருஞ்சிறப்பு

(வியவகார நற்காட்சி தர்மத்தின் வருணணையும் அதன் பெருஞ்சிறப்பும்)

சாஸ்திரங்களில் சம்யக்தர்சனம் முக்திமாளிகையின் முதல்படி என்று கூறப்பட்டுள்ளது. இந்த சம்யக்தர்சனம் இல்லையேல் பதினொரு அங்க ஞானமும், சகலசரித்திரமும் சம்யக் ஞானமாகவும் சம்யக்சாரித்ரமாகவும் ஆவதில்லை. அவை மித்யாஞானமாகவும், மித்யாசாரித்ரமாகவும் சொல்லப்பட்டு விடும். மேலும் சம்யக்தர்சனம் இல்லாமல் தீர்த்தங்கரபகவான் உள்ள சமவசரணத்தை காணும் வாய்ப்பே இல்லாமல் போகிறது. மேலும் சம்யக்தர்சனம் அடைந்த பின் வைமானிக (சௌதமேந்திரன் முதலிய) தேவராக பிறக்கும் ஆயுள் தவிர மற்ற ஆயுள் கட்டாயமாக பந்தம் ஆவதில்லை, நரககதி, விலங்குகதி முதலான தீய கதிகளில் பிறந்து திண்டாடுவதிலிருந்து தப்பிக்கவைக்கவல்ல உயர்ந்த நற்காட்சியினை ஆகமப்படியும், விவாதங்கள் மூலமாகவும் பவ்வியர்கள் அறிந்துகொள்ளவும், அதை அவசியம் பெறவும் வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் நற்காட்சியின் பெருஞ்சிறப்பு என்ற ஒன்பதாம் அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

1. நற்காட்சி என்று எதைக் கூறுகிறோம்? அதனுடைய இலட்சணத்தைக் கூறுக.

ஸ்ரீ சுவாமி சமந்தபத்திர ஆசாரியர் அருளிய இரத்னகரண்டக ஸ்ராவகாச்சாரத்தின்படி,

ஸ்ரத்தானம் பரமார்த்தானா மாப்தாகம் தபோபுருதாம் ।
த்ரீமூடாபோட மஷ்டாங்க சம்யக் தர்ஸனமஸ்மயம் ॥ 4 ॥

பொருள் : பரமார்த்த நிலையில் அதாவது உண்மையான தேவ, சாஸ்திர, குருவினிடம் மும் மூடங்கள் இல்லாமல், எட்டு உறுப்புகளோடு கூடி, எட்டு விதமான மதங்கள் இல்லாமல் நன்நம்பிக்கை கொள்ளுதல் நற்காட்சி என்று கூறப்படுகிறது.

ஸ்ரீ ஆசாரிய குந்தகுந்தர் அருளிய மோக்ஷபாகுடத்தின்படி,

ஹிம்ஸாரஹியே தம்மே அட்டாரஹ் தோஸ வஜ்ஜியே தேவே ।
ணிக்கந்தே பவ்வயணே சத்தஹணம் ஹோஇ சம்மத்தம் ॥ 10 ॥

பொருள் : இம்சையற்ற தர்மம், பதினெட்டு குற்றமிலா தேவர், நிர்கிரந்த ஸ்ரமணர் (முனி) முழுமையான சாஸ்திரத்தில் திட நம்பிக்கை கொள்ளுதல் வியவகார நற்காட்சியாகும்.

2. பொதுவாக எல்லா சாஸ்திரங்களிலும் முதன் முதலில் நற்காட்சியின் பெருமை சொல்லப்படுவதின் காரணம் என்ன?

காரணம் என்னவென்றால், நற்காட்சி பெறாமல் ஜீவனுடைய பொய்மை ஞானமும், பொய்மை ஒழுக்கமும், நன்ஞானமாகவும், நல்லொழுக்கமாகவும் ஆக முடியாது. ஞானத்திலும், ஒழுக்கத்திலும் சம்யக்த்வத்தைக் கொண்டு வருவதற்காக நற்காட்சியின் அவசியம் மிகவும் தேவையாகிறது. ஆகையால் எல்லா சாஸ்திரங்களிலும் பொதுவாக நற்காட்சியின் பெருமை முதன் முதலில் சொல்லப்படுகிறது.

3. நற்காட்சி இல்லாது, நன்ஞானம், நல்லொழுக்கம் இவற்றால் மட்டும் முக்திப் பதவி பெற முடியுமா? முடியாதா?

பெறமுடியாது. ஏனென்றால் தத்துவார்த்தசூத்திர நூலில் முதல் சூத்திரத்தில் சொல்லப்படுகிறது.

சம்யக் தர்சன ஞான சாரித்ராணி மோக்ஷமார்க்க : ।

இதன் பொருள் : நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம் இவற்றின் ஒருமைப்பாடே முக்தி மார்க்க மாகும். மேலும் தனித்த நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கத்தின் பெயர் முக்தி மார்க்கம் அல்ல. எனவே எதுவரை இந்த இரத்னத்ரைய வடிவ முக்திப்பாதை ஜீவனுக்குக் கிடைக்கவில்லையோ அதுவரை அந்த ஜீவன் பிறவி சுழற்சியிலிருந்து விடுபட்டு முக்தி நிலையை அடைய முடியாது. ''பாதையில்லாமல் மாளிகையை அடைவது எங்ஙனம்'' என்பதை நீங்கள் அறிவீர்கள். நல்ல பாதையினாலேயே மாளிகையை அடைய முடியும்.

4. விசேட புண்ணியமின்றி எந்த ஜீவனும் முழுமையான மும்மணி தர்மத்தை (அணுவிரதம், மகாவிரதங்களை) ஏற்க முடிவதில்லை. ஆனால் அற்ப புண்ணிய உதயத்தால் நற்காட்சி தர்மத்தை மட்டும் பெற்றுவிட்ட அந்த ஜீவன் நற்காட்சி தர்மத்தின் மகிமையால் எந்தெந்த தீய கதிகளில் அடைவது இல்லை?

ஸ்ரீ சுவாமி சமந்தபத்திர ஆசாரியர் இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் கூறுகிறார்.

சம்யக்தர்சனசுத்தா நாரகதிரியங்நபும்சக ஸ்த்ரீத்வானி ।
துஷ்குல விக்ருதால்பாயுர் தரித்ரதாம் ச வ்ரஜந்தி நாப்யவ்ரதிகா : ॥ 35 ॥

பொருள் : நற்காட்சியால் தூய்மை பெற்ற ஜீவன் விரதங்களை (அணு – மகாவிரதங்கள்) மேற்கொள்ளாத போதும் கூட நரக, விலங்கு, நபும்சக, ஸ்திரி வடிவத்தையும், இழிகுலம், உடற்குறை, அற்ப ஆயுள், தரித்திர நிலை இவைகளையும் அடைவது இல்லை.

5. நரக, விலங்கு ஆகிய பெரிய தீய பிறவியிலிருந்து தப்பிப்பதற்கு நற்காட்சி மட்டும் எப்படி உதவியாகிறது?

அனேக முதலைகளும், மீன்களும் நிறைந்துள்ள சமுத்திரத்தைக் கடப்பதற்கு ஒரு படகு எவ்வாறு துணை செய்கிறதோ, அவ்வாறே இந்த நரக, விலங்கு பிறவி சமுத்திரத்தைக் கடப்பதற்கு நற்காட்சி எனும் படகு உயிர்களுக்குப் பெருந்துணையாக இருக்கிறது.

6. அப்படிச் சிறந்த நற்காட்சியைப் பெற நாம் என்ன முயற்சி செய்ய வேண்டும்?

இத்தகைய சிறந்த நற்காட்சியை நாம் அடைவதற்கு உண்மையான தேவர்களுடைய இயல்பை அறிய வேண்டும். மேலும் பொய்மையை அறிந்து ஒதுக்கி விருப்பு, வெறுப்பு அற்ற தேவ, சாஸ்திர, குருவினுடைய பக்தியில் திளைக்க வேண்டும்.

7. உண்மையான தேவருடைய ஸ்வரூபம் (இலட்சணம்) என்ன?

இரத்னகரண்டக ஸ்ராவகாச்சாரத்தின்படி உண்மையான தேவருடைய இலட்சணம்.

ஆப்தேநோச்சின்னதோஷேண, சர்வஜ்ஞேநாகமேஷீனா ।
பவிதவ்யம் நியோகேன, நான்யதா ஹ்யாப்ததா பவேத் ॥ 5॥

பொருள் : **நியோகேன** – நியமத்தோடு, **ஆப்தேந** – ஆப்தன், **ஓச்சின்ன தோஷேண** – தோஷமற்ற, **சர்வஜ்ஞேநாகமேஷீனா** – ஆகமத்தின் ஸ்வாமியாக, **பவிதவ்யம்** – இருக்க வேண்டும். ஏனென்றால், **அன்யதா** – மற்றவிதமாக, **ஆப்தா**– கடவுள் வடிவம் (தன்மை), **நபவேத்** – இருக்க முடியாது.

குற்றமொன்று இன்றிக் குறையின்று உணர்ந்துஅறம் பற்ற உரைத்தான் இறை (அருங்கலச்செப்பு–5)

8. எந்தப் பதினெட்டு குற்றங்கள் இல்லாமல் முழுதுணர் பகவான் இருக்கிறாரோ அந்தப் பதினெட்டு குற்றங்கள் என்னென்ன?

ஆசாரிய ஸ்ரீ குந்தகுந்தர் அருளிய நியமசார கிரந்தத்தின்படி

சுஹதண்ஹுபீருரோஸோ ராகோ மோஹோ சிந்தாஜரா ருஜா மிச்சூ ।
சேதம் கேத மதோ ரஇ விம்ஹியணித்தா. ஜணுவ் வேகோ ॥ 6 ॥

பொருள்: பசி, நீர்வேட்கை, அச்சம், வெறுப்பு, ஆசை, மயக்கம், வெகு சிந்தனை, மூப்பு, நோய், மரணம், வியர்வை, இளைப்பு, செருக்கு, கோபம், வியத்தல், தூக்கம், பிறப்பு, வருத்தம் ஆகிய பதினெட்டு குற்றங்கள் அற்றவர் முழுதுணர் தேவர் ஆவர்.

பசிவேர்ப்பு நீர்வேட்கை பற்றுஆர்வம் செற்றம் கசிவினோடு இல்லான் இறை. (அருங்கலச்செப்பு–6)

9. உண்மையான சாஸ்திரம் எவ்வாறு இருக்கும்? அதனுடைய இலட்சணத்தைக் கூறுக.

இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் உண்மையான சாஸ்திரத்தினுடைய இலட்சணம் இவ்விதமாகக் கூறப்படுகிறது.

ஆப்தோபஜ்ஞ மனுல்லங்க்ய – மத்ருஷ்டேஷ்டவிரோதகம் ।
தத்வோப தேச க்ருத்ஸார்வம் சாஸ்திரம் காபதகட்டணம் ॥ 9 ॥

பொருள் : **தத்**–அந்த சாஸ்திரம், ஆகமம், **ஆப்தோபஜ்ஞ** – (ஆப்த) பகவானின் மூலமாக, **உபஞ**– சொல்லப்பட்டிருக்கிறது. **அனுல்லங்க்யம்** – இந்திரர் முதலான தேவர்கள் மூலமாக, ஏற்றுக் கொள்ளத் தகுதியுடையது அல்லது மற்றவர்கள் மூலமாக கண்டிக்க முடியாது. **அத்ருஷ்டேஷ்ட விரோதகம்** – நேரடியாகவும், அனுமானம் மூலமாகவும் இவைகளில் வேறுபாடு இல்லாதது. **தத்வோப தேசக்ருதி** – தத்துவ உபதேசம் செய்யக் கூடியது. ஸார்வம் – எல்லோருக்கும் நன்மை பயப்பது. **காபத கட்டணம்** – மித்யா மார்க்கத்தை எதிர்ப்பது.

என்றும் உண் டாகி இறைபால் வெளிப்பட்டு நின்றது நூலென்று உணர். (அ.செ. 9)

மெய்பொருள் காட்டி உயிர்கட்கு அரணாகி துக்கம் கெடுப்பது நூல். (அ.செ. 10)

10. உண்மையான குரு யார்? அவருடைய இலட்சணத்தைக் கூறுக.

இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் கூறியவாறு உண்மையான குருவினுடைய இலட்சணம்.

விஷயாசாவசாத்தே நிராரம்போபரிக்ரஹ : ।
ஞானத்யான தபோரக்தஸ் தபஸ்வீ ஸ பிரஷஸ்யதே ॥ 10 ॥

பொருள் : **யா**–யார், **விஷயாஸாவஸாத்த** – விஷய ஆசையின் வசப்படாதவரோ, **நிராரம்ப** – ஆரம்பமில்லாதவரோ, **அபரிக்ரஹ:** – பரிக்ரஹம் (பற்று) அற்றவரோ, **ஞான த்யான தபோரக்த** – ஞான தியான தபத்தில் ஆழ்ந்துள்ளவரோ, **ச** – அந்த, **தபஸ்வி** – குரு, **ப்ரஷ்ஸ்யதே** – புகழத்தகக்கவராவார்.

இந்தியத்தை வென்றான் தொடர்ப்பாட்டோடு ஆரம்பம் முந்து துறந்தான் முனி. (அ.செ. 11) **தத்துவ ஞான நிகழ்ச்சியும் சிந்தையும் உய்த்தல் இருடிகள் மாண்பு.** (அ.செ. 12)

11. நற்காட்சியினுடைய எட்டு அங்கங்களின் பெயரும், அவைகளின் வடிவத்தைச் சுருக்கமாகவும் கூறுக.

இரத்னகரண்டக ஸ்ராவகாச்சாரத்தின்படி நற்காட்சியினுடைய எட்டு அங்கங்களாவன:

1. நிஷ்சங்கித் அங்கம் (ஐயமின்மை) : ''தேவ, சாஸ்திர, குருவினுடைய வடிவமும், தத்துவமும் இதுவே, இவ்வாறே இருக்கிறது. வேறு இல்லை. வேறுவிதமாகவும் இல்லை.'' இவ்விதமாக முக்தி மார்க்க விஷயங்களில் அசையாத திட நம்பிக்கை வைப்பது ஐயமின்மை என்னும் அங்கமாகும்.
2. நிகாங்க்ஷித் அங்கம்: (அவாவின்மை) கர்மத்தின் ஆதீனத்தால் அழியக் கூடியதும், துக்கத்தோடு கூடியதும், பாபத்திற்குக் காரணமானதும் ஆன சம்சார சுகத்தினிடத்தில் விருப்பமின்மையும், நம்பிக்கை இன்மையும் அவாவின்மை என்னும் அங்கமாகும்.
3. நிர்விசிகித்சா அங்கம்: (உவர்ப்பின்மை) இயல்பிலேயே தூய்மையற்றதும், ஆனால் மும்மணிகளால் தூய்மையான உடம்பில் வெறுப்பு இல்லாமல் குணங்களிடத்தில் அன்பு செய்வது உவர்ப்பின்மை என்னும் அங்கமாகும்.
4. அமூடத்ருஷ்டி அங்கம்: (மயக்கம் இன்மை) மித்யாத்துவம் முதலான தீயவழியில் நிலைத்திருக்கும் உயிர்களுக்கு மன, வசன, காயத்தால் பணிவு, போற்றுதல், வணக்கம், புகழ்தல் ஆகியவற்றைச் செய்யாதிருத்தல் மயக்கம் இன்மை என்னும் அங்கமாகும்.
5. உபகூஹன அங்கம்: (அறப்பழி நீக்கல்) இயல்பிலேயே நிர்மல மும்மணிப் பாதையில், அஞ்ஞானி மற்றும் விவேக மற்றவர்களால் ஏற்படும் பழியை நீக்குவது (மறைப்பது) அறப்பழி நீக்கல் என்னும் அங்கமாகும்.
6. ஸ்திதிகரண அங்கம். (அழிந்தாரைத் தாங்கல்) அறத்தில் பற்றுக் கொண்ட மக்கள் மும்மணிப் பாதையிலிருந்து தளர்ந்தாரை மீண்டும் மும்மணிப் பாதையில் நிலை கொள்ளச் செய்தலாகிய அச்செயல் அழிந்தாரைத் தாங்கல் என்னும் அங்கமாகும்.
7. வாத்ஸல்ய அங்கம். (அறவோருடன் அளவளாவுதல்) முக்திப் பாதையில் செல்பவர் உடனிருக்கும் அறவோர்களிடம் மாயாசாரம் இன்றி, நல் உணர்வுநிலையோடு தக்கவாறு மரியாதை செய்வது அறவோருடன் அளவளாவுதல் என்னும் அங்கமாகும்.
8. பிரபாவனா அங்கம்: (அறம் விளக்கல்) அஞ்ஞான வடிவ (மித்யாத்வம் சம்பந்த முதலான) இருள் பரவுவதை விலக்க தன் சக்திக்கு ஏற்றவாறு அதாவது சக்தியை மறைக்காமல் ஜின சாசனத்தினுடைய அருஞ்சிறப்பு வெளிப்படுத்துவது அறம் விளக்கல் என்னும் அங்கமாகும்.

12. நற்காட்சியின் எட்டு அங்கங்களின் அருஞ்சிறப்பை யார், யார் வெளிப்படுத்தினார்கள்?

நற்காட்சியினுடைய ஐயமின்மை அங்கத்தை அஞ்சன சோரனும், அவாவின்மை அங்கத்தை அனந்தமதியும், உவர்ப்பின்மை அங்கத்தை ஒத்தாயண ராஜனும், மயக்கம் இன்மை அங்கத்தை இராணி ரேவதியும், அறப்பழி நீக்கல் அங்கத்தை ஜிநேந்திர பக்த சேட்டும், அழிந்தாரைத் தாங்கல் அங்கத்தை வாரிஷேண முனியும், அறவோருடன் அளவளாவுதல் அங்கத்தை விஷ்ணுகுமார முனியும், அறமுரைத்தல் அங்கத்தை வஜ்ரகுமார முனியும் மிகுந்த சிறப்புடன் வெளிப்படுத்தினர்.

13. எட்டு அங்கங்களில்லாத நற்காட்சி நம்மை சம்சாரத்திலிருந்து விடுவித்து முக்தி அடையச் செய்யாதா?

செய்யாது. ஓர் எழுத்து குறைந்த மந்திரம், விஷத்தின் துன்பத்தை நீக்கும் திறமையை

இழப்பது போல எட்டு அங்கங்களில்லாத நற்காட்சியால் சம்சார சுழற்சியை அழிக்க இயலாது. மேலும் இரத்தினக்ரண்டக ஸ்ராவகாசார ஆகமத்தில் கீழ்கண்டவாறு கூறப்பட்டிருக்கிறது.

நாங்கஹீனமலம் சேத்தும் தர்சணம் ஜன்ம சந்ததிம் ।
ந ஹி மந்த்ரோS க்ஷரன்னயூனோ, னிகந்தி விஷ்வேதனாம் ॥ 21 ॥

உறுப்பின் பயனின்று காட்சி மறுப்பாட்டின் மந்திரமே போன்று. (அ.செ.28)

14. நம்முடைய நற்காட்சியில் தடையாக உள்ள அந்த மும்மூடங்கள் யாவை?

நற்காட்சிக்குத் தடையாக உள்ள அந்த மும்மூடங்கள் 1. லோக மூடம், 2. தேவ மூடம், 3. குரு மூடம்.

15. மூடம் என்னும் சொல்லின் பொருள் யாது?

மூடம் என்னும் சொல்லின் பொருள் அஞ்ஞானம். (அவிவேகம்) யார் தேவ, சாஸ்திர, குரு (தர்ம விஷயத்தில்) அஞ்ஞானியாக இருக்கிறானோ அவனை இங்கே மூடன் என்று அழைக்கிறோம்.

16. லோக மூடம் என்று எதைக் கூறுகிறோம்?

இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தின்படி

ஆபகாஸாகரஸ்நாநா முச்சய : ஸிகதாச்மனாம் ।
கிரிபாதோSக்னிபாதஸ்ச லோகமூடம் நிகத்யதே ॥ ॥ 22 ॥

பொருள் : தர்மம் எனக் கருதி நதி மற்றும் கடலில் நீராடுதல், மணல் கற்களைக் குவித்தல், வரைபாய்தல், தீயில் குதித்தல் இவை லோகமூடம் என்று அழைக்கப்படுகிறது.

வரைப்பாய்தல் தீப்புகுதல் ஆறாடல் இன்ன உரைப்பின் உலக மயக்கு. (அ.செ.30)

17. தேவ மூடம் என்று எதனைச் சொல்வர்?

இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் கூறப்பட்டுள்ளது.

வரோபலிப்சயாஸாவான் ராகத்துவேஷ மலீமஸா: ।
தேவதா யதுபாசித தேவதாமூடமுச்யதே ॥ 23 ॥

பொருள் : விரும்பிய பயன், வரம் முதலியன பெறும் விருப்பத்தோடு ஆசையோடு கூடிய விருப்பு வெறுப்பு நிறைந்த தேவர்களுக்கு உபாசனை பூஜை, ஆராதனை செய்தல் தேவமூடம் என்றழைக்கப்படுகிறது.

வாழ்விப்பர் தேவர் எனமயங்கி வாழ்த்துதல் பாழ்பட்ட தெய்வ மயக்கு. (அ.செ.31)

மயக்கார்வம் செற்ற முடையாரை ஏத்தல் துயக்குடைத் தெய்வ மயக்கு. (அ.செ.32)

18. குரு மூடம் என்று எதனை அறிதல் வேண்டும்?

இரத்ன கரண்டக ஸ்ராவகாசாரத்தில் ஆசாரியர் ஸ்ரீ சமந்தபத்திர ஸ்வாமி கூறுகிறார்.

ஸக்ரந்தாரம்பஹிம்ஸானாம் சம்சாராவர்த்தவ வர்த்தினாம் ।
பாஷண்டினாம் புரஸ்காரோஜ் ஞேயம் பாஷண்டிமோஹனம் ॥ 24 ॥

பொருள் : பரிக்ரகம், ஆரம்பம் மற்றும் இம்சையோடு கூடிய சம்சார பிறவி சுழற்சிக்குக் காரணமான செயல்களில் மூழ்கிய குலிங்கிகளைப் புகழ்வதும், (அவர்களைத் தர்ம காரியங்களில் முதன்மை பெறச் செய்வதும்) அவருக்கு பணிதல், பக்தி செய்தல் பாஷண்டிமூடம் அல்லது குருமூடம் என்பதை அறிய வேண்டும்.

மாசுண்ட மார்க்கத்து நின்றாரைப் பூசித்தல் பாசண்டி மூடம் எனல். (அ.செ.33)

19. இரத்ன கரண்டக ஸ்ராவகாசாரத்தைத் தவிர, நம்முடைய மற்ற சாஸ்திரங்களில் கூட தேவ மூடம் சம்பந்தமாக சில சொல்லப் பட்டிருக்கிறதா என்ன?

ஆம். ஸ்ரீ ஆசாரிய நேமிசந்திரர் மூலமாக எழுதிய திரவ்யசங்ரஹ சாஸ்திரத்தினுடைய 41ஆம் பாடலுக்கு பிரம்மதேவசூரி எழுதிய சம்ஸ்கிருத விரிவுரையில் சொல்லப்பட்டிருக்கிறது அதாவது . .....தத்ரஷுதாத்யஷ்டாதச தோஷரஹித் மநந்த ஜ்ஞானதி யனந்தகுண சகிதம் வீதராக சர்வக்ஞ தேவதாஸ்வரூபம் ஜான்னாக் யாதிபூஜாலாப ரூபலாவண்ய சௌபாக்ய புத்ரகளத்ரராஜாதி விபூதிநிமித்தம் ராகத்வேஷோபஹார்த்த ரௌத்ரபரிணத க்ஷேத்ரபால சண்டிகா மித்யா தேவானாம் யதாராதனம் கரோதி ஜீவஸ்தத்ர தேவதா மூடத்வம் பண்யதே.....।

பொருள் : இதில், பசி, தாகம் முதலான பதினெட்டு குற்றங்களில்லாத அனந்த ஞானம் முதலிய அனந்த குணங்களோடு கூடிய எந்த வீதராக சர்வக்ஞ தேவர் இருக்கிறாரோ அவரது வடிவத்தை அறியாது, ஜீவன் புகழ் (உலகப் பிரசித்தி) பூஜை லாபம், ரூபலாவண்யம், சௌபாக்யம், புத்திரர், மனைவி, இராஜ்யம் முதலிய செல்வங்களைப் பெறக் கருதி விருப்பு, வெறுப்பு நிறைந்த, ஆர்த்த, ரௌத்திர தியான வடிவ பரிணாமத்தைப் பெற்றுள்ள க்ஷேத்ரபாலகர், சண்டிகா ஆகிய மித்யா திருஷ்டி தேவர்களுக்கு ஆராதனை, பூஜை செய்தல் தேவ மூடம் என்று சொல்லப்படுகிறது.

..... ந ச தே தேவா: கிமபி பலம் ப்ரதச்சந்தி கத மிதி சேத்? ராவணேன இராமசாமி, இலக்ஷ்மீதர்வினாஷார்த்தம் பஹுரூபிணி வித்யா ஸாதிதா கௌரவைஸ்து பாண்டவ நிர்மூலநார்த்தம் காத்யாயனி வித்யா ஸாதிதா கம்ஸேன ச நாராயண வினாஸார்த்தம் பஹுவ்யோ Sபி வித்யா : ஸமாராதிதாஸ்தாபிக்ருதம் ந கிமபி ராமசாமி பாண்டவ நாராயணானாம்। தைஸ்து யத்யபி மித்யா தேவதா நானுகூலிதா ஸ்ததாபி நிர்மல் ஸம்யக்த்வோபார்ஜ்ஜித தேன பூர்வக்ருத் புண்யேன ஸர்வம் நிர்விக்னம் ஜாதமிதி. ।

பொருள் : க்ஷேத்ர பாலகர்கள், சண்டிகா ஆகிய தேவர்கள் சிறிதளவு பலன் கூட ஏன் கொடுப்பதில்லை என்று கேட்டால் பதில் இதுதான். இராவணன், ஸ்ரீ இராமச்சந்திரன், இலக்ஷ்மணன் இவர்களை அழிக்க பஹு ரூபிணி வித்தையை சித்தி பெற்றிருந்தான். கௌரவர்கள், பாண்டவர்களை வேரோடு அழிக்கக் கருதி காத்யாயனி வித்தையில் சித்தி பெற்றிருந்தனர். கம்ஸன், ஸ்ரீ கிருஷ்ண நாராயணனை அழிப்பதற்காகப் பல வித்தைகளை ஆராதனை செய்திருந்தான். இத்தகைய வித்தைகள் யாவும் ஸ்ரீ இராமச்சந்திரன், பாண்டவர்கள், ஸ்ரீ கிருஷ்ண நாராயணன் இவர்களுக்கு சிறிதுகூட துன்பத்தை அளிக்க முடியவில்லை. ஸ்ரீஇராமசந்திரர் முதலானோர் இந்த மித்யாதிருஷ்டி தேவர்களுக்கு நன்மையும் செய்யவில்லை. அதாவது அவர்களுக்கு பூஜை ஆராதனை செய்யவில்லை. இருந்தபோதிலும் கூட நிர்மல சம்யக்துவத்தால் உண்டான பூர்வ புண்ணியத்தினால் அவர்கள் (பகைவர்) எல்லோருடைய விக்னங்களும் விலகி விட்டன.

20. எண்வகை மதங்கள் யாவை?

இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தின்படி

ஞானம் பூஜாம் குலம் ஜாதிம் பலம்ருத்திம் தபோ வபு: ।
அஷ்டாவாசிரித்ய மானித்வம் ஸ்மயமாஹுர் கதஸ்மயா: ॥ 25 ॥

பொருள் : ஞானம், பூஜை, குலம், ஜாதி, வலிமை, ருத்தி, தபம், மற்றும் உடல் இந்த எட்டையும் ஆதாரமாகக் கொண்டு கர்வம் கொள்வதற்கு, கர்வம் அற்ற கணதரர் முதலானோர் 'கர்வ மதம்' என்று கூறியுள்ளனர்.

பிறப்புக் குலம்வலி செல்வம் வனப்புச் சிறப்புத் தவமுணர்வோடு எட்டு (அ.செ.34)
இவற்றால் பெரியேம்யாம் என்றே எழுந்தே இகழ்க்கில் இறக்கும் அறம் (அ.செ.35)

21. நற்காட்சிக்குத் தடையாக இருக்கக்கூடிய ஆறு அனாயதனம் என்று எவற்றைக் கூறுகிறோம்?

1. குதேவர், 2. குகுரு, 3. குதர்மம், 4. குதேவர்களுக்கு சேவை செய்தல், 5. பரிக்ரஹீ, ஆரம்பீ குருவிற்குச் சேவை செய்தல், 6. விருப்பு, வெறுப்பு அற்ற தூய அறத்திற்கு மாறுபட்ட குதர்மத்திற்கு சேவை செய்தல், இந்த ஆறும் அனாயதனம் என்று கூறப்படுகிறது. நற்காட்சிக்குத் தடையான இந்த ஆறு அனாயதனத்திற்கும் பணிவு, பூஜை, வணக்கம் ஆகியவை செய்தல் மித்யாத்துவமாகும்.

22. நற்காட்சி சம்பந்தமான சம்யக்த்வ செயல்கள், மித்யாதர்சன (பொய்க்காட்சி) சம்பந்தமான செயல்கள் இவற்றிற்கு ஆகம விளக்கம் தருக.

ஆசாரிய பூஜ்யபாத ஸ்வாமி சர்வார்த்தசித்தி கிரந்தத்திலும், ஆசாரிய அகளங்கதேவர் இராஜவார்த்திகா கிரந்தத்தில் ஆறாவது அத்யாயத்தில் ஐந்தாவது சூத்ததிரத்தினுடைய விளக்க உரையில் இவ்விதமாகக் கூறுகின்றனர்.

.....“தத்ர சைத்ய குரு பிரசவன் பூஜாதி லக்ஷணா சம்யக்த்வ வர்த்தினீ சம்யக்த்வ கிரியா l அன்ய தேவதா ஸ்தவனாதி ரூபா மித்யாத்வ ஹேதுகி ப்ரவ்ருத்தி மித்யாத்வ க்ரியா” ll

பொருள் : தேவ, குரு, சாஸ்திரத்தில் பூஜைகளின் இலட்சண வடிவமாகிய சம்யக்த்துவத்தைப் பெருக்கும் செயல்களே சம்யக்துவ செயல்களாகும். உண்மையான தேவ, சாஸ்திர, குருவைத் தவிர மற்ற ஆசையுடைய தேவர் முதலானோருக்கு பூஜைசெய்தல், வணங்குதல் ஆகிய மித்யாத்வத்தைப் பெருக்கும் செயல்கள் எல்லாம் மித்யாத்வ செயல்கள் ஆகும்.

23. முனிவர்களுக்கும், முனிநிலையில் இருந்த தீர்த்தரங்கரர்களுக்கும் துன்பம் உண்டானபோது அவர்களை அனேக தேவர் முதலானோர் காப்பாற்றினார்கள். அக்காரணத்தால் அவர்களுக்குப் பூஜை முதலானவை செய்வதினால் உண்டாகும் குற்றம் யாது?

இடர் உண்டானபோது காப்பாற்றியதால் மட்டும் ஒரு சம்சாரி பூஜைக்கு உரியவரானால் ஜைன தர்மத்தைக் காப்பாற்றுபவர்கள் அனேக எண்ணிக்கையில் உள்ளனர். நம்முடைய பிரதமானு யோக புராண கிரந்தங்களில் அத்தகைய உதாரணங்கள் நூற்றுக் கணக்கில் உள்ளன. எடுத்துக்காட்டாக,

1.யுகத்தின் ஆரம்பத்தில் ஆதிநாத முனி (விருஷபதேவர்) மகராஜாவிற்கு ஆறுமாத உபவாசத்திற்குப் பிறகு ஏறக்குறைய ஆறு மாதங்கள் வரை ஆகாரம் ஏற்பதில் அசுப கர்மத்தின் உதயத்தால் அந்தராயம் (தடை) ஏற்பட்டது. பிறகு இராஜா ஸ்ரேயாம்ஸர் ஜாதிஸ்மரணத்தினால் (முற்பவ ஞானத்தால்) முனிகளுடைய நவதா பக்தியை அறிந்து ஆதிநாதமுனி மகாராஜருக்கு சம்யம இரக்ஷையின் காரணமாக முதன் முதலில் இக்ஷு ரஸம் (கரும்புச் சாறு) ஆகாரதானமாக அளித்தார். அவருடைய முனிதர்மத்தைக் காப்பாற்றினார்.

2.இருபதாவது தீர்த்தரங்கரர் முனிசுவ்ரத பகவானுடைய காலத்தில் குண்டல கிரியிலிருந்து முக்தி அடையக்கூடிய குலபூஷண, தேஷபூஷண முனிவர் மீது குண்டல கிரிக்கு அருகில் ஒரு தேவன் வந்து பயங்கரமாக சப்தம் செய்து கொண்டு துன்பம் செய்தான். அப்பொழுது அங்கே இராம இலட்சுமணர்கள் வந்தார்கள். தங்கள் நன்முயற்சியினால் அந்த தேவனை விரட்டியடித்து அம்முனிவர்களின் துன்பத்தைப் போக்கினர். அந்த சமயம் அந்த முனிவர்களது தியானம்

சலனமில்லாமல் ஒருமுக சிந்தனையில் இருந்ததினால் அந்த இரு முனிவர்களும் கைவல்ய ஞானம் பெற்றனர்.

3.பகவான் மகாவீரர் காலத்தில், காட்டில் தியானஸ்த நிலையில் இருந்த சாரண ருத்திதாரிமகா தபஸ்வி யசோதர முனிவரின் மீது (கழுத்தில்) முனிதர்மத்தைச் சோதிப்பதற்காக ஜைனரல்லாத இராஜா ஸ்ரேணிகன் இறந்த பாம்பைப் போட்டான். அதன் காரணமாய் அவரை அனேக எறும்புகள் கடித்தன. மூன்று நாள்கள் வரை மௌனமாக அசையாமல் இருந்தார். ஜைனதர்மி சம்யக்திருஷ்டி இராணி சேலினி இவ்விஷயம் அறிந்து அவள் காட்டிற்கு வந்து முனிகளின் இடரைக் களைந்தாள்.

4.இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் ஆசாரியர் சமந்தபத்திர சுவாமி கூறுகிறார். காட்டில் ஒரு பன்றி இரண்டு முனிவர்களுக்கு ஆவாசதானம் (பாதுகாப்பு) அளித்து அந்த முனிவர்களுக்கு கலக்கமாகிய துயரிலிருந்து காப்பாற்றியது. அவர்களின் சம்யம தர்மத்தைக் காப்பாற்றியதன் பயனாய் அந்த பன்றி ஸ்வர்க்கத்தில் பிறந்தது. இவை போன்றவை பல உள. இன்று நம்முடைய எல்லா சமூகமும் பக்தி பூர்வமாக முனிவர்களுக்கு ஆகாரத்திற்கும், சஞ்சரிப்பதற்கும் துணையாக இருந்து அவர்களுடைய சம்யம தர்மத்தைக் காப்பாற்றுகிறது. மற்றும் சமூகத்தில் அநேக தலைவர்களும், உப தலைவர்களும் பெருமைக்குரிய நம்முடைய தீர்த்த க்ஷேத்திரங்களையும், ஜைன கோயில்களையும் பாதுகாப்பதில் எப்பொழுதும் முயற்சியுடையவர்களாக இருக்கின்றனர்.

இதனால் இவர்கள் அனைவரும், இராஜா ஸ்ரேயாம்சரும், இராம, இலட்சுமணரும், இராணி சேலினியும், விலங்கு பன்றியும், மற்றும் சமூகத்தலைவர்களும், உப தலைவர்களும், தர்ம பாதுகாப்பாளர்கள் ஆவதால் அவர்கள் நம் ஆராதனைக்கும், பூஜைக்கும் உரியவர்கள் ஆவார்களா என்ன? இவர்கள் எல்லோருக்கும் மூர்த்தி வைத்து பூஜை செய்ய கொண்டிருப்போமானால் நேரம் முழுவதும் இதிலேயே கழியும். நூற்றுக்கணக்கானவர்களுக்கு முழுமையாக பூஜை செய்ய முடியுமா? பிறகு தீர்த்தங்கர பகவான் மற்றும் உண்மையான தேவ, சாஸ்திர, குருவிற்கு பூஜை செய்வதற்கு நேரம் கிடைக்காது. நம் ஜைன சாஸ்த்திரத்தில் தியாகமய தர்ம – புனித குணங்களுக்கே பூஜை சொல்லப்பட்டிருக்கிறது. தசலட்சண தர்மம் மற்றும் மும்மணி தர்மம் ஆகிய இவைகளுக்கே பூஜையில் இடம் அளித்திருக்கிறார்கள். பஞ்ச பரமேஷ்டிகளும், உண்மையான தேவ, சாஸ்திர, நிர்க்ரந்த குருவிற்கு நம்முடைய பூஜை வணக்கம். அவர்களே வணக்கத்திற்குரியவர்கள்.

24. நம்முடைய ஜினாலயங்களில் பஞ்ச பரமேஷ்டிகள் பூஜைக்குரியவர்கள், மற்ற தேவாதி தேவர்கள் பூஜைக்குரியவர்கள் அல்லர். இது ஏன்?

தர்மத்தின் அடிப்படையில் ஆழ்ந்து நோக்கினால், சிந்தித்தால் நமது இந்த சந்தேகம் விரைவிலேயே விலகிவிடும். பிறவிச் சுழற்சியில் விரக்தி கொண்ட சாதுக்கள் ஒருபுறம் இருக்கட்டும். தியாகியும் வெள்ளாடை அணிந்த பிரம்மசரிகள் வீட்டைத் துறந்து ஆசைகளைத் தியாகம் செய்து வண்ண ஆடைகளைத் துறந்து அலங்காரங்களை நீக்கியவர் இத்தகையோர் ஒருபுறம். மறுபுறம் தேவகதி தேவர்கள் அல்லது தேவியர். யார் உலக வைபவத்தில் (பற்று, விருப்பு, வெறுப்புகளோடு கூடியவர்) கணவன், மனைவி என்னும் பந்தத்தோடு இருக்கிறார்களோ, யார் ஆசைகளை விடவில்லையோ எவர்களிடத்தில் பிரம்மசர்ய விரதத்திற்கு எந்த உறுதியும் இல்லையோ, யார் பல வண்ண ஆடைகளை அணிகளோடு – அலங்காரங்களோடு இருக்கிறார்களோ அவர்கள் யார்? அவர்கள் அசம்யமி (புலனடக்கமிலார்) யாவர். எனவே பிரம்மசாரி – தேவ தேவியர்களைவிடத் தியாகி பிரம்மசாரி பெரியவராகிறார். இப்படிப்பட்ட – தேவ

தேவியர்களைக் காட்டிலும் உயர்ந்த பிரம்மச்சாரிகளுக்கு நீங்கள் எப்பொழுதும் அஷ்ட திரவ்வியத்தால் பூஜை, அபிஷேகம், ஆரத்தி, நமோஸ்து இவை செய்வதில்லை. இப்படி இருக்கையில் தியாகி பிரம்மச்சாரிகளை விட சிறிய தேவ தேவியருக்குப் பூஜை முதலானவை எவ்வாறு செய்ய முடியும். அதாவது செய்யக் கூடாது. பூஜை செய்தால் பூஜ்யபாத ஆசாரியரும், அகளங்க தேவரும் இதை மித்யாத்துவச் செயல் என்று கூறுகிறார்கள். அத்தகைய பூஜையால் மித்யாத்துவ தோஷம் ஏற்படுகிறது. (குணத்தை நோக்கி) தேவ தேவியரை விட பெரியவர் பிரம்மசாரி சுல்லக், ஐலகர் இவர்களுக்குக் கூட பூஜை அபிஷேகம் செய்ய வேண்டிவரும். ஜினவாணியில் சொல்லப்பட்ட ''பஞ்ச குரூணாம் வந்தே வீதராகாய நம:'' ''சத்தாரி சரணம் பவ்வஜ்ஜாமி'' ஆகிய தொடர்கள் பொய்யாகிவிடும். ஆகையால் நாம் இந்த ணமோக்கார மந்திர வீதராகாய நம: சத்தாரி மங்கலம், பாட வடிவ வாக்கியத்தின் மீது சிரத்தை (நன் நம்பிக்கை) கொண்டு இந்த பஞ்ச பரமேஷ்டிகளுக்கு பூஜை, அர்ச்சனை செய்ய வேண்டும். சம்யக்திருஷ்டி (நற்காட்சியாளராக) யாக வேண்டும்.

25. ஜைன சாசனத்தில் தேவ, தேவியர் இருப்பதை ஏற்பது இல்லையா?

அப்படி இல்லை. ஜைன சாசனத்தில் தேவ தேவியர்கள் இருப்பதைக் காண்கிறோம். ஆனால் அவர்களை ஆராதனைக்கு உரியவர்களாக ஏற்பதில்லை. ஜைன சாசனம் தேவ தேவியர்கள் பஞ்ச பரமேஷ்டிகளுடைய பக்தர்கள் என்றும் சேவகர் என்றும் மதிக்கிறது. அவர்களை அவர்களுடைய நற்காரியங்களுக்காகப் புகழக் கூடச் செய்கிறது.

26. உண்மையான வீதராக தேவர்களைத் தவிர மற்ற தேவகதியில் இருக்கும் தேவர்களுக்குப் பூஜை முதலியன செய்யக்கூடாது என்பது புரிந்து விட்டது. ஆனால், நம்முடைய விசேட மண்டல, விதான, பஞ்ச கல்யாண காரியங்களில் கலந்து கொள்வதற்காக ஆகம வடிவோடு ஆயுதங்கள், அஸ்திரங்கள் முதலியன இல்லாத சௌதர்ம இந்திரன் போன்ற இப்படிப்பட்ட தேவர்களை அழைக்கலாமா என்ன?

அழைக்கலாம். இப்படிப்பட்ட விசேஷ, மண்டல, விதானம், பஞ்ச கல்யாணம் போன்ற வைபவ நேரங்களில் அவர்களை அவசியம் அழைக்கலாம்.

27. அர்க்யம் யாருக்கு ஏன் அளிக்கப்படுகிறது?

பஞ்சபரமேஷ்டிகளுக்கு அர்க்யம் சமர்ப்பிக்கப்படுகிறது. பஞ்சபரமேஷ்டி வடிவ அனர்க்ய பதத்தினைப் பெறும் பாவனைக்காக அர்க்யம் அளிக்கப்படுகிறது.

28. யக்ஷன் முதலிய தேவர்களுக்கும், குகுரு ஆகியவர்களுக்கும் பூஜை செய்யவில்லையானால் நம்முடைய பாதுகாப்பு எப்படி உண்டாக முடியும்?

ஆசாரிய சுவாமி கார்த்திகேய முனிவர் எழுதிய கார்த்திகேனுப்பிரேக்ஷா சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

ஐஇ தேவோ விய ரக்கயி, மந்தோ, தந்தோ, ய கேத்தபாலோ ய ।
மியமாணம் பி மணுஸ்ஸம் தோ மணுயா அக்கயா ஹோந்தி ॥ 25 ॥
ஏவம் பேச்சத்தோ விஹு கஹ – பூய – பிஸாய – ஜோயிணி ஜக்கம் ।
ஸரணம் மண்ணாஇ மூடோ, சுகாட் மிச்சத்த பாவாதோ ॥ 27 ॥

பொருள் : ஒரு வேளை இறக்கும் மனிதனை க்ஷேத்ரபாலர் முதலிய தேவர்களும், மந்திர தந்திரங்களும் காப்பாற்றுவதில் சாமர்த்தியம் உடையவர்களாக இருந்தால் இந்த மனிதன் அழிவில்லாமல் நிலையாக நின்று விடுவான். இவ்விதமாக சம்பூர்ண சம்சாரத்தில் உலகம் முழுவதிலும் அடைக்கலம் இன்மையைப் பார்த்து இந்த பிராணி தீவிர மித்யாத்வ பாவத்தால் பூதம்,

பிசாசம், யோகினி, சண்டிகா, யக்ஷர் முதலியவர்களை அடைக்கலமாக மதிக்கிறது. யக்ஷர் முதலானவர்களை சரணாக மதிப்பது அடைக்கலமாக நினைப்பது தீவிர மித்யாத்வ பாவமாகும்.

ஆசாரிய பூஜ்ய பாத ஸ்வாமி சமாதி பக்தியில் கூறுகிறார்.

நஹி த்ராதா, நஹி த்ராதா, நஹி த்ராதா, ஜெகத்ரையே ।
வீதராகாத் பரோ தேவோ, ந பூதோ ந பவிஷ்யதி ॥ 26 ॥

மூவுலங்களிலும் ஜீவனைக் காப்பவர் வீதராகத் தேவரைவிட சிறந்த வேறு எந்த தேவரும் இலர். இருக்க முடியாது. ஆகையால் உண்மையான தேவ, சாஸ்திர, குருவிற்குப் பூஜை செய்வதால் புண்ணிய கர்மம் பந்தம் ஏற்படுகிறது. அதன் காரணமாய் நமக்குப் பாதுகாப்பு கிடைக்கும்.

29. பன்னெடுங்காலமாய் இந்த ஆசையுள்ள – விருப்பு வெறுப்புள்ள தேவர்களுக்கு பூஜை நமஸ்காரம், பணிவு செய்து வந்த வழக்கத்தை விடுவதில் அச்சம் ஏற்படுகிறது. நம் அச்சத்தைக் களைய ஆகம சான்று ஏதாவது உண்டா?

ஆம். அவசியம் இருக்கிறது. சராக தேவ தேவியர் முதலானவர்களுக்கு பூஜை முதலியவற்றினை விடுவதில் அச்சமிருப்பது அஞ்ஞானமாகும் அல்லது கர்ம சித்தாந்தத்தை அறியாதிருப்பதாகும். ஆசையுள்ள, விருப்பு வெறுப்புள்ள தேவர்களுக்கு பூஜை செய்வது பொய்நம்பிக்கையாகும். அந்த பொய் நம்பிக்கை கூட பாபமாகும். பாபத்தின் பலன் துன்பமாகும். மேலும் பற்று–விருப்பு–வெறுப்பற்ற பஞ்சபரமேஷ்டிகளின் பூஜை சம்யக்த்வம் (நன் நம்பிக்கை) ஆகும். சம்யக்த்வத்தினால் புண்ணியம் பெருகுகிறது. மற்றும் பாபங்கள் தடுக்கப்படுகின்றன. இதனால் தானாகவே குதேவர்களால் வரும் துன்பம் விலகி சம்யக்திருஷ்டி தேவர்களால் பாதுகாப்பும் கிடைக்கிறது. ஆதலால் ஆசாரிய சமந்தபத்ர சுவாமி இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் இவ்வாறு கூறுகிறார்.

பயாஷாஸ்நேஹ லோபாச்ச குதேவாகமலிங்கினாம் ।
ப்ரணாம் விநயம் சைவ ன குர்ய்யு : சுத்த த்ருஷ்டய : ॥ 30 ॥

பொருள் : நிர்மல நற்காட்சி ஜீவன் பயம், ஆசை, நட்பு, லோபம் இவற்றால் கூட குதேவர்களையும், குசாஸ்திரங்களையும், குகுருவையும் வணக்கம், பணிவு இவை செய்வதில்லை.

அவ்விநயம் ஆறும் அகன்றது நற்காட்சி செவ்விதினின் காப்பார் இடை(அ.செ.39)
நல்லறத்தின் தீர்ந்த வணக்கத்தை நல்லோர்கள் சொல்வர் அவிநயம் என்று. (அ.செ.40)
மிச்சை இலிங்கியர் நூல் தெய்வம் அவாவினோடு அச்சம் உலோபித்த்தோடு ஆறு (அ.செ.41)
இவ்வாறு நோக்கி வணங்கார் அவிநயம் எவ்வாறும் நீங்கல் அரிது (அ.செ.42)

30. இங்கே கோயில்களில் தேவகதியில் உள்ள தேவர்களுடைய வடிவம் செய்யப்பட்டுள்ளது. அவர்களுடைய வடிவம் ஆகமத்தின் கருத்துப்படி எவ்வாறு அமைய வேண்டும்?

ஜினேந்திர பகவானை பூஜிக்கும் தேவ தேவியர்களுக்கு பூஜை, ஆராதனை செய்வது மித்யாத்துவம். ஏனென்றால் அவர்கள் ஆசையுடையவர்களாகவும் புலனடக்கமில்லாதவராகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களை ஆகம வடிவுக்கு விரோதமான அழகற்ற உருவத்தில் அமைப்பது தேவர்களை அவமதிப்பது ஆகும். ஏனென்றால் அந்த தேவகதி தேவர்களை தேவாதி தேவ அரஹந்த பகவான், சாஸ்திரம், நிர்க்ருந்த குருவினுடைய சரணங்களில் விநயத்தோடு கீழே உட்கார்ந்து இருக்கிறார்கள். மேலும் அதிசயமான அழகுடையவர்களாகவும் இருக்கிறார்கள். எப்படி என்றால் ஆசாரியர் பூஜ்யபாதஸ்வாமி நந்தீஸ்வர பக்தியில் எழுதுகிறார்.

கடக – கடி – சூத்ர – குண்டல –கேயூர ப்ரப்ருதி பூஷிதாங்கௌ ஸ்வங்கௌ ।
யக்ஷௌ கமல தலாக்ஷௌ பரினிக்ஷிபதா : ஸலில சாமர யுகலம் ॥ 17 ॥

பொருள் : கடகம் முதலிய பலவிதமான அலங்காரங்களுடன் அலங்கரிக்கப்பட்டு அழகான உடலை

உடைய, தாமரை இதழ்களைப் போன்று யாருடைய இரு கண்களும் விசாலமாக விரிந்திருக்கிறதோ அப்படிப்பட்ட இரண்டு யக்ஷர்கள் பகவானின் இரு பக்கமும் சாமரை வீசிக்கொண்டிருக்கின்றனர். பிரதமானுயோகக் கிரந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சக்ரவர்த்தியினுடைய சரணங்களில் சேவை செய்வதற்காக நியமிக்கப்பட்ட 32 யக்ஷர்கள் சக்கரவர்த்திக்கு சாமரம் வீசுகிறார்கள். சக்கரவர்த்தியின் மனைவி முதலான 14 இரத்தினங்களுக்கு ஒவ்வொரு ஆயிரம் யக்ஷ தேவர்கள் பாதுகாவலாக இருக்கிறார்கள். இதனால் அந்த யக்ஷர் முதலான தேவர்கள் நற்காட்சியுடைய மனிதர்களை விடச் சிறியோர்களாக மதிக்கப்படுவதால் அவர்கள் வணக்கத்திற்கு உரியவர்கள் அல்லர்.

சிறப்புரை :ஜிநாலயத்தில் ஜினபகவானின் இருபக்கமும் சாமரைதாரிகளாக இரண்டு யக்ஷர்களும் மற்றும் ஜிநாலயத்தின் வெளியே வாயில் காப்போர்களாக தண்டதாரி தேவர்களும் இருப்பதில் தவறில்லை. பகவான் அருகில் சாமரதாரி தேவர்கள் செய்ய இடமில்லை என்றால் அவசியம் இரண்டு பக்கமும் சாமரை இருக்கும்படி செய்ய வேண்டும். ஏனெனில் சமவசரணத்தில் பகவானுக்கு மேலே 48 சாமரைதாரி தேவர்கள் நம் கண்களுக்கு புலப்படாமல் சாமரைகளை வீசிக்கொண்டு இருப்பர். தூரத்திலிருந்து நம் கண்களுக்கு வீசப்படும் சாமரைகள் மட்டுமே தெரியும். இதுபோலவே ஜிநாலயத்தில் சமவசரணம் அமைப்பதானால் முதலின் முனிராஜர்களின் சபையும், பிறகு சௌதர்மேந்திரன் முதலான தேவர்கள், சசிமுதலான தேவியர்கள் பகவானுக்கு பக்கத்தில் அல்லாமல், கீழே இருகை கூப்பி வணங்கும் முத்திரையில் அமைக்கலாம். ஆசீர்வாத முத்திரையுடன் அமைக்ககூடாது.

31. இன்று அநேக மக்கள் அஞ்ஞான வயப்பட்டு வீதராக தேவர்களுக்கு சமமாக ஆசை பாசமுள்ள தேவர்களுக்கு பூஜை செய்கிறார்கள். அவர்களுக்கு அஷ்டவிதார்ச்சனை அபிஷேகம், ஆரத்தி செய்கின்றனர். இத்தகைய மித்யாத்துவ (அறியாமை) செயலுக்கு என்ன பயன் கிட்டும்?

ஆசாரிய சோமதேவர் கூறுகிறார்.

தேவம் ஜகத்ரையீநேத்ரம், வியந்தராத்யாஸ்ச தேவதா: ।
சமம் பூஜா விதாநேஷு, பஸ்யன் தூரம் வ்ரஜேதத: ॥

பொருள் : மூவுலகங்களைப் பார்ப்பதற்காக கண்கள் வடிவுள்ள அரஹந்த தேவரையும், வியந்தர தேவர்களையும் யார் பூஜை, விதானத்தில் சமமாகப் பார்க்கிறார்களோ (மதிக்கிறார்களோ) அவர்கள் வெகுதூரம் கீழ்நிலைக்குப் போகிறார்கள். அதாவது நரகப் பாத்திரமாக ஆகிறார்கள்.

32. நம் ஜைன ஆகமத்தில் எத்தனை லிங்கம் (வேஷம்) சொல்லப்பட்டிருக்கிறது?

ஆசாரியர் குந்தகுந்த தேவர் அவரது தர்சனபாஹுடத்தில் கூறிஇருப்பதாவது:

“ஏகம் ஜினஸ்ய ரூபம், பீயம் உக்கிட்ட ஸாவயாணம் து ।
அவரட்டியாண தயியம், ச உத்தபுண லிங்கதம்ஸணம்ணத்தி ॥ 18 ॥

ஏகம் ஜினஸ்யரூபம்– ஒன்று ஜினேந்திர பகவானுடைய நிர்க்ரந்த வடிவமான நிர்வாண வேஷம், இரண்டாவது உக்கிட்டஸாவயாணம்–உயர்ந்த ஸ்ராவகர்கள் வடிவமான சுல்லக், ஐலக்கினுடையது. து–மற்றும், தயியர்–மூன்றாவது, அவரட்டியாணம்– தாழ்ந்த நிலையில் இருக்கும் ஆர்யிகை, சுல்லிகைகளின் வேஷம், இவைதவிர நான்காவதாக எந்த வேஷமும் (லிங்கமும்) கிடையாது.

சிறப்புரை: இந்த காதையில் ஆசாரிய குந்தகுந்தர் சுவாமி அவர்கள் சுவேதாம்பர சாதுக்கள் மற்றும் மடாதிபதி–பட்டாரகர் வேஷங்களை ஏற்பதற்கில்லை எனக் கூறப்பட்டிருக்கிறது. ஏனெனில்

அவர்கள் பரிக்ரஹ தியாகம் செய்திருந்தாலும், பரிகிரஹம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

33. நம் ஜைன சாசன முறைப்படி பூஜ்ய வடிவில் இலக்குமி சரஸ்வதி (வாணி) இவர்களுடைய வடிவம் எவ்வாறுள்ளது? இலக்குமியும் சரஸ்வதியும் பெண் வடிவத்தோடு – அலங்காரம் ஆடையோடு கூடி இருக்கிறார்களா? அல்லது ஆடையலங்கார மற்ற வீதராக குணங்களால் கூடியவர்களா?

நம் ஜைன ஆகமத்தில் முக்தியை அனந்த நான்மை வடிவ கேவல ஞானத்தை 'இலக்ஷ்மி' என்ற பெயரில் 'முக்தி இலட்சுமி' என்றழைக்கின்றனர். செல்வம், புகழ் இவைகளின் பொருளில் அல்ல. மேலும் பெண்ணையோ குறிப்பிடவில்லை. வீதராக குணத்தோடு கூடிய இப்படிப்பட்ட முக்தி மற்றும் அனந்த நான்மை வடிவ கேவல ஞான வடிவ வடிவை (இலக்குமியை) பூஜைக்குத் தகுதியுடையதாக மதிக்கிறார்கள்.

மற்றும் சரஸ்வதியையும்கூட ஜினவாணி (ஆகமம்) என்று அழைக்கின்றனர். தீர்த்தரங்கரர்கள் வாணி – சரஸ்வதி. சரஸ்வதி என்பது பெண்பால் சொல். உதாரண வடிவத்தில் 'மாதா' என்று அழைக்கிறோம் அதுபோல ஜைன தர்மத்தில் தீர்த்தங்கரர்களுடைய வாயிலிருந்த வெளிப்பட்ட அல்லது ஆசாரியர்களும் முனிவர்களும் சாஸ்திர வடிவத்தில் எழுதியுள்ள ஆகமம் ஜினவாணி – சரஸ்வதி (சாஸ்திரம்) ஆகும். அழகும் ஒப்பனைகளுடனும் கூடிய பெண் (மனித பரியாயம்) அல்ல ஏனென்றால் அந்த ஜினவாணியை (சாஸ்திரத்தை) முனிவர்கள் கூட பூஜைக்குத் தகுதியுடையதாகக் கருதுகின்றனர். இதனால் வீதராக குணங்களோடு இனைத்து செய்யும் கேவல ஞான ஜினவாணி பூஜைதான் சரஸ்வதி பூஜை என்று அழைக்கப்படுகிறது.

34. தர்மம் தொடர்பான குணங்களை ஒப்பிடும்பொழுது நம் ஜைன மனிதர்கள் பெரியவர்களா? அல்லது தேவகதியின் தேவர்கள் பெரியவர்களா?

பஞ்ச கல்யாணத்தில் தீக்ஷா கல்யாணத்தினுடைய ஒரு விசேஷ சம்பவம் இவ்வினாவிற்கு விடையாக நினைவு கொள்ளத்தக்கது. எப்பொழுது தீர்த்தங்கர இராஜகுமாரருக்கு உலகியலில் வைராக்கியம் உண்டாகிறதோ அப்பொழுது அவரை பல்லக்கில் உட்கார வைத்து காட்டிற்கு எடுத்துச் செல்ல ஏற்பாடுகள் நடக்கின்றன. அச்சமயத்தில் சௌதர்ம இந்திராதி தேவர்கள் சொர்க்கத்திலிருந்து கீழே இறங்கி வந்து மனிதர்களிடம் கூறுகிறார்கள். 'முதல் முதலில் தேவர்களாகிய நாங்கள் வைராக்கிய இராஜகுமாரருடைய பல்லக்கைத் தூக்கிச் செல்வோம்' என்றனர். அப்பொழுது மனிதர்கள் சொல்கிறார்கள், 'இல்லை முதலில் மனிதர்களாகிய நாங்கள் வைராக்கிய இராஜகுமாரருடைய பல்லக்கை எடுத்துச் செல்லும் சௌபாக்யத்தை நாங்களே பெறுவோம்' என்றனர். இவ்விதமாக அடிக்கடி கூறி தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் இடையில் சர்ச்சை ஏற்பட்டது. அதன் பிறகு எல்லோரும் இம்முடிவிற்கு வந்தார்கள். தேவர், மனிதர்கள் இவர்களில் யார் தர்ம குணங்களில் சிறந்தவர்களோ அவர்களே பல்லக்கை எடுத்துச் செல்லும் சௌபாக்கியத்தைப் பெறுவார்கள் என்னும் முடிவிற்கு வந்தனர். அப்பொழுது அங்கே தர்ம குணங்களைப் பற்றிய விவகாரம் ஆலோசிக்கப்பட்டு ஒப்பிட்டுப் பார்த்தார்கள்.

1. தேவகதியில் இருக்கும் தேவர்கள் சங்கல்பத்தோடு கூடி முழுமையாக ஐம்புல நுகர்வுகளைத் தியாகம் செய்ய முடியாது. ஆனால் மனிதர்கள் சங்கல்பத்துடன் முழுமையாக ஐம்புலன்களைத் தியாகம் செய்ய முடியும்.
2. தேவர்கள் முனிகளுக்கு அதிதி சம்விபாக விரத பூர்வமாக ஆகார தானம் கொடுக்க முடியாது. மனிதர்கள் முனிகளுக்கு அதிதி சம்விபாக விரத பூர்வமாக குற்றமற்ற ஆகாரத்தை அளிக்க முடிகிறது.
3. தேவர்கள் முனி பதவி, ஸ்ராவக பதவி வடிவ சம்யமத்தை ஏற்க முடியாது. மனிதர்கள் சிறந்த

முனி பதவியையும், ஸ்ராவக பதவியையும் ஏற்க முடியும்.

4. தேவர்கள் உத்தர சரீரத்தைக் கொண்டு – விக்ரியா சக்தியினால் மற்றொரு சரீரத்தைக் எடுத்துக் கொண்டு, கீழே மத்திய லோகத்தில் தர்ம காரியத்தில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக வருகிறார்கள். அவர்களுடைய மூல சரீரம் சொர்க்கத்திலேயே போகத்தில் ஆழ்ந்துகிடக்கும். மனிதர்கள் ஐம்புல நுகர்வுகளிலிருந்து விலகிய மூலசரீரத்திலேயே தர்மம் செய்ய தேவ, சாஸ்திர, குருக்களின் சரணத்தை அடைகிறார்கள்.
5. தேவகதி தேவர்களுக்கும் நிகழ் கால பவத்தில் முக்தி பெறுவதற்காக தகுதி கிடையாது. மனித கதியில் (புருஷன்) சதுர்த்த காலத்தில் அதே பவத்தில் முக்தி (நிர்வாணம்) அடைவதற்கு தகுதி இருக்கிறது.

இக்காரணங்களால் மனிதன் தர்ம குணங்களில் உயர்ந்தவன். இம்முடிவு ஏற்பட்ட பிறகு முதலில் மனிதர்கள் வைராக்கிய இராஜகுமார தீர்த்தங்கரருடைய பல்லக்கை எடுத்துச் செல்லும் சௌபாக்கியம் பெற்றனர். பிறகு சௌதர்ம இந்திரர் தேவர்களுக்குக் கிடைத்தது. இதனால் மனித பரியாயம் பெறும் அருமைத் தன்மையைக் கூறி பன்னிரு சிந்தனைகளில் நினைவு கூறப்படுகிறது.

நரகாயா கோ சுரபதி தரஸே, சோ துர்லப ப்ராணி.....।

அதாவது தேவர்கள் எப்பொழுதும் மனித பரியாயம் பெறுவதற்கு விரும்புகிறார்கள். ஆனால் இன்றைய பல அஞ்ஞானி மனிதர்கள் தேவ தேவியர்களாகப் பிறக்க ஆசைப்படுகிறார்கள். தேவ பரியாயத்தினுடைய வைபவ சுகங்களை அனுபவிக்க விரும்புகிறார்கள் என்பது மிக வியப்பான விஷயம்!

35. ஆசாரிய குந்தகுந்த தேவர் ராகி தேவர்களுக்கும், அசம்யமிகளுக்கும் வணக்கம், பூஜை செய்வது குறித்து என்ன கூறுகிறார்?

தர்சனபாகுடத்தில் ஆச்சார்ய ஸ்ரீ குந்தகுந்த தேவர் கூறகிறார்.

'அசஞ்சதம் ண வந்தே கந்த விஹீணோ வி சோ ண வந்திஜ்ஜ' ॥ 26 ॥

அசய்யமி வந்தனைக்குரியவர் அல்லர்; அவர் திகம்பர உருவத்தோடு இருந்தாலும் கூட. அதாவது முதல் குணஸ்தானத்திலிருந்து நான்காவது குணஸ்தானம் வரை இருக்கக்கூடிய எந்த அசம்யமி தேவர், மனிதர்களோ, அவர்கள் வந்தனைக்கு உரியர் அல்லர்.

மேலும் மோக்ஷ பாகுடத்தில் சொல்லப்படுகிறது.

ஸபராவேக்கம் லிங்கம் ராயி தேவம் அஸஞ்ஜதம் வந்தம ।
மண்ணாயி மிச்சாதிட்டி ண ஹு மண்ணயி சுத்த சம்மத்தி ॥ 93 ॥

அதாவது குகுரு, ராகிதேவர்கள், அசம்யயி இவர்களை யார் ஒருவன் வணக்கத்திற்கு உரியவர்கள் என நினைக்கிறானோ அவன் மித்யாதிருஷ்டி, தூய நற்காட்சியாளன் அல்லன். (தூய நற்காட்சியாளன் குகுரு, ராகிதேவர் ஆகியவர்களுக்கு வந்தனை செய்யமாட்டான்.)

36. ஜீவன்களுக்கு இவ்வுலகத்தில் தனம், புகழ் ஆகியவைகளை யார் அளிக்கிறார்? மேலும் ஜீவன்களுக்கு நன்மை, தீமை செய்பவர் யார்?

ஆசாரிய சுவாமி கார்த்திகேய முனிவர் கார்த்திகேயானுப்பிரேக்ஷா சாஸ்திரத்தில் கூறுகிறார்.

ணய கோவி தேத்தி லச்சி, ண கோவி ஜீவஸ்ய குணயம் உவயாரம்।
உவயாரம் அவயாரம், கம்மம் பி ஸுஹாஸுகம் குணதி ॥ 319॥
பத்தீய புஜ்ஜமாணோ, விந்தர தேவோ வி தேதி ஜதி லச்சீ।
தோ கிம் த்தம்மம் கீரதி ஏவம் சித்தேஹி ஸத்திட்டி ॥ 320 ॥

இந்த ஜீவன்களுக்கு தேவி தேவதா போன்றவர்கள் தனம், வைபவம். சம்பத்து எதுவும்

கொடுப்பது இல்லை. எந்த உபகாரமும் செய்வதும் இல்லை. நன்மை, தீமை முற்பிறவியில் செய்ய நல்ல, தீய வினைகளுக்கு ஏற்பக் கிடைக்கிறது. பக்தியுடன் வியந்தராதி தேவர்களை பூஜிப்பதால் அவர்கள் செல்வம், புகழ் போன்றவை அளித்தால், பிறகு அறம் செய்வதற்கு என்ன அவசியம் இருக்கிறது. இவ்வகையில் நற்காட்சியாளன் சிந்திக்கிறான். இவ்வாறு ஆசாரியர் அமிதகதி எழுதிய சாமாயிக பாடத்தில் கூட சொல்லப்பட்டிருக்கிறது.

ஸ்வயம் க்ருதம் கர்ம யதாத்மனா புரா, ஃபலம் ததீயம் லபதே சுபாசுபம்I
பரேண தத்தம் யதி லப்யதே ஸ்புடம், ஸ்வயம் க்ருதம், கர்ம நிரார்தகம் ததாII 30II

பொருள் : பிறவியில் உழலும் ஆன்மா முற்பிறவியில் எந்த சில கர்மங்களைச் செய்கிறதோ அதனுடைய நல்ல, தீய பலன் தானே வந்து அடைகிறது. மற்றவர்கள் மூலமாக கொடுக்கப்பட்ட கர்மத்தின் பயன் நமக்குக் கிடைப்பதாக இருந்தால் நம் மூலமாக செய்த கர்மம் பொருளற்றதாகப் போய்விடும்.

37. ஆகமத்தில் ஐந்து வகையான மித்யாத்வம் சொல்லப்பட்டிருக்கிறது. அவற்றின் பெயரும் பொருளும் சுருக்கமாகக் கூறுக.

1. ஏகாந்த மித்யாத்வம் : அனந்த தர்மாத்ம வஸ்துவில் ஏதாவது ஒரு பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்ளுதல், ஏழு நயங்களில் ஏதாவது ஒரு நயத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளல், ஏழு பங்கங்களில் ஏதாவது ஒரு பங்கத்தை மட்டும் ஏற்றல். எவ்வாறெனில். 1. வஸ்துவை ''நித்தியம்'' என்பதை ஒப்புக் கொள்வதில்லை. 2. ஏழு நயங்களில் நிச்சய நயத்தை மட்டும் ஏற்றுக் கொள்ளல். விவகார நயங்களை ஏற்காமை, அல்லது விவகாரத்தை மட்டும் ஏற்று மற்ற நிச்சயம் போன்ற நயங்களை ஏற்காமை. 3. ஏழு பங்கங்களில் பொருளின் அஸ்தி வடிவம் மட்டும் ஏற்றல், நாஸ்தி ஆகிய பிற வடிவங்களை ஏற்காமை. அல்லது நாஸ்தி என்பதை மட்டும் ஏற்றல், அஸ்தி போன்ற வடிவங்களை ஏற்காமை.
2. விபரீத மித்யாத்வம் : வஸ்து சொரூபத்தில் விபரீதமான சிரத்தை கொள்ளல். எதைப் போல வெனில், பற்றுடைய தேவர் குகுருவை நிர்க்ருந்த உண்மையான தேவர், குரு என்று மதித்தல். கேவலியை உணவு உண்பவராக அறிதல். பெண் பர்யாயத்தில் முக்தி உண்டு என நம்புதல்.
3. சம்சய மித்யாத்வம் : பொருளின் உண்மையான வடிவத்தில் ஐயம் கொள்ளல். ஸ்வர்க்காதி கதிகள் உண்டா, இல்லையா, முக்தி இருக்கிறதா, இல்லையா அறத்தின் இலட்சணம் அகிம்சையா (தயையா) இல்லையா? போன்றவை.
4. விநய மித்யாத்வம் : சத்தியம் அல்லது அசத்யம். அறம் அறியாது அல்லது உண்மை மற்றும் ராகத்துவேஷ தேவ, சாஸ்திர, குருவை அறியாது, ஆறு அனாயதனங்களிடத்தில் ஏதாவது ஒன்றில் விநயம் கொள்ளல் விநயம் அல்லது வைநயிக மித்யாத்வம் என்று கூறப்படுகிறது. எதைப் போல எனில் தேவகதியின் தேவர் யக்ஷன், யக்ஷனி போன்றவர் மேலும் பரிக்ரகுரு, ஆகியவர்களுக்கு ஆராதனை செய்தல்.
5. அஞ்ஞான மித்யாத்வம் : எந்த நம்பிக்கையில் நன்மை தீமையினுடைய விவேகம் சிறிதுகூட இல்லாமல் இருக்கிறதோ அத்தகைய நம்பிக்கைக்கு அஞ்ஞான மித்யாத்வம் என்று பெயர். பசுபலி (பசு இம்சை)யில் தர்மம் என நம்புதல். மரம், செடி, வாகனங்கள் (வண்டி, கார்) இவைகளில் பகவான் இருப்பதாகக் கற்பனை செய்தல் முதலானவை.

38. மூன்று காலங்களில், மூன்று உலகங்களில் சம்யத்வத்திற்குச் சமமான மங்கல வடிவமும் மித்யாத்வத்திற்குச் சமமான அமங்கல வடிவமுமான வேறு ஏதாவது மற்ற பொருள் உண்டா என்ன?

இல்லை. இரத்ன கரண்டகஸ்ராகவகாசாரத்தில் ஆசாரியர் சமந்தபத்ரர் கூறுகிறார்.

ந ஸம்யக்த்வஸமம் கிஞ்சித்த்ரைகால்யே த்ரிஜகத்யபி ।
ஸ்ரேயோSஸ்ரேயஷ்ச மித்யாத்வசமம் நான்யத்தனூப்ருதாம் ॥ 34 ॥

பொருள் : பிராணிகளுக்கு மூன்று காலங்களிலும் மூவுலகங்களிலும் கூட நற்காட்சிக்கு சமமான மங்கல வடிவமும், மித்யாத்துவத்திற்குச் சமமான அமங்கல வடிவமும் போல வேறு எந்த பொருளும் இல்லை.

காட்சியோடு ஒப்பதுயாம் காணோம் வையத்து மாட்சி உயைது உயிர்க்கு. (அ.செ.46)

39. மித்யாத்வ வடிவ பழைய பழக்கத்தை விடாமல், நற்காட்சி பெறாமல், ஜீவன்களுக்கு நல்லறிவும், நல்லொழுக்கும் கிடைக்குமா? என்ன?

கிடைக்காது : இரத்னகரண்டாக ஸ்ராககாசாரத்தில் இவ்வாறு சொல்லப்படுகிறது.

வித்யாவிருத்தஸ்ய ஸம்பூதி ஸ்திதிவிருத்திபலோதயா: ।
ந ஸந்த்யஸதி ஸம்யக்த்வே பீஜாபாவே தரோரிவ ॥ 32 ॥

பொருள் :விதையில்லாமல் மரமும் இல்லை. அதுபோல சம்யக்துவம் இல்லாமல் நல்லறிவும், நல்லொழுக்கமும் உண்டாவது (ஸ்திதி நிலையும், வளர்ச்சியும், பயனும் கிடைப்பது இல்லை) இல்லை, நற்காட்சி இன்றி பதினோரு அங்கம், ஒன்பது பூர்வங்களுடைய விரிந்த அறிவும் கூட, தீயொழுக்கம் என்றே கூறப்படுகிறது. இப்படிப்பட்ட பொய்யறிவும், பொய்மை ஒழுக்கமும் இந்த ஜீவன் அனந்தம் முறை பெற்றும் இருக்கிறது. ஆனால் அதன் மூலம் முக்தி வடிவ பதவியைப் பெற முடியவில்லை.

நற்காட்சி இல்லார் உணர்வும் ஒழுக்கமும் ஒற்கா ஒசிந்து கெடும் (அ.செ.44)

அச்சிலேல் பண்டியும் இல்லை சுவரிலேல் சித்திரம் இல்லதே போன்று. (அ.செ.45)

40. மித்யாத்வ வடிவ பழக்கம் அல்லது மூடம் எவ்வாறு வருகிறது? பயனுள்ள ஒரு எடுத்துக்காட்டும் தருக.

மித்யாவடிவ பழக்கம் அல்லது மூடம் தொடர்பான ஒரு உதாரணம் இது. ஒரு கிராமத்தில் ஜைனரல்லாத சில பெண்கள் ஒருவிசேட நாளில் தங்கள் தலைமைப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு ஒரு குயவனின் வீட்டின் அருகில் உள்ள ஒரு மரத்திற்குப் பூஜை செய்ய சில பொருள்களைத் தங்கள் தங்கள் கூடைகளில் எடுத்துக் கொண்டு வந்து குழுமினர். தலைமைப் பெண் செய்வதைப் போலவே அனைத்துப் பெண்களும் மரத்திற்குப் பூஜை செய்தனர். அம் மித்யாத்வ பூஜைச் செயல்கள் முடிந்த பிறகு எல்லாப் பெண்களும் திரும்பி வந்து கொண்டிருந்தனர். வழியில் குயவனின் ஒரு கழுதை வந்து நின்று கொண்டிருந்தது. இப்படிப் பட்ட நிலையில் முதலில் சென்ற தலைமைப் பெண் அக்கழுதையைப் பாதையிலிருந்து விரட்ட அந்த கழுதையின் மேல் கையை வைத்து உற்சாகத்தில் அதன் சில முடிகளைப் பறித்தாள். அவளுடைய இந்த செயல் அவளுக்குப் பின்னாலிருக்கும் எல்லாப் பெண்களும் பார்த்தார்கள். தலைமைப் பெண் பூஜை சார்பான செயல்தான் அவள் செய்தாள் என நினைத்தனர். அவர்கள் எல்லோரும் கூட கழுதையின் முடியைப் பறித்தனர். சிறிது நேரத்தில் அந்த கழுதை முடிகள் இல்லாமல் யாவும் பறிக்கப்பட்டு விட்டது.

பிறகு எல்லாப் பெண்களும் தங்கள் வீடு சென்றனர். ஒரு பெண்ணின் கணவன் ''இவ்வளவு நேரம் எங்கே சென்றிருந்தாய்'' எனக் கேட்டான், அதற்கு அவள் தோழிகளோடு பூஜை செய்யச் சென்றதைக் கூறினாள். மரத்திற்குப் பூஜை செய்யச் சென்றதைக் கூறினாள். மரத்திற்குப் பூஜை

செய்ததையும் கூறினாள். பூஜை எவ்வாறு நடந்தது என்பதை அவன் கேட்டான். அவள் சொன்னாள் தலைமைப் பெண் செய்வதைப் போலவே மற்ற பெண்கள் செய்ததையும் கூறினாள். நீ கூடையில் என்னென்ன கொண்டுவந்திருக்கிறாய் என்று அவன் கேட்டான். இதோ பாருங்கள் இது கழுதையின் முடி என்றாள். அவன் வியப்புடன் கேட்டான். பூஜையின் போது கழுதையின் முடியைப் பறிக்க என்ன அவசியம் உண்டாயிற்று என்றான். இம்மூடப் பழக்கம் எங்கிருந்து வந்தது என்றான்? அவள் சொன்னாள் எனக்கு ஒன்றும் தெரியாது என் முன்னால் இருந்த தோழி என்ன செய்தாளோ அதையே நானும் செய்தேன். நானும் அவ்வகையில் இம்முடிகளையும் பறித்தேன் என்றாள். அவன் முடி பறித்த அவள் தோழியை ஏன் பறித்தாள் என்று கேள் என்றான். அவள் அவ்வாறே தன் முன் உதாரணமான தோழியிடம் கேட்டாள். அவள் சொன்னாள். தனக்கும் காரணம் தெரியாது, தன்முன் இருந்த தோழி செய்ததைப் பார்த்து நானும் செய்தேன் என்றாள். இவ்விதமாக யாருக்குமே தெரியவில்லை.

இறுதியில் தலைமைப் பெண்ணிடம் இது பற்றி கேட்கப்பட்டது. மற்ற பெண்களைப் பார்த்து நீங்கள் எல்லோரும் கழுதையின் முடியைப் பறித்தீர்களா என்ன எனக் கேட்டாள். ஆமாம் என்றனர். தலைமைப் பெண் வியப்படைந்தாள். தான் வழியில் இருந்த கழுதையை விரட்ட முயன்றேன். அப்போது வேடிக்கையாக அதன் சில முடிகளைப் பறித்தேன். ஆனால் எனக்குப் பின்னால் வந்த எல்லோரும் கழுதையின் முடியைப் பறிப்பார்கள் என்பதை எண்ணவில்லை. கழுதை முடியே இல்லாமல் போய்விட்டதே என்றாள்.

சகோதரனே பார். பார்த்துக் கொண்டிருக்கும்போதே யோசிக்காமல் அறிந்து கொள்ளாமல் செய்த செயலால் கழுதை முடியில்லாமல் போய்விட்டது. ஆசை, வெறுப்பு கொண்டுள்ள தேவர்களுக்கும் அல்லது மரங்களுக்கும் பூஜை முதலானவை செய்யும் செயல்கள் மித்யாத்துவமாகும். பழைய பழக்கம் அல்லது மூடத் தன்மையாகும். இவற்றை அறிந்து விட்டு விடுபவர்கள் தான் உண்மையான அமூடத் திருஷ்டியின் அங்கத்தை ஏற்ற நற்காட்சியாளர் என்று அழைக்கப்படுகிறார்.

41. எவன், உடல், செல்வம், வைபவம் ஆகிய புற்கலங்களை ஆன்மாவின் வடிவமாக நினைக்கிறாரோ அவனை நற்காட்சியாளன் என்று கூறுலாமா?

கூடாது. ஏனென்றால் நற்காட்சியுடையவன் ஆகம நம்பிக்கையின் அடிப்படையில் ஜீவ புத்கலம் ஆகிய ஆறு திரவியங்களையும் மற்றும் ஜீவ அஜீவன் முதலிய ஏழு தத்துவங்களையும் உண்மையான நம்பிக்கையில் அறிகிறான். அதனால் அவன் உடல், பொருள், வைபவம் ஆகிய புற்கலங்களுடைய நிலைப்புத் தன்மை ஜீவனிடத்திலிருந்து தனித் தனியானது என்று அறிகிறான்.

42. 'க்ரூஹீத்' மித்யாத்வம் அல்லது 'அக்ரூஹீத்' மித்யாத்வம் என்று எதனைக் கூறுகிறோம்?

எந்த ஜீவன் இந்த பவத்தில் சில சேர்க்கையின் காரணமாக சம்சார உலக காரியங்களில் ஈடுபட்ட, குதேவ, குகுரு ஆகியவர்களை வணங்கும் மித்யாத்துவத்தை ஏற்றுக் கொள்கிறானோ அவனை 'க்ரூஹீத்' மித்யாத்வி என்று சொல்கிறோம். எந்த ஜீவனுக்கு அநாதிகாலமாகவே உடல், செல்வம், வைபவம் ஆகியவற்றை ஆத்மா வடிவமாக மதிக்கும் மித்யாத்துவம் தொடர்ந்து வருகிறதோ, அதை 'அக்ரூஹீத்' மித்யாத்வம் என்று கூறுகிறோம்.

43. தூய நற்காட்சி கிடைக்க, விலக்க வேண்டிய சம்யக்த்துவத்தின் 25 குற்றங்களின் பெயர்களைக் கூறுக.

நற்காட்சியினுடைய 25 குற்றங்கள்: மும்மூடங்கள்: தேவ மூடம், குரு மூடம், லோக மூடம். ஆறு அனாயதனங்கள்: குதேவ, குருரு, குசாஸ்திரம், குதேவசேவை, குகுருசேவை,

குசாஸ்திரசேவை. எட்டு குற்றங்கள்: ஐயம், ஆசை, விசிகித்சா, மூடதிருஷ்டி, அனுபகூஹன், அஸ்திதி கரணம், அவாத்ஸல்யா, அபிரபாவனா. எட்டு மதங்கள் (கெர்வங்கள் அல்லது செருக்குகள்): ஞானமதம், பூஜாமதம், குலமதம், ஜாதி மதம், பலமதம், ரித்திமதம், தபமதம் அழகுமதம். இவ்விருபத்தைந்து குற்றங்களை விலக்க தூய நற்காட்சி கிடைக்கிறது.

44. நற்காட்சி பெற ஜீவன்களுக்கு ஏதாவது ஒரு கதி அல்லது கோத்தரத்தினுடைய கட்டு தேவையா?

இல்லை, அப்படி எந்த கட்டும் தேவையில்லை. நற்காட்சியைப் பெற நாற்கதி ஜீவன்களுக்கும் எந்த உயர்ந்த அல்லது நீச்ச கோத்திரத்தில் தோன்றியுள்ளவர்க்கும் கிடைக்க முடியும். (உண்மையான அறத்தில் நம்பிக்கைக் கொண்டிருத்தலே அவசியத் தேவையாகும்.)

45. நற்காட்சி பெற நாற்கதி ஜீவன்களுக்கு கூடி எப்படிப்பட்ட ஜீவனுக்கு ஏற்பட முடியும் அல்லது நற்காட்சியை அடையத் தகுதி எந்த ஜீவனக்கு இருக்கிறது?

நாற்கதியிலும் உள்ள சஞ்ஞி பஞ்சேந்திரியங்களில், பர்யாப்தி, விசுத்தி தூய்மையுடன் கூடிய விழிப்புணர்வுகள் நல்ல உபயோகத்துடன் கூடி இருக்கும் பவ்விய ஜீவன்தான் நற்காட்சியைப் பெறமுடியும்.

46. தகுதியுள்ள மனிதர்களுக்கு பஞ்சம காலத்தில் ஜென்மம் எடுத்த பிறகு எத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு நற்காட்சியின் உற்பத்தி ஏற்பட முடியும்?

தகுதியுள்ள மனிதர்களுக்கு பஞ்சம காலத்தில் ஜென்மம் எடுத்த பிறகு, எட்டு ஆண்டு அந்தர் முகூர்த்த காலத்திற்குப்பிறகு நற்காட்சி உண்டாக முடியும்.

47. இப் பஞ்சமகாலத்தில் எந்த ஜீவனாவது நற்காட்சியோடு பிறவி எடுக்க முடியாதா என்ன?

இயலாது. இந்த பஞ்சம காலத்தில் எவ்வளவு ஜீவன் பிறவி எடுக்கின்றனவோ அவை யாவும் மித்தயாத்வத்தோடேதான் ஜென்மம் எடுக்கின்றன. இதனால் பஞ்சமகாலத்தில் பிறந்துள்ள ஜீவன்களுக்கு பிறந்த நாள் கொண்டாடுவதனால் மித்யாத்துவ தோஷம் உண்டாகிறது.

48. நற்காட்சிக்கு சாதாரணமாக எத்தனை வேறுபாடுகள் இருக்கின்றன? அவைகளின் இலட்சணத்தைக் கூறுக.

நற்காட்சி சாதாரணமாக மூன்று வகைப்படும். 1. உபசமசம்யக்தர்சனம் (உதயத்திற்கு வராமல் தடுத்தல்), 2. க்ஷயோபசம சம்யக்தர்சனம் (தணிவழிவு செய்தல்), 3. க்ஷாயிக சம்யக்தர்சனம் (அறவே கெடுத்தல்).

உபசம சம்யக்தர்சனம் : அனாதி மித்யாதிருஷ்டியினுடைய சாரித்திர மோகனீயம் சம்பந்தமான அனந்தானுபந்தி கஷாயத்தினுடைய குரோதம், மானம், மாயை, லோபம் இந்த நான்கும், தர்சன மோகனீயம் சம்பந்தமான மித்யாத்வ ப்ரக்ருதி. இவ்வைந்து ப்ரக்ருதியும் இவற்றின் உபசம தணிவினால், மேலும் சாதி மித்யாதிருஷ்டியினுடைய அனந்தானுபந்தி குரோதம், மானம், மாயை, லோபம், மித்யாத்வம், சம்யக்மித்யாத்துவம், மற்றும் சம்யக்துவ ப்ரக்ருதிகளுடைய இந்த ஏழும் உபசம தணிவில் எந்த சம்யக்தர்சனம் உண்டாகிறதோ அதை உபசம சம்யக்தர்சனம் என்று கூறுகிறோம்.

க்ஷயோபசம சம்யக்தர்சனம்: மித்யாத்வம், சம்யக்மித்யாத்வம், அனந்தானுபந்தி சம்பந்தமான குரோதம், மானம், மாயை, லோபம், இந்த ஆறு ஸர்வகாதி ப்ரக்ருதியும் நிகழ்காலத்தில் உதயத்தில் வரக்கூடியதின் உதயமில்லா தடையும். எதிர்காலத்தில் உதயத்திற்கு வரக்கூடியதை அந்நிலையில் நிறுத்தும் தணிவும், மேலும் சம்யக்த்வ பெயரையுடைய தேசகாதி ப்ரக்ருதியினுடைய உதயத்தில் இருக்கும் போது எந்த சம்யக்தர்சனம் உண்டாகிறதோ அதை க்ஷயோபசம சம்யக்த்வம் என்றழைக்கிறோம். (இதனுடைய மறுபெயர் வேதக சம்யக்தர்சனம் என்பது).

க்ஷாயிக சம்யக்தர்சனம்: மித்யாத்தவம், சம்யக்மித்யாத்வம், சம்யக்த்வ ப்ரக்ருதி, அனந்தானுபந்தி சம்பந்தமான குரோதம், மானம், மாயை, லோபம் இந்த ஏழு ப்ரக்ருதி முற்றும் நீங்குவதால் எந்த சம்யக்தர்சனம் ஏற்படுகிறதோ அதை க்ஷாயிக சமயக்தர்சனம் என்று கூறுகிறோம்.

49. உபஸமம், க்ஷயோபஸமம், க்ஷாயிகம் இம்மூன்று சம்யக்தர்சனத்தில் இன்று (பரத க்ஷேத்திரத்தில்) என்னென்ன சம்யத்தர்சனங்கள் உண்டாக முடியும்?

இன்று நிகழ் காலத்தில் (ஐந்தாம் காலத்தில்) இங்கே க்ஷாயிக சம்யக்தர்சனத்தைத் தவிர உபஸமம், (பிரதம உபஸம) க்ஷயோஸமம் இந்த இரண்டு சம்யக்தர்சனங்கள் ஏற்பட முடியும்.

50. ஐந்தாம் காலத்தில் இங்கே க்ஷாயிக சம்யக்தர்சனத்தினுடைய உற்பத்தி ஏன் உண்டாக முடியாது?

க்ஷாயிக சம்யக் தர்சனத்தினுடைய உற்பத்தி கேவலி, சுருத கேவலிகளுடைய பாதங்களின் முன்னே உண்டாகிறது. ஆனால் இன்றோ (ஐந்தாம் காலத்தில்) இங்கே கேவலி, சுருத கேவலிகள் (சத்பாவம்) இல்லை. இதனால் இன்று இங்கே ஜீவன்களுக்கு க்ஷாயிக சம்யக்தர்சனம் கிடைப்பதில்லை.

51. க்ஷாயிக சம்யக்தர்சனத்தினுடைய சிறப்பு என்ன?

உபஸம சம்யக்தர்சனமும், க்ஷயோபசம சம்யக்தர்சனமும் அனேக முறை உண்டாகி நீங்கியிருக்கிறது. ஆனால் க்ஷாயிக சம்யக்தர்சனம் ஒருமுறை ஏற்பட்டால் எப்போதும் அது நீங்குவது இல்லை. க்ஷாயிக சம்யத்திருஷ்டி அதேபவத்தில் முக்திக்குச் செல்கிறான். அல்லது மூன்றாவது பவத்தில் அல்லது நான்காவது பவத்தில் அவசியம் முக்தி பெறுகிறான். நான்காம் பவத்திற்கு அதிகமாக உலகத்தில் இருப்பது இல்லை. எந்த க்ஷாயிக சம்யத்திருஷ்டிக்கு ஆயுள் பந்தம் (யாருக்கு சம்யக்தர்சனம் ஏற்படுவதற்கு முன்பே அடுத்த பவத்தினுடைய ஆயு பந்தம் ஏற்பட்டதோ) உண்டாகி இருந்தால் (முதல்) நரகத்திற்குச் செல்கிறான். அல்லது தேவகதியில் பிறக்கிறான். அவன் அங்கிருந்து மனிதனாகி முக்தி செல்கிறான். இதனால் அவன் மூன்றாம் பவத்தில் முக்தி பெறுகிறான். ஆயுள்பந்தம் போகபூமியில் மனிதர்களாகவோ விலங்குகளாகவோ க்ஷாயிக சம்யக் திருஷ்டியாகும் முன் கட்டியிருந்தால் அவ்வாறு பிறக்கிறார்கள். அவர்கள் அங்கிருந்து தேவகதிக்குச் செல்கிறார்கள். அங்கிருந்து மனிதராகப் பிறந்து முக்தி அடைகின்றனர். இவ்விதமாக அவர்கள் நான்காவது பவத்தில் முக்தி அடைகின்றனர்.

விசேஷம்: நான்கு கதி சம்பந்தமாக ஆயுள்பந்தம் ஏற்பட்ட பிறகு சம்யக்தர்சனம் ஏற்படக் கூடும். அப்படியானால் சம்யக்திருஷ்டி நான்கு கதிகளிலும் பிறப்பு ஏற்படக்கூடும். ஆனால் இது நியமம். சம்யக்துவம் உண்டான பிறகு ஆயுள் கட்டினால் மனித, விலங்கு கதியில் உள்ளவர்களுக்கு தேவ ஆயுள் பந்தம் தான் ஏற்படும். நரகத்தில் உள்ளவர்களும், தேவர்களும் மனித ஆயுள் பந்தம் தான் கட்டுவர்.

52. குந்தகுந்தாசாரியர் எழுதிய நியமசார கிரந்தத்தின்படி சம்யத்தர்சனத்தைப் பெறுவதற்கு அவசியமான நிமித்தங்கள் யாவை?

ஸம்மத்தஸ்ஸ நிமித்தம், ஜிண சுத்தம் தஸ்ஸ ஜாணயா புரிசா ।
அந்தரஹேஉ பணிதா, தம்ஸணமோஹஸ்ஸ கயபஹூதீ ॥ 53 ॥

பொருள்: சம்யக்தர்சனத்தினுடைய வெளி நிமித்தம் ஜிண–அதாவது ஜினேந்திர பகவான். சுத்தம்–அதாவது சாஸ்திரம். தஸ்ஸ ஜாணயா புரிசா அதாவது சாஸ்திரத்தை அறிந்த நிர்க்ருந்த குருக்கள். மேலும் அந்தரங்க நிமித்தம். தர்சன மோகனீயத்தின் தணிவு. உபஸமம் அல்லது க்ஷயோப ஸமம் ஏற்படுதல்.

சர்வார்த்தசித்தி கிரந்தத்தின்படி விலங்கு, மனிதர்களிடத்தில் முற்பவத்தின் ஜாதிஸ்மரணமும், அறம் கேட்டலும், ஜினபிம்ப தர்சனமும் இம் மூன்றும் சம்யக்தர்சன உற்பத்தியில் நிமித்த காரணங்களாகச் சொல்லப்படுகின்றன.

53. நற்காட்சியாளனுடைய நான்கு முக்கிய குணங்கள் என்ன?

நற்காட்சியாளனுடைய நான்கு முக்கிய குணங்கள் பிரசமம், சம்வேகம், அனுக்கம்பா, ஆஸ்திக்யம்.

- **பிரசமம்:** கோபம் முதலான கஷாயங்களும் ஆசை முதலான உணர்வுகளின் தீவிரத் தன்மையும் ஏற்படாமை பிரசம குணமாகும்.
- **சம்வேகம்:** கர்ம பந்தத்தின் காரண 'வடிவ பிறவிசுழற்சியில்' எப்பொழுதும் அச்சம் ஏற்படுதல் சம்வேக குணமாகும்.
- **அனுகம்பா:** எல்லா ஜீவன்களிடத்தும் தயாபாவம் கொண்டு முன்னேறிச் செல்வது அனுகம்பா குணமாகும்.
- **ஆஸ்திக்ய :** அகிம்ஸா பரமோ தர்ம, ஜீவாதி தத்துவம், ஆறு திரவியம், முக்திப்பாதை இவற்றின் வடிவம் உண்மையான வீதராக தேவ, சாஸ்திர, குரு எப்படி கூறினார்களோ அவ்வாறே இருக்கிறது. வேறு வகையாக இல்லை–இப்படிப்பட்ட திடமான நம்பிக்கை கொள்வது ஆஸ்திக்ய குணம்.

54. நற்காட்சி பெறுவதால் ஏற்படும் நற்பயன் என்ன?

ஆசாரிய சமந்தபத்திரசாமியினுடைய இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தின் தர்சன அதிகாரத்தினுடைய கடைசி ஸ்லோகத்தில் சொல்லப்படுகிறது:

தேவேந்திர சக்ர மஹிமான் மமேய மானம்
ராஜேந்திர சக்ர மவ நீந்திர ஸிரோSர் சனீயம் l
தர்மேந்திர சக்ர மதரீக்ருத சர்வ லோகம்
லப்தவா சிவம் ச ஜினபக்திரூபைதி பவ்ய : ll 41 ll

பொருள்: **ஜினபக்தி பவ்ய** – ஜிநேந்திர பகவானுடைய பக்தர், **பவ்ய:** –நற்காட்சி பவ்ய பிராணி, **அமேய மானம்** – அபரிமித ப்ரதிஷ்டா அல்லது ஞானத்தோடு கூடிய, **தேவேந்திர சக்ர மஹிமாணம்** – இந்திர சமுகத்தினுடைய மகிமை, **அவனீந்தர ஸிரோர் சனீயம்** – முகுடங்களோடு கூடிய அரசர்களின் வணக்கம், **ராஜேந்திர சக்ரம்** – சக்ரவர்த்திகளின் சக்ர இரத்தினத்தை. **ச** – மேலும் , **அதரிக்ருத சர்வ லோகம்** – எல்லா உலகத்தையும் அடிப்படுத்தக்கூடிய, **தர்மேந்திர சக்ரம்** – தீர்த்தங்கரர்களுடைய தர்ம சக்ரத்தை. **லப்தவா** – பெற்று. **ஷிவம்** – மோக்ஷத்தை. **உபைதி** – பெறுகிறார்கள்.

விரதம் இலர் எனினும் காட்சி உடையார் நரகம் புகுதல் இலர்.
கலங்கலில் காட்சி உடையார் உலகில் விலங்காய்ப் பிறத்தல் இலர்
பெண்டிர் நபுஞ்சகர் ஆகார் பிழைப்பின்றிக் கொண்ட நற்காட்சி யவர்
இழிகுலத்து என்றும பிறவார் இறைவன் பழியது காட்சி யவர்.
உறுப்பில் பிறர் பழிப்ப என்றும் பிறவார் மறுப்பாடில் காட்சி யவர்.
குறுவாழ்க்கை நோயோடு நல்குரவு கூடப் பெறுவாழ்க்கை யுள்பிறத்தல் இல்.
அரசர் இளவரசர் செட்டியரும் ஆவர் புரை தீர்ந்த காட்சி அவர்
மூவகைக் கீழ்த்தேவர் ஆகார்; முகடுயர்வர் தோவகையில் காட்சி யவர்
விச்சா தரரும் பலதேவரும் ஆவர் பொச்சாப்பில் காட்சி யவர்

முச்சக் கரத்தோடு சித்தியும் எய்துவர் நச்சறு காட்சி யவர் (அ.செ.47–56)

55. நற்காட்சியானது சம்சார ஜீவனின் எதிர்காலத்தில் வரும் ஆயுள், வேதம், கதி ஆகியவற்றின் மீது என்ன மகத்வமான தாக்கத்தை ஏற்படுத்தும்?

ஆயுள் கர்மத்தின் கட்டு ஏற்பட்ட பிறகு அது விலகுவதில்லை. இதனால் எந்த ஜீவனுக்கு நற்காட்சி ஏற்படுவதற்கு முன்னால் நரகாயுவினுடைய கட்டு ஏற்பட்டு விட்டதோ அவன் அவசியம் நரகம் செல்ல நேருகிறது. ஆனால் அவன் முதல் நரகத்திற்குக் கீழே செல்வதில்லை. நரகத்தில் நபும்ஸக வேதத்தைத் தவிர வேறு வேதங்கள் உண்டாவது இல்லை. இதனால் முதல் நரகம் வரை பிறக்கக் கூடிய நற்காட்சி ஜீவன் நபும்சக வேதத்திலேயே (லிங்கத்தில்) பிறக்க நேரிடுகிறது. எந்த ஜீவனுக்கு நற்காட்சி உண்டாவதற்கு முன் விலங்கு அல்லது மனித ஆயுள் பந்தம் ஏற்பட்டு விட்டதோ அவன் விலங்கு அல்லது மனித கதியிலேயே பிறக்கிறான். ஆனால் அவன் முறையாக போக பூமியிலேயே விலங்காகவோ, மனிதனாகவோ பிறந்து பிறகு முறையாக தேவனாகிறான்.

இவ்விதமாக எந்த ஜீவனுடைய நற்காட்சி ஏற்படுவதற்கு முன்பு தேவ ஆயு ஏற்பட்டதோ அவன் தேவனாகப் பிறக்கிறான். ஆனால் வைமானிக தேவனாகவே பிறக்கிறான். பவணவாசிகளாக அல்ல. நற்காட்சி பெற்ற ஜீவன் பெண் பரியாயம் அடைவதில்லை. ஒருகால் நற்காட்சிக்கு முன்பு ஸ்திரி வேத பந்தம் உண்டாகிவிட்டிருந்தால் அது புருஷவேதத்தின் வடிவத்தில் மாற்றம் அடைகிறது. விலங்கு, மனிதர்களாகப் பிறந்த நற்காட்சி ஜீவன் முன்பு கட்டிய நபும்சக பந்த வேதம் கூட புருஷ வேதமாக மாற்றம் பெறுகிறது.

மனித, விலங்கு ஜீவன்களுடைய நற்காட்சி காலத்தில் ஆயுள் கர்மக்கட்டு ஏற்பட்டால் முறையாக விமானவாசி தேவர்கள் ஆயுள் பந்தம் தான் கட்டும். நாரகர்களுக்கும், தேவர்களுக்கும் நற்காட்சி காலத்தில் ஆயுள் பந்தம் ஏற்பட்டால் முறையாக கர்ம பூமியில் மனித ஆயுள் பந்தம் தான் ஏற்படும். மற்றவை ஏற்படாது. குணஸ்தானத்தின் அடிப்படையில் நரக ஆயுள் கட்டு முதல் குணஸ்தானம் வரை. விலங்கு ஆயுள் இரண்டாவது குணஸ்தானம் வரை, மனித ஆயுள் நான்காவது குணஸ்தானம் வரை, தேவ ஆயுள் ஏழாவது குணஸ்தானம் வரை தான் பந்தம் ஏற்படும். மூன்றாவது குணஸ்தானத்தில் எந்த ஆயுள் வினைக் கட்டும் ஏற்படாது.

நாலாவது குணஸ்தானம் வரை மனித ஆயுள் வினைக் கட்டு சொல்லப்பட்டது தேவர்களுக்கும், நரகவாசிகளுக்கும் ஒப்பிடும் போது சொல்லப்பட்டிருக்கிறது. ஏனென்றால் விலங்கு மனிதர்களுடைய மனித ஆயுள் கட்டு இரண்டாவது குணஸ்தானம் வரைதான் ஏற்படுகிறது. நற்காட்சி ஜீவன் நீச்ச குலம், உறுப்பு குறைகளுடன் அந்தர் முகூர்த்தம் போன்ற அற்ப ஆயுளும். தரித்திரத்தையும் பெறுவதில்லை. இது அவ்விரத நற்காட்சியினுடைய மகிமை. விரதத்தோடு கூடிய நற்காட்சி ஜீவன் முறையாக ருத்திதாரியான விமான தேவர்களாகவே பிறப்பர். ஆகமத்தில் இப்படிப்பட்ட நியமம் சொல்லப்படுகிறது.

எந்த ஜீவனுக்கு தேவ ஆயுளை விட்டுவிட்டு மற்ற ஆயுள் பந்தம் ஏற்பட்டிருக்கிறதோ அந்த ஜீவனுக்கு அந்த பரியாயத்தில் அணுவிரதம் கிடைப்பது இல்லை. மகாவிரதமும் கிடைப்பது இல்லை. அணு, மகா விரத காலத்தில் ஆயுள் பந்தம் ஏற்பட்டால் முறையாக தேவ ஆயுள் கட்டுதான் ஏற்படும். நற்காட்சிக்கு இப்படிப்பட்ட நியமம் கிடையாது. ஏனென்றால் அதைப் பெறுவதற்கு நான்கு ஆயுள்கள் வினைக்கட்டு ஏற்பட்ட பிறகும் கூட (அது) நற்காட்சி ஏற்பட முடியும்.

(இரத்ன கரண்டகஸ்ராவகாச் சாரத்தினுடைய 35 ஆம் ஸ்லோகத்தின் மீது வித்வான் பண்டித பன்னாலால் சாகித்ய ஆசாரியர் மூலமாக ஆகமப்படி எழுதிய விசேஷி பொருள் இவ்விதமாக உள்ளது.)

56. உண்மையான வீதராக தேவ சாஸ்திர குருவைத் தவிர அன்னிய தேவ, சாஸ்திர, குருவின் பாதங்களை வணங்கமாட்டேன். இராவணன் அரசில் வசித்தும் கூட இராவணனை வணங்கேன் என்று கூறியவரும், முனியான பிறகு மும்மணிகளால் விசேஷ ருத்தி அடைந்த அவரும் கைலாச மலையின் மீது அவர் மூலமாக ஜினாலயத்தைக் காப்பதற்காக காலின் விரலை அழுத்திய மாத்திரத்தில் கைலாய மலையின் கீழே இருந்து–பர்வதத்தை அசைத்து உபசர்க்கம் உண்டாக்க முயன்ற இலங்கை அரசன் இராவணன் அழ ஆரம்பித்தான். இத்தகைய அந்த சிறந்த மனிதன் யார்?

அப்படிப்பட்ட சிறந்த நியமத்தை மேற்கொண்ட சிறந்த மனிதன் வாலி அரசனாவான். பிறகு அவ்வரசன் வாலி முனிவரானார்.

57. சம்மேத சிகர்ஜி யாத்திரை தொடங்கிய போது ஆசாரிய ஸ்ரீ சாந்திசாகர் மகராஜ் (சாரித்திர சக்ரவர்த்தி) ஒரு பண்டிதருடைய உரையாடலின் போது எற்பட்ட உத்தம நற்காட்சி பற்றி செய்த உபதேசம் யாது?

தென் பாரதத்திலிருந்து வட பாரதத்திற்கு சம்மேதசிகர்ஜி யாத்திரை தொடங்கிய ஆசாரிய சாந்திசாகர்ஜி மகாராஜரிடம் ஒரு பண்டிதர் சொன்னார். ஏ மகராஜ் வட பாரதத்தில் முனிகள் விகாரம் செய்வது மிகவும் கடினகாரியம். அங்கே ஆங்கிலேயேருடைய கடுமையான ஆட்சி நடக்கிறது. முனி சங்கத்தின் மீது சில உபசர்க்கம் ஏற்படக் கூடும். அதனால் தங்கள் சங்கத்தோடு ஏதாவது ஒரு தேவியினுடைய (யக்ஷினி) மூர்த்தி வைத்திருப்பது நல்லது என்றார். சாந்திசாகர் மகராஜ் இந்த விஷயத்தின் மீது விடையளிக்கும் போது சொன்னார். ஹரே, பண்டித்ஜி தாங்கள் நற்காட்சியாளர் அல்லர் என்பது தெரிகிறது. ஏனென்றால் நீங்கள் ஆகமத்தை அறியவில்லை.

பூஜ்ய பாத ஆசார்யர் கூறுகிறார். **"நஹித்ராதா நஹித்ராதா நஹித்ராதா ஜெகத்ரையே வீதராகாத்பரோ தேவோ நாபூதோநபவிஷ்யதி"** என்று , நீங்களோ என்ன சொல்லிக் கொண்டிருக்கிறீர். இதைக் கேட்ட பண்டிதர் மிகுந்த நாணம் அடைந்தார். ஆசாரியஸ்ரீயிடம் ''மன்னிக்க வேண்டும் மகராஜ்'' என்று தன் செயலுக்கு வருத்தம் தெரிவித்தார். இவ்விதமாக மூன்று உலகங்களிலும் வீதராக தேவர் தான் உண்மையான இரக்ஷகர். உண்மையான பிரபுவின் பக்தி மட்டும் நம் கர்ம நிர்ஜரைக்கும், புண்ணியத்திற்கும் காரணமாகும். அவரால் எப்பொழுதும் பாதுகாப்பு கிடைக்கும்.

58. வருணராஜன் மூலமாகச் செய்யப்பட்ட அனேக செயற்கையான நிகழ்வுகளையும், 25 வது தீர்த்தங்கரர் தர்ஸனம், ஆகியவைகளை உண்டாக்கிய போதும் அமூடதிருஷ்டி அங்கத்தை ஏற்காத புகழ் பெற்ற அந்தப் பெண் யார்?

அந்தப் பெண் இரேவதி இராணி ஆவாள்.

******

குற்றங்களில்லான் குணத்தானிறைந்தான் குணத்தான்
மற்றிந்த வைய மளந்தான் வைய நின்ற பெற்றி
முற்று முரைத்தா னுரையீரொன்ப தாய தொன்றாற்
செற்றங்க டீர்ப்பான் விமலன் சரண் சென்னி வைத்தேன்

– மேருமந்தர புராணம்

அதிகாரம்–10

நன்ஞானத்தின் சிறப்பு

(நன்ஞான தர்மத்தின் வருணனையும் அதன் அருஞ்சிறப்பும்)

தீர்த்தங்கரர்களின் வாணியிலிருந்து பெறப்பட்ட நான்கு அனுயோகங்கள் நன்ஞானம் முக்தியை அடைவிக்கவல்ல அருமருந்தாகும். நன்ஞானத்தின் மூலம் எவைகளை ஏற்கவேண்டும், எவைகளை விலக்க வேண்டும் என்ற அறிவும், மேலும் மனதில் சஞ்சலத்தை விலக்கவும், முத்திமார்கத்தில் மிகுந்த ஈடுபாடும், நல்லொழுக்கத்தில் விசுத்தி அதிகரிப்பும் ஏற்படும். அப்படிப்பட்ட நன்ஞானவடிவ ஜின ஆகம ஸ்வாத்யாயம் சிறந்த ஞான ஒளியை பிரகாசிக்க செய்வதால் நன்ஞானத்தின் சிறப்பு பற்றி இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. **நன்ஞானம் என்று எதனைக் கூறுகிறோம்?**

இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் நன்ஞானத்தின் வடிவம்:

அன்யூனமநதிரிக்தம் யாதாதத்யம் விநா ச விபரீதாத் ।
நி: சந்தேகம் வேத ய தாஹுஸ்தஜ் ஞானமாகமின: ॥ 42 ॥

யத் – எந்த ஞானம் பொருளின் வடிவை (வஸ்துஸ்வரூபத்தை) **அன்யூனம்** – குறைவதில்லாமல், **அந்தரிக்தம்** – விரிதலுமில்லாமல், **விபரீதாத் விநா** – வேறு விதமாகவும் இல்லாமல், **நி: சந்தேகம்** – சந்தேகமில்லாமல், **யதாத்யம்** – எப்படி உள்ளதோ அப்படியே, **வேத** – அறியப்படுத்துகிறதோ, **தத்** – அந்த ஞானம் , **ஆகமின** : கணதரர் அல்லது சுருத கேவலி மற்றும் ஆகம அறிவுடையோர், **ஞானம்** – சம்யக் ஞானம் என்று, **ஆஹு** :– கூறுகிறார்கள்.

பொருள்: எந்த ஞானத்தால் பொருள் குறைதலும், விரிதலும் இல்லாமல் எப்போதும் அதன் நிலையிலேயே (எப்படி உள்ளதோ அவ்வாறே) மாறுபாடு இல்லமல், ஐயமின்றி அறியப்படுகிறதோ அதை ஆகம அறிவுடையோர் நன்ஞானம் (நல்லறிவு) என்று கூறுவர். நற்காட்சி மூலமாக எந்த ஞானம் ஏற்படுகிறதோ அதை நன்ஞானம் என்று கூறுகிறோம்.

பொருள்நின்ற பெற்றியைப் பொய்யின்று உணர்தல் மருளறு நன்ஞான மாண்பு. (அ.செ.57)

2. **நன்ஞானத்தின் வகைகள் யாவை? அவற்றின் பெயர்களைக் கூறுக?**

நன்ஞானம் ஐவகைப்படும் அவை 1. மதிஞானம், 2. சுருதஞானம், 3. அவதிஞானம், 4. மனப்பர்யயஞானம், 5. கேவலஞானம்.

3. **மதிஞானம் என்று எதனைக் கூறுகிறோம்?**

புலன்கள் மற்றும் மனத்தின் வழிபெறும் ஞானம் மதிஞானமாகும்.

4. **சுருதஞானம் என்று எதைக் கூறுகிறோம்?**

மதிஞானத்தால் அறிந்த பொருளின் மற்ற சிறப்புகளை அறிவது சுருதஞானம் எனப்படும்.

5. அவதிஞானம் என்று எதைக் கூறுகிறோம்?

ஐம்புலன்கள் மற்றும் மனதின் உபயோகம் இன்றி திரவிய, க்ஷேத்ர, கால, பாவ, நோக்கில் எந்த வடிவமுள்ள பொருள் அறியப்படுகிறதோ அந்த ஞானம் அவதிஞானம் எனப்படும். (மிக நுட்பமான ஆனால் குறிப்பிட்ட எல்லையுடன் விஷயங்களை அறிவது அவதிஞானம்).

6. மனப்பர்யயஞானம் என்று எதைக் கூறுகிறோம்?

புலன்கள், மனம் இவைகளின் துணையின்றி மற்றவர்களுடைய மனதில் இருக்கக் கூடிய உருவமுடைய பொருளையும், சலனங்களையும் எது அறிகிறதோ அது மனப்பர்யயஞானம் என்று கூறப்படுகிறது.

7. கேவலஞானம் என்று எதை அழைக்கிறோம்?

எதனால் லோகம், அலோகம் மூவுலக தொடர்பான எல்லா திரவியங்களையும், அவைகளுடைய குணங்களையும், அவைகளின் நிகழ், இறந்த, எதிர்காலம் பற்றிய எல்லா பரியாயங்களையும் ஒரே சமயத்தில் தெளிவாக அறியப்படுகிறதோ அதனை கேவலஞானம் என்றழைக்கிறோம். மறைப்பின்றி, உதவி ஏதுமின்றி அனந்தத்தையும் அறியும் ஞானம் கேவலஞானமாகும்.

8. மித்யாஞானம் என்று எதைக் கூறுகிறோம்? அது எத்தனை வகை?

உண்மைக்குப் புறம்பாய் ஏற்படும் ஞானம் மித்யாஞானம் அவை 1. குமதிஞானம், 2. குசுருதஞானம், 3. குஅவதிஞானம் என மூவகை.

9. நன்ஞானத்தின் விஷய பேதங்கள் எத்தனை? அவைகளின் பெயர்களைக் கூறுக.

நன்ஞானத்தின் பொருட் பிரிவுகள் நான்கு. அவை 1. பிரதமானுயோகம், 2. கரணானுயோகம், 3. சரணானுயோகம், 4. திரவ்வியானுயோகம்.

10. பிரதமானுயோகம் என்று எதனைக் கூறுகிறோம்.

புண்ணியமுடைய ஒரு மனிதரின் சம்பந்தமான கதை வடிவ வரலாறு, மற்றும் 63 சலாகா புருஷர்களின் தொடர்பான கதைவடிவ புராண வருணனைகள் இவை அடங்கியவை. மேலும் மும்மணிகள் சமாதியின் கருவூலமாக எது அறியப் படுகிறதோ அது பிரதமானுயோகம் எனப்படுகிறது.

11. கரணானுயோகத்தின் இலட்சணம் யாது?

லோகம், அலோகம் இவற்றின் பகுதிகளையும், காலத்தினுடைய மாற்றங்களையும், மேலும் நாற்கதிகள் இவற்றைக் கண்ணாடி போல அறியப் பயன்படும் அனுயோகமே கரணானுயோகம்.

12. சரணானுயோகம் இதன் முழுமையான கருத்து எது?

இல்லறத்தார்க்கும், மற்றும் முனிகளுக்கும் மும்மணியின் (நற்காட்சி, நன்ஞானம், நல்லொழுக்கம்) உதயம், வளர்ச்சி, பயிற்சி சாதனங்கள் இவை பற்றி வருணிப்பது சரணானுயோகமாகும்.

13. திரவ்யானுயோகத்தின் உண்மையான வடிவம் என்ன?

பஞ்சாஸ்திகாயம், ஆறு திரவியங்கள், ஏழு தத்துவங்கள், ஒன்பது பதார்த்தங்கள் இவற்றின் விரிவான வர்ணனைகள் கொண்டது திரவியானுயோகமாகும்.

14. ஆரம்ப நிலையில் நமக்கு நன்ஞானம் பெறக் காரணமாக எளிய நடையில் என்னென்ன கிரந்தங்கள் (நூல்கள்) இருக்கின்றன. என்னென்ன கிரந்தங்கள் ஸ்வாத்யாயம் (பயிலல்) செய்ய வேண்டும்?

ஆரம்ப நிலையில் நன்ஞானம் பெறுவதற்காக வீதராக பகவானுடைய வாணி வடிவ உண்மையான ஆகமத்தில் எழுந்த ரூடி (பழமை) வாதத்தில் இல்லாத நான்கு அனுயோகங்களுடைய முழுமையான எல்லா சாஸ்திரங்களையும் ஸ்வாத்யாயம் செய்ய வேண்டும். இதைப்போல ஸ்ரேணிகர் சரித்திரம், சுகுமார் சரித்திரம், ஸ்ரீபால் சரித்திரம், ப்ரத்யுமன் சரித்திரம், ஜீவேந்தர் சரித்திரம், ஜம்பு ஸ்வாமி

சரித்திரம், ரிஷபநாதர் சரித்திரம், ருஷபாவதார் சரித்திரம், பாகுபலி சரித்திரம், தயோதய மகா காவியம். சுதர்ஷனோதய காவியம். வீரோதய மகா காவியம், பத்ரோதய காவியம், பாக்கியோதயம் (பாக்கிய பரிக்ஷா) ஹரித்சம்பாதக், குணசுந்தர் விருத்தானந்த, உத்தரபுராணம் (இதில் அஜித நாத பகவான் முதல் மகாவீர பகவான் வரை 23 தீர்த்தங்கரர்களுடைய வைராக்கியத்தின் வருணனைகள். சகர சக்ரவர்த்தி. இராமர், அனுமான் ஆகிய அநேக மகா புருஷர்களுடைய (அற) தர்ம செயல்களின் சிறப்பான வருணனைகள் உள்ளன) சமுத்ரதத்தர் சரித்திரம், பவித்ரமானவ ஜீவன், கர்த்தவய பதப்ரதர்ஷன் இவை போன்றவைகள். மேலும், இரத்னகரண்டக ஸ்ராவகாசாரம் (மானவ தர்மம்) சகடாலா, (தெளலத்ராம் எழுதியது) தத்வார்த்த சூத்திரம், ஆத்மானு சாசனம், முனிமனோரஞ்சனா சீதி, இஷ்டோப தேசம், சமண சுத்தம் (ஜைனர்களின் கீதை) சமாதி சதகம், தசபக்தி, சங்ரஹம், பஞ்சஷதி (திகம்பர ஆசார்யர் வித்யாசாகர்ஜி மகராஜ் மூலமாக சமஸ்கிருத மொழியில் எழுதியது) நிரஞ்சன சதகம், பாவனா சதகம், பரிஷகஜெயம், சுநீதி சதகம், ஸ்ரமண சதகம் போன்ற ஐந்து சதகங்கள் பத்மநந்தி பஞ்சவிம்சதிகா, ஞானார்ணவம், சாரித்ரபாகுடம். மேலும் கார்த்திகேயானுப்பிரேக்ஷா, சர்வார்த்தசித்தி (சர்வார்த்தசித்தி கிரந்தத்தின் வார்த்திகம்) திரிலோகசார், லப்திசார், திரவ்யசங்ரகம், சம்யக்த்வசார் சதகம் ஜீவகாண்டம், கர்ம காண்டம், (கோமடசார்) ஆலாப பத்ததி, காதந்திர சமஸ்க்ருத வியாகரணம், ஜைனேந்திர சமஸ்க்ருத வியாகரணம், (இவை இரண்டும் சமஸ்கிருத இலக்கணம் ஜைன தர்மத்தினுடைய இரகசியத்தை அறிவதற்காக ஜைனாசார்யர்களால் எழுதப்பட்டது)ப்ருஹத் சுயம்புஸ்தோத்திரம், ஆப்த மீமாம்ஸா, யுக்தியனுசாசனம் அஷ்ட சஹஸ்ரீ, பஞ்சாஸ்திகாயம், த்வாதசானு ப்ரேக்ஷா, அஷ்டபாகுடம், நிஜானுபவ சதகம், விவேகோதயம், நியமசாரம், பிரவசனசாரம், சமயசாரம், க்ஷபனாசாரம்.

குந்த குந்தகா குந்தன் (இதில் குந்த குந்தாசார்யருடைய கிரந்தங்களில் 134 பாடல்களும் பொருளுடன் எழுதப்பட்டுள்ளது) இப்படிப்பட்ட நூற்றுக்கணக்கான, முழுவதும் உன்மையான அநேகாந்தமயமான, சாஸ்திரங்களை நாம், நற்காட்சி பெறவும், முன்னேற்றம் பெறவும் ஸ்வாத்யாயம் செய்யவேண்டும். (ஸ்வாத்யாயம் செய்வதற்கான நோக்கில் இந்த சாஸ்திரங்களின் பெயர்கள் கரணானுயோக சாஸ்திரங்களின் பெயர்களுக்கு முன்னால் சரணானு யோகங்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கிறது)

15. சாதுக்கள் மூலமாக படிக்கத் தகுந்த (ஸ்வாமி வட்டகேர் ஆசாரியர் மூலமாக எழுதிய) அந்த பெரிய கிரந்தம் எது? முனிவர்கள்– ஆர்யகா நற்காட்சி–முனிவர்களின் சம்யக்சாரித்ரம் மற்றும் 18மூலகுணங்கள்–அவர்களின் வீர உத்தம த்யானம் ஆகிய வர்ணனைகள் கொண்ட நூல் எது?

அந்த சிறப்புடைய சீரிய கிரந்தம் மூலாசாரம் ஆகும்.

16. ஆசாரிய குந்தகுந்த தேவருடைய நன்ஞானவடிவ மகிமையின் மூலமாக எழுதிய முக்கியமான கிரந்தங்களின் பெயர்களைக் கூறுக.

ஆசாரியர் ஜினசந்திர ஸ்வாமியின் சீடர் குந்தகுந்தாசார்யரின் முக்கிய கிரந்தங்கள்.

சமயசாரபாகுடம், (ப்ராப்ருதம்), பஞ்சாஸ்திகாயபாகுடம், பிரவசனசாரபாகுடம், அஷ்டபாகுடம், நியமசாரபாகுடம், ஜோணீசாரபாகுடம், கிரியாசாரபாகுடம், ஆராஹணாபாகுடம், லப்திசார பாகுடம், பந்தபாகுடம், ரயணசாரபாகுடம், ஷட்பாகுடம், தத்வசாரபாகுடம், பாவசாரபாகுடம், அங்கபாகுடம், க்ஷபணபாகுடம், திரவ்யபாகுடம், போதபாகுடம், க்ரமபாகுடம், பூயபாகுடம், வித்யாபாகுடம், உகாதபாகுடம், திருஷ்டிபாகுடம், சித்தாந்தபாகுடம், லோயபாகுடம், சரணபாகுடம், ஸமவாய பாகுடம், நயபாகுடம், ப்ரக்ருதி பாகுடம், சூர்ணி பாகுடம், பஞ்சவர்க்க பாகுடம், ஏயம்மபாகுடம், கர்மவிபாயபாகுடம், விஹியா பாகுடம், வஸ்துபாகுடம், சூத்திரபாகுடம்,

புத்திபாகுடம், பயத்தபாகுடம், உத்பாதபாகுடம், ஸம்டானபாகுடம், நிதாயபாகுடம், திவ்யபாகுடம், சிக்காபாகுடம், ஜீவபாகுடம், ஆகாரபாகுடம், ஸ்தானபாகுடம், ப்ரமாணபாகுடம், நோக்கம்மபாகுடம், சம்ஹாணபாகுடம். நிதாயபாகுடம், சாத்மிபாகுடம் முதலான 84 பாகுடங்கள் மற்றும் பாரக்காணுவேக்கா.

17. நம் ஜைன தர்மத்தில் "மகாசாஸ்திரம் 'கந்தஅஸ்தி மகாபாஷ்யம்' இந்த பெயர் நம் ஆகம கிரந்தங்களில் கிடைக்கின்றன. அது எப்பொழுது எந்த ஆசான் மூலமாக எழுதப்பட்டது? அது எத்தனை ஸ்லோகங்களைக் கொண்டது? அது எதைப்பற்றி வருணனை செய்கிறது?

நம் ஜைன தர்மத்தினுடைய மகாசாஸ்திரம் கந்தஅஸ்தி மகாபாஷ்யம், மகாவீர பகவானுடைய நிர்வாணத்திற்கு (முக்திபெற்ற) ஐநூறு ஆண்டுகளுக்குப் பிறகு ஸ்வாமி ஸ்ரீ சமந்தபத்ர ஆசார்யர் மூலமாக எழுதப்பட்டது. மேலும் அது தத்துவார்த்த சூத்திரத்தினுடைய விளக்க வடிவில் 84 ஆயிரம் ஸ்லோக அளவைக் கொண்டது. இதில் முக்கியமாக மூவுலகம் மற்றும் ஏழு தத்துவங்களின் வருணனைகள் உள்ளன. இவ்வவாறு நம் ஆகம கிரந்தங்கள் வாயிலாக அறியப்படுகிறது. (இந்நிகழ்காலத்தில் இந்த கந்தஅஸ்தி மகாபாஷ்யம் விசாலமான கிரந்தம் தமிழ்நாடு ஓலைச் சுவடிகளின்படி ஜெர்மனி தேசத்தின் நூலகத்தில் உள்ளது)

18. வித்வான் பண்டிதர் தௌலத்ராம்ஜி எழுதிய சகடாலா கிரந்தம் ஆறு கேடயங்கள் வாயிலாக என்னென்ன செய்திகளைத் தருகிறது?

சகடாலா கிரந்தத்தின் ஆறு கேடயங்களில் முறையாக

- முதல் கேடயத்தில் நிகோதம் மற்றும் நாற்கதிகளின் தொடர்பான சம்சாரத்தின் ஐந்து பரிவர்த்தனையினுடைய வருணனைகள் உள்ளன.
- இரண்டாம் கேடயத்தில் சம்சார சுழற்சிக்குக் காரணமான பொய்க்காட்சி. பொய்மை அறிவு, மற்றும் பொருந்தா ஒழுக்கம் இவற்றின் வருணனைகள் உள்ளன.
- மூன்றாம் கேடயத்தில் பிறவிச் சுழற்சியிலிருந்து விடுபட நற்காட்சியின் வருணனைகள் உள்ளன.
- நான்காம் கேடயத்தில் நல்லறிவு மற்றும் இல்லறத்தார்க்கு நல்லொழுக்கம் பற்றிய வருணனைகள் உள்ளன.
- ஐந்தாம் கேடயம் வைராக்கியம் உண்டாக்கும் பன்னிரண்டு பாவனைகளின் வருணனைகள் உள்ளன.
- ஆறாவது கேடயத்தில் முனிகளுடைய சகல அடக்கம், பணிவு, மற்றும் ஒழுக்கம் நியமங்கள் இவற்றின் வருணனைகள் மற்றும் விஷய கஷாயங்களைத் தியாகம் செய்வதற்கான போதனைகள் உள்ளன.

19. ஆசாரியர் சமந்தபத்ரஸ்வாமி எழுதிய இரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் ஏழு அதிகாரங்களில் முக்கிய வடிவில் என்னென்ன செய்திகள் வடிக்கப்படுகின்றன.

இரத்ன கரண்டக ஸ்ராவகாசாரத்தினுடைய ஏழு அதிகாரங்களில்

- முதல் அதிகாரத்தில் நற்காட்சியின் வர்ணனையும்.
- இரண்டாம் அதிகாரத்தில் நல்ஞானத்தின் வர்ணனையும்
- மூன்றாம் அதிகாரத்தில் நல்லொழுக்கம். ஐந்து அணு விரதங்கள் மற்றும் இல்லறத்தார் ஒழுக்கம் (அஷ்ட மூலகுணங்கள்) பற்றியும்
- நான்காம் அதிகாரத்தில் மூன்று குணவிரதங்களின் வருணனையும்,
- ஐந்தாம் அதிகாரத்தில் நான்கு சிக்ஷாவிரதம், நான்குதானம், மேலும் ஜினேந்திர புஜைக்கான வருணனையும்,

- ஆறாம் அதிகாரத்தில் சல்லேகனா (சமாதி மரணம்) பற்றிய வருணனைகளும் உள்ளன.
- ஏழாம் அதிகாரத்தில் சிராவகருடைய பதினோரு பிரதிமைகளின் வருணனை உள்ளது.

20. க்ருத்தபிஞ்சாசாரியர் (உமாஸ்வாமி ஆசாரியர்) எழுதிய தத்துவார்த்தசூத்திர கிருந்தத்தில் பத்து அதிகாரங்களில் என்னென்ன தத்துவங்கள் விளக்கம் செய்யப்படுகிறது?

தத்துவார்த்த சூத்திரத்தினுடைய (மோக்ஷ சாஸ்திரம்) பத்து அதிகாரங்களில் முதல் நான்கு அதிகாரங்களில் ஜீவதத்துவத்தினுடைய வருணனைகளும், ஐந்தாம் அதிகாரத்தில் அஜீவன் பற்றியும், 6,7 ஆம் அதிகாரத்தில் ஆஸ்ரவம் பற்றியும், எட்டாம் அதிகாரத்தில் பந்தம் பற்றியும், ஒன்பதாம் அதிகாரத்தில் சம்வரை, நிர்ஜரை தத்துவமும், பத்தாம் அதிகாரத்தில் மோக்ஷ தத்துவமும் முக்கிய வடிவிலும் எழுதப்பட்டுள்ளது.

21. அனேகாந்த நன்ஞானம் என்று எதைக் கூறுகிறோம்?

எதில் பொருளினுடைய அனேக தர்மங்கள் பற்றி கூறப்படுகிறதோ அதை அனேகாந்த நன்ஞானம் என்று கூறுகிறோம். ஆத்மா ஞான குணத்தால் அறிகிறது. காட்சி குணத்தால் பார்க்கிறது என்பது போல.

22. ஏகாந்தம் என்று எதனைக் கூறுகிறோம்?

பொருளினுடைய அனேக தர்மங்களில் ஒரு தர்மத்தைப் பற்றியே பேசப்படுவது ஏகாந்தம் எனப்படும். 'ஆத்மா அறிவது மட்டுமே செய்கிறது'. 'ஆத்மா சுத்தமானதுதான்' என்று சொல்வது

23. சம்யக் ஏகாந்தம் என்று எதனைக்கூறுகிறோம்?

பொருளில் உள்ள அனேக தர்மங்களில், ஒரு தர்மத்தை மட்டும் ஏதோ ஒரு நோக்கில் எடுத்துப் பேசுவதை சம்யக் ஏகாந்தம் என்பர். உதாரணமாக ஆன்மா காட்சி குணத்தின் காரணமாய்ப் பார்க்கிறது. அறிவது இல்லை. ஆத்மா ஞானகுணத்தின் காரணமாய் அறிகிறது. பார்ப்பது இல்லை. ஆத்மா பரியாயார்த்திக நயத்தினால் (மாற்றம்) அல்லது பிறவிச் சுழற்சியின் காரணமாக அசுத்தமானதுதான்; சுத்தம் இல்லை இவ்வாறு கூறுவது.

24. மித்யா ஏகாந்தம் என்று எதைக் கூறுகிறோம்?

பொருளின் அனேக தர்மங்களின் ஏதாவது ஒன்றின் காரணமும் இன்றி ஒரு தர்மத்தைப் பற்றி சொல்வது. மேலும் அந்தப் பொருளில் இருக்கக் கூடிய மற்ற தர்மங்களை ஏற்பது இல்லை. இதனை மித்யா ஏகாந்தம் என்கிறோம். 1. ஆத்மா அறிய மட்டுமே செய்கிறது; எக்காரணம் கொண்டும் பார்ப்பது இல்லை. 2. ஆன்மா தூய்மை மட்டுமே; எக்காரணம் கொண்டும் அசுத்தம் அல்ல. 3. ஆத்மா நித்யம் மட்டும்தான்; எக்காரணத்தாலும் அனித்தியம் அல்ல போன்று.

25. மித்யா ஏகாந்த வாதிகளின் (ஏகாந்த மித்யாதிருஷ்டிகள்) இலட்சணத்தைக் கூறுக.

மித்யா ஏகாந்த வாதிகளின் இலட்சணம்.

1. பொருளை ஏகாந்தத்தால் நித்யம் (சாஸ்வதம் திரவ்யம்) மட்டும் எனல் எந்த காரணத்தைக் கொண்டும் அநித்யம் என்று மதிப்பதும் ஏற்பதும் இல்லை.
2. பொருளை அநித்யம் (க்ஷணிக்) என்று மட்டும் ஏற்றல். எக்காரணத்தாலும் நிலையானது என்பதை ஏற்காமை.
3. நிச்சய தர்மத்தை மட்டும் ஏற்றல். மற்றும் விரதம், தானம், பூஜை, சீலம் உபவாசம் ஆகியவற்றை சம்யக் விவகார தர்மத்தை ஏற்காமை. இப்படிப்பட்ட சம்யக் விவகார தர்மத்தை 'மித்யா' என்று கூறுதல்.
4. வியவகார தர்மத்தை மட்டும் ஏற்றல். நிச்சய தர்மத்தை நம்பாமை.
5. உபாதானத்தை மட்டும் ஏற்றல். நிமித்தம், காரணம் சாதனங்களை ஏற்காமை அல்லது காரியத்திற்கு உதவாது என்று கூறுதல்.

6. எல்லா ஜீவன்களும், ஜீவதிரவியங்களும் பகவானைப் போல 'சுத்தம்' என ஏற்றல் எக்காரணம் கொண்டும் சம்சாரி அசுத்தம் என ஏற்காமை.
7. பொருளிளிருந்து பர்யாயத்தையும் (மாற்றத்தையும்) அல்லது பொருளிளிருந்து குணத்தையும் தனித்தனி என எண்ணுதல், பர்யாயம் மற்றும் குணத்தின் அசுத்தத்தன்மைக்கும் பொருளுக்கும் சம்பந்தம் இல்லை என எண்ணுதல்.
8. ஐந்தாம் காலத்தில் முனி இருக்கமாட்டார்கள் எனக் கூறுதல்.
9. பாவ **(Bhava)** பூஜையே தர்மம், திரவிய பூஜை தர்மமில்லை எனக்கூறல்.
10. தானம் முதலியன தர்மம் என எண்ணுதல் அறிவின்மையாகும் கெட்டகதிக்கு காரணம் எனக் கூறுவது.
11. போதல் வருதல், சாப்பிடல் – குடித்தல், கடை(வணிகம்) முதலான நடத்துவதால் ஐந்து பாபங்களை செய்தாலும் (அதாவது இலறத்தில் இருப்பவர்களுக்கும்) சுத்தோபயோகம் ஏற்படுகிறது எனக் கூறுதல் முதலியன மேலே கூறப்பட்ட ஏகாந்த மித்யாத்வ வடிவ உணர்வு முனிவர்களை (நிர்கிரந்த முனிகளை தரிசனம் செய்யாததினாலும், சாஸ்திரங்களை பிரதமானுயோகம் முதல் தொடங்கி முறையாக படிக்காமல் தலைகீழாக மாற்றி திரவியானுயோகத்தை முதலில் தொடங்கி முறை இல்லாமல் படிப்பதனால் ஏற்படுகிறது.)

26. நிச்சய வாதிகள் அல்லது மித்யா ஏகாந்தவாதிகள் மூலமாகச் செய்யப்பட்ட சில ஆகமங்களில் விபரீதமான கருத்துகள் இருக்கின்றனவா? எல்லா ஆத்மாக்களின் மங்கலத்திற்குப் பாதகமாக அந்த கருத்துகள் உள்ளனவா?

ஆம். அனேக நிச்சயவாதிகள், மித்யா ஏகாந்த வாதிகள் முக்தி பாதையில் ஞானத்திற்கு மிகச் சிறப்பைக் கொடுக்கின்றனர். ஆனால் நற்காட்சி மற்றும் விரதம் முதலிய நல்லொழுக்கத்தினை கடினம் என அறிந்து அதைப் பற்றிக் கூறக்கூட விரும்புவதில்லை.

1. அவர்கள் ஐம்புல விஷயங்களை அனுபவிப்பதில் வினைகட்டுவதில்லை என பொய்யாகக் கூறுகின்றனர். அவர்கள் ஜடம், ஜடத்தை அனுபவிக்கிறது என்று கூறுகின்றனர். அப்படியானால் பிணம் ஆனபின் அது ஏன் அனுபவிப்பதில்லை? ஆசை எதில் தோன்றுகிறது? ஜடத்திலா, ஆத்மாவிலா? பிறகு வினைக் கட்டு எங்கு ஏற்படும்? ரத்தோ பந்தாதி கம்மம்' என சமயசாரத்தில் கூறப்பட்டுள்ளதே என அவர்களைக் கேட்டால், அவர்கள் கூறுவது இவை எல்லாம் பர்யாய பார்வையாகும். திரவிய பார்வை வைக்கவேண்டும் என்பர். ஆனால் பகவான் மற்றும் குந்தகுந்தாச்சாரியாரும் பர்யாயவிளக்கம் செய்துள்ளனர். பர்யாய பார்வையை விட்டு திரவிய பார்வையை மட்டும் ஏற்றுக் கொண்டால் அனேகாந்தத்தில் ஏகாந்த மித்யாத்வம் வந்து விடுகிறது. இதை அவர்கள் புரிந்து கொள்ளவில்லை.

2. மரணத்தை ஏற்றுக் கொள்கிறோம். ஆனால் ஆயுள் கர்மத்தனுடைய அகால உதீர்ணா ஏற்பட்ட பிறகு ஏற்படக்கூடிய அகால மரணத்தை ஏற்றுக் கொள்வதில்லை (கதலிகாத் மரண்) அகால மரண பயத்தால் நோயைத் தணிக்க ஔஷதங்களைக்கூட சாப்பிடுகிறார்கள்.

3. ஆகமத்தில் ஆழ்ந்த அறிவு இல்லாத காரணத்தால் விரதம், நியமம், சம்யமங்களை ஆஸ்ரவம், பந்தத்திற்கு மட்டும் காரணம் என்று நினைக்கிறார்கள். ஆனால் அதனால் உண்டாகக் கூடிய சம்வரை, நிர்ஜரைகளை ஏற்றுக்கொள்வதில்லை.

4. திரவ்வியானுயோகத்தை மிக்க சிரத்தையோடு படிக்கின்றனர். ஆனால் பகவான் மூலமாகச் சொல்லப்பட்ட பிரதமானுயோகம் ஆகியவற்றை வேம்புக்குச் சமமாக கசப்பாக நினைத்து அதைப் பற்றி பேசவும் விரும்புவதில்லை.

5. புருஷார்த்தம் இன்மையின் காரணமாக முக்தி அடைய ஏதுவான சம்யக்துவம் பெறுவதற்காக

கால லப்தியைத்தான் சிறப்பாகக் கூறுகின்றனர். ஆனால் க்ஷயோபசமம், விசுத்தி ஆகிய லப்திகளை பற்றி பேசக்கூட விரும்புவதில்லை.

6. நான்காவது குணஸ்தானத்தில் உள்ளவர்களுக்கு உண்டாகக் கூடிய எட்டு அங்கங்களின் நடத்தை வடிவான 'சம்யக்த்வாசரண்' ஒழுக்கத்தையாவது அல்லது ஐந்தாவது ஆறாவது குணஸ்தானத்தினுடைய ஆரம்பத்தில் ஏற்கக்கூடிய விரதம் முதலிய 'சம்யமாசரண்' ஒழுக்கத்தை எப்போதும் செய்வதும் இல்லை. படிகள் இல்லாமல் மாளிகையை அடைவது போல பன்னிரண்டாவது குணஸ்தானத்தில் எற்படக்கூடிய சுத்தாத்மாவில் ஆழ்தலான 'சொரூபாசரண்' ஒழுக்கத்தைப் பெற விரும்புகிறார்கள்.

இவை போன்றவையெல்லாம் அவர்களுடைய ஆகமத்தின் விபரீதமான விளக்கங்கள், முமுக்ஷு ஜீவாத்மாக்களுடைய தன்மைக்கு (முக்திப் பாதைக்கு) பாதகமாக உள்ளது.

27. நான்கு அனுயோகங்களில் முதன் முதலில் பிரதமானுயோகத்தைத் தான் ஏன் படிக்க வேண்டும்?

ஸ்ரீ குணபத்ர ஆசாரியர் அருளிய உத்தரபுராணத்தினுடைய 4,5,6 பர்வத்தில் சொல்லியிருக்கிறார்கள்.

தானம், பூஜாம் ததான்யஞ்ச, முக்த்யை ஞானேன ஸம்ஸ்க்ருதம் ।
தத் புராண ஸ்ருதே : ஸ்ரவ்யம், தத்ததேவ ஹிதை ஷிபி : ॥ 5 ॥

பொருள் : தானம், பூஜை, மற்ற காரணங்கள் நற்காட்சியினால் அழகு பெற்றால் முக்திக்குக் காரணமாகின்றன. மற்றும் இந்த நன்ஞானமானது இந்தப் புராணத்தைக் கேட்பதால் உண்டாகிறது. ஆகையால் நன்மையில் விருப்பம் உள்ள புருஷர்கள் மூலமாக அவசியம் கேட்கத் தகுதியுடையது.

அர்ஹத்திர்பாஷிதம் ஸூக்த்தமனுயோகைச்ஸதுஷ்டம் ।
தேஷு பூர்வம் புராணானி தஸ்மாத் ப்ரோக்த : ஸ்ருதிக்ரம : ॥ 6 ॥

பொருள் : அரஹந்த பகவான் அனுயோகத்தின் மூலமாக நான்கு விதமான நூல்கள் சொல்லியிருக்கிறார். அவைகளில் புராணம் ப்ரதம நூல். பகவான் இந்த புராணங்களிலிருந்தே கேட்பதற்கான (ஸ்வாத்யாயம்) வரிசையைச் சொல்லியுள்ளார். ஆசாரியர் சமந்தபத்ரசுவாமி இரத்னகரண்டக ஸ்ராவகாவாரத்தில் ப்ரதமானுயோகத்தை போதி மற்றும் (இரத்தினத்தின் ப்ராப்தியையும்) சமாதியினுடைய கருவூலம் என்று சொல்லியிருக்கிறார்.

28. நன்ஞானத்தினுடைய எட்டு அங்கங்கள் என்னென்ன? அவைபற்றி சுருக்கமாகப் பொருளும் கூறுக.

1. காலாச்சார் : நல்ல காலத்தில் (உரிய) சாஸ்திரங்களைப் படிக்கவும், சொல்லவும், மற்றும் மனனம் செய்யவும், எண்ணி சிந்திப்பதற்கும் காலாச்சாரம் என்பர்.
2. விநயாசார் : பவித்திர தூய நீரால் கை, கால் கழுவி நிர்மலமான இடத்தில் பத்மாசனம் முதலிய ஆசனத்தில் அமர்ந்து, மங்களாசரணம் மற்றும், வணக்கம் முதலியவற்றோடு சாஸ்திரங்கள் அல்லது சுருதத்தைப் படிப்பதும், கற்பிப்பதும் ஆகிய விநயாசாரம் ஆகும்.
3. உபதானாச்சார் : கற்பதோடு – ஏற்றுக் கொள்வதோடு ஞானத்தை ஆராதிப்பதற்கு உபாதானாச்சார் எனச் சொல்லப்படுகிறது.
4. பஹுமானாச்சார் : ஞானத்துக்கும், சாஸ்திரத்துக்கும், ஞானத்தை அளிக்கும் குருவுக்கும் முழுமரியாதை செலுத்துதல் பஹுமானாச்சார் என்பவர்.
5. அனிஹ்னவாச்சார் : எந்த குருவிடத்தில் அல்லது எந்த சாஸ்த்திரத்தின் ஞானத்தை அடைந்தோமே அந்த குருவை அல்லது சாஸ்திரத்தின் பெயரை மறைக்காமல் இருப்பது அனிஹ்னவாச்சார் என்பர்.

6. வியஞ்சனாசார் :நூலில் இருக்கக் கூடிய ஒலி, அக்ஷரம், பதம், மாத்திரை இலக்கணத்தின் தூய்மையோடு படிக்க, சொல்ல செய்வது வியஞ்சனாசார் (சப்தாச்சார்) என்று சொல்லப்படுகிறது.
7. அர்த்தாச்சார் : ஒலி முதலியவற்றிற்கு எந்த அர்த்தம் உள்ளதோ அதை உறுதிப்படுத்துவதற்கு அர்த்தாச்சார் என்று கூறுவர்.
8. உபயாச்சார் : சப்தம் மற்றும் அர்த்தம் இரண்டினுடையவைகளை படித்தலும், படிப்பித்தலும், மனப்பாடம் செய்தலும் கேள்வி சிந்தனை செய்தலும் உபயாச்சாரம் என்பர்.

29. நன்ஞானத்தின் உள்ளே சொல்லப்பட்ட எந்த ஏழு நயங்களை அறிந்தால் அனேகாந்தம் அல்லது ஸ்யாத்வாத தர்மத்தினுடைய உண்மையான ஞானம் ஏற்படும்?

நன்ஞானத்தின் ஏழு நயங்களாவன :

1. நைகம நயம் : எது உறுதியை மட்டும் ஏற்றுக் கொள்கிறதோ அதை நைகம நயம் என்கிறோம். உதாரணம் – தண்ணீரை நிறைக்கும் போதும், அரிசியை ஆராயும் போதும் ஒரு மனிதனிடம் நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்று யாராவது கேட்டால் நான் சமைத்துக் கொண்டிருக்கிறேன் என்பான். காலையிலிருந்து அவசரமாக ஏற்பாடுகளில் ஈடுபட்டிருப்பவரிடம் நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய் என்று கேட்டால் அவன் சொல்வான் ''நகரத்திற்குப் போய்க் கொண்டிருக்கிறேன்'' என்று. இவ்வாறு அவர்கள் அடுத்த அந்த காரியம் செய்வதற்கான உறுதி செய்து கொண்டிருக்கிறார்களோ அதை வைத்து அந்த காரியத்தே செய்வதாக ஏற்பது நைகம நயம் ஆகும்.
2. சங்க்ரஹ நயம் : எது வித்தியாசத்தோடு கூடி எல்லா பரியாயத்தையும் தன் ஜாதிக்கு விரோதமின்றி ஒன்றாக மதித்து சாதாரணமாக எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறதோ அது சங்க்ரஹ நயமாகும், பெண், ஆண்கள் வித்தியாசமின்றி இந்த தர்ம சபையில் இரண்டாயிரம் மனிதர்கள் இருக்கிறார்கள். இங்கே ஆண், பெண், குழந்தைகள் அனைவரையும் சேர்த்து மனிதர்கள் என்று கூறப்படுவது சங்க்ரஹ நயமாகும்.
3. வியவகார நயம் : மேலே கூறிய சங்கிரக நயத்திலிருந்து சேர்ந்திருக்கும் பொருள்களை முறைப்படி வேறுபடுத்துவது விவகார நயமாகும். எவ்வாறெனில் இங்கே சபையில் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் இருக்கிறார்கள். இங்கே வேலையாட்கள், வியாபாரிகள் மற்றும் உள்ளவர்கள் உழவர்கள் இவ்வாறு அவர்களின் பணிகளைக் கொண்டு வேறுபடுத்தி சொல்லப்படுகிறது இவ்வகையில் கூறுவது வியவகார நயத்தினால் ஆகும்.
4. ருஜுசூத்ர நயம் : எந்த ஒருநிகழ்வு சரளத்தை ஏற்றுக் கொள்கிறதோ அந்த உண்மை ருஜுசூத்ர நயம் எனப்படும். அதாவது இந்த நயம் இறந்த, எதிர் கால தொடர்பான பரியாயத்தை ஏற்காமல் நிகழ்கால பரியாயப்பொருளை ஏற்பது ஆகும். ஒரு மனிதன் வழக்கறிஞன். அவன் மனித பரியாயத்தில், உள்ளவன். எதிர்காலத்தில் ஒரு வணிக பரியாயத்தை ஏற்க இருப்பவன். இவற்றில் நிகழ்காலத்தில் நடந்து கொண்டிருக்கும் வழக்கறிஞர் பரியாயத்தை ஏற்பது. அவனைப் பற்றிய அந்த சொல்லானது (நிகழ்கால பணியின் பெயர்) ருஜுசூத்ர நயத்தோடு ஒப்பிடும் போது உண்மையானது; சத்ய வசனமாகிறது.
5. சப்த நயம் : ருஜு சூத்ர நயத்தால் அறிந்த பொருள்களை பால், **(Gender)** எண்ணிக்கை, சாதனம் ஆகிய வேறுபாடுகளினால் தனித்தனியாக அறிகிறான். அதுவே சப்த நயம். இந்த நயம் ஒரு பெண்ணைத் தாரம் என்னும் சொல்லால் அழைக்க (அச்சொல்லால்) பெண் பாரியாயத்தைக் குறிக்கிறது. பாரியாள் என்ற ஒலியால் சொல்லும் போது அது பெண்பால், ஒருமை என்பதைக் குறிக்கிறது. இது போல 'களத்ர' என்ற ஒலியால் சொல்லும் போது பலவின்பால் (நபூம்சகலிங்கம்)

இலக்கணத்தால் மனைவியை குறிக்கிறது. இவ்வகையாக இலக்கண முறைப்படி ஏற்பது சப்த நயம் ஆகும். தாரம், பாரியாள், களத்திரம் இவையாவும் மனைவியினுடைய பரியாயப் பெயர்கள் ஆகின்றன. ஆனால் இச்சொற்கள் முறையே இலக்கணப்படி ஆண்பால், பெண்பால், பலவின்பால் ஆகும்.

6. சமபிரூட நயம் : எந்த சப்தம் நயத்தை ஏற்று சப்தத்தின் மூலமாக வழக்கத்தின்படி ஏதாவது ஒரு பொருளை ஏற்கிறது. அது சமபிரூட நயமாகும். சப்த நயத்தின் காரணமாய் கச்சதி ''கோ'' – எது சஞ்சரிக்கிறதோ அது பசு. பக்ஷி, ஸ்திரி, பெண், ஆண் இவையெல்லாம் கூட சஞ்சரிக்கிறது. ஆனால் இந்த சமபிரூட நயம் உலகவழக்கில் பால் கொடுக்கக் கூடிய பசுவை மட்டுமே குறிக்கிறது.

7. ஏவம்பூத நயம் : சமபிரூட நயத்தால் அறிந்த பொருளை அதனுடைய பெயர் பிரகாரம் செயலில் ஈடுபட்டு நிலைக்கும் சமயத்திலேயே அதை ஏற்றுக் கொள்ளல், ஏவம்பூத நயம். வக்காலத்து வழக்காடும் போது மட்டும் வக்கீல் என அழைக்கின்றோம். மற்ற பிற காரியங்களில் ஈடுபடும் போது அல்ல. போகும் செயலில் ஈடுபட்டருக்கும் போது அதாவது நடந்து செல்வதைக் 'பசு' என்றழைத்தல், உட்கார்ந்து இருக்கும் போது அல்லது தூங்கும் போது அவ்வாறு கூறுவதை இல்லை. பூஜை செயலில் ஈடுபட்டிருக்கும் மனிதனை ''பூஜாரி''எனத் கூறுவது. பிற சமயங்களில் அவ்வாறு கூறுவது இல்லை.

30. நயத்தின் பரிபாஷை என்ன?

எது பொருளில் ஒவ்வொரு அம்ஸத்தையும் (ஒவ்வொரு பகுதியும்) ஒப்பிட்டு அதனோடு சேர்த்துக் கூறுவது நயம் என்று கூறப்படுகிறது. அல்லது எடுத்துக்காட்டால் பொருளின் ஒரு பகுதியைப் பற்றிக் கூறுவது நயம் என்றழைக்கப்படுகிறது.

31. மற்ற நயங்களை ஏற்காமல் விட்டு எப்போதும் ஒரு நயத்தை மட்டும் ஏற்பது அல்லது கூறுவது ஐந்து விதமான மித்யாத்வங்களில் என்ன மித்யாத்துவம் என்று கூறப்படுகிறது?

அவ்வாறு செய்வது ஏகாந்த மித்யாத்துவம் ஆகும்.

32 நம்முடைய சம்யக்த்வ ஜைன தர்மத்தின் அனேகாந்தவாதம் (ஸ்யாத்வாதம்) அறிந்து கொள்ள ஒரு பயனுள்ள உதாரணம் தருக.

ஒரு முறை ஒரு நகரத்திற்கு அநேக நாட்களுக்குப் பிறகு ஒரு யானை வந்தது. அவ்யானையைப் பார்க்க அக்கம் பக்கத்து கிராமங்களிலிருந்து மக்கள் வந்து கூடினர். இச்செய்தியைக் கேட்டு குருடர்கள் நால்வர்கள் கூட யானையை அறிவதற்காக அங்கு வந்தனர். அவர்களில் ஒரு குருடன் யானையின் கால்களைத் தொட்டுப் பார்த்தான். மற்றொரு குருடன் யானையின் வயிற்றைத் தொட்டுப் பார்த்தான். மூன்றாமவன் யானையின் வாலை மட்டும் தொட்டான். நன்காம் குருடன் யானையின் காதைத் தடவிப் பார்த்தான்.

பிறகு ஏதோ ஒரு சேர்க்கையால் நான்கு குருடர்களும் ஒரு இடத்தில் கூடி உட்கார்ந்தனர். யானையை அறிந்தது குறித்து பேச்சு எழுந்தது. முதல் குருடன் காலைத் தொட்டுப் பார்த்தவன் சொன்னான் யானை கம்பத்தைப் போல இருக்கிறது என்றான். யானையின் வயிற்றைத் தொட்டவன் சொன்னான் இல்லை இல்லை யானை சுவரைப்போல இருக்கிறது என்றான். மூன்றாமவன் யானையின் வாலைத் தொட்டுப் பார்த்தவன் இல்லை இல்லை யானை துடைப்பத்தைப் போன்றது தான் என்றான். யானையின் காதைத் தடவிப் பார்த்த நான்காம் குருடன் சொன்னான்

இல்லை இல்லை யானையோ முறத்ததைப் போன்றதே என்றான். இவ்விதமாக நான்கு குருடர்களிடம் மிகுந்த பலமான வாக்குவாதம் நடந்தது. ஒருவன் மற்றவனை அடிப்பதற்கும் தயாராகி விட்டான். இந்நிலையில் அங்கு ஒரு ஞானி வந்து சேர்ந்தார். அவர் அந்நான்கு குருடர்களின் வழக்கையும் மிகக் கவனமாகக் கேட்டறிந்தார்.

அவர்களை அறிவுறுத்தியவாறு அவர் சொன்னார். உங்கள் நால்வருடைய வழக்கும் கதஞ்சித் (ஒரு வகையில்) வாதத்துடன் ஒப்பிடும் போது ஒவ்வொருவர் கூற்றும் சரியானதே. யானையின் காலை ஒப்பிடும் போது கதஞ்சித் (ஒரு வகையில்) கம்பத்தைப்போன்றதே. யானையின் வயிற்றை ஒப்பிட்டால் கதஞ்சித் (ஒரு வகையில்) சுவர் போன்றதே. காதோடு ஒப்பிடும் போது முறம்போன்றதே. வாலோடு ஒப்பிடும்போது துடைப்பம் போன்றதே. இவையெல்லாம் ஒரு யானையினிடத்தேயே அமைந்திருக்கின்றன. ஆகையால் யானை இந்த எல்லா உவமைகளோடும் சேர்ந்தே இருக்கிறது. இதைக் கேட்ட நான்கு குருடர்களும் அனோகாந்த மயமான ஜைன தர்மத்தினுடைய மர்மம் சரியாக அறிவிற்கு வந்தது என்றனர். அவர்கள் தங்களுக்குள் ஒரு மகிழ்ச்சியுடன் வீடு சேர்ந்தனர். இதன் கருத்து என்ன வென்றால் பொருள் அனேக தர்மங்களைப் பெற்றிருக்கிறது. மற்ற தர்மங்களைத் தவிர்த்து ஒரு தர்மத்தை மட்டும் கூறுவது மித்யாத்வம். பொருளில் இருக்கக் கூடிய எல்லா தர்மங்களுடையவற்றில் ஒரு தர்மத்தைப் பற்றி நயவாதத்தால் – கதஞ்சித் வாதத்தால் அல்லது அபேக்ஷா வாதத்தால் கூறுவது தான் ஸ்யாத்வாதம். அனேகாந்த வடிவம்.

33. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கிர்நார் மலைக்குகையில் அமர்ந்த புஷ்பதந்த, பூதபலி முனிவர்களுக்கு குறுகிய காலத்திற்குள்ளாகவே வாய்மொழியாக நன்ஞானத்தை அளித்து அதன் காரணமாய் அச்சீடர்கள் ஷட்கண்டாகமம் முதலிய பரந்த கிரந்தங்களை எழுதினர். அந்த குரு திகம்பராசாரியர் யார்?

அந்த திகம்பர ஜைனாச்சாரியர் தரசேனர் ஆவார்.

34. முனி நிலையில் பதினோரு அங்கங்கள் மற்றும் அபின்ன பத்து பூர்வம் ஞானம் பெற்றவர். பிறகு மித்யாத்துவத்தில் சிக்கி மித்யாஞானியாகி பதினோராவது ருத்திரருடைய வடிவத்தை அடைந்தார். அவர் இறந்து மித்யா ஞானத்தின் பயனாக வாலுகாப்பிரபா என்னும் பெயருடைய மூன்றாவது நரக பூமியைச் சென்றடைந்தார் அவர் யார்?

அவர் ஸாத்யகி புத்திரர் ஆவார்

35. "துஸ்மாஸ் பின்னம்" (உளுந்தும் அதன் தோலும் தனித்தனி போல் ஆன்மாவும் உடலும் இருக்கிறது) இவ்வளவு சிறிய நன்ஞான மந்திரத்தை நடத்தையில் கொண்டு வந்ததால் கேவல ஞானப் ப்ராப்தி ஏற்பட்டது. இப்படிப்பட்ட முனிவர் யார்?

ஸ்ரீ சிவபூதி முனிவர் இத்தகையர் ஆவார்.

36. து : ஷமா என்னும் ஐந்தாம் காலத்தில் (சுமார் 18460 ஆண்டுகளுக்கு பிறகு) ஆறாம் காலம் தொடங்க மூன்று வருடம் 8½ மாதங்கள் இருக்கும்போது எந்த பாவலிங்க முனிவரின் கையிலிருந்து முதல் பிடி ஆஹாரத்தை ஜலமந்தன அரசன் மூலமாக வரியாக வசூலிக்கப்பட, பிண்டாஹாரம் உண்பதற்கு முட்டு வருவதையும், அவர் ஆயுள் முடிய 3 நாளே உள்ளது என்றும் அவதிஞானத்தால் அறிந்து, சர்வஸ்ரீ ஆர்யிகை, அக்னிநல சிராவகன், பல்கூசேனை என்னும் ஸ்ராவகியுடன் சல்லேகனை ஏற்று, மரணமடைந்து சௌதர்ம சுவர்கத்தில் தேவனாக பிறவி எடுக்க இருக்கிறார்?

அந்த பாவலிங்க முனிவர் வீராங்கஜ முனி மஹராஜ் ஆவார்.

அதிகாரம் –11.
நல்லொழுக்க தர்மமும் அதன் பெருமையும்

நல்லொழுக்க மில்லாமல் முக்தி பதவி எப்போதும் கிடைப்தில்லை. நற்காட்சி, நன்ஞானத்துடன், நல்லொழுக்கத்தையும் கடைபிடிக்கும் போது தான் முக்தி கிட்டுகிறது. எப்படி மருந்தைப் பற்றிய நம்பிக்கையும், அறிவும் மட்டும் நோயை குணப்படுத்தாமல் அதை உபயோகப்படுத்தும் போதுதான் நோய் குணமடைகிறதோ அதுபோல முக்தி பற்றிய நம்பிக்கையாலும் அறிவாலும் மட்டும் முக்தி கிடைத்துவிடாது. பாப செயல்களில் இருந்து விடுப்படும் புண்ணிய வடிவ விரதங்களை கடைபிடித்தல் முதலான உண்மையான வியவகார நல்லொழுக்கத்தை கைகொள்வதாலும் பின் ஒருநாள் ஸ்வரூபா சரணவடிவ முனியின் நிச்சய நல்லொழுக்கத்தின் வழி முக்தி கிடைக்க வழிவகுக்கும். பாபச் செயல்களை விட்டால் தான் புண்ணியச் செயல்களை செய்யமுடியும். பாபம் குறைந்து புண்ணியம் அதிகரிக்கும் போது முனி நிலை அடையும் வாய்ப்பு கிடைக்கிறது. முக்தி அடைய புதிய கர்ம வரவின் தடையும், முன் கட்டிக் கொண்ட கர்மங்களின் அழிவும் அவசியமாகும். முனி நிலையில் தான் ஸ்வரூபாசரண நல்லொழுக்கத்தை கைகொண்டு கர்மங்களை தடுப்பதும், அழிப்பதும் செய்து முக்தி அடைய முடியும். எனவே முதலில் முனி தர்மத்தை ஏற்கவழி செய்யும் இல்லறத்தாரின் நல்லொழுக்கமும் பின்னர் முக்தியை அளிக்க வல்ல முனியாசார பெருமையும் பதினோறாவது அதிகாரமாக கொடுக்கப்பட்டுள்ளது.

1. நல்லொழுக்கம் (ஸம்யக் சாரித்ரம்) என்று எதனைக் கூறுகிறோம்?

'திரவ்ய சங்க்ரக' சாஸ்திரத்தில் ஆசாரியர் நேமிசந்திர சுவாமி கூறுகிறார்:

அசுஹாதோ விணிவித்தி, சுஹே பவித்தீ யஜாண சாரித்தம் ।
வதஸமிதிகுத்திரூவம், வவஹாரணயா து ஜினபணியம் ॥ 45 ॥

பொருள் : ஐந்து பாபம் முதலிய அசுப கர்மங்களில் ஈடுபடாமையும், அற சுபகாரியங்களில் ஈடுபாடு கொள்வதும், நல்லொழுக்கம் (சம்யக் சாரித்திரம்) என்று அழைக்கப்படுகிறது. வியவஹார நயத்தால் அந்த சாரித்திரம் விரதம், சமிதி, குப்தி, வடிவம் என ஜினேந்திர பகவானால் சொல்லப்பட்டிருக்கிறது.

- சுவாமி சமந்தபத்ராசாரியர் இரத்னகரண்டக சிராவகாசாரத்தில் சொல்லியிருப்பதாவது:

ஹிம்ஸான்ருதசௌர்யேப்யோ, மைதுன ஸேவா பரிக்ரஹாப்யாம் ச ।
பாபப்ரணாலிகாப்யோ விரதி: ஸஞ்சஸ்ய சாரித்ரம் ॥

பொருள்: **ஸஞ்சஸ்ய**–சம்யக்ஞானி ஜீவன், **பாபப்ரணாலிகாப்ய**– பாப சாக்கடையாகிய **ஹிம்சான்ருதசௌர்யேப்ய:**– இம்சை, பொய், களவு, **ச**–மற்றும், **மைதுன சேவாபரிக்ரஹாப்யாம்**– காமம், பற்று இவற்றில், **விரதி:**– ஈடுபடாமையே, **சாரித்திரம்**–சாரித்திரம் என்று அழைக்கப்படுகிறது.

2. நல்லொழுக்கத்தில் எத்தனை வகைகள் உள்ளன?

சிராவகர்களுக்கு 'தேச சாரித்திரம்' **(சம்யமாசம்யம சாரித்திரம்)** என்றும், முனிவர்களுக்கு 'சகல சாரித்திரம்' **(சம்யமாச்சரணம்)** என்றும் இவ்வாறு நல்லொழுக்கத்தில் இரண்டு வகைகள் உள்ளன.

3. சிராவகர்களுக்கு தேச சாரித்திரம் (அணுவிரதம்) எவ்வாறு உண்டாகிறது? அவற்றின் பெயரையும், பொருளையும் சுருங்கக் கூறுக.

சிராவகர்களுடைய தேச சாரித்திரம் ஐந்து அணுவிரதங்களோடு கூடி பதினோரு படிநிலை (பிரதிமா) களாகக் கூறப்பட்டிருக்கிறது. தேச விரதி சிராவகர்களின் பதினோறு படிநிலைகளாவன:

- திகம்பர ஜைனாசாரியர் ஸ்ரீ குந்தகுந்த தேவர் தன் சாரித்திர பாகுடத்தில் 22வது பாடலில்

தம்ஸண வய ஸமாயிய போஸஹ ஸச்சித்த ராய பத்தே ய ।
பம்பாரம்ப பரிக்கஹ அனுமன உத்திட்ட தேஸ விரதோ ய ॥ 22 ॥

பொருள்: தர்சன, விரத, சாமாயிக, போஷத, சச்சித்தபுக்தி தியாக, ராத்திரி புக்தி தியாக, பிரம்ஹசர்ய, ஆரம்பதியாக, பரிக்ரக தியாக, அனுமதி தியாக மற்றும் உத்திஷ்டதியாக எனப் பதினோரு படிநிலைகளை ஏற்பதின் மூலம் புலனடக்க ஒழுக்க சாரித்திரம் தேச விரத சிராவகர்களுக்கு உண்டாகிறது.

- சுவாமி சமந்தபத்ராசாரியர் கூட இரத்னகரண்டக சிராவகாசாரத்தில் கூறியுள்ளார்:

ச்ராவக பதானி தேவைரேகா தச, தேசிதானி ஏஷூ கலு ।
ஸ்வகுணா: சர்வகுணை: ஸஹ, ஸந்திஷ்டதே க்ரமவிவ்ருத்தா: ॥ 136 ॥

பொருள்: தீர்த்தங்கர தேவர் மூலமாக சிராவகர்களுடைய பதினோரு பிரதிமைகள் கூறப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொரு பிரதிமையும் தன் பிரதிமைக் குரிய குணங்களோடு முன்னுள்ள பிரதிமைகளின் குணங்களையும் சேர்த்துப் பெற்று முன்னேற்றத்தைப் பெற்று நிலைக்கும். **பதினோர் நிலைமையர் சாவகர் என்று வியீதயின் உணரப் படும்.** (அ.செ.161)

1. தர்சன பிரதிமாதாரியின் இலக்கணம்:

இரத்ன கரண்டக சிராவகாசாரத்தின்படி:

சம்யக்தர்சன சுத்த : சம்சார, சரீர போக நிர்விண்ண: ।
பஞ்சகுருசரணசரணோ தர்னிகஸ்தத்த்வபத க்ருஹ்ய: ॥ 137 ॥

பொருள்: யார் சம்யக் தர்சனத்தில் சுத்தமுடையவரோ, சம்சார, சரீர மற்றும் போகங்களிடத்தில் விரக்தி உடையவர்களாக (வைராகியாக) இருக்கிறார்களோ மற்றும் பஞ்ச பரமேஷ்டிகளுடைய சரணங்களில் அடைக்கலம் யாருக்குக் கிடைத்திருக்கிறதோ (யார் பஞ்ச பரமேஷ்டிகளின் பக்தரோ) மற்றும் எட்டு மூல குணங்கள் (தேன், கள், புலால் இவற்றைத் தியாகம் செய்து ஐந்து அணு விரதங்களை) மேற்கொண்டு நடக்கிறாரோ அவர் தர்சன பிரதிமாதாரி சிராவகன் ஆவார்.

காட்சியில் தின்னனாய் சீல விரதம் இலான் மாட்சியுறு தரிசன் ஆம் (அ.செ.162)

2. விரத பிரதிமாதாரியின் இலக்கணம்:

நிரதிக்ரமணமணுவிரத பஞ்சகமபி சீலஸப்தகம் சாபி ।
தாரயதே நி:சல்யோ யோSசௌ விரதிணாம் மதோ விரதிக: ॥ 138 ॥

பொருள்: சல்லியமில்லாமல் அதிசாரம் நீக்கி ஐந்து அணுவிரதங்கள் மற்றும் ஏழு சீலங்களை மேற்கொள்கிறவர் கணதர தேவர் முதலிய விரதிகளால் 'விரதிகள்' என்னும் பெயருடைய சிராவகனாக மதிக்கப்படுகிறார்.

- ஆசாரியர் சுவாமி ஸ்ரீ குந்தகுந்தரும் சாரித்ரபாகுட கிரந்தத்தில் சிராவகர்களுடைய பன்னிரண்டு விரத வடிவ தேச சாரித்ரம் அல்லது சம்யமாசரண சாரித்திரத்தை இவ்வாறு கூறுகிறார்:

பஞ்சேவணு வ்வயாயிம் குணவ்வயாயிம் ஹவந்தி தஹ திண்ணி ।
சிக்காவய சத்தாரி ய ஸஞ்ஞுமசரணம் ச ஸாயாரம் ॥ 22 ॥

பொருள்: ஐந்து அணுவிரதம், மூன்று குண விரதம் மற்றும் நான்கு சிக்ஷா விரதம் ஆகப் பன்னிரண்டு விரதங்களைக் கடைப்பிடிப்பது நல்ல சிராவகர்களுடைய புலனடக்க ஒழுக்கமாகும்.

வதம்ஐந்தும் சீலமோர் ஏழும் தரித்தான் விதியால் விரதி எனல் . (அ.செ.163)

3. சாமாயிக பிரதிமாதாரியின் இலக்கணம்:

நான்கு முறை மும்மூன்று ஆவர்த்தனம் செய்தல், நான்குமுறை வணக்கம் செய்தல், காயோத்சர்க்கமாக நிற்றல், பகிரங்க, அந்தரங்க பரிக்கிரகங்களைத் தியாகம் செய்தல், இருமுறை உட்கார்ந்து வணக்கம் செய்தல், மன, வசன, காயயோகத்தைத் தூய்மையாக வைத்திருத்தல் மற்றும் மூன்று சந்தியா காலங்களில் வந்தனை (சாமாயிகம்) செய்தல் இவற்றைத் தவறாது செய்பவரே சாமாயிக பிரதிமாதாரியாவார்.

4. புரோஷதோபவாச பிரதிமாதாரியின் இலக்கணம்:

மாதந்தோறும் நான்கு பருவ நாள்களில் (இரண்டு அஷ்டமி, இரண்டு சதுர்த்தசி) தன்னுடைய சக்தியை மறைக்காமல் புரோஷத விரத சம்பந்தமான நியமங்களைத் தவறாமல் கடைப்பிடித்து ஒருமுகசிந்தனையில் ஈடுபட்டிருப்பவர் புரோஷதோபவாச பிரதிமாதாரியாவார்.

5. சச்சித்த தியாகப் பிரதிமாதாரியின் இலக்கணம்:

கருணை உள்ளத்தோடு உண்ணத் தகுதியுடைய தாவரம் அதனோடு தொடர்புடைய பழம், விதை முதலியவற்றை நீக்காமல் – பச்சையாக உண்ணாதவர் சச்சித்த தியாக பிரதிமாதாரி யாவார்.

6. இராத்திரி புக்தி தியாக பிரதிமாதாரியின் இலக்கணம்:

உயிர்களிடத்தில் கருணை உள்ளத்துடன் மனம், மொழி, மெய் மற்றும் செய்தல், செய்வித்தல், உடன்படுதல் முதலான வகைகளால் உண்ணல், குடித்தல், கடித்தல், நக்குதல் ஆகிய நான்கு வகை உணவுகளையும் இரவில் தியாகம் செய்பவர் இராத்திரி புக்தி தியாக பிரதிமாதாரியாவார்.

7. பிரம்மசர்ய பிரதிமாதாரியின் இலக்கணம்:

விந்து, குருதி மலங்களால் உண்டான இழி தன்மையுடைய மலம், மூத்திரம் போவதான துர்நாற்றமுடைய அருவருப்பு அளிக்கக்கூடிய உடலைப் பார்த்து காம உணர்வைத் தியாகம் செய்பவரே பிரம்மசர்ய பிரதிமாதாரியாவார்.

8. ஆரம்ப தியாகப் பிரதிமாதாரியின் இலக்கணம்:

இம்சையை உண்டாக்கக் கூடிய விவசாயம். வியாபாரம், சேவை முதலான குடும்ப சம்பந்தமானவேலைகளைத் துறந்து இருப்பவரே ஆரம்ப தியாகப் பிரதிமாதாரியாவார்.

9. பரிக்கிரக தியாக பிரதிமாதாரியின் இலக்கணம்:

பத்து புறப்பற்று (க்ஷேத்ர, வாஸ்து, தனம், தான்யம், வேலையாள், பசு, சயன ஆசனம், (படுக்கை), வாகனம், துணி, பாத்திரம்) பொருள்களிடத்து கொள்ளும் தனது என்னும் பற்று அற்றவனாகி மகிழ்ச்சியுடன் நலமாக வாழ்ந்து சிந்தனையில் எல்லாப் பற்றுகளிலிருந்து

விடுபடுபவரே பரிக்கிரக தியாக பிரதிமாதாரியாவார்.

10. அனுமதி தியாக பிரதிமாதாரியின் இலக்கணம்:

விவசாயம், வாணிபம் போன்ற தொழில்கள், மற்றும் பொருள் சேர்த்தல் முதலான அதாவது உலகத் தொடர்பான எந்த செயலுக்கும் ஆலோசனை தராமல் சமத்துவ புத்தியுடன் வாழும் சிராவகர் அனுமதித் தியாக பிரதிமாதாரியாவார்.

11. உத்திஷ்ட தியாக பிரதிமாதாரியின் இலக்கணம்:

குடும்பத்தைத் துறந்து, முனி உள்ள இடம் சென்று, குருவிடம் சிராவகர்களின் உயர்ந்த விரதத்தை மேற்கொண்டு பிக்ஷை சரியையில் உணவு ஏற்றும் தபம் செய்தும், ஓராடை (கோவணம் அல்லது கோவணத்துடன் துண்டு) உடுத்திய உயர்ந்த சிராவகர் உத்திஷ்ட தியாக பிரதிமாதாரி ஆவார்.

4. உத்திஷ்ட தியாக பதினோராம் நிலை பிரதிமாதாரியை எப்பெயரால் அழைக்கிறோம்?

உத்திஷ்டத் தியாக பதினோராம் நிலை பிரதிமாதாரியை ஐலகர், க்ஷுல்லகர், க்ஷுல்லிகை என்னும் பெயர்களால் அழைக்கிறோம்.

5. நற்காட்சியுடைய பிரதிமாதாரி குணஸ்தானம் என்ன?

நற்காட்சியுடைய பிரதிமாதாரியின் குணஸ்தானம் ஐந்தாம் குணஸ்தானமாகும்.

6. சிராவகர் எத்தனை வகையினர்? அவர்களின் பெயர்கள் யாவை?

சிராவகர் மூவகையினர்: 1. பாக்ஷிக சிராவகர், 2. நைஷ்டிக சிராவகர், 3. சாதக சிராவகர் என.

7. பாக்ஷிக சிராவகர் என்று யாரைக் கூறுவர்?

நற்காட்சியோடு எட்டு மூலகுணங்களை அப்பியாசமாக (பயிற்சியாக) நடைமுறையில் கொள்பவரை பாக்ஷிக சிராவகர் என்பர்.

8. நைஷ்டிக சிராவகர் என்று யாரைக் கூறுவர்?

பதினோரு பிரதிமைகளை அதிசாரமின்றி செயல்படுத்துபவரை நைஷ்டிக சிராவகர் என்று கூறுவர்.

9. சாதக சிராவகர் என்று யாரைக் கூறுவர்?

பிரதிமாதாரி கடைசி காலத்தில் சல்லேகனை ஏற்கிறார். அவரே சாதக சிராவகர் ஆவார்.

10. விரதி என்னும் இரண்டாம் நிலை பிரதிமையில் எந்த ஐந்து அணுவிரதம் சொல்லப்பட்டிருக்கிறதோ, அவற்றின் பெயர் மற்றும் இலட்சணங்களைச் சுருங்கச் சொல்லுக.

ஐந்து அணுவிரதங்கள் பெயரும் அவற்றின் இலட்சண சுருக்கமும் :

1. **அகிம்சை (கொல்லாமை) அணு விரதம்:** ஸ்தூல அல்லது திரச இம்சையினை (மனம், மொழி, மெய் இவற்றால் செய்தல், செய்வித்தல், உடன்படுதல் என்னும் வழிகளில் **3 x 3=9** ஒன்பது வழிகளில்) தியாகம் (விலகி இருத்தல்) செய்வது அகிம்சா அணுவிரதமாகும்.

2. **சத்யாணு (பொய்யாமை) விரதம்:** ஸ்தூல அசத்தியத்தைத் தான் பேசாமையும் பிறரைப் பேசுமாறு தூண்டாமையும், மற்றும் தீய எண்ணத்துடன் பிற உயிர் கொலைக்குக் காரணமாகும் சத்தியத்தையும் தான் பேசாமையும். பிறரையும் பேசத் தூண்டாமையும் பொய்யாமை என்னும் சத்யாணு விரதமாகும்.

3. **அசௌரியாணு (திருடாமை) விரதம்:** பிறர் வைத்துவிட்டுச் சென்றதும், தவறி விழுந்து கிடப்பதும், அல்லது முற்றிலும் மறந்து விட்டு விட்டதும் மற்றும் மற்றவர்களால் கொடுக்கப்படாததும் ஆன பிறர் பொருளைத் தானும் ஏற்றுக் கொள்ளக்கூடாது. மற்றவர்களுக்கு அளிக்கவும் கூடாது. இதுவே திருடாமை என்னும் ஸ்தூலவடிவ அசௌரியாணு விரதமாகும்.

4. **பிரம்மசர்யாணு விரதம்:** பாபத்துக்கு அஞ்சி பிற பெண்டிரிடம் தான் செல்லாமையும், பிறரை உடன்படுத்தாமையும் உடையவன், பிற பெண்டிர் நீக்கி தன் மனைவியிடம் மட்டுமே இன்பமடைபவன் பிரம்மசர்யாணு விரதம் உடையவனாவான்.

சிறப்பு: ஏழாம் நிலை பிரதிமாவை மேற்கொண்ட காலத்தில் தன் மனைவியினிடத்து இருந்தும் விரக்தி அடைகிறான். திருமணம் செய்துகொள்ளும் முன் திருமணம் செய்து கொள்ளும் வரை முழு பிரம்ம சர்ய விரதத்தை கைகொள்ள முடியும், திருமணமான பிறகு கணவன் மனைவி இருவரின் சம்மதத்துடனேயே பூரண பிரம்மசர்யவிரதம் கைகொள்ளப்படுகிறது.

5. **பரிக்ரக பரிமாண விரதம்:** தனம், தான்யம் முதலான பத்து வகையான பற்றுகளை அளவுபடுத்தி அந்த எல்லைக்கு அதிகமானப் பொருள் மீது பற்று இல்லாமல் இருத்தல் மிகுபொருள் விரும்பாமை அல்லது இச்சா பரிமாணம் என்னும் அணுவிரதமாகும்.

11. அணு விரதத்தின் விளக்கம் என்ன?

பெரிய அளவில் நடக்கும் (ஸ்தூல வடிவில்) இம்சை, பொய், களவு, ஒழுக்கமின்மை மற்றும் பரிக்ரகம் இவற்றை ஸ்தூல வடிவில் தியாகம் செய்தல் அணு விரதம் என்பதன் விளக்கமாகும்.

12. சிராவகர்களில் விரதி என்னும் இரண்டாம்நிலை பிரதிமையில் சொல்லப்பட்டிருக்கும் ஏழு சீல விரதம் எவ்வாறு அமைகிறது?

மூன்று குண விரதங்களும் மற்றும் நான்கு சிக்ஷா விரதங்களுடன் கூடி சிராவகர்களுக்கு ஏழு சீல விரதங்கள் அமைகின்றன.

13. குண விரதம் என்று எவற்றைக் கூறுகிறோம்? அவற்றின் இலட்சணங்களையும் சுருக்கமாகக் கூறுக.

திசை விரதம், அனர்த்த தண்டவிரதம் மற்றும் போகோபபோக பரிமாண விரதம் இவை சிராவகர்களின்எட்டு மூல குணங்களை வளப்படுத்துவதால் இவற்றைக் குண விரதம் என்கின்றனர்.

திசை விரத இலட்சணம்:

சாகும் வரையிலும் சூட்க்ஷம பாபங்களிலும் ஈடுபடாமல் இருப்பதற்காக பத்து திசைகளிலும் எல்லை வகுத்து அவற்றைக் கடந்து 'வெளியே செல்லேன்' என்று சங்கல்பம் செய்வது திசை விரதம் என அழைக்கப்படுகிறது.

அனர்த்த தண்ட விரத இலட்சனம்:

திசை விரதத்தில் எல்லைக்குள்ளேயும் பயனற்ற பாபத்தோடு கூடிய யோகத்தில் ஈடுபடாமல் இருப்பதை அனர்த்த தண்ட விரதம் என்று கூறுகிறோம்.

போக உபபோகப் பரிமாண விரத இலட்சணம்:

பரிக்ரஹ பரிமாண விரதத்தில் வரையறுத்துக் கொண்ட விரத வரம்புக்குள்ளும் புலனாசையால் ஏற்படும் விருப்பத்தைக் குறைப்பதற்காக அவசியமான (இல்லற சுகத்திற்கு அவசியமான) புலனிச்சைக்கும் எல்லை கட்டுதல் அல்லது மேலும் குறைத்துக் கொள்ளுதல் போக உபபோக பரிமாண குண விரதம் எனப்படும்.

14. அனர்த்த தண்டதியாக விரதத்தில் விடத்தக்க, பிரயோஜனமற்ற பாபத்துடன் கூடிய யோகவடிவ அனர்த்த தண்டங்கள் எத்தனை உள்ளன? அவற்றின் பெயரையும் சுருக்கமான விளக்கத்தையும் தருக.

அனர்த்த தண்ட விரதத்தில் 1. பாப உபதேசம், 2. இம்சாதானம், 3. அபதியானம், 4. துச் சுருதி மற்றும் 5 பிரமாத சர்யா என ஐவகைப் பிரிவுகள் உள்ளன.

1. பாப உபதேசம்: பசு, மிருகம் மற்றும் பிற உயிர்களுக்குக் கலக்கத்தைத் தரத் தக்க

செயல்களை, வியாபாரம், இம்சை ஆரம்பம் மற்றும் ஏமாற்றுதல் முதலியன கூறும் கதைகளை / கருத்தைக் கூறுவது பாப உபதேசம் என்னும் அனர்த்த தண்ட விரதமாகும்.

2. இம்சா தானம்: இம்சைக்குக் காரணமாக விளங்கும் கத்தி, வாள், தோல் தைக்கும் ஊசி, நெருப்பு, ஆயுதங்கள், நஞ்சு மற்றும் சங்கிலி போன்ற பொருள்களைத் தானமாகக் கொடுப்பது இம்சா தானமாகும்.

3. அபதியானம்: பகை காரணமாக வதை செய்தல், கட்டுதல், துன்புறுத்தல், மற்றும் விருப்பத்தின் காரணமாக பிற பெண்கள் முதலான சிந்தித்தல், அபதியானம் (தீயசிந்தை) என்னும் அனர்த்த தண்ட விரதம் என்பர்.

4. துச் சுருதி: ஆரம்பம், பற்று, சாகசம் (மிக வியப்பான செயல்கள்) மூடநம்பிக்கை, பகைமை, ஆசை, கர்வம், பாலுணர்வு முதலிய எண்ணங்களில் களங்கம் உண்டாக்கும் சாஸ்திரங்களைக் கேட்பது துச் சுருதி என்னும் அனர்த்த தண்ட விரதமாகும்.

5. பிரமாத சர்யா: பயனின்றி பூமியைத் தோண்டுதல், நீரைக் கொட்டுதல், நெருப்பை உண்டாக்குதல், காற்றைத் தடுத்தல் அல்லது காற்றடிக்கச் செய்தல், பழம், பூ, இலை இவைகளைப் பறித்தல், நோக்க மின்றி சுற்றி அலைவது, மற்றவர்களையும் அலையவைத்தல் இவை போன்றவை யாவும் பிரமாத சர்யா என்னும் பெயருடைய அனர்த்த தண்டவிரதம் ஆகும்.

(பாப உபதேசம் முதலான ஐந்து பயனற்ற செயல்களை விலக்குதலால் அனர்த்த தண்டவிரதம் உண்டாகும்.)

15. போக, உபபோகம் என்பதற்கு விளக்கம் என்ன?

உணவு, வாசனை மலர், பூச்சுகள் ஆகிய ஐம்புல நுகர்வுப்பொருள்கள் ஒருமுறை உபயோகித்ததும் தீர்ந்துப் போபவை போகம் என்று சொல்லப்படுகிறது. ஆடை, ஆபரணம் போன்ற ஐம்புல நுகர்ச்சிப் பொருள்கள் ஒருமுறைக்கு மேலும் மீண்டும் உபயோகிக்கப்படுவதால் உபபோகம் எனச் சொல்லப்படுகிறது.

16. சிக்ஷா விரதம் என்று எதனைக் கூறுகிறோம்? அதனுடைய வகை மற்றும் இலட்சணங்களை சுருக்கமாகக் கூறுக.

முனி விரதங்களில் பயிற்சி தரும் விரதம் சிக்ஷா விரதம் என்று கூறப்படுகிறது. முனியாவதற்குரிய எந்த விரதங்களில் சிராவகர்ளுக்கு சிக்ஷே (பயிற்சி) கிடைக்கிறதோ அவை சிக்ஷா விரதம் ஆகும். அவை தேசாவகாசிகம், சாமாயிகம், புரோஷதோபவாசம், மற்றும் வையாவிருத்தம் என நான்கு வகைப்படும்.

1. **தேசாவகாசிகா சிக்ஷா விரதம்:** அணு விரதத்தை மேற்கொண்ட சிராவகர் நாள்தோறும் காலவரையறையோடு பரந்த வாழ்விடத்தைக் குறுக்கி வகுத்துக் கொள்வது தேசாவகாசிகா விரதம் ஆகும்.
2. **சாமாயிக சிக்ஷா விரதம்:** எல்லா இடங்களிலும் அதாவது எல்லை வரையறை செய்து கொண்ட இடத்திற்குள்ளேயும், வெளியேயும் முழுமையாக (ஸ்தூல மற்றும் சூட்சும வடிவில்) ஐந்து பாபங்களையும் ஒரு குறிப்பிட்ட காலம் வரை தியாகம் செய்தல் சாமாயிகம் என்னும் சிக்ஷா விரதமாகும்.

   (இந்த சாமாயிகம் ஏகாந்தமான இடத்தில் பத்மாசனம் (அமர்தல்), கட்காசனம், (நிற்றல்) முதலியவற்றில் ஏதேனும் ஒன்றில் நிலைத்திருந்து உடலசைவு இன்றி, சோம்பலின்றி செய்து மன சஞ்சலத்தைத் தடுத்து, மகிழ்வான சிந்தனையோடு ஒவ்வொரு நாளும் தக்க விதிமுறையுடன் செய்து வலிவு கூட்டவேண்டும்).
3. **புரோஷதோபவாச சிக்ஷா விரதம்:** ஒவ்வொரு சதுர்த்தசி மற்றும் அஷ்டமி நாள்களில் விரத

விதானத்தின் விருப்போடு நால்வகை உணவுகளை எப்போதும் தியாகம் செய்து இருப்பதே புரோஷதோபவாச சிக்ஷா விரதமாகும்.

இரத்தினகரண்ட சிராவகாசார இந்தி விளக்க உரையில் ஆசாரியர்கள் புரோஷதோபவாசத்தை உபவாசம், அனுபவாஸ், மற்றும் ஏகாசனம் எனப் பெயரிட்டு, தலை, இடை, கடை என மூவகைப்படுத்தி விரித்துள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது. நான்கு வகையான உணவையும் தியாகம் செய்தல் உபவாசம், தண்ணீர் மட்டும் ஏற்பது அனுபவாசம், மற்றும் ஒருமுறை உணவு கொள்ளுதல் ஏகாசனம் ஆகும். தன் சக்தியை மறைக்காமல் இவ்விரதத்தை நன்முறையில் கடைப்பிடித்து ஒழுகவேண்டும்.

4. **வையா விருத்த சிக்ஷாவிரதம்**

தானம் வையாவிருத்தயம் தர்மாய தபோதனாய குணணிதயே ।
அன பேக்ஷிதோபசாரோப கிரியமக்ருஹாய விபவேன ॥ (ர.க.சி. 111)

பொருள்: தபோ தனாய–தவ வடிவ செல்வத்தோடு கூடிய மற்றும், **குணணிதயே**–சம்யக் தர்சனம் முதலிய குணங்களில் கருவூலமான, **அக்ருஹாய**–இல்லறத்தைத் துறந்தவருக்கு பாவத்தாலும், திரவியத்தாலும் வீடு துறந்தவருக்கு, **விபவேன**–விதி நவதா பக்தி, திரவிய முதலிய சுத்தத்துடன், **அனபேக்ஷதோப சாரோபக் கிரியம்**–பிரதி தானம், மற்றும் பிரதி உபகாரம் இவ்வாறான காரணங்கள் இன்றி, **தர்மாய**–தர்மத்தின் காரணமாக, **தானம்**–தானம் கொடுக்கப்படுவது, **வையா விருத்தம்**–வையாவிருத்தம் என்று கூறப்படுகிறது.

வ்யாபத்திவ்யபணோத,: பதயோ: ஸம்வாஹனம் ச குணராகாத் ।
வையா வ்ருத்யம் யாவாணுபக்ரஹோஒ அன்யோ அபி சம்யமீனாம் ॥ (ர.க.சி. 112)

பொருள்: குணராகாத்– சம்யக் தர்சனமாகிய குணங்களின் விருப்பத்தால், **சம்ய மீனாம்**–தேச விரத மற்றும் சகல விரதத்தை மேற்கொண்ட புலனடங்கியவர்களுக்கு, **வ்யாபத்தி பணோத**: –வந்துள்ள நானாவிதமான ஆபத்துகளை விலக்குதல், **பதயோ**: –கால் கை முதலிய அங்கங்களை (ஸம்வாஹனம்) பிடித்து விடுதல், **ச** –மற்றும் இவை தவிர **அன்யோ அபி** –வேறு, **யாவான**– எவ்வளவு, **உபக்ரஹ**– உதவிகள் உண்டோ, **ஸ**–அவையெல்லாம், **வையா விருத்யம்**– வையாவிருத்யம் என்று அழைக்கப்படுகிறது.

ஆஹாரௌஷத யோரப்யுபகரணா வாசயோச்ச தானேன ।
வையாவ்ருத்யம் ப்ருவதே சதுராத்தமத்வேன சதுரஸ்ரா ॥ (ர.க.சி.117)

பொருள்: சதுரஸ்ர–நான்கு ஞானங்களுடைய கணதர தேவர்கள், **ஆகாரௌஷதயோ**: –ஆகார ஔஷத, **ச**–மற்றும், **உபகரணா வாசயோ**–உபகரணம் மற்றும் இருப்பிடம், **அபி**–சேர்ந்த, **தானேன**– தானத்தால், **வையாவிருத்யம்**–வையாவிருத்தியத்தை, **சதுராத்ம**–நான்கு வகையாக, **ப்ருவதே**– சொல்லுகிறார்கள்.

உண்டி மருந்தோடு உறையுள் உபகரணம் கொண்டுய்த்தல் நான்காம் வதம் (அ.செ.134)

17. **உபவாசத்தால் தியாகம் செய்யப்படும் நால்வகை உணவுகள் யாவை?**

உண்ணல், பருகல், தின்னல், நக்கல் இவை நான்கு வகை உணவுகள்.

சோறு, ரொட்டி பருப்பு ஆகியன உண்ணல் ஆகும்.

நீர், மோர், பால், முதலானவை பருகல் ஆகும்.

லட்டு, போண்டா, பர்பி போன்றவை தின்னல் ஆகும்.

திரட்டுப்பால் பாயசம் போன்றவை நக்கல் ஆகும் என்பர்.

18. **உபவாச நாள்களில் நால்வகை உணவைத் தியாகம் செய்வதோடு மேலும் எவ்வெவ்வற்றைத் தியாகம் செய்ய வேண்டும்?**

பஞ்சாணாம் பாபானாமலம் கிரியாரம்ப கந்தபுஷ்பாணாம் ।
ஸ்னானாஞ்சன னஸ்யானா–முபவாசே பரிஹ்ருதிம் குர்ய்யாத் ॥ (ர.க.ஸ்ரா.107)

பொருள்: **உபவாசே –** உபவாச நாளில், **பஞ்சாணாம் பாபாணாம் –** ஐந்து பாபங்கள், **அலங்கிரியா ஆரம்ப கந்த புஷ்பாணாம்** -அலங்காரம் செய்து கொள்ளுதல் உழவு முதலிய ஆரம்பத் தொழில்கள் செய்தல், சந்தனம் போன்ற வாசனைப் பொருள்களைப் பூசிக் கொள்ளுதல், பூமாலை, மலர் அணிதல், மற்றும் மலர்களை முகர்தல், **ஸ்னாஞ்சனனஸ்யாணாம் –** நீராடுதல் கண்மை அணிதல், மூக்குப்பொடி போடுதல் இவை எல்லாவற்றையும், **பரிஹ்ருதிம்–** தியாகம், **குர்ய்யாத்–** செய்தல் வேண்டும்.

19. இங்கு ஆசாரியஸ்ரீ உபவாச நாள்களில் நீராடுவதைத் தியாகம் செய்யுமாறு சிராவகர்களுக்கு ஏன் கூறினார்?

ஏனெனில், நீராடுவதனால் ஆரம்ப இம்சை உண்டாகிறது. மற்றும் நன்மை செய்யாத விருப்ப பாவனை (அப்ரசஸ்த ராக பாவம்) உண்டாகிறது.

20. பகவானுக்குப் பூஜை செய்பவர் அல்லது அபிஷேகம் செய்பவர் அதிதிகளுக்குத் தானம் தருபவர் மற்ற வேறு எவரும் இல்லாத சூழ்நிலையில் 'நீராடுதல் கூடாது' என்னும் நியமம் எவ்வாறு பொருந்தும்?

இப்படிப்பட்ட அவசிய காலங்களில் இல்லற சிராவகர்களுக்கு இந்த நியமம் இல்லை என்று அறிதல் வேண்டும். ஏனென்றால் ஜிநேந்திர தேவர் மற்றும் விரதிகளுக்கு வையா விருத்தம் செய்தல் முதன்மையான கடமை என்பதை அறிய வேண்டும். அதாவது உபவாச தினத்தில் இப்படிப்பட்ட அவசியத்தினால் குளிப்பது தோஷம் இல்லை என அறியவும்.

21. உபவாச நாள்களில் பவ்வியாத்மாக்கள் என்னென்ன செயல்கள் செய்தல் வேண்டும்?

இரத்தினகரண்டக சிராவகாசாரத்தில் ஆசாரிய சம்ந்தபத்ரஸ்வாமி கூறி இருப்பதாவது.

தர்மாம்ருதம் ஸத்ருஷ்ண:, ஸ்ரவணாப்யாம் பிபது பாயயேத்வான் யான் ।
ஞானத்தியானபரோ வா, பவத்துரபவசன்னதந்த்ராலு: ॥ (ர.காசி. 108)

பொருள்: உபவசன்– உபவாசம் மேற்கொண்டவர், **சத்ருஷ்ணா–**தீவிர விருப்பத்தோடு **ஸ்ரவணாப்யாம்–**காதுகளால், **தர்மாம்ருதம்–**தர்ம வடிவ அமுதத்தைத், **பிபது–**தான் பருகி, **வ–** அல்லது, **அன்யான்–**மற்றவர்களைப், **பாயையேத்–**பருகச் செய்தல், **வ–**அல்லது, **அதந்த்ராலு:–** சோம்பலில்லாமல் இருந்து, **ஞானத்தியான பர: –**ஞானத்திலும் தியானத்திலும் ஈடுபாடு, **பவது–**கொள்ளவேண்டும்.

அறவுரை கேட்டல் நினைத்தல் உரைத்தல் திறவதிற் செய்யப் படும் . (அ.செ.124)

22. ஆகம நூல்களில் அணு விரதம் முதலியவற்றின் அதிசாரங்களையும் மற்றும் விரதங்களின் பாவனைகளைப் பற்றியும் சொல்லப்பட்டிருக்கும் கருத்துகளுக்கு என்னச் சிறப்பு?

விரதம் மேற்கொண்ட ஜீவன்கள் வாயிலாகத் தாங்கள் ஏற்றுக்கொண்ட விரதத்தில் குற்றமில்லாது செய்து முடிப்பதற்காகவும், விரத ஒழுக்கங்களில் தூய்மை அதிகரிக்கவும் ஆகம நூல்களில் விரதங்களில் அதிசாரம் மற்றும் விரதங்களின் பாவனை குறித்த கருத்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன. (இரத்ன கரண்ட ஸ்ராவகாச்சாரம் மூன்றாவது அத்யாயம் மற்றும் தத்துவார்த்த சூத்திரம் 6, 7ஆம்அதியாயங்களிலும் காணலாம்).

23. அணு விரதத்தின் பெருஞ்சிறப்பினால் தேவர்கள் யாரை குளத்து நீருக்கு மேல் சிம்மாசனம் வைத்து அமர்த்தினார்கள்? அந்தப் பெருமைக்குரிய மனிதன் யார்?

அணு விரதத்தின் பெருமையால் சிறப்பு அடைந்தவன் மாதங்க சண்டாளன் ஆவான்.

24. சத்ய விரத பரீக்ஷைக்காக கைகளில் நெருப்பு வைக்கப்பட்ட பிறகும் கூட யாருடைய கைகள்

எரியவில்லை? அவன் யார்?

தனதேவன் என்னும் வியாபாரி அவன்.

25. அசௌரியாணு விரதம் (கள்ளாமை) கைக் கொண்டதால் போர்வாள் கூட மலர் மாலையாக மாறி பெருமை சேர்த்தது. அத்தகைய விரதமேற்ற இராஜகுமாரன் யார்?

அந்த இராஜ குமாரன் பாரி ஷேணன் ஆவான்.

26. நகரத்தை மூடியிருந்த முக்கிய கதவு நல்லொழுக்கம் உடைய எந்தப் பெண்மணியில் கால் பட்டதும் திறந்து கொண்டது? அந்த சீலவிரதப் பெண்மணி யார்?

நீலி என்னும் ஜைன புத்திரியே அந்தப் பெண் ஆவான்.

27. சுக்கில பக்ஷம் மற்றும் கிருஷ்ண பக்ஷம் காலங்களில் பிரம்மசர்ய (அசீதாரா) விரதத்தை முழுமையாகத் தூய்மையாகக் கடைபிடித்து ஒழுகிய சிராவக, சிராவகியர் திருமணம் செய்து கொண்ட பிறகும் கூட மேற்கொண்டு ஒழுகி பின் முனி ஆரியிகாவானவர்கள் யார்?

அந்த சிராவக சிராவகியர் பதிபத்தினியாகிய விஜயன் மற்றும் விஜயா ஆவர்.

28. தேவகதி தேவர்கள் யாருடைய பரிக்கிரக பரிமாண விரதத்தின் மகிமை கேட்டு சோதிக்க வந்தார்கள். அந்த ராஜ புத்திரர் யார்?

பரிக்கிரக பரிமாண விரதத்தின் சிறப்பால் உயர்ந்த ராஜபுத்திரர் ஜெயகுமார் ஆவார்.

29. முனிகளுடைய சகல சாரித்திரம் எவ்வாறு ஏற்படுகிறது?

முனிகளுடைய சகல சாரித்திரம் பஞ்ச மகாவிரதம் முதலியவற்றோடு 28 மூல குண வடிவத்தில் ஏற்படுகிறது. ஆசாரிய ஸ்ரீ குந்தகுந்த தேவர் முனிகளுடைய சாரித்திரம் பற்றி சாரித்திர பாகுடத்தில் இவ்வாறு கூறியுள்ளார்:

பஞ்சிந்தியஸம்வரணம் பஞ்சவயா பஞ்சவிம்சகிரியாஸூ।
பஞ்சஸமிதி தயகுத்தி ஸஞ்ஜமசரணம் ணிராயாரம் ॥ 28 ॥

பொருள்: ஐம்பொறிகளைப் புலனின்பங்களில் செலுத்தாமல் தடுத்தல், ஐந்து மகா விரதம் மற்றும் ஒவ்வொரு விரதத்திற்கும் ஐந்து ஐந்து பாவனை மேற்கொண்டு (இருபத்தைந்து பாவனைகளுடன்) ஐந்து சமிதி, மூன்று குப்தி வடிவில் சாரித்திரத்தை அனுசரிப்பதால் முனிவர்களுடைய சம்யமாசரணம் உண்டாகிறது.

முனிவர்களுடைய இருபத்தெட்டு மூல குணங்கள்: குந்தகுந்த தேவர் தம் பிரவசன சார நூலில் கூறுகிறார்:

வதஸமிதிந்தியரோதோ லோசாவாஸயமசேலமண்ஹாணம் ।
கிதிஸயண மதந்தவணம் டிதிபோயணமேகபத்தம் ச ॥ 9 ॥
ஏதே கலு மூலகுணா ஸமணாணம் ஜினவரேஹிம் பண்ணத்தா

பொருள்: ஐந்து மகாவிரதம், ஐந்து சமிதி, ஐம்புலனடக்கம், ஆறு அத்யாவஸ்ய (அவசியம் செய்ய வேண்டியவை) கடமைகள், மயிர் பறித்தல், ஆடை இல்லாமை, நீராடாமை, தரையில் படுத்தல், பல் துலக்காமை, நின்றுகொண்டு உணவு ஏற்றல் மற்றும் ஒருவேளை ஆகாரம் இவ்விதமாக சிரமண முனிகளுடைய 28 மூல குணங்களை ஜினேந்திர பகவான் கூறியுள்ளார்.

30. மகாவிரதம் என்று எதனைக் கூறுகிறோம்? அதன் லக்ஷணத்தைக் கூறுக.

மகான் புருஷர்கள் ஏற்றுக்கொள்ளும் விரதம் மகா விரதமாகும். மனிதன் எதை மேற்கொள்வதால் பெருமை அடைகிறானோ அது மகா விரதம் எனப்படுகிறது.

மற்றும் ஸ்தூல, சூக்ஷமத்தோடு இம்சை முதலான ஐந்து பாபங்களும் விலக்கப்படுகிற விரதம் மகா விரதம் எனப்படுகிறது.

31. ஐந்து மகாவிரதங்களைச் சுருக்கமாக விளக்குக.

1. அகிம்சா மகாவிரதம்: மனம், மொழி, மெய் இவற்றால் செய்தல், செய்வித்தல், உடன்படுதல் என்னும் மூன்று வகையிலும் **3 x 3 = 9** ஆக ஒன்பது வழிகளிலும் திரச மற்றும் ஸ்தாவர இம்சையைத் தியாகம் செய்வது அகிம்சா மகாவிரதம் ஆகும்.

2. சத்திய மகாவிரதம்: விருப்பு, வெறுப்பு நீக்கி சமதா எண்ணத்தோடு பொய் பேசாது இருத்தல் சத்திய மகாவிரதமாகும்.

3. அசௌரிய மகாவிரதம்: யாரும் கொடுக்காத பொருளையும் விட்டுச் சென்ற, முற்றிலும் மறந்து விட்ட பொருளையும் ஒன்பது வகையாலும் கைக்கொள்ளாமை கள்ளாமை என்னும் அசௌரிய மகாவிரதமாகும்.

4. பிரம்மசர்ய மகாவிரதம்: சேதனா, அசேதனா (ஒவியம், சிற்பம் வடிவம்) ஆகிய எந்த விதமான பெண்களிடத்தும் விருப்பம் கொள்ளும் பாலுணர்வைத் தியாகம் செய்வது அல்லது பதினெட்டாயிரம் விதமான சீலத்தை பரிபாலிப்பது பிரம்மசர்ய மகாவிரதமாகும்.

5. அபரிக்கிரஹ மகாவிரதம்: தனம் தான்யம் முதலான பத்து விதமான புறப் பற்றுகளிடத்தும், மித்யாத்துவம் (அறியாமை) குரோதம், மானம், மாயை, லோபம் மற்றும் ஹாஸ்யம் முதலிய ஒன்பது நோ கஷாயத்தோடு பதினான்கு விதமான அந்தரங்க பற்றுகளைக் கொள்ளாது இருத்தல் அல்லது அணு அளவு பொருளிடத்தும் பற்று இல்லாது இருத்தல் அபரிக்கிரக மகாவிரதமாகும்.

32. ஸமிதி என்று எதைக் கூறுகிறோம்? அதன் லக்ஷணத்தையும் கூறுக.

பிராணிகளுக்கு உண்டாகும் துன்பத்தைப் போக்குவதற்காக (அகிம்சை கைக்கொள்ள) மிக்க எச்சரிக்கையோடு வருதல்–போதல், பேசுதல், உண்ணல்–பருகல், எடுத்தல்–வைத்தல், மலம் – நீர், கழித்தல் இவைகளைச் செய்தல் ஸமிதியாகும்.

33. ஐந்து சமிதிகளின் பொருளைச் சுருக்கமாகக் கூறுக.

1. ஈர்யா ஸமிதி: தர்ம காரியம் நிமித்தமாக பகலில் நாலு முழம் தூரம் பூமியைப் பார்த்து நடந்து செல்லுதல் ஈர்யா ஸமிதியாகும்.

2. பாஷா ஸமிதி: விகதைகளையும், தீய மொழிகளையும் நீக்கி இதமான, மென்மையான பிரியமான ஆகமத்திற்கு அனுகூலமான மொழியைப் பேசுவதே பாஷா ஸமிதியாகும்.

3. ஏஷணா ஸமிதி: 46 குற்றங்களில்லாது 32 அந்தராயங்களையும் கடைப்பிடித்து பகலில் ஆகாரத்தை ஏற்பது ஏஷணா ஸமிதியாகும்.

4. ஆதான நிக்ஷேபணா ஸமிதி: ஆகமம் முதலிய தர்ம உபகரணங்களை எடுக்கும் போதும், வைக்கும் போதும், மயிற்பீலியினால் சுத்தம் செய்து எச்சரிக்கையோடு செயலில் ஈடுபடுதல் ஆதான நிக்ஷேபணா ஸமிதியாகும்.

5. பிரதிஷ்டாபனா ஸமிதி: உயிர்கள் இல்லாத பூமியில் நிலத்தை ஆய்ந்து நோக்கி மலம், மூத்திரம் முதலிய உடல் அசுத்தத்தைக் கழித்தல் பிரதிஷ்டாபனா ஸமிதியாகும்.

34. ஈர்யா சமிதியைக் கடைபிடிப்பதில் மிக அவசியமான நான்கு தூய்மைகள் யாவை?

1. மார்க்க சுத்தி: செல்லும் வழியில் எறும்பு முதலிய திரச ஜீவன்களுடைய நடமாட்டம் இல்லாத இடம். முளை, விதை புல், சேறு இவை இல்லாது இருத்தல் மார்க்க சுத்தி.

2. உத்யோத சுத்தி: சந்திரன், நக்ஷத்திரம் முதலியவற்றின் ஒளி தெளிவில்லாமல் இருக்கும். மற்றும் விளக்கின் ஒளி பரவலாக ஒளியுடன் இருப்பதில்லை. ஆதலால் சூரியனுடைய தெளிவான பிரகாசமான எல்லா இடங்களிலும் பரவியுள்ள ஒளியே உத்தியோத சுத்திக்கு உரியதாகும்.

3. உபயோக சுத்தி: கால் வைக்கும் இடங்களில் உயிர்களைப் பாதுகாக்கும் பாவனை உபயோக சுத்தி எனப்படும்.

4. ஆலம்பனா சுத்தி : குரு, தீர்த்தம், மற்றும் யதிகளுக்கு வணக்கம் செய்தல் முதலியவற்றிற்காக,

சாஸ்திரத்தின் அரும்பொருளை அறிவதற்காக, துறவிகளுக்கு ஏற்ற இடத்தைத் தேடிக்காண, வையாவிருத்தம் செய்ய, குறிப்பிட்ட இருப்பிடமின்மையால் நலம் தரும் இடம் வேண்டியும், துன்பத்திலிருந்து வெற்றி பெறுவதற்காக, பன்னாட்டு மொழிகளைப் பயில, சீடர்களுக்கு அறிவுரை புகட்ட முனிகள் நடந்து செல்வது ஆலம்பனா சுத்தியாகும்.

35. ஐம்புலனடக்கம் என்று எவற்றைக் கூறுகிறோம்?

மெய், வாய், மூக்கு, கண், செவி இந்த ஐம்பொறி தொடர்பான வேண்டிய–வேண்டாத புலன்களில் பொருள்களில் விருப்பு, வெறுப்பு நீக்குதல் ஐம்புலனடக்கம் என்பர்.

36. ஆறு அவசியமான கடமைகள் என்று எவற்றைக் கூறுகின்றனர்?

1. சாமாயிகம் செய்தல் 2, இருபத்து நான்கு தீர்த்தங்கரர்களுக்கும் வந்தனை(ஸ்துதி), 3. வணக்கம் செய்தல், 4. பிரதிக்ரமணம் செய்தல், 5. பிரத்தியாக்யானம் செய்தல், 6. காயோத்சர்க்கம் செய்தல் இவை ஆறும் அவசியமான கடமைகள் என்கின்றனர்.

37. முனிவர்களுடைய மற்ற ஏழு மூல குணங்கள் யாவை?

1. மயிர்பறித்தல், 2. ஆடை இன்றி இருத்தல், 3. நீராடாமை, 4.நிலத்தில்கிடத்தல் (காய்ந்த புல், மரப்பலகை மீது படுத்தல்), 5. பல் துலக்காமை, 6.நின்று கொண்டு உணவு ஏற்றல், 7. ஒரு நாளைக்கு ஒருமுறை உணவு ஏற்றுக்கொள்ளல்.

38. முனிகளுக்குரிய 28 மூல குணங்களில் நிர்வாணம் (திகம்பர வடிவம்) கூறப்பட்டுள்ளது. அந்நிலை அடைந்த பிறகுதான் அதாவது ஆடையைத் துறந்த பிறகே சித்த கதி கிடைக்கிறதா? ஆடையுடன் முக்தி அடைய முடியாதா?

இல்லை, ஆடையுடன் ஒருபோதும் மோக்ஷபதவி கிடைப்பதில்லை. ஆசாரியர் ஸ்ரீ குந்த குந்த சுவாமி சூத்திரபாகுடத்தில் கூறியுள்ளார்.

ணவிஸிஜ்சயி வத்ததரோ ஜிணஸாஸனே ஜயி வி ஹோயி நித்யயரோ ।
ணக்கோ விமோக்கமக்கோ ஸேஸா உம்மக்கயா ஸவ்வே ॥ 23 ॥

பொருள்:ஜின சாசனத்தில் ஆடை உடையவர் அவர் தீர்த்தங்கராக இருந்தாலும் கூட முக்தியை அடைய முடியாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. நிர்க்கிரந்த திகம்பர வடிவமே முக்திக்கு வழி; ஏனையவை தீய நெறி, முக்திக்கு மாறான பாதை.

39. ஆடையோடு முக்தி இல்லை என்பது ஏன்?

ஏனெனில் ஆடை மற்றும் ஆடை மீது இருக்கும் விருப்பம் பரம தியானத்தில் மற்றும் முக்தியில் விக்னம் (குறைபாடு) செய்வது ஆகும்.

40. குப்தி என்று எதைக் கூறுகிறோம்? பொருள் மற்றும் வகைகளைச் சுருக்கித் தருக.

உண்மையான வடிவில் மனம், மொழி, மெய் இவற்றின் யோகத்தை (இயக்கத்தை) ஒரு நிலைப்படுத்துவது குப்தியாகும். 1. மனோ குப்தி: மனத்தின் ஓட்டத்தைக் கட்டுப்படுத்துவது மனோ குப்தி. 2. வசன குப்தி, பேச்சை கட்டுக்குள் அடக்குதல் வசன குப்தி, 3. காய குப்தி: உடலை அடக்குதல் காய குப்தியாகும்.

41. முனிகளுடைய ஐந்து ஒழுக்கங்களையும் (பஞ்சாசாரம்) சுருக்கமாகக் கூறுக.

முனிகளுடைய ஐந்து ஒழுக்கங்கள்

1. ஞானாசாரம்: காலம், விநயம், உபதானம், பகுமானம், அனின்ஹவ, பொருள், வியஞ்ஞனம், ததுஉபயம் என சம்யக் ஞானத்தினுடைய எட்டையும் ஏற்றல் ஞானா சாரமாகும்.

2. தர்சனாசாரம்: 1. நிஷ்ஷங்கித், 2. நிஷ்காம்ஷித் 3. நிர்விசிகித்சா, 4. அமூடதிருஷ்டி, 5. உபகூஹணம், 6. ஸ்திதிகரணம், 7. வாத்சல்யம், 8.பிரபாவனா என சம்யக் தர்சனத்தினுடைய எட்டு அங்கங்களோடு முழுமை அடைவது தர்சனாச்சாரம் ஆகும்.

3. சாரித்திராசாரம்: பஞ்ச மகாவிரதம், பஞ்ச சமிதி, மற்றும் மூன்று குப்தி ஆக பதின்மூன்று விதமாகச் சாரித்திரத்தை ஏற்பது சாரித்ராசாரம் ஆகும்.

4. தபாசாரம்: அனசனம், அவமோதர்யம், விருத்திபரிசங்க்யானம், ரசபரித்தியாகம், விவித்த சையாசனம், காய கிலேசம் , பிராயசித்தம், விநயம், வையாவிருத்தம், சுவாத்தியாயம், தியானம் மற்றும் வியுத்சர்க்கம் இப்பன்னிரண்டு தவங்களைக் கைக்கொள்வது தபாசாரம் ஆகும்.

5. வீர்யாசாரம்: இந்த எல்லா (வீர்யாசாரம் தவிர) ஆசாரங்களிலும் வளர்ச்சி பெறுவதற்கான பலத்தை மறைக்காத பலம் வீர்யாச்சாரமாகும்.

42. முனிகளின் 12 தவத்தின் இலட்சணத்தைக் கூறுக.

1. அனசன தபம்: சம்யமத்தின் வளர்ச்சிக்காக சிறப்பான ஞானாரதனா மற்றும் உண்மையான தியான சித்திக்காக நால்வகை ஆகாரத்தைத் தியாகம் செய்தல் அனசனத் தவமாகும்.

2. ஆவமோதர்ய தபம்: விருப்பு, வெறுப்பு முதலான கசாயங்கள் குறையவும், மற்றும் மகிழ்ச்சி ஸ்வாத்தியாயம் (நூல்கள் படித்தல்) மற்றும் தியான சித்திக்காகவும் தேவைக்குக் குறைவான ஆகாரத்தை ஏற்றல் ஆவமோதர்ய தபம் ஆகும்.

3. விருத்தி பரிசங்க்யான தபம்: உணவு சம்பந்தமான விருப்பத்தை நீக்குவதற்காக உணவு ஏற்க விருப்பமுள்ள முனி தெரு, வீடு, உணவு முதலான வற்றில் நியமம் ஏற்று சரியைச் செல்வது விருத்தி பரிசங்க்யான தபம்.

4. ரச பரித் தியாக தபம்: புலன்களை வெற்றி காண உப்பு, இனிப்பு நெய், பால், தயிர் எண்ணெய், இந்த ஆறு ரசங்களில் சிலவற்றையோ, ஒன்றையோ, நியமம் கொண்டு தியாகம் செய்வது ரச பரித் தியாக தபம் ஆகும்.

5. விவிக்த சய்யாசன தபம்: விரதத் தூய்மைக்காகவும், சுவாத்தியாயம் இடையூறு இன்றி செய்யவும், தியான முன்னேற்றம் அடையவும், பசு, பெண், முதலானவர் இல்லாத, தூய்மையான பவித்திர இடத்தில் படுத்தல், ஆசனம் இடுதல் விவிக்த சய்யாசன தபம் ஆகும்.

6. காயக்லேச தபம்: வெப்பம், மழை குளிர், இம்மூன்று யோகமேற்று பிரதிமா யோகத்தில் நிலைத்திருத்தல், இவைகளை ஏற்று புத்தி பூர்வமாக சுகத்தைத் தியாகம் செய்வது. முக்திப் பாதையை பிரபாவனா செய்யும் காயக்கிலேசம் என்னும் தவமாகும்.

7. பிராயச்சித்த தபம்: விழிப்பின்மை மற்றும் அறியாமை இவற்றால் உண்டாகிவிட்ட குற்றங்களைத் திருத்திக் கொள்ளுதல் பிராயச்சித்த தபமாகும்.

8. விநய தபம்: மும்மணி, மும்மணியில் நிலை பெற்றவர்களுக்கு மற்றும் தேவ சாஸ்திர, குருவிற்குப் பணிவு காட்டுதல் விநய தபமாகும்.

9. வையாவிருத்யதபம்: உடலாலும், தேவைப்படும் பொருளாலும் முனிகளுக்குச் சேவை செய்தல் வையாவிருத்ய தபமாகும்.

10. சுவாத்யாய தபம்: சர்வக்ஞனால் அருளப்பட்டு உண்மை பரம்பரையில் வரும் ஜினவாணியை சிந்தித்து, அதைப் படித்து கேட்டு, எழுதி சோம்பலின்றி ஸ்வ ஆத்மாவிடம் வசிப்பது சுவாத்யாய தபமாகும்.

11. வியுத்சர்க்க தபம்: அந்தரங்க பகிரங்க பற்றுகள் மேல் வரும் 'எனது' என்னும் சங்கல்பம் போன்றவற்றை விலக்குதல் வியுத்சர்க்க தபமாகும்.

12. தியான தபம்: ஆர்த்த, ரௌத்திர தியானங்களைத் துறந்து மன சஞ்சலத்தை நீக்கி, தர்ம, சுக்கில தியானத்தில் ஆழ்ந்து இருத்தல் தியான தபமாகும்.

43. முனிகளுடைய இந்த 12 தவங்களில் முதல் ஆறு தவங்கள் புறத்தவம் என்றும், அடுத்த ஆறு தவங்கள் அந்தரங்கத் தவம் என்றும் ஏன் சொல்லப்படுகின்றன?

ஏன் எனில் அனசனம் முதலிய முதல் ஆறு தவங்களைச் செய்வதில் வெளித்திரவியத்தின் (உடல் மற்றும் உடலுக்குத் தேவையான உணவு போன்றவற்றைத் தியாகம் செய்வதில்) முதன்மை அளிக்கப்படுகிறது. மற்றும் இந்த ஆறு தவங்களை ஜைனரல்லாதவர் கூடச் செய்ய முடியும். ஆகையால் இவை புறத்தவம் என்று கூறப்படுகின்றன. அடுத்து பிராயச்சித்தம் முதலான ஆறு தவங்களைச் செய்ய நிர்மல ஆத்மத் திரவியம் முதன்மை வகிக்கிறது. மற்றும் இந்த ஆறு தவங்களை உண்மை வடிவில் சம்யக் திருஷ்டி ஆத்ம ஞானிசாது ஜனங்கள் தான் செய்யமுடியும். மற்றவர்களால் இயலாது. ஆகையால் இவை அந்தரங்கத் தவம் என்று அழைக்கப்படுகின்றன.

44. இந்தப் பன்னிரண்டு தவங்களைச் செய்வதால் என்ன பயன் உண்டாகும்?

சம்யக் திருஷ்டி ஜீவனுக்கு இந்தத் தவம் சம்வரை. நிர்ஜரைகளுக்குக் காரணமாய் விளங்குகின்றன. தத்வார்த்தசூத்திர மகா சாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ''தபசா நிர்ஜரா ச'' தவத்தால் சம்வரை, நிர்ஜரைகள் உண்டாகின்றன.

45. முனிவர்கள், கர்மங்களின் சம்வரை மற்றும் நிர்ஜரைக்காக, சமதாபாவத்தோடு பொறுத்துக் கொள்ளும் 22 பரீஷகங்கள் என்னென்ன?

1. **க்ஷுதா:** உபவாசம், அவமோதர்யம் மற்றும் ரசபரித்தியாகம் முதலான காரணங்களாலும் கூட பெருகி வரும் பசியின் துன்பத்தை சமதாபாவத் தோடு சகித்துக் கொள்ளுதல் க்ஷுத பரிஷக ஜெயம் ஆகும்.
2. **திருஷா:** கோடை காலத்து சூரியனின் தீவிர வெப்பத்தாலும், அனேக உபவாசம், ரசபரித் தியாகம், கொடிய நோய், தீவிரமாக சஞ்சரித்தல் ஆகிய காரணங்களால் உண்டான தாகத்தினுடைய வேதனையை சமதா பாவத்தோடு பொறுத்துக் கொள்ளுதல் திருஷா எனும் பரீஷக ஜெயம் ஆகும்.
3. **சீதம்:** குளிர் காலத்தில் பனி விழுதல், புயல் சூறாவளி, நதிக்கரை ஆகியவற்றால் ஏற்படும் குளிரின் வேதனையை சமதா பாவத்தோடு ஏற்றுக்கொள்ளுதல் சீத பரிஷக ஜெயமாகும்.
4. **உஷ்ண:** கோடைக் காலத்தில் வெப்பக்காற்று, கடுமையான வெப்பம், மலை, பாறை, முதலிய இடங்களில் உண்டாகும் வெப்பத்தால் உண்டாகும் வேதனையை சமதா பாவத்தோடு பொறுத்துக் கொள்ளுதல் உஷ்ண பரீஷக ஜெயமாகும்.
5. **தம்ச மசக:** கொசு . ஈ, எறும்பு தேள் போன்ற ஜீவன்கள் கடிப்பதால் உண்டாகும் வேதனையைச் சகித்துக் கொள்வது தம்ஸ மஸக பரீஷக ஜெயமாகும்.
6. **நக்ன:** பிரம்மசர்ய சித்திக்காகவும் ஆத்மத் தூய்மை பெறவும், உத்தமத் தியானத்தை மேற் கொள்ளவும் சாது பரமேஷ்டிக்கு தகுந்த இயல்பான பிறந்த மேனியுடன் விளங்கும் நக்ன நிலையோடு பயமோ சஞ்சலமோ இன்றி சமதாநிலையில் இருப்பது நக்ன பரீஷக ஜெயமாகும்.
7. **அரதி:** பகை, விபரீதமான இடம் இவற்றால் ருசியின்மை – விருப்பமின்மை உண்டாகும். சம்யமத்தை ஏற்றுக்கொண்டு இத்தகைய அரதி (ருசியின்மையை) வெற்றி காண்பதே அரதி பரீஷக ஜெயமாகும்.
8. **ஸ்த்ரி:** பெண்களால் தோன்றும் உள்ளக் கிளர்ச்சி, சிரிப்பு, பரிகாசம், ஆசையை உண்டாக்கும் இசை இவை போன்ற பெண்களால் தோன்றும் இடையூறுகள் உண்டான போதும் அவற்றை சமதா பாவத்தோடு பொறுத்து வெற்றி கொள்ளுதல். சம்யம விரதத்தில் சிறிதளவு கூட சஞ்சலம் அடையாமல் இருத்தல் (ஸ்த்ரி) பெண் பரீஷக ஜெயமாகும்.
9. **சர்யா:** காட்டில் சிங்கத்தைப் போல பயமின்றி வெற்றுப் பாதங்களால் தீவிர பயணம் செய்யும் போது கால் முழங்கால் ஆகியவற்றில் வேதனைகள், களைப்பு ஏற்பட்ட போதும்

வருத்தம் அடையாமை வேதனைகளை சமாதாபாவத்தோடு பொறுத்துக் கொள்ளுதல் சரியா பரீஷக ஜெயமாகும்.

10. **நிஷத்யா:** தியான காலத்தில் அல்லது மற்ற முக்கியமான செயல்களில் நியமம் மேற்கொண்ட காலம் வரை ஆசனத்திலிருந்து தளர்ச்சி அடையாமல் இருத்தல், வருத்தம் முதலியன கொள்ளாது இருத்தல் நிஷத்யா பரீஷக ஜெயமாகும்.
11. **சய்யா:** இரவு நேரத்தில் மேடுபள்ளம், கரடு முரடான பூமியில் ஏற்படும் வேதனைகளைப் பொறுத்துக் கொண்டு ஒரே பக்கத்தில் படுப்பது சய்யா பரீஷக ஜெயமாகும்.
12. **ஆக்ரோஷ:** கீழ் மக்களால் சொல்லப்பட்ட கடூரமான இழிவான பழி சொற்களைக் கேட்டும் கூட அமைதியுடன் சமதா பாவத்தையும் ஏற்றுக் கொள்வது ஆக்ரோஷ பரீஷக ஜெயமாகும்.
13. **வத:** கொம்பு, வாள், கல் ஆகியவற்றால் தாக்கும் ஜீவன்களிடத்து கோபம் (பகை) கொள்ளாமல் அந்த துன்பத்தைச் சமதா பாவத்தோடு சகித்துக் கொள்ளுதல் வத பரீஷக ஜெயமாகும்.
14. **யாசனா:** எப்படிப்பட்ட மாறுபட்ட சூழ்நிலை நேர்ந்த போதிலும் கூட உணவு, ஔஷதம் போன்ற பொருள்களை யாசிக்காமல் இருத்தல் யாசனா பரீஷக ஜெயமாகும்.
15. **அலாப :** உணவு, மருந்து ஆகிய பொருள் லாபம் ஏற்படாமல் இருந்த போதிலும் கூட அலாபத்தில் லாபத்தைப் போன்ற அனுபவத்தைப் பெற்று சமதா பாவத்தை மேற்கொள்வது அலாப பரீஷக ஜெயமாகும்.
16. **ரோக:** கடுமையான நோய் ஏற்பட்ட போதும், நோயின் வேதனையை சமதா பாவத்தோடு சகித்துக் கொள்ளுவதும் வியாதியைப் போக்குவதில் முயற்சி செய்யாமல் மருத்துவம் செய்து கொள்வதில் உற்சாகம் காட்டாது இருத்தல் ரோக பரீஷக ஜெயமாகும்.
17. **திருண ஸ்பரிசம்:** ஈர்யா சமிதியில் கவனம் செலுத்தி நடந்து சொல்லும் போது அசுப கர்ம உதயத்தால் கால்களில் கல், முள், புல் ஆகியன தைத்துக் கொள்வதாலும், உறுத்தினாலும் கூட வருத்தம் அடையாமல் சமதா பாவத்தை மேற்கொள்வது திருண ஸ்பரிஸ பரீஷக ஜெயமாகும்.
18. **மல:** தன் தூய்மையற்ற உடலைப் பார்த்து வெறுப்படையாமையும், நீராடாமையும், அழுக்கிற்குப் பிரதிகாரமாக இச்சை கொள்ளாமையும் மல பரீஷக ஜெயமாகும்.
19. **சத்கார புரஸ்கார:** தன்னுடைய புகழ்ச்சி இகழ்ச்சிகளில் சமபாவம் கொள்வதும் தன்னிடத்தில் அதிக குணங்கள் இருந்தாலும்கூட, யாரும் மரியாதை, மதிப்பு, புகழ்தல் செய்யாத போதிலும் கூட வருத்தம் ஏதும் அடையாமல் சமதா நிலை கொள்வதே சத்கார புரஸ்கார பரீஷக ஜெயமாகும்.
20. **பிரஜ்ஞா :** தன்னிடம் ஞானம் மிகுதியாக இருந்தாலும் கூட அபிமானம், கர்வம் கொள்ளாதிருத்தல் பிரஜ்ஞா என்னும் பரீஷக ஜெயமாகும்.
21. **அஞ்ஞான:** ஞானத்தின் குறைவினால் மற்றவர் அஞ்ஞானி என்று கூறி புறக்கணித்தாலும் கூட அந்த உபசர்க்க சமயத்தில் சமதா பாவம் கொள்வது துக்கம் அடையாது இருத்தல் அஞ்ஞான பரீஷக ஜெயமாகும்.
22. **அதர்சன:** நீண்ட காலம் வரை கோர தப ஆசாரம் செய்தும் கூட விசேஷ ஞானம், அதிசய ருத்தி, முக்தி கிடைக்காவிட்டாலும் கூட இரத்தினத்ரைய வடிவ மோக்ஷ மார்க்கத்தில் நம்பிகை இன்மை கொள்ளாமையோடு நிரந்தர முனி பாதையில் கர்ம நிர்ஜரை செய்வதில் முயற்சியோடு இருத்தல் அதர்சன பரீஷக ஜெயமாகும்.

மேலே சொல்லிய 22 பரீஷக ஜெயங்களும் சமதா பாவத்தை வளர்ப்பவைகளாகும்.

46. இந்த மிக உயர்ந்த இரத்தினத் திரையத்தை மேற் கொள்வதற்கான தகுதி யாருக்கு இருக்கிறது?

இந்த மிக உயர்ந்த இரத்தினத் திரையத்தை மேற் கொள்வதற்கு கர்ம பூமியில் உள்ள வைராக்கியம் நிறைந்த பவ்விய மனமுடைய பஞ்சேந்திரிய சம்யக் திருஷ்டி ஜீவன் தான் தகுதி படைத்த ஜீவன் ஆகும்.

47. தேவகதி தேவர்களிடத்தில் விரதம், சம்யமம் ஏதேனும் இருக்கிறதா?

இல்லை. தேவகதி தேவர்களிடத்தில் ஆகம விதிப்படி எந்த விரதமும் சம்யமும் ஒருக்காலும் இல்லை. தேவகதி தேவர் அசம்யக் சம்யக் திருஷ்டி வரைதான் ஆக முடியும். (நான்காம் குணஸ்தானம்) மேலும் அத்தேவர்களிலும் கூட ஒரு சில தேவர்கள் மட்டும் சம்யக் திருஷ்டியாக இருக்கிறார்கள். எல்லோரும் அல்லர். ஏனென்றால் மேலே வினாவில் கூறியபடி புத்தி பூர்வமாக பஞ்சாணு விரதம் போன்ற விரதங்களை ஏற்பவர்தான் விரதி என்றழைக்கப்படுகிறார்.

48. கர்ம பூமியில் உள்ள மனமுடைய பஞ்சேந்திரிய சம்யக்திருஷ்டி விலங்கு விரதம் ஏதேனும் எடுக்க இயலுமா?

ஆம். கர்ம பூமியில் மனமுடைய பஞ்சேந்திரிய பவ்விய சம்யக்திருஷ்டி விலங்கு ஜீவனுக்கு ஐந்தாம் குணஸ்தானத்திற்குத் தகுதியுள்ள பஞ்சாணு விரதம் வரையிலும் ஏற்க முடியும். மற்றும் அது பஞ்சாணு விரதங்களோடு சல்லேகனா கூட மேற்கொள்ள முடியும். ஜடாயு பறவை, திரிலோக மண்டல யானை இவை இதற்கு உதாரணங்களாகும்.

49. பவ்விய, மற்றும் அபவ்விய ஜீவன் என்று யாரைக் கூறுகிறோம்?

சம்யக் தர்சனம், சம்யக் ஞானம் மற்றும் சம்யக் சாரித்திரத்திற்கு வரத் தகுதி உடையவர்கள் மற்றும் முக்தி அடைவதற்கான தகுதி பெற்றவர்கள் பவ்வியர் என்றழைக்கப்படுகிறார்கள். யார் இரத்தினத்திரையும் மற்றும் முக்தி அடைவதற்கு தகுதி பெறவில்லையோ அவரை அபவ்விய ஜீவன் என்கிறோம்.

50. ஜீவனுக்கு, இரத்தினத்திரையத்தைப் பெறுவதற்கான வைராக்கியம், எவ்வாறு ஏற்படும்?

அனுப்பிரேக்ஷை (பன்னிரு சிந்தனைகள்) மூலம் சம்சாரம், மற்றும் உடல் ஆகியனவற்றின் இயல்பு பற்றிய சிந்தனைகளில் தோயும் பவ்விய ஜீவனுக்கு இரத்தினத் திரையத்தைப் பெற வேண்டும் எனும் வைராக்கியம் ஏற்படும்.

51. பவ்விய ஜீவன்களுக்கு வைராக்கியம் வர பாவனை செய்யப்படும் அந்த அனுப்பிரேக்ஷைகள் (பன்னிருசிந்தனைகள்) யாவை?

அனுப்பிரேக்ஷைகள் (பன்னிரண்டு பாவனை) இலக்கணம்:

1. **அநித்யம் அனுப்பிரேக்ஷா இயல்பு :** இளமை, செல்வம், குடும்பம், மற்றும் மக்கள் முதலான புலனிச்சைகள் வான வில்லைப் போலவும், மேகத்தால் தோன்றும் வடிவம் போலவும் மாறக் கூடியவை. இவ்வாறு சிந்தித்தல் அநித்தியம் என்னும் நிலையாமை சிந்தனையாகும்.
2. **அசரணம் அனுப்பிரேக்ஷா இயல்பு :** ஜீவனுக்கு இந்த உலகத்தில் கிடைத்த எந்த ஒன்றும் அடைக்கலமாக இருக்காது. சிங்கத்தின் வாயில் சிக்கிய மானை யாரும் காப்பாற்ற முடியாதது போல மரணம் வந்தபோதும் தேவ, அசுர, வித்யாதரர், சக்ரவர்த்தி ஆகியவர்களுக்குக் கூட மணி, மந்திரம், தந்திரம் போன்ற எத்தகைய உபாயங்களும் காப்பாற்றும் திறன் படைத்தவை அல்ல. இவ்வாறு சிந்தித்தல் அடைக்கலமின்மை என்னும் சிந்தனை கொள்வதே அசரண சிந்தனையாகும்.
3. **சம்சார அனுப்பிரேக்ஷா இயல்பு:** சம்சார ஜீவன் சுப, அசுப, பலன்களை அனுபவித்துக்கொண்டு நாற்கதிகளிலும் சுழன்று கொண்டிருக்கிறது. துக்கத்தால் நிறைந்து

உண்மையான சிறிதளவு சுகம் கூட இல்லாமல் இருக்கிறது. இதில் பொய்யான க்ஷண நேரத்தில் தோன்றும் சுகம் மின்னலென தோன்றி மறைகிறது. வாள் முனையில் தடவிய தேனின் இனிப்பை நாவால் சுவைப்பதற்கு ஒப்பான துக்கமயமானது. இவ்வாறு சிந்தித்தல் பிறவிச் சுழற்சி என்னும் சம்சார சிந்தனையாகும்.

4. **ஏகத்வம் அனுப்பிரேக்ஷா இயல்பு:** இந்த ஜீவன் பிறப்பு, இறப்பு, சுகம், துக்கம், ஆகிய நிலைமைகளைத் தனியாகவே தான் அனுபவிக்கிறது. தாய், தந்தை, உடன்பிறப்பு, சுற்றம் ஆகிய எவருமே இந்த ஜீவனுக்கு உண்மையான துணையாவதில்லை. எல்லோரும் தன் நலத்தோடு தான் வாழ்கின்றனர். இவ்வாறு சிந்தித்தல் அடிக்கடி சிந்திப்பது ஏகத்துவம் என்னும் தனிமை சிந்தனையாகும்.
5. **அன்யத்வம் அனுப்பிரேக்ஷா இயல்பு :** உடல் கூட, சேர்ந்திருக்கும் பாலும் நீரும் போல ஆன்மனில் வேறானதே. உடல் கூட வேறானதே என்னும் போது செல்வம், மாளிகை, வைபவம், உறவினர் போன்றவைகள் எப்படி என்னுடையதாக ஆகமுடியும். இவ்வாறு அடிக்கடி (அனு பிரேக்ஷை) சிந்திப்பது அன்யத்துவ சிந்தனையாகும்.
6. **அசுசி அனுப்பிரேக்ஷா இயல்பு:** இந்த உடல், இரத்தம், மாமிசம் போன்ற தூய்மைற்ற பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. இதிலுள்ள ஒன்பது வாயில்கள் வழியாக அசுத்தம் வெளியேறுகிறது. இதனை எவ்வளவு தான் உண்பித்து, ஊட்டி, அழகுபடுத்தினாலும் கூட அது தன் இயல்பான அசுத்தத்தைத் துறப்பது இல்லை. எனவே தூய்மையற்ற, அசுசி மயமான, அபவித்ர, உடலின் மேல் விருப்பம் கொள்ளாத சிந்தனையே அசுசி என்னும் அனுப்பிரேக்ஷையாகும்.
7. **ஆஸ்ரவம் அனுப்பிரேக்ஷா இயல்பு:** மித்யாத்துவம், பிரமாதம், அவிரதம், கசாயம், மற்றும் யோகத்தால் புதிய கர்ம ஊற்று உண்டாகிறது. ஊற்று தான் துன்பங்களுக்கு அடிப்படைக் காரணம். இத்தகைய ஊற்றிலிருந்து தப்பிப்பதற்கான வழிகளில் சிந்தனை செய்வது ஆஸ்ரவம் என்னும் சிந்தனையாகும்.
8. **சம்வரை அனுப்பிரேக்ஷா இயல்பு:** மித்யாத்வம், யோகம், விரதமின்மை இவைகளால் உண்டாகும் கசாயங்களை விலக்குவதால் ஆத்மாவிடம் வந்து சேரும் எல்லா கர்மங்களும் தடைபடுகின்றன. இப்படிப்பட்ட சிந்தனையில் மீண்டும் மீண்டும் ஆழ்வதே செறிப்பு என்னும் அனுப்பிரேக்ஷாவாகும்.
9. **நிர்ஜரை அனுப்பிரேக்ஷா இயல்பு:** தனக்குரிய காலம் வந்தபிறகு பலனைக் கொடுத்து தீர்ந்து போகும் கர்மத்தை உதிர்ப்பு என்று சொல்வர். ஆனால் இந்த நிர்ஜரையால் முக்தி கிட்டாது. இது சுயமாகக் கழிந்து போவது. இவ்வாறின்றி முயற்சியோடு பன்னிரண்டு தவங்களால் நிர்ஜரை செய்வதால் முத்தி சுகத்தின் காட்சி கிடைக்கும் இத்தகைய பாவனையே நிர்ஜரை சிந்தையாகும்.
10. **லோகம் அனுப்பிரேக்ஷா இயல்பு:** ஆறு திரவியங்களின் மயமாக 343 கயிறு கன பிரமாணமாக இந்த உலகம் இருக்கிறது. இதை யாரும் உண்டாக்கவில்லை. காப்பதும், அழிப்பதும் இல்லை. அனாதி அனந்தமான இவ்வுலகத்தில் சம்சார ஜீவாத்மாக்கள் அனந்த முறை பிறந்து இறந்து வாழ்கின்றன. இவ்வாறு சிந்தனை செய்வது லோகாணுப்பிரேக்ஷாவாகும்.
11. **போதி துர்லபம் அனுப்பிரேக்ஷா இயல்பு:** இந்த ஜீவன் அனேக முறை அரசன், அகமிந்திரன் போன்ற பதவிகள் பெற்றுள்ளது. ஆனால் நற்காட்சி, நன்ஞானம் நல்லொழுக்கம் இவற்றின் நற்பேறு கிடைப்பது அதி துர்லபம் – அருமையாகும். ஆனால் இம் மும்மணியின் பேறு ஒருமுறை

ஜீவன் பெற்று விட்டால் முக்திக்கு வழி உண்டாகும். இத்தகைய உத்தமமான பாவனையே போதி துர்லபமாகும். (கிடைத்தற்கு அரிது சிந்தனை)

12. **தர்ம அனுப்பிரேக்ஷா இயல்பு:** 'அகிம்சா பரமோ தர்மம்' தான் அடிப்படை அறம் . இதுவே இரத்தினத்திரைய வடிவமாகிறது. பவ்விய ஆத்மாக்களுக்கு நன்மை, மங்களம் உண்டாக்க வல்லது. இத்தகைய எண்ணத்தால் துன்பங்கள் மறைகின்றன. நிலையான முக்தி சுகம் கிடைக்கிறது. இவ்வாறு சிந்தனை செய்வது தர்மானு பிரேக்ஷாவாகும்.

52. இரத்தினத்திரையத்தை முழுமையாக மேற்கொள்பவர்கள் யார் யார்?

முழு இரத்தினத் திரையம் ஆறாவது, ஏழாவது முதலான குணஸ்தானத்தில் இருக்கக் கூடிய சகல சம்யமி மகாமுனிவர்களுக்கு அமைகிறது.

53. முனிகளுடைய பரியாயப் பெயர்கள் யாவை? முனிவர்களின் அப்பெயர்களை விளக்குக.

1.	அநகாரர்	–	வீட்டைத் துறந்தவர்
2.	நிர்க்கிரந்தரர்	–	கிரந்த–பரிக்ரகம் இல்லாதவர்
3.	சாது	–	ஆத்ம சாதனை புரிபவர்
4.	திகம்பரர்	–	பத்து திசையை ஆடையாகக் கொள்பவர்
5.	யோகி	–	குளிர், வெப்பம், மழை இவைகளை சமதா பாவத்தோடு ஏற்பவர்
6.	சிரமண்	–	முக்திக்கு முயற்சி மேற்கொள்பவர்
7.	சம்யமி	–	சகல சம்யமத்தை ஏற்பவர்.
8.	விரதி	–	அகிம்சை முதலான மகா விரதங்களைக் கடைபிடிப்பவர்
9.	சமயம்	–	உத்தம ஆத்மா
10.	தபஸ்வி	–	உபவாசம் முதலான 12 தபங்களை செய்பவர்
11.	முனி	–	(பாபத்தில்) மௌனம் மேற்கொள்பவர்
12.	ரிஷி	–	ருத்தி தாரர்களாக இருப்பவர்
13.	பிக்ஷூ	–	பிக்ஷா விருத்திக்காக சிராவகர் வீடுகளில் சுத்த ஆகாரம் ஏற்பவர்.
14.	யதி	–	நிஜ ஆத்மத் தூய்மைக்கு முயற்சியும் பயிற்சியும் செய்பவர்.

54. எந்த முனிவருடைய தூய சாரித்திரத்தின் சிறப்பினால் தானாகவே மலையே பொன் ஆகியதோ அதைக் கண்டு முன் பரியாய சகோதரன் பர்த்ருஹரி மானம் அழிந்தது. பிறகு அதே பர்த்ருஹரி ஜைன தர்மத்தின் பெருமையைக் கண்டு அறிந்து திகம்பர முனிவர் ஆனார். அத்தகைய தூய சாரித்திரம் பெற்றிருந்த முனிவரர் யார்?

அத்தகைய திகம்பர முனிவரர் சுபச்சந்திராசாரியர் ஆவார்.

55. அரசன் சிரேணிகன் பாம்பை கழுத்தில் போட்ட பிறகும் எண்ணற்ற எறும்புகள் கடித்த போதும் தன் தபசாரித்திரத்தில் தவறாமல் தபம் செய்த திகம்பர முனிவர் யார்?

அத்தகைய தவ சிரேஷ்ட முனிவர திகம்பரர் ஸ்ரீ யசோதரர் ஆவார்.

56. சமவசரணத்தில் தீக்ஷை ஏற்று காட்டில் தவம் (தியானம்) செய்த போது தன் தலையில் சூடான நெருப்பு வளையம் வைத்ததால் தலை நெருப்பினால் பற்றிக் கொண்ட பிறகும் தன் சகல சாரித்திரத்தில் சிறிதும் வழுவாமல் பரீஷக ஜெயத்தால் சமதா பாவம் கொண்டு கேவலியான அந்த திகம்பர முனிவர் யார்?

சமவ சரணத்தில் தீக்ஷை ஏற்ற அந்த திகம்பர முனிவர் கஜகுமாரர் ஆவார்.

****

அதிகாரம் –12.

ஏழு தத்துவங்கள் ஆறு மெய்பொருள்கள் வருணனை

சம்யக்த்வ உற்பத்தியின் நிமித்ததால் எந்த சாஸ்திரத்தின் வருணனை அறியப்படுகிறதோ, அந்த சாஸ்திரம் ஏழு தத்துவம், ஆறு மெய்ப்பொருள்கள் பற்றிய உண்மை ஸ்வரூபத்தினை எடுத்துச் சொல்கிறது. இவைகளைப் பற்றி அறியாமல் ஜைன தர்மத்தின் மூல நூல்களை (ஸித்தாந்தங்களை) புரிந்து கொள்ளமுடியாது. உயிரும், உயிரல்லாதனவும் அடிப்படைத் தத்துவங்களாகும். இவை இரண்டும் சேர்வதாலும், விலகுவதாலும் மற்ற தத்துவங்கள் தோன்றுகின்றன. உயிரில் உயிரல்லாதன (கர்மம்) வருதல் ஆஸ்ரவம் ஆகும். உயிரில் உயிரல்லாதன (கர்மம்) இரண்டர (அன்னோன்யமாக) கலத்தல் பந்தம் ஆகும். தர்ம காரியங்கள் செய்யும் போது உயிரில் உயிரில்லாதன (பாப கர்மம்) வராமலிருத்தல் சம்வரை தத்துவமாகும். இந்த மித நிலை உணர்வை சம்வரை என்று உணரவேண்டும். உயர்ந்த தியான நிலையில் முனிவர்கள் பாபம், புண்ணியம் இரண்டையும் சம்வரை செய்கின்றனர். உயிரில் இருந்து உயிரல்லாதன (கர்மம்) கொஞ்சம் கொஞ்சமாக விலகுவது நிர்ஜரை ஆகும். பெரிய தவம், தியானம் முதலியவைகளால் உயிரல்லாதவற்றை (கர்மத்தை) உயிரிடமிருந்து முழுவதுமாக விலக்குவது மேக்ஷதத்துவமாகும். ஆறு திரவியங்களும் முதலிரண்டு தத்துவங்களில் அடங்கும். ஏனைனில் உயிர் தனித்த்துவம், உயிரல்லாதன ஐந்து திரவியங்களும் உயிரில்லாத தத்துவத்தில் அடங்கும். உயிர் தத்துவமும் உயிரல்லாதன தத்துவமும், இவற்றின் கூட்டாலும், பிரிவாலும் உண்டாகும் மற்ற ஐந்து தத்துவங்களையும் அறியாமல் ஜீவனையும், அஜீவனையும் அடையாளம் காணமுடியாது. தத்துவத்தை தெளிவாகத் தெரிந்து கொள்ள இந்த 12 ஆம் அதிகாரத்தில் ஏழு தத்துவங்கள் ஆறு மெய்பொருள்கள் பற்றிய சிறப்பான வருணணை கொடுக்கப்பட்டுள்ளது.

1. தத்துவம் என்னும் சொல்லின் பொருள் யாது?

தத்துவம் என்னும் சொல் சாதாரணமானது. பொருள் எந்த வடிவில் இருக்கிறதோ அதற்கு அந்த வடிவம் இருப்பது தத்துவம் என்னும் சொல்லின் பொருளாகும்.

2. ஏழு தத்துவங்கள் என்று எவற்றைக் கூறுகிறோம்?

ஜீவ, அஜீவ, ஆஸ்ரவ, பந்த, சம்வரை, நிர்ஜரை மற்றும் மோக்ஷம் ஆகியவற்றை ஏழு தத்துவங்கள் என்கிறோம்.

3. ஜீவ தத்துவம் என்று எதைக் கூறுகிறோம்?

எதனிடத்தில் ஞானம், தர்சனம் (அறிதல், பார்த்தல்) இருக்கிறதோ அதை ஜீவ தத்துவம் என்று கூறுகிறோம்.

4. ஜீவன் எத்தனை வகைப்படும்?

மனமுள்ளவை, மனம் இல்லாதவை என மனத்தைக் காரணமாகக் கொண்டு இரண்டு வகை ஜீவன்கள் உள்ளன.

5. ஜீவனை வேறு வகையாக எவ்வாறு வகைப்படுத்தலாம்?

திரச ஜீவன், தாவர ஜீவன் எனவும் வகைப் படுத்தலாம்.

6. தாவர ஜீவன் என்று எதைக் கூறுவர்?

தாவர நாமகர்ம உதயத்தால் மண், நீர், நெருப்பு, காற்று, மற்றும் வனஸ்பதியாக பிறவி எடுக்கும்

ஜீவன்களைத் தாவரம் என்று கூறுகிறோம்.

7. திரச ஜீவன் என்று எதைக் கூறுவர்?

திரச நாமகர்ம உதயத்தால் இரண்டுபொறி, மூன்று பொறி, நான்கு பொறி மற்றும் ஐந்து பொறி உடைய பிறவி எடுக்கும் ஜீவனை திரச ஜீவன் என்று கூறுவர்.

8. ஐந்து இந்திரியங்களை வரிசையாகப் பொருளோடு குறிப்பிடுக.

1. ஸ்பரிச இந்திரியம் (மெய்) தொடு உணர்வு ஏற்பட காரணமானது.
2. ரசன இந்திரியம் (வாய்) சுவை உணர்வு ஏற்பட காரணமானது.
3. கிராண இந்திரியம் (மூக்கு) வாசனை உணர்வு ஏற்பட காரணமானது.
4. சக்ஷு இந்திரியம் (கண்) பார்வை உணர்வு ஏற்பட காரணமானது.
5. ஸ்ரோத்ர இந்திரியம் (செவி) கேட்டல் உணர்வு ஏற்பட காரணமானது.

9. ஏகேந்திரிய ஜீவனை எவ்வாறு அறிவது?

ஸ்பரிச இந்திரியம் மட்டும் உள்ள ஜீவன் ஏகேந்திரிய ஜீவனாகும். மண் உடலி, நீருடலி, நெருப்புடலி, காற்றுடலி, மற்றும் வனஸ்பதி ஆகியவை.

10. இரண்டு இந்திரிய ஜீவன்கள் என்று எவற்றைக் கூறுவர்?

ஸ்பர்சன, ரசன இந்திரியங்களைப் பெற்றுள்ள சங்கு, புழு போன்ற ஜீவன்கள் இரண்டு இந்திரிய ஜீவன்களாகும்.

11. மூன்று இந்திரிய ஜீவன் என்று எவற்றை அழைப்பர்?

ஸ்பர்ச, ரசன, கிராண இம்மூன்று இந்திரியங்களைப் பெற்றுள்ள எறும்பு, தேள், மூட்டைப்பூச்சி போன்றவை மூன்று இந்திரிய ஜீவன்களாகும்.

12. நான்கு இந்திரிய ஜீவன் என்று எவற்றைக் கூறுவர்?

ஸ்பர்ச, ரசன, கிராண, சக்ஷு இந்நான்கு இந்திரியங்களைப் பெற்றுள்ள வண்டு, ஈ, போன்றவை நான்கு இந்திரிய ஜீவன்கள் ஆகும்.

13. பஞ்சேந்திரிய ஜீவன்கள் என்று எவற்றைக் கூறுவர்?

ஸ்பர்ஸ, ரசன, கிராண, சக்ஷு, ஸ்ரோத்ர இவ்வைந்து பொறிகள் உடைய மனிதன், தேவன், நாரகன், சிங்கம், பசு, எருது முதலான ஜீவன்களை பஞ்சேந்திரிய ஜீவன்கள் என்று அழைக்கின்றனர்.

14. அஜீவ தத்துவம் என்ற எதைக் கூறுவர்?

அறியவும், பார்க்கவும் (ஞான, தர்சனம்) சத்தியற்றவைகளை அஜீவன் என்று கூறுவர், புற்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம், காலம் முதலானவைகளை அஜீவதத்துவம் என்று கூறுவர்.

15. ஆஸ்ரவ தத்துவம் என்று எதைச் சொல்வர்?

மனம், மொழி, மெய் இவற்றின் சஞ்சலத்தின் காரணமாய் உயிரில் வரும் கர்மத்தை ஆஸ்ரவம் என்பர்.

16. ஆஸ்ரவத்தில் எத்தனை வகைகள் உள்ளன?

ஆஸ்ரவத்தில 57 வகைகள் உள்ளன.

ஐந்து மித்யாத்வம்: 1. ஏகாந்த மித்யாத்வம், 2. விநய மித்யாத்வம், 3. விபரீத மித்யாத்வம், 4. ஸம்சய மித்யாத்வம், 5. அஞ்ஞான மித்யாத்வம்.

பன்னிரண்டு அவிரதம் : ஆறு காயத்தைக் (மண், நீர், நெருப்பு, காற்று, வனஸ்பதி, மற்றும் திரஸகாயம் உடையவை) காப்பாற்றாமை, ஐம்பொறிகளை அடக்காமை – மன அடக்கம் இல்லாமை.

இருபத்தைந்து கசாயங்கள் :

அனந்தானுபந்தி 1. குரோதம், 2. மானம், 3. மாயை, 4. லோபம்.

அப்ரத்தியாக்யானம் : 1. குரோதம், 2. மானம், 3. மாயை, 4. லோபம்

பிரத்யாக்யானம் : 1. குரோதம், 2. மானம், 3. மாயை, 4. லோபம்

சஞ்சுவலனம் : 1 குரோதம், 2. மானம், 3. மாயை, 4. லோபம்.

நோகசாயம் 1. ஹாஸ்யம், 2. ரதி, 3. அரதி, 4. சோகம், 5. பயம், 5. ஜுகுப்சா, 7. ஸ்த்ரீ வேதம், 8. புருஷவேதம், 9. நபும்சக வேதம்

பதினைந்து யோகம்

மனோ யோகம் :

1. சத்ய மனோ யோகம், 2. அசத்ய மனோ யோகம், 3. உபய மனோ யோகம், 4. அனுபய மனோ யோகம்,

வசன யோகம் :

1. சத்ய வசன யோகம், 2. அசத்ய வசன யோகம், 3. உபய வசன யோகம், 4. அனுபய வசன யோகம்.

காய யோகம் :

1. ஒளதாரிய காய யோகம், 2. ஒளதாரிக மிஸ்ர காய யோகம், 3. வைக்ரியக காய யோகம், 4. வைக்ரியக மிஸ்ர காய யோகம், 5. ஆஹாரக காய யோகம், 6. அஹாரக மிஸ்ர காய யோகம், 7. கர்மண காய யோகம்.

17. பந்த தத்துவம் என்ற எதைச் சொல்கிறோம்?

உயிரில் கசாயம் மற்றும் யோகம் காரணமாக கார்மண, வர்கணைகள் கர்ம வடிவில் வந்து தங்குவதை பந்த தத்துவம் என்று சொல்கிறோம்.

18. பந்தம் (கட்டு) எத்தனை வகைப்படும்? பெயரைக் குறிப்பிடுக.

பந்தம் நான்கு வகையின. அவை : 1. ப்ரக்ருதி பந்தம், 2. பிரதேச பந்தம், 3. ஸ்திதி பந்தம், 4. அனுபாக பந்தம்.

19. நான்கு வகை பந்தங்களுக்குப் பொருள் என்ன?

1. கர்மத்தினுடைய சுபாவத்தை **ப்ரக்ருதி பந்தம்** என்கிறோம். ஞானாவரணீயத்தின் சுபாவம் (இயல்பு) ஞானம் உண்டாவதைத் தடை செய்வதாகும் (2) கர்ம வடிவாகும் கார்மண வர்கணைகள் (அதனுடைய எண்ணிக்கை) பிரதேச பந்தம் என்கிறோம். (3) கர்மங்கள் அதன் ப்ரக்ருதி இயல்பான வடிவத்தில் குறுகிய அல்லது நீண்ட காலம் வரை தங்கியிருப்பதை ஸ்திதி பந்தம் என்கிறோம். எழுபது கோடா கோடி கடல் காலம், அந்தர் முகூர்த்த காலம் என்பது போல. (4) கர்மத்தின் பலன் விசேடம் அல்லது பலனளிக்கும் சக்தியை அனுபாக பந்தம் என்று சொல்வர். எவ்வாறெனில் சில கர்மத்தின் ரச விசேட பலத்தின் பயனால் அதிக துக்கமும் மற்றம் சில கர்ம உதயத்தால் குறைந்த துக்கமும் ஏற்படுகிறது. இவ்வாறே சுகமும்.

20. கசாயம் என்பதன் பொருள் என்ன?

குரோதம், மானம், மாயை மற்றம் லோப வடிவ ஆத்மாவினுடைய விபாவ பரிணாமத்தை கசாயம் என்கிறோம்.

21. யோகம் என்று எதைச் சொல்கிறோம்?

மன, மொழி, உடலின் நிமித்தமாக ஆன்மப் பிரதேசத்தில் சஞ்சலம் ஏற்படுவதை யோகம் என்கிறார்கள்.

22. யோகத்தால் எந்த பந்தம் ஏற்படுகிறது? மற்றும் கசாயத்தால் எந்த பந்தம் ஏற்படுகிறது?

யோகத்தால் ப்ரக்ருதி, பிரதேச பந்தங்கள் ஏற்படுகின்றன. கசாயத்தால் ஸ்திதி, அநுபாக பந்தங்கள் ஏற்படுகின்றன.

திரவ்யசங்ரக சாஸ்திரத்தில் கூறப்பட்டிருப்பதாவது :

பயடிட்டிதி அணுபாகப்பதேச பேதா து சதுவிதோ பந்தோ ।
ஜோகா பயடிபதேஸா, டிதிஆணுபாகா கசாயதோ ஹோந்தி ॥ 33 ॥

பொருள் : கர்ம பந்தம், பிரக்ருதி, ஸ்திதி அனுபாக மற்றும் பிரதேச வகையால் நான்கு விதமாகச் சொல்லப்படுகிறது. யோகத்தால் ப்ரக்ருதி மற்றும், பிரதேச பந்தமும், கசாயத்தால் ஸ்திதி மற்றும் அனுபாக பந்தமும், ஏற்படுகின்றன.

23. சம்வரைத் தத்துவம் என்று எதைக் கூறுகிறோம் ?

உயிரில் கர்மங்கள் வருவதை தடுத்து விடுவது சம்வரை தத்துவம் ஆகும்.

24. சம்வரை தத்துவத்தின் வகைகள் யாவை?

சம்வரையில், 1. குப்தி, 2. சமிதி, 3. தர்மம், 4. அனுப்பிரேக்ஷா, 5. பரீஷகஜெயம் மற்றும் 6. சாரித்திரம் இவ்விதமாக ஆறு வகைகள் உள்ளன. இவற்றின் மூலமாக சம்வரை ஏற்படுகிறது.

25. நிர்ஜரா தத்துவம் என்று எதைச் சொல்கிறோம்?

உயிரில் முன்னால் கட்டியுள்ள கர்மத்தில் ஒரு பகுதி கழிதல் நிர்ஜரை தத்துவம் என்று சொல்லப் படுகிறது.

26. நிர்ஜரை எத்தனை வகைப்படும்?

சவிபாகம், அவிபாகம் என நிர்ஜரை இரு வகைப்படும்.

27. சவிபாகம், அவிபாகம் நிர்ஜரைகளை எடுத்துக் காட்டுடன் விளக்குக.

உயிரில் கட்டப்பட்டிருக்கும் ஒரு கர்மம் அது தன்னுடைய ஸ்திதியின் காலம் பூர்த்தியான பிறகு உதயத்திற்கு வந்து தானே கழிந்து போவதை சவிபாக நிர்ஜரை என்பர். (எ.டு) கிளையில் காய்த்துள்ள மாம்பழம் தானே தன்னுடைய பழுக்கும் நிலையை அடைந்த பிறகு மரத்தில் தானே பழமாக மாறுவது.

ஒரு கர்மத்தனுடைய ஸ்திதி முழுமை அடைவதற்கு முன்பாக அந்த கர்மத்தை முயற்சியினால் உதிர்க்கச் செய்வது அவிபாக நிர்ஜரையாகும். (எ.டு) கிளையில் தொங்கும் பழம் ஒரு மாதத்தில் பழுக்கக்கூடியதாக இருந்து அதை கிளையிலிருந்து பறித்து வேப்பிலை போன்ற தழைகளுக்கு இடையில் வைத்து மூட்டம் போட்டு ஒரு வாரத்திற்குள்ளாகவே (அதற்குரிய காலம் வருவதற்கு முன்பே) பழுக்க வைக்கப்படுவது.

28. சகாம நிர்ஜரை, அகாம நிர்ஜரை என்று எதைக் கூறுவர்?

சமதா பாவத்தோடு பாப கர்மங்களை சம்வரை பூர்வமாக சம்யக்த்வ தியாகம், தவங்களின் மூலமாக கர்மங்கள் நிர்ஜரை செய்யப்படுவதை சகாமநிர்ஜரை என்பர்.

சுதந்தரமில்லாத அஞ்ஞானிகள் பசி, தாகம், முதலிய துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளும் போது கர்மம் நிர்ஜரை ஆகிறது. அதனை அகாம நிர்ஜரை என்பர்.

29. மோக்ஷ தத்துவம் என்று எதைச் சொல்லுவர்?

உயிரிலிருந்து முழுமையாக எட்டு கர்மங்கள், க்ஷயமாவது நீங்குவது மோக்ஷ தத்துவம் ஆகும்.

30. எட்டு கர்மங்கள் என்னென்ன, பெயர்களைக் கூறுக.

1. ஞானாவரணீயம், 2. தர்சனாவரணீயம், 3. வேதனீயம், 4. மோகனீயம், 5. ஆயுள், 6. நாமம், 7. கோத்திரம், 8. அந்தராயம் ஆக கர்மங்கள் எட்டு வகையாகும்.

31. இந்த எட்டு வினைகளில் எவை காதி வினைகள்? எவை அகாதி வினைகள்?

ஞானாவரணீயம், தர்சனாவரணீயம், மோகனீயம், மற்றும் அந்தராயம் காதி வினைகள். வேதனீயம், ஆயுள், நாமம், கோத்திரம் ஆகிய இந்நான்கும் அகாதி வினைகள் என்று

அழைக்கப்படுகின்றன.

32. காதி கர்மம் அகாதி கர்மம் என்பதன் பொருள் என்ன?

காதி கர்மம் என்பதன் பொருள் எந்த கர்மங்கள் உதயத்தால் ஜீவனுடைய சேதனா சாரித்திரம், சுகம், வீரியம், முதலான அனுஜீவி (ஆன்ம) குணங்கள் அழிக்கப்படுகின்றனவோ அவற்றைக் காதி கர்மங்கள் என்கின்றனர்.

எந்தக் கர்மங்களின் உதயத்தால் ஜீவனுடைய அனுஜீவி (ஆன்ம) குணங்கள் அழிவு பெறுவதில்லையோ அவை அகாதி கர்மங்கள் என்று சொல்லுகின்றனர்.

33. ஏழு தத்துவங்களையும் அறிய ஒரு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

சம்சாரம் ஒரு சமுத்திரம் போன்றது. அதில் படகு ஓட்டி ஜீவன் ஆகும். படகில் ஒரு ஓட்டை வழியாக நீர் உள்ளே வருவது ஆஸ்ரவம். படகில் நீர் வந்து தங்குவது பந்தம். படகினுள் நீர் வந்த ஓட்டையை அடைப்பது சம்வரை. படகில் வந்துவிட்ட நீரை முயற்சியால் வெளியேற்றுவது நிர்ஜரை. படகிலிருந்து எல்லா தண்ணீரையும் அப்புறப்படுத்தி விடுவது மோக்ஷமாகும்.

34. சில சாஸ்திரங்களில் தேவ சாஸ்திர குருவைக் கூட தத்துவமாகக் கூறப்பட்டிருக்கிறதே, ஏன்?

ஆம். இது முற்றிலும் சரி. தேவ சாஸ்திர குருவை தத்துவமாகச் சொல்லுதல் பரந்த விளக்கமுடையதாகும். சாஸ்திரம் (ஆகமம்) எனும் தத்துவத்தில் ஜீவாதி ஏழு தத்துவங்களும் அடங்கி விடுகின்றன.

திரவியங்கள்

35. திரவியத்தின் இலட்சணம் என்ன?

திரவியத்தின் இலட்சணம் நிலைப்புத் (சத்)தன்மையாகும்.

36. 'சத்' (நிலைப்புத்தன்மை) என்றால் என்ன?

நிலைப்புத்தன்மை (சத்) என்றால் தோன்றல், அழிதல், நிலைத்தல் இவற்றால் ஆனது. அதாவது எது இருக்கிறதோ அவையெல்லாம் தோன்றல், அழிதல், நிலைத்தல் இவையாவும் கூடிய தொன்றாகும். அதில் தோன்றல், அழிதல், நிலைத்தல் இல்லையானால் அல்லது இம்மூன்றில் ஒன்று இல்லையென்றாலும் அதாவது ஒன்று குறைந்தாலும் சத் இருக்க முடியாது என அறிதல் வேண்டும்.

37. தோன்றல், அழிதல், நிலைத்தல் என்று எதனைச் சொல்கிறோம்? எடுத்துக்காட்டுடன் விளக்குக.

1. திரவியம் அல்லது பொருளில் புதிய பரியாயம் தோன்றுவதை தோன்றுதல் என்கிறோம். பொன் குடத்தை மகுடமாக செய்த பிறகு மகுடப் பரியாயம் தோன்றல் ஆகும்.
2. திரவியம் (அ) பொருளில் முன்னிருந்த பரியாயம் அழிவதை அழிதல் என்கிறோம். பொன்குடப் பரியாயத்திலிருந்து மகுடப் பரியாயம் உண்டான போது குடம் என்னும் முன் இருந்த பொன்னின் பரியாயம் அழிவது அழிதல் ஆகும்.
3. திரவியம் (அ) பொருள் தோன்றல், அழிதல் பரியாயங்களைப் பெற்றிருந்தாலும் குணம் நிலையாக நிற்பதை நிலைத்தல் என்கிறோம். பொன் என்னும் திரவியம் குடம், மகுடம் போன்ற மாற்றங்களைப் பெற்று வந்தாலும் பொன் புற்கலத்தன்மையில் மாற்றம் இன்றி நிலையாக இருக்கிறது.

38. திரவியம் எவ்வாறு இருக்கிறது?

திரவியம் குணபரியாயத்தோடு இருக்கிறது.

39. குணம் என்று எதனைக் கூறுகிறோம்?

பொருளின் முழுதும் எப்பொழுதும் இருக்கக்கூடிய சக்தியின் பெயர் குணம் ஆகும்.

40. பரியாயம் (மாற்றம்) என்று எதனைச் சொல்கிறோம்?

குணத்தன்மையின் நிலைமையை பரியாயம் என்ற பெயரால் அழைக்கிறோம்.

41. இவ்வுலகில் எத்தனை திரவியங்கள் உள்ளன? அவைகளின் பெயர்களை கூறுக.

இவ்வுலகில் ஜீவன், புற்கலம், தன்மம், ஆதன்மம், ஆகாயம் மற்றும் காலம் என ஆறுதிரவியங்கள் உள்ளன.

42. ஜீவத் திரவியத்தின் இலட்சணம் என்ன?

ஜீவத் திரவியத்தின் இலட்சணம் உபயோகம் ஆகும்.

43. உபயோகம் என்று எதைக் கூறுகிறோம்?

ஆத்மா சம்பந்தமான சைதன்ய குணத்தில் எப்போதும் நிகழ்ந்து கொண்டிருக்கும் பரிணாமத்தை உபயோகம் என்பர்.

44. உபயோகம் எத்தனை வகைப்படும்? அவைகளின் பெயர்களை கூறுக.

உபயோகம் இரண்டு வகைப்படும். அவை. 1. ஞானோபயோகம். 2. தர்சனோபயோகம்.

45. ஞான உபயோகம் எத்தனை வகைப்படும்? பெயர்களைக் கூறுக.

ஞானோபயோகம் எட்டு வகைப்படும். 1. மதிஞானோபயோகம். 2. சுருத ஞானோபயோகம். 3. அவதி ஞானோபயோகம். 4. மனப்பரிய ஞானோபயோகம். 5. கேவல ஞானோபயோகம். 6. குமதி ஞானோபயோகம். 7. குசுருத ஞானோபயோகம். 8. குஅவதி ஞானோபயோகம்.

46. தர்சன உபயோகம் எத்தனை வகைப்படும்? அவை யாவை?

தர்சனோபயோகம் நான்கு வகைப்படும். அவை 1. சக்ஷுதர்சனோபயோகம், 2. அசக்ஷு தர்சனோபயோகம், 3. அவதி தர்சனோபயோகம், 4. கேவல தர்சனோபயோகம்.

47. புற்கலம் என்று எதைக் கூறுகிறோம்?

ஸ்பர்சம், ரசம், கந்தம் மற்றும் நிறம் எதில் இருக்கிறதோ அதை **புற்கல**த் திரவியம் என்பர்.

48. புற்கலத் திரவியத்தில் எத்தனை வகையுண்டு?

புற்கலத் திரவியம் பரமாணு, ஸ்கந்தம் என இருவகைப்படும்.

49. பரமாணு என்று எதைச் சொல்லுவர்?

எதைப் பகுக்க முடியாதோ அப்படிப்பட்ட மிக நுண்மையான புற்கலத்தைப் பரமாணு என்பர்.

50. ஸ்கந்தம் என்று எதைக் கூறுவர்?

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பரமாணுக்களின் பிண்டத்தை ஸ்கந்தம் என்று கூறுவர்.

51. தன்ம திரவியம் என்று எதைக் கூறுவர்?

ஜீவன் மற்றும் **புற்கலம்** இடம் விட்டு இடம் பெயர எந்த திரவியம் துணை புரிகிறதோ அதைத் தன்மத் திரவியம் என்று கூறுவர். (எ–டு) நீந்தும் மீனிற்கு நீர் துணை செய்தல் போன்றது.

52. அதன்ம திரவியம் என்று எதைக் கூறுகிறோம்?

ஜீவன் அல்லது புற்கலத்திற்கு தங்குவதற்கு எந்தத் திரவியம் துணை புரிகிறதோ அது அதன்மத் திரவியமாகும். வழிப் போக்கனுக்குத் தங்க மரத்தின் நிழல் உதவுவது போன்றது.

53. ஆகாசத் திரவியம் என்று எதைக் கூறுவர்?

ஜீவன் புற்கலம் முதலிய ஐந்து திரவியங்களும் தங்குவதற்கு இடம் அளிக்கும் திரவியம் ஆகாசத் திரவியம்.

54. லோகாகாயம் என்று எதைக் கூறுவர்?

ஜீவன், புற்கலம், தர்மம், அதர்மம், ஆகாயம் மற்றும் காலம் இந்த ஆறு திரவியங்களும்

காணப்படும் இடமே லோகாகாயம் எனப்படும்.

55. அலோகாகாயம் என்று எதைச் சொல்கிறோம்?

லோகா ஆகாயத்துக்கு வெளியே ஜீவன் முதலான ஐந்து திரவியங்களும் இல்லாமல் பரந்து கிடக்கும் அனந்த ஆகாயத்தை அலோகாகாயம் என்று கூறுவர்.

56. காலத் திரவியம் என்று எதைக் கூறுகின்றனர்?

ஜீவ புற்கலம் ஆகிய திரவியங்களின் மாற்றத்திற்குத் துணை புரியக்கூடிய திரவியத்தைக் காலத் திரவியம் என்கின்றனர். எடுத்துக்காட்டு : குயவனுடைய சக்கரம் சுற்றுவதற்கு அச்சு துணை புரிவது போன்றது.

57. காலத் திரவியத்தில் எத்தனை வகையுண்டு?

நிச்சயகாலம், விவகார காலம் என காலத் திரவியம் இருவகைப்படும்.

58. நிச்சய காலம் என்று எதைக் கூறுவர்?

ஒவ்வொரு சமயத்தில் எல்லா திரவியங்களிலும் மற்றமடையச் செய்யும் வர்த்தனா வடிவ காலத் திரவியத்தை நிச்சய காலம் என்பர்.

59. வியவகார காலம் என்று எதைச் சொல்லுவர்?

நிமிடம், மணி, நாள், மாதம் போன்றவை காலத் திரவியத்தின் பரியாயத்தை வியவகார காலம் என்று கூறுவர்.

60. மூவுலகிலும் ஆறு திரவியங்கள் என்னென்ன எண்ணிக்கையில் உள்ளன?

மூவுலகிலும் ஜீவத் திரவியம் அனந்தானந்தம். புற்கலத் திரவியம் ஜீவத் திரவியத்தை விட அனந்த மடங்கு அனந்தானந்தம். தன்மத் திரவியம், அதன்மத் திரவியம் மற்றும் ஆகாயத் திரவியம் ஒவ்வொறு அகண்ட திரவியம் ஆகும். காலத் திரவியம் அசங்கியாதம் ஆகும்.

61. ஆறு திரவியங்களில் எத்தனை திரவியம் (சகிரியை) செயல் புரியக் கூடியன? எத்தனை திரவியம் செயல் புதியாதன (நிஷ்கிரியை)?

ஆறு திரவியங்களில் ஜீவத் திரவியம், புற்கலத் திரவியம் (சகிரியை) செயலாற்றும் திறமை திரவியங்கள். தன்ம திரவியம் அதன்ம திரவியம், ஆகாய திரவியம், கால திரவியம் (நிஷ்கிரியா) செயலாற்றாதவைகளாகும்.

62. ஒவ்வொரு திரவியத்திற்கும் எத்தனை பிரதேசங்கள்?

ஒரு ஜீவத்திரவியம், தன்ம திரவியம், அதன்ம திரவியம், லோகாகாசம் இவை ஒவ்வொன்றும் அசங்யாத பிரதேசம். அலோகாகாசத்திற்கு அனந்த பிரதேசம். புற்கலத் திரவியம் ஒன்றிலிருந்து சங்கியாத், அசங்கியாத், அனந்த பிரதேசம் வரை பெற்றிருக்கிறது. ஒவ்வொரு காலத் திரவியமும் ஒவ்வொரு பிரதேசத்தை உடையது.

63. பிரதேசம் என்றால் என்ன?

ஆகாய திரவியத்தில் எவ்வளவு பகுதியை ஒரு புற்கலப் பரமாணு இடம் கொள்கிறதோ அந்த அளவுப் பகுதியைப் பிரதேசம் என்பர்.

64. அஸ்திகாயம் என்று எதைக் கூறுவர்?

எது காய வடிவில் – பகு பிரதேச வடிவில் (அதிக பிரதேசங்கள்) இருக்கிறதோ அதை அஸ்தி காயம் என்று சொல்லுவர்.

65. ஆறு திரவியங்களில் எத்தனை திரவியம் அஸ்திகாயம்?

ஜீவ, புற்கலம் (ஸ்கந்தம்) தன்ம, அதன்ம மற்றும் ஆகாயம் இந்த ஐந்து திரவியமும் பகு பிரதேசம் ஆனதால் அஸ்திகாயம் ஆகும். ஆனால் காலத் திரவியம் அஸ்தி வடிவமாக இருந்த போதிலும்

கூட பகு பிரதேசியாக இல்லாத காரணத்தால் காய வடிவம் இல்லை. ஆகையால் இது அஸ்தி காயத்தில் வைத்து எண்ணப் படுவதில்லை.

66. நவ பதார்த்தம் என்று எதைக் கூறுவர்?

ஜீவ, அஜீவ, ஆஸ்ரவ, பந்த, சம்வர, நிர்ஜரை, மோக்ஷ புண்ணியம் மற்றும் பாவம் இவைகளை நவபதார்த்தம் என்று கூறுவர்.

67. புண்ணியம் என்று எதைச் சொல்லுவர்?

எந்த நல்ல முறை அறச்செயலால் உயிர் விரும்பிய பொருளை அடைய முடிகிறதோ அல்லது சுகத்துக்கு காரணமாகிறதோ அதனை புண்ணியம் என்பர்.

68. பாபம் என்று எதைச் சொல்லுவர்?

எந்த இம்சை முதலிய தீய நடைமுறைச் செயல்களால் ஒரு ஜீவனுக்கு விரும்பாதன வருகின்றனவோ அல்லது துன்பத்துக்குக் காரணமாகிறதோ அதனை பாபம் என்பர்.

69. எதனுடைய துணை இல்லாமல் சித்தபரமேஷ்டி மூன்று உலகத்திற்கும் மேலே போக முடியாதோ அது என்ன திரவியம்?

அந்த திரவியம் தன்ம திரவியம் ஆகும்.

****



முக்தாகிரி – பஞ்சபரமேஷ்டி அர்க்கியம்

அதிகாரம் – 13
மூவுலக வருணனை

சம்வேகம் என்றால் பிறவி சுழற்சி அமைவதற்கான காரணங்களுக்கு அச்சப்படுவதாகும். இவ்வச்சமே முக்திப்பாதையை ஏற்பதற்கு மிகுந்த ஈடுபாட்டை உண்டுபண்ணும் சம்வேகத்தை அடைய, பிறவி சுழற்சி பற்றிய சிந்தனை அவசியமாகும். மேலும் நாற்கதி சுழற்சி மூவுலகத்தையும் சார்ந்து உள்ளது. மூவுலகத்தைப் பற்றிய அறிவு இல்லாமல் பிறவி சுழற்சியில் அமையும் நரகம் சொர்கம் பற்றியும், அசங்யாத தீப சமுத்திரங்கள் பற்றியும் அறிந்து கொள்ள முடியாது. மூவுலகத்தை பற்றி அறிந்து கொள்வதால் அங்கு வசிக்கும் உயிர்களைப்பற்றியும் அவைகள் அனுபவிக்கும் சுகத்துக்கங்களை பற்றியும் அறிவு ஏற்படுகிறது. சுக துக்க காரணங்களைப் பற்றி அறிவதால் அவைகளில் இருந்து விடுபட முக்திக்கு காரணமான மோக்ஷ புருஷார்த்தத்தை (முக்தி அடையும் பாதையில் முயல்வதை) ஏற்பதில் மிகுந்த ஈடுபாடும் (சிரத்தையும்) உண்டாகிறது. இதை உத்தேசித்து மூவுலகத்தின் வர்ணனை பதிமூன்றாம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. மூவுலகம் என்று எதனைக் கூறுவர்?

கீழ் உலகம், மத்திய உலகம், மேல் உலகம் ஆகிய மூன்று உலகத்தையும் மூவுலகம் என்பர்.

2. மூவுலகத்தின் வடிவம் எவ்வாறு அமைந்துள்ளது?

ஒரு மனிதன் கால்களை அகட்டி, இரு கைகளையும் இடையில் வைத்துக் கொண்டு நிற்பது போன்ற வடிவம் உடையது மூவுலக வடிவம்.

3. மூவுலகத்தின் உயரம் எவ்வளவு?

மூவுலகம் கீழ் இருந்து மேல்வரை 14 ரஜ்ஜூ (கயிறு) பிரமாணமாகும்.

4. மூவுலகத்தின் அகலம் என்ன?

மூவுகலத்தின் அகலம், கீழே 7 ரஜ்ஜூ, பிறகு 7 ரஜ்ஜு உயரம் சென்றபிறகு அகலம் ஒரு ரஜ்ஜு, அதன் பிறகு மூன்றரை ரஜ்ஜு உயரம் மேலே சென்ற பிறகு அகலம் ஐந்து ரஜ்ஜு, பிறகு மூன்றரை ரஜ்ஜு மேலே சென்றபிறகு அகலம் ஒரு ரஜ்ஜு என்னும் அளவில் அமைந்திருக்கிறது.

5. மூவுலகத்தின் பருமன் எவ்வளவு?

மூவுலகத்தின் பருமன் எல்லா இடங்களிலும் ஏழு ரஜ்ஜு அளவாகும்.

6. மூவுலகத்தின் கன அளவு என்ன?

மூவுலகத்தின் கன அளவு 343 ரஜ்ஜு ஆகும்.

7. ரஜ்ஜுவின் அளவு எவ்வளவு?

1000 கிலோகிராம் எடையுள்ள இரும்பு குண்டினை இந்திர லோகத்தில் இருந்து கீழே விட்டால் அது 6 மாதத்தில் எவ்வளவு தூரம் செல்லுமோ அந்த தூரத்தின் நீளம் ஒரு ரஜ்ஜு எனக் கூறப்படுகிறது.

8. இந்த உலகம் எதன் ஆதாரத்தில் நிலைத்திருக்கிறது?

இவ்வுலகம், 1. கனவாத வலையம், 2. கனோததிவாத வலையம், 3. தநுவாத வலையம் இவற்றின் ஆதாரத்தில் அமைந்துள்ளது.

9. கீழ் உலகத்தின் நீளம், அகலம், பருமன் எவ்வளவு?

கீழ் உலகத்தின் உயரம் ஏழு ரஜ்ஜு, அகலம் கீழே ஏழு ரஜ்ஜு மேலே ஒரு ரஜ்ஜு பருமன்

ஏழு ரஜ்ஜு அளவுகள் கொண்டது.

10. கீழ் உலகம் தொடர்பான திரச நாளியில் என்ன உள்ளது? மற்றும் அங்கு யார் வாழ்கிறார்கள்?

கீழ் உலகம் தொடர்பான திரச நாளியில் எட்டு பூமிகள் உள்ளன. அங்கே ஏழு பூமிகளில் நாரகியும், 8வது பூமியில் நித்திய நிகோத ஜீவன்களும் வாழ்கின்றனர்.

11. திரச நாளி என்று எதைச் சொல்லுவர்?

மூவுலகத்தின் மத்தியில் சிறிது குறைந்த 13 ரஜ்ஜு உயரம் ஒரு ரஜ்ஜு அகலம் ஒரு ரஜ்ஜு பருமன் உள்ள இடத்தில் திரச ஜீவன்கள் வாழ்கின்றன. அதைத் திரச நாளி என்று சொல்லுவர்.

12. கீழ் உலகத்தில் உள்ள எட்டு பூமிகளின் பெயர்களைக் கூறுக?

கீழ் உலகத்தில், 1. இரத்னப்பிரபா, 2. சர்க்கரப்பிரபா, 3. வாலுகாப்பிரபா, 4. பங்கப்பிரபா, 5. தூமப்பிரபா, 6. தமப்பிரபா, 7. மகாதமப்பிரபா, மற்றும் 8 கலகலா பிருத்வி.

13. இரத்தினப் பிரபா என்னும் முதல் பூமியில் எத்தனை பாகங்கள் உள்ளன? அப்பாகங்களில் யார் யார் வசிக்கின்றனர்?

இரத்னப் பிரபா என்னும் முதல் பூமியில் கரபாகம், பங்க பாகம், அப்பகுள பாகம் என மூன்று பாகங்கள் உள்ளன. கரபாகம் மற்றும் பங்க பாகத்தில் பவண வாசிகளும், வியந்தர வாசி தேவர்களும் வசிக்கின்றனர். அப்பகுள பாகத்தில் அனேக பிலங்கள் அமைந்திருக்கின்றன. அவற்றில் நரகர் வசிக்கின்றனர்.

14. நரகர் என்று யாரைக் கூறுவர்?

இரத்னப் பிரபா முதலிய ஏழு பூமிகளில் கிணறுகள் போன்ற பிலங்கள் அமைந்துள்ளன. அவற்றை நரகம் என்கிறோம். அவற்றில் வாழும் ஜீவன்களே நரகர் ஆவர்.

15. இரத்தினப்பிரபா முதலிய ஏழு பூமிகளில் உள்ள பிலங்களின் தனித்தனி எண்ணிக்கை மற்றும் மொத்த எண்ணிக்கையைக் குறிப்பிடுக.

இரத்னப் பிரபா பூமியில் 30 லக்ஷம், சர்க்கரப் பிரபாவில் 25 லக்ஷம், வாலுகாப் பிரபாவில் 15 லக்ஷம், பங்கப்பிரபாவில் 10 லக்ஷம், தூமப்பிரபாவில் 3 லக்ஷம், தமப்பிரபாவில் 5 குறைந்த ஒரு லக்ஷம், மகா தமப்பிரபாவில் 5 பிலங்கள் மட்டும் உள்ளன. எல்லா பூமிகளிலும் சேர்ந்து 84 லக்ஷம் பிலங்கள் உள்ளன.

16. நரக கதியில் நரகர்களுக்கு என்னென்ன துன்பங்கள் உண்டாகின்றன?

ஒருவர் மற்றவரோடு சண்டையிடுதல், ஆயுதங்களால் தாக்குதல், சூடான இரும்பு உருவங்களைத் தழுவுதல், செக்கிலிட்டு ஆட்டுதல், வெள்ளத்தில் வீசி எறிதல், மற்றும் சூடான எண்ணெய் நிறைந்த வாளியில் போடுதல், இப்படிப்பட்ட துன்பங்கள் உண்டாகின்றன. சிறப்பு : நரகர் தன்னுடைய விக்ரியா சக்தியினால் தன் உடலையே ஆயுத வடிவமாக்கிக் கொண்டு சண்டையிடுவர். ஆயுதங்களால் துளைத்துப் பிளந்த பிறகும் கூட அவர்கள் அகால மரணம் அடைவதில்லை. அவர்களது உடல் மறுபடியும் மறுபடியும் ஒன்று சேர்ந்து கூடி விடும். மூன்றாவது வாலுகப் பிரபா என்னும் பூமி வரை அசுர குமாரர் என்னும் பவண வாசி தேவர்கள் மூலமாக நரகர்களுக்கு பகைகளை நினைவூட்டி (கலகம் செய்து) அவர்களுக்குள் போரிடத் தூண்டி விடுவார்கள்.

17. எப்படிப்பட்ட தீய காரியங்கள் மூலமாக ஜீவன்கள் நரக கதியை அடைகின்றன?

இம்சை முதலிய மிகுந்த பாபம், மிகுந்த பரிக்ரகம், மிகுந்த கஷாயம், தீய வியசனம் போன்றவைகளால் ஜீவன்கள் நரக கதியை அடைகின்றன.

18. நரக வாசிகள் மேலும் என்ன விஷேடத்தன்மையுடைவர்கள்?

நரகர்களின் அசுபதர கிருஷ்ண, நீல, காபேத லேஷ்யா கொண்டிருப்பார்.

அசுபதர பரிணாமம் அதாவது இம்சை முதலிய துன்பம் அளிக்கும் பரிணாமம் பெற்றிருப்பார்.
அசுபதர தேகம் அதாவது துர்நாற்றமுடைய குரூபி உடல் பெற்றிருப்பார்.
அசுபதர வேதனை அதாவது ஆயிரக்கணக்கான தேள்கள் ஒரே சமயத்தில் ஒன்று கூடி கொட்டினால் என்ன துன்பம் உண்டாகுமோ அதைக் காட்டிலும் அதிக துன்பம் அடைவர்.
அசுபதர விக்ரியா அதாவது தன் உடலை இம்சைக்கு உபகரணமாகும் வாள் போன்ற வடிவத்தை உண்டாக்கிக் கொள்ளுதல். இப்படிப்பட்ட விசேஷத்தன்மையை உடையவர்கள் நரகர்கள்.

19. இரத்னப்பிரபா முதலிய ஏழு பூமியில் எந்தெந்த ஜீவன்கள் செல்கின்றன? எந்தெந்த ஜீவன்கள் எந்தெந்த பூமிவரை செல்லும்?

முதல் பூமிவரை – மனமில்லா பஞ்சேந்திரிய, விலங்கு முதலிய ஜீவன்கள் செல்லும்.
இரண்டாவது பூமி வரை – இரண்டு முகமுடைய அல்லது நகரக்கூடிய பாம்புகள் முதலியன.
மூன்றாவது பூமி வரை – பக்ஷி (வல்லூறு) முதலியன செல்ல முடியும்.
நான்காவது பூமி வரை – மலைப்பாம்பு போன்றவை செல்ல முடியும்.
ஐந்தாம் பூமி வரை – சிங்கம், சிறுத்தை, புலி போன்றவை செல்லும்.
ஆறாம் பூமி வரை –பெண்கள் செல்லமுடியும்
ஏழாம் பூமி வரை – மனிதர் மற்றும் பெருமீன், தண்டுலமீன் செல்ல முடியும்.

சிறப்பு : நரகாயு கட்டு ஏற்பட்ட மனிதர், பிறகு க்ஷாயிக சம்யக்தர்சனம் அடைந்தால் அத்தகைய கட்டு உடைய க்ஷாயிக சம்யக்திருஷ்டி ஜீவன் முதல் பூமி வரை செல்கிறான். மற்றும் நரக ஆயு கட்டுடைய தீர்த்தரங்கர பிரக்ருதி பெற்றுள்ள க்ஷாயிக சம்யக் திருஷ்டி ஜீவனும் கூட முதல் பூமிவரை செல்ல முடியும். க்ஷியோப சமம் அல்லது உபசமம் ஆகிய சம்யத்துவத்திலிருந்து வீழ்ச்சியடைந்த ஜீவன்கள் எந்த பூமிக்கும் செல்ல முடியும்.

20. இரத்னப் பிரபா முதலான ஏழு பூமிகளில் வசிக்கக் கூடிய நரகர்களுடைய மிகக் குறைந்த – மிக அதிக ஆயுள் எவ்வளவு?

ஏழு நரகங்களிலும் வாழும் நரகர்களின் மிகக் குறைந்த மற்றும் மிக அதிக ஆயுள் விபரம் கீழ் வருமாறு.

எண்	பூமியின் பெயர்கள்	மிகக் குறைந்த ஆயுள்	மிக அதிக ஆயுள்
1	இரத்னப்பிரபா	10,000 ஆண்டுகள்	1 கடல் காலம்
2	சர்க்கரபிரபா	1 கடல் காலம்	3 கடல் காலம்
3	வாலுகாப்பிரபா	3 கடல் காலம்	7 கடல் காலம்
4	பங்கப்பிரபா	7 கடல் காலம்	10 கடல் காலம்
5	தூமப்பிரபா	10 கடல் காலம்	17 கடல் காலம்
6	தமப்பிரபா	17 கடல் காலம்	22 கடல் காலம்
7	மகா தமப்பிரபா	22 கடல் காலம்	33 கடல் காலம்

21. இரத்னப் பிரபா முதலிய பூமிகளிலிருந்து வெளியே வரும் ஜீவன்கள் எங்கெங்கே என்னென்ன பிறவி பெறும்?

ஏழாவது பூமியிலிருந்து வெளியே வரும் ஜீவன் மனமுடைய விலங்கு, (சிங்கம், கழுகு

முதலியன) ஆகப் பிறவி எடுக்கலாம். ஆறாவது பூமியிலிருந்து வெளிவரும் ஜீவன்கள், மனிதர், விலங்கு ஆகலாம். (சம்யக்த்துவம் பெறவும் முடியும்; பெற இயலாதும் போகலாம். ஆனால் சம்யமத்தை முறையாகப் பெற முடியாது) ஐந்தாவது பூமியிலிருந்து வெளிவரும் ஜீவன் முனியாக முடியும்; ஆனால் அவருக்கு முக்தி கிடைக்காது. நான்காம் பூமியிலிருந்து வெளிவரும் ஜீவன் கேவலியாக முடியும்; ஆனால் தீர்த்தங்கரராக முடியாது. மூன்று முதலாய (3,2,1) பூமிகளிலிருந்து வெளிவரும் ஜீவன் தீர்த்தங்கரர்களாகக் கூட முடியும்.

22. நரக கதியிலும் கூட சம்யக் தர்சனம் உண்டாக முடியுமா? அவ்வாறு உண்டானால் அதன் காரணம் என்ன?

ஆம்! சில சில பவ்வியர்களுக்கு நற்காட்சி (சம்யக் தர்சனம்) உண்டாகலாம். நரக கதியில் மூன்றாவது பூமி வரை முற்பிறவி நினைவு, அறங்கேட்டல், மற்றும் தீவிர வேதனையின் காரணமாக நற்காட்சி உண்டாக முடியும். மூன்று மற்றும் நான்காம் பூமியிலிருந்து ஏழாவது பூமிவரை முற்பிறவி நினைவு மற்றும் தீவிர வேதனையின் அனுபவம் இவ்விரண்டும் சம்யக்தர்சனம் (நற்காட்சி) உண்டாக நிமித்தமாகும்.

23. மத்திய லோகத்தின் உயரம், அகலம், பருமன் எவ்வளவு?

மத்திய உலகத்தின் உயரம் ஒரு லக்ஷம் நாற்பது யோசனை, அகலம் ஒரு ரஜ்ஜு பருமன் ஏழு ரஜ்ஜு (கயிறு).

24. மத்திய உலகம் தொடர்பான திரசநாளியில் என்ன உள்ளது? மற்றும் அங்கு யார் வசிக்கிறார்கள்?

மத்திய உலகம் தொடர்பான திரசநாளியில் ஜம்பூத் தீவு, தாதகி கண்டம் முதலிய அயங்கியம் தீவுகளும், (லவணோததி, கலோததி முதலிய அயங்கியம்) கடல்களும் உள்ளன. இந்த மத்திய உலகத்தில் மனிதர், விலங்கு, ஜோதிஷ்க தேவர்களும் சில வியந்தரவாசி தேவர்களும் வாழ்கின்றனர்.

25. மத்திய உலகத்தில், ஜோதிஷ்க தேவர்கள் இந்த பூமியிலிருந்து எவ்வளவு உயரத்தில் இருக்கிறார்கள்?

மத்திய உலகத்தில், இந்த பூமியிலிருந்து 790 யோஜனை மேலே நூற்றுப்பத்து யோஜனை அளவுக்குள்ளே (900 யோஜனை வரை) எல்லா ஜோதிஷ்க தேவர்களும் இருக்கிறார்கள்.

26. மத்திய உலகத்திலிருக்கும் சுமேரு மலையினை ஜோதிஷ்க தேவர்கள் எவ்வளவு தூரத்தில் சுற்றி வருகின்றனர்?

மத்திய உலகத்திலிருக்கும் சுமேரு மலையை ஜோதிஷ தேவர்கள் 1121 யோஜனை தூரத்தில் சுற்றி வருகின்றனர்.

27. ஜம்புத் தீவில் எத்தனை சூரிய சந்திரர்கள் இருக்கின்றனர்?

ஜம்புத் தீவில் இரண்டு சூரியன்கள் இரண்டு சந்திரர்கள் உள்ளனர்.

28. சுதர்சனமேரு மலை எங்கே இருக்கிறது? அதன் உயரம் எவ்வளவு?

சுமேரு மலை ஜம்புத் தீவின் நட்ட நடுவில் உள்ளது. அது ஒரு லக்ஷம் நாற்பது யோஜனை உயரம் உள்ளது.

29. சுதர்சனமேரு மலையின் (தர்ம நோக்கில்) சிறப்பு யாது?

ஜம்பூ தீவின் தொடர்பான விதேக க்ஷேத்திரத்தின் மத்தியில் ஒரு லக்ஷம் நாற்பது புகை (யோஜனை) உயரத்தில் சுதர்சனமேரு மலை இருக்கிறது. இந்த மலை தீர்த்தரங்கரர்களுடைய ஜென்மாபிக்ஷேகத்தின் (ஆசன) இருக்கை வடிவமாகக் கருதப்படுகிறது. ஏனெனில் இதன் சிகரத்தில் பாண்டுக வனத்தில் பாண்டுக முதலிய நான்கு பாறைகளின் மீது பரத, ஐராவத, மற்றும் கிழக்கு, மேற்கு விதேகத்தினுடைய எல்லாத் தீர்த்தங்கரர்களுக்கு தேவர்கள் ஜென்மாபிஷேகம் செய்கின்றனர். இந்த சுதர்சனமேரு மலையில் அநேக (இயற்கை) ஜிநாலயங்கள் இருக்கின்றன;

அவைகளில் வீற்றிருக்கும் வீதராக ஜின பிம்பங்களைத் தரிசிப்பதற்காக அநேக ருத்திதாரி முனிவர்களும் தேவகணங்களும் செல்கின்றனர்.

30. ஜம்புத்தீவின் பரப்பு எவ்வளவு? அதை அடுத்து இருக்கும் கடல் மற்றும் தீவுகளின் பரப்பளவு எவ்வளவு?

ஜம்புத் தீவின் பரப்பளவு ஒரு லக்ஷம் யோஜனை. இதையடுத்து லவணோததி கடலின் பரப்பளவு இரண்டு லக்ஷம் யோஜனை. மேலும் கடைசி தீவும் கடலுமான சுயம்புரணமத் தீவும் சுயம்புரமணக் கடல்வரை அசங்கியாத் தீவு கடல்களின் பரப்பு இரண்டு இரண்டு மடங்காக உள்ளன.

31. ஜம்புத்தீவின், லவணோதி கடல் மற்றும் அசங்கியாத தீவு கடல்களின் வடிவம் எவ்வாறு உள்ளது?

ஜம்புத் தீவு வட்ட தட்டு போல வடிவம் கொண்டது. லவணோததி கடல் அதை அடுத்துள்ள அசங்கியாத் தீவு கடல்களின் வடிவம் வளையல்களைப் போல வடிவம் கொண்டனவாகும்.

32. ஜம்புத்தீவை ஏழு பிரதேசங்களாகக் பிரிக்கக்கூடிய மலைகளின் பெயர்களைக் கூறுக. அவ்வாறு பிரிக்கப்பட்ட பிரதேசங்களில் பெயர்களையும் கூறுக.

ஜம்புத் தீவை 1. இமவான் பர்வதம், 2. மகா இமவான் பர்வதம், 3. நிசத பர்வதம், 4. நீல பர்வதம், 5. ருக்மி பர்வதம், 6. சிகரி பர்வதம் என இந்த ஆறு பர்வதங்களும் (மலைகளும்) ஏழு பிரதேசங்களாகப் பிரிக்கப்படுகின்றன. இவ்வாறு பர்வதங்களால் பிரிக்கப்பட்ட நிலம், 1. பரத தேசம், 2. ஐமவத தேசம், 3. ஹரி தேசம், 4. விதேக தேசம், 5. ரம்யக தேசம், 6. ஐரண்யவத தேசம், 7. ஐராவத தேசம் என ஏழு க்ஷேத்திரங்கள் ஆகும்.

33. இமவான் முதலான மலைகளின் மேல் என்னென்ன பெயர்களை உடைய குளங்கள் இருக்கின்றன?

இமவான் முதலிய மலைகளின் மேல் வரிசையாக பத்ம, மகாபத்ம, திகிஞ்ச, கேசரி, மகாபுண்டரீக மற்றும் புண்டரீகம் என்னும் குளங்கள் ஒவ்வொன்று உள்ளது.

34. இமவான் மலைமீதுள்ள பத்ம என்னும் முதல் குளத்தினுடைய நீளம், அகலம், ஆழம் எவ்வளவு?

இமவான் மலை மீதுள்ள பத்ம என்னும் குளம் ஓராயிரம் யோஜனை நீளம், 500 யோஜனை அகலம், 10 யோஜனை ஆழமுடையாது.

35. பத்ம என்னும் குளத்தில் எப்படிப்பட்ட, எவ்வளவுள்ள தாமரை உள்ளது?

பத்ம என்னும் குளத்தில் ஒரு யோஜனை அளவுள்ள மண் உடலி தாமரை உள்ளது.

36. பரத க்ஷேத்திரத்தின் பரப்பு எவ்வளவு?

பரத க்ஷேத்திரம் தெற்கு வடக்கு 526 6/19 யோஜனை அளவுடையது. (அல்லது) பரத க்ஷேத்திரத்தின் பரப்பளவு ஜம்புத் தீவினுடைய பரப்பளவில் 1/190 பகுதி அளவாகும்.

37. பத்ம, மகாபத்ம முதலிய குளங்களிலிருந்து எந்தெந்த நதிகள் உற்பத்தியாகின்றன? அந்நதிகளின் உப நதிகள் எத்தனை?

பத்ம, மகாபத்ம முதலிய குளங்களிலிருந்து உற்பத்தியாகும் கங்கா, சிந்து, ரோஹிதா, ரோஹிதாஸ்யா, ஹரிதா, ஹரிகாந்தா, சீதா, சீதோதா, நாரி, நரகாந்தா, சுவர்ணகூலா, ரூப்யகூலா, ரக்தா, ரக்தோதா என பதினான்கு நதிகளாகும். இந்த பதினாங்கு நதிகளின் உபநதிகள் பதினான்கு பதினான்கு ஆயிரங்கள் ஆகும்.

சிறப்பு : பத்ம குளத்திலிருந்து மூன்று நதிகள் புண்டரிகக் குளத்திலிருந்து மூன்று நதிகள் மற்ற இடைப்பட்ட நான்கு குளங்களில் இரண்டு இரண்டு நதிகள் ஆக பதினான்கு நதிகள் புறப்படுகின்றன.

38. ஜம்புத் தீவில் பரத க்ஷேத்திரத்திலிருந்து அடுத்தடுத்து இருக்கும் மலை, நிலப்பரப்பு, குளம்

மற்றும் குளத்துத் தாமரையின் அளவுகள் என்ன?

இடம், மலை இவைகளின் பெயர்கள்	பூமி, மலை இவற்றின் பரப்பு (யோஜனை)	மலையில் உள்ள குளங்களின் பெயர்கள்	குளத்தின் நீள, அகல, ஆழம் (யோஜனை)	குளத்தில் உள்ள தாமரையின் பரப்பளவு (யோஜனை)
பரத க்ஷேத்திரம்	$526\frac{6}{19}$	–	–	–
இமவான் பர்வதம்	$1052\frac{12}{19}$	பத்ம	நீ–1000 அ–500 ஆ–10	1
ஐமவத க்ஷேத்திரம்	$2105\frac{5}{19}$	–	–	–
மகா இமவான் பர்வதம்	$4210\frac{5}{19}$	மகாபத்ம	நீ–2000 அ–1000 ஆ–20	2
ஹரி க்ஷேத்திரம்	$8421\frac{1}{19}$	–	–	–
நிஷத பர்வதம்	$16842\frac{2}{19}$	திகிஞ்ச	நீ–4000 அ–2000 ஆ–40	4
விதேக க்ஷேத்திரம்	$33684\frac{5}{19}$	–	–	–
நீல பர்வதம்	$16842\frac{2}{19}$	கேசரி	நீ–4000 அ–2000 ஆ–40	4
ரம்யக க்ஷேத்திரம்	$8421\frac{1}{19}$	–	–	–
ருக்மி பர்வதம்	$4210\frac{10}{19}$	மகா புண்டரீகம்	நீ–2000 அ–1000 ஆ–20	2
ஐரண்யவத க்ஷேத்திரம்	$2105\frac{5}{19}$	–	–	–
ஷிகரி பர்வதம்	$1052\frac{12}{19}$	புண்டரீகம்	நீ–1000 அ–500 ஆ–10	1
ஐராவத க்ஷேத்திரம்	$526\frac{6}{19}$	–	–	–

பரத க்ஷேத்திரத்திலிருந்து அடுத்தடுத்து இருக்கும் மலை, நிலம், குளம், குளத்துத் தாமரை தீவின் பாதி வரை முறையாக அதிகரிக்கும் இரண்டு இரண்டு மடங்கு பரப்பளவைக் கொண்டவை. மற்றும் அதையடுத்த பரப்பளவு படிப்படியாக குறைந்து கொண்டு வரும்.

39. பரத மற்றும் ஐராவத க்ஷேத்திரங்களில் எத்தனை கண்டங்கள் உள்ளன?

பரதம் மற்றும் ஐராவத க்ஷேத்திரங்களில் ஐந்து மிலேச்ச கண்டமும் ஒரு ஆரிய கண்டம் என ஆறு கண்டங்கள் உள்ளன.

40. பரத மற்றும் ஐராவத க்ஷேத்திரங்களில் எந்த ஆறு காலங்கள் ஜீவன்களின், ஆயுள், உருவம் இவற்றில் மாற்றங்களை உண்டாக்கும்?

பரத மற்றும் ஐராவத க்ஷேத்திரங்களில் ஜீவன்களுக்கு ஆயுள், உருவம் இவற்றில் மாற்றங்களை உண்டாக்கும் ஆறு காலங்கள் முறையே 1. (சுஷ்மா – சுஷ்மா) நன்நற்காலம், 2. (சுஷ்மா) நற்காலம், 3. (சுஷ்மா – துஷ்மா) நல் தீக்காலம், 4. (துஷ்மா – சுஷ்மா) தீநற்காலம், 5. (துஷ்மா) தீக்காலம், 6. (துஷ்மா – துஷ்மா) தீத் தீக் காலம் ஆகும்.

41. இப்பொழுது நாம் மத்திய உலகத்தில் எங்கே வாழ்கிறோம்?

மத்திய உலகத்தில் இப்பொழுது நாம் ஜம்புத் தீவில் பரத க்ஷேத்திரனுடைய ஆரிய கண்டத்தில் வசிக்கிறோம்.

42. ஆரிய கண்டம் என்று எதைச் சொல்கின்றனர்?

எங்கு தீர்த்தரங்களுடைய பஞ்ச கல்யாணம் நடைபெறுகிறதோ மற்றும் தீர்த்தரங்கரர்களின் அறவுரைகள் நடைபெறுகின்றனவோ மற்றும் தர்மம், நாகரிகம், நற்குணமுள்ளவர்கள் வாழ்கிறார்களோ, அந்த இடத்தை ஆரிய கண்டம் என்று சொல்கின்றனர்.

43. மிலேச்ச கண்டம் என்று எதைக் கூறுகின்றனர்?

தீர்த்தங்கரர்களின் அற உபதேசங்கள் மற்றும் தர்மம், நாகரிகம் இவை எங்கு இல்லையோ அப்படிப் பட்ட இடத்தை மிலேச்ச கண்டம் என்கின்றனர்.

44. மனிதப் பரியாயத்தை (மானிடப்பிறப்பை) எந்த ஜீவன் பெறமுடியும்?

இயல்பில் மென்மை எண்ணங்களும், குறைந்த ஆரம்ப (தொழில்) மற்றும் பரிக்ரக (பற்றுகள்)ம் உடைய ஜீவனே மனிதப் பரியாயத்தைப் பெற முடியும்.

45. எந்த ஜீவன் விலங்கு பரியாயத்தைப் பெறுகிறது?

ஏமாற்றுதல், கபடம் (மாயாச்சாரம்) செய்யக் கூடிய ஜீவன் விலங்கு ஜீவனாகப் பிறக்கும்.

46. மத்திய உலகத்தில் வாழும் மனிதர் மற்றும் விலங்கு ஜீவன்களுக்கு ஆயுள் காலம் எவ்வளவு?

மத்திய உலகத்தில் வாழும் மனிதர்கள் தலை, இடை, கடைப்பட்ட போக பூமியின் நிமித்தம் காரணமாக மூன்று, இரண்டு, ஒரு பல்ய வேறுபாடுகளுடைய அயங்கியம் (எண்ணிக்கையற்ற) ஆண்டுகள் ஆயுளை உடையவர்கள். கர்மபூமியில் அந்தர் முகூர்த்தம் முதல் பூர்வ கோடி (சங்கியாதம்) ஆண்டுகள் வரை ஆகும்.

47. "முகூர்த்தம்" என்று சொல்லும் கால அளவு எவ்வளவு நேரம் :

48 நிமிஷத்தை ஒரு முகூர்த்தம் என்று சொல்லுவர்.

48. அந்தர் முகூர்த்தம் என்று எதனைச் சொல்லுவர்?

ஆவளிக்குமேல், முகூர்த்ததிற்கு உள்ளாக ஒவ்வொரு சமயத்தையும் அந்தர் முகூர்த்தம் என்று சொல்லுவர்.

49. சமயம் என்று எதைக் கூறுவர்?

ஜகன்ய கதியில் செல்லும் ஒரு பரமாணு அருகில் உள்ள மற்றொரு பரமாணுவை அடைய எடுத்துக் கொள்ளும் காலத்தை காலத்தை சமயம் என்று கூறுவர்.

50. ஆவளி என்று எதைக் கூறுவர்?

ஒரு சுவாசத்தில் அசங்கியாத ஆவளிகள் உள்ளன. மேலும் சங்கியாத சமயம் கொண்டது ஒரு ஆவளியாகும்.

51. மூச்சுவிடும் காலம் என்று எவ்வளவு காலத்தைக் கூறுவர்?

நோயற்ற ஒரு மனிதனுடைய நாடி ஒருமுறை துடிப்பது சுவாசோச்வாஸ காலம் என்று கூறுவர்.

52. ஒரு முகூர்த்தத்தில் எத்தனை சுவாசோச்வாசங்கள் உள்ளன?

ஒரு முகூர்த்ததில் 3773 சுவாசோச்வாசங்கள் இருக்கின்றன.

53. நரக கதியில் கடலாயு என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பொருள் என்ன?

பத்து கோடா கோடி அத்தா பல்லியத்தை ஒரு கடலாயு (சாகரம்) என்று கூறுவர்.

54. அத்தா பல்யம் என்று எதைச் சொல்லுவர்?

2,000 கோசம் ஆழம், 2,000 கோசம் விட்டம், உள்ள வட்டமான குழியில் செம்மறி ஆட்டின் மயிர்த் துண்டுகளால் (மீண்டும் துண்டிக்க முடியாத துண்டுகள்) நிறைத்து பின்பு அம்முடிகளில் ஒன்றை நூறு ஆண்டுகளுக்கு ஒருமுறை வீதம் வெளியே எடுத்தல் இவ்வாறு எல்லா முடிகளும் எடுக்க ஆகும் ஆண்டுகளின் சமயத்தை வியவகார பல்யம் என்பர். வியவகார பல்யத்தைப் போல அசங்யாத மடங்கு உத்தார பல்யம் ஆகும். உத்தார பல்லியத்தின் அசங்யாத மடங்கு அத்தா பல்யமாகும்.

55. போகபூமி, கர்மபூமி என்று எவற்றைக் கூறுவர்?

எங்கு கல்ப விருக்ஷத்தின் மூலமாக போகம் கிடைக்கிறதோ மற்றும் எங்கே ஆறு கர்மங்கள் (அசி, மசி, க்ருஷி, சில்ப, வாணிஜ்ய, வித்யா) செய்யப்படுவது இல்லையோ அதைப் போக பூமி என்று சொல்வர். எங்கு கல்ப விருக்ஷம் இல்லையோ ஆறு கருமங்கள் செய்வதால் போகம் கிடைக்கிறதோ அதைக் கரும பூமி என்று சொல்வர்.

56. இரண்டரைத் தீவு என்று எதை கூறுவர்?

மத்திய உலகத்தில் இருக்கும் ஜம்பூ தீவு, தாதகிகண்ட தீவு மற்றும் புஷ்கரார்த்த தீவை இரண்டரைத் தீவு என்று சொல்வர்.

57. இரண்டரைத் தீவின் சிறப்பு என்ன?

இரண்டரைத் தீவில் ஐந்து மேரு, 35 க்ஷேத்திரம், 30 மலைகள், 30 குளங்கள் மற்றும் எழுபது நதிகள் உள்ளன. தர்ம கர்மங்கள் செய்யும் அசங்கியாத விலங்கு மற்றும், மனிதர்கள் இங்கு வாழ்கிறார்கள். இப்படிப் பட்ட மகா இரண்டரைத் தீவில் தான் கர்ம பூமி தொடர்பான சதுர்த்த காலத்தில் புண்ணிய ஆத்மாக்கள் முக்திக்காக முயற்சி செய்து தியாகம், சம்யம் மூலமாக முக்தி அடைகிறார்கள்.

58. தாதகி கண்டம் பற்றி சுருக்கமாகக் கூறுக.

இலவண சமுத்திரத்தை வட்ட வடிவில் சூழ்ந்துள்ள தாதகி கண்டம் என்னும் இரண்டாவது தீவின் தெற்கு வடக்காக இஷ்வாகார் என்னும் மலை இருப்பதால் இரண்டு பாகமாகப் பிரிக்கப்படுகிறது. இரண்டு பாகத்திலும் பரதம் முதலிய ஏழு, ஏழு க்ஷேத்திரங்கள் (பூமிகள்) மற்றும் இமவான் முதலிய ஆறு மலைகளும் மற்றும் ஒவ்வொரு சுமேரு மலையும் இருக்கின்றன.

59. புஷ்கரார்த்த தீவின் வடிவத்தை சுருக்கமாக விளக்குக.

காலோததி கடலைச் சூழ்ந்துள்ள புஷ்கரவர என்னும் பெயருடைய மூன்றாவது தீவின் மத்தியில் பரந்த அளவுள்ள மானுஷோத்தர மலை இருக்கிறது. இந்த மானு ஷோத்தர மலையின் உள்பக்கத்தில் புஷ்கரார்த்த தீவும் அதில் பரதம் முதலிய க்ஷேத்திரங்களும் மற்றும் இமவான் முதலிய மலையும் இருக்கின்றன. தாதகி கண்டத்தைப் போல இந்தத் தீவிலும் கூட தெற்கு, வடக்கு இரண்டு பக்கங்களும் இஷ்வாகார மலை இருப்பதால் இந்தத் தீவும் இரண்டு பாகமாகப் பிரிக்கப்படுகிறது. மற்றும் தாககி கண்டத்தீவு போல இங்கு கூட இரண்டு பாகங்களில் பரதம் முதலிய ஏழு, ஏழு க்ஷேத்திரங்கள் (பூமிகள்) இமவான் முதலிய ஆறு, ஆறு மலைகளும் மற்றும் ஒவ்வொரு சுமேருமலையும் உள்ளன.

60. மனிதர்களின் வாழ்விடம் எதுவரை உள்ளது? மனிதர்கள் எதுவரை செல்ல முடியும்?

ஜம்புத் தீவு, தாதகி கண்டத்தீவு மற்றும் புஷ்கவரத் தீவு வரை செல்ல முடியும். இரண்டரைத்

தீவில் இருக்கும் புஷ்கர வரத் தீவில் எங்கே மானு ஷோத்தரம் மலை இருக்கிறதோ அதுவரை இரண்டரைத் தீவு என்றறிதல் வேண்டும். அதுவரை தான் அதாவது இரண்டரைத் தீவில் தான் மனிதர்கள் வாழ முடியும். மானு ஷோத்தர மலையிலிருந்து அடுத்தப் பக்கம் மனிதர் வாழ்வது இல்லை. இதையடுத்து போகவும் முடியாது.

61. இரண்டரைத் தீவிலிருந்து க்ஷேத்திரங்களின் கர்மபூமி மற்றும் போகபூமி எவ்வாறு பிரிக்கப்படுகிறது?

ஜம்புத் தீவு சம்பந்தமான ஒரு பரத க்ஷேத்திரம் ஒரு ஐராவத க்ஷேத்திரம் மற்றும் விதேக க்ஷேத்திரம் (விதேக க்ஷேத்திரத்தில் தேவகுரு, உத்தர குருவை நீக்கி), தாதகி கண்டம் தொடர்பாக இரண்டு பரதம், 2 ஐராவதம் மற்றும் இரண்டு விதேக க்ஷேத்திரம். (தேவ குரு உத்திர குரு நீக்கி) புஷ்கரார்த்த தீபம் தொடர்பான இரண்டு பரதம் இரண்டு ஐராவதம் இரண்டு விதேக க்ஷேத்திரம் (தேவகுரு உத்திர குரு நீங்கலாக) இப்படிப்பட்ட 15 க்ஷேத்திரங்களை கர்மபூமி என்று உணர்தல் வேண்டும். ஜம்பூத்தீவு சம்பந்தமாக ஒவ்வொன்றும் மற்றும் தாதகி கண்டம், புஷ்கரார்த்தம் சம்பந்தமாக இரண்டிரண்டு ஐமவத வர்ஷ, ஹரிவர்ஷ, தேவகுரு, உத்தரகுரு, ரம்யக வர்ஷ மற்றும் ஐரண்யவத வர்ஷ என்னும் 30 க்ஷேத்திரங்களைப் போக பூமி என்று அறிதல் வேண்டும்.

62. உத்தம (தலை) மத்திய (இடை) ஜகன்ய (கடை) போக பூமி எந்தெந்த க்ஷேத்திரங்களில் உள்ளன?

இரண்டரைத் தீவிலுள்ள எல்லா ஹேம வத வர்ஷ – ஹைரண்ய வத வர்ஷ – க்ஷேத்திரங்கள் எப்போதும் பரத வர்ஷ – ஐராவத வர்ஷங்கள் மூன்றாங் காலத்திலும் (கடை) ஜெகன்ய பூமி ஏற்படுகிறது. ஹரிவர்ஷ – ரம்யக வர்ஷ – க்ஷேத்திரங்கள் எப்போதும் பரத வர்ஷ – ஐராவத வர்ஷ க்ஷேத்திரங்கள் இரண்டாம் காலத்திலும் மத்திய போகபூமி ஏற்படுகிறது. விதேக க்ஷேத்திரம் தொடர்பான தேவகுரு, உத்தரகுரு, க்ஷேத்திரங்கள் எப்போதும் மற்றும் எல்லா பரத ஐராவத க்ஷேத்திரங்கள் முதல் காலத்தில் உத்க்ருஷ்ட போக பூமி உண்டாகிறது.

63. நிலையான மற்றும் நிலையற்ற போகபூமி என்று எவற்றைச் சொல்லுவர்?

இரண்டரைத் தீவு தொடர்பான ஐமவத வர்ஷ, ஹரிவர்ஷ, தேவகுரு, உத்தர குரு, ரம்யக வர்ஷ, ஐரண்யக வர்ஷ இந்த க்ஷேத்திரங்களில் இருக்கும் பூமிகளை மாற்றமில்லாமல் எப்போதும் இருக்கும் போக பூமி என்று சொல்லுவர். பரதம், ஐராவத, க்ஷேத்திரம் தொடர்பான சுஷ்மா – சுஷ்மா நன்னற்காலம் முதலான ஆறு காலங்களின் மாற்றத்தால் மாற்றம் அடையும் பூமிகளை நிலையற்ற, போகபூமி என்றும் கர்மபூமி என்றும் சொல்லுவர்.

64. தேவகுரு, உத்தரகுரு நீங்கலாக மற்ற விதேக க்ஷேத்திரத்தில் எந்த பூமி மாற்றமில்லாமல் இருக்கிறது?

தேவகுரு, உத்தரகுரு நீங்கலாக மற்ற விதேக க்ஷேத்திரத்தில் மாற்றமில்லாமல், நிலையாக கர்மபூமி இருக்கிறது. அங்கே எப்பொழுதும் தீநற்காலமாகிய நாலாங்காலம் (துஷ்மா – சுஷ்மா) போல நிலைமை தார்மிக (தீர்த்தங்கரர்களின் சமவசரணத்தோடு கூடிய) சூழ்நிலை அமைந்திருக்கிறது. அங்கே காலத்தில் மாற்றம் ஏதும் கிடையாது.

65. பரத ஐராவத க்ஷேத்திரத்தில் இருக்கும் நிலையற்ற தலை, இடை, கடை போக பூமி மற்றும் கர்ம பூமியில் காலந்தோறும் ஏற்படும் கால அளவும், அங்குள்ள ஜீவன்களின் ஆயுள் காலமும் எவ்வாறு இருக்கும். அவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுக.

பட்டியல் வருமாறு.

பூமி	காலம்	காலத்தின் அளவு	ஜீவன்களின் அதிக ஆயுள்	உடலின் அதிக உயரம்	உணவு ஏற்கும் காலங்கள்
உத்தம போக பூமி	முதலாம் காலம்	4 கோடா கோடி கடல்	3 பல்யம்	6000 வில்	3 நாட்களுக்குப் பிறகு கடுக்காய் அளவு
மத்திம போக பூமி	2 ஆம் காலம்	3 கோடா கோடி கடல்	2 பல்யம்	4000 வில்	2 நாள்களுக்குப் பிறகு தானிக்காயளவு
ஜகன்ய போக பூமி	3 ஆம் காலம்	2 கோடா கோடி கடல்	1 பல்யம்	2000 வில்	1 நாளுக்குப் பிறகு நெல்லிக்காய் அளவு
உத்தம கர்ம பூமி	4 ஆம் காலம்	42,000 வருடம் குறைந்த ஒரு கோடா கோடி கடல்	1 பூர்வ கோடி	525 வில்	ஒவ்வொரு நாளும் ஒருமுறை
மத்திம கர்ம பூமி	5 ஆம் காலம்	21, 000 வருஷம்	120 வருஷம்	7 முழம்	நாளில் இருமுறை
ஜகன்ய பூமி	6 ஆம் காலம்	21, 000 வருஷம்	20 வருஷம்	3½ முழம்	நாளில் பலமுறை

66. பரத க்ஷேத்திரத்தின் எல்லா இடங்களிலும் (ஆறு கண்டங்கள்) காலத்தினுடைய மாற்றங்கள் நிகழ்கின்றனவா? அல்லது ஆரிய கண்டத்தில் மட்டுமா?

இல்லை. பரத க்ஷேத்திரத்தில் ஆரிய கண்டத்தில் மட்டும் சுஷ்மா – சுஷ்மா (நன்னற்காலம்) முதலாய காலங்களின் மாற்றம் உண்டாகிறது.

67. ஆரிய கண்டத்தைத் தவிர மற்ற ஐந்து மிலேச்ச கண்டத்தில் எந்த காலத்தைப் போல செயல்கள் நிகழ்கின்றன?

ஆரிய கண்டத்தைத் தவிர மற்ற ஐந்து மிலேச்ச கண்டத்தில் (சதுர்த்த) நாலாங்கால கர்ம பூமி போன்று செயல்கள் நிகழ்கின்றன.

68. மிலேச்ச கண்டத்தில் தியாகம், சம்யமாசம்யம், சய்யம் ஆகிய குணஸ்தானம் பெறுதலும், தீர்த்தங்கரர் முதலியோர் தர்சனமும் உண்டாகுமா?

இல்லை. மிலேச்ச கண்டத்தில் தியாகம், சம்யமாசம்யம், சய்யம் ஆகிய குணஸ்தானத்தை அடைவதற்கான நற்பேறு இல்லை. ஒருகால் அங்குள்ள மிலேச்ச மனிதர் சக்ரவர்த்தி ஆகியோர்களோடு ஆரிய கண்டத்திற்கு வந்து தர்மத்தைக் கேட்டால் அவர் சம்யமாசம்யம், சய்யம் ஆகியவற்றை மேற்கொள்ள முடியும்.

69. போக பூமி ஜீவன் எந்த குணஸ்தானம் வரை பெறமுடியும்?

போகபூமி ஜீவன் அசம்யத சம்யக்திருஷ்டி வரை – நான்கு குணஸ்தானம் வரை – பெறமுடியும்.

அவர்களிடத்தில் சம்யம் கிடையாது.

70. தேவர்கள் எத்தனை வகையினர்?

தேவர்கள் நான்கு வகையினர் 1. பவணவாசி, 2. வியந்தரவாசி, 3. ஜோதிஷ்கர், 4. கல்பவாசி.

71. பவண வாசி தேவர்கள் எத்தனை வகையினர்?

1. அசுர குமார், 2. நாக குமார், 3. வித்யுத் குமார், 4. சொர்ண குமார், 5. அக்னி குமார், 6. வாயு குமார், 7. ஸ்தனித குமார், 8. உததி குமார், 9. துவீப குமார், 10. திக் குமார் என பத்து வகையினர் பவண வாசி தேவர்கள்.

72. பவணத்தில் வசிக்கும் பவணவாசி தேவர்களின் இருப்பிடம் எங்குள்ளது?

மத்திய உலகத்திற்குக் கீழே பாதாள உலகத்தில் இரத்னப் பிரபா பூமியின் பங்கபாகத்தில் அசுர குமாரர்களுடைய பவனங்கள் இருக்கின்றன. கரபாகத்தில் மேலும், கீழும் ஒவ்வொரு ஆயிரம் யோஜனை விட்டு மற்ற மீதியுள்ள ஒன்பது குமாரர்களுடைய பவனங்கள் உள்ளன.

73. வியந்தர வாசி எத்தனைப் பிரிவினர்?

கின்னரர், கிம்புருஷர், மகோரகர், கந்தர்வர், யக்ஷ, ராக்ஷஸ, பூத, பிசாசர் என்னும் வகையால் வியந்தர வாசி தேவர் எண் வகையினர் ஆவர்.

74. நானா தேசங்களில் வாழும் வியந்தரவாசி தேவர்களுடைய இருப்பிடம் எங்குள்ளது?

மத்திய உலகத்திற்குக் கீழே பாதாள உலகத்தில் இரத்னப் பிரபா பூமியில் கர பாகத்தில் ஏழுவகை வியந்திரர்களுடைய வாழிடங்கள் உள்ளன. மற்றும் பங்க, அப்பகூளா பாகத்தில் ராக்ஷஸர்களின் இருப்பிடம் இருக்கிறது.

75 ஜோதிஷ்க தேவர் எத்தனை வகையினர்?

சூரிய, சந்திர, கிரக, நக்ஷத்திர மற்றும் ப்ரகீர்ணக் தாரை வகை என ஜோதிட தேவர்கள் ஐந்து வகையினர் ஆவர்.

76. ஜோதிஷ்க தேவர்களுடைய இருப்பிடம் எங்குள்ளது?

மத்திய உலகத்தைப் போல பூமி பாகத்தில் 790 யோஜனை உயரம் சென்ற பிறகு தாரைகைகள் சஞ்சரிக்கின்றன. இது எல்லா ஜோதிஷிகளுக்குப் பாதி பகுதியில் இருக்கிறது. இதிலிருந்து பத்து யோஜனை உயரம் சென்ற பிறகு சூரியன் சஞ்சரிக்கிறது. இதிலிருந்து எண்பது யோஜனை மேலே சென்றால் அங்கு சந்திரன் சஞ்சரிக்கிறது. இதிலிருந்து நான்கு யோஜனை மேலே சென்ற பிறகு நக்ஷத்திரங்கள் சஞ்சரிக்கின்றன. இதிலிருந்து நான்கு யோஜனை உயரம் சென்ற பிறகு புதன் சஞ்சரிக்கிறது. இதிலிருந்து மூன்று யோஜனை மேலே சென்ற பிறகு சுக்கிரன் சஞ்சரிக்கிறது. இதிலிருந்து மூன்று யோஜனை சென்றால் அங்கு பிரகஸ்பதி (குரு) சஞ்சரிக்கிறது. இதிலிருந்து 3 யோஜனை மேலே சென்றால் செவ்வாய் சஞ்சரிக்கிறது. இதிலிருந்து மூன்று யோஜனை சென்றால் அங்கு சனி சுற்றி வருகிறது. மேரு மலையிலிருந்து பதினோறு நூறு இருபத்தொன்று யோசனை தூரத்திலிருந்து மேரு மலையை எப்பொழுதும் சுற்றிவரும் ஜோதிஷ்க தேவர்கள் தன்னுடைய விமானத்தோடே இருக்கிறார்கள். இந்த ஜோதிஷ்கர்கள் பரவியுள்ள ஆகாயத் பிரதேசம் 110 யோஜனை பருமனும், கனோததி வாத வலையம் வரை அசங்கியாத தீவு, கடல் அளவு நீளமுடையது.

77. ஜோதிஷ்க தேவர்களுடைய விமானங்கள் எந்த க்ஷேத்திரம் வரையில் ஆகாயத்தில் செல்ல முடியும்? எந்த க்ஷேத்தரங்களுக்கு வெளியே அவர்கள் விமானங்கள் நிலையாக நிற்கும்?

மனிதர் மானுக்ஷோத்தர மலைக்குள்ளாக வாழ்கிறார்கள். மானுக்ஷோத்ர மலையின் ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கம் வரை மொத்தம் பரப்பளவு 45 லக்ஷம் யோஜனை ஆகும். மனிதர்கள் இந்த இடத்தில் வாழ்கிறார்கள். இதனால் இது மனிதலோகம் என்றழைக்கப்படுகிறது. இந்த

மனித உலகத்தில் பஞ்ச மேருகளை பிரதிக்ஷணம் (வலம் வந்து கொண்டு) ஜோதிஷ்க விமானங்கள் எப்போதும் சுற்றி வருகின்றன. இந்த மனித லோகத்திற்கு வெளியே ஜோதிஷ்க தேவர்கள் நிலையாக இருப்பர்.

78. ஜம்புத் தீவை (வலம்வர) சுற்றிவர, சூரிய, சந்திரர்களுக்கு எவ்வளவு காலம் ஆகிறது?

ஒரு சூரியனுக்கு ஜம்புத்தீவை முழுமையாக சுற்றி வருவதற்கு இரண்டு பகல் இரண்டு இரவு காலம் பிடிக்கிறது. சந்திரனுக்கு இருபகல், இரு இரவு மற்றும் சிறிது அதிக காலம் பிடிக்கிறது. இதனால் சந்திர உதயத்தில் ஏற்றத் தாழ்வு உண்டாகிறது.

79. ஜம்புத்தீவில் சூரியன் சுற்றிவரும் க்ஷேத்திரம் எத்தனை? பாதைகள் எத்தனை? மற்றும் சூரியன் சுற்றிவரும் பாதையினுடைய வேறுபாடுகள் எத்தனை?

சூரியனுடைய சுற்றுமிடம் ஜம்புத்தீவில் 180 யோஜனை, மற்றும் லவண சமுத்திரத்தில் 330 48/61 யோஜனையாக மதிப்பிடப்படுகிறது. சூரியன் சுற்றி வரும் மொத்த பாதை 184. இதனால் இவற்றில் க்ஷேத்திரப் பிரிவுகள் ஏற்படுகின்றன. ஒரு பாதையிலிருந்து மற்றொரு பாதையின் வித்தியாசம் இரண்டு யோஜனை ஆகும்.

80. ஜம்புத்தீவில் இரண்டு சூரியன் இரண்டு சந்திரன்கள் உள்ளன. (இது முதலிலேயே சொல்லப்பட்டது) அடுத்து இருக்கும் கடல், தீவுகளில் எத்தனை சூரியன், சந்திரர்கள் இருக்கின்றன.

இலவண சமுத்திரத்தில் 4 சூரியன் 4 சந்திரன்கள்; தாதகி கண்டத்தில் 12 சூரியன் 12 சந்திரன்கள்; கலோததியில் 42 சூரியன் 42 சந்திரன்கள் புஷ்கரார்தத் தீவில் 72 சூரியன் 72 சந்திரன் இவ்வாறாக இரண்டரைத் தீவில் 132 சூரியன். இதே அளவு சந்திரன்கள். மற்றும் புஷ்கரவரத்தீவின் அடுத்த பகுதியில் முதல்பாகம் புஷ்கரார்த்தத்தைப் போலவே சமமான எண்ணிக்கையுள்ள 72 சூரியன் 72 சந்திரன்கள் இருக்கின்றன. அடுத்த சுயம்பு ரமணத் தீவிலும் கடலிலும் எண்ணிக்கையிலா தீவு கடல்களில் இரண்டு இரண்டு மடங்காக இருப்பதை அறிய வேண்டும்.

81. சூரியன், சந்திரன் இவர்களில் யார் இந்திரன் யார் பிரதீந்திரன்?

சூரியன் பிரதீந்திரன்; சந்திரன் இந்திரன் என அழைக்கப்படுகிறார்கள்.

82. ஒவ்வொரு சந்திரனுடைய பரிவாரம் எவ்வளவு?

ஒரு சூரியன், 28 நக்ஷத்திரம், 88 கிரகங்கள், 66,000 கோடா கோடி தாரகைகள் ஒவ்வொரு சந்திரனின் பரிவாரங்கள் ஆகும்.

83. சூரிய பிம்பத்தில் உஷ்ணமும், சந்திர பிம்பத்தில் குளிர்ச்சியும் ஏன்?

சூரிய பிம்பத்தில் ஆதப் நாம கர்ம உதயத்தினால் உஷ்ணமும், சந்திர பிம்பத்தில் உத்யோத என்னும் நாமகர்மஉதயத்தினால் குளிர்ச்சியும் ஏற்படுகிறது.

84. பவணவாசி தேவர்களின் மிக அதிக, மிகக் குறைந்த ஆயுள் எவ்வளவு?

அசுர குமாரருக்கு ஒரு சாகரோபம், நாக குமாரருக்கு 3 பல்யோபம் சுவர்ணகுமாரருக்க 2½ பல்யோபம், தீப குமாருக்கு 2 பல்யோபம் மற்றும் வித்யுத் குமார், அக்னி குமார், வாத குமார், ஸ்தனித குமார், உதிதி குமார், திக் குமார்களுக்கு 1½ பல்யோபம் மிக அதிக ஆயுள். பவண வாசி தேவர்களின் மிகக் குறைந்த ஆயுள் 10 ஆயிரம் ஆண்டுகள்.

85. ஜோதிஷ்க தேவர்களுடைய அதிக, குறைந்த ஆயுள் எவ்வளவு?

ஜோதிஷ்க தேவர்களின் உயர்ந்த ஆயுள் சிறிது குறைந்த ஒரு பல்யோபம். குறைந்த ஆயுள் பல்யோபத்தின் எட்டில் ஒரு பகுதியாகும்.

86. வியந்தர தேவர்களின் மிக அதிக மற்றும் மிகக்குறைந்த ஆயுள் எவ்வளவு?

வியந்தரர்களின் மிக அதிக ஆயுள் ஒருபல்யோபமத்திற்கு கொஞ்சம் அதிகமாகும். மற்றும் மிகக் குறைந்த ஆயுள் 10, 000 வருடங்கள் ஆகும்.

87. மேல் உலகம் தொடர்பான திரச நாளியில் என்னென்ன உள்ளன? அங்கு யார் யார் இருக்கிறார்கள்?

மேல் உலகம் தொடர்பான திரச நாளியில் பதினாறு சொர்க்கம், ஒன்பது க்ரைவேயகம், ஒன்பது அனுதிசை மற்றும் ஐந்து அனுந்தரம் விமானங்கள் உள்ளன. எல்லாவற்றிற்கும் மேலே சித்த சிலா இருக்கிறது. அங்கே பதினாறு சொர்க்கத்தில் சௌதர் மேந்திரன், ஈசானேந்திரன் முதலிய தேவர்களும் ஒன்பது க்ரைவேயகம், ஒன்பது அனுதிசை மற்றும் ஐந்து அனுத்தர விமானங்களில் அகமிந்திர தேவர்கள் வசிக்கிறார்கள். மேலும் சித்த சிலாவில் சித்த பரமேஷ்டிகள் உள்ளனர்.

88. பதினாறு சொர்க்கம், ஒன்பது க்ரைவேயகம், ஒன்பது அனுதிசம், ஐந்து அனுந்தரம் விமானங்களின் பெயர் என்னென்ன?

பதினாறு சொர்க்கங்களின் பெயர்கள் : 1. சௌதர்ம, 2. ஈசான, 3. சனத்குமார, 4. மாகேந்திர, 5. பிரம்ம, 6. பிரமோத்தர, 7. லாந்தவ, 8. காபிஷ்ட, 9. சுக்ர, 10. மகாசுக்ர, 11. சதார, 12. சகஸ்ரார, 13. ஆனத, 14. ப்ராணத, 15. ஆரன மற்றும் 16. அச்சுத. ஒன்பது க்ரைவேயங்கள் : 1. சுதர்ஷன், 2. அமோக, 3. சுப்ரபுத்த, 4. யசோதா, 5. சுபத்திர, 6. சுவிஷாஸ், 7. சுமனச, 8. சௌமனச மற்றும் 9. ப்ரீதிங்க. ஒன்பது அனுதிசை : 1. அர்சி, 2. அர்சிமாலினி, 3. வஜ்ர, 4. வைரோசன, 5. சௌம, 6. சௌமனச, 7. அங்க, 8. ஸ்படிக மற்றும் 9. ஆதித்ய. ஐந்து அனுத்தரங்கள் : 1. விஜய, 2. வைஜயந்த, 3. ஜெயந்த, 4. அபராஜித மற்றும் 5. சர்வார்த்த சித்தி.

89. பவன, வியந்தர், ஜோதிஷ்க மற்றும் வைமானிக இந்நான்கு வகையினரை வேறு எந்த வடிவில் என்ன பெயரால் அழைக்கின்றனர்.

இந்நான்கு கூட்டத்தை இந்திர, சாமானிக மற்றும் வேறு வகையிலும் அழைக்கப்படுகிறது. அது 1. இந்திரன் – அரசன் ஒப்புமை, 2. சாமானிக – ராஜ குடும்ப பிரமாணமான ஒப்புமை, 3. த்ராய த்ரிம்சத் – மந்திரிகளுக்கு ஒப்புமை, 4. பாரிஷத் – அங்கத்தினர் போன்ற ஒப்புமை, 5. ஆத்ம ரக்ஷா – பாதுகாவலன், 6. லோக்பாலர்– குடிகள் நலம் கருதும் அமைப்பு, 7. அனீகர் – (சேனை) படைகளுக்கு ஒப்பு, 8. ப்ரகீர்ண – குடிமக்களுக்கு ஒப்பு 9. ஆபியோக்ய – வாகன ஓட்டிகள், 10. கில்விஷிக் – இல்லங்களில் வாழ்பவர். பவணவாசி மற்றும் வைமானிக தேவர்களில் இந்த பத்து விதமான வேறுபாடுகள் உள்ளன. ஆனால் வியந்தரர் மற்றும் ஜோதிஷ்க தேவர்களில் த்ராய திரிம்சத் மற்றும் லோகபாலரைத் தவிர்த்து மற்ற எட்டு பேதங்கள் இருக்கின்றன.

90 (மேலே சொல்லப்பட்ட) இந்திர, சாமானிகர் ஆகிய பத்து பேதம் எல்லா வைமானிக தேவர்களிலும் காணப்படுகின்றனவா? அல்லது சிறப்பு ஏதேனும் உள்ளதா?

இந்த பத்து பேதம் வைமானிகர் சம்பந்தமாக, லௌகாந்திக தேவர்களைத் தவிர்த்து மற்ற எல்லா கல்பவாசி தேவர்களிலும் இருக்கிறது. கல்பாதீத தேவர்களில் இல்லை.

91. கல்பவாசி மற்றும் கல்பாதீத இவை யாரைக் குறிக்கிறது?

பதினாறு சொர்க்கம் வரை உள்ள தேவர்கள் கல்பவாசி தேவர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இதற்கு மேலேயுள்ள க்ரைவேயகம் முதலான தேவர்கள் கல்பாதீத தேவர் எனப்படுவர்.

92. உலகத்தில் நூறு இந்திரர்கள் யாவர்?

பவணவாசி தேவர்களில் அசுரகுமார் முதலிய 10 வகைகளில் மற்றும் இரண்டு இரண்டு

இந்திரர்கள் மற்றும் இரண்டு இரண்டு பிரதி இந்திரர்கள் இவ்விதமாக 20 இந்திரர்கள் 20 பிரதி இந்திரர்கள், வியந்தர தேவர்களில் கின்னரர் முதலிய எட்டு வகைகளில் ஒவ்வொன்றிலும் இரண்டு இரண்டு இந்திர பிரதி இந்திரர்கள் இவ்விதமாக 16 இந்திரர் 16 பிரதி இந்திரர்கள் ஜோதிஷ்கர்களில் ஒரு இந்திரன் ஒரு பிரதிஇந்திரன் (சூரியன், சந்திரன்) கல்ப வாசிகளில் 12 இந்திரர்கள் 12 பிரதி இந்திரர்கள் (சௌதர்ம முதலிய நான்கு சொர்க்கங்களில் ஒவ்வொருவர் என நான்கு இந்திரர். நான்கு பிரதி இந்திரர் பிரம்ம சொர்கத்திலிருந்து ஸஹஸ்ரார சொர்கம் வரையான எட்டு சொர்கங்களில் இரண்டு சொர்கத்துக்கு 1 இந்திரன் 1 பிரதீந்திரன் வீதம் 4 இந்திரன் 4 பிரதீந்திரன். மற்றும் ஆனத முதலிய நான்கு சொர்க்கங்களில் நான்கு இந்திரர் நான்கு பிரதி இந்திரர் ஆக இவ்விதமாக 16 சொர்க்கங்களில் 12 இந்திரர் 12 பிரதி இந்திரர் இருக்கின்றனர்) மனிதர்களில் ஒரு இந்திரன் (சக்ரவர்த்தி) விலங்கு ஜீவன்களில் ஒரு இந்திரன் (சிங்கம்) பிரதி இந்திரனைக் கூட உலகத்தில் இந்திரனாக அழைப்பதால் எல்லாமாகச் சேர்த்து 100 இந்திரர்கள் இருக்கிறார்கள்.

பவணாலயசாலிசா, விந்தர தேவாண ஹோந்தி பத்தீஸா ।
கம்பாமர் சஉவீசா சந்தோ சுரோ ணரோ திரியோ ॥ (தி.சங்)

93. வைமானிக தேவர் என்று யாரைக் கூறுவர்? அவர்களின் சிறப்பு என்ன?

மேல் உலகம் தொடர்பான விமானங்களில் வாழ்பவர்கள், மற்றும் புண்ணியவான் என்று அழைக்கப்படுபவர்கள் வைமானிக தேவர் என்று அழைக்கப்படுகின்றனர். சௌதர்ம, ஈசான முதலிய பதினாறு சொர்க்கங்களில் உள்ள தேவர்களில் தீர்த்தங்கரர்களின் பஞ்ச கல்யாணம், சமவசரணம் அமைத்தல் போன்ற தர்ம காரியங்கள் செய்யக்கூடிய சிறப்பு வைமானிக தேவர்களுக்கு உண்டு. 16 சொர்க்கங்களுக்கு மேலே நவக்கரை வேயகம், நவானுதிசை, மற்றும் பஞ்சானுத்தரங்களில் தங்கள் விமானத்திலிருந்து கீழே வராமல் அங்கிருந்தே பதினோரு அங்கங்களை சுவாத்தியாயம் செய்து கொண்டு உலகின் மிகச் சிறந்த சுகத்தில் ஆழ்ந்திருப்பவர்களும் அகமிந்திர வைமானிக தேவர் என்றழைக்கப்படுகின்றனர்.

94. காமவாசனை உடைய, காமவாசனை இல்லாத தேவர்கள் யார் யார்?

பவணவாசி, வியந்தரர், ஜோதிஷ்க தேவர்கள் மற்றும் சௌதர்ம, ஈசான முதலிய பதினாறு சொர்க்க தேவர்கள் (லௌகாந்திக தேவர்களைத் தவிர) காம வாசனை உடையவர்கள். நவக்கிரைவேயகம், நவானுதிசை, பஞ்சாணூந்தரம் விமானங்களில் இருக்கும் தேவர்கள் காமவாசனை இல்லாமல் இருப்பவர்கள்.

95. எந்தெந்த தேவர்கள் எவ்வெவ்விதமான காமவாசனை உடையவர்கள்?

பவணவாசி, வியந்தரர், ஜோதிஷ்க மற்றும் சௌதர்ம, ஈசான சொர்க்க தேவர்கள் அசம்யமி மனிதர்களைப் போல உடல் உறவு காமவாசனை பூர்த்தி செய்பவராகவும் இருக்கிறார்கள். மூன்றாவது நான்காவது சொர்க்க தேவர்கள், தேவிகளின் உடல் தொடுவதாலும், 5,6,7,8 சொர்க்க தேவர்கள் தேவியர்களின் வடிவம், அலங்காரம் பார்த்தலிலும், 9,10,11,12 சொர்க்க தேவர்கள் தேவியரின் இசை கேட்டும் 13,14,15,16 சொர்க்க தேவர்கள், தேவியரின் எண்ணத்தினாலும் காம விகாரத்தை சாந்தப்படுத்திக் கொள்கின்றனர். கல்பவாசி தேவர்களிலிருந்து மேலே வசிக்கக்கூடிய க்ரைவேயத்தில் உள்ள தேவர்கள் காமவாசனை இல்லாமல் இருக்கிறார்கள்.

96. (யக்ஷன், யக்ஷினி), தேவ, தேவியர் காமவாசனையோடு கூடி இருக்கிறார்ளா? இல்லாமல் இருக்கிறார்களா?

வியந்தர தேவர்களின் வரிசையில் வரும் இந்த தேவ தேவியர் காமவாசனையோடு கூடிதான் இருக்கிறார்கள். (இதனால் இவர்களுக்கு பூஜை செய்பவர் மகாமித்யாத்வி என்று சொல்லப்படுகிறது.)

97. சௌதர்மேந்திரன் மற்றும் அவனுடைய முக்கிய இந்திராணி இவர்களுக்கு பரத க்ஷேத்திரம் தொடர்பான தர்மகாரியத்தில் என்ன சிறப்பு இருக்கிறது?

சௌதர்மேந்திரன் எல்லா இந்திரர்களிலும் முதன்மையானவன். தீர்த்தங்கரர்களுக்கு பஞ்ச கல்யாண வைபவம் செய்கிறான். மற்றும் அவன் கட்டளைப்படி சமவசரண அமைப்பு உண்டாகிறது. இந்திரன், இந்திராணி தீர்த்தங்கர பாலகரை (ஆடை, அணிகலன்களால்) ஒப்பனை செய்வதோடு பணிவிடையும் செய்கின்றனர். சௌதர்மேந்திரனும், இந்திராணியும் (சசியும்) சொர்க்கத்தலிருந்து கீழே வந்து மனுக்ஷ கதியைப் பெற்று ஒரே பவத்தில் (அதே பிறப்பில்) முக்தி அடைபவர்கள்.

98. மேல் உலகத்தில் ஐந்தாவது சொர்க்கத்தில் வசிக்கும் லௌகாந்திக தேவர்களுக்கு என்ன சிறப்பு இருக்கிறது?

லௌகாந்திக தேவர்கள்

1. பிரம்மச்சாரிகளாக வாழ்பவர்கள்.
2. வெண்ணிற ஆடை அணிபவர்,
3. பதினான்கு பூர்வம் கொண்ட சுருதஞானத்தை அறிந்தவர்களாவர். எப்போதும் தர்ம சிந்தனையுடன் கூடியவர்கள்.
4. ஆடை, அணிகலன்களில் எளிமை இருப்பதால் இவர்களை பிரம்மரிஷி என்று சொல்வர்.
5. விஷய ரதி (பற்று) இல்லாமல் இருப்பதால் தேவரிஷி என்றும் சொல்லப்படுகிறது.
6. மற்ற தேவகணங்கள் இந்த லௌகாந்திக தேவர்களுக்கு மரியாதை காட்டுவதுடன் இவர்களின் குணங்களைப் பாராட்டி புகழ்ந்து பாடுவர்.
7. இந்த லௌகாந்திக தேவர்கள் சுக்ல லேஸ்யாதாரிகள் ஆவர்.
8. இவர்களது உடல் ஐந்து முழம் உயரம் இருக்கும்.
9. இவர்கள் சுதந்தரமானவர்கள். (இவர்கள் அனைவரும் சமமான ஐஸ்வரியங்கள் பெற்றுள்ளதால் மற்ற வைமானிக தேவர்களில் உள்ள பிரிவுகள் போல் இல்லாமல், எல்லா லௌகந்திகர்களும் சமமானவர்களாக கருதப்படுகிறார்கள்).
10. தீர்த்தங்கரர்களின் தீக்ஷா காலத்தில் அவர்களின் வைராக்கியத்தைப் புகழ்ந்து பாட லௌகாந்திக தேவர்கள் இரண்டரைத் தீவிற்கு வருவார்கள்.
11. லௌகாந்திக தேவர்கள் ஒரே பவத்தில் முக்தி பெறக் கூடியவர்கள். அதாவது சொர்க்கத்திலிருந்து மனிதகதி பெற்று முனி தீக்ஷை ஏற்று முக்தி சுகத்தை (சித்த பரமேஷ்டி பதத்தை) அடையக் கூடியவர்கள்.

99. லௌகாந்திக தேவ பதவி எந்த ஜீவனுக்கு கிடைக்கும்?

சம்யக்திருஷ்டி முனி குற்றமற்ற சரியாவைக் கடைபிடித்து எப்போதும் பன்னிரு சிந்தனைகளில் ஆழ்ந்து இருப்பவர்கள் லௌகாந்திக பதவியை அடைகிறார்கள்.

100. பஞ்சம காலத்தில் உத்தம சரியாவைக் கடைப்பிடிக்கும் சம்யக்திருஷ்டி முனிகள் கூட லௌகாந்திக பதவியைப் பெற முடியுமா?

முடியும் என்று குந்தகுந்தாசாரியர் அஷ்டபாகுடத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்த பஞ்சம காலத்தில் கூட இவ்வித உத்தம சரியையை மேற்கொண்ட சம்யக்திருஷ்டி முனி லௌகாந்திகர் போன்ற உத்தமப் பதவியை அடைய முடியும்.

101. பிரம்ம சொர்க்கத்தின் விஷயரதி (பொருள்பற்று) தேவர்களிலிருந்து விலகி பிராந்த பாகத்தில் அதாவது பிரம்ம சொர்க்கதினுடைய நான்கு திசைகளிலும் மற்றும் கோண திசைகளில் மேல் பகுதியில் வசிக்கும் மற்றும் பிறப்பு இறப்பு சுழற்சியுள்ள சம்சாரத்தின் முடிவின் எல்லையை

அடைந்துள்ளவர் இத்தகைய தகுதியுடைய லொகாந்திக தேவர்கள் வசிக்கும் திசையைக் குறித்தும் அந்த தேவர்களின் பெயரையும் குறித்து ஒரு வரைப்படம் பார்க்கவும்.



மொத்த எண்ணிக்கை 407806 (நான்கு இலட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று ஆறு)

102. சம்யக்திருஷ்டி ஜீவன் இந்திர பதவி லௌகாந்திக தேவபதவி மற்றும் ராஜ்ய பதவி ஆகிய சுகத்தைப் பெறுவதற்கான விருப்பம் கொள்ளுதல் தகுமா?

கூடாது. சம்யக் திருஷ்டி ஜீவன் இந்த சம்சார உலக வாழ்க்கை மற்றும் அசம்யமத்தின் சுகத்திற்கான விருப்பம் கொள்ளுதல் கூடாது. ஏனெனில் இத்தகைய விருப்பங்கள் கொள்வது நிதானம் மற்றும் ஆசை என்னும், குற்றமாகக் கருதப்படும். எனவே இத்தகைய குற்றத்திற்கு ஆளாகாமலிருக்க சம்யக்தர்சனத்தைக் காக்க வேண்டும். வீதராக தேவ, சாஸ்திர, குரு இவர்கள் முன்னால் செய்த காரியத்தின் பலனால் விருப்பம் இல்லாமலேயே அநேக தீர்த்தங்கரர்கள், சக்ரவர்த்திகள் ஆகிய வைபவம் தானாகவே கிடைக்கிறது.

103. லௌகாந்திக தேவர் மற்றும் சௌதர்மேந்திரர், அவர்களின் இந்திராணி (சசி) முதலிய தேவ, தேவியர்களுக்கு ஜைனர்கள் எட்டு வித பொருள்களால் பூஜை செய்தால், அபிஷேகம், அர்சனை ஆகியவை ஏன் செய்யக்கூடாது?

பூஜை செய்தல் கூடாது. ஏனென்றால் இந்த தேவ தேவியர்களிடம் சங்கல்ப பூர்வமாக (வைராக்கியத்தோடு மேற்கொண்ட) எந்த விரதம், சம்யமம் கிடையாது. மேலும் தேவகதியினுடைய தேவ, தேவியர் ஒரு கிரகத்தியாகி, சம்யமி, பிரம்மச்சாரியை விட தவ ஒழுக்கங்களில் குறைந்தவர்கள். ஜைனர்கள், வீடு, குடும்பம், வண்ண ஆடை, அணி அலங்காரங்கள் இவற்றைத் துறந்த (தியாகம் செய்த) கிருக பிரம்மச்சரிக்குக்கூட பூஜை, அபிஷேகம் மற்றும் ஆரத்தி முதலிய கிரியைகளைச் செய்வதில்லை. அப்படி இருக்கும்போது சராக தேவ தேவியர்களுக்கு பூஜை முதலான காரியங்களை எவ்வாறு செய்ய முடியும். அதாவது செய்ய முடியாது.

104. பவணாதி மூன்று (பவணவாசி, வியந்தரவாசி, ஜோதிஷ்க) தேவ தேவியர்களில் சம்யக் திருஷ்டி பிறக்க முடியுமா? என்ன?

முடியாது. பவணாதி மூன்று தேவ தேவியர்களில் மித்யாதிருஷ்டி ஜீவன்கள்தான் ஜென்மம் எடுக்கிறார்கள். சம்யக்திருஷ்டி ஜீவனோ சித்தாந்தப்படி வைமானிக (கல்ப – கல்பாதித) தேவர்களாகப் பிறக்கிறார்கள்.

105. வைமானிக தேவர்கள் தொடர்பான கீழ் கீழேயுள்ள தேவர்களுக்கும் மேல் மேல் படிகளில் உள்ள தேவர்களுக்கும் என்ன சிறப்பு?

கீழேயுள்ள வைமானிக தேவர்களுக்கும் மேலே மேலே உயர்படியில் உள்ள வைமானிக தேவர்களுக்கும், கதி, உடல், பற்று மற்றும் அபிமானம் காரணமாக வேறுபாடுகள் உள்ளன. அதாவது முதல் கல்பம் (சௌதர்ம – ஈசான சொர்க்கம்) இரண்டாவது கல்பம் (சனத்குமார மகேந்திர சொர்க்கம்) இதைப்போல மேலே மேலே உயர்ந்த தேவர்களாகச் சென்றால் உடல், உயரம், பரிக்ரகம் மற்றும் அபிமானம் இவற்றிலும் குறைந்து கொண்டே செல்லும்.

106. வைமானிக தேவர்களுடைய உடலின் உயரம் எவ்வளவு?

சௌதர்ம, ஈசான சொர்க்க தேவர்களுடைய உடலின் அளவு 7 முழம். சனத்குமார, மாகேந்திர சொர்க்க தேவர்களின் உடல் 6 முழம், பிரம்ம, பிரம்மமோத்தர், லாந்தவ மற்றும் காபிஷ்ட சொர்க்கத்தின் தேவர்களது உடல் 4 முழம் அளவு ஆகும். ஆனத, பிராணத கல்ப தேவர்களின் உடல் 3½ முழம் அளவாகும். ஆரண அச்சுத சொர்க்க தேவர்களுடைய தேவர்களின் உடலளவு 3 முழம் அளவாகும். கிரைவேயகத்தில் அகமிந்திரர்களின் உடல் 2½ முழம் அளவு ஆகும். மத்ய கிரைவேயகத்தில் மற்றும் அனுதிஷத்தில் அகமிந்திரர்களின் உடல் 1½ முழம் அளவு ஆகும். மற்றும் ஐந்து அனுத்தர விமானங்களின் அகமிந்திரர்களின் உடல் 1 முழம் அளவு ஆகும்.

107. வைமானிக தேவர்களின் மிக உயர்ந்த மற்றும் மிகக் குறைந்த ஆயுளின் அளவுகன் என்ன?

வைமானிக தேவர்களின் மிக உயர்ந்த மற்றும் மிகக் குறைந்த ஆயுளின் அளவு கீழ்கண்ட

பட்டியலின்படி உள்ளது.

வைமானிக தேவர்	உயர்ந்த ஆயுள்	குறைந்த ஆயுள்
சௌதர்ம, ஈசான கல்ப தேவர்கள்	சிறிது அதிக 2 கடல்	சிறிது அதிக ஒரு பல் யோபமம்
சானத்குமார், மகேந்திர கல்ப தேவர்கள்	7 கடல் + சிறிது அதிகம்	2 சாகரோபமம் + சிறிது அதிகம்
ப்ரம்ம, பிரம்மோத்தர கல்ப தேவர்கள்	10 கடல் + சிறிது அதிகம்	7 சாகரோபமம் + சிறிது அதிகம்
லாந்தவ, காபிஷ்ட கல்ப தேவர்கள்	14 கடல் + சிறிது அதிகம்	10 சாகரோபமம் + சிறிது அதிகம்
சுக்ர, மகாசுக்ர கல்ப தேவர்கள்	16 கடல் + சிறிது அதிகம்	14 சாகரோபமம் + சிறிது அதிகம்
சதார, சகஸ்ரார கல்ப தேவர்கள்	18 கடல் + சிறிது அதிகம்	16 சாகரோபமம் + சிறிது அதிகம்
ஆனத ப்ராணத கல்ப தேவர்கள்	20 கடல்	18 சாகரோபமம்
ஆரண, அச்சுத கல்ப தேவர்கள்	22 கடல்	20 சாகரோபமம்
சுதர்சன க்ரைவேயக கல்ப தேவர்கள்	23 கடல்	22 சாகரோபமம்
அமோத க்ரைவேயக கல்ப தேவர்கள்	24 கடல்	23 சாகரோபமம்
சுப்ர புத்த கல்ப தேவர்கள்	25 கடல்	24 சாகரோபமம்
யசோதர கல்ப தேவர்கள்	26 கடல்	25 சாகரோபமம்
சுபத்ர கல்ப தேவர்கள்	27 கடல்	26 சாகரோபமம்
சுவிஷால் கல்ப தேவர்கள்	28 கடல்	27 சாகரோபமம்
சுமனச கல்ப தேவர்கள்	29 கடல்	28 சாகரோபமம்
சௌமனஸ கல்ப தேவர்கள்	30 கடல்	29 சாகரோபமம்
ப்ரதீங்கர கல்ப தேவர்கள்	31 கடல்	30 சாகரோபமம்
நவானுதிசை கல்ப தேவர்கள்	32 கடல்	31 சாகரோபமம்
முதல் நான்கு அனுத்தர கல்ப தேவர்கள்	33 கடல்	32 சாகரோபமம்
சர்வார்த்தசித்தி அனுத்தர கல்ப தேவர்கள்	33 கடல்	33 சாகரோபமம்

108. சதார, சஹஸ்ரார இந்த 11–12ஆம் சொர்க்கம்வரை தேவர்களின் ஆயுளுடன் கொஞ்சம் அதிகம் என ஏன் கூறப்படுகிறது?

ஏனெனில் 12ஆம் சொர்க்கம் வரைதான் காதாயுஷ்கம் ஏற்படுகிறது. மேலேயுள்ள தேவர்களுடைய

ஆயுள் பந்தம் கட்டுபவர்கள் ஏதாவது விரதம் மற்றும் சம்யக்த்துவத்தினை விட்டு விடுவதால் (புண்ணியம் குறைவதால்) அவர்களின் ஆயுள் கீழேஉள்ள வைமானிக தேவ ஆயுள் கட்டிவிடுகிறது. இருந்தாலும் அவர்களுடைய ஆயுள் கீழேயுள்ள தேவர்களின் ஆயுளைவிட சிறிது அதிகமாக்கப்படுகிறது. இதையே காதாயுஷ்கம் எனப்படுகிறது.

109. லௌகாந்திக தேவர்களுடைய ஆயுள் எவ்வளவு?

எல்லா லௌகாந்திக தேவர்களுடைய ஆயுளும் 8 சாகரோபமம் அளவு. இங்கே (ஜெகன்ய) குறைந்த ஆயுள் கிடையாது.

110. அகால மரணம் என்று எதைச் சொல்லுவர்?

நிகழ்கால ஆயுள் கர்மத்தின் நிஷேகம், ஆயுள் முழுமை அடைவதற்கு முன்பே இடைக்காலத்திலேயே விஷம், ஆயுதம் இவற்றின் காரணமாக முடிவடைந்து விடுவது அகால மரணம் எனப்படுகிறது.

111. அகால மரணம் எந்தெந்த ஜீவன்களுக்கு ஏற்படுதில்லை?

உபபாத ஜென்மம் எடுக்கும் தேவர்கள், மற்றம் நரகர், எடுத்துள்ள அதே மனிதப் பிறவிலேயே மோக்ஷம் அடைபவர். உத்தர குரு முதலிய இடங்களில் தோன்றியவர்கள், பல்யம் முதலிய அசங்யாத வருஷ ஆயுளுடைய விலங்கு ஜீவன்கள் ஆகியவர்களுக்கு அகால மரணம் ஏற்படுவதில்லை.

112. ஏகேந்திரிய (ஓரறிவு) ஜீவன்களுக்கு மூவுலகத்திலும் வாழ்விடங்கள் எங்கெங்கேயுள்ளது?

ஏகேந்திரிய (ஓரறிவு உயிர்) ஜீவன்கள் மூவுலகங்களில் எல்லா இடங்களிலும் வாழ்கின்றன.

113. ஈரறிவு முதலிய திரச ஜீவன்கள் மூவுலகத்திலும் எங்கெங்கே வாழ்கின்றன?

ஈரறிவு திரச ஜீவன்கள் மூவுலகத்தின் மத்தியில் இருக்கும் ஒரு ரஜ்ஜு அகலம் ஒரு ரஜ்ஜு பருமன் சிறிது குறைந்த 13 ரஜ்ஜு உயரமுள்ள திரச நாளியில் வாழ்கின்றன.

114. மூவுலக ஜீவன்களுக்கும் ஒன்றாக ஒரே சமயத்தில் ஒரு சமயத்திற்கான மகா சாந்தியின் அனுபவம் எந்த சமயத்தில் ஏற்படும்? எந்த க்ஷணம் அது?

உலகத்தில் உத்தம முன்னேற்றம் உண்டாகக் காரணமாகிய தீர்த்தங்கரப் பிரபுவினுடைய ஜென்மம் ஏற்படும் அந்த சமயம் க்ஷண நேரம் மூவுலகங்களிலும் இருக்கும் ஜீவன்களுக்கும் மகா சாந்தியின் சுக அனுபவம் ஏற்படும்.

115. விலங்குகதி தொடர்பான ஆயுள் எவ்வளவு இருக்கின்றன? அதனுடைய அளவினைக் கூறுக.

(அடுத்தப்பக்க அட்டவனை பார்க்கவும்)

விலங்கு கதி தொடர்பான ஆயுள் :–
ஸங்கேதம் – 1, பூர்வாங்கம் = 84,00,000 பூர்வம் = 7056000,00,00,000 வருடங்கள்

வ.	மார்க்கணை	விசேஷம்	மிககுறைவானது	மிக அதிகமானது
	ஒரு பொறியின			
1.	மண்ணுடலி	சுத்த சுரி	எல்லாவற்றிற்கும் அந்தர் முகூர்த்தம்	12000 வருடங்கள்
2.	மண்ணுடலி		"	22000 வருடங்கள்
3.	நீருடலி		"	7000 வருடங்கள்
4.	நெருப்புடலி		"	3 பகல் இரவு
5.	காற்றுடலி		"	3000 வருடங்கள்
6.	வனஸ்பதி சாதாரணம்		"	10000 வருடங்கள்
	இரண்டு முதல் நான்கு பொறியின			
7.	இரண்டு பொறியின		"	12 வருடங்கள்
8.	மூன்று பொறியின		"	49 பகல், இரவு
9.	நான்கு பொறியின		"	6 மாதங்கள்
	ஐம்பொறியின			
10.	நீர்வாழ்வன	மீன் முதலியன	"	1 கோடி பூர்வம்
11.	பரிஸர்க	உடும்பு, கீரிப்பிள்ளை, ஸரீருப முதலியன	"	9 பூர்வாங்கம்
12.	ஊர்வன	பாம்பு	"	42000 வருடங்கள்
13.	பறவை	கர்பூமியது பைருண்டம் முதலியன	"	72000 வருடங்கள்
14.	நாற்கால் பிராணிகள்	கர்மபூமியது	"	1 கோடி பூர்வம்
15.	மனமில்லா ஐம்பொறியின	கர்மபூமியது	"	1 கோடி பூர்வம்
	போகபூமியது			
16.	உத்தம போகபூமியது	தேவகுரு, உத்ரகுரு	2 பல்யம் + 1 சமயம்	3 பல்யம்
17.	மத்தியம போகபூமியது	ஹரி , ரம்யக க்ஷேத்திரம்	1 பல்யம் + 1 சமயம்	2 பல்யம்
18.	ஜகன்ய போகபூமியது	ஹைமவதம், ஹைரண்யவதம்	1 கோடி பூர்லம் + 1 சமயம்	1 பவ்யம்
19.	குபோக பூமியது	அந்தர்த்வீபம்	1 கோடி பூர்லம் + 1 சமயம்	1 பவ்யம்

மூவுலகம்


1875 வில்
2,000 வில்
4,000 வில்
சித்தபரமேஷ்டி
3. யோஜனை
4. யோஜனை
5. யோஜனை
சித்தசிலை
(12 யோஜனை இடைவெளி)
த் வஜதண்டக்
பஞ்சானுத்திரம்
நவானுத்திசை
நவகிரைவேய்யம்
ரஜ்ஜு
1/2 ரஜ்ஜு
1/2 ரஜ்ஜு
1/2 ரஜ்ஜு
1/2 ரஜ்ஜு
1/2 ரஜ்ஜு
4. யோஜனை
5. யோஜனை
7. யோஜனை
1–16 வைமானிக தேவ சொர்கங்கள்
1/2 ரஜ்ஜு
மேல் உலகம்
1–1/2 ரஜ்ஜு
1–1/2 ரஜ்ஜு
3 யோஜனை
4 யோஜனை
5யோஜனை
நடு உலகம்
கரபாகம்
பங்கபாகம்
அப்பஹுலபாகம்
1 ரஜ்ஜு
சக்ரபிரபா
வாலுகா பிரபா
1 ரஜ்ஜு
பங்க பிரபா
1 ரஜ்ஜு
தூம பிரபா
1 ரஜ்ஜு
தம பிரபா
1 ரஜ்ஜு
மஹாத்ம பிரபா
1 ரஜ்ஜு
4 யோஜனை
5 யோஜனை
7 யோஜனை
கீழ் உலகம்
கலகல ப்ருத்வி
கனோததிவாதவலையம் கனவாதவலையம் தனுவாதவலையம்
20,000 20,000 20,000 யோஜனை
யோஜனை யோஜனை


ஜம்பு தீபம்
வடக்கு
ராக்தோதாநதி
ரக்தா நதி
ஐராவத க்ஷேத்திரம்
விஜயார்த்த பர்வதம்
ஆர்ய கண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
ஸிகரி பர்வதம்
பத்ம
ரூப்ய கூலா நதி
சொர்ணகூலாநதி
ஹைரண்யவத க்ஷேத்திரம்
மஹாபத்ம
ருக்மி பர்வதம்
நரகாந்தா நதி
நாரி நதி
ரம்யக் க்ஷேத்திரம்
திகிஞ்ச
நீலபர்வதம்
1 2 3 4 5 6 7 8
1 2 3 4 5 6 7 8
கிழக்கு
விதேக க்ஷேத்திரம்
மேற்கு
சீதோதா நதி
சுமேரு பர்வதம்
சீதா நதி
விதேகக்ஷேத்திரம்
தேவகுரு
1 2 3 4 5 6 7 8
1 2 3 4 5 6 7 8
கேசரி
நிஷத பர்வதம்
ஹரி காந்த நதி
ஹரித் நதி
ஹரி க்ஷேத்திரம்
பஹாபுண்டரிக
மஹா ஹிமவன் பர்வதம்
ரோஹிதாஸ்யா
ரோஹித் நதி
ஹைமவதக்ஷேத்திரம்
புண்டரிக
ஹிமவன் பர்வதம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
மிலேசகண்டம்
பரதக்ஷேத்திரம்
விஜயார்த்த பர்வதம்
ஆர்யகண்டம்
சிந்து நதி
கங்கா நதி
தெற்கு

அதிகாரம்–14

நவதா பக்தி பெருமை

(தான விதி முறை)

இரத்தினத்ரைய (மும்மணி) வடிவ குணங்களை ஏற்றுள்ள அறவோர்களுக்கு சேவையும், பக்தியும் செய்யமால் பவ்வியர்களுக்கு நற்குணங்களை அடையும் வாய்ப்பு மிகவும் துர்லபமாகும் என்று கூறப்பட்டுள்ளது. அதாவது பகவான் மஹாவீரர் கூறிய மார்கத்தில் பக்தி, சேவை, வையாவிருத்யம் முதலியவற்றின் பெருமை பற்றி கூறப்பட்டுள்ளது, தர்மீகளுக்கு வையாவிருத்யம் செய்வதால் அவர்களின் தவத்தில் சிறந்த வளர்ச்சியும், தர்ம பரம்பரை சிறந்த முறையில் நடைபெறவும் வழிவகுக்கிறது. **'ந தர்மோ தர்மோ தார்மி கைர்வினா'.** (அறவோர்கள் இல்லையேல் தர்மம் இல்லை) என்று சாத்திரத்தில் கூறப்பட்டுள்ளது. முனி, ஆர்யிகா, சிராவகர், சிராவகி முதலான தர்மாத்மாக்களுக்கு செய்யும் சேவை மற்றும் நிர்கிரந்த முனிகளுக்கு செய்யும் நவதாபக்தி முதலியவற்றால் பவ்வியர்கள் அவர்களது போன்ற நல்ல குணங்களை அடையும் பாக்கியமும், பாபகர்மங்களை நிர்ஜரை செய்வதும் புண்ணிய கர்மங்களை சேர்த்துக் கொள்வதும், பரம்பரையில் முக்தி அடையும் வாய்ப்பும் கிட்டுகின்றன. இதனால் நவதாபக்தியின் பெருமை பற்றி அறிவது அவசியமாதலால் இந்த அதிகாரத்தில் அதைப்பற்றிய சீரிய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. நவதாபக்தி என்று எதைக் கூறுகின்றனர்?

சிராவகர்கள் ஆகாரம் முதலிய தானத்தின் மூலமாக வையாவிருத்தி செய்யும்போது ஒன்பது பக்திகள் செய்யப்படுகின்றன. அவற்றை 'நவதாபக்தி' என்றனர்.

2. முனிவர்களின் ஆகாரத்தின் போது சிராவகர்கள் மூலமாகச் செய்யப்படும் ஒன்பது பக்தியின் பெயர்களைக் கூறி விளக்குக.

சிராவகர்கள் மூலமாக முனிவர்களுக்கு செய்யப்படும் ஒன்பது பக்திகள்.

1. எதிர்கொள்ளல் : மும்முறை வலம் வருதல்.
2. உயர்ந்த இருக்கை : மரம், கல் இவற்றாலான உயர்ந்த இருக்கையில் அமர்த்துதல்.
3. பாத பிரக்ஷாளன் : பாதங்களைக் கழுவி அந்த நீரைத் (சிறந்த உறுப்புகளில் தலை, முகம்) தெளித்துக் கொள்ளல்.
4. பூஜை : எட்டுவித மங்கலப் பொருள்களால் பூஜை செய்தல் (சாதுக்களுக்கு முன்னால் ஆகார நேரத்தில் தூய உணவு சமைத்து உண்ணும் இடத்தில் எக்காரணத்தைக் கொண்டும் தீ உண்டாக்குதல் முதலிய ஆரம்பத் தொழில்களைச் செய்தல் கூடாது. அவ்வாறு செய்வதால் அந்தராயம் ஏற்படுகிறது.)
5. வணங்குதல் : உட்கார்ந்து பணிந்து மும்முறை நமோஸ்து செய்தல் வேண்டும்.
6. மனசுத்தி : (மனத்தூய்மையுடன்) மனசுத்தி சொல்ல வேண்டும். மனம் ஜைன தர்மத்தின் நியமத்தோடு ஒத்துப்போதல், ஒன்றுதல் அதாவது ஏழு வியசனங்களை விடுதல், இரவுண்ணாமை, வடிக்காத நீரைப் பயன்கொள்ளாமை, மற்றும் உண்மையான தேவ, நூல், குருவிடம் திடமான உறுதி கொள்ளுதல்.

7. வசன சுத்தி : இனிய உண்மையான வசனங்களோடு வசன சுத்தி கூறுதல்.
8. காய சுத்தி : (உடல் மற்றும் ஆடைகளின் தூய்மையுடன்) காய சுத்தி கூறுதல்.
9. ஆகார சுத்தி : தூய ஆகாரத்தோடு ஆகார சுத்தி கூறுதல்.

படிகஹாமுச்சாட்டணம், பாதோதயமச்சணம் ச பணமஞ் ச ।
மனவயன காயசுத்தி, ஏசன ய ணவவிஹம் புண்ணம் ॥ ர.க. உரை

இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

3. தானத்தின் இலக்ஷணம் யாது?

"அனுக்ரஹார்த்தம் ஸ்வஸ்யாதி ஸர்கோ தானம்" (த.சூ)

தனக்கும் மற்றும் மற்றவர்களின் உதவிக்காக செல்வம் முதலிய பொருள்களைத் தியாகம் செய்வது தானம் என்று சொல்லப்படுகிறது.

4. தானத்தின் வகைகளையும் அவற்றின் பொருளையும் சுருக்கமாக விளக்குக.

தானம் நான்கு வகைப்படும்.

1. **ஆஹார தானம் :** தூய்மை (பிராசுக்) செய்த நான்கு வகை (உண்ணல், தின்னல், பருகுதல், நக்குதல்) உணவை தானம் அளித்தல்.
2. **ஔஷத தானம் :** நோயைக் குணப்படுத்தக்கூடிய தூய்மை (ப்ராசுக்) செய்த மருந்தை தானம் அளித்தல்.
3. **உபகரண தானம் :** உபயோகத்திற்காக பீலி, கமண்டலம், நூல் ஆகிய குற்றம் அற்ற தர்ம உபகரணங்களை தானம் அளித்தல்.
4. **ஆவாச தானம் :** வீதராகத்தன்மை மற்றும் தியான விருத்தி செய்பவருக்கு உசிதமான, தூய்மையான இடத்தை சமர்ப்பணம் செய்தல்.

ஆஹாரௌஷதயோரப்யுகரணாவாஸயோச் ச தானேன ।
வையாவிருத்யம் ப்ருவதே சதுராத்மத்வேன ஸதுரஸ்ரா ॥ (ர.க. 117)

பொருள்:– **சதுரஸ்ரா**–நான்கு ஞானங்களுடைய கணதர தேவரால், **ஆஹாரௌஷதயோ:**–ஆகாரம், மருந்து, **ச**–மற்றும், **உபகரணாவாஸயோ: அபி**–உபகரணம் மேலும் இடம் தருதல் கூட, **தானேன**–தானத்தினால், **வையாவிருத்யம்**–வையாவிருத்யத்தினை, **சதுராத்மத்வேன**–நான்கு விதமாக, **புவதே**– கூறப்பட்டிருக்கின்றன.

5. தானம் அளிப்பவர் என்று யாரைக் கூறுவர்?

ஏழு குணங்களோடு கூடி ஒன்பது பக்தி செய்பவரை தானம் அளிப்பவர் என்று கூறுவர்.

6. தானம் தருவோர் ஏழு குணங்கள் யாவை? அக்குணங்களின் பெயரையும் பொருளையும் சுருக்கமாகக் கூறுக.

1. **சிரத்தை** : தானம் ஏற்கும் பாத்திரத்திடம் அக்கரை வைத்தல்.
2. **சந்தோஷம்** : பாத்திரத்தினுடைய லாபம், லாபமின்மை ஆகியவற்றால் மகிழ்ச்சி கொள்ளுதல். (ஆஹாரம் கொடுக்கும் போது அந்தராயம் ஏற்பட்டால் அதிகம் வருத்தமும், கஷ்டமும் கொள்ளாமல் இது கர்மத்தின் பலன் என்ற சிந்தனை கொள்ளுதல்)
3. **பக்தி :** பாத்திரத்திடம் முழு பக்தி செலுத்துதல்.
4. **விஞான் :** ஆகாரம் முதலிய தானம் நடைபெறும் போது தூயது, தூய்மை இல்லாதது. நன்மை, நன்மையற்றது. சுத்தம் உடையது. சுத்தம் இல்லாதது ஆகிய விவேகத்தைப் பெற்றிருப்பது.
5. **அலுப்ததா :** தானம் அளிக்கும் போது லோபம் (பொருளை மீதப்படுத்தும் எண்ணம்) கொள்ளாதிருத்தல்.

6. **க்ஷமா (பொறுமை):** அந்தராயம், எச்சரிக்கையின்மை முதலான ஏற்பட்ட போது பாத்திரம் அல்லது மற்ற தானம் அளிப்பவர்களை மன்னித்தல், சினம் கொள்ளாதிருத்தல்.

7. **சத்தியம் :** தானம் அளிக்கும்போது சத்தியத்தோடு உண்மைத் தன்மையுடன் காரியங்களைச் செய்தல்.

சிரத்தா துஷ்டிர்பக்திர்விஞான்மலுத்ததா க்ஷமா சத்யம் ।
யஸ்யை தே ஸப்தகுணாஸ்தம் தாதாரம் ப்ரசம்ஸந்தி ॥ ர.க.சி. உரை

இவ்வாறு சொல்லப்பட்டிருக்கிறது.

7. சத் பாத்திரத்திற்கு தானம் கொடுக்கும் தாதாவிற்கு ஒன்பது பக்தி, ஏழு குணங்கள் இவற்றோடு கூட மேலும் என்ன சிறப்புப் தூய்மைகள் (சுத்திகள்) இருத்தல் அவசியம்?

1. குல சுத்தி : தாதாவின் குலம் களங்கமற்ற, தூய, பவித்ர குலமாக இருத்தல் வேண்டும்.

2. ஆசார சுத்தி :

i) ஏழு வியசனங்களிலிருந்து விலகி இருத்தல், சூதாடுதல், களவு செய்தல், வேட்டையாடுதல், மாமிச உணவு கொள்ளல், மது அருந்தல், பிறன்மனை நயத்தல், மற்றும் வேசியர் தொடர்பு இவைகளைத் துறத்தல்.

ii) நிர்மால்யப் பொருள்களைப் பயன்கொள்ளாமை: பூஜை மற்றும் ஜிநாலயம் ஆகிய அற நிலையங்களுக்கு அர்ப்பணிக்கப் பட்ட பொருள்களை (தனக்கு) பயன் கொள்ளுதலைத் துறத்தல்.

iii) போதைப் பொருள்களைத் துறத்தல் : வெற்றிலைப் பாக்கு, கஞ்சா, அபின், பீடி, சிகரெட் போன்ற பொருள்களை உபயோகிக்காமை.

3 சரீரசுத்தி (உடல்தூய்மை): உடல் முழுவதுமாக நீராடல் மற்றும் தூய ஆடை (மடித்துணி) யுடன் இருத்தல். சீழ், ரத்தம் வெளிப்படும் நோய், மற்றும் விசேஷத் தோல் வியாதி ஏதும் இல்லாத உடலுடன் இருத்தல் உடல் தூய்மை எனப்படும். ஏனென்றால் ஆஹார தான விதிமுறையும், தூய்மையும் இல்லாத காரணத்தால் இம்சை மற்றும் வியாதிக்குக் காரணமாகிறது.

8. தானம் யாருக்குக் கொடுக்கப்படுகிறது?

தானம் பாத்திரத்திற்கு கொடுக்கப்படுகிறது.

9. பாத்திரத்தின் இலட்சணம் என்ன?

நற்காட்சி முதலிய குணங்களைப் பெற்றிருப்பவரை பாத்திரம் (தானமேற்பவர்) என்று கூறுவர்.

10. பாத்திரத்தில் எத்தனை வகைகள் உள்ளன? பெயர்களைக் கூறி சுருங்க உரைக்கவும்.

பாத்திரத்தில் தானமேற்பவர்களில் மூன்று வகையினர் உள்ளனர். 1. உத்தம பாத்திரம், 2. மத்திம பாத்திரம் மற்றும் 3. ஜகன்ய பாத்திரம்.

1. **உத்தம பாத்திரம் :** அகிம்சை முதலிய மகாவிரதம் ஏற்ற திகம்பர முனிவர் உத்தம (உயர்ந்த) பாத்திரம் என்றழைக்கப்படுகிறார்.
2. **மத்திம பாத்திரம் :** ஆர்யகா, ஐலக், சுல்லக் மற்றும் சுல்லிகா மற்றும் பிரதிமாதாரி (விரதி) ஸ்ராவகர் மத்திம (இடைநிலை) பாத்திரம் என்றழைக்கப்படுவர்.
3. **ஜகன்ய பாத்திரம் :** சம்யக் தர்சனத்தினுடைய 25 குற்றங்கள் இல்லாமல் உண்மையான வீதராக தேவ சாஸ்திர குருவினுடைய பக்தர். ஜகன்ய (கடைநிலை) பாத்திரம் என்றழைக்கப்படுகிறார்.

11. குபாத்திரம் என்று யாரைக் கூறுகிறார்?

உண்மையான வீதராக தேவ சாஸ்திர குருவைத் தவிர, மற்ற சராகி தேவர்களின் பக்தர், மித்யாதிருஷ்டி, குலிங்கி ஜீவன் விரதத்தோடு இருந்தாலும் கூட குபாத்திரம் என்றழைக்கப்படுகிறார்.

12. அபாத்திரம் என்று யாரைக் கூறுவர்?

அவிரதி மித்யாதிருஷ்டியை அபாத்திரம் என்று கூறுவர்.

13. பாத்திர தானத்தினுடைய பயன் என்ன?

சத் பாத்திரத்திற்குத் தானம் கொடுக்கும் சம்யக்திருஷ்டி ஜீவன் சொர்க்கத்திற்கு அல்லது முனியாகி மோக்ஷத்தை அடைகிறார்கள். மற்றும் தானம் அளிக்கும் மித்யாதிருஷ்டி ஜீவன் போக பூமியை அடைகிறான்.

14. குபாத்திர தானத்தின் பயன் என்ன?

குபாத்திர தானத்தின் பயன் குபோக பூமி கிடைக்கிறது.

15. அபாத்திர தானத்தின் பயன் என்ன?

அபாத்திர தானத்தினால் துர்கதி கிடைக்கும்.

16. பாத்திரத்திற்கு தானம் அளிக்கும் போது மனிதன் எத்தகைய எண்ணங்கள் கொண்டிருக்க வேண்டும்?

1. பாத்திரத்திற்கு தவத்தில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும்.
2. பாத்திரத்திற்கு ஆரோக்கியம் கிடைக்க வேண்டும்.
3. தனக்கு சம்யக்தர்சனம் முதலிய குணங்கள் கிடைக்க வேண்டும்.

இத்தகைய பாவனை கொண்டிருக்க வேண்டும்.

17. பாத்திரத்திற்குத் தானம் அளிக்கும்போது என்ன பாவனை கொள்ளக் கூடாது?

1. பயன் கருதா உபகாரத்தையும் (தானத்திற்குப் பதிலாக சில பொருள்கள்) பாவனையையும் கொள்ள வேண்டும்.
2. எவ்விதமான செல்வம், வைபவம், மந்திரம், தந்திரம், மனைவி, மக்கள் போன்றவை (எந்த எதிர்பார்ப்பும் கொள்ளக் கூடாது.) பெறும் பாவனை கொள்ளக் கூடாது.
3. பெயர், புகழ் அழகு போன்றவை பெற வேண்டும் என்னும் பாவனை கொள்ளக் கூடாது. (ஏனென்றால் சத்பாத்திர தானத்தால் புண்ணியம் ஏற்படுகிறது. புண்ணிய பயனால் எல்லாப் பொருள்களும் தானே எளிதில் கிடைக்கும்.)

18. ஆகார தானத்தின் போது தூய ஆடை அணிவதன் அவசியம் யாது?

அசுத்த ஆடைகளில் அனேக ஜீவ அணுக்களின் உற்பத்தி உண்டாகிறது. அவ்வணுக்கள் ஆகாரம் முதலியவற்றைத் தூய்மை கெடச் செய்கின்றன. மருத்துவர்கள் ஆபரேஷன் சிகிச்சை அறைக்குச் செல்லும் போது தூய ஆடையை அணிந்து போவது அவசியமாகிறது. அதுபோல தர்ம க்ஷேத்திரங்களில் தூய ஆடையை அணிவதும் அவசியம் ஆகிறது.

19. நவதாபக்தி செய்வதின் பயன் என்ன?

ஆசாரிய பரமேஷ்டி ரத்னகரண்டக ஸ்ராவகாசாரத்தில் கூறுகிறார்.

உச்சைர்கோத்ரம் பிரணதேர்போகோ தானாதுபாஸனாத் பூஜா ।
பக்தே : ஸுந்தரரூபம் ஸ்தவனாத்கீர்த்திஸ்தபோநிதிஷு ॥ 115 ॥

பொருள் : **தபோநிதிஷு**–தவநிதிவடிவ முனிவர்களை, **ப்ரணதே:**– வணங்குவதால், **உச்சகோத்ரம்**–உயர்ந்த கோத்திரம், **தானாத்**–ஆகாரம் போன்ற தானங்கள் அளிப்பதால், **போக:**– போகங்கள், **உபாஸனாத்**–எதிர் கொள்ளுதல் ஆகியவற்றைச் செய்வதினால், **பூஜை**–உலகில் மதிப்பு, **பக்தே:**– பக்திசெய்வதினால், **ஸுந்தாரூபம்**–அழகியவடிவம் மற்றும், **ஸ்தவனாத்**–ஸ்துதிசெய்வதால், **கீர்த்தி:**–நல்ல புகழ், **பிராப்யதே**–கிடைக்கிறது

விளக்கம்:– தவநிதி வடிவ முனிகளை வணங்குவதால்

1. உலகத்தில் உயர்ந்த கோத்திரம் கிடைக்கிறது.
2. முனிவர்களுக்கு ஆகாரம் போன்ற தானம் அளிப்பதால் உத்தம போகங்கள் கிடைக்கின்றன.
3. முனிகளுக்கு எதிர்கொள்ளுதல் ஆகியவற்றைச் செய்வதால் உலகில் மதிப்பு கிடைக்கிறது.
4. முனிவர்களுக்கு பக்தி செய்வதால் அழகிய வடிவம் கிடைக்கிறது.
5. முனிவர்களுக்கு ஸ்துதி செய்வதால் உலகில் நல்ல புகழ் கீர்த்தி கிடைக்கிறது.

20. சிறிய தானம் மிகச் சிறந்த பயனை எவ்வாறு கொடுக்கிறது?

கூஷிதிகதமிவ வடபீஜம், பாத்ரகதம் தானமல்பமபி காலே ।
பல்திச்சாயாவிபவம், பஹுபல்மிஷ்டம் சரீரப்ருதாம் ॥ 116 **॥**

பொருள் : **காலே**–தக்க சமயத்தில், **பாத்ரகதம்**–தகுதியான அறவோர்களுக்கு அளிக்கப்பட்ட, **அல்பமபி**–சிறிய, **தானம்**– தானம்கூட, **சஷிதிகதம்**– தகுதியுடைய பூமியில் விதைக்கப்பட்ட **வடபீஜமிவ**–ஒருசிறிய ஆலம் விதைக்கு சமமாக, **சதீரப்ருதாத்**–உயிர்களுக்காக, **சாயா விபவம்**– மிகம் பெரிய மற்றும் வைபவத்தினால், பிற்காலத்தில் நல்ல நிழலோடு கூடிய, **பஹு**–மிகப் பெரிய மரமாக, **இஷ்டம்**–விரும்பிய, **பலம்**–நல்ல பலனை, **பலித**–அளிக்கிறது.

விளக்கம்:– தகுதியுடைய பூமியில் தக்க பருவத்தில் விதைக்கப்பட்ட ஒரு சிறிய ஆலம் விதை பிற்காலத்தில் நல்ல நிழலோடு கூடிய மிகப் பெரிய மரமாகப் பயனை அளிப்பதுபோல. சத்பாத்திரத்திற்குத் தக்க சமயத்தில் அளிக்கப்பட்ட சிறிய தானம் கூட மிகப் பெரிய பயனை அளிக்கிறது.

21. யுக ஆரம்பத்தில் ஜாதிஸ்மரணத்தால் நவதா பக்தியை அறிந்து முதல் தீர்த்தங்கரர் ஆதிநாத முனிவருக்கு முதன் முதலில் ஆகாரதானம் அளித்தவர் யார்?

இராஜா ஸ்ரேயாம்சர் அளித்தார்.

22. காட்டில் தன் பரிவாரத்தோடு சாரண ருத்தி பெற்ற குப்தி மற்றும் சுகுப்தி எனும் பெயருடைய இரண்டு முனிவர்களுக்கு பக்தி பூர்வமாக ஆகாரதானம் அளித்து நவதா பக்தியின் மகாத்மியத்தால் பஞ்சாச்சர்யத்தை அடைந்த அந்த மகாபுருஷன் யார்?

அப்படிப்பட்ட மகாபுருஷர் ஸ்ரீ ராமசந்திரர் ஆவர்.

23. காட்டில் இரு முனிவர்களுக்கு நடந்த ஆகாரதானத்தைக் கண்டு, அதை உடன்பட்டு அம்முனிவர்களின் கந்தோகத்தில் படுத்து புரண்டது. அதனால் அதன் இறக்கைகள் பொன் வண்ணமாயின. மற்றும் கடைசியில் சுவர்க்கத்தை அடைந்தது. அந்த பறவை எது?

அந்தப் பறவை ஜடாயு பக்ஷி (கழுகு)

****

அதிகாரம் 15

சமாதி மரணத்தின் பெருமை(சல்லேகனா விதி)

பகவான் மகாவீரருடைய பாதை மரணத்தின் கலையினை கற்றுக் கொடுக்கிறது. இந்த உத்தம மரணக் கலையினை ஒரு முறை ஏற்று மரணமடைந்தால் அதாவது சல்லேகனை சமாதி மரணத்தை அறிந்து மற்றும் விதிவகைப்படி சமாதி மரணத்தை ஏற்றால் ''உக்கட்டேண தோ திண்ணி பவ கஹணாணி, ஜஹண்ணேண ஸத்தட்ட பவ கஹணாணி'' அதாவது உயர்ந்த பட்சம் இரண்டு–மூன்று பவங்களிலும் அல்லது மிகக் குறைவாக ஏழு, எட்டு பவங்களில் மோட்சம் கிடைத்து விடுகிறது. இந்த காரணத்தால் மரணத்தின் பிரிவுகள் மற்றும் அவற்றின் உபபிரிவுகள் முதலியவற்றினை இந்த சமாதி மரணத்தின் பெருமையினை இந்த அதிகாரத்தில் கூறப்படுகிறது.

1. **சமாதி மரணம் என்று எதைக் கூறுவர்?**
   சல்லேகனாவுடன் ஏற்படும் மரணத்தை சமாதி மரணம் என்று சொல்வர்.
2. **சல்லேகனா என்று எதைக் கூறுவர்?**
   கஷாயம் (துவர்ப்பபசை) மற்றும் உடலைச் சுருக்குவதற்கு சல்லேகனா என்று பெயர்.
3. **சல்லேகனா எப்பொழுது ஏற்கப்படுகிறது?**
   சல்லேகனா நீக்கமுடியாத உபசர்ச்சம், துன்பநேரம், மூப்பு மற்றும் தீராதநோய் உண்டான போது ஏற்கப்படுகிறது.
   இடையூறு ஒழிவில்நோய் மூப்பிவை வந்தால் கடைதுறத்தல் சல்லே களை. (அ.செ. 145)
4. **சல்லேகனா ஏன் ஏற்க வேண்டும்?**
   இரத்னத்திரைய தர்மத்தைக் காக்கவும், ஆன்ம முன்னேற்றத்திற்கும் சல்லேகனா ஏற்கப்படுகிறது. உதாரணமாக வீடு போன்ற இருப்பிடங்கள் தீ பற்றிக் கொண்டபோது முதலில் தீயை அணைக்க முயற்சி செய்கிறார்கள். ஆனால் அணைப்பது இயலாத காரியம் என்ற நிலையில் அவ்வீட்டிலுள்ள மதிப்புமிக்க இரத்தனம், செல்வம் போன்றவற்றை வெளிக் கொண்டுவந்து வீட்டைக் காப்பாற்ற முடியாமல் விட்டு விடுவது போன்றது. அதுபோல விலக்கமுடியாத துன்பம், வியாதி, இவை போன்றவை உண்டான போது அவற்றிலிருந்து மீள முடியாது என்னும் நிலையில் இரத்னத்திரைய தர்மத்தை பாதுகாத்து அதாவது அதில் சம்யக் தர்சன, ஞான, சாசரித்திரத்தில் எந்த குறையும் இல்லாமல் இருக்க சல்லேகனா ஏற்று தூய்மையுடன் உடல் தியாகம் செய்யப்படுகிறது. இந்த விஷயம் ஸ்லோகத்தின் வாயிலாக ரத்னகரண்ட ஸ்ராவகாசாரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

உபஸர்க்கே துர்பிக்ஷே ஜரசி ருஜாயோ ச நி:ப்ரதிகாரே ।
தர்மாய தனு விமோசனமாஹு: ஸல்லேகனா மார்யா: ॥ 122 ॥

பொருள்: **ஆர்யா**–கணதரதேவர்கள் முதலானோர், **நி:பரதிகாரே**–வழி இல்லாமல், **உபஸர்கே**–உபசர்க்கம், **துர்பிக்ஷே**–கெட்டநேரம், **ஜரஸா**–மூப்பு, **ச**–மற்றும், **ருஜாயாம்**–நோய்வாய்பட்டபோது, **தர்மாய**–தருமத்திற்காக, **தனுவிமோசனம்**–உடலை விடுவதற்கு, **ஸல்லேகனாம்**–சல்லேகனை **ஆஹு:**–எனப்படுகிறது.

5. சல்லேகனாவை ஏற்றல் எதனுடைய பயன்?

சல்லேகனா ஏற்றல் வாழ்நாள் முழுவதும் செய்த தபம் தியாகம் மற்றும் தர்மத் தியானத்தின் பயனாகும். கல்வி பயிற்சியில் பயன் தேர்வு மூலமாக அறிவது போன்றது சல்லேகனா.

அந்த: கிரியாதி கரணம், தப:பலம் ஸகலதர்ஷின்: ஸ்துவதே ।
தஸ்மாத்யா வத்விபவம் ஸமாதிமரணே ப்ரயதிதவ்யம் ॥ 123 ॥

பொருள்: **யஸ்மாத்**–ஏனெனில், **ஸகலதர்ஸன:**– வாலறிவர் **அந்த க்ரியாதிகரணம்**–இறுதி நேரத்தில் சமாதி மரண சொரூப சல்லேகனையானது, **தப:பலம்**–தவத்தின் பயன் என, **ஸ்துவதே**–கூறப்படுகிறது, **த்ஸ்மாத்**–ஆகையால், **யாவத்விபவம்**–ஆற்றலுக்கு ஏற்ப, **ஸமாதிமரணே**–சமாதி மரணத்தில் விஷயத்தில், **ப்ரயதிதவ்யம்**–முயற்சி செய்ய வேண்டும்.

மந்திரங்கள் ஐந்து மனத்துவரச் சென்றார்கள் இந்திரற்கும் இந்திரரே எண். (அ.செ. 151)

6. சல்லேகனா சமாதி மரணம் தற்கொலையாகுமல்லவா?

இல்லை. தற்கொலை என்று எதைச் சொல்கிறோம். சோம்பல் காரணமாகவும், எச்சரிக்கை இன்மை, அடக்கமின்மை, விஷம் உட்கொள்ளல் இக்காரணங்களால் உயிர் போக்கிக் கொள்வது தற்கொலை. ஆனால் விருப்பு, வெறுப்பின்றி தர்மத்தைக் காக்கும் ஆசையுடனும் , உற்சாகத்துடனும் உயிர்தியாகம் செய்யப்படுவது சல்லேகனா எனக் கருதப்படுகிறது. இதனை சமாதி மரணம் அல்லது வீரமரணம் என்கிறோம்.

7. சல்லேகனா ஏற்பதற்கான விதிமுறையாது? சுருங்கக் கூறுக?

சல்லேகனா ஏற்கும் பவ்ய ஆத்மா தன் சுற்றத்தை மன்னித்து அவர்கள் எல்லோரிடமும் மன்னிப்பு கேட்டு, உண்மையான வீதிராக குருவின் பாதங்களை அடைக்கலமாக ஏற்க வேண்டும். மன, வசன, காய , மற்றும் க்ருத, காரித, அனுமோதன் மூலம் வாழ்நாள் முழுவதும் செய்த பாவங்களுக்கு குற்றமிலா தூய சிந்தையுடன் கலக்கமின்றி ஆலோசித்து ஆய்தல் வேண்டும். மற்றும் வாழ்நாள் முழுவதற்குமான, அகிம்சை முதலிய மகாவிரதங்களோடு சல்லேகனாவை ஏற்க வேண்டும். குருவின் ஆலோசனைப்படி சல்லேகனா, விதியைத் தொடங்கி தைரியம் மற்றும் உற்சாகத்தோடு முறையாக கவளாகாரம் விட்டு பால் முதலிய திரவ ஆகாரத்தைப் பருக வேண்டும். பிறகு வெந்நீர் குடிக்க வேண்டும். பிறகு அதையும் விட்டுவிட்டு சக்திக்கு ஏற்ப உபவாசம் இருந்து கொண்டு பஞ்ச நமஸ்கார மந்திரத்தில் மனதை ஈடுபடுத்தி உடலை விட்டுவிட வேண்டும்.

8. சல்லேகனாவில் உணவோடு மற்றும் என்னென்ன விட வேண்டும்

சல்லேகனாவில் உணவுடன் கூட

1. அகப்புற பற்றுகள் என்னுடையது என்று புத்தியை விட்டு விடவேண்டும்.
2. பிறரிடம் அன்பு, ஆசை, பகைமை இவற்றைத் துறக்க வேண்டும்.
3. துயரம், பசி, தாகம் ஆகியவற்றின் பயத்தை விலக்க வேண்டும்.
4. அதிக காலம் வாழ, விரைவில் மரணம் எய்த தோன்றும் விருப்பத்தை விட வேண்டும்.
5. எதிர் பிறவிகளில் புலனிச்சை போன்ற நிதானத்தைத் தியாகம் செய்ய வேண்டும்.

9. சல்லேகனாவை முனி (மகாவிரதி) மட்டும்தான் ஏற்க முடியுமா? அல்லது சிராவகர்கள் கூட விதிமுறையுடன் ஏற்கமுடியுமா?

அணு விரதமேற்று உள்ளத்தில் முனி ஆவதற்கான உறுதியில்லாத சிராவகர்கள் கூட விதிப்பூர்வமாக சல்லேகனா ஏற்க முடியும்.

10. மரணம் எத்தனை வகைகளில் ஏற்படுகிறது? அவற்றின் பெயர் மற்றும் பொருளையும் கூறுக?

மரணம் ச்யுத், ச்யாவித, மற்றும் த்யக்த என மூவகை

ச்யுத் மரணம் : ஆயுள் கர்மம் முடிவடைந்த பிறகு உடல் விடுபடும் மரணம்.

ச்யாவித மரணம் : ஆயுள் கர்மம் முடிவடைவதற்கு முன்பே நஞ்சு துன்பம், இரத்தக் குறைவு, பயம் ஆயுதங்களால் சலனம், உணவு, தடை, மூச்சத் தடை போன்ற காரணங்களால் உரிய காலத்திற்கு முன்பே உயிரைப்போக்குதல்.

த்யக்த மரணம் வேறு வழியோ மாற்றமோ செய்ய முடியாத தீவினை அல்லது நோய் முதலியின உண்டான சமயம் தன் மும்மணி தர்மத்தின் பாதுகாப்பிற்காக சல்லேகனா மூலம் உடலைத் தியாகம் செய்வது.

11. த்யக்த மரணம் எத்தனை வகைப்படும்? பொருளுடன் கூறுக.

பக்த ப்ரத்யாக்யான், இங்கினி, மற்றும் ப்ராயோபகமன சன்யாஸ் இவ்வாறு மூன்று வகைப்படும்.

1. **பக்த ப்ரத்யாக்யான் :** இதில் உணவு முதலியவற்றின் நியமம் யம வடிவில் (வாழ் நாள் முழுவதும்) தியாகம் செய்யப்படுகிறது. தன் உடலின் வையாவிருத்தம் தானே செய்து கொள்ளல், மற்றவர் மூலமும் செய்து கொள்ளல். இத்தகைய மரணம் பக்த ப்ரத்யாக்யான் எனப்படும்.
2. **இங்கினி மரணம் :** ஆகாரம் முதலியவற்றின் தியாகத்தோடு இதில் தன்னுடைய உடலின் வையாவிருந்தி தானே செய்யலாம். ஆனால் பிறரால் செய்வதை ஏற்பது இல்லை. இதை இங்கினி சல்லேகனாமரணம் என்பர்.
3. **ப்ராயோபகமன சன்யாஸ் :** இதில் உணவு முதலியவற்றின் முழுத்தியாகத்தோடு உடலின் வையாவிருத்தம் தானும் செய்து கொள்வதில்லை. பிறர் மூலமும் ஏற்பது இல்லை. எந்த ஆசனத்தின் அல்லது முத்திரையில் இருந்து கொண்டு சல்லேகனா ஏற்கிறதோ அதே ஆசனத்தில் அல்லது முத்திரையில் இருந்து கொண்டே உடலைத் தியாகம் செய்ய வேண்டும். இத்தகைய முறையில் மரணம் ஏற்பதை ப்ராயோப கமன சன்யாஸ் என்பர்.

12. மரணத்தின் மற்றொரு வகை வேறுபாடு யாது?

மரணத்தின் மற்றொரு வகையான பேதம்

1. பால பால மரணம், 2. பால மரணம், 3. பால பண்டித மரணம், 4. பண்டித மரணம். 5. பண்டித பண்டித மரணம்.

13. இந்த பால மரணம் முதலிய ஐவகையான மரணம் எந்த ஜீவன்களுக்கு ஏற்படுகிறது?

1. மித்யா திருஷ்டி ஜீவனுக்கு பால பால மரணம் ஏற்படுகிறது.
2. சம்யக்திருஷ்டி ஜீவனுக்கு பல மரணம் ஏற்படுகிறது.
3. அணுவிரதம் முதலியவற்றை ஏற்ற சிராவகர்களுக்கு பால பண்டித மரணம் ஏற்படுகிறது.
4. மகா விரதங்களை ஏற்ற திகம்பர முனிகளுக்கு பண்டித மரணம் ஏற்படுகிறது.
5. கேவலி பகவானுக்கு உடல் மற்றும் கர்மத்திலிருந்து விடுதலை வடிவ மரணம் ஏற்படுகிறது.

இதை பண்டித பண்டித மரணம் என்று கூறுவர்.

14. மரண வகைகள் கூறுமிடத்து பால மற்றும் பண்டித என்னும் சொல் ஆளப்படுகிறது. அவற்றின் பொருள் என்ன?

மரணம் பற்றிய வகைகளில் 'பால'என்னும் சொல்லின் பொருள் அவிரதி அல்லது அஞ்ஞானித் தன்மையையும், பண்டித என்னும் சொல்லின் பொருள் விரதி அல்லது ஞானிதன்மையும் குறிக்கின்றன. அணு விரதியினுடைய மரணத்தோடு பால என்னும் சொல்லின் பொருள் ஏகேந்திரிய ஜீவனில் இம்சை தியாகம் செய்யப்படவில்லை அவிரத் தன்மை காணப்படுகிறது.

15. வாழ்வின் இறுதியில் சல்லேகனா ஏற்காததியாகியின் வாழ்க்கை எத்தகையது?

சிறந்த பயிற்சி செய்யக்கூடிய மாணவன் பயிற்சியின் இறுதியில் தேர்வு எழுதவில்லையானால்

அல்லது தேர்ச்சி பெறவில்லையானால் அவனுடைய முழுகல்விப் பயிற்சி பயனற்றுப் போகிறது. அதுபோல், வாழ்நாள் முழுவதும் ஆயுதப் பயிற்சி செய்யும் மனிதன் போர்க்களத்தில் ஆயுதத்தை செலுத்தத் தவறினால் அவனது ஆயுதப் பயிற்சியாவும் பயனற்றதாகிறது. அதுபோல வாழ்நாள் முழுவதும் தியாகம், தவம் செய்யும் தர்மி வாழ்வின் இறுதியில் சல்லேகனா ஏற்கவில்லையானால் அவருடைய தியாகம் தவம் செய்த வாழ்கை பயனற்றுப் போகிறது.

16. ‘சல்லேகனா ஏற்பதற்கு உற்சாகத்தைப் பெருக்கக் கூடிய ஏதுவான சில உத்தமமான சாஸ்திரங்களின் உபதேசத்தைக் கூறுங்கள்.

ஜைனாசாரியர்கள் எழுதிய மூலாசார கிரந்தத்தில் (நூலில்) சொல்லப்பட்டிருக்கிறது.

தீரேன வி மரிதவ்வம், ணித்திரேண வி அவஸ்ய மரிதவ்வம் I
ஜதி தோண்ஹி வி மரிதவ்வம், வரம் ஹி தீரத்தேன மரிதவ்வம் II

பொருள்: தைரியசாலிக்கு மரணம் ஏற்படுகிறது. தைரிய மற்றவர்களும் கூட மரணம் எய்துகின்றனர். இரு வகையினருமே மரணம் அடைவதால் தைரியமாக சல்லேகனா எற்று வீரமரணம் அடைவது சிறந்ததாகும்.

17. சல்லேகனாவினுடைய வேறு பெயர்கள் யாவை?

சல்லேகனாவின் வேறு பெயர்கள் சமாதி மரணம். அந்தக்கிரியா, சன்யாச் மரணம், ஆராதனா மற்றும் பண்டித மரணம் இவை போன்றவை.

18. மகா புருஷர் ராமச்சந்திரர் ணமோங்கார மந்திரத்தைச் சொல்லிச் சொல்லி சல்லேகனாவை செய்து வைத்தார். அச் சல்லேகனாவின் மகத்துவத்தால் சொர்க்கப் பதவி அடைந்த பக்ஷி (பறவை) எது?

சொர்க்கப் பதவியை அடைந்த அந்தப்பறவை ஜடாயு என்னும் பெயருடைய கருடப் பறவையாகும்.

19. சாம்ராட் சந்திர குப்தர் யாருடைய சரணங்களில் தீக்ஷையேற்று பிறகு, சரவண பெல்கோலா சந்திரகிரி மலையில் உள்ள குகையில் சல்லேகனா ஏற்றார்?

ஆசாரியர்ஸ்ரீ கடைசி சுருதகேவலி பத்ரபாஹு சுவாமியிடம் சாம்ராட் சந்திர குப்தர் தீக்ஷை ஏற்று, சல்லேகனா அடைந்தார்.

20. பிரயோப கமன சன்யாச சல்லேகனா நிலையில் இருந்தவர் யார்? மூன்று நாள்கள் வரை நரி தன்னை சாப்பிட்ட பிறகும் கூட தன் தியானத்திலிருந்து சலன மடையவில்லை. சமாதி மரணத்தின் மகத்துவத்தால் சர்வார்த்த சித்தியில் அகமிந்திர சுகத்தை அடைந்தார். பிறகு ஒரு மனிதப் பிறவி அடைந்து (அநேக விரதி ஆத்மாக்கள் சல்லேகனா மரணத்தின் மூலமாக முக்தி அடைந்தது போல) இவரும் முக்தி சுகத்தை அடைவார். அவர் யார்?

அந்த முனி சுகுமால் ஸ்வாமி ஆவார்.

****

அதிகாரம்–16

பருவ விரதங்களின் பெருமை

உலகத்தில் மகாவிரதி ஆவதற்கு முன்னால் பல வகையான விரதங்கள் அனுஷ்டிக்கப்படுகின்றன. அணுவிரதிகள் விரதங்களை கடைபிடிக்கும் சமயங்களில், மகா விரதிகளின் சாதனைகள் பற்றிய ஓர் நேர் அனுபவம் ஏற்படுகிறது. முனியாகாமல் முக்தி கிட்டுவதில்லை. முனி ஆவதற்கு ஒருவேளை உண்ணுதல் (ஏகாசனம்), புலனின்பங்களை (இந்திரிய விஷயங்களை) அடக்குதல் முதலான செயல்களின் உண்மையான அனுபவங்களை விரதகாலங்களில் அணுவிரதியும் செய்து அனுபவம் பெறுகிறான். இந்த அனுபவத்தினால் பின்னால் முனிநிலையில் தவம் இயற்றும்போது இது வேண்டும், அது வேண்டாம் போன்ற எண்ணங்கள் ஏற்படாமல் போகிறது. பொருமையை கடைபிடிப்பதோடு அந்தராயம் (இடைத் தடை), உபவாசம் முதலியவைகளை நடுநிலை உணர்வுடன் ஏற்கவும் அனுபவம் கிடைக்கிறது. இப்படி ஒருவர் தற்சமயம் முனிநிலையில் இல்லாவிட்டாலும், அவர் குடும்பம் மற்றும் தொழில் சம்பந்தமாக செய்யும் செயலினால் கட்டிக் கொள்ளும் பாபங்களைக் கழுவும் ஒரு வடிகாலாக இந்த விரதங்கள் பெரிய சாதனை புரிபவைகளாக உள்ளன. விரதங்களை முறைப்படி செய்யும் பவ்விய ஆத்மாக்கள் அந்த சமயங்களில் அசங்க்யாத மடங்கு தாம் சேர்ந்த பாபகர்மங்களை அழிப்பதும் தணிப்பதும் போன்ற அதிசய புண்ணியங்களை சம்பாதிக்கவும் செய்கின்றனர். இப்படிச் செய்வதால் பின்னால் கர்மங்கள் கேடும், தணிவும் அடையும் போது முனிநிலையை ஏற்கும் வாய்ப்பைப் பெற்று விடுகின்றனர். ஆகையால் இந்த அதிகாரத்தில் யம, நியம விரதங்கள் பற்றியும் விரத காலங்களில் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் பற்றியும் பருவ விரதங்களின் பெருமை பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

1. பருவம் என்று எதைக் கூறுவர்?

கரும்பின் மத்தியில், கரும்பு உற்பத்திக்குக் காரணமாகும் அனேக இடங்கள் (கணுக்கள் – முளை) உள்ளன. அவைகளைப் பருவம் என்றழைப்பர். அதே போல ஆண்டு மற்றும் மாதங்களுக்கு இடையிடையே வரக்கூடிய பெரிய தியாக, சய்யம, மகாபுருஷர்களோடு தொடர்புடையதும், அறத்தோடு தொடர்புடையதுமான நிகழ்ச்சிகளை நினைவு கூரும் வகையில் வரும் நாள்களைப் பருவம் என்றழைப்பர். அது அனேக சுகத்தையும் நன்மைகளையும் உண்டாக்கக்கூடியதும் மற்றும் பெருக்கக் கூடியதும் ஆகும்.

2. தேவகணங்கள் நந்தீஸ்வர தீபம் சென்று எட்டு நாள்கள் வரை 52 அக்ருத்திம ஜிநாலயங்களில் பூஜை செய்கின்றர் மற்றும் இங்கே சிராவகர்கள் ஆகாரம் முதலியவற்றில் சம்யமத்தை மேற்கொண்டு வீதராக பகவானுக்கு பூஜை சிறப்பான ஆராதனை செய்கின்ற மற்றும் பக்தியுடன் முனிகள் வீதராக பக்தியில் தன்மயமாகின்ற அந்த மகா பருவம் எது?

அந்த பருவம் ஆஷ்டானிக மகா பருவம்.

3. ஆஷ்டானிக பருவம் எப்பொழுது எத்தனை முறை கொண்டாடப்படுகிறது?

கார்த்திகை சுக்ல அஷ்டமியிலிருந்து பூர்ணிமா வரை;

பங்குனி சுக்ல அஷ்டமியிலிருந்து பூர்ணிமா வரை;
ஆடி சுக்ல அஷ்டமியிலிருந்து பூர்ணிமா வரை
இவ்வாறு இப்பருவம் இக்காலங்களில் ஆண்டில் மூன்று முறை கொண்டாடப்படுகிறது.

4. **பவ்விய ஆத்மாக்கள் மூலமாக ஒரு மாதம் வரை தர்சனவிசுத்தி முதலிய பாவனைகள் கொண்டு ஒரு புக்த்தி அல்லது ஒரு ஆகாரம் மற்றும் ஒரு உபவாசம் ஆகிய நியமங்களுடன் வீதராகப் பகவானை ஆராதித்து செய்யப்படும் பருவம் எது?**
அந்த பருவம் ஷோடசகாரண பருவம் ஆகும்.

5. **ஷோடசகாரண பருவம் எப்பொழுது எத்தனை முறை கொண்டாடப்படுகிறது?**
மாசி கிருஷ்ண பிரதமையிலிருந்து பங்குனி கிருஷ்ண பிரதமை வரை;
சித்திரை கிருஷ்ண பிரதமை முதல் வைகாசி கிருஷ்ண பிரதமை வரை;
புரட்டாசி கிருஷ்ண பிரதமை முதல் ஐப்பசி கிருஷ்ண பிரதமை வரை
இவ்விதமாக இச்சமயங்களில் ஆண்டில் மூன்று முறை கொண்டாடப்படுகிறது.

6. **உத்தம க்ஷமா முதலிய பத்து தர்மங்களின் குணங்களை பத்து நாள்கள் வரை இசைத்துக் கொண்டு மற்றும் பத்து உபவாசம் அல்லது ஒருமுறை சுத்த ஆகாரம் ஆகிய நியமங்களை ஏற்று அதனோடு பத்து தர்மங்களை அடைவதற்கான பாவனையை மேற்கொண்டு வீதராக ஜினேந்திர பகவானுக்கு மகாபூஜை செய்யும் அந்த பருவம் எது?**
அந்த பருவம் தசலக்ஷண பருவம் ஆகும்.

7. **தசலக்ஷண பருவம் எப்பொழுது எத்தனை முறை கொண்டாடப்படுகிறது?**
மாசி சுக்ல பஞ்சமி முதல் மாசி சுக்ல சதுர்தசி வரை;
சித்திரை சுக்ல பஞ்சமி முதல் சித்திரை சுக்ல சதுர்த்தசி வரை;
புரட்டாசி சுக்ல பஞ்சமி முதல் புரட்டாசி சுக்ல சதுர்த்தசி வரை
இவ்விதம் தசலக்ஷண மகாபருவம் இந்த மங்களகரமான சமயங்களில் ஆண்டில் மூன்றுமுறை கொண்டாடப்படுகிறது.

8. **பகவான் மகாவீரர் முக்தி பதவியை அடைந்த நாள், மற்றும் கௌதம கணதர பரமேஷ்டிக்கு கேவல ஞானம் (அனந்த சதுஷ்டயம்) பெற்ற நாள், இந்த நாள் எல்லா சிராவர்களும் மிகுந்த வைபத்தோடு பகவான் மகாவீரர் மற்றும் கணதர பரமேஷ்டிகளுக்கு பூஜை செய்யும் நாளான கார்த்திகை கிருஷ்ண பக்ஷ அமாவாசையன்று கொண்டாடப்படும் அந்த உத்தமப் பருவம் எது?**
அந்த உத்தமப் பருவம் தீபாவளியாகும்.

9. **சித்திரை சுக்ல பக்ஷ த்ரையோதசியில் கொண்டாடப்படும் மகத்துவ பூர்ண பருவம் எது? அந்த நாள் கடைசி தீர்த்தங்கரர் மகாவீரரின் கடைசி ஜென்மம் (பிறப்பு) உண்டான நாளாகும். இந்த சுப நேரத்தில் நாடு முழுவதும் பகவான் மகாவீரரின் அகிம்சா உபதேசத்தைப் பாடிக் கொண்டு ரத உற்சவம், விமான உற்சவம் செய்யப்படுகிறது. அத்தகைய மகத்துவம் உடைய பருவம் எது?**
சித்திரை சுக்ல த்ரையோதசியில் கொண்டாடப்படும் பருவம் மகாவீரர் ஜெயந்தியாகும்.

10. **முதல் தீர்த்தங்கரர் ஆதி நாத முனீஸ்வரருக்கு முதல் ஆகாரதானம் அளிப்பதற்கான சௌபாக்கியம் இராஜா ஸ்ரேயாம்சர் தன் வீட்டில் பெற்றார். அந்த சுபதினத்தை இன்றும் கூட மக்கள் ஆதிநாத பிரபுவிற்கு பூஜை மற்றும் விமான உற்சவம் ஆகியவற்றைச் செய்து திகம்பர முனிவர்களுக்கு சிறந்த வடிவில் ஆகார தானம் அளிக்கும் பாவனையை**

நிறைவேற்றுகிறார்கள். இச்சிறப்புகள் கொண்ட வைகாசி திருதியையில் கொண்டாடப்படும் மிக மகிழ்ச்சியான பருவம் எது?

அத்தகைய மிக மகிழ்ச்சிக்குரிய பர்வம் அக்ஷயத் திருதியை ஆகும்.

11. **பகவான் மகாவீரருக்கு கேவலஞானம் உண்டான பிறகு சமவசரண அமைப்பு ஏற்பட்டு 66 நாள்களுக்குப் பிறகு அந்த வீரப் பிரபுவின் திய்வத்தொனி எழுந்த அந்த ஜினவாணியினுடைய குணங்களின் புகழ் பாடக்கூடிய ஆவணி கிருஷ்ணபக்ஷ பிரதமையில் கொண்டாடப்படும் சிறந்த பருவநாள் எது?**

அந்த சிறப்புமிக்க பருவம் 'வீர சாஸன ஜெயந்தி'

12. **ஆவணி சுக்ல பௌர்ணமியில் கொண்டாடப்படும் தர்மரக்ஷ பருவநாள். இந்த நாள் விஷ்ணு குமாரமுனி ராஜாவால் அகம்பனாசாரியார் முதலான 700 முனிவர்களுக்கு ரக்ஷை ஏற்பட்டது. அந்த நாள் விஷ்ணு குமார முனிவரோடு 700 முனிவர்களுக்கும் பவ்வியர்கள் பூஜை செய்து தர்ம ரக்ஷை செய்வதற்கு சங்கல்யம் ஏற்றுக் கொள்கிறார்கள். அப்பருவம் யாது?**

அப்படிப்பட்ட தர்ம ரக்ஷை குறித்த பருவநாள் ''ரக்ஷா பந்தன்'' ஆகும்.

13. **மாதந்தோறும் இரண்டு இரண்டு முறை வரக்கூடிய பருவ நாள்கள் எவை? அப்பருவ நாள்களில் சிராவகர்கள், முனிசங்கம் முதலானோர் உபவாசம் அல்லது ஒரு வேளை உணவு, அவமோதர்யம், ரசபரித்தியாகம் ஆகியவற்றோடு சிறப்புப் பூஜை பக்தி ஆகிய அனுஷ்டானங்களைச் செய்கிறார்கள்.**

அத்தகைய பருவ நாள்கள் அஷ்டமி மற்றும் சதுர்த்தசியாகும்.

14. **விரதத்தின் பரிபாக்ஷை (பொருள்) என்ன?**

ஜைன சாசனங்களில் விரதத்தின் பரிபாக்ஷை கூறப்பட்டிருக்கிறது.

ஸங்கல்பபூர்வக : ஸேவ்யோ நியமோ Sசுப கர்மண : ।
நி விருத்திர்வா விரதம் த்வா ப்ருவ்ருத்தி : சுபகர்மணி ॥

பொருள் : சேவை செய்தவற்குத் தகுதியான விஷயங்களில் தன்னை சங்கல்ப பூர்வமாக நியமங்களை ஏற்றல் அல்லது இம்சை முதலிய அசுப கர்மத்தில் சங்கல்ப பூர்வமாக விரக்தி கொள்ளுதல் அல்லது பாத்திர தானம் முதலிய சுப காரியங்களில் சங்கல்ப பூர்வமாக ஈடுபடுதல் விரதம் எனப்படும்.

15. **விரதங்களை மேற்கொள்வதின் அவசியம் என்ன?**

வ்ரதேன யோ பினா ப்ராணி, பசுரேவ ந ஸம்சய : ।
யோக்யாயோக்யம் ந ஜானாதி, பேதஸ்தத்ர குதோ பவேத் ॥

பொருள் : விரதமற்ற பிராணி சந்தேகமில்லாமல் விலங்குக்குச் சமமானதே. யாருக்கு நல்லது தீயது என்னும் ஞானம் இல்லையோ அப்படிப்பட்ட மனிதருக்கும் விலங்குக்கும் என்ன வேறுபாடு இருக்கிறது?

பல்மேயஸ்ஸே மோத்தூண் தேவ – மணுஏஸு இந்திய ஸுக்கம் ।
பச்சா பாவஇ மோக்கம் துணிஜ்ஜபாகோ ஸுரிம் தேஹிம் ॥

பொருள் : விரதங்களை கடைபிடிப்பதன் பயனால் இந்த ஜீவன் தேவ மற்றும் மனிதர்களின் இந்திரியத்தால் உண்டாகும் சுகத்தை அனுபவித்த பிறகு தேவேந்திரால் துதிக்கப்பட்டு முக்தி சுகத்தை அடைகிறது.

16. கர்ம க்ஷயத்திற்குக் காரணமான நித்திய விரதம் மற்றும் நைமித்திக விரதத்தின் இலக்கணம் என்ன?

1. நித்ய விரதம் : பஞ்ச அணுவிரதம், மூன்று குண விரதம், நான்கு சிக்ஷா விரதம், முனிவர்களுக்கு மகாவிரதம் ஆகியவை நித்ய விரதம் ஆகும். நாள்தோறும் கடைபிடிக்கும் காரணத்தால் நித்யவிரதம் என்றழைக்கப்படுகிறது.

2. நைமித்திக விரதம் : நித்திய விரதத்தில் சொல்லப்பட்ட பஞ்ச அணுவிரததாரி விருத்தி அல்லது விசுத்தி காரணமாக விசேஷ சமயங்களில் (திதி அல்லது நாளில்) காலத்தின் எல்லையைக் கொண்டு செய்யப்படும் விரதம் நைமித்த விரதம் ஆகும்.

17. நைமித்திக விரதம் எத்தனை வகைப்படும்?

நைமித்திக விரதம் இரண்டு முக்கிய வகைகளை உடையது. அவை.

1. நாள் குறிப்பிட்ட (சாவதி) விரதம், 2. நிரவதி (நாள் குறிப்பிடாத) விரதம்.

18. சாவதி மற்றும் நிரவதி விரதத்தின் இலக்ஷணத்தை உதாரணத்துடன் கூறுக.

1. சாவதி விரதம் : ஆரம்பம் மற்றும் முடிவிற்கான நாள் உறுதி செய்து குறிக்கப் பட்டிருக்கும். நாளின் எண்ணிக்கையும் கூட குறிப்பிடப்படும். இத்தகைய விரதம் நாள் குறிப்பிட்ட விரதமாகும். உதாரணம் ஷோடச காரணம், தச லக்ஷணம், ரத்னத்திரையம், ஆஷ்டானிகம் முதலாயின.

2. நாள் குறிப்பிடாத (நிரவதி) விரதம் : விரத நாள்களின் எண்ணிக்கை நிச்சயிக்கப்பட்டிந்தாலும் ஆரம்பம் மற்றும் முடிவு நாள், திதி நிச்சயிக்கப்படுவதில்லை. அவையே நிரவதி விரதமாகும்.

(எ.டு) சாரித்ர சுத்தி விரதம் (1234 நாள் விரதம்) சிம்ம நிஷ்கிரிடித மற்றும் பக்தாமர விரதம் முதலியன.

19. 1. நியம விரதம், யம விரதம் என்று எவற்றைச் சொல்வர்?

1. நியம விரதம் : கால எல்லை வரை (உரிய காலம் வரை) கடைபிடிக்கப்படும் விரதம் நியம விரதமாகும். 2. யம விரதம் : வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்கப்படும் விரதம். தசலக்ஷண பர்வம் முதலியன வாழ்நாள் முழுவதும் கடைப்பிடிக்கப் பட்டால் அதுவும் யம விரதமாகும்.

20. விரதம் ஏற்றல் மற்றும் முடித்தல் யாருடைய சாக்ஷி பூர்வமாக செய்ய வேண்டும்?

விரதம் ஏற்றல், முடித்தல், இவை பற்றற்ற முனிவர் சாக்ஷி பூர்வமாக செய்ய வேண்டும். விரதத்தில் அதிசாரம் முதலிய குற்றங்கள் நேர்ந்தால் அவைகளுக்கு சுத்தி கரணம், க்ஷமா பூர்வமாக பிராயசித்தம் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.

21. நைமித்திக விரதங்களை ஏற்பதற்கான விதிமுறைகள் யாவை? மற்றும் இவ்விரதங்களை ஏற்கும் சமயம் என்ன பாவனை கொள்ள வேண்டும்?

விரதம் ஏற்கும்போது சிராவகர்கள் முதன்முதலில் ஜிநாலயத்தில் ஜிநேந்திர பகவானுக்கு பூஜை, தர்சனம் செய்து நிர்கிரந்த முனிவர் முன்னால் அல்லது அப்படிப்பட்ட குரு இல்லாத காலத்து ஜிநேந்திர பகவானுக்கு முன்னால் உசிதமான தேங்காய், பாக்கு, பாதாம் முதலாயினவற்றை மிகுந்த விசுத்தியுடன் அர்ப்பணம் செய்து தான் தன் விரதத்தை மேற்கொள்ள யாசித்தல் வேண்டும். குருவின் அனுமதி கிடைத்த பிறகு குருவின் மங்கல ஆசிப்பெற்ற நல்ல பாவனையோடு கீழே குறிப்பிட்டுள்ள உறுதியை ஏற்க வேண்டும்.

"அரஹத் சித்தாசாரியோ பாத்யாய சர்வசாது சாக்ஷிகம் சம்யக்த்வ பூர்வகம் த்ரடவிரதம், சுவிரதம் சமாரூபம் மேபவது, மேபவது, மேபவது" "நமோஸ்து. நமோஸ்து, நமோஸ்து"

இவ்விதமாக கூறிக்கொண்டு குருவினிடம் ஆசி பெற்று ஒன்பது முறை ணமோக்கார மந்திரத்தை ஜபிக்க வேண்டும். விரதத்தை ஏற்பவர் இப்படிப்பட்ட உத்தம சமயத்தில் இந்த மங்களகரமான பாவனை செய்தல் வேண்டும். **"ஹே பிரபோ என்னுடைய இந்த விரதம் குறிப்பிட்ட எல்லை**

வரை தடையில்லாமல் ஆனந்தமாக முடிவடைய வேண்டும். இதன் பிறகு சொல்ல வேண்டும். **துக்கக்கஓ கம்மக்கவோ போஹிலாஹோ ஸுகஇ கமணம் சமாஹி மரணம் ஜின குண ஸம்பத்தி ஹோஉ மஜ்ஜம்"** அதாவது என் துக்கங்கள் அழிய வேண்டும். கர்மங்கள் அழிய வேண்டும். இரத்னத் திரையத்தின் பிராப்தி உண்டாக வேண்டும். சுகதி (நற்கதி) செல்ல வேண்டும். சமாதி மரணம் ஏற்பட வேண்டும். மற்றும் ஜிநேந்திர பவானின் உத்தம குணங்களைப் பெற வேண்டும்."

22. மேலே சொல்லப்பட்ட உறுதிமொழியில் சம்யக்த்வ பூர்வகம் என்பதன் பொருள் யாது? மற்றும் அதைக் கூறுவதன் அவசியம் என்ன?

மேலே கூறப்பட்ட "**அரஹத்..** எனத் தொடரும் உறுதி மொழியில் சம்யக்த்வ பூர்வகம் என்பதன் பொருள் சராகி தேவி, தேவதா, குகுரு முதலானர்களுக்கான வணக்கம் உபாசனா இவற்றைவிட்டு, சம்யக்த்வத்தினுடைய 25 குற்றங்கள் இல்லாமல் வீதராக, தேவ, சாஸ்திர, குரு பூஜை, சிரத்தை கொண்ட சம்யக்த்வத்தை ஏற்றுக் கொண்டு விரதத்திற்காக சங்கல்பம் செய்ய வேண்டும்.

ஏனென்றால் '**நி:சல்யோ விரதி**" என்று தத்துவார்த்த சூத்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன் பொருள் விரதி சல்யம் இல்லாதிருக்க வேண்டும். சல்யத்தில் மூன்று வகை உள. 1. மாயா சல்யம், 2. மித்யா சல்யம் மற்றும் 3. நிதான சல்யம். சல்யம் – ஊசி குத்தினால் உடலில் உண்டாகும் வலியைப்போல ஆத்மாவில் துன்பத்தைச் சேர்ப்பது, அதனால் விரதி சுகமாக விகல்பம் இல்லாமல் இருக்க முடிவது இல்லை. எனவே சம்யமம் மேற்கொண்டு மாயா, மித்யா, நிதானம் சல்யங்களைத் தியாகம் செய்ய வேண்டும். இதுமட்டுமன்று இன்னமும் கூட கேளுங்கள். சம்யக் தர்சனம் இல்லாமல் ஞானம் மற்றும் சாரித்திரத்தில் முழுமைத் தன்மை உண்டாவது இல்லை. அந்த ஞானம் பதினோரு அங்கமாக இருந்தாலும் என்ன? மற்றும் சாரித்ரம் முனி சாரித்ரம் போல இருந்தாலும் என்ன? அதனால் ஞானம் மற்றும் தன் விரதங்களின் சம்யக்த்வம் முழுமை செய்வதற்காக அல்லது ஞானம் மற்றும் சாரித்திரத்தினுடைய மித்யாத்துவத்தை விலக்குவதற்காக சம்யக்த்வம் அவசியம் ஏற்க வேண்டும். (நற்காட்சியின் சிறப்பான வருணனை நற்காட்சி பெருமை அதிகாரத்தில் சொல்லப்பட்டுள்ளது.)

23. விரதம் கடைப்பிடிக்கும் போது விரதியினுடைய ஒழுக்கம் எவ்வாறு இருக்க வேண்டும்?

விரதத்தோடு விரதி கீழ்க்கண்ட செயல்களில் கவனம் செலுத்துதல் அவசியமாகும். ஏனென்றால் இவையில்லாமல் விரதத்தில் குற்றமற்ற தன்மை (தூய்மை) வர இயலாது.

1. உபவாசத்தோடு செய்யப்படும் விரதத்தில் தண்ணீர் அருந்தாமை வேண்டும். அதாவது நீரும் அருந்தாமை வேண்டும். மற்றும் வாய் கொப்பளித்தலும் கூடாது.
2. உபவாச நாளின் முந்திய நாள் மத்தியானம் அல்லது மாலை நேரத்தில் உணவிற்குப் பிறகு சிறந்த முறையில் வாய் சுத்திசெய்து சூர்யஅஸ்தமனத்திற்கு முன்பே குரு அல்லது பகவானிடம் வணங்கி விரதம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
3. எந்த விரதம் உபவாசத்தோடு செய்யப்படுகிறதோ அதில் தாரனை அதாவது உபவாசத்திற்கு முந்தைய நாள், உபவாச தினம் மற்றும் பாரணா அதாவது உபவாசத்திற்கு அடுத்த நாள் இப்படி மூன்று நாட்கள் பகல் இரவு, மற்றும் ஒரு வேளை உணவோடு ஏற்கும் அந்த விரதத்தில் ஒரு வேளை உண்ணும் முன்தினம் மற்றும் ஒரு வேளை உண்ணும் விரதநாள் இவ்வாறு இரண்டு பகல் இரவு அவசிய வடிவில் ஆரோக்ய லாபம் மற்றும் மனத் தூய்மைக்காக பிரம்மசர்யத்தைக் கடைபிடிக்க வேண்டும்.
4. உபவாச பூர்வமாக விரதம் இருப்பின் தாரணை நாளில் மாலையில், உபவாச நாளின் விடியற் காலை, மதியம், மற்றும் மாலையில் மற்றும் பாரணை நாளின் விடியற் காலையில், இதுபோல

விரத நாளில் ஒரு வேளை உணவு எடுத்துக் கொள்பவரானால் விரத நாளின் விடியற்காலை, (நண்பகல்) மதியம், மாலையில் அடுத்த நாள் விடியற்காலையில் ஆத்ம தூய்மைக்காக சாமாயிக பாடத்தோடு பஞ்ச நமஸ்கார மந்திரத்தையும் சக்திக்கு ஏற்றவாறு மூன்று அல்லது ஐந்து மாலை ஜபித்துக் கொண்டு சாமாயிகம் செய்ய வேண்டும்.

5. விரத நாளில் சிராவகர்கள் பகவானின் பூஜை. ஆகார தானம் ஆகியவற்றின் நிமித்தமாக முதலில் கிணறு அல்லது அருவி நதியிலிருந்து கொண்டு வந்த (பிராசுக்) உயிர்நீக்கி தூய்மை செய்யப்பட்ட உத்தம நீரில் உடல் முதலானவற்றை சுத்தம் செய்ய வேண்டும்.
6. சௌசக் கிரியைக்கு ஏதுவாக வெகுதூரம் செல்ல நேர்ந்தாலும் ஏற்றுக் கொண்டு மறைவான இடத்தைப் பார்த்து செல்ல வேண்டும். தன் கையுடன் அவசியம் நீர் நிறைந்த பாத்திரத்தை எடுத்துச் செல்ல வேண்டும். அங்கே சுத்தி செய்த பிறகு வசிக்கும் இடத்திற்கு அல்லது தர்மஸ்தலத்திற்கு வெளியிலேயே மண் அல்லது மாவு கொண்டு குறைந்த அளவு மூன்று முறை கைகளைச் சுத்தம் செய்து கால், முகம் ஆகியவற்றை சுத்தம் செய்து உள்ளே வர வேண்டும்.
7. ஆகாரம் முதலியவற்றின் நிமித்தமாக குழாய் நீர் உபயோகிக்கக் கூடாது. ஏனென்றால் அதில் வடிக்கும் செயல் செய்ய முடிவது இல்லை. ஏதாவது தகுந்த தடித்த வடித்துணியினால் வடிக்கப்பட்டு நீரில் தங்கிய ஜீவன்களை மறுபடியும் அதன்பூர்வ ஸ்தானத்தில் (கிணறு, அருவி, ஆறு) மீண்டும் விட்டு விடமுடிவது இல்லை. இக்காரணத்தால் அகிம்ஸாவடிவ மூலதர்மத்தை செய்ய முடியாமல் போகிறது. இது தவிர குளத்து நீர் ஒரே இடத்தில் தேங்கி இருக்கிறது. மற்றும் எல்லோரும் அதில் குளித்தல், ஆடைதுவைத்தல் ஆகிய காரியங்களையும் அதில் செய்கின்றனர். அசுத்தம் ஏற்பட்டு அதன் காரணத்தால் அநேக நோய்கள் உண்டாகின்றன. எனவே குளத்து நீர் ஜைனர்கள் மற்றும் விவேகிகள் பயன்படுத்தத் தகுதி அற்றது.
8. விரதம் ஏற்றவர் பவுடர், கிரீம், நையில் பாலிஷ், லிப்ஸ்டிக், பட்டாடை மற்றும் தோல் பொருள்கள் ஆகிய இம்சைப் பொருள்களைத் தியாகம் செய்ய வேண்டும்.
9. விரத நாள்களில் சிராவகர்கள் உடலை அழகு படுத்திக் கொள்வதில் ஈடுபடக்கூடாது. அகிம்ஸையைப் பாதுகாக்க தாடி, மீசை, தலை முடியை வெட்டி கொள்ளக் கூடாது.
10. விரத நாள்களில் பிரம்மசரியம் காப்பதோடு பூமாலை, பூ, இவைகளை தியாகம் செய்ய வேண்டும். ஏனென்றால் பூ ஒரு காம பாணமாகக் கருதப்படுகிறது.
11. விரத தினங்களில் அந்த விரதத்திற்கும். அல்லது பிரமசரியத்தைக் காக்கவும் நிர்மல எண்ணத் தூய்மைக்காகவும் தொலைக் காட்சி முதலான பாப சித்திரங்களை – படங்களைப் பார்க்கக் கூடாது.
12. விரத பாவனையில் தீவிர உயர்ந்த தூய்மையைப் பெருக்க சிராவகன் அதிக அலங்காரம் மற்றும் பகட்டான ஆடைகளை அணியக் கூடாது. முடிந்தால் வெள்ளை அல்லது மஞ்சள் வண்ண ஆடைகளை உபயோகிக்கலாம்.
13. விரத நாள்களில் உலகியல் கதை, விகதை (தீமை தரும் கதை) சொல்ல, கேட்க. படிக்கக் கூடாது.
14. விரத நாள்களில் சிராவகர்கள் விதிமுறைப்படி ஜினேந்திர பகவானுடைய கந்தோகத்தைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் நல்ல தூய்மை செய்த பொருள்களைக் கொண்டு குறைந்த அளவு மூன்று முறை பூஜை (தேவ, சாஸ்திர, குரு, மூல நாயகர், மற்றும் விரதம் தொடர்பான பூஜைகள்) செய்தல் வேண்டும். கடைசியில் சாந்தி பாடம் முதலானவற்றைச்

சொல்லவேண்டும்.

15. தன் விரதத்தின் எண்ணத் தூய்மைக்காக விரதத்தில் உறுதி செய்யப்பட்ட மந்திரத்தின் ஜபம் செய்தல் வேண்டும். சக்திக் கேற்ப 1,3,5,11,21 ஜபங்கள் செய்யலாம்.
16. விரத நாள்களில் மிக அதிக நேரம் ஆரம்ப மற்றும் பரிக்ரக வியாபாரம் மற்றும் அலங்காரங்களிலிருந்து விலகியிருந்து சுவாத்தியாயம், ஜபம், ஸ்தோத்திரம், படித்தல் ஆகிய உத்தம காரியங்களைச் செய்து கொண்டு அமைதியான இடத்தில் அல்லது ஜினாலயம் முதலிய சிறந்த இடத்தில் இருத்தல் வேண்டும்
17. உபவாச நாளில் ஔஷதம் முதலானவைகளைக் கூட உட்கொள்ளக் கூடாது.
18. ஒரு வேளை உணவு நாளில் ஒருமுறை மரியாதையுடன் கூடிய சுத்தம் செய்த நால்வகை உணவில் தகுதி வாய்ந்த உணவை ஏற்க வேண்டும். ஒரு வேளை தவிர மறறொரு வேளை, மதியம் அல்லது மாலை நேரத்தில் நீர், பால், தேனீர், காபி முதலான பொருள்களை ஏற்கக் கூடாது. ஏற்பின் அது ஏகபுக்தம் ஆவது இல்லை. ஒரு வேளை உணவு நியமத்தில் தவறு உண்டாகிறது. ஒரு வேளை சக்தி இல்லாவிட்டால் தன் தகுதிக்கு ஏற்ப நியமம் ஏற்றுக் கொள்ளவேண்டும். குருவின் முன்னால் விரதம் ஏற்க உறுதி மேற் கொள்ள வேண்டும்.
19. கடையில் (வியாபார நோக்கில்) தயார் செய்யப் பட்டவை ஜைனரல்லாதவரால் தயாரிக்கப் பட்டவைகளை உண்ண ஏற்கக் கூடாது. ஏனென்றால் அங்கு பணத்தின் லோபம் உண்டு மற்றும் சுத்த ஆகார விதமுறைகளுக்கும் ஏற்புடையவை அல்ல. விரதிக்கு ஏற்ற யோக்கியமான ஆகாரங்கள் கிடைப்பது இல்லை.
20. ஒருவேளை உணவு நாளில் திடீரென்று ஏதாவது நோய் எற்பட்டால் ஒருபுக்தி நேரத்தில் சுத்தமான நாட்டு மருந்தை உபயோகிக்கலாம். ஆனால் திரஸஜீவன்கள் இம்சையால் உண்டான மருந்துகளை உண்ணக் கூடாது.
21. குறைந்த பக்ஷம் ஒரு வேளை உணவு விரத நாள்களில் உணவு உட்கொள்ளும் போது மௌன விரதத்தை அவசியம் கடைபிடிக்க வேண்டும்.
22. உணவை உண்பதற்கு முன்பும், உண்டபிறகும் பஞ்ச நமோக்கார மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.
23. விரத நாளில் சோம்பலிலிருந்து விலகவும், பிரமசர்யத்தைக் காக்கவும் எண்ணங்களின் தூய்மை வேண்டி மரத்தாலான பலகை அல்லது பாய் உபயோகிக்க வேண்டும். மெத்தை, தலையணை ஆகியவற்றைத் தியாகம் செய்ய வேண்டும்.
24. உலகத்தில் அஷ்டமி, சதுர்தசி, பௌர்ணமி, பஞ்சமி, மற்றும் ஏகாதசி இவை ஐந்தும் பருவ திதியாகக் கருதப்படுகிறது. திதிகள் நிச்சயிக்கப்படாத விரதங்கள் இந்த பஞ்ச பருவ உத்தமத் திதிகளில் செய்யப்படுகின்றன.
25. விரத உத்யாபனையில் தீவிர ஈடுபாடு கொண்ட சமயம் தன் சக்திக்கு ஏற்ப தீர்த்த க்ஷேத்திரங்களுக்கோ அல்லது ஜைன அதிசய க்ஷேத்திரங்களுக்கோ யாத்திரை செய்தல், மற்றும் விதானம் நடத்துதல், அல்லது சத்பாத்திரங்களுக்கு உபகரண தானம் ஆகிய காரியங்கள் கூட மகிழ்ச்சியுடன் செய்தல் வேண்டும்.
26. விரதங்களை முடிந்து வைக்கும் சுப நேரத்தில் தர்ம பிரபாவனைக்காக (அறம்விளக்கல்) மண்டல விதான பூஜை மற்றும் ஜினேந்திர பகவானின் ரத உற்சவம் அல்லது விமான உற்சவம் மகிழ்வுடன் செய்தல் வேண்டும்.

24. சோம்பலை விலக்கவும் விரதத்தில் தூய்மை வளர்க்கவும் விரத நாளில் விரதியின் நாள் வாழ்க்கை எப்படி அமைய வேண்டும்?

நாள்தோறும் செய்ய வேண்டிய செயல்கள்:

விடியற்காலை: 4.00 மணிமுதல் 5.30 வரை சுப்ரபாத ஸ்தோத்திரம் பஞ்ச நமஸ்கார மந்திரம், ஜபம், சாமாயிக பாடம் படித்தல் இவை போன்றவை (விரதி பிரதிமாதாரியாக இருந்தால் இரவு பிரதிக்ரமணம் செய்தல் வேண்டும். பிரதிமாதாரியாக இல்லாமலிருந்தால் தன் பாவனைக்கு சக்திக்கு ஏற்றவாறு பிரதிக்ரமணம் செய்யலாம்.)

காலை: 6.00 மணி முதல் 7.30 மணிவரை வீதராக பகவானுக்கு பூஜை – பக்தி செய்தல் 7.00 முதல் 8.30 வரை சம்யக் சாஸ்திரத்தை சுவாத்தியாயம் செய்தல் 9.00 முதல் 11.30 ஆகார தானம் மற்றும் ஆகாரம் ஏற்றல்.

நண்பகல் : 12.00 – 1.00 ஜபம், சாமாயிக பாடம் படித்தல் 1.00– 3.00 பக்தாமரஸ்தோத்திரம் – சுவாத்யாயம் செய்தல்.

மாலை : 3.00 – 4.30 குரு வாணிகேட்டல் – தத்துவ சர்ச்சை 6.00 – 7.30 மாலை ஜபம் சாமாயிக பாடம் படித்தல் (பிரதிமா தாரி) பிரதிக்ரமணம் படித்தல் 7.30 – 10.00 சுவத்யாயம் – வீதராக பக்தி

25. நம் ஆகம கிரந்தத்தில எல்லா விரதங்களோடு கூட பிரம்மசர்யத்தைக் கடைபிடித்தல் மிக அவசியம் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த பிரம்மசர்ய விரதத்தை குற்றமில்லாமல் பரிபாலிக்க என்னென்ன துணை நியமங்களை அவசியம் கடைபிடிக்க வேண்டும்?

பிரம்மசர்யத்தின் துணை நியமங்கள்!

1. சூதாடுதல், திருடுதல், வேட்டையாடுதல், புலால் உண்ணல், மது அருந்துதல், பிறன்மனை விழைதல் மற்றும் வேசியர் தொடர்பு. இவ்வேழு வியசனங்களைத் தியாகம் செய்து நியமம் மேற் கொள்ள வேண்டும்.
2. இரவு உணவைத் தியாகம் செய்ய வேண்டும்.
3. குறைந்த பக்ஷம் வீட்டில் வடித்த நீரைக் குடிக்க நியமம் மேற்கொள்ள வேண்டும்.
4. கிழங்கு வகைகளைத் (உருளை, வெங்காயம், பூண்டு, முள்ளங்கி) தியாகம் செய்தல் வேண்டும். ஏனென்றால் கிழங்குவகை வனஸ்பதிகளில் அனந்த ஜீவன்கள் வசிப்பதால் அனந்த காய வனஸ்பதி என்று கூறப்படுகிறது. மற்றும் அனந்த ஜீவன்களின் அழிவிற்குக் காரணமாக இருப்பதால் இவைகள் தாமச குணம் கொண்டிருப்பதால் தியாகம் செய்ய வேண்டும்.
5. தினந்தோறும் வீதராக ஜினேந்திர தர்சனம் செய்தல் வேண்டும்.
6. பிரம்மசர்ய விரத முடையவர்கள் மித்யாத்துவ அதாவது சராகி தேவ, யக்ஷன், யக்ஷி பூஜை, ஆரதி இவைகளை விட்டுவிட வேண்டும்.
7. தொலைக்காட்சி, திரைப்படம் முதலியவைகளைப் பார்ப்பதைத் தியாகம் செய்ய வேண்டும்.
8. தோல், பட்டு, நைல் பாலிஷ், லிப்ஸ்டிக், ஷாம்பு ஆகிய இம்சைப் பொருள்களைத் தியாகம் செய்தல் வேண்டும்.
9. பிரம்மசர்ய விரத நாள்களில் பிரம்ம சர்யத்திற்கு காமபாணமான மலர் அல்லது புஷ்பமாலை தியாகம் செய்தல் வேண்டும். (இலவங்கம் ஒரு பிராசுக புஷ்பம். ஆசை தூண்டுவது அல்ல. ஜீவன்கள் அதில் இல்லை. அதனால் இலவங்கப் பூவை வீதராகியினுடைய பூஜை முதலியவற்றின் நிமித்தமாகப் பயன் படுத்தலாம்.)
10. பெண்களிடமிருந்து ஆண்களும், ஆண்களிடமிருந்து பெண்களும் விலகி தூங்கவேண்டும்.

11. பிரம்ம சரிய விரதத்தினை காப்பதற்காக தூங்கும்போது நேராகவோ கவிழ்ந்தோ படுக்காமல் இடது பக்கமாக ஒரு புறமாக படுத்தல் வேண்டும், மற்றும் வலது புறமாக திரும்பி எழுதல் வேண்டும். இதனால் உடல் ஆரோக்யம் கூட நன்றாக இருக்கிறது.

12. ஆண்களும் பெண்களும் ஒருவர் மற்றவரிடம் அதிக உரையாடலையும், கேளிக்கை, சிரிப்பு போன்றவைகளையும் தியாகம் செய்ய வேண்டும்.

13. தன் குடும்பமில்லா மற்ற உறவினர் பிற குடும்பங்களின் திருமண விஷயங்களில் ஈடுபடுவதை விலக்க வேண்டும்.

(தன் குடும்ப உறுப்பினர்களின் திருமணத்தில் தடையில்லை என்பதை அறிதல் வேண்டும். பிற குடும்ப விவாக காலத்தில் அங்கே செல்ல, உணவு கொள்ளத் தடையும் இல்லை. ஆனால் பிறர் குடும்ப குழந்தைகள் திருமணத்தை முடிக்க ஆலோசனை கருத்து தெரிவித்தல் பிரம்ம சர்ய விரதத்திற்கு உகந்தது அல்ல.)

26. விரத நாளின் திதி தொடர்பான என்ன சிறந்த நியமத்தை கவனித்துக் கொள்ள வேண்டும்?

குறிப்பிட்ட திதிப்படி செய்யப்படும் விரதத்திற்கு அந்த நாள் சூரிய உதயத்தலிருந்து குறைந்த அளவு 6 நாழிகை அளவு திதி இருத்தல் வேண்டும்.

27. நாழிகையினுடைய கால அளவு என்ன?

24 நிமிஷம் ஒரு நாழிகை ஆகும். (6 நாழிகை மூன்று முகூர்த்தம் ஆகும்)

28. சுத்தா மற்றும் வித்தா திதியின் இலக்ஷணம் என்ன?

1. ஒரு நாளைக்கு ஒரு திதி தான் இருக்கும் வேறு அந்நிய திதி இருக்கக் கூடாது. அத்தகைய திதி சுத்தா திதியாகும்.

2. ஒரே நாளில் இரண்டு அல்லது மூன்று திதிகள் சம்பந்தம் இருந்தால் வித்தா திதி என்று சொல்லப் படுகிறது.

29. ஒரு நாளில் இரண்டு அல்லது மூன்று திதிகள் இருக்கும் போது எந்த திதியைக் கழிந்து போனதாகக் கருத வேண்டும்?

ஒரு நாளில் இரண்டு திதிகள் இருக்கும் போது பின் (பின்னால் வரும்) திதியை கழிந்து போனதாகக் கருத வேண்டும். மூன்று திதிகளைக் கொண்டிருந்ததால் அந்நாளில் மத்திய திதியைக் கழிந்து போனதாகக் கருத வேண்டும்.

சிறப்பு :–திதி அதாவது எந்த திதியில் விரதம் இருக்க வேண்டுமோ அந்த திதி குறைந்து இருந்தால் அந்த திதிக்கு முன் திதியின் விரதம் இருக்க வேண்டும். ஏனென்றால் விரதத்தினுடைய திதி அந்த நாளின் சூரிய உதயத்தில் இல்லை என்றாலும் கூட அஸ்தமான காலத்தில் அவசியம் வந்துவிடும். அதனால் கருத்து இது சூரிய உதய காலத்தில் விரதத்தின் திதி 6 நாழிகை அளவு இல்லையானால் விரதம் முன் நாள் இருக்க வேண்டும்.

30. தசலக்ஷண, ஆஷ்டானிக பருவ தினங்களில் திதி கழிந்து போதல், அதிகமாதல் சமயத்தில் என்ன செய்ய வேண்டும்?

தச லக்ஷண, ஆஷ்டானிக பருவ நாள்களில் திதி கழிந்து போனால் ஒருநாள் முன்பாகவே விரதம் ஆரம்பிக்க வேண்டும். திதி முடியாதிருந்தால் ஒரு நாள் அதிகமாக இருக்க வேண்டும்.

31. திதி குறைந்து போதல், அதிகரித்தல் போன்ற சமயங்களில் பிரதிஷ்டை போன்ற மங்கள கரமான காரியம் செய்யலாமா?

செய்யக்கூடாது. பிரதிஷ்டை போன்ற மங்கள காரியங்களுக்காக திதி விருத்தி (அதிகம்) திதி க்ஷயம் (கடந்து போதல்) இவ்விரண்டும் கூடாதிதி என்று சொல்லப் பட்டிருக்கிறது.

32. அயனம் மற்றும் அயன சுத்தி என்று எதைக் கூறுகிறோம்?

ஆறுமாதங்கள் ஒரு அயனம் ஆகிறது. அயனத்தில் இரண்டு வகை உண்டு. 1. தக்ஷணாயனம், 2. உத்தராயணம், விவகாரத்தில் கடக ராசியில் இருந்து சூரியன் தனுர் இராசி வரை ஆவணி முதல் தை வரை, தக்ஷணாயனம், மகர ராசியிலிருந்து மிதுனராசி வரை மாசி முதல் ஆடிவரை சூரியன் உத்தராயணத்தில் சஞ்சரிக்கிறான். சில காரியங்களில் அயன சுத்தியை மிக முக்கியமாகக் கருதுகிறார் மங்களகரமான காரியம் (பஞ்ச கல்யாணம், வேதி பிரதிஷ்டை முதலியன) உத்தராயணத்தில் தான் பூர்த்தி செய்கிறார்கள்)

33. ருது என்று எதைக் கூறுகிறோம்? எந்தெந்த மாதங்கள் எந்த எந்த ருதுக்களில் வருகின்றன?

இரண்டு மாதங்கள் ஒரு ருது எனப்படும். (ஓராண்டில் ஆறு ருதுக்கள் ஏற்படுகின்றன.) சித்திரை, வைகாசி மாதங்கள் வசந்த ருது. ஆனி, ஆடி மாதங்கள் கோடைக்காலம், ஆவணி புரட்டாசி மழைக்காலம், ஐப்பசி, கார்த்திகை மாதங்கள் குளிர் காலம், மார்கழி, தை மாதங்கள் முன்பனிக் காலம், மாசி, பங்குனி பின் பனிக்காலம் இவ்வாறு ஏற்படுகின்றன.

34. அதிக மாதம் மற்றும் குறை மாதம் இச் சமயத்தில் விரதம் முதலிய காரியங்களை செய்வது தொடர்பாக என்ன நிலை?

மாதம் அதிகரிப்பது தொடர்பாக சொல்லப்பட்டிருக்கிறது.

ஸம்வத்ஸரே யதி பவேன் மாஸோ வை ஸாதிகஸ்ததா ।
பூர்வ ஸ்மின்ன விரதம் கார்யம் த்வபரஸ்மின் க்ருதம் சுபம் ॥

பொருள் : ஆண்டில் ஒருமாதம் அதிகமானால் முதல் மாதத்தில் விரதம் மேற்கொள்ளக் கூடாது. ஆனால் அடுத்துவரும் மாதத்தில் விரதம் இருத்தல் வேண்டும். உதாரணமாக இரண்டு சிராவண மாதம் வரும்போது முதல் சிராவணத்தை விட்டுவிட்டு அடுத்த சிராவணத்தில் விரதம் செய்யப்படும்.

சிறப்பு : இரண்டு ஆண்டுகளை விட்டு மூன்றாவது ஆண்டில் ஒரு மாதத்தின் விருத்தி (அதிகம்) ஏற்படுகிறது. அதை அதிக மாதம் அல்லது மலமாஸம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அதிக மாதம் சித்திரை முதல ஐப்பசி வரை ஏற்படுகிறது. அதாவது சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மற்றும் ஐப்பசி மாதத்திலேயே விருத்தி அடைகிறது. இதன் முக்கிய காரணம் சூரியன் மந்த கதியில் சஞ்சரிக்கிறான் மற்றும் சந்திரன் வேகமாக சஞ்சரிக்கிறான். (மாதம் குறைதல் தொடர்பாக சொல்லப்படுகிறது)

ஸம்வத்ஸரே யதி பவேன்மாஸோ வை ஹ்ரீயமனக : ।
பூர்வஸ்மிஞ்ச்ச விரதம் கார்யம்பரஸ்மின்ன து யோக்யதா ॥

பொருள் : ஆண்டில் மாதம் குறைந்தால் முதல் மாதத்தில் விரதம் இருத்தல் வேண்டும். அடுதது வரும் மாதத்தில் இருத்தல் கூடாது. விரதத்திற்கு தகுதி (பூர்வ) முன் மாதத்திலேயே இருக்கிறது. அடுத்த மாதத்தில் அல்ல:

சிறப்பு : அதிக மாதம் இருப்பது போல ஆண்டில் குறை மாதம் கூட இருக்கும் அதில் ஒருமாதம் குறைவு ஏற்படுகிறது, நியமம் இது. குறைமாதம் வரும் ஆண்டில் இரண்டு அதிக மாதங்கள் அவசியம் வரும். குறைமாதம் பெரும்பாலும் கார்த்திகை, மார்கழி மற்றும் தை மாதங்களிலேயே ஏற்படும். மாத குறைவிற்குக் காரணம் அந்த சமயத்தில் சந்திரனை விட சூரியனின் கதி அதிகமாக இருப்பது. முதல் அதிக மாதம் புரட்டாசி மாதமாக எடுத்துக் கொண்டால் அடுத்த அதிக மாதம் சித்திரையில் ஏற்படும். மற்றும் மார்கழியில் குறை மாதம் ஏற்படும். குறை மாதம் எற்பட்டால் விரதத்தை முந்தைய மாதத்தில் செய்ய வேண்டும். கார்த்திகை குறை மாதமானால் கார்த்திகை மாத விரதத்தை ஐப்பசியில் மேற்கொள்ள வேண்டும்.

35. பட்சத்தின் லட்சணம் வகை மற்றும் மங்கள காரியம் செய்யத் தகுந்தது எது? இவற்றை விளக்குக?

பதினைந்து நாள்கள் ஒரு பட்சம் ஆகும். இதில் பிரதமை முதல் அமாவாசை வரை சந்திரனின் கலைகள் குறைவதைப் பார்க்கிறோம். இதைக் கிருஷ்ண பட்சம் என்கிறோம். பிரதமை முதல் பௌர்ணமி வரை சந்திரனின் கலைகள் வளர்வதைக் காண்கிறோம். இதைச் சுக்ல பட்சம் என்கிறோம். இவ்வாறு ஒரு மாதத்தில் கிருஷ்ண பட்சம், சுக்லபட்சம் என இரண்டு பட்சங்கள் உண்டாகின்றன. பொதுவாக எல்லா மங்கள காரியங்களும் சுக்ல பட்சத்திலேயே செய்யப்படுகின்றன. அவசியம் ஏற்பட்டால் கிருஷ்ண பட்சத்தில் பஞ்சமி வரை பிரதிஷ்டை முதலிய மங்கல காரியங்கள் செய்யலாம். ஆனால் பஞ்சமிக்குப் பிறகு திதிகள் ஏற்புடையதல்ல.

36. விரதம் முதலில் மங்கல காரியங்களுக்காக ஏந்தெந்த திதிகள் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது?

த்விதியா, த்ருதியா, பஞ்சமி, சப்தமி, அஷ்டமி, தசமி, ஏகாதசி, திரியோதசி, சதுர்த்தசி மற்றும் பௌர்ணமி திதிகள் விரதம் முதலிய எல்லாம் மங்கல காரியங்கள் செய்வதற்கு சிறந்ததாகக் கருதப்படுகிறது. மற்றொரு எற்பாட்டின்படி சதுர்த்தி, சஷ்டி, அஷ்டமி, நவமி, துவாதசி மற்றும் சதுர்த்தசியின் பட்சம் நேத்ரமில்லா திதிகளாகும். இத் திதிகளில் பிரதிஷ்டை முதலிய மங்கல காரியங்கள் செய்தல் சுபமாகக் கூறப்படவில்லை. இத்திதிகளில் காரியம் செய்வதற்கு மிக அவசியம் ஏற்பட்டால் இத்திதிகளில் ஆரம்ப ஐந்து கடிகைகளில் அதாவது சூர்ய உதயத்திலிருந்து இரண்டு மணி கழித்து மங்கல காரியங்கள் செய்ய வேண்டும்.

37. எந்தெந்த திதிகளுக்கு என்னென்ன பெயர்கள் உள்ளன? எந்தெந்த பெயர் திதிகளில் மங்கல சுபகாரியங்கள் செய்வது சிறப்பானது தகுதியானது?

நந்தா, பத்ரா, ஜெயா, ரிக்தா மற்றும் பூர்ணா, திதிகளுக்கு இந்த ஐந்து பெயர்கள் சொல்லப்படுகிறது.

- பிரதி பதா (ஏகம்), சஷ்டி மற்றும் ஏகாதசி நந்தா என்ற பெயர்.
- த்விதியா, சப்தமி துவாசதி– பத்ரா என்றும் பெயர்.
- த்ருதியா, அஷ்டமி, த்ரையோதசி–ஜெயா என்றும் பெயர்.
- சதுர்த்தி, நவமி, சதுர்தசி–ரிக்தா என்றும் பெயர்.
- பஞ்சமி, தசமி, பூர்ணிமா(அ) அமாவாசை பூர்ணா என்றும் பெயர்.

இவைகளில் பூர்ணா, ஜெயா மற்றும் பத்ரா பெயருடைய திதிகள் மங்கல காரியங்கள் செய்வதற்கு உத்தமமானதாகக் கருதப்படுகிறது. பூர்ணா பெயருடைய திதிகள் பிரஹஸ்பதிவாரம் (வியாழக்கிழமையில்) வந்தால் சிறப்புடையதாக இருப்பதால் மங்கல காரியங்கள் நன்முறையில் நடக்கும்.

38. பஞ்ச கல்யாணம், வேதி பிரதிஷ்டை, ஜினாலய ஆரம்பம், வித்யாரம்பம் ஆகிய காரியங்களுக்கு தகுதியற்ற மாதம், சூன்ய பெயருடைய திதிகள் எவை?

சித்திரையில் இரண்டு பட்சங்களில் அஷ்டமியும், நவமியும், வைகாசியில் இரண்டு பட்சங்களிலும் துவாதசியும் ஆனியில் கிருஷ்ணபட்ச சதுர்தசியும், சுக்லபக்ஷ திரியோதசியும், ஆடி சுக்லபட்ச சப்தமி, கிருஷ்ணபட்ச சஷ்டியும் ஆவணி த்விதிய,த்ருதிய, புரட்டாசி ப்ரதிபதா, த்விதியும், ஐப்பசி தசமி, ஏகாதசி, கார்த்திகை கிருஷ்ணபட்ச பஞ்சமியும் சுக்லபட்ச சதுர்தசியும், மார்கழி சப்தமி, அஷ்டமியும், தை சதுர்த்தி, பஞ்சமியும், மாசி கிருஷ்ணபட்ச பஞ்சமி சுக்லபட்ச சஷ்டியும், பங்குனி சுக்லபட்ச த்ருதியா சூன்ய பெயருடைய பலமற்ற திதியாகக் கருதப்படுகின்றன. இவைகளில் பஞ்ச கல்யாணம் முதலிய காரியங்கள் செய்வதால் வாழ்க்கையில் அநேக நஷ்டங்கள் நேர்வதற்கு வாய்ப்புகள் உள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

39. பஞ்ச கல்யாணம், பிரிதிஷ்டை, வேதிப் பிரதிஷ்டை ஜிநாலய ஆரம்பம், பெரிய பெரிய விதானங்கள், விரதங்களை ஏற்கும் போது மற்றும் உத்யாபனத்திற்கு ஏற்ற கிரக உதய சம்பந்தமான என்னென்ன நியமங்களை நினைவில் கொள்ள வேண்டும்?

இத்தகைய பெரிய காரியங்களுக்கு குரு மற்றும் சுக்கிரனுடைய உதயம் இருப்பது அவசியம். இவ்விரண்டும் அஸ்தமத்தில் இருக்கும் போது மேலே கூறப்பட்ட மங்கள காரியங்கள் செய்ய தகுதி இல்லை. ஜோதிட நூலில் ஒவ்வொரு சுப காரியமும் செய்வதற்கு சுக்கிரன் மற்றும் குருவினுடைய பலம், சந்திர சுத்தி, மற்றும் சூரிய சுத்தியும் ஏற்புடையது. இந்த கிரகங்களின் பலமில்லாமல் சுப காரியங்களைச் செய்வதைத் தவிர்க்க வேண்டும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

40. மங்கல கரமான காரியங்களுக்காக எந்தெந்த நாள் சிறப்பாக கருதப்படுகிறது. மற்றும் எந்தெந்த நாள்கள் தவிர்க்க வேண்டியதாகக் கருதப்படுகிறது. மற்றும் எந்தெந்த உத்தம நாள்களில் செய்யப்பட்ட நற்காரியங்கள் வெற்றி பெறுகிறது?

மங்கல காரியங்களுக்காக புதன், வியாழன், வெள்ளி சிறப்புடையன. மற்றும் ஏற்புடையதாகக் கருதப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமை கூட ஏற்புடையதாகக் கருதப்படுகிறது. தர்மம் தொடர்பான மங்கல காரியங்களுக்கு செவ்வாய், மற்றும் சனி நாள்களை முற்றிலும் தவிர்க்கப் பட்வேண்டியவை எனக் கூறப்படுகிறது. திங்கட்கிழமை மத்திமமாகக் கருதப்படுகிறது.

சிறப்பு : நல்ல பலனுக்கு புத வாரம், அக்ஷர ஆரம்பம், அஸ்திவாரம் மற்றும் காவிய நிர்மாணம். குருவாரம் தீக்ஷா ஆரம்பம் வித்யாரம்பம் மற்றும் பிரதிஷ்டா. சுக்ர வாரம் வித்யாரம்பம், விரத தானம் மற்றும் ஷோடச சம்ஸ்கார். ஞாயிற்று கிழமையில், வித்யாரம்பம், மந்திரம் படித்தல் ஆகிய புண்ணிய செயல்கள், பிரதிஷ்டை ஜபம் முதலிய அனுஷ்டானங்கள் செய்ய திங்கட்கிழமை உத்தமமாகக் கருதப்படுகிறது.

41. சிறந்த நாளில் அல்லது திதியில் செய்யப்படும் தர்ம காரியம் வெற்றி பெறுகின்றன. அசுப சமயத்தில் செய்த தர்ம காரியம் பயனில்லாமல் போகின்றன. இது ஏகாந்த நியமமா என்ன?

இல்லை, இப்படிப்பட்டவை ஏகாந்த நியமம் இல்லை. சிறப்பான நாள்களில் மற்றும் திதிகளில் செய்யப்படும் காரியம் வெற்றி தான் பெறுகின்றன. ஏன் என்றால், சிறந்த நாள், திதி, மாதம் மற்றும் ஆண்டு ஆகியவை காரிய வெற்றிக்கு நிமித்தம் மாத்திரமே. தீவிரமான அசுப கர்மத்தினுடைய உதயம் இருந்தால் நிமித்தம் இருந்தும் கூட காரியத்தில் வெற்றி கிடைப்பது இல்லை. மற்றும் தீவிர புண்ணியத்தின் கர்மம் உதயத்தில் இருந்தால் மற்ற சமயங்களில் கூட காரியம் வெற்றி பெறுவதைப் பார்க்கிறோம். அதனால் சுபத்தினுடைய நற்பயனைக் கருதி உத்தம திதி ஆகிய யோகத்தோடு கூட புண்ணிய கர்மத்தின் யோகம் கூட பரம அவசியமாகிறது.

42. கர்மத்தின் சேர்க்கையாலேயே காரியங்கள் வெற்றி பெறுகிறது என்றால் திதி முதலான பார்ப்பதன் அவசியம் என்ன?

மக்கள் தீய நிகழ்ச்சிகளிலிருந்து காத்துக் கொள்வதற்காக எச்சரிக்கையுடன் காரியம் செய்கின்றனர். மற்றும் நோய் உண்டாவதிலிருந்து காப்பாற்றி கொள்வதற்காக மருந்தை உட்கொள்கின்றனர். ஏனென்றால் அசுப நிமித்தத்தால் அசுப கர்மத்தின் உதீர்ணா (அகாலத்தில் பயன் கிடைத்தல்) பார்க்கிறோம். அதுபோல அசுப கர்ம உதீரணாவிலிருந்து காப்பாற்றிக் கொள்ள சுப மற்றும் சிறந்த நாளில் திதியில் தினத்தில் காரியம் செய்வது மிக யோக்யமானதாகக் கருதப்படுகிறது. தக்க சமயத்தில் செய்யப்படும் சுபகாரியங்களின் பரிணாமம் இது. அந்த சமயத்தில் காரியம் செய்யும் புண்யாத்மாக்களின் மனதில் சஞ்சலமின்மை மற்றும் பயமின்மை காணப்படுவதைக் காண்கிறோம்.

சிறப்பு : இவ்விதமாக தர்மாத்மாக்களின் தர்ம உறுதியை பரிசோதிப்பதற்காக அவர்களின் தார்மிகக் காரியங்களில் கூட அனேக தடைகள் உண்டாவது கண்ட பிறகும் கூட அவர்கள் ''ஸ்ரேயாம்ஸி பகுவிக்னானி'' நல்ல காரியங்களில் பொதுவாக பெரும் பாலும் அனேக தடைகள் வருகின்றன. இந்த உண்மையை – சத்தியத்தை நினைவில் கொண்டு சிறந்த வழியில் சஞ்சலப்படாமல் உற்சாகத் தோடு சம்யக்த்வ பூர்வமாக சிறந்த ஒழுக்கங்கள் மூலமாக தன் புண்ணியத்தைப் பெருக்கிக் கொண்டு தங்களின் கடமையை பூர்த்தி செய்கிறார்கள்.

43. நம் ஜின தர்மத்தில் புரட்டாசி மாதத்தை மிக அதிக சிறப்புடையதாகக் கூறப்பட்டிருக்கிறது? ஏன்?

எல்லா மாதங்களுக்கும் இடையில் புரட்டாசி (பாத்ரபத) மாதம் மிக அதிக சிறப்புடையது. இந்த மாதத்தில் சுக்ல பஞ்சமி உத்சர்ப்பிணி மற்றும் அவசர்ப்பிணி காலத்தின் ஆரம்ப நாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இக் காரணத்தால் புரட்டாசி சுக்ல பஞ்சமியிலிருந்து புரட்டாசி சதுர்த்தசி வரை நியமம், விரதங்களோடு பர்யூஷன் பர்வம் கொண்டாடப்படுகிறது. இந்த பத்து நாள்களில் முக்தி மார்க்க கல்வியைக் கொடுக்கக் கூடிய உத்தம க்ஷமை (பொறுமை) முதலிய பத்து ஆன்ம தர்மங்களின் சிந்தனை செய்யப்படுகிறது.ஆனால் பர்யூஷன் பர்வம் மற்றும் தசலக்ஷண விரதம் அழகிய சேர்க்கையாக பவ்யாத்மக்கள் கருதுகிறார்கள். இப்படிப்பட்ட மாதத்தில் உத்தமமான புரட்டாசியில் ஷோடசகாரண, தசலக்ஷண, இரத்னத்திரைய மற்றும் அனந்த சதுர்த்தசி போன்ற அனேக விரதங்கள் வருகின்றன. எனவே அனேக நியமங்கள், விரதங்களின் பொக்கிஷ வடிவில் புரட்டாசி மாதத்தைப் புகழ்ந்து புராண, சாஸ்திரங்களில் சொல்லப்பட்டுள்ளன.

அஹோ பாத்ர பதாக்கயோ அயம், மாஸோ அனேக் விரதகர்: ।
தர்ம பரோ மத்யே அன்ய மஸானாம் நரேந்திரவத் ॥ (மல்லிநாத புராணம்)

பொருள் : அரசன் குடிமக்களில் சிறந்தவனாகக் கருதப்படுகிறான். அதுபோல ரத்னத்திரைய தர்மத்தின் விருத்திக்குக் காரணமான அனேக விரதங்களின் காலமான (பாத்ரபத) புரட்டாசி மாதத்தை எல்லா மாதங்களிலும் சிறந்ததாகக் கருதப்படுகிறது.

44. சுதர்சன மேருவிற்குத் தெற்கில் இருக்கும் விதேக க்ஷேத்திரத்தில் கச்சாவதி தேசத்தின் மத்தியில் வீதஷோக்பூர் என்னும் பெயருடைய நகரத்தில் இரத்னத்திரைய விரதத்தைக் கடை பிடித்ததால் பெரும்புகழ் பெற்ற அவர் எந்த அரசர்? வனவிஹார சமயத்தில் வனத்தில் வீற்றிருந்த வீதராக முனியை தர்சனம் செய்து அவருடைய உபதேசத்தைக் கேட்டு புதிய கர்மாஸ்ரவத்தையும் மற்றும் மித்யா மார்க்கத்தையும் விட்டு ரத்னத்திரைய – சம்யக் தர்ஷன்– ஞானசாரித்திர மயமான முக்திமார்க்கமே உண்மையான மார்க்கம் என அறிந்து இரத்னத்திரைய விரதத்தை 13 ஆண்டுகள் மேற்கொண்டு அவரது ஆன்மா புனிதமாயிற்று. ஒரு நாள் காட்டில் வேரோடு சாய்ந்த மரத்தைக் கண்டு உலகத்தின் சாரமற்ற தன்மையை சிந்தனையால் உணர்ந்து உலகத்தினிடம் வைராக்கியம் கொண்டு அரச வைபவங்களைத் துறந்து திகம்பர தீக்ஷை ஏற்று வாழ்க்கையின் முடிவில் ஓர் நாள் சமாதி மரணத்தை ஏற்றார். அதன் பயனாக மேலுலகத்தில் அபராஜித விமானத்தின் அகமிந்திர பதவி அடைந்தார். பிறகு இவ்வுலகில் மல்லிநாத தீர்த்தங்கரர் பதவி அடைந்து இறுதியில் முக்திபதவியை அடைந்தார் அவர்யார்?

இரத்னத்திரைய விரதத்தை கடைபிடித்த புகழ்வாய்ந்த அந்த மக்கள் அரசன் ஸ்ரீ வைஸ்ரவண ராஜன் ஆவார்.

45. தாதகி கண்டத்திற்கு கிழக்கில் விதேக தேசத்தில் சீதோதா நதிக்கரையில் உள்ள விசாலாக்ஷா நகரில் வசிக்கும் ராஜன் ப்ரியங்கர். ராஜ மந்திரி, மதிசாகர், சேட் மற்றும் லக்ஷபத்ரர் ராஜபுரோகிதர் இந்நால்வருக்கும் சிறந்த கன்னியர் நால்வர் இருந்தனர். அந்நால்வரும் வசந்த காலத்தில் வனக்கிரீடைக்குச் சென்றனர். அவர்கள் புண்ணிய உதயத்தால் அவ்வனத்தில் ஒரு மரத்தடியில் பாறை மீது அமர்ந்திருந்த மகா திகம்பர முனிவரின் சுப தர்சனம் கிடைத்தது. பக்தியுடன் வணங்கினர். உலகத் துன்பங்களிலிருந்து விடுபட விரத உபதேசம் பெற்றனர். தசலக்ஷண பருவ விரதம் ஏற்க நியமம் ஏற்றனர். விதி முறைப்படி உத்யாபனை செய்து வாழ்வின் இறுதியில் சமாதி மரணம் அடைந்து மகாசுக்ர என்னும் பெயருடைய பத்தாம் ஸ்வர்க்கத்தில் அமரகிரி, அமரசூல, தேவப்பிரபு மற்றும் பத்ம சாரதி என்னும் பெயருடைய மஹர்த்திக் தேவ பரியாயத்தை அடைந்தார்கள். பிறகு அங்கிருந்து வந்து உஜ்ஜயினி நகரத்தில் அரசன் மூலபத்திரனுடைய வீட்டில் ராணி லக்ஷ்மி மதியினுடைய கர்பத்தில் பூர்ணகுமார், தேவராஜ், குணசுந்தரர், மற்றும் பத்ம குமார் என்னும் பெயருடைய புத்திரராகத் தோன்றினர். தந்தை தீக்ஷை ஏற்றபிறகு சிறிது காலம் அரசை நீதியுடன் பரிபாலித்து பிறகு சம்சார போகத்தில் விரக்தி அடைந்து நால்வரும் நக்ன திகம்பர தீக்ஷை ஏற்று உக்கிர தபத்தின் காரணமாக கேவல ஞானம் அடைந்து எல்லா கர்மங்களையும் அழித்து முக்தி அடைந்தனர். அந்த கன்னியர்யாவர்?

பிரியங்கர் நிருபதி கன்னிகை, **முருகாங்கரேகா,** மந்திரி கன்னிகை **காம சேனா**, சேட் மதிசாகர் கன்னிகை **மதனரேகா**, மற்றும் லக்ஷபத்ர ராஜபுரோகிதர் கன்னிகை **ரோகினி** இவர்கள் இரத்னத் திரைய விரதத்தைக் கடைபிடித்த மேன்மையால் மறுபிறவியில் தேவ பிறவியும் கடைசியில் முக்தியும் அடைந்தனர்.

46. பீகார் பிரதேசத்தில் ராஜகிரக நகரத்தில் இராஜா ஹேமப் பிரபாவின் ஆட்சி காலத்தில் சோம சர்மா என்னும் பெயருடைய சிராவகருக்கு எப்படிப்பட்ட கன்னி இருந்தாள். அவள் அதிக அழகற்றவள். ஆகாரத்திற்கு வந்த மதிசாகர் என்னும் சாரண முனியிடம் தந்தை தன் கன்னி அழகற்றவளாக இருப்பதற்கான காரணம் கேட்டபோது பூர்வ காலத்தில் முனி அவிநயம் காரணம் என்றார். மகள் இக்கர்மத்தலிருந்து விடுதலை பெற வழி கேட்டபோது முனி மகராஜ் பாப பாத்திரத்திலிருந்து விடுபட மற்றும் தீர்த்தங்கர பதவிக்குத், தகுந்த புண்ணிய பந்தத்திற்கு காரணமான ஷோடச காரண பாவனை பாவிக்க உபதேசம் செய்தார். அதைக் கேட்ட அக்கன்னி பதினாறு ஆண்டுகள் வரை கடைபிடிக்க ஷோடச காரண விரதத்தை ஏற்றுக் கொண்டாள். வாழ்நாளில் அதனை செம்மையுடன் கடைபிடித்து வாழ்வின் இறுதியில் சமாதி மரணம் ஏற்று பதினாறாவது சொர்க்கத்தில் தேவ பரியாயத்தைப் பெற்றாள். அங்கே சொர்க்க சுகங்களை அனுபவித்து பிறகு மனித ஆண் பரியாயம் பெற்று விதேக க்ஷேத்திரத்தில் சீமந்தர தீர்த்தங்கரர் பதவியை பெற்றாள். அவள் யார்?

ஷோடச காரண விரதபயனால் சீமந்தர தீர்த்தங்கரர் பதவி அடைந்த கன்னி காலபைரவி ஆவாள்.

47. அயோத்யா நகரில் குபேர தத்தர் என்னும் பெயருடைய சேட்டின் மூன்று நல்ல புத்திரர்கள் யாவர்? அவர்கள் வீதராக முனிவரிடம் ஆஷ்டானிக (நந்தீஸ்வரபர்வ)விரதத்தை ஏற்றுக் கொண்டார்கள். வாழ்வின் இறுதியில் சமாதி மரணம் ஏற்று அவ்விரதத்தின் மகிமையால் சொர்க்கத்தில் மகர்த்திக் தேவ பதிவியை அடைந்தனர். அவர்களில் முதல் புத்திரன் சுவர்க்க சுகத்தை அனுபவித்த பிறகு மனித பரியாயத்தில் அயோத்தி நகரில் நவநிதி, பதினான்கு

இரத்னங்கள் 96 ஆயிரம் ராணிகளுடன் ஆறு கண்ட ராஜ்ய வைபவத்தோடு கூடிய ஹரிசேன சக்ரவர்த்தி பதவியை அடைந்தார். இரண்டாவது மூன்றாவது புத்திரர்கள் சுவர்க்கத்தில் இருந்து வந்து அரிஞ்செய, அமிதஞ்செய எனும் பெயருடைய முனிகளின் பரியாயத்தை அடைந்தனர்.

குபேரதத்தர் எனும் பெயருடைய சேட்டின் நல்ல புத்திரர்கள் ஸ்ரீவர்மா, ஜெயகீர்த்தி மற்றும் ஜெயவர்மா இவர்கள் ஆஷ்டானிக விரதத்தின் மகிமையை வெளிப்படுத்தியவர்கள் ஆவர்.

48. விதேக க்ஷேத்திரத்தின் தொடர்புடைய காந்தில் என்னும் நாட்டில் பாடலிபுர நகரத்தில் இருந்த அந்த சிராவகர் யார்? அவர் ஒரு நாள் பிஹிதாஸ்ரவர் என்னும் பெயருடைய கேவலியினுடைய சரணங்களில் தான் செல்வ நிலையிலிருந்து தரித்திர நிலைக்கு வந்ததன் காரணம் (பூர்வ) முன்பிறவியில் செய்த முனிநிந்தை என்பதை அறிந்து தன் பாபகர்மத்தை அழிக்க ஜின குண சம்பத்தி விரதம் மேற் கோள்ள உறுதி பூண்டார். அதன் காரணமாக சில பிறவிகளுக்குப் பிறகு அந்த விரதத்தின் மகிமையால் அந்த சிராவகர் ஸ்ரேயாம்ச ராஜாவானார். தான் முன்பு ஈட்டிய பெரும் புண்ணியத்தால் முதல் தீர்த்தங்கரர் பகவான் (முனீஸ்வர்) ஆதிநாதருக்கு முதல் ஆகார தானம் அளிக்கும் சௌபாக்கியத்தை பெற்றார். மற்றும் இறுதியில் திகம்பர தீக்ஷை ஏற்று நிர்வாண பதவியை அடைந்தார்.

அந்த சிராவகர் நாகதத்த சேட் ஆவார். அவர் ஜினகுண சம்பத்தி விரதத்தின் உத்தம மகாத்மியத்தை வெளிப்படுத்தினார்.

49. அயோத்யா நகரின் அருகில் உள்ள பத்ம கண்டம் என்னும் கிராமத்தில் வசிக்கும் அவர்கள் யாவர்? அவர்கள் எத்தகைய பவ்விய ஆத்மா சிராவக சிராவகி, அனந்த சதுர்த்தசி விரதத்தை விதியோடு கடைபிடித்து அவ்விரத மகிமையால் அந்த சிராவகர் கவர்க்காதி சுகங்களை அனுபவித்து மோக்ஷத்தை அடைந்தார்.

'சோம சர்மா', 'சோமஸ்ரீ' என்னும் சிராவக சிராவகி இருவரும் அந்த பவ்விய ஆத்மாக்கள் ஆவர்.

50. உஜ்ஜயினி நகரில் வசிக்கும் அந்த மகான் அரசர்யார்? சாரித்திர சுத்தி விரத (1234) உபவாசத்தை உறுதியுடன் கடைபிடித்து மூன்றாம் பவத்தில் விதேகக்ஷேத்திரத்தில் விஜயாபுரி நகரில் தனஞ்செய அரசனின் மகனாகப் பிறந்து பஞ்ச கல்யாணத்தோடு சந்திரபானு என்னும் பெயருடைய தீர்த்தங்கர பதவியை அடைந்தார். பிறகு நிர்வாண சுகத்தை அடைந்தார்.

அந்த மகான் அரசர் ஹேம வர்மா. இவர் சாரித்திர சுத்த விரதத்தின் மகிமையால் விதேக க்ஷேத்திரத்தில் சந்திரபானு தீர்த்தங்கர பதவி அடைந்து முக்தியும் அடைந்தார்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

அதிகாரம் – 17

எட்டு வினைகளின் விளக்கம்

வினைக்கோட்பாட்டினை முழுமையாக அறியாத உயிர்கள் சக்தி வாய்ந்ததாக சாதாரண மானவர்களால் போற்றப்படும் தெய்வங்களை வணங்குவதிலும், வீதராகியிடத்திலும் கூட வேண்டுதல் நிறைவேரும் என்ற எண்ணத்திலும் சிக்கிக் கொண்டுள்ளன. பலவகையான உலகியல் போகங்களின் வாஞ்சனைகளும், வேண்டுதல்களும், தன் புலனின்ப சாதனங்களும் பூர்த்தி அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆராதனைகளை செய்து கொண்டு, கிடைப்பதற்கு மிக அருமையான மனித வாழ்வை வீணடித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால் எப்பொழுது இந்த உயிர் கர்ம சித்தாந்தத்தின் உண்மையான வடிவை புரிந்து கொள்ளுகிறதோ அப்பொழுது பிறவி சுழற்சியில் ஆழ்த்தும் தடுமாற்றங்கள் நிறைந்த மூட பழக்க வழக்க வழிபாடுகளை விட்டு, சம்யக்த்வத்தை (நற்காட்சி, நன்ஞான, நல்லொழுக்கத்தை) தன் வழியாக ஏற்று, அறவழிபாட்டினை உண்மையான வழியில் செய்துகொண்டு அசுப (பாப) வினைகளை உதிர்க்கச் செய்யும் நன்முயற்சியில் (புருஷார்த்தத்தில்) முழுமையாக ஈடுபடுகின்றது. இந்த நன்முயற்சியினால் பவ்வியர்கள் தன் கர்மங்களை தணிவு (உபசமம்) செய்தும் தனது இலக்கான முக்தி லட்சியத்தை அடைய தங்களை தகுதி உடையவர்களாக ஆக்கிக்கொள்கின்றனர். ஆகையால் கர்ம சித்தாந்தத்தில் பவ்வியர்கள் தெளிவடையவும், மிகுந்த நம்பிக்கை கொள்ளவும் ஏதுவான வகையில் வினைகளின் பிரிவுகளும் உட்பிரிவுகளும், மற்றும் அதன் இயல்புகளும் எட்டு வினைகளின் விளக்கம் என்ற இந்த அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

1. வினை என்று எதைக் கூறுகிறோம்?

எந்த புற்கல பரமாணு, விருப்பு, வெறுப்பு காரணங்களினால், ஆத்மப் பிரதேசங்களுடன் கலந்து ஆத்மாவினுடைய இயல்பினை கெடுத்து விடுகின்றதோ, அந்த புற்கலபரமாணுக்களை வினை என்று கூறப்படுகிறது.

2. ஞான மறைப்பு வினைகளின் தன்மையை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக?

ஞான மறைப்பு வினை : ஞானம் தோன்றும் ஆற்றலை மறைப்பது – மூடுவது ஞான மறைப்பு வினை எனக் கூறப்படுகிறது.

எடுத்துக்காட்டு : துணியால் மூடப்பட்ட பொருளை அறிதலில் எப்படித் துணி தடையாக இருக்கிறதோ அதே போல் ஞானம் தோன்றுவதில் ஞான மறைப்பு வினை தடையாக அமைகிறது.

3. ஞான மறைப்பு வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

ஞான மறைப்பு வினையில் ஐந்து பிரிவுகள் உள்ளன. 1. மதிஞான மறைப்பு, 2. சுருதஞான மறைப்பு, 3. அவதிஞான மறைப்பு, 4. மன:பரியய ஞான மறைப்பு மற்றும் 5 கேவலஞான மறைப்பு.

4. தரிசனாவரணம் (காட்சி மறைப்பு) வினை எதைக் கூறுகிறோம்? எடுத்துக் காட்டுடன் விளக்குக.

காட்சி மறைப்பு வினை : காட்சி அதாவது பொதுவாகப் பார்த்தலுக்கு எது இடையூறாக உள்ளதோ அது காட்சி மறைப்பு வினை எனப்படுகிறது.

எடுத்துக்காட்டு : துவார பாலகர்: வாயில் காவலர் இசைவு இல்லாமல் எப்படி உள்ளே உள்ள பொருளை அல்லது ஆளைப் பார்க்க முடியாமல் வாயில் காவலர் தடையாக உள்ளாரோ அதே போல காட்சி தோன்றுவதில் காட்சி மறைப்பு வினை தடையாக உள்ளது.

5. தரிசனாவரணம் (காட்சி மறைப்பு வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன? அவற்றின் இலக்கணங்களைக் கூறவும்?

காட்சி மறைப்பு வினையில் ஒன்பது பிரிவுகள் உள்ளன அவைகளாவன:

சக்ஷுதர்னாவரணம் – கண்களால் பார்த்தலை மறைக்குங் கர்மம்.

அசக்ஷுதர்சனாவரணம் – மெய், வாய், மூக்கு, செவி ஆகிய இவைகளால் அறிதலை மறைக்குங்கர்மம்.

அவதி தர்சனாவரணம் – அவதி தர்சனத்தை மறைக்குங் கர்மம்.

கேவல தர்சனாவரணம் – கேவல தர்சனத்தை மறைக்குங் கர்மம்.

நித்ரா – துக்கம், சோகம், களைப்பு முதலானவைகளை நீக்குதற்பொருட்டு, ஸாமான்யமாக உறங்குதற்குக் காரணமான கர்மம்

நித்ராநித்ரா – அதிகமாக உறங்குதற்குக் காரணமான கர்மம்.

ப்ரசலா – அல்ப நித்திரைக்கு காரணமான கர்மம். அதாவது கண்களை சிறிது திறந்து கொண்டு உறங்கும் போது பிறர் பேசுவதையறிதல் போல்வது.

ப்ரசலாப்ரசலா – உட்கார்ந்து உறங்குதல், சொள்ளு (வாயிலிருந்து நீர்) வடிதல், உடல் நடுங்குதல் முதலானவற்றிற்குக் காரணமான கர்மம்.

6. வேதனீய வினை என்று எதைக் கூறுகிறோம்? எடுத்துக் காட்டுடன் விளக்குக?

உயிர்கள் இன்ப துன்ப வேதனை அனுபவத்தைப் பெற வைப்பது வேதனீய வினை எனப்படுகிறது.

எடுத்துக்காட்டு : தேன் தடவிய கத்தி : தேன் தடவிய கத்தியை நக்கும் போது (நாக்குச்) சுவையின் சுகஅனுபவமும், நாக்கு (கத்தி கூர்மையால்) அறுபடுவதால் துக்க அனுபவமும் உண்டாகின்றன. இதே போல சாதா, அசாதா வேதனீய வினை நிமித்தத்தால் பிறவி உயிர்களுக்கு எல்லாச் செயல்களிலும் இன்ப அல்லது துன்ப அனுபவம் உண்டாகிக்கொண்டு இருக்கிறது.

7. வேதனீய கர்மத்தில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

1. ஸாதாவேதனீயம் – ஐம்புலன், மனம் ஆகிய இவைகளால் உண்டாகும் சுகத்திற்குக் காரணமான கர்மம்.
2. அஸாதாவேதனீயம் – பலவகை துக்கங்களுக்குக் காரணமான கர்மம்.

8. மோஹனீய வினை என்று எதைக் கூறுகிறோம்?

உயிரைத் தன் இயல்பையும் நல்நெறியையும் மறக்கச் செய்வது, பிற பொருளிலும் தீய நெறியிலும் மோகம் கொள்ளச் செய்வது மோஹனீய வினையாகும். இதில், உயிருக்கு நன்மை செய்யும் நற்காட்சி தோன்றுதலுக்கு இடையூறாக தரிசன மோகனீயமும், உயிரை ஒளி பெறச் செய்யும் விரத, புலனடக்க வடிவ ஒழுக்கம் ஏற்கும் பரிணாமத்தக்கு இடையூறாக சாரித்ர மோஹனீயமும் அமைகின்றன.

உதாரணமாக, கள் குடித்தவன் அறிவில்லாதவனாகி தன்னையும் மற்றும் தன்னுடைய செல்வத்தையும் மறந்து விடுகிறானே, அதுபோல மோஹனீய வினையின் நிமித்தத்தால் பிறவி உயிர் பொருள்களின் உண்மையான இயல்பினை விபரீதமாக கற்பனை செய்கிறது. உயிரை உடலாகவும். உடல் முதலியவை உயிராகவும் அறிகிறது. பிறபொருள்களின் தனது என்கிற மமத்வ உணர்வு கொள்வதால், அப்பொருள் அழியும் போது துயரமடைகிறது.

9. மோகனீய வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

1. தரிசன மோகனீயம் (காட்சி மயக்கு வினை) : எந்த வினையின் உதயத்தினால் உயிரின் நற்குணங்கள் கெடுக்கிறதோ, அது தரிசன மோகனீய வினையாகும்.
2. சாரித்ர மோகனீயம் (ஒழுக்கமயக்கு வினை) எந்த வினையின் உதயத்தினால் உயிரின் நல்லொழுக்க குணம் பாதிக்கப்படுகிறதோ அதனை சாரித்ர மோகனீயம் என அழைக்கப்படுகிறது.

10. தரிசன மோகனீய கர்மத்தின் வேறுபாடுகள் யாவை?

தர்ஸன மோகனீயம் மூன்று வகை.

(1) மித்யாத்வ ப்ரக்ருதி – தேவ, சாஸ்திர குருவையும், ஏழு தத்துவம் முதலானவைகளையும் நம்பாததாகிய தீக்காட்சிக்குக் காரணமானது. அது நசிந்த பிறகுதான் ஸம்யக்த்வம் உண்டாகும்.

(2) ஸம்யக்த்வ ப்ரக்ருதி – ஸம்யக்த்வத்தினை அடியோடு கெடுக்கம் தன்மையின்றி சலனம் (சலனம், மலினம், அகாடம்) முதலான சில தூஷனைகளை உண்டாக்குவதற்குக் காரணமானது.

(3) ஸம்யக் மித்யாத்வ பிரக்ருதி – நற்காட்சியின் தன்மையும், தீக்காட்சியின் தன்மையும் ஒன்றாகச் சேர்ந்திருத்தற்கு காரணமானது. அதாவது, வெல்லத்தின் சுவையாகிய இனிப்பும், தயிரின் சுவையாகிய புளிப்பும் சேர்ந்து மற்றொரு வகை சுவையாக மாறியிருத்தல் போல்வது.

11. சாரித்ர மோகனீய வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

சாரித்ர மோகனீய வினையில் இரு பிரிவுகள் உள்ளன. 1. கஷாயம் முழுமையாக ஒழுக்கத்தை அழிப்பது 2. நோ கஷாயம்– (கொஞ்சும் ஒழுக்கத்தை அழிப்பது)என சாரித்ர மோகனீய கர்மத்தின் வேறுபாடுகள் ஆகும்.

12. கஷாயத்தில் (துவர்ப்பசையில்) எத்தனை பிரிவுகள் உள்ளன?

துவர்ப்பசையில் பதினாறு பிரிவுகள் உள்ளன.

1–4 அநந்தானுபந்தி குரோதம், அனந்தானுபந்தி மானம் , அனந்தானு பந்தி மாயை , அனந்தானுபந்தி லோபம் –அனந்த பிறவிகளை உண்டாக்க காரணமானது. இந்த துவர்ப்பசையினால் நற்காட்சியுடன் கூடிய ஒழுக்கம் கெடுகிறது. நற்காட்சியும் வெளிப்பட முடியாமல் போகிறது.

5–8 அப்ரத்யாக்யானகுரோதம் , அப்ரத்யாக்யான மானம், அப்ரத்யாக்யான மாயை, அப்ரத்யாக்யான லோபம் – இந்த துவர்ப்பசைகள் அணுவிரதத்தை ஏற்கவிடாமல் செய்கிறது.

9–12 ப்ரத்யாக்யான குரோதம், ப்ரத்யாக்யான மானம், ப்ரத்யாக்யான மாயை, ப்ரத்யாக்யான லோபம் – இந்த துவர்ப்பசைகள் சகல விரதத்தை (முனிவிரதத்தை) ஏற்கமுடியாமல் செய்கிறது.

13–16 ஸஞ்ஜ்வலகுரோதம், ஸஞ்ஜ்வலனமானம், ஸஞ்ஜ்வலனமாயை, ஸஞ்ஜ்வலன லோபம் – இந்த துவர்ப்பசைகள் யதாக்யாத சாரித்திரத்தை எடுக்கவொடாமல் தடுக்கிறது.

குறிப்பு : அனந்தம் – கடையில்லாதது, அனுபந்தி – ஸம்ஸாரத்தை (பிறப்பினை) வளர்த்தல் (அதிகரித்தல்), அ – கொஞ்சம் , ப்ரத்யாக்யானம் – விடுதல், அப்ரத்யாக்யானம் – கொஞ்சமாக விடுதல், ஸஞ்ஜ்வலந – ஸம்யமத்தடன் விளங்குதல்.

13. நோகஷாய (சாரித்ர மோகனீயத்) தின் வேறுபாடுகள் யாவை. எத்தனை பிரிவுகள் உள்ளன?

ஒழுக்கத்தை குறைந்த அளவு அழிப்பது அல்லது மாசுபடுத்துவது ஒன்பது வகை,

அவைகளாவன:

1. ஹாஸ்யம் – சிரித்தல், பரிஹாசஞ்செய்தல், முதலியவற்றிற்கு காரணமான கர்மம்.
2. ரதி – மனைவி முதலானவர்களிடத்து விருப்பத்தினை உண்டாக்குங் கர்மம்.

3. அரதி – மனைவி முதலானவர்களிடத்து அன்பின்மை (வெறுப்பு) உண்டாதற்குக் காரணமான கர்மம்.
4. சோகம் – பொருள் இழப்பினால் ஏற்படும் ஒருவித உணர்வு.
5. பயம் – பயப்படுவதற்குக் காரணமான கர்மம்..
6. ஜுகுப்ஸை – தன் குற்றத்தை மறைத்தல், பிறர் குற்றத்தினை வெளியிடுதல், அருவருப்படைதல், திரஸ்காரம் (இகழ்ச்சி) செய்தல் முதலியவைகளுக்குக் காரணமான கர்மம்..
7. ஸ்த்ரீவேதம் – ஆடவர்களுடன் ரமிக்க வேண்டுமென்ற இச்சை உண்டாவதற்குக் காரணமான கர்மம்.
8. பும்வேதம் – பெண்களுடன் உறவாட விரும்புதலுக்குக் காரணமாண கர்மம்.
9. நபும்ஸகவேதம் – ஆண், பெண் ஆகிய இருபாலாருடனும் உறவாட விருப்பம் கொள்வதற்கு காரணமான கர்மம்.

14. ஆயுள் வினை என்று எதைக் கூறுகின்றனர்?

ஆயுவினை :

உயிரைக் குறிப்பிட்ட பிறவியில் அல்லது உடலில் குறிப்பிட்ட காலம் வரை இருக்கச் செய்வது ஆயுள் வினையாகும்.

எடுத்துக்காட்டு : முளைக்குச்சு. முளைக்குச்சில் கட்டப்பட்ட பசு முதலியன கொஞ்ச நேரம் அல்லது குறிப்பிட்ட நேரம் அங்கேயே கிடக்க வேண்டியுள்ளது. அதே போன்று பிறவி உயிர்கள் வெவ்வேறான கதிகளில் துக்கம் முதலானவற்றை அனுபவித்து முளையில் கட்டியது போல ஆயுள் வினையால் கட்டப்பட்டு கிடக்க வேண்டியுள்ளது.

15. ஆயுள் வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

ஆயுள்வினை 4 வகை. அவைகளாவன:

1. நரகாயுள் – ஜீவன் நரகத்திலிருப்பதற்கு காரணமான கர்மம்.
2. திர்யஞ்சாயுள்– ஜீவன் விலங்கினத்தில் இருப்பதற்கு காரணமான கர்மம்.
3. மனுஷ்யாயுள் – ஜீவன் மனிதப்பிறவியில் இருப்பதற்கு காரணமான கர்மம்
4. தேவாயுள் – ஜீவன் தேவப்பிறவியில் இருப்பதற்கு காரணமான கர்மம்.

16. நாமவினை என்று எதைக் கூறுகிறோம்?

உயிர் பல வகையான உருவங்களைப் பெற வைப்பது நாம வினை என்று கூறுவர்.

எடுத்துக்காட்டு : **ஓவியன்** உலகில் ஒவியர் எப்படி வண்ண வண்ண வடிவங்களை அல்லது படங்களை வரைகிறாரோ அதே போன்று நாம வினை நான்கு கதிகளிலும் உழலும் உயிர் பல வகையான உடல்களை அடையச் செய்கிறது.

17. நாம வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

நாம வினையில் 93 பிரிவுகள் உள்ளன **அவைகளாவன:**

நான்கு கதி நாமகர்மம்

நரககதி நாமகர்மம்(1) திர்யக்கதி நாமகர்மம்(2) மனுஷ்யகதி நாமகர்மம் (3) தேவகதி நாமகர்மம் (4)

ஐந்து ஜாதி நாமகர்மம் :

ஏகேந்திரியஜாதி நாமகர்மம் (5) த்விந்திரியஜாதி நாமகர்மம் (6) த்ரீந்திரிய ஜாதி நாமகர்மம் (7) சதுரிந்திரியஜாதி நாமகர்மம் (8) பஞ்சேந்திரியஜாதி நாமகர்மம் (9)

ஐந்து சரீர நாமகர்மம்

ஔதாரிகசரீர நாமகர்மம் (10) வைக்ரீயிகசரீர நாமகர்மம் (11) ஆஹாரீக சரீர நாமகர்மம் (12) தைஜஸசரீர நாமகர்மம் (13) கார்மண சரீரநாமகர்மம் (14)

மூன்று அங்கோபாங்க நாமகர்மம்

ஔதாரிக சரீராங்கோபாங்க நாமகர்மம் (15) வைக்ரீயிக சரீராங்கோபாங்க நாமகர்மம் (16) ஆஹாரக சரீராங்கோபாங்க நாமகர்மம் (17)

ஒரு நிர்மாண நாமகர்மம் (18)

ஸ்தானப்ரமாண நிர்மாண நாமகர்மம் (18)

ஐந்து பந்தனம்

ஔதாரிக சரீர பந்தனம் (19) வைக்ரீயிக சரீர பந்தனம் (20) ஆஹாரக சரீர பந்தனம் (21) தைஜஸ சரீர பந்தனம் (22) கார்மண சரீர பந்தனம் (23)

ஐந்து ஸங்காதம்

ஔதாரிக சரீர ஸங்காதம் (24) வைக்ரீயிக சரீர ஸங்காதம் (25) ஆஹாரக சரீர ஸங்காதம் (26) தைஜஸ சரீர ஸங்காதம் (27) கார்மண சரீர ஸங்காதம் (28)

ஆறு ஸம்ஸ்தானம்

ஸமசதுரஸ்ர ஸம்ஸ்தானம் (29) ந்யக்ரோத பரிமண்டல ஸம்ஸ்தானம் (30)

ஸ்வாதி ஸம்ஸ்தானம் (31) குப்ஜ ஸம்ஸ்தானம் (32) வாமந ஸம்ஸ்தானம் (33) ஹுண்டக ஸம்ஸ்தானம் (34)

ஆறு ஸம்ஹநனம்

வஜ்ர விரஷப நாராச ஸம்ஹநனம் (35) வஜ்ரநாராச ஸம்ஹநனம் (36) நாராச ஸம்ஹநனம் (37) அர்த்தநாராச ஸம்ஹநனம் (38) கீலக ஸம்ஹநனம் (39). அஸம்ப்ராப்தாஸ்ரூபாடிகா ஸம்ஹநனம் (40)

எட்டு ஸ்பர்சம்

கர்கஸம் (41) ம்ருது(42) குரு (43) லகு (44) ஸ்நிக்தம் (45) ரூக்ஷம் (46) சீதம் (47) உஷ்ணம் (48)

ஐந்து ரஸம்

திக்த (49) கடு (50) கஷாய (51) ஆம்ல 52) மதுர (53)

இரண்டு கந்தம்

ஸுகந்தம் (54) துர்கந்தம் (55)

ஐந்து வர்ணம்

சுக்லம்(56)க்ருஷ்ணம்(57) நீலம் (58) ரக்தம் (59) ஹரிதம் (60)

நான்கு ஆநுபூர்வி

நரககதி ப்ராயோக்யாநு பூர்வி (61) திரியக்கதி ப்ராயோக்யாநு பூர்வி (62) மநுஷ்யகதி ப்ராயோக்யாநு பூர்வி (63) தேவகதி ப்ராயோக்யாநு பூர்வி (64)

குறிப்பு : தேவன் – விலங்காகவும், மனிதனாகவும் பிறக்க முடியும், நாரகனாகவும், தேவனாகவும் பிறக்க முடியாது. நாரகன் விலங்காகவும், மனிதனாகவும் பிறக்க முடியும், நாரகனாகவும் தேவனாகவும் பிறக்க முடியாது. மனிதனும் விலங்குகளும் நான்கு கதியிலும் பிறக்கக் கூடும்.

ஒரு அகுருலகு (65) , **ஒரு உபகாதம்** (66) , **ஒரு பரகாதபம்** (67), **ஒரு ஆதாபம்** (68), **ஒரு உத்யோத நாமகர்மம்** (69)

இரு விஹாயோகதி நாமகர்மம்

ப்ரஸஸ்த விஹாயோகதி (70) அப்ரஸஸ்தவிஹாயோகதி (71)

ஒரு உத்வாஸ நாமகர்மம் (72), **ஒரு ப்ரத்யேக சரீரம்(73), ஒரு ஸாதாரணம்**(74), **ஒரு த்ரஸம்** (75), **ஒரு ஸ்தாவரம்** (76), **ஒரு ஸுபகம்** (77), **ஒரு துர்பகம்** (78), **ஒரு ஸுஸ்வரம்** (79), **ஒரு துஸ்ஸ்வரம்** (80), **ஒரு சுபம்** (81), **ஒரு அசுபம்** (82), **ஒரு ஸூக்ஷமம்** (83), **ஒரு பாதர சரீரம்** (84), **ஒரு பர்யாப்திம்** (85), **ஒரு அபர்யாப்திம்** (86) **ஒரு ஸ்திரம்** (87)

(குறிப்பு : தாதுக்கள் ஏழு வகை. அவை – ரஸம், ரக்தம், மாம்ஸம், மேதம், எலும்பு, மஜ்ஜா, வீர்யம் என்பன. உபதாதுக்கள் ஏழுவகை – வாதம், பித்தம், கபம், சிராஸ்நாயு, சாமம், உதராக்னி என்பன.)

ஒரு அஸ்திரம் (88), **ஒரு ஆதேயம்** (89), **ஒரு அநாதேயம்** (90), **ஒரு யஸஸ்கீர்த்தி** (91), **ஒரு அயஸஸ்கீர்த்தி** (92), **ஒரு தீர்த்தரங்கரத்வம்** (93).

18. கதி நாமகர்மம் என எதைக் கூறுகிறோம்?

எந்த கருமத்தின் உதயத்தினால் உயிர் ஒரு கதியிலிருந்து மற்றொரு கதிக்குச் செல்வதை கதி நாம கர்மம் எனப்படும். இதனில் நரகம் முதலான நான்கு பிரிவுகள் உள்ளன. எந்த வினையின் உதயத்தினால் உயிரில் நாரக எண்ணம் ஏற்படுகிறதோ அது நரககதி நாம கர்மம் ஆகும். இவ்விதமாக பிறவற்றினையும் அறிய வேண்டும்.

19. ஜாதி நாமகர்மம் என எதைக் கூறுகிறோம்?

ஒவ்வொரு கதியினுள்ளும் விரோத பாவமின்றி உயிரை ஒரே வகையாக (ரூபமாகச்) செய்வதற்குக் காரணமாகும் வினையை ஜாதி நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. எந்த வினையின் உதயத்தினால் ஓரிந்திரிய உயிர் என அழைக்கப்படுகிறதோ அது ஏகேந்திரிய ஜாதி நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. இது போலவே மற்றவற்றினையும் அறிய வேண்டும்.

20. சரீர நாமகர்மம் என எதை அழைக்கப்படுகிறது?

எந்த வினையின் உதயத்தினால் உயிருக்கு உடல் அமைப்பு உண்டாக காரணமாக இருக்கிறதோ, அது சரிர (உடல்) நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. அது ஔதாரிக உடல் நாமகர்மம் முதலிய ஐந்து வகைகளாக உள்ளன.

21. ஔதாரிக சரீர நாமகர்மம் என எதை அழைக்கப்படுகிறது?

உதார அல்லது ஸ்தூரல வடிவமான மனித மற்றும் விலங்குகளின் உடலினை ஔதாரிக சரீர நாம கர்மம் எனக் கூறப்படுகிறது.

22. வைக்ரியிக சரீர நாமகர்மம் என எதை அழைக்கப்படுகிறது?

அணிமா முதலான எட்டு சிறப்பு குணங்களின் தொடர்பினால் ஒன்று, பல, சிறிய, பெரிய முதலான பலவிதமான உருவங்களை எடுக்கும் விக்ரியை செய்தல், எந்த உடலுடைய பிரயோசனமாக இருக்கிறதோ, அது வைக்ரியிக சரீர நாம கர்மம் என அழைக்கப்படுகிறது.

23. ஆஹாரக சரீர நாமகர்மம் என எதை அழைக்கப்படுகிறது?

சூக்க்ஷமமான பொருளினை அறிவதற்காக அல்லது புலனடக்கமின்மையினை விலக்கும் விருப்பத்தினால் பிரமத்த சம்யத முனிவர் மூலமாக எந்த உடலின் அமைப்பு உண்டாக்கப்படுகிறதோ அது ஆஹாரக சரீர நாமகர்மம் ஆகும்.

24. தைஜஸ சரீர நாமகர்மம் என்று எதைக் கூறுகின்றனர்?

எது பிரகாசத்திற்கு (காந்தி) காரணமாக இருக்கிறதோ, அது தைஜஸ சரீர நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. அல்லது ஔதாரிக மற்றும் வைக்ரியிக உடலில் பிரகாசம் தோன்றுகிறதோ அது தைஜஸ சரீர நாமகரமம் என அழைக்கப்படுகிறது.

25. கார்மண சரீர நாமகர்மம் என்று எதைக் கூறுகின்றனர்?

வினைகளின் கூட்டத்திற்கான பெயர் கார்மண சரீர நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

26. அங்கோபாங்க நாமகர்மம் என்று எதைக் கூறுகின்றனர்?

எந்த வினையின் உதயத்தில் அங்கோபாங்கங்கள் (தலை, முதுகு, இருதயம், தோள், வயிறு, முழங்கால், கை, கால் ஆகிய எட்டு அங்கங்களும், நெற்றி, மூக்கு முதலான உபாங்கங்களும்) தோன்றுகின்றனவோ, அது அங்கோபாங்க நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

27. நிர்மாண நாமகர்மம் என்று எதைக் கூறுகின்றனர்?

எந்த வினையின் உதயத்தினால் அங்கோபாங்கங்கள் தகுந்த ஸ்தானத்தில் (இடத்தில்) அமைத்தலுக்கும் மற்றும் எந்த அளவிற்கு அவை இருக்க வேண்டுமோ அவ்வாறே தோற்றுவிக்க காரணமாக எந்த கர்மம் இருக்குமோ, அதனை நிர்மாண நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. அது ஸ்தானநிர்மாணம் மற்றும் பிரமாண நிர்மாணம் என இரண்டு வகைகளாக உள்ளன.

28. ஸ்தான நிர்மாண நாமகர்மம் என எதை அழைக்கின்றனர்?

அந்தந்த ஜாதி நாம கர்மத்திற்கு தக்கவாறு கண், மூக்கு, முதலான அவயவங்கள் தகுந்த இடத்தில் அமைவதற்குக் காரணமாக இருக்கின்றதோ, அது ஸ்தான நிர்மாண நாமகர்மம் எனக் கூறுவர்.

29. பிரமாண நிர்மாண நாமகர்மம் என எதை அழைக்கின்றனர்?

அந்தந்த ஜாதி நாம கர்மத்திற்கு தக்கவாறு செவி, கண், மூக்கு முதலான அவயவங்கள் எவ்வளவு அளவிற்கு அமைய வேண்டுமோ அவ்வளவிற்கு அமைய காரணமாக இருக்கும் வினை பிரமாண நிர்மாண நாமகர்மம் எனக் கூறுவர்.

30. பந்தன நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

சரீர நாமகர்மோதயத்தால் கிரகிக்கப்பட்ட புற்கலங்கள் ஒன்றாகச் சேர்தல், எந்த கர்மத்தின் உதயத்தினால் ஏற்படுகின்றதோ, அது பந்தன நாம கர்மம் என அழைக்கப்படுகிறது.

31. ஸங்காத நாமகர்மம் என்று எதைக் கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் ஔதாரிகம் முதலான உடல்களின் இடையில் இடமின்றி (பொத்தலில்லாமல்) புற்கலங்கள் ஒன்றாகச் சேர்தலுக்கு காரணமாக இருக்கிறதோ, அது ஸங்காத நாம கர்மம் என அழைக்கப்படுகிறது.

32. ஸம்ஸ்தான நாமகர்மம் என்று எதை அழைக்கின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் ஔதாரிகம் முதலான உடல்களின் உருவம் ஆக்கப்படுகிறதோ, அது ஸம்ஸ்தான நாமகர்மம் என அழைக்கப் படுகிறது. அதில் ஸமசதுரஸ்ர ஸம்ஸ்தானம் முதலான ஆறு பிரிவுகள் உள்ளன.

33. சமசதுரஸ்ர ஸம்ஸ்தான நாமகர்மம் என எதை அழைக்கின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலின் உருவம், நாபிக்கு மேலேயும் கீழேயும் சமமாக உண்டாவதற்குக் காரணமாக இருக்கும் கர்மத்தினை சமசதுரஸ்ர ஸம்ஸ்தான நாமகர்மம் என அழைப்பர்.

34. நியக்ரோத பரிமண்டல ஸம்ஸ்தான நாம கர்மம் என எதைக் கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உயிரினுடைய உடல் ஆலமரத்தைப்போல நாபிக்கீழே அடிசிறுத்தும் மேலே விரிந்தும். (பருத்தும்) உள்ள உருவம் அமையக்காரணகாரணமான கர்மத்தினை நியக்ரோத பரிமண்டல ஸம்ஸ்தான நாமகர்மம் என அழைப்பவர்.

35. ஸ்வாதி ஸம்ஸ்தான நாம கர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் ஜீவனுடைய உடல் பாம்பு புற்றினைப் போல கீழே பெருத்தும் மேலே சிறுத்தும் காணப்படுகிறதோ அது ஸ்வாதி ஸம்ஸ்தான நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

36. குப்ஜக ஸம்ஸ்தான நாமகர்மம் என எதை அழைக்கின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடல் கூனாக உண்டாக காரணமாக இருக்கிறதோ அதனை குப்ஜக ஸம்ஸ்தான நாம கர்மம் என அழைக்கப் படுகிறது.

37. வாமன ஸம்ஸ்தான நாமகர்மம் என எதை அழைக்கின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடல் குள்ளமாக உண்டாவதற்கு காரணமாக இருக்கிறதோ அதனை வாமன ஸம்ஸ்தான நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

38. ஹுண்டக ஸம்ஸ்தான நாமகர்மம் என எதைக் கூறுகிறோம்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலின் அங்கோபாங்கங்கள் சிறந்த உருவமாக இல்லாமல், கோணல் மாணலாக அதாவது கால்கள் பெரியதாகவும், கைகள் சிறியதாகவும், உடல் பெரியதாயும், தலை சிறியதாயும், பார்ப்பதற்கு இழிவான உருவமுடையதாக உண்டாவதற்கு காரணமாக இருக்கும் கர்மத்தினை ஹுண்டக ஸம்ஸ்தான நாமகர்மம் எனக் கூறப்படுகிறது.

39. ஸம்ஹநன நாமகர்மம் என எதைக் கூறுகிறோம்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் எலும்புகள் ஒன்றாக இணைந்திருக்கிறதோ, அதனை ஸம்ஹநன நாம கர்மம் எனக் கூறுகின்றனர். அது வஜ்ரவிருஷபநாராச ஸம்ஹநனம் முதலியன என ஆறு பிரிவுகள் உள்ளன.

40. வஜ்ரவிருஷப நாராச ஸம்ஹநன நாமகர்மம் என எதனைக் கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் வஜ்ஜிரமான (உறுதியான) எலும்புகளிள் இணைப்பின் இடையில் வட்டமான கீல், பூட்டு போன்று இறுகி பிணைந்திருப்பதை வஜ்ர விருஷப நாராச ஸம்ஹநன நாமகர்மம் எனக் கூறுவர்.

41. வஜ்ர நாராச ஸம்ஹனன நாம கர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் வஜ்ஜிரமான (உறுதியான) எலும்புகளின் இணைப்பின் இடையில் வட்டமின்றி கீல், பூட்டு, மாத்திரம் இருக்கின்றதோ அதனை வஜ்ர நாராச ஸம்ஹநன நாமகர்மம் எனக் கூறுவர்.

42. நாராச ஸம்ஹனன நாம கர்மம் என எதை கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் எலும்புகள், கீல், பூட்டு மாத்திரமே இருந்து கொண்டு பிணைத்திருக்கிறதோ அதனை நாராச ஸம்ஹநனம் என அழைக்கப் படுகிறது.

43. அர்த்த நாராச ஸம்ஹநன நாமகர்மம் என எதை அழைக்கின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் எலும்புகள் கூடுமிடத்தில் அதை கீலுடன் (அதாவது ஒரு பக்கத்தில் கீல் பூட்டு மற்ற எலும்புகளில் கீல் இன்றியும்) இருப்பதற்கு காரணமான கர்மத்தினை அர்த்த நாராச ஸம்ஹநன நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

44. கீலக ஸம்ஹநன நாமகர்மம் என எதைக் கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் எலும்புகள் கீல் பூட்டு இன்றி ஒன்றோடு ஒன்று இணைந்திருப்பதற்குக் காரணமாக கர்மத்தினை கீலிக அல்லது கீலக ஸம்ஹநன நாமகர்மம் என அழைக்கப் படுகிறது.

45. அஸம்ப்ராப்தாஸ்ருபாடிகா ஸம்ஹநன நாமகர்மம் என எதைக் கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் எலும்புகள் தனித்தனியாக ஒவ்வொன்றிற்குமிடையே கீல் பூட்டு இல்லாமல் இருப்பதனை அஸம்பிராப்தாஸ்ருபாடிகா ஸம்ஹநன நாமகர்மம் என அழைக்கப் படுகிறது.

46. ஸ்பர்ச நாமகர்மம் என எதைக் கூறிகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலில் தொடு உணர்வு குணம் உண்டாகிறதோ, அதனை ஸ்பர்ச

நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. அதில் கடோர, நரம (கர்கல, மிருது) என எட்டு பிரிவுகள் உள்ளன.

47. ரஸ நாமகர்மம், என எதைக் கூறுகின்றோம்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலில் சுவை தொடர்பான வித்தியாசம் ஏற்படுகிறதோ அதனை ரஸ நாமகர்மம் எனக் கூறுகின்றனர். இதில் கசப்பு, உறைப்பு முதலான ஐந்து பிரிவுகள் உள்ளன.

48. கந்த நாமகர்மம் என எதைக் கூறுகின்றனர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலில் வாசனை (மணம்) உண்டாவதற்கான கர்மத்தை கந்த நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. இது சுகந்தம், துர்கந்தம் (நறுமணம், துர்நாற்றம்) என இரண்டு பிரிவுகள் உள்ளன.

49. வர்ண நாமகர்மம் என எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தால் உடலில் நிறம் தொடர்பாக பிரிவுகள் அதாவது கறுப்பு முதலான நிறங்களால் பிரித்துக் காண முடிகிறதோ அதனை வர்ண நாமகர்மம் எனக் கூறுவர்.

50. ஆனுபூர்வ்ய நாமகர்மம் என எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் முன்பிருந்த உருவம் அழியாமலிருப்பது அதாவது மரணம் ஏற்பட்ட பிறகு மற்றும் அடுத்த பிறப்பு எடுப்பதற்கு முன் வரை உயர் பிரதேசங்களுடைய உருவம் முன்பிருந்த உருவமாக இருத்தலை ஆனுபூர்வ்ய நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

51. அகுருலகு நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலானது இரும்பு குண்டிற்குச் சமமாக கனமுள்ளதாகிக் கீழ் விழுந்தன்மையினையும், எருக்கம்பஞ்சு போல கனமின்மையுள்ளதாகி மேலுக்கு எழும் தன்மையினை உடையதாய் இருத்தலை அகுருலகு நாமகர்மம் என அழைப்பர்.

52. உபகாத நாமகர்மம் என எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் தானே தன் கழுத்தில் தூக்குப் போட்டுக் கொண்டு இறப்பது முதலிய காரணம் ஏற்படுவதை உபகாத நாமகர்மம் என அழைக்கப் படுகிறது. அல்லது எந்த கர்மத்தின் உதயத்தினால் உயிருக்கு தானே துன்பம் கொடுக்கக் கூடிய அவயவங்கள் உடையதாய் இருத்தலை உபகாத நாமகர்மம் எனக் கூறுவர். உதாரணமாக கணபதி, யானைப் பாதம், மரத்தின் முள், கலைமான் கொம்பு முதலியன.

53. பரகாத நாமகர்மம் என எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் பிற ஆயுதங்களால் (வில், துப்பாக்கி போன்ற) தன் உயிரை மாய்த்துக் கொள்வது பரகாத நாமகர்மம் என அழைக்கப்படுகிறது. மரத்தின் முள், கலைமானின் கொம்பு, தனக்கும், பிறருக்கும் தொந்திரவு கொடுப்பதாகும்.

54. ஆதப நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடல் வெப்ப முள்ளதாய், அமைந்திருக்கிறதோ, அது ஆதப நாமகர்மம் எனக் கூறுவர். அது சூரியபிம்பத்தில் காணலாம்.

55. உத்யோத நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உடலில் பிரகாசம் உண்டாகிறதோ, அது உத்யோத நாமகர்மம் எனக் கூறப்படுகிறது. அது சந்திர பிம்பத்தில் மற்றும் மின்மினிப் பூச்சி முதலியவற்றில் ஏற்படுகிறது.

56. உச்சவாஸ நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினுடைய காரணம் கிடைத்து மூச்சு விடுவது நடைபெறுகிறதோ, அ து உச்சவாஸ நாமகர்மம் எனப்படுகிறது.

57. விஹாயோகதி நாமகர்மம் என எதைக் கூறுவர்?

விஹாயஸ் என்பதின் பொருள் ஆகாசம் ஆகும். அந்த ஆகாயத்தில் நடப்பதற்கான கர்மம் விஹாயோகதி நாமகர்மம் என்று கூறுவர். இதில் பிரசஸ்த (அழகான) மற்றும் அப்ரசஸ்த (அழகற்ற) என இரு பிரிவுகள் உள்ளன.

58. பிரத்யேக சரீர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் நிமித்தத்தினால் ஓர் உடலை ஓர் உயிர் அனுபவிப்பதற்குக் காரணமாக இருப்பதை பிரத்யேக சரீர நாமகர்மம் என அழைக்கப் படுகிறது.

59. ஸாதாரண சரீர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

ஓர் உடலை, பல உயிர்கள் அனுபவிப்பதற்கு காரணமாக இருக்கும் கர்மம் எதுவோ, அது ஸாதாரண சரீர நாமகர்மம் என்று கூறுவர்.

60. திரஸ நாமகர்மம் என்று எதைக் கூறுவர்

எந்த கர்மத்தின் உதயத்தினால் இரண்டு பொறி முதலானவைகளில் பிறப்பதறகுக் காரணமாக இருக்கும் கர்மம் எதுவோ அது திரஸ நாமகர்மம் என்று கூறுவர்.

61. ஸ்தாவர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் நிமித்தத்தினால் ஒரு பொறியினங்களாக உற்பத்தியாகின்றனவோ, அது ஸ்தாவர நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

62. ஸுபக நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் முன்பின் காணாத பிற மக்களைக் கண்டவுடன் அன்பு செலுத்தும் நிலைமை உண்டாகிறதோ, அது ஸுபக நாமகர்மம் என அழைக்கப் படுகிறது.

63. துர்பக நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் ஒருவர் நல்ல அழகு உருவம் முதலிய குணங்களோடு கூடியிருப்பினும் அவர் மீது வெறுப்பு, செலுத்துவதற்கான நிலைமை ஏற்படுகிறதே, அது துர்பக நாமகர்மம் எனக் கூறுவர்.

64. ஸுஸ்வர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் நிமித்தத்தினால் கேட்பவருடைய மனத்தைக் கவரும் இனிமையான குரலின் அமைப்பு ஏற்படுகிறதே, அது ஸுஸ்வர நாமகர்மம் என அழைப்பர்.

65. துஸ்வர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் நிமித்தத்தினால் கேட்பவருடைய மனதிற்கு அருவருப்பைத் தரும் நிலைமை உண்டாகிறதே, அது துஸ்வர நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

66. சுப நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் பார்ப்பதற்கு அழகான உடல் ஏற்படுகிறதே, அது சுப நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

67. அசுப நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் அழகற்ற விகாரமான உடல் ஏற்படுகிறதோ, அது அசுப நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

68. சூக்ஷ்ம நாமகர்மம் என எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் (மிகவும் சூக்க்ஷமமான அல்லது அபகாரம் செய்ய இயலாத) உடல் ஏற்படுகிறதோ, அது சூக்ஷ்ம நாமகர்மம் என அழைக்கப் படுகிறது.

69. பாதர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் பிறரால் தடுக்கப்படவும் பிறரைத்தடுக்கவும் தகுதியான உடல்

உண்டாக்கப் படுகிறதோ, அது பாதர நாமகர்மம் என அழைக்கப் படுகிறது.

70. பர்யாப்தி நாம கர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் ஆஹாரம், உடல், பொறி, சுவாஸோச்வாசம், பாஷை, மனம் என்னும் ஆறு பர்யாப்திகளும் முழுமையடைந்த அமைப்பு ஏற்படுகிறதே, அது பர்யாப்தி நாமகர்மம் என அழைக்கப்படுகிறது.

71. பர்யாப்திகள் எத்தனை உள்ளன? அவை எவை எவை? இலக்கணங்களுடன் கூறுக.?

பர்யாப்திகள் ஆறு வகைப்படும் 1. ஆஹார பர்யாப்தி, 2.சரீர பர்யாப்தி, 3. இந்திரிய பர்யாப்தி, 4. பிராணாபான(சுவாஸோச்வாஸம்) பர்யாப்தி, 5. பாஷா பர்யாப்தி, 6. மன: பர்யாப்தி

1. **ஆஹார பர்யாப்தி:** ஆஹார வர்க்கணைகளின் பரமாணுக்கள் கல அல்லது ரச பாக வடிவாக மாறுவதற்குக் காரணமாக இருக்கும் உயிரின் ஆற்றல் முழுமையடைவதற்கு ஆஹார பர்யாப்தி எனக் கூறுகின்றனர்.
2. **சரீர பர்யாப்தி:** எந்த பரமாணுக்கள் கல வடிவமாக மாறி இருந்ததோ அவற்றினை எலும்பு முதலான கடினமான அவயவங்கள் வடிவிலும், மற்றும் ரச வடிவமாக மாறியிருந்ததோ அவற்றினை குருதி முதலான வடிவில் மாறுவதற்குக் காரணமான உயிரது ஆற்றல் முழுமையடைவதற்கு சரீர பர்யாப்தி எனக் கூறுவர்.
3. **இந்திரிய பர்யாப்தி:** ஆஹார வர்க்கணைகளில் பரமாணுக்களானது பொறி வடிவ உருவமாக மாறுவதில் மேலும் பொறிகள் வழியாக புலனின்ப விஷயங்களை கிரகிக்க கூடிய உயிரது ஆற்றல் முழுமை அடைவதனை இந்திரிய பர்யாப்தி என அழைக்கப்படுகிறது.
4. **சுவாசோஸ்வாஸ பர்யாப்தி :** ஆஹார வர்க்கணையின் பரமாணுக்கள் சுவாஸோச்வாஸ வடிவமாக மாற்றுவதற்கு காரணமாக இருக்கும் உயிரது ஆற்றல் முழுமை அடைவதனை சுவாஸோச்வாஸ பர்யாப்தி என்று கூறுவர்.
5. **பாஷா பர்யாப்தி :** பாஷா வர்க்கணையின் பரமாணுக்களை மொழி (வசன) வடிவமாக மாற்றுவதில் உயிரினது ஆற்றல் முழுமை பெறுவதனை பாஷாபர்யாப்தி என அழைக்கப்படுகிறது.
6. **மன: பர்யாப்தி :** மனோ வர்க்கனையின் பரமாணுக்களை இருதயத்தில் எட்டு இதழ்கள் உடைய தாமரை மலர் வடிவமான மனமாக மாறுவதற்கு அதனின் மூலமாக முன்னிருந்தபடி சிந்தனை செய்வதற்குக் காரணமாக இருக்கும் உயிரது ஆற்றல் முழுமை அடைவதனை மன: பர்யாப்தி எனக் கூறுவர்.

72. இந்த பர்யாப்திகள் எந்தெந்த ஜீவன்களிடம் எத்தனை – எத்தனை ஏற்படுகின்றன?

ஒரு இந்திரிய உயிர்களிடம் பாஷை பர்யாப்தி மற்றும் மன: பர்யாப்தி தவிர எஞ்சிய நான்கு பர்யாப்திகளும் உண்டாகின்றன. இரண்டு, மூன்று, நான்கு மற்றும் மனமில்லா ஐம்பொறிகள் உயிரிடம் மன: பர்யாப்தி தவிர ஐந்து பர்யாப்திகள் உண்டாகின்றன. மனமுடன் கூடிய ஐம்பொறி உயிரிடம் ஆறு பர்யாப்திகளும் ஏற்படுகின்றன.

73. இந்த பர்யாப்திகள் எவ்வளவு காலத்தில் முழுமையடைகிறது?

இந்த எல்லா பர்யாப்திகளும் ஒரு அந்தர் முகூர்த்தத்திற்குள் முழுமையடைகிறது. ஒவ்வொரு பர்யாப்தியின் காலம் கூட ஒரு அந்தர் முகூர்த்தமாகும். மேலும் எல்லாவற்றிற்கும் சேர்ந்தும் கூட ஒரு அந்தர் முகூர்த்தமாகும். முதலாவதிலிருந்து இரண்டாவதிற்கும், இரண்டாவதிலிருந்து மூன்றாவதிற்கும், மூன்றாவதிலிருந்து ஆறாவது பரியாப்திக்கான காலம் வரிசையாக பெரிய – பெரிய அந்தர் முகூர்த்தமாகும்.

74. நிர்வ்ருத்ய பர்யாப்தக ஜீவன் என எதைக் கூறுவர்?

எதுவரை ஒரு ஜீவனின் சரீர ப்ரயாப்தி முழுமையடையாமல் இருக்கிறதோ ஆனால் ஒழுங்கு முறையினால் முழுமையடையக் கூடியதாக இருக்கிறதோ அதுவரை அந்த ஜீவனை நிர்வ்ருத்ய பர்யாப்தக ஜீவன் எனக் கூறுவர்.

75. பர்யாப்தக ஜீவன் என்று எதை கூறுவர்?

எந்த உயிரின் உடல் பர்யாப்தி முழுமையடைந்து விட்டிருக்கிறதோ, அதை பர்யாப்தக ஜீவன் எனக் கூறுவர்.

76. லப்தய பர்யாப்தக ஜீவன் என்று எதைக் கூறுவர்?

எந்த ஜீவனில் ஒரு பர்யாப்தி கூட முழுமையடையாமல் மேலும் சுவாசத்தின் பதினெட்டில் ஒரு பாகத்தில் மரணமடைகிறதோ, அதனை லப்தயபர்யாப்தக ஜீவன் என அழைக்கப்படுகிறது.

77. அபர்யாப்தி நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எது ஆறுவிதமான பர்யாப்திகள் முழுமை அடையாமைக்குக் காரணமாக இருக்கிறதோ, அது அபர்யாப்தி நாமகர்மம் எனக் கூறுப்படுகிறது.

78. ஸ்திர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் உடல் தொடர்பான தாதுக்களும், உபதாதுக்கள் முதலானவை தம்தம் இடத்தில் நிலையாக இருக்கிறதோ, அதனை ஸ்திர நாமகர்மம் எனக் கூறுவர்.

79. அஸ்திர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் உடல் தொடர்பான தாது முதலானவை அதனதன் இடத்தில் இல்லாது இருக்கிறதோ, அது அஸ்திர நாமகர்மம் என்று கூறுவர்.

80. ஆதேய நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் உடலில் காந்தி (பிரபா) தோன்றியிருக்கிறதோ, அதனை ஆதேய நாமகர்மம் என்று கூறுவர்.

81. அனாதேய நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

காந்தி குறைந்திருக்கும் அல்லது இல்லாத உடல் உண்டாவதற்குக் காரணமானது எதுவோ, அது அனாதேய நாமகர்மம் ஆகும்.

82. யஸ:கீர்த்தி நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த கர்மத்தின் உதயத்தினால் உலகத்தில் நல்ல குணங்களின் கியாதி (கீர்த்தி, புகழ்) பரவுமோ, அது யஸ: கீர்த்தி நாமகர்மம் எனக் கூறப்படுகிறது.

83. அயஸ: கீர்த்தி நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

கெட்ட குணங்களும், அபக்கியாதியும் உலகில் பரவுவதற்கு அல்லது யஸ: கீர்த்தி ஏற்படாமைக்கு காரணமான இருக்கும் கர்மம் அயஸ: கீர்த்தி நாமகர்மம் என்று கூறுவர்.

84. தீர்த்தங்கர நாமகர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் கல்யாணங்களின் பூஜைகளுடன் கூடிய அரஹந்த பதவி கிடைக்கிறதோ, அதனை தீர்த்தங்கர நாமகர்மம் என்று கூறுவர்.

85. கோத்திர கர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் நிமித்தத்தினால் உயிரானது உச்ச – நீச்ச (உயர்ந்த – தாழ்ந்த) எனப்படும் கோத்திரத்தில் தோன்றியிருக்கிறதோ, அது கோத்திர கர்மம் என அழைக்கப்படுகிறது. உதாரணமாக குயவன் எவ்விதம் மண்ணைக் கொண்டு அனேக உருவகங்களுடைய சிறிய – பெரிய பானைகள் முதலான பொருள்களைச் செய்கின்றானோ, அது போலவே கோத்திர வினை பிறவி உயிர்களை சிறிய – பெரிய (உச்ச–நீச்ச) குலங்களில் பிறக்கச் செய்கிறது.

86. உச்சகோத்திர கர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் மக்கள் வணங்கத் தக்க குலங்களில் பிறவி எடுக்கக் கூடுமோ, அந்த வினை உச்சகோத்திர கர்மம் எனப்படுகிறது.

87. நீசகோத்திர கர்மம் என்று எதைக் கூறுவர்?

எந்த வினையின் உதயத்தினால் தாழ்ந்த / இழிந்த குலங்களில் பிறக்கக் கூடுமோ, அந்தவினை நீச கோத்திர கர்மம் எனக் கூறப்படுகிறது.

88. அந்தராய கர்மம் என்று எதைக் கூறுவர்?

உயிரின் தானம், லாபம் முதலான செயல்களில் விக்னம் அல்லது தடங்கல் செய்யும் வினை அந்தராய வினை எனக் கூறப்படுகிறது. உதாரணமாக பொக்கிஷதாரர் எவ்விதம் பொக்கிஷத்தில் வாழ்பவர்களை, பண்டாரிதாரர்கள் மனம் விரும்பிய பொருள்களை எடுத்துச் செல்ல தடுத்து நிறுத்துகின்றாரோ, அதேபோல அந்தராய வினை ஜீவன்களை தானம், லாபம், போகம், உபயோகம் மற்றும் ஆற்றல் ஆகியவற்றினை தடங்கல் செய்கின்றது.

89. அந்தராய வினையில் எத்தனை பிரிவுகள் உள்ளன? மற்றும் அவற்றினை சுருக்கமாக கூறவும்.

அந்தராய வினையில் ஐந்து பிரிவுகள் உள்ளன.

1. தானந்தராய கர்மம்	:	இந்த கர்மம் தானம் கொடுப்பதை தடங்கல் செய்கிறது.
2. லாபாந்தராய கர்மம்	:	இந்த கர்மம் பொருள்களைப் பெறுவதில் தடங்கல் செய்கிறது.
3. போகாந்தராய கர்மம்	:	இந்த கர்மம் உணவு முதலான ஒருமுறை அனுபவிக்கும் தகுதியுடைய பொருள்களை அனுபவிக்க தடங்கல் செய்கிறது.
4. உபபோகாந்தராய கர்மம்	:	இந்த கர்மம் நாற்காலி போன்ற மீண்டும் மீண்டும் அனுபவிக்கும் பொருள்களை அனுபவிக்க விடாமல் தடங்கல் செய்கிறது.
5. வீர்யாந்தராய கர்மம்	:	இந்த கர்மம் ஆற்றல் அல்லது உற்சாகத்தினை (ஊக்கமுடமை) தடங்கல் செய்கிறது.

90. ஞானாவரணம் முதலான எட்டு வினைகள் என்ன என்ன காரணங்களால் வருகின்றன? மற்றும் பந்தமாகின்றன?

1. ஞானவரணவினை வருவதற்கும் மற்றும் பந்தமாவதற்குமான காரணங்கள்:–

- மோக்ஷ நெறிக்குக் கருவியான தத்துவ ஞான போற்றுதலை அல்லது அந்த ஞானத்தையுடைய ஞானியரை விளங்க (சோபிக்க) விடாமை.
- ஞானம் அல்லது மோக்ஷ நெறி (ரத்ன த்ரய நெறி) பெயரை மறைத்தல்.
- தத்துவ ஞானியாக இருந்தும் அந்த தத்துவ ஞானத்தை தக்காருக்கு ஏதேனும் சுயநலம் காரணமாக சொல்லாமல் இருத்தல்.
- ஞானம் மற்றும் ஞான சாதனங்களுக்கு இடையூறு செய்தல்.
- ஞான க்ஷேத்திரத்தில் பிறருடைய ஞானச் சிறப்பைப் பொருக்காமையால் உடல் அல்லது சொல்லால் அந்த உண்மையான ஞானப் புகழைத் தடுத்தல்.
- உண்மையான ஞானத்தைக் குறை சொல்லுதல்.
- ஆகமங்களை விற்றுத் தன் வாழ்க்கையை நடத்துதல்.
- ஆகமம் மற்றும் ஆகமம் உரைப்போரை அலட்சியப் படுத்துதல்.
- மித்யா நூல்களைப் படித்தல், படிப்பித்தல் முதலாயின.

2. தரிசனாவரண வினை வருவதற்கும் மற்றும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள்:

- உண்மையான (வீதராகி) தேவ நூல் குருவின் புகழை விளங்க (சோபிக்க) விடாமை.
- உண்மை காட்சி நெறி காட்டுபவர் பெயரை மறைத்தல்.
- காட்சி எளிதாக இருந்தாலும் அதனைப் பெறத் தகுதியுடையவர்களுக்கு ஏதேனும் சுய நலம் காரணமாகத் தரச் செய்யாமல் இருத்தல்.
- உண்மையான காட்சி அல்லது சாதனங்களுக்கு இடையூறு செய்தல்.
- உண்மையான காட்சி எளிதாக இருப்பவருக்கு அந்தக் காட்சியைச் சோபிக்க விடாமல் உடல் மற்றும் மொழியால் அந்த நல்ல காட்சிக்கு குற்றம் கூறுதல்.
- உண்மையான வீதராக வடிவ காட்சி சாதனங்கள் அதாவது ஜிந பிம்பம் முதலான வியாபாரம் செய்து வாழ்க்கை நடத்துதல்.
- வீதராக தரிசனம் மற்றும் அதன் உபதேசத்தை அலட்சியப்படுத்துதல்.
- வீதராகம் தவிர சராகத்திற்கு பூஜை வந்தனை முதலியன செய்தல்.
- அதிக நேரம் தூங்குதல்.
- மித்யா தீர்த்தங்களைப் புகழ்தல்.
- உண்மையான துறவியரிடம் அருவருப்பு கொள்ளுதல்
- பார்த்தலுக்கு துணைசெய்யும் கண் முதலானவற்றுக்கு இடையூறு செய்தல்.

3. வேதனீய வினை வருவதற்கும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள் :–

I அசாதாவேதனீயம் தொடர்பானவை.

துக்க பரிணாமம் கொள்ளுதல். சோகம் (விரும்பிய பொருள் விலகுவதால்) கொள்ளுதல். தாபம் (பழி முதலானவற்றில் மனத்தில் மிகு துன்பம்) கொள்ளுதல். வாய் விட்டு அழுதல் உயிர்களை வதைத்தல். குணத்தைப் போற்றும் போது கவலை வந்து அழுதல். மேலே கூறியவற்றால் பிறரையும் துக்கப் படச் செய்தல். நம்பிக்கை தவறுதல். விரதங்களுக்கு பங்கம் செய்தல்.

II சாதா வேதனீயம் தொடர்பானவை :

அனுகம்பை, விரதி சேவை, சத்பாத்ரதானம், முனிவிரதம் காத்தல், அணுவிரதம் காத்தல், க்ஷமாபாவனை, லோபம் இல்லாமை, ஜிநேந்திர பகவான் பூஜை, தவத்தருக்கு வைய விருத்யம், பணிவு குணம், சுகம் தரும் நல்மொழி கூறல் முதலானவை.

4. மோகனீய வினை வருவதற்கும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள் :

I தர்சன மோகனீயம் தொடர்பானவை :

- கேவலி உணவு உண்ணுகிறார் முதலான கூறி கேவலிக்கு குறை சொல்லுதல்.
- புலால் உண்ணுதல் முதாலனவற்றை நூல்கள் குறை சொல்லவில்லை எனக் கூறி ஆகமத்தைக் குறை சொல்லுதல்.
- சாது சுத்தம் இல்லாதவர் எனக் கூறி உண்மையான திகம்பர ஜைன சாதுவைக் குறை கூறுதல். ஜிநதருமத்தில் சாரமில்லை, அதனைப் போற்றுவதால் துர்கதி கிடைக்கும் இது போன்றன கூறி தருமத்தைக் குறை கூறல். தேவ கதி தேவர்கள் கள் குடிக்கின்றனர். புலால் உண்கின்றனர் முதலாயின கூறி தேவர்களைப் பழித்தல். உண்மை இல்லாத அல்லது பொய்யொழுக்க நெறியை மோக்ஷ நெறி என்று சொல்லுதல்.

I சாரித்ர மோகனீய வினை தொடர்பானவை.

குரோதம் முதலான தீவிர கசாயம் காட்டுதல், உண்மையான துறவியரை நிந்தித்தல், ஜின தருமத்துக்குப் புறம்பான (வேறுபட்ட அல்லது விபரீதமான) தோற்றம் ஏற்றல், சத்ய

தருமத்தைக் கேலி பேசுதல், ஆசையைத் தூண்டும் சேஷ்டைகளைச் செய்தல், விரதம் மற்றும் ஒழுக்கத்தில் சுவை இல்லாமை, பாபிகளோடு சேர்ந்து இருத்தல், பிறருடைய சுக சாதனங்களை அழித்தல், எப்போதும் சோகமாக இருத்தல், துன்பத்தால் அஞ்சி கிடத்தல், சுகம் தரும் தரும ஒழுக்கத்தில் அருவருப்பு கொள்ளுதல், பழி கூறுவதில் சுவை காட்டுதல், பொய் சொல்லும் பழக்கம், பிறர் குறையைக் கூறும் பழக்கம், பெண்களிடம் ஆசை முதலாயின கொள்ளும் பாவனை கொள்ளுதல், பிற பெண்டிரை நாடுதல், பலாத்காரம் செய்தல், மறைந்துள்ள உறுப்புகளைச் சேதித்தல் முதலாயின.

5. ஆயுள்வினை வருவதற்கும் மற்றும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள் :–

I நரகாயுள் தொடர்பானவை :

அதிக ஆரம்பம் (இம்சை செயல்) செய்தல், அதிக பரிக்கிரகங்களைச் சேர்த்தல், பிறருக்குத் துக்கம் தரும் கொடுமை செய்தல், அதிக ஆசையோடு புலனின்பத்தில் ஈடுபடுதல், உண்மையான துறவியருக்கு அவிநயம் காட்டுதல், முனிகளுக்கு உபசர்கம் செய்தல், அறநிலையங்களை அழித்தல், அதிக அசுப கிருஷ்ண லேஸ்யா பரிணாமம் கொள்ளுதல், ரௌத்திர தியானத்தில் இருத்தல் முதலாயின.

II விலங்கு ஆயுள் தொடர்பானவை :

மாயாசாரம் செய்தல், தர்ம உபதேசத்தில் மித்யாத்வ கருத்தைக் கலத்தல், மித்யாத்வத்தைப் பிரசாரம் செய்தல், போலிப் பொருளை உண்மைப் பொருள் என்று கூறி தருதல், நல் நடத்தை இல்லாமல் வாழ்தல், கபடம் வஞ்சத்தால் நம்பிக்கையைத் கெடுத்தல், இறக்கும் போது ஆர்த்த தியான பரிணாமம் கொள்ளுதல் முதலாயின.

III மனித ஆயுள் தொடர்பானவை :

குறைந்த ஆரம்பம் செய்தல், அகிம்சையில் நல்ல ஈடுபாடு கொள்ளுதல், குறைந்த பற்று வைத்திருத்தல், இயல்பாக பணிவோடு இருத்தல், எளிமையாக இருத்தல், சரளமாக பழகுதல், கசாயம் குறைந்து இருத்தல், வீதராகியின் பூஜகனாக, சேவகனாக இருத்தல், சத்பாத்திரங்களுக்கு தானம் செய்தல், மரண காலத்தில் சங்கிலேச பரிணாமம் இல்லாது இருத்தல் முதலாயின.

IV தேவாயுள் தொடர்பானவை :

புலனடக்கத்தோடு இருத்தல், மகாவிரதங்களை ஏற்று நடத்தல், அணு விரதங்களை ஏற்று இருத்தல், பொறுமையாக இருத்தல், தபத்தை ஏற்று இருத்தல், நற்காட்சியை ஏற்று இருத்தல், உண்மையான தருமத்தின் உபாசகனாக இருத்தல், சுபாத்திரத்துக்கு பக்தியுடன் தானம் தருதல், அறநிலையங்கைளப் போற்றுதல் முதலாயின.

சிறப்பு குறிப்பு : (அ) நற்காட்சியுடன் கூடிய மகாவிரதம் நேரான மோக்ஷத்திற்கக் காரணம். ஆனால், அம் மகா விரதத்தோடு தக்க திரவியம், க்ஷேத்திரம் முதலாயின இல்லாதபோது அம்மகாவிரதி சொர்கம் பெற்று பரம்பரையில் மோக்ஷம் அடைய காரணமாகிறது. (ஆ) நற்காட்சியுடைய மனிதருக்கு அகமிந்திர அல்லது சௌதர்ம இந்திர முதலான தேவ ஆயு கட்டுகிறது. அந்த நற்காட்சி காலத்தில் வைமாணிகதேவி அல்லது கீழ் முத்தேவர் (பவண, வியந்தர, சோதிடர்) ஆயுள் கட்டுவதில்லை.

6. நாம வினை வருவதற்கும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள்

I அசுப நாம வினை தொடர்பானவை :

மன வசன காயம் கோணலாதல் (கபடம், விபரீதம்), நற்காட்சி முதலான வடிவுடைய மோக்ஷ நெறியில் செல்வாரை அவ்வாறு செல்லாமல் தடை செய்தல், கோள் சொல்லுதல்,

மித்யாத்வத்திற்கு சேவை செய்தல், பிறரை நிந்திப்பதில் ஈடுபாடு, மனம் சஞ்சலம் கொள்ளுதல், பிறவற்றின் உறுப்புகளைச் சிதைத்தல், அளத்தல், நிறுத்தல்களில் (எடைகளில்) ஏமாற்றுதல், சோபை இல்லாத அல்லது அச்சம் தரக் கூடிய வடிவங்களை உருவாக்குதல் முதலாயின.

II சுப நாம வினை தொடர்பானவை :

மன வசன காயங்கள் சரளமாக வைத்தல், மோக்ஷ நெறியில் ஈடுபாடு கொள்ளுதல், நற் காட்சியை ஏற்றல், பிறர் நிந்தனையில் ஈடுபாடு இல்லாமை, கோள் சொல்லாது இருத்தல், மனம் உறுதியாக இருத்தல், ஸத் பாவனை வைத்தல், பிறவிக்கு ஏதுவான ஐந்து பாபங்களுக்கு அஞ்சுதல், சோம்பலை விடுதல், விவாதங்களை விடுதல் முதலாயின.

சுப நாம வினையைச் சேர்ந்த தீர்த்தங்கரர் பிரகிருதி தொடர்பானவை :

நற்காட்சியில் விசுத்தி, விநய ஸம்பன்னதை, சீல விரதங்களை அதிசாரம் இல்லாமல் போற்றுதல், ஞானத்தில் எப்போதும் திளைத்தல், எப்போதும் பாபத்துக்கு அஞ்சுதல், ஆற்றலுக்கு ஏற்ப தியாகம், ஆற்றலுக்கு ஏற்ப தபம், சாது சமாதி, வையாவிருத்தி, அரஹந்த பக்தி, ஆசாரிய பக்தி, பகுசுருத பக்தி, பிரவசன பக்தி, நாள் கடமை அதாவது அற நிகழ்வுகளில் எப்போதும் இருத்தல், தர்ம நெறியை விளங்குதல், அறத்தோரிடம் வாத்சல்யம்.

7. கோத்திர வினை வருவதற்கும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள் :

I நீச கோத்திரம் தொடர்பானவை :

பிறருடைய உண்மை அல்லது பொய் குற்றங்களை வெளிப்படுத்துதல் அதாவது நிந்தித்தல், தன் குணங்களை வெளிப்படுத்துதல், அதாவது தன்னைப் புகழ்ந்து பேசுதல், பிறருடைய நல்ல குணங்களை மறைத்தல், பிறருடைய தீய குணங்களை வெளிப்படுத்தல், அறத்தில் உள்ளாரை சபையில் அல்லது சமூகத்தில் தாழ்த்திக் காட்டும் பாவனை வைத்தல் முதலாயின.

II உச்ச கோத்திரம் தொடர்பானவை :

நீங்கள் சிறந்தவர் என உடன் இருப்போரைப் புகழ்தல், என்னிடம் ஏதும் இல்லை (நல்குணம் தொடர்பானவை) போன்ற வசனங்களால் ஆன்மாவை நிந்தித்தல், பிறருடைய நல்குணங்களை வெளிப்படுத்துதல், பிறருடைய தீய குணங்களை மறைத்தல், தன்னினும் குணங்களில் உயர்ந்தாரிடம் பணிவுடைமை (எழுதல், வணங்குதல் முதலாயின) , ஞானம் முதலான செருக்கு கொள்ளாமை, அறத்தாரை சமூகத்தில் உயர்த்திக் காட்டும் பாவனை வைத்தல் முதலாயின.

8. அந்தராய வினை வருவதற்கும் பந்தமாவதற்கும் முதன்மையான காரணங்கள் :

பிறருடைய தானச் செயல்களில் தடை ஏற்படுத்துதல், பிறருடைய லாபத்தில் தடை ஏற்படுத்துதல், பிறருடைய போகத்தில் (ஒரு முறை துய்ப்பன) தடை ஏற்படுத்துதல், பிறருடைய உபபோகத்தில் (மீண்டும் மீண்டும் துய்ப்பன) தடை ஏற்படுத்துதல், பிறருடைய ஆற்றலில் தடை ஏற்படுத்துதல் அதாவது அஞ்சச் செய்தல் அல்லது அழித்தல், பிறர் நல்ல செயல் செய்யும் போது தடை செய்தல், நல்ல செயல் செய்வோரை கட்டுப்பாட்டில் வைத்தல், ஜினேந்திர பூஜை முதலானவற்றில் தடை ஏற்படுத்துதல், மோக்ஷ நெறி சாதனங்களுக்கு இடையூறு செய்தல், பூஜையில் அர்ப்பணித்த பொருளை (நிர்மால்யத்தை) மீண்டும் பயன் கொள்ளல் முதலானவை. வேதனீயம், ஆயுள், நாமம் மற்றும் அந்தராயம் இந்த நான்கு கர்மங்களும் அகாதி கர்மங்கள் என்றும் ஞானாவர்ணம், தர்சனாவரணம், மோயனீயம்,

அந்தராயம் இந்த நான்கு கர்மங்களும் காதிகர்மங்கள் என்றும் சொல்லப்படுகின்றன.

91. கர்மங்களின் பத்து கரணங்கள் வடிவ நிலைமைகள் எவை எவை? மற்றும் அவற்றின் இலக்கணங்களைக் கூறுக.

கர்மங்களின் பத்து கரண நிலைகளாவன:

1. பந்தம், 2. உத்கர்ஷணம், 3. ஸங்க்ரமணம், 4. அபகர்ஷணம், 5. உதீரணை, 6. ஸத்வம், 7.உதயம், 8. உபசமம், 9. நிதத்தி மற்றும் 10. நிகாசனம் என்ற விதங்களினால் வினைகள் பத்து வடிவங்களாக உள்ளன.

1. பந்தம் :– உயிருடன் வினைகளின் தொடர்பு ஏற்படுவது பந்தமாகும்.
2. உத்கர்ஷணம் : வினைகளின் ஸ்திதி மற்றும் அனுபாகங்கள் வளர்ச்சியடைவது உத்கர்ஷணமாகும்.
3. ஸங்க்ரமணம் : கர்ம பந்த பிரக்ருதியானது வேறொரு பிரக்ருதியாக மாறுவது ஸங்க்ரமணமாகும்.
4. அபர்கர்ஷணம் : கர்மங்களின் ஸ்திதி மற்றும் அனுபாகங்கள் குறைவது அபகர்ஷணமாகும்.
5. உதீரணை : உதயாவளிக்கு வெளியே உள்ள கர்மத்தினை அபகர்ஷணத்தின் பலத்தினால் உதயாவலி காலத்தில் கொண்டு வருவது உதீரணண ஆகும்.
6. ஸத்வம் : பந்தமாகி இருக்கும் கர்மம் புற்கலத்தினுடைய கர்ம வடிவமாக இருப்பது ஸத்வம் ஆகும்.
7. உதயம் : கர்ம பிரதேசங்களுடைய அதனதன் சமயத்தை அடைந்த பிறகு பலனைத் தருவது உதயமாகும்.
8. உபசமம் : குறிப்பிட்ட சமயம் வரை கர்மத்தினுடைய உதயாவலியில் அடையாமல் இருப்பது உபசமமாகும்.
9. நிதத்தி : கர்மங்களுடைய உதயம், உதீரணை மற்றும் ஸங்க்ரமணம் ஆகிய இந்த நிலைகளை அடையாதிருத்தல் நிதத்தி ஆகும்.
10. நிகாசிதம் : எந்த கர்மத்தின் உதீரணை, உத்கர்ஷணம், அபகர்ஷணம் மற்றும் ஸங்க்ரமணம் ஆகிய நான்கு நிலைமைகளுமே ஏற்பட முடியாதோ அதனை நிகாசிதம் எனக் கூறப்படுகிறது.

❁❁❁❁❁❁❁❁

முக்தாகிரி பார்ஸ்வநாதர் ஆலயம்

அதிகாரம்–18
குணஸ்தான வருணனை

குணஸ்தானம் நம் உணர்வின் (பரிணாமத்தின்) அளவு கோலாக உள்ளது. குணஸ்தானத்தில் துவர்ப்பசைகள் (கஷாயம்) மற்றும் செயல்களின் (யோகம்) இருப்பு அறிந்து கொள்ளப்படுகிறது. நாம் ஏணியில் ஏறுவதற்கும், குணஸ்தானத்தில் உயர்வதற்கும் வித்தியாசம் உள்ளது. ஏணியில் ஏறும்போது ஒவ்வொரு படியாக நாம் மேலே செல்கிறோம். குணஸ்தானம் என்கிற ஏணியில் ஏறும் போது அதாவது ஒரு பவ்வியன் மித்யாதிருஷ்டி நிலையிலிருந்து சம்யக்திருஷ்டி நிலை அடையும்போது முதல் நிலையிலிருந்து நேராக 4 ஆம் நிலைக்கு முதலில் செல்கிறான். அந்த நிலையில் இருந்து தாழும் போது 3வது, 2வது நிலைகளை வரிசையாக அடைகிறான். மித்யாத்வம் என்பது முதல்நிலை. ஓர் உயிர் மித்யாத்வத்தில் இருந்து சம்யக்த்வம் அடையும் போது 4ஆம் நிலையான சம்யக்திருஷ்டி குணஸ்தானத்தை நேரடியாக அடைகிறது. இதுபோல சம்யக்திருஷ்டிநிலையில் இருப்பவர் முனிநிலை அடையும் போது 4ஆம் நிலையில் இருந்து 7 ஆம் நிலையை நேரடியாக அடைகிறார். தியான நிலையிலிருந்து உணவு ஏற்றல், மற்ற உபகரணங்களை (பிச்சு, கமண்டலம் முதலியன) உபயோகிக்கும் போது 6வது குணஸ்தானத்துக்கு தாழ்ந்து விடுகிறார். ஊஞ்சலில் ஆடுவது போல முனிவர் 7–ல் இருந்து 6க்கும், 6லிருந்து 7க்கும் ஒரே நாளில் பலமுறை சென்று வருகின்றனர். இதுபோல் உபசமஸ்ரேணி ஏறும் முனிவர், 8,9,10,11 குண நிலையைஅடைந்து கீழே வரும் போது 7வது அல்லது 6வது குணநிலை வரை வருகிறார். இது போல் முனிவர் தன் வாழ்நாளில் ஒரு முறை உபசம ஸ்ரேணி ஏறமுடியும். ஆனால் அந்த முனிவர் க்ஷபகஸ்ரேணி ஏறுபவரானால் 8,9,10,12 என்ற படிகளில் அந்தர் முகூர்த்த நேரத்தில் உயர்ந்து காதிவினைகளை அழித்து கேவல ஞானம் அடையும்போது 13ஆம் நிலைக்கு செல்கிறார். அவர் 11வது படி செல்வதில்லை. பின்னர் அவர் கீழ் நிலைக்கு இறங்குவதுமில்லை. ஆயுள் கர்மம் முடியும் தருவாயில் யோகத்தடை முதலியவற்றின் மூலமாக 14–ஆம் குண நிலையை அடைந்து மீதமுள்ள அகாதி கர்மங்களையும் கெடுத்து அந்தர் முகூர்த்த நேரத்தில் முக்தி பதத்தையும் அடைந்துவிடுகிறார். இவ்வாறு ஒவ்வொரு குணஸ்தானத்தின் லக்ஷணங்களையும் குணஸ்தானங்களில் ஏறுதல் இறங்குதல் விதிமுறைகளையும் மற்றும் ஏற்ற இறக்கங்களின் பெருமைகளையும் தெளிவுப்படுத்திக் கொள்ள குணஸ்தான வருணனை என்ற இந்த அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

1. குணஸ்தானம் என்று எதனைச் சொல்லுவர்?

மோகம் மற்றும் மன வசன காயச்செயல்களால் உயிரின் அந்தரங்க பரிணாமத்தில் சமயம் தோறும் உண்டாகும் ஏற்றத் தாழ்வுகளின் பெயர் குணஸ்தானமாகும்.

சிறப்புக்குறிப்பு : உயிரின் பரிணாமம் அனந்த மாகும். அவற்றைச் சொல்லால் விளக்க முடியாது. அதனால் உயிரின் மிகுதியான மலின பரிணாமத்திலிருந்து உயர்ந்த விசுத்தி பரிணாமம் வரை, மேலும் அதற்கு மேலே குறைந்த வீதராக பரிணாமத்திலிருந்து உயர்ந்த வீதராக பரிணாமம் வரையான அனந்த வளர்ச்சியினை முறையாக சுருங்கிய வடிவில் சொல்லத்தக்க அளவில் அமைய அவை பதினான்கு படிநிலைகளில் பகுக்கப்பட்டுள்ளன. அந்தப் படி நிலைகளே 14 குணஸ்தானப் பெயரைப் பெறுகின்றன. உயிர் தன் உள் முயற்சியால் தன் விசுத்தி பரிணாமங்களை வளர்க்கும் போது அது வினையை உபசமம், க்ஷயோபசமம், க்ஷயம் செய்கிறது. கடைசியில் எல்லா வினைகளையும் கெடுக்கும் போது அது மோக்ஷத்தை அடைகிறது.

2. குணஸ்தானப் பெயர்களைக் கூறி அவற்றின் பொருளைச் சுருக்கமாக் கூறுக.

பதினான்கு குணஸ்தானங்களின் பெயர்கள்.

1. மித்யாத்ருஷ்டி 2. ஸாஸாதன ஸம்யக்த்ருஷ்டி 3. ஸமயக் மித்யாத்ருஷ்டி 4. அஸம்யத ஸம்யக் த்ருஷ்டி (அல்லது அவிரத ஸம்யக்த்ருஷ்டி) 5. ஸம்யதா ஸம்யத (அல்லது தேச விரதி) 6. பிரமத்த ஸய்யத (அல்லது பிரமத்த விரத) 7. அப்ரமத்த ஸய்யத 8. அபூர்வ கரண 9. அனுவ்ருத்தி கரண 10. சூக்ஷ்ம ஸாம்பராய 11. உபசாந்த கஷாய 12. க்ஷீனகஷாய 13. ஸயோக கேவலி 14.அயோக கேவலி என்பனவாகும்.

பதினான்கு குணஸ்தானங்களின் சுருக்கிய விளக்கம்:–

2.1. மித்யாத்ருஷ்டி குணஸ்தானம்:–

வீதராக சர்வக்ஞர் அருளிய ஆறு பொருள், ஐந்து அத்திகாயம், ஏழு தத்துவம், ஒன்பது பதார்த்தம் இவற்றை மூன்று மூடம் முதலான 25 குற்றங்கள் இன்றி நம்பிக்கை வைக்காதவர், காய்சல் வந்தவனுக்கு இனிப்பும் கசப்பாக இருப்பது போல வீதராக தேவ சாஸ்த்ர குரு அவருக்கு ருசிப்பது இல்லை, பெரும் மோகத்தோடு எப்போதும் போக வாஞ்சனையால் விருப்புடைய பரிக்கிரஹ தேவ, குரு முதலானவற்றிக்கு உபாசனையில் ஈடுபட்டு இருப்பர், விபரீத, ஏகாந்த, விநய, ஸம்சய மற்றும் அஞ்ஞானம் என பஞ்ச மித்யாத்வத்தில் ஈடுபட்ட மதியுடையவர் இவர்களையே மித்யாருஷ்டி என்பர். அந்த மித்யாத்வ பரிணாமமுடைய உயிர் மித்யாத்ருஷ்டி குணஸ்தானம் என்று கூறப்படுகிறது.

2.2 ஸாஸாதன குணஸ்தானம்:

ஸம்யக்த்வ ரத்ன மலை சிகரத்தில் இருந்து விழுந்து மித்யாத்வ பூமி நோக்கி வரும் போது ஸம்யக்தவத்தை இழக்கிறது உயிர். அந்த உயிரை ஸாஸாதன் அல்லது ஸாஸாதன ஸம்யக் த்ருஷ்டி என்று அறிதல் வேண்டும். ஸா + ஆஸாதன் – அதாவது உண்மையான நோக்கு அல்லது நற்காட்சியின் நீக்கத்தோடு கூடியது. அவன் ஸாஸாதன ஸம்யக் த்ருஷ்டி எனப்படுகிறான். மாடியிலிருந்து கீழே விழுபவன் பூமியில் இன்னும் விழவில்லை; ஆனால் நிச்சயம் விழுவான். கீழே வரும் மனிதன் இடையில் இருப்பது போல ஸம்யக்த்வ மாடியிலிருந்து விழுந்து மித்யாத்வ பூமி நோக்கி வரும்போது மித்யாத்வ பூமியைத் தொடாத இடைப்பட்ட நிலையில் மித்யாத்வத்தின் முன் உள்ள நிலையின் பெயர் ஸாஸாதன குணஸ்தானம் ஆகும்.

2.3. ஸம்யக் மித்யாத்வ குணஸ்தானம்:

ஸம்யக்த்வமும் மித்யாத்வமும் கூடிய கலப்பு பாவனை இருத்தல் ஸம்யக் மித்யாத்வ குண

ஸ்தானம் ஆகும். வெல்லமும் தயிரும் கலந்த கூட்டுச் சுவை போல ஆன்மா எப்போது வீதராகி தேவ சாஸ்த்ர குருவுக்கு பூஜை செய்வதுடன் மித்யாத்வ வடிவ தத்துவமல்லாதவற்றில் நம்பிக்கை அல்லது சராகி தேவ குரு முதலானவருக்கு பூஜை முதலான செய்யும் கூட்டு நம்பிக்கை அல்லது இருவருக்கும் பூஜை செய்வதால் புண்ணியம் உண்டாகும் என நம்பிக்கை உண்டாதல் ஸம்யக் மித்யாத்வ அல்லது கலப்புடைய (மிஸ்ர) குணஸ்தாணம் எனப்படுகிறது. இந்த குணஸ்தான காலம் மிகக்குறைவு. அதனால் இந்த குணஸ்தான உயிர் குதத்துவ அல்லது சராகி தேவர் முதலான நம்பிக்கையை விட்டுவிட்டு விசுத்தியில் வளருமானால் ஸம்யக் திருஷ்டி ஆகமுடியும் அல்லது குதத்துவம் முதலானவற்றில் நம்பிக்கையில் ஆழுமானால் மித்யாத்ருஷ்டி ஆகிவிடும்.

2.4. அஸம்யத(அவிரத) ஸம்யக் த்ருஷ்டி குணஸ்தானம்:

யாருடைய நோக்கு – நம்பிக்கை உண்மையோ அவரை ஸம்யக் த்ருஷ்டி என்பர். பஞ்ச இந்திரிய விஷயம், மற்றும் திரச, ஸ்தாவர வதை இவற்றிலிருந்து விரக்தி அடையாத போது அஸம்யதம் அல்லது அவிரதம் எனப்படுகிறது. அப்படிப்பட்ட ஸம்யக் த்ருஷ்டியினர் மூவகையினர் 1. க்ஷாயிக ஸம்யக் த்ருஷ்டி 2. வேதக அல்லது க்ஷயோபஸமிக் ஸம்யக் த்ருஷ்டி 3. ஔபசமிக் ஸம்யக் த்ருஷ்டி

ஸம்யக் த்ருஷ்டி ஜீவன் இந்திரிய விஷயம், ஷட்ஜீவ நிகாய இம்சை விரக்தி அடையவில்லை என்றாலும் முற்றுமாக அவிரதி என்று ஆவதில்லை. குல ஒழுக்கமாக (ஜைன குல ஆசாரம்) ஏழு வியசனம், இரவு உண்ணுதல், வடியாத நீர் குடித்தல் இவற்றை நீக்கி விரதம் உடையவராக அவசியம் இருப்பர். சராகமுடைய தேவகதி தேவதேவியர், பரிக்கிரஹ குரு முதலானவரை உபாசிக்க மாட்டார்கள். அந்த ஸம்யக் த்ருஷ்டி வீதராகி தேவ சாஸ்தர குரு அல்லது ஏழு தத்துவங்களில் நம்பிக்கையுடன் அவா இன்மை முதலான எட்டு உறுப்பு, பிரசமம், ஸம்வேகம், அனுகம்பை, ஆஸ்திகயம் முதலான குணங்களைப் பெற்றிருப்பர். மகன், மனைவி,வைபவம் முதலான காரணமாக செருக்கு கொள்ளுவதில்லை. அந்த ஸம்யக் த்ருஷ்டி தன்னை துரும்பாக நினைத்துக் கொள்வர். அவர் உத்தம குணங்களை ஏற்பதில் ஆர்வம் வைப்பர்; உத்தம சாதுக்களிடம் பணிவு கொள்ளுவர். பிறவி உடல் போகம் பற்றி ஹேய (விடும்) புத்தி வைப்பர். மோக்ஷத்தை வேண்டும் அவர் அஸம்யத ஸம்யக்த்ருஷ்டி குணஸ்தானம் உடையவர் எனப்படுகிறார்.

5.5 ஸம்யதாஸம்யத குணஸ்தானம்:

வீதராகி பஞ்ச பரமேட்டியை மட்டும் நம்புதல், திரச ஜீவ வதையை நீக்குதல், இந்திரிய விஷயம், தாவர ஜீவ வதை இவற்றில் விரக்தி இல்லாமல் இருத்தலை உடைய அந்த ஜீவன் விரதாவிரத அல்லது ஸம்யதாஸம்யதர் எனப்படுகிறது. அந்த ஸம்யதாஸம்யத ஜீவன் ஐந்து அணுவிரதத்தோடு (மூன்று) குணவிரதம் (நான்கு) சிக்ஷா விரதம் கூடிய ஏழு சீலங்களுடன் இருக்கும். அது அஸம்யத குண சிரோணி வடிவ கர்ம நிர்ஜரைக்கு பாத்திரம் ஆகிறது.

2.6. பிரமத்தஸம்யத குணஸ்தானம்:

பிராணி ஸம்யமம், இந்திரிய ஸம்யமத்தோடு கூடி, எல்லா ஸம்யமத்துடன் (அடக்கத்துடன்) ஐந்து மகாவிரதம் முதலான 28 மூலகுணம் மற்றும் சீலம் அதாவது 12 தபம் முதலான உத்தர குணங்களோடு கூடியும் அகப் புற பிரமாதத்துடன் இருப்பவர் பிரமத்த ஸம்யதர் எனப்படுகிறார்.

2.7. அபிரமத்தஸம்யத குணஸ்தானம்:

அகப்புற பிரமாதம் இன்றி, எல்லா அடக்கத்துடன் மூல உத்தர குணங்களை உடைய,

ஞானம் உடைய சுப தியானத்தில் எப்போதும் ஈடுபட்டடுள்ளவர் அபிரமத்தஸம்யதர் எனப்படுகிறார்.

இந்த ஏழாம் குணஸ்தானத்தில் இரண்டு பிரிவு உள்ளது. ஒன்று ஸ்வஸ்தான அபிரமத்தர், இரண்டு சாஅதிசய அபிரமத்தர். முன்னதில் உள்ள முனிவர் ஏதேனும் ஈடுபட்டு இருந்தாலும் அல்லது ஈடு படாமல் தியானத்தில் இருந்தாலும் அவருடைய குண ஸ்தானம் ஸ்வஸ்தான அபிரமத்த குண ஸ்தானமாகும். எட்டாவது அபூர்வகரண குணஸ்தானம் அடைய முயலும் முனிவர் சாதிசய அபிரமத்தர் எனும் பெயருடைய ஏழாம் குணஸ்தானத்தில் விளங்குகிறார் என்பதாம்.

அபூர்வ காரணம் எனும் எட்டாவது குணஸ்தானம் தொடங்கி இரண்டு சிரேணி (படி நிலை) அமைகிறது. ஒன்று உபஸம சிரேணி மற்றொன்று க்ஷபக சிரேணி.

இரண்டு சிரேணி

1.உபஸம சிரேணி

உபஸம சிரேணியில் நான்கு குணஸ்தானங்கள் அமைகின்றன. – அபூர்வ கரணம், அனிவ்ருத்தி கரணம், சூக்ஷ்ம ஸாம்பராயம், உபசாந்த மோஹம் என. மோகனீய வினையை உபஸமம் செய்து ஆன்மா மேலே உயர்தல் உபஸம சிரேணி ஆகும். கலங்கிய நீரில் படிகாரம் போட்டால் அழுக்கு கீழே படிவது போல உபஸம சிரேணி ஏறும் ஆன்மா தன் முயற்சியால் மோகனீய வினை அல்லது கசாயத்தை கீழே தணியச் செய்கிறது – உபசாந்தம் செய்கிறது. நீரை அசைத்தால் அழுக்கு மேலேவருதல் போலே அந்தர் முகூர்த்தத்துக்குள் ஆன்மா முயற்சி தளர்வதால் மோகனீய வினையின் காரணத்தால் ஆன்மா நியமமாக கீழ் குண ஸ்தானத்துக்கு வருகிறது.

2. க்ஷபக சிரேணி:

க்ஷபக சிரேணியிலும் நான்கு குணஸ்தானங்கள் உண்டாகின்றன – அபூர்வ கரணம், அநிவ்ருத்தி கரணம், சூக்ஷ்ம ஸாம்பராயம், அடைந்து ஆன்மா பதினொன்றாவது உபஸாந்த குணஸ்தானம் செல்லாமல் நேரே பன்னிரண்டாவது க்ஷீணகஷாய குணஸ்தானம் அடைகிறது. எந்த சிரேணியில் ஆன்மா மோகனீய வினையைக் கெடுத்து மேலே உயருகிறதோ அது க்ஷபக சிரேணி எனப்படுகிறது. படிகாரம் போட்டு சுத்தம் செய்யப்பட்ட நீரில் உள்ள அழுக்கை கீழே இருந்து துளை வழியாக நீக்கி விடுதல் போல மோகனீய வினை இல்லாமல் ஆகிவிடுகிறது. பிறகு கீழ் குண ஸ்தானத்திற்கு இறங்குவது இல்லை.

2.8. அபூர்வகரண குணஸ்தானம்:

இந்த குண ஸ்தானத்தில் ஸஞ்சுவலன கசாயத்தின் மந்த உதயம் இருப்பதால் முன் அடையாத பரம இனிய சுக அனுபவ வடிவ அபூர்வ கரண அதாவது அபூர்வ பரிணாமம் உண்டாகிறது. அதனால் இந்த குணஸ்தானத்தில் வரும் உபசமகர் க்ஷபகர் அபூர்வ கரணப்பெயருடைய எட்டாவது குணஸ்தானம் உடையவர் ஆகின்றனர்.

2.9. அனிவ்ருத்தி கரண குணஸ்தானம்:

ஒத்த சமயமுடைய உயிர்கள் பரிணாமத்தில் வேறுபாடு இல்லாத வளர்ச்சி நிவ்ருத்தி எனப்படுகிறது. கேட்ட, பார்த்த, அனுபவித்த போக ஆசை முதலான எல்லா ஸங்கல்ப விகல்பம் இன்றி தன் சலனமற்ற பரமான்ம வடிவ ஏகாக்ர தியான பரிணாமத்தில் எந்த உயிர்களுக்கு ஒரே சமயத்தில் நிவ்ருத்தி அதாவது வேறுபாடு இன்றி வருண மற்றும் ஸம்ஸ்தான பேதம் இருந்தும் அனிவ்ருத்தி கரண உபஸமகர், அல்லது க்ஷபகர் என்ற

பெயரைஉடைய குணஸ்தானத்தை உடையவர் ஆகிறார் எனப்படுகிறார்.

2.10. சூக்ஷ்ம ஸாம்பராய குணஸ்தானம்

சூக்ஷ்ம (வெளுத்துப் போன) செம்மை போல சூக்ஷ்ம ராகத்தோடு அல்லது சூக்ஷ்ம கசாயத்தோடு உள்ள ஜீவனை சூக்ஷ்ம ஸாம்பாராய உபசமகர் அல்லது க்ஷபகர் என அறிதல் வேண்டும் சூக்ஷ்ம கசாயத்தை (சூக்ஷ்ம லோபம்) இந்த 10ம் குணஸ்தானத்தில் கெடுக்கும் க்ஷபக உயிர் நேரே க்ஷீண கசாயம் பெயருடைய பன்னிரண்டாம் குணஸ்தானத்தில் நுழைகிறது. சூக்ஷ்ம கசாயத்தை உபஸமம் செய்பவர் உபஸாந்த கசாய பெயருடைய 11ம் குணஸ்தானத்தில் நுழைகிறார்.

2.11. உபசாந்த கசாய குணஸ்தானம்:

தேற்றாங் கொட்டையுடன் கூடிய நீர் அல்லது குளிர்கால குளத்து நீர் நிர்மலமாக இருத்தல் போல மோக வினை முற்றுமாக உப சாந்தம் அடைந்து உபசாந்த கசாய குணஸ்தானத்தில் உள்ள ஜீவன் மிகவும் நிர்மல பரிணாமத்தை உடையவராகிறது. ராகம் அழிந்த வரை வீதராகர் என்பர். சத்ம ஞானாவரணம் தரிசனாவரணம் கூடியவரை அஞ்ஞானி என்பர். அதில் இருப்பவர் வீதராகி சத்மஸ்தர். உபசாந்தம் உண்டாகியும் வீதராகி ஸத்மஸ்தர் எனப்படுகிறார். அவர் உபசாந்த கசாய வீதராக சத்மஸ்தர் எனப்படுகிறார்.

2.12. க்ஷீனகஷாய குணஸ்தானம்:

மோக வினை முற்றும் அழிவதால் யாருடைய சித்தம் ஸ்படிகமணி பாத்திரத்தில் வைத்த நீர் போல தூய்மையானது அத்தகைய பற்றற்ற சாதுவை வீதாராகி பகவான் க்ஷீனகஷாய குண ஸ்தான ஸம்யதர் என்று கூறினார். படிகாரம் முதலான வற்றால் தூய்மை செய்யப்பட்ட நீர் தூய ஸ்படிக மணி பாத்திரத்திலிருந்து நீக்கிய பிறகு எப்போதும் நிர்மலமாக தூய்மையாக ஆகிவிடுகிறது. அதே போல க்ஷீனகஷாய குணஸ்தான ஸம்யதரும் நிர்மல தெளிந்த தூய பரிணாமத்தை உடையவர் என அறிதல் வேண்டும். இவரை க்ஷீனகஷாய வீதராக சத்மஸ்தர் என்றும் கூறுகின்றனர்.

2.13. ஸயோக கேவலி குணஸ்தானம்:

கேவலஞான சூரிய கிரணங்களால் அஞ்ஞானம் அழிந்து கேவல ஞானி ஆனதால் பரமான்மா பெயரை அடைந்தார். அவர் பிற துணை (பொறிகளின் துணை) இல்லாத ஞான தரிசனத்தை பெற்றமையால் கேவலி என்றும், மூன்று யோகங்களையும் உடையவரானதால் ஸயோகி என்றும், காதி வினை இல்லாமையால் ஜிநர் என்றும் கூறப்படுகிறார். இந்தச் சிறப்புகளோடு கூடிய ஆன்மா ஸயோக கேவலி பெயரையுடைய பதின் மூன்றாம் குணஸ்தானத்தர் எனப்படுகிறார். இவர் மீண்டும் பிறவியில் பிறப்பது இல்லை. ஆதலால் பிறப்பு விட்டவர் எனவும் கூறப்படுகிறார்.

2.14. அயோககேவலி குணஸ்தானம்:

18000 சீலங்களுக்கு சுவாமி, ஆஸ்ரவம் அற்றவர், மனவசன காயங்களைச் சார்வதால் வினைகளைக் கட்டுதற்குக் காரணமான ஆன்ம பிரதேசங்களின் அலைவு (பரிஸ்பந்தனம்) வடிவ மன வசன காய யோகம் இல்லாதவர், கேவல ஞான அணியுடையவர்; அவர் பதினான்காம் குணமுடைய அயோகி ஜிநர் எனப்படுகிறார். அவர் எட்டு வினை இல்லாதவர் ஆதலால் எப்பொழுதும் வினை விட்டவர் எனப்படுகிறார்.

3. எந்தெந்தக் குணஸ்தானத்தில் உயிர் மேல் குணஸ்தானங்களை அடைகிறது? எந்தெந்தக் குணஸ்தானத்தில் உயிர் கீழ் குணஸ்தானங்களை அடைகிறது? அதாவது, குண ஸ்தானத்தில் உள்ள உயிரின் ஏற்ற – இறக்க முறைமை யாது?

குணஸ்தான ஏற்ற இறக்க முறைமை கீழே அட்டவணையில் தரப்படுகிறது.

வரிசை	குணஸ்தானம்	ஏறும் முறை	இறங்கும் முறை
1.	மித்யாதிருஷ்டி அனாதி ஸாதி	உபஸம ஸம்யக்த்வத்தோடு 4,5,7 3, 4,5,7	
2.	ஸாஸாதன்	X	1
3.	மிஸ்ரன்	4	1
4.	அஸம்யதன் உபசம – க்ஷாயிக– க்ஷயோபஸமிக–	 5,7 5,7 5,7	3,2 ஸாஸாதன வழியாக 1 X 3,1
5.	ஸம்யதாஸம்யதன்	7	4, 3, 2, 1
6.	பிரமத்த ஸம்யதன்	7	5, 4, 3, 2, 1
7.	அபிரமத்த ஸம்யதன்	8	6 (மரணமானால் தேவனாக பிறவி 4ம் குணஸ்தானம்)
8.	அபூர்வ கரணன்	9	7 ”
9.	அனிவ்ருத்தி கரணன்	10	8 ”
10.	சூக்ஷ்ம ஸாம்பராயன்	11, 12	9 ”
11	உபசாந்த–கசாயன்	X	10 ”
12.	க்ஷீனகஷாயன்	13	X
13.	ஸயோகி	14	X
14.	அயோகி	ஸித்த நிலை	X

4. பதினான்கு குணஸ்தானம் எந்த எந்த உயிர்களுக்கு உண்டாகின்றது?

- முதல் மித்யாத்வ குணஸ்தானம் நான்கு கதிகளிலும் மித்யாத்ருடஷ்டி ஜீவன்களுக்கு உண்டாகிறது.
- இரண்டாவது ஸாஸாதன் குணஸ்தானம் நான்கு கதிகளிலும் உபஸம ஸம்யக்துவத்தை விட்டு கீழே மித்யாத்வ குணஸ்தானம் நோக்கிப் போகும் ஜீவனுக்கு உண்டாகிறது.
- மூன்றாவது ஸம்யக் மித்யாத்வ குணஸ்தானம் நான்கு கதிகளிலும் முதல் குண ஸ்தானத்திலிருந்து உயரும் போதும் 4,5 குணஸ்தானங்களிலிருந்து தாழும் போதும் ஸம்யக்மித்யாதவ் பரிணாமம் உண்டாகும் போது தோன்றுகிறது.
- நான்காவது அஸய்யத ஸம்யக் த்ருஷ்டி குணஸ்தானம் நான்கு கதிகளிலும் மித்யாத்வத்தை

விட்டு மெய்யான நம்பிக்கை வைக்கும் ஜீவனுக்கு உண்டாகிறது.

- ஐந்தாவது ஸம்யதாஸம்யத குணஸ்தானம் நற்காட்சியுடைய ஆர்யிகை ஐலகர், சுல்லகர், பிரதிமாதாரி, முதலியவர்களில் அணுவிரதம் மட்டும் ஏற்கும் உயிர்களுக்குத் தோன்றுகிறது. (நற்காட்சியுடைய விலங்குகதி மற்றும் மனிதகதி உடையவர் இந்த குணஸ்தானம் அடையமுடியும். ஆனால் ஆர்யிகை, ஐலக், சுல்லக் முதலியவை மனிதகதி உயிர்களுக்கு மட்டுமே வாய்க்கும்.)
- ஆறாவது பிரமத்த ஸம்யத குணஸ்தானம் இந்த மனித கதியில் மட்டும் 28 மூல குணங்கள் உள்ள முனிவருக்கு உண்டாகிறது. இதற்கு மேலுள்ள எல்லா குணஸ்தானங்களும் மனித கதி முனிவர்களுக்கே உண்டாகும்.
- ஏழாவது அபிரமத்த ஸம்யத குணஸ்தானம் மூன்று குப்தியுடைய முனிவரருக்கு உண்டாகிறது. தியானம், சாமாயிக நிலை தவிர சுபபாவனையோடு சமிதி ஆறு இன்றியமையாதன முதலியன நிகழும்போதும் குப்திகள் இருக்க முடியும்.
- எட்டாவது அபூர்வ கரண குணஸ்தானம் ஒன்பதாவது அனிவ்ருத்தி கரண குணஸ்தானம் பத்தாவது சூக்ஷ்மசாம்பரய குணஸ்தானம் பதினொன்றாவது உபசாந்த கஷாய குணஸ்தானம் உபஸம சிரேணி ஏறும் முனிவருக்கு உண்டாகிறது.
- மேலும் க்ஷபக சிரேணி ஏறும் முனிவருக்கு இந்த நான்கு குணஸ்தானங்களுள் பதினொன்றாவது உபசாந்த கஷாய குணஸ்தானம் இல்லாமல் நேரே பன்னிரண்டாவது க்ஷீண கசாய குணஸ்தானம் உண்டாகிறது.
- பதின்மூன்றாவது ஸயோகி கேவலி குணஸ்தானம் கேவல ஞானி ஸயோகி அரஹந்த பகவானுக்கு உண்டாகிறது.
- பதினான்காவது அயோகிகேவலி குணஸ்தானம் கேவலஞானி அயோகி பகவானுக்கு உண்டாகிறது.

இந்த பதினான்கு குணங்களையும் தாண்டிய பிறகு ஆன்மா முழுவதான மோக்ஷ பதவியை அடைந்து ஸித்த பரமேஷ்டி நிலையில் அனந்த காலம் வரை அனந்த ஆனந்தத்தோடு சித்தாலயத்தில் இருக்கிறது.

❁❁❁❁❁❁❁❁❁❁

பாத்குளி – ஆதிநாதர் (பார்ஸ்வ தீர்த்தங்கரர் காலத்தியது)

அதிகாரம் – 19

அத்யாத்மனில் (ஆன்மீயத்தில்) உபயோகம் மற்றும் சொரூபாசரணம்

இக்காலத்தில் ஆன்மீகத்தின் ஆழத்தினை அடையாது இருக்கின்ற இயல்பில் பலவீனமாக உள்ளவர்களுக்காகவே உபயோகத்தினை அசுபம், சுபம், மற்றும் சுத்தம் என்கிற பிரிவுகளால் மூன்றுவிதமாக கூறப்பட்டுள்ளது. மேலும் ஸ்வரூபாசரணம் (தன் ஆன்ம இயல்புகளையே சரணடைந்திருத்தல்), மற்றும் அதனை உடையவர்கள் விஷயத்திலும், மேலும் குணஸ்தானம் பற்றிய முழுமையான ஆகம அறிவின்மையாலும் சிலர் பிரமை என்னும் காட்டில் அலைந்து திரிந்து கொண்டுள்ளனர். அவர்களுக்கு தெளிவுபடுத்தும் நோக்கில் ஆகமப்படி உபயோகம் சுப, அசுப உணர்வுகள் மற்றும் அவற்றின் பலன்களின் வருணனை நிச்சய சாரித்ரத்தின் தகுதி எப்படிப்பட்டது? மற்றும் அதை சாதனை செய்பவன் எப்படி இருப்பான்? மற்றும் குனஸ்தானநிலை இதுபோலவே தகுதிஅடிப்படையில் சமயஸாரநூலை படிப்பதன் மகிமை, சுத்தாத்மானுபூதி (தூய ஆன்ம அனுபவம்), நிர்விகல்ப சமாதி, ஸ்வாத்மானுபூதி (சுய ஆன்ம அனுபவம்) முதலியவற்றின் தகுதி பற்றிய வருணனை செய்வதுடன், தியானவடிவ ரதத்தின் (தேரின்) அச்சை யார் தாங்க முடியும்? என்ற வருணனையும் கொடுக்கப்படுகிறது. ஆன்மீக மேன்மைக்கு முயலும் பவ்விய தியாகி, முயற்சியாளனாகி அவசியம் ஆன்மனை தொடமுடியும் என்பதால், இந்த பத்தொன்பதாம் அதிகாரம் அத்யாத்மனில் உபயோகம் மற்றும் ஸ்வரூபாசரணம்'' என்ற தலைப்பில் இங்கு தரப்பட்டுள்ளது.

1. அத்யாத்மனில் (ஆன்மீய) உபயோகத்தில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

அத்யாத்மனில் உபயோகம் (அறிவுணர்வு) சுத்தோபயோகம், சுபோபயோகம், மற்றும் அசுபோபயோகம் என மூன்று பிரிவுகள் உள்ளன.

2. உபயோகத்தினை அடைவதற்கான வரிசை முறை எவ்விதமுள்ளது?

ஆசாரிய குந்தகுந்த சுவாமியானவர் தன்னுடைய பாரஸாணுவேக்கா நூலில் கூறியிருப்பதாவது:

ஸுஹஜோகஸ்ஸ பவித்தீ ஸம்வரணம் குணதி அஸுஹஜோகஸ்ஸ ।
ஸுஹஜோகஸ்ஸ ணிரோஹோ ஸுத்துவஜோகேண ஸம்பவதி ॥ 63 ॥

அதாவது சுபோபயோகத்தின் பற்றுதல் அசுபோபயோகத்தினை தடுக்கிறது, அப்போது சுபோபயோகத்தினுடைய தடையானது சுந்தோபயோகத்தில் இருக்கச் செய்து விடுகிறது. கருத்து என்னவெனில் அசுபோபயோகத்தினை அறிவு பூர்வமாக விட்டு விட்டு சுபோபயோகத்தில் பற்றுதல் கொள்ள வேண்டும். அதாவது ஐந்து பாபங்கள் முதலியவற்றினை விட்டு விட்டு விரதம் முதலான நல்லொழுக்கங்களை கடைப்பிடிக்க வேண்டும். அந்த சமயம் சுபோபயோகம் விடப்படவில்லை. ஆனால் எப்பொழுது அபிரமத்த நிலையில் வீதராக சாரித்ர வடிவ சுத்தோபயோகத்தில் இந்த ஆத்மா சார்ந்து விடுகிறதோ அப்போது சுபோபயோகம் தானாகவே விலகி விடுகிறது. இந்த சுத்தோபயோகம் அதிகத்திலும் அதிகமாக ஒரு அந்தர் முகூர்த்தம் வரை தான் இருக்க முடியும். மேலும் பிரமத்த நிலையில் வந்ததும் சுபோபயோகத்திலேயே பற்றுதல் கொள்ளப்படுகிறது.

இந்த மேலே கூறப்பட்டிருக்கும் காதையிலிருந்து ஒரு விஷயம் நன்கு தெளிவாகிறது. அதாவது ஆத்மாவில் ஒரு சமயத்தில் ஒரே ஒரு உபயோகமே ஏற்படுகிறது. எந்த சமயம் சுபோபயோகம் ஏற்படுகிறதோ, அந்த சமயம் அசுபோபயோகம் தடை செய்யப்பட்டு இருக்கிறது. மேலும் அப்பொழுது சுத்தோபயோகம் கூட ஏற்பட முடியாது.

3. எந்தெந்த குணஸ்தானத்தில் எந்தெந்த உபயோகம் ஏற்படுகிறது?

பிரவசனஸார நூலில் கூறப்பட்டிருப்பதாவது :

ஜீவோ பரிணமதிஜதா ஸுஹேண அஸுஹேண வா ஸுஹோ அஸுஹோ ।
ஸுத்தேண ததா ஸுத்தோ ஹவதி ஹி பரிணாமஸப்பாவோ ॥ 9 ॥

அதாவது பரிணாமம் இருப்பதினால் ஜீவன் எப்பொழுது சுப மற்றும் அசுப வடிவ பரிணாமம் கொள்ளுகிறதோ அப்பொழுது சுபத்திலிருந்து சுபோப யோகியாகவும் மற்றும் அசுபத்திலிருந்து அசுபோபயோகியாகவும் ஆகிறது மற்றும் எப்பொழுது சுத்த வடிவில் பரிணமனம் செய்கிறதோ அப்பொழுது நிச்சயமாக அல்லது உண்மையில் சுத்தோபயோகியாகிறது.

இதே காதையின் பூஜ்ய ஜயசேனாச்சாரியர் மூலமாக இயற்றிய உரையின் கடைசி பகுதியில் உபயோகங்களுடைய குணஸ்தானம் முதலியவற்றினுடைய விமரிசனம் மற்றும் சுத்தோபயோகத்தினுடைய பலன் ஆகியவற்றினை நன்கு விவரித்துள்ளார். அது இப்படியுள்ளது.....

"அத்ர ப்ராப்ருதசாஸ்த்ரே தான்யேவ குணஸ்தானாணி ஸம்க்ஷேபேணா சுபாசுபசுத்தோப யோக ரூபேண கதிதானி" கதமிதி சேத் – மித்யாத்வ ஸாஸாதன மிஸ்ர – குணஸ்தானத்ரயே தாரதம்யேன சுபோபயோக: ததநந்தரமஸம்யத ஸம்யக்திருஷ்டி தேசவிரத பிரமத்தஸம்யத குணஸ்தானத்ரயே தாரதம்யென சுபோபயோக: ததநன்ன தரம பிரமத்தாதி க்ஷீணகஷாயாந்த குணஸ்தானஷ்டகே தாரதம்யேன சுத்தோப யோக: ததனந்தரம் ஸயோக்ய யோகிஜின குணஸ்தானத்வயே சுத்தோபயோகபலமிதி பாவார்த" : 11 9 11

இங்கு ப்ராப்ருத சாஸ்திரத்தில் அவையே குணஸ்தானத்தை சுருக்கமாக அசுபோபயோகம் சுபோபயோகம் மற்றும் சுத்தோபயோக வடிவில் கூறப்பட்டிருக்கின்றன. எந்தவிதமாக கூறப்பட்டிருந்தாலும் கேட்டாலும் – மித்யாத்வம் ஸாஸாதனம் மற்றும் மிஸ்ரம் ஆகிய இம்மூன்று குணஸ்தானங்களில் ஏற்றத் தாழ்வினால் (குறைந்திருக்கின்ற) அசுபோபயோகம் இருக்கிறது. இதற்குப் பிறகு அஸம்யத சம்யக்திருஷ்டி, தேசவிரதன் மற்றும் பிரமத்த சம்யதன் ஆகிய மூன்று குணஸ்தானங்களில் ஏற்றத் தாழ்வினால் (வளர்ந்து இருக்கும்) சுபோபயோகம் இருக்கிறது. இதற்கு மேலே அப்ரமத்த ஸம்யத குணஸ்தானத்திலிருந்து க்ஷீனகஷாயம் வரை உள்ள ஆறு குணஸ்தானங்களில் ஏற்றத் தாழ்வினால் (வளர்ந்திருக்கும்) சுத்தோப யோகமும் இதற்குப்பின் ஸயோகி ஜினர் மற்றும் அயோகி ஜினர் ஆகிய இரண்டு குணஸ்தானங்களில் சுத்தோபயோகத்தின் பலனும் இருக்கின்றன.

4. சுத்தோபயோகத்தினால் மாற்றப்பட்ட ஆத்மாவினுடைய சொரூபம் எவ்விதம் இருக்கிறது?

ஆசாரிய குந்தகுந்த தேவரானவர் பிரசவனஸார் நூலில் கூறியிருப்பதாவது

ஸுவிதிதபயத்தஸுத்தோ ஸஞ்ஜமதவஸஞ்ஜுதோ விகதராகோ ।
ஸமணோ ஸமஸுஹதுக்கோ பணிதோ ஸுத்தோவஓகோ த்தி ॥ 1 – 14 ॥

எவர் ஆன்மா முதலிய பொருள்களை நன்றாய் எடுத்துரைக்கும் சூத்திரத்தினை நன்கு அறிந்திருக்கின்றாரோ, எவர் புலனடக்கம், விரதம் மற்றும் தவமுடன் இருக்கிறாரோ, வீதராகியாக இருக்கிறாரோ மற்றும் இன்ப– துன்பங்களை மகிழ்ச்சியும் துக்கமுமின்றி நடுநிலை உணர்வுடன்

இருக்கிறாரோ அவர் உண்மையிலேயே சுத்தோபயோக வடிவில் அதாவது சுத்தோபயோகியாக இருக்கிறார்.

5. ஸ்ரமணத்தின் பரிபாஷை மற்றும் சரியா என்னவாக இருக்கிறது?

பிரவசனசாரத்தில் கூறப்பட்டிருப்பதாவது :–

ஸமஸத்துபந்துவக்கோ ஸமஸுஹதுக்கோ பஸம்ஸணிந்தஸமோ ।
ஸமலோட்ட கஞ்சணோ புண ஜீவிதமரணே ஸமோ ஸமணோ ॥ 3–41॥

எவர் எதிரியையும் மற்றும் உறவினர்களையும், இன்பத்திலும் மற்றும் துன்பத்திலும், புகழ்ச்சியிலும் மற்றும் நிந்தனையிலும், பொன் மற்றும் கல்லிலும், மற்றும் வாழ்க்கையையும், மரணத்தையும், சமமாக பாவிக்கின்றாரோ அவரே ஸ்ரமணர் ஆவார்.

6. சுபோபயோகத்தினுடைய இலக்கணம் யாது?

ஆசாரிய குந்தகுந்தசுவாமி பிரசவனசாரத்தில் கூறியிருக்கிறான். அதாவது :–

ஜோ ஜாணாதி ஜிணேந்தே பேச்சதி ஸித்தே தஹேவ அணகாரே ।
ஜீவேஸு ஸாணுகும்போ உவஓகோ ஸோ ஸுஹோ தஸ்ஸ” ॥ 2–65 ॥

எந்த உபயோகம் பதினெட்டு குற்றங்கள் இல்லாமல் மேலும் அனந்த ஞானம் முதலான சதுஷ்டயம் (நான்மை) மற்றும் 34 அதிசயங்களுடன் பரமபட்டாரகர் தேவாதி தேவர் அரகந்த பகவானை அறிந்திருக்கிறதோ, அறிவு மறைப்பு முதலான எண்வினைகளில்லாமல் சித்த பகவானை பார்க்கிறதோ மற்றும் அது போலவே ஆசாரியர், உபாத்யாயர் மேலும் சாது பரமேஷ்டிகளை ஆராதனை செய்கிறதோ, மற்றும் எல்லா உயிர்களிடமும் கருணை காட்டுகிறதோ, அந்த உபயோகம் சுபோபயோகமாகும்.

7. சுபோபயோகம் இது எவருடைய உணர்வாக இருக்கிறது?

இந்த சுபோபயோகம் தரிசன மோஹனீய (காட்சி மயக்கு வினை) மேலும் சாரித்ர மோஹனீய (ஒழுக்க மயக்கு வினை) வினையின் தனிச்சிறப்புள்ள க்ஷயோபசமத்தினிலிருந்து உண்டானதால் க்ஷயோபசம பாவமாகும். இந்த சுபோபயோகம் ஔதாயிக பாவமாகும்.

அனைத்திற்கும் முதலாக பிரவசனசாரத்தில் அமிருதசந்திரசூரி அவர்கள் தன்னுடைய உரையிலேயே (காதை 2 – 65–ல்) சுபோபயோகத்தினை க்ஷயோபசமிகபாவம் எனக் கருதியிருக்கிறார். அதாவது, ‘‘விசிஷ்ட க்ஷயோபசமதசா – விஸ்ராந்த தர்சன சாரித்ர மோஹனீய புத்கலானுவ்ருத்திபரத்வேன பரிக்ரஹீதசோ பனோபராகத்வாத், பரம பட்டாரக மஹாதேவாதிதேவ பரமேஸ்வராராஹத்ஸித்த ஸாது ஸ்ரத்தானே ஸமஸ்த பூதக்ராமானுகம்பாசரணே ச ப்ரவ்ருத்த: சுப உபயோக : ’’

அதாவது தரிசண மோஹனீயம் மற்றும் சாரித்ர மோஹனீய வினைகளின் தனிச்சிறப்புள்ள (விசிஷ்ட) க்ஷயோபசம நிலைமை ஏற்பட்ட பிறகு கிரகிக்கப்பட்டிருக்கிற சுபராகத்தினால் பரமபட்டாரகர் தேவாதி தேவர் அரஹந்த பரமேஷ்டி, சித்த பரமேஷ்டி, சாது பரமேஷ்டியர்களிலும் நம்பிக்கை வடிவமான பக்தி மேலும் எல்லா உயிர்களிடமும், அனுகம்பா (தயை, கருணை) வடிவ ஆசரணம் ஏற்படுவது சுபோபயோகம் ஆகும்.

8. ஔபசமிகம் முதலிய ஐந்து பாவங்கள் எதற்குக் காரணமாக இருக்கின்றன? அல்லது அவை என்ன செய்கின்றன?

தவளா புஸ்தகம் 6, பக்கம் 9–லும் மற்றும் ஜவதவளா புஸ்தகம் 1 ஆம் பக்கத்திலும் கூறப்பட்டிருப்பதாவது:

ஓதஇயா பந்தயரா உவஸம – கய – மிஸ்ஸயாய மோக்கயரா ।
பாவோ து பாரிணாமிஓ கரணோபயவஜ்ஜியோ ஹோந்தி ॥

இது போலவே ஸமயஸார, தாத்பர்யவ்ருத்தி பக்கம் 364–ல் கூறப்பட்டிருப்பதாவது :–

மோக்ஷம் குர்வந்தி மிஸ்ரோபசமிக க்ஷாயிகா பிதா : ।
பந்தமௌதயிகோ பாவோ நிஷ்க்ரிய : பரிணாமிகா : ॥

அதாவது ஔபசமிகம், க்ஷாயோபசமிகம் மேலும் க்ஷாயிக பாவம் மோக்ஷத்தைச் செய்கின்றது மற்றும் ஔதயிக பாவம் பந்தத்திற்குக் காரணமாக இருக்கிறது. ஆனால் பாரிணாமிக பாவம் பந்தம், மோக்ஷம் இரண்டுக்குமே காரணமாக இல்லாமல் செயல்படாமல் இருக்கிறது.

9. ஒருவரால் சுபோபயோகத்தினை பந்தத்திற்கு மட்டுமே காரணம் எனவும் சம்வரை, நிர்ஜரைக்கு காரணமில்லை எனக் கருதினால்' அதில் என்ன குறைபாடு இருக்கிறது?

சுபோபயோகத்தினை ஔதயிக பாவம் எனக் கருதி பந்தத்திற்கு மட்டுமே காரணம் என்று கூறினால் அது ஆகமத்தை சரிவர அறிந்திருக்க வில்லை என்றாகும். சுபோபயோகம் க்ஷாயோபசமிக பாவமாக ஆவதற்கான காரணம் சம்வரை, நிர்ஜரைக்கு ஏதுவாகும். உதாரணமாக ஆசாரிய வீரசேன சுவாமி அவர்கள் நூல்களின் அரசனான ''கஷாய பாகுட'' பரமாகமான ''ஜயதவளா உரையில் கூட கூறியிருக்கிறார்–'' **''ஸுஹ–ஸுத்த பரணாமேஹிம் கம்மக்கயாபாவே தக்கயாணுவவத்திதோ''** அதாவது சுபத்தினால் மற்றும் சுத்த பரிணாமங்களினால் வினைகளுடைய அழிவு ஏற்படவில்லையெனக் கருதினால் பிறகு வினைகளின் அழிவே ஏற்பட முடியாது.

இதுபோலவே சுபோபயோகம் தொடர்பாக பிரவசனசாரத்தில் **''ஏ ஸா பஸத்தமூதா''** என்ற இந்த காதையின் உரையில் அமிருதசந்திரசூரி அவர்கள் கூறியிருக்கிறார். அதாவது **''க்ரமத: பரம நிர்வாண ஸௌக்ய காரணத்வாச்ச முக்ய:''** ।

அதாவது பிரசஸ்த சுபோபயோகம் பரம்பரையில் நிர்வாணத்திற்கு காரணமாகும். இப்படியும் கூறப்பட்டிருக்கிறது. அணுவிரதம் மற்றும் மகாவிரதம் கூட ப்ரத்யாக்யானாவரண மற்றும் அப்ரத்யாக்யானாவரண கஷாயத்தின் க்ஷயோபசமம் ஆவதின் காரணத்தினால் க்ஷயோபசமிக பாவம் இருக்கின்றது. ஆதலால் அவை பந்தத்திற்குக் காரணம் ஆகவில்லை. இந்த விரதங்களின் காலத்தில் வேறு கஷாயங்களுடைய (துவர்ப்பசைகளுடைய) உதயம் இருக்கிறது. அது பந்தத்திற்குக் காரணம் எனக் கருதப்பட்டு இருக்கிறது.

10. சுபோபயோகத்துடன் இணைந்து இருக்கும் சிராவர்களின் சர்யா (நடத்தை) எவ்விதம் இருக்கிறது?

ஆசாரிய குந்தகுந்த தேவர் அவர்கள் பஞ்சாஸ்திகாய நூலில் கூறியிருப்பதாவது:–

அரஹந்தஸித்தஸாஹஸு பத்தீ தம்மம்மி ஜாய கலு சேட்டா ।
அணுகமணம் பி குரூணம் பஸத்தராகோ த்தி வுச்சந்தி'' ॥ 1–36 ॥

அதாவது அரகந்தர், சித்தர் மற்றும் சாது பரமேஷ்டிகளிடம் பக்தி ஏற்படுவது, வியவகார ரத்னத்ரய (மும்மணி) வடிவ தருமத்தில் பற்றுதல் ஏற்படுவது மேலும் வீதராக குருமார்களிடம் அனுகூலமாக நடப்பது, இந்த பிரசஸ்த ராகம் அல்லது சுபோபயோகம் போன்றவை முதலில் மஹரிஷி ஜனம் எனக் கூறப்படுகிறது.

11. சுபோபயோகி ஸ்ரமணர்களின் சர்யா (நடத்தை) எவ்விதம் இருக்கிறது?

பிரவசனசார நூலில் கூறப்பட்டிருப்பதாவது:–

தம்ஸணணாணுவதேஸோ ஸிஸ்ஸக்கஹணம் ச போஸணம் தேஸிம் ।
சரியா ஹி ஸராகாணம் ஜிணிந்த பூஜோவதேஸோ ய'' ॥ 3–65 ॥

தரிசனம் மற்றும் ஞானம் பற்றிய உபதேசம் தருவது, மும்மணி ஆராதனை செய்ய விரும்புகிற முமுக்ஷுகளுக்கு தீட்சை கொடுக்கச் செய்வது மேலும் அவர்களின் ஆவஸ்யக செயல்கள்

– சர்யா முதலியவற்றினை கற்றுக் கொடுக்கும் மாத்யமத்தினால் அவர்களை போஷணை செய்வது மேலும் சிராவர்களுக்கு பகவானின் பூசை முதலானவை செய்வதற்கான உபதேசம் தருவது, இது எல்லாம் சுபோபயோகி ஸ்ரமணர்களின் நடத்தையாகும்.

மேற்கூறிய செயல்களினால் சுருத ஞானம் அல்லது உண்மையான உபதேசம் தரும் முனிவரை உபாத்தியாயர் என அழைக்கப்படுகிறார். மற்றும் பிறவியிலிருந்து முக்தியடைய விருப்பமுள்ள முமுக்ஷுக்களுக்கு தீட்சை மற்றும் பிராயச்சித்தம் முதலியன கொடுக்கும் நல்ல தகுதியுடைய முனிவர்களை ஆசாரியபரமேஷ்டி எனக் கூறுகின்றனர்.

12. சுபோபயோகத்தில் இருக்கும் முனிவர்கள் எந்த தியானம் செய்கின்றனர்?

ஆசாரிய குந்தகுந்த தேவர் பாவபாகுடத்தில் கூறியிருப்பதாவது :–

ஜாயஹி பஞ்ச வி குரவே மங்கலசஉஸரண – லோய பரியரி ஏ ।
ணரஸுரகேயரமஹியே ஆராஹணணாயகே வீரே ॥ 123 ॥

ஏ முனி! மனிதர், தேவர் மற்றும் வித்யாதர்களால் ஆராதிக்கும் சிரேஷ்ட ஆராத்ய வீரர் – மஹாவீரர் பகவான் மேலும் உலகத்தில் உத்தம மங்கல மற்றும் சரண – ஸ்வரூப ஐந்து பரமேஷ்டியர்களை தியானம் செய்!

13. சுத்தோபயோகத்தில் இருக்கின்ற முனிவர்கள் எவரை தியானம் செய்கின்றனர்?

ஆசாரிய குந்தகுந்த தேவர் தனது சமயஸார நூலில் சுத்தோபயோகத்தின் நுழை வாயிலில் இருக்கும் ஸ்ரமணர்கள் கீழ்கண்டவாறு பாவனை செய்கின்றனர்.

அஹமிக்கோ கலு ஸுத்தோ தம்ஸணணாணமஇஒ ஸதாரூவீ ।
ணவி அத்தி மஜ்ஜ கிஞ்சிவி அண்ணம் பரமாணுமித்தம்பி" ॥ 43 ॥

நிச்சயத்தில் நான் ஒருவனாகவும், தூயவனாகவும், பார்ப்பவனாகவும், அறிபவனாயும் இருக்கிறேன். எப்பொழுதும் உருவமற்றுள்ளேன். அணு அளவு கூட பிற பொருள் என்னுடையதில்லை.

14. இந்த ஐந்தாம் காலத்தில் "ஜாயஹி பஞ்ச வி குருவே" எனும் இந்த காதைப்படி பஞ்சபரமேஷ்டி வடிவ பரமாத்மாவினை தியானம் செய்பவர் சுபோபாயோகி முனிவர்கள் மற்றும் "அஹமிக்கோ கலுஸுத்தோ" இந்த காதைப்படி சுய ஆத்மாவின் தியானத்தில் மூழ்கியிருக்கும் சுத்தோபயோகி முனிவர்களுடைய தியானம் எந்த விதமாக இருக்கிறது? மற்றும் இப்பொழுது இந்த விதமான பரமாத்மா மற்றும் சுவாத்மாவடிவ ஆத்ம தியானம் அல்லது ஆத்ம சுபாவத்தில் இருந்து கொண்டு அந்த முனிவர்கள் எந்த விதமான பலனைப் பெறுகிறார்கள்?

எவர் இந்த பரத க்ஷேத்திரத்தில் மேலும் ஐந்தாம் காலத்தில் மோட்சத்தின் சாதனையில் கழிந்த தியானத்தின் தோற்றம் அல்லது பெறுதல் இல்லையென கருதுகிறார்கள். அவர்கள் இலட்சியமாகக் கொண்டும் மற்றும் தியானத்தின் பெருமையை எடுத்துரைக்கும் ஆசாரிய குந்தகுந்த சுவாமி மோக்ஷ பாகுடத்தில் கூறுவதாவது :–

பரஹே துஸ்ஸமகாலே தம்மஜ்ஜாணம் ஹவஇ ஸாஹாஸ்ஸ ।
தம் அப்பஸஹாவடிதே ண ஹு மண்ணஇ ஸோ வி அண்ணாணி ॥ 76 ॥
அஜ்ஜவி திரயணஸுத்தோ அப்பா ஜாஏவி லஹதி இந்தந்தம் ।
லோயந்திய தேவத்தம் தந்த சுஆ ணிவ்வுதிம் ஜந்தி" ॥ 77 ॥

அதாவது இந்த பரத க்ஷேத்ர மற்றும் ஐந்தாம் காலத்தில் கூட ஆத்ம இயல்பில் இருக்கும் சாதுவிற்கு தர்மதியானம் ஏற்படுகிறது. எவர் இப்படி ஏற்கவில்லையோ அவர் அஞ்ஞானியாகும்.

இன்றும் கூட முனிவர்கள் பேத, அபேத வடிவ வியவகாரம் மற்றும் நிச்சய மும்மணியின் மூலமாக சுத்தாத்ம தியானம் செய்கின்றனர். அவர்கள் இந்திர பதவி மற்றும் லௌகாந்திக தேவ பதவியினை அடைகிறார்கள்.

மேலும் அங்கிருந்து வந்து மனிதப் பிறவியை அடைந்து நிர்வாண மோக்ஷ சுகத்தினை அடைகின்றனர்.

15. மேலே கூறியிருக்கும் இந்த விதமான பாவலிங்கி முனிவர் ஐந்தாம் காலத்தில் எதுவரை வாழ்கின்றனர். மேலும் முனிவரின் கடைசி காலம் எப்படி கழியும்?

சுபோபாயோக மற்றும் 'சுத்தோபயோகமுடன் ஆத்ம சுபாவத்தில் லயித்திருக்கக்கூடிய பாவலிங்கி முனிவர் ஐந்தாம் காலத்தின் இறுதிவரை அதாவது இன்றிலிருந்து கிட்டத்தட்ட 18500 ஆண்டுகள் வரை இருந்து கொண்டிருப்பர் மற்றும் ஜைன தருமத்தினுடைய செல்வாக்கு மற்றும் சிராவக தருமம், முனிதருமத்தினை கடைபிடிக்கும் வடிவில் பகவான் மகாவீரருடைய தர்ம சாஸனத்தினுடைய காலம் நடந்து கொண்டிருக்கும்.

உத்தரபுராணத்தின் 26வது சருக்கம், சுலோகம் 431–ல் ஆசாரியர் குணபத்திர சுவாமி கூறுகிறார். அதாவது ஐந்தாம் காலத்தில் ஒவ்வொரு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு வரிசையாக தருமத்தை அழிக்கும் கல்கிகளின் கடைசி அரசன் வடிவத்தில் 'ஜலமந்தன' எனும் பெயருடைய கடைசி கல்கி தோன்றுவான். அந்த சமயம் சந்திராச்சாரியரின் சீடன் வீராகஞ்ஜன் முனி தோன்றுவார். அங்கே ஸர்வஸ்ரீ ஆர்யிகை, அக்னில சிராவகர் மற்றும் பல்கூஸேநா பெயருடைய சிராவிகையும் இருப்பர். இவர்கள் அயோத்யா நகரில் உத்தம விரதத்தை கடைப்பிடிக்கும் உத்தம தர்மாத்மாவாக இருப்பர். ஐந்தாம் காலத்தின் 3 வருடம் எட்டரை மாதங்கள் மீதம் இருக்கும் போது கார்த்திகை மாதம் கடைசி நாள் விடியற்காலை நேரம் சுவாதி நட்சத்திரம் உதயமாகி இருந்து கொண்டிருக்கும் போது சல்லேகனை மரணமடைந்து முதலாம் சொர்க்கத்திற்குச் செல்வர். அதே நாள் நண்பகலில் அரசனுடைய மரணமும் நிகழும் மற்றும் மாலையில் நெருப்பினால் அழிவு ஏற்பட்டு விடும். மேலும் இதற்குப் பிறகு தருமம் கர்மத்தின் ஏற்பாடும் கூட முடிவுக்கு வந்து விடும்.

16. இன்றைய ஐந்தாம் காலத்தில் சம்யக் திருஷ்டியானவர், பாவலிங்கிக்குரிய மூல குணங்களை உடைய முனிவர்களை வணங்கத் தக்கவர் அல்லர் என்று கருதி அவர்களை வணங்காதவர்கள் என்னவாக இருக்கின்றனர்?

நிர்க்ரந்த நிர்வாண திகம்பர முத்திரையுடையவர்களை வணங்காதவர்கள் மித்யாதிருஷ்டியாக இருக்கின்றனர் என ஆசாரிய குந்தகுந்த சுவாமி கீழ்கண்ட காதைகள் மூலம் அஷ்டபாகுட நூலில் கூறுகிறார்

ஸஹஜு பண்ணம் ரூவம் டட்டும் ஜோ மண்ணஏ ண மச்சரிஓ ।
ஸோ மஞ்ஜபடிவண்ணோ மிச்சாஇட்டி ஹவஇ ஏஸோ" ॥ 24 ॥
அமராண வந்தியாணம் ரூவம் ட்ட்டூண ஸுலஸஹி யாணம் ।
யே காரவம் கரந்தி ய ஸம்மத்தவிஜ்ஜியா ஹோந்தி ॥ தர்சனபாகுடம் – 25 ॥

அதாவது மாத்ஸர்ய பாவம் (பொறாமை) காரணமாக எவர் இயல்பாக உள்ள நிர்க்ரந்த (திகம்பர பிறந்த மேனியில்) முத்திரையினை பார்க்கத் தகுதியில்லை எனக் கருதுவது அல்லது வணங்காது இருக்கின்றாரோ, அவர் மித்யாதிருஷ்டியாகிறார், விரும்பினால் அவர் சம்யமீயாகவே ஏன் ஆகக்கூடாது?

தேவர்களால் கூட வணங்கத்தக்க ஒழுங்கங்களுடன் கூடிய நிர்க்ரந்த முத்திரையினை பார்த்தும் எவர் தன்னைப் பெரியவன் எனக் கருதுகின்றனரோ, அவர்கள் கூட நற்காட்சியில்லாமல் இருக்கின்றனர்.

17. ஒரு சம்யமீ ஆசாரியர் மற்றும் உபாத்யாயர்கள் கூட நிர்க்ரந்த சாதுக்களை நமஸ்காரம் செய்து அவர்களை வணங்க வேண்டுமா என்ன?

ஆம். ணமோ லோஏ ஸவ்வஸாஹூணம் என்று கூறப்பட்டிருக்கிறதல்லவா; ஏனெனில் அவர்கள் நற்காட்சியுடன் இருக்கின்றனர். இதையே மேலேயுள்ள ''ஸஹஜுப்பண்ணம் ரூப்'' முதலிய இரண்டு காதைகளின் பாவம் என அறிந்து கொள்ள வேண்டும். கருத்து இதுதான். அதாவது ஆத்ம தியானத்திலிருந்து வெளிவந்த பிறகு ஒரு சம்யக்திருஷ்டி (நற்காட்சியாளன்) நிர்க்கந்த முனிவர் மற்றொரு நிர்க்கந்தரால் எப்பொழுது உண்மையான வியவகாரம் அல்லது ஸமாசார வடிவ செயலை செய்து கொண்டு நமஸ்காரம் முதலான மங்கலகரமான செயல் செய்து கொண்டிருக்கிறாரோ, அப்பொழுது எவர் இல்லற சம்யக்திருஷ்டியாக இருக்கின்றனரோ அவர்கள் இவ்விதமான சாதுக்களை மரியாதை செய்வது, வந்தனை முதலான செயல்களை எப்பொழுதும் மறந்து விடக்கூடாது, அப்படியில்லையெனில் நற்காட்சியினின்று விவர்ஜித (நழுவி) விட்டவராக ஆகிவிடுவர்.

18. அசுபோபயோகத்தினுடைய சொரூபம் எப்படி இருக்கிறது?

பிரவசனசார நூலில் கூறப்பட்டிருப்பதாவது

விஸயகஸாஓகாடோ துஸ்ஸுதிதுச்சித்ததுட்ட கோட்டிஜுதோ ।
உக்கோ உம்மக்கபரோ உவஓகோ ஜுஸ்ஸ ஸோ அஸுஹோ'' ॥ 2–66 ॥

எந்த உபயோகம் புலனின்ப விஷயங்களில் ஆழமாக மூழ்கியிருக்கிறதோ, அது பொய்யான சாஸ்திரங்களில், ஆர்த்த – ரௌத்ர வடிவ குற்றமுள்ள தியானங்களில் மேலும் ஒழுக்கமில்லாதவர்களின் தொடர்பில் பற்றுதல் இருக்கிறது. பாபங்களை வளர்ப்பதில் தீவிரமாக இருக்கிறது. மேலும் தீய வழிகளில் செல்ல தயாராய் இருப்பது அசுபோபயோகமாகும்.

19. அசுபோபயோகம், சுபோபயோகம் மற்றும் சுத்தோபயோகத்தின் பலன்கள் என்ன?

ஆசாரிய குந்தகுந்தசுவாமி பாரஸானுவேக்கா (த்வாதசானுப்ரேஷா)வில் கூறியிருப்பதாவது:–

அஸுஹேண ணிரயதிரியம் ஸுஹஉவஜோகேண திவிஜணரஸோக்கம் ।
ஸுத்தேண லஹஇ ஸித்திம் ஏவம் லோயம் விசிந்திஜ்ஜோ'' ॥ 42 ॥

அசுபோபயோகத்தினால் இந்த ஜீவன் நரகம் மற்றும் விலங்கு கதிகளின் துன்பத்தினை அடைகிறது. மேலும் சுபோபயோகத்தினால் சொர்கம் மற்றும் மனித கதிகளில் இன்பங்களைப் பெறுகிறது. ஆனால் இவ்விரண்டுகளின்று வேறுபட்ட சுத்தோபயோகத்தினால் மோட்ச சுகம் கிடைக்கிறது. இவ்விதமாக உலகத்தினைப் பற்றி சிந்திக்க வேண்டும்.

20. சொரூபாசரணவடிவ நிச்சய சாரித்திரத்தினுடைய சொரூபம் என்ன? மற்றும் அது எந்த ஆத்மாவிற்கு எந்த குணஸ்தானத்தில் கிடைக்கிறது?'

பிரசவசனசார நூலில் கூறப்பட்டிருப்பதாவது :–

சாரித்தம் கலு தம்மோ தம்மோ ஜோ ஸோ ஸமோத்திணித்திட்டோ ।
மோஹக்கோஹவிஹீணோ பரிணாமோ அப்பணோ ஹீஸமோ: ॥ 1–7 ॥

ஒழுக்கமே அறமாகும் மேலும் அந்த ஒழுக்கம் நடுநிலை உணர்வு வடிவமானது எனக் கூறப்பட்டு இருக்கிறது. மோகம் மற்றும் சோபை இல்லாமல் ஆத்மாவினுடைய பரிணாமமே நடுநிலை உணர்வாகும். இங்கு மோகம் என்ற சொல்லினுடைய பொருள் தரிசனமோகம் மேலும் க்ஷோபம் என்ற சொல்லினுடைய பொருள் சாரித்ரமோகம் ஆகும். ஏனென்றால் மோகனீய வினையினுடைய உதயம் பத்தாம் குணஸ்தானம் வரை இருக்கிறது. ஆதலால் அங்கு வரை, இவ்விதமான சமதா வடிவ ஒழுக்கம் தோன்றுவதில்லை ஆதலால் க்ஷபக ஸ்ரேணியில் எல்லா மோகனீய வினைகளுடைய அழிவு

ஏற்பட்டு விடுவதால் பிறகு பன்னிரண்டாவது குணஸ்தானத்தில் சொரூபாசரன ஒழுக்கம் உண்டாகிறது என எண்ணத் தகுதி இருக்கிறது. உதாரணமாக ஸ்ரீ அமிருதசந்திரசூரி அவர்கள் மேலே கூறியுள்ள காதையின் உரையில் வருணனை செய்துள்ளதாவது:

"ஸ்வரூபே சரணம் சாரித்தம் ஸ்வ–ஸமயப்ரவ்த்திரித்யர்த்: । ததேவ ச வஸ்துஸ்வ பாவத்வாத் தர்ம : । சுத்தசைதன்யப்ரகாசநமித்–யர்த: । ததேவ ச யதாவஸ்திதாத்ம குணத்வாஸாம்யம் । ஸாம்யம் து தர்சன சாரித்ர மோஹனீயோதயாபாதித ஸமஸ்த மோஹக்ஷோபா பாவாதத்யந்த நிர்விகாரோ ஜீவஸ்ய பரிணாம:। "

அதாவது சொரூபத்தில் லயித்து இருப்பது ஒழுக்கமாகும். ஸ்வசமயத்தில் (தன் ஆன்மனில்) பற்றுதல் கொண்டிருப்பது என்பது இதற்குப் பொருளாகும். அங்கேயே பொருளினுடைய இயல்பில் இருப்பதால் அறமாகும். தூய சைதன்யத்தினை பிரகாசிக்கச் செய்வது இதன் பொருளாகும். அங்கேயே உள்ளது உள்ளபடி இருக்கின்ற ஆத்ம குணம் இருப்பது நடுநிலை வடிவமாக இருக்கிறது மற்றும் அந்த சமதா, சமமில்லாமல் இருப்பதால் ஸுஸ்தித வினை (நடுநிலையாக உள்ள வினை) மேலும் சாரித்திர மோகனீய (ஒழுக்க மயக்கு வினையின்) உதயத்தினால் உண்டாகிற எல்லா மோகம் மற்றும் க்ஷோபம் (ராகத்வேஷம்) இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் மிகவும் விகாரமில்லாத பரிணாமம் ஜீவனுடையதாக இருக்கிறது.

இந்த சொரூபாசரண வடிவ நிச்சய அல்லது வீதராக சாரித்ரம் முழுமையாக மோகத்தை அழித்து உண்மையான கைவல்யம் தோன்றுவதற்கு காரணமாக இருக்கிறது. இதே போல சஹடாலாவில் கூட கூறப்பட்டிருக்கிறது. அதாவது சகல சம்யமத்திற்குப் பிறகு சொரூபாசரணம் முறையாக வருகிறது.

யோம் ஹை ஸகல ஸஞ்ஜம சரித ஸுனியே ஸ்வரூபா சரண அப ।
ஜிஸ் ஹோத ப்ரகடே ஆப்னீ நிதி மிடே பர கீப்ரவ்ருத்தி ஸப் ॥

அதாவது இந்த சகல சம்யம சாரித்ரம் (28 மூல குணங்கள் வடிவம்) என கூறப்பட்டிருக்கிறது. இப்பொழுது பிறவற்றின் மீதுள்ள பற்றுதல் எதனால் விலகி (மூன்று குப்திகளில் ஆத்மா மலினப்பட்டிருப்பதினால்) தன்னுடைய ஆத்மநிதி (அனந்த நான்மை வைபவம்) வெளிப்படுகிறது. இவ்விதமாக சொரூபாசரண சாரித்ரத்தினுடைய வருணனையினை கேட்பாயாக ।

இவ்விதமாக முனிவர்களின் சகலஸம்யமத்தின்போது (சமாதி முதலியவற்றின் நிலைமையில் கூட இந்த சொரூபா சரண சாரித்திரம் கூறப்படவில்லை.) சிரேணியிண் உயர்ந்த (தீவிரமான) தியானத்தில் எந்த சாரித்திரம் வெளிப்பட்டதோ அந்த இப்படிப்பட்ட சொரூபாசரண சாரித்திரம் சலனமில்லாத இல்லறநிலையில் ஏற்படவே ஏற்படாது.

21. சொரூபாசரண வடிவத்தினால் நிச்சய சாரித்ரம் க்ஷபக ஸ்ரேணியில் பன்னிரண்டாவது குணஸ்தானத்தில் ஏற்படுகிறது. அப்பொழுது வியவகார சாரித்ரம் எந்த நிலையில் இருக்கிறது?

ஆசாரியர் குந்தகுந்த சுவாமியானவர் வியவகார சாரித்திரத்தினை வருணனை செய்திருக்கும் சாரித்ரபாகுட நூலில் கூறியிருப்தாவது:

ஜிணணதிட்டி ஸுத்தம் படமம் ஸம்மத்தசரண சாரித்தம் ।
விதியம் ஸஞ்ஜமசரணம் ஜிணாணஸ நெசியம் தம் பி ॥ 5 ॥

சாரித்திரத்தின் இரண்டு பிரிவுகளில் முதல்பிரிவு ஸம்யக்த்வா சரணசாரித்திரமாகும். ஜினபக வானின் மூலமாக வெளிப்பட்ட ஞானம் மற்றும் நம் பிக்கையினால் சுத்த (தூய்மை) மடைவது.

இரண்டாவது பிரிவு ஸம்யமாசரண சாரித்ரமாகும். இதனுடையது கூட ஜினதேவரின் ஞானத்தின் மூலமாக உபதேசம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஜினமதத்தில் வியவகார சாரித்ரம் இரண்டு பிரிவுகளுடன் சொல்லப்பட்டு இருக்கிறது. முதலாவது சாரித்ரஸம்யக்த்வாசரண சாரித்திரம் ஆகும். இது நற்காட்சியின் எட்டு அங்கங்களை கடைபிடிப்பதுடன் அவிரத சம்யக்திருஷ்டி குணஸ்தானத்தில் யார் இருக்கிறாரோ அவரிடம் ஏற்படுகிறது. மற்றும் இரண்டாவது ஸம்யமாசரண ஒழுக்கமாகும். எவர் பதினோராவது பிரதிமா மற்றும் பன்னிரண்டு விரதம் மற்றும் ஸம்யதாஸம்யத குணஸ்தானம், விரதம் மற்றும் ஐம்பொறியினது தடை, ஐந்து மகாவிரதம் மற்றும் ஐந்து ஸமீதி, திரிகுப்தி முதலிய வடிவ பிரமத்த ஸம்யதன் முதலிய குணஸ்தானங்களில் ஏற்படுகிறது.

22. ஸமயசாரத்தில் எவருடைய சர்யாவின் (நடத்தையின்) வருணனை செய்யப்பட்டு இருக்கிறது?

ஸமயசாரத்தில் ஸ்ரமணர்கள் அதாவது முனிவர்களின் சர்யாவினுடைய வருணனை செய்யப்பட்டிருக்கிறது. ஆசாரியர் குந்தகுந்த சுவாமியானவர் ஸமயசாரத்தில் நிச்சய அல்லது வீதராக மும்மணி வருணனை செய்து இருப்பதில் நற்காட்சியின் எட்டு அங்கங்களின் வருணனையில் ''சத்தாரி வி பாய.....'' இவ்விதமாக எட்டு காதைகள் கூறப்பட்டிருக்கின்றன. அதில் சுத்தாத்மாவிலிருந்து அத்யாத்ம பரம முனிவர்களின் வீதராக சாரித்திரத்திலிருந்து அன்வயம் செய்திருப்பவர் (செய்யுளில் இருக்கும் வார்த்தைகளை வசன நடையில் மாற்றி அமைத்திருப்பவர்) வீதராக நற்காட்சியினை வருணனை செய்து இருக்கிறார். ஆனால் இல்லறநெறி முதலியவற்றில் வியவகார நற்காட்சியினை எட்டு அங்கங்களின் வருணனையினைச் ஸாபேக்ஷா (சார்ந்து) இருப்பதால் ஸராக நன்நம்பிக்கையாளர்களுக்காக விவரிக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் ஸமயசாரத்தில் கூறப்பட்டிருக்கிற சுத்தாத்ம யோகி முனிவர்களின் (வீதராக யோகி முனிவர்களின்) வீதராக நிச்சய சம்யக்தரிசனம் அல்லது மும்மணி, இல்லறத்தார்கள் மற்றும் பிரம்மத்த நிலையில் உள்ளவர்களின் வியவகார மும்மணியிலிருந்து தெளிவாக முற்றிலும் தனியானதாக இருக்கிறது. அதே காரணத்தினால் ஸமயசாரத்தில் வீதராகி ஸ்ரமணர்களின் மும்மணிமயமான சர்யாவினை (நடத்தையினை) முக்கியமாக செய்யப்பட்டிருக்கும் கூஷாயிக நற்காட்சியாளரான இராமன் முதலிய சிாவகர்களை மற்றும் அவர்களின் நடத்தையினை கௌணமாக (சொல்லப்படாமல்) வைக்கப்பட்டுள்ளது.

ஆசாரிய குந்தகுந்த சுவாமி ஸமயசாரத்தில் கூறியிருப்பதாவது.

பரமாணுமித்தியம் பி ஹு ய ராகாதீணம் து விஜ்ஜதே ஜஸ்ஸ I
ணவி ஸோ ஜாணதி அப்பாணயம் து ஸவ்வாகமதரோவி II 211 II
அப்பாணமயாணந்தோ அணப்பயம் சாவி ஸோ அயாணந்தோ I
கஹ ஹோதி ஸம்மதிட்டி ஜீவாஜீவே அயாணந்தோ II 212 II

விருப்பம் முதலானவை சிறிதளவு இருந்தாலும் கூட, அப்படிப்பட்ட ஜீவன் பன்னிரண்டு அங்கங்களை முழுமையாகக் கற்றறிந்த போதிலும் கூட ஆத்மாவினை அறிய முடியாது. எப்பொழுது அந்த ஆத்மாவினை அறியவில்லையோ அப்பொழுது அது பிற பொருள்களையும் கூட அறிய முடியாது. இவ்விதமாக எவர் ஆத்மா மற்றும் பிறவற்றினை அறிய முடியாதோ அது ஜீவன் மற்றும் அஜீவன் இரண்டையும் கூட அறிந்திருக்காத காரணத்தினால் நற்காட்சியாளராக எப்படி ஆக முடியும்? அதாவது எப்பொழுதும் ஆக முடியாது. ஆகையினால் எவர் விருப்புடன் இருக்கிறாரோ அவர் பரமார்த்த ஞானமில்லாததால் நற்காட்சியாளராக இல்லை. கருத்து இது தான், அதாவது ஸமயஸாரத்தில் வீதராகியை நற்காட்சியாளர் எனக் கூறப்பட்டிருக்கிறது, இங்கு நற்காட்சியாளரான ஜீவனைக் கூட நிச்சய அல்லது வீதராக நற்காட்சி நோக்கில் பொய் காட்சியாளன் எனக்

கூறப்பட்டிருக்கிறது. கீழே மித்யாத்வம் முதலான குணஸ்தானங்களின் நோக்கில் அவர் ஸராக சம்யக்திருஷ்டி எனக் கூறப்பட்டிருக்கிறது.

இதே விஷயத்தினை மேற்கூறிய இரண்டு காதைகளின் உரையில் ஜெயசேனாசாரியார் அவர்கள் ஓரிடத்தில் கூறியிருக்கிறார், அதாவது ''கிஞ்ச – ராகீ ஸம்யக்திருஷ்டிர்னபவதீதி'' பணிதம் பவத்தி: I தர்ஹி சதுர்த்த பஞ்சம பவதீதி'' பணிதம் பவத்தி : I தர்ஹி சதுர்த்த பஞ்சம் குணஸ்தானவர்தின: தீர்தங்கர – குமார – பரத – ஸகர – ராம் – பாண்டவாதய: ஸம்யக்திருஷ்டியோன பவந்தி?.... அத்ர து க்ரந்தே பஞ்சம் குணஸ்தானாது பாரிதன குணஸ்தான வர்தினாம் வீதராக ஸம்யக்த்ருஷ்டினாம் முக்யவ்ருத்யாக்ரஹணம், ஸராக ஸம்யக்திருஷ்டினாம் கௌணவ்ருத்தயேதி வ்யாக்யானம் ஸம்யக்த்ருஷ்டி வ்யாக்யானே காலே ஸர்வத்ர தாத்பர்யேண ஞாதவ்யம்''

பொருள் : ஐயத்துடன் ஒருவர் கேட்கிறார். அதாவது – ஆசையுடைய உயிர் நற்காட்சியாளனாக ஆவதில்லை. இப்படி கூறியிருக்கும் போது நான்காம், ஐந்தாம் குணஸ்தானங்களில் உள்ளவர்களான தீர்த்தங்கர குமாரர் பரதன், ஸகரன், இராமன் மற்றும் பாண்டவர்கள் முதலியவர்கள் நற்காட்சியாளர்களாக இருக்கவில்லையா? அப்படியில்லை. பொய்காட்சியாளர்கள் நோக்கில் **43** பிருக்ருதிகளுடைய பந்தம் இல்லாமல் இருப்பதால் அவர்கள் நற்காட்சியாளர்களாகின்றனர்.... ஆனால் இந்த நூலில் ஐந்தாம் குணஸ்தானத்திலிருந்து மேலே குணஸ்தானங்களிருப்பவர்கள் வீதராக நற்காட்சியாளர்களுடைய வளர்ச்சியின் முக்கியத்தைக் கருதி குறிப்பிடப்பட்டிருக்கிறது. மற்றும் விருப்புடன் கூடிய நற்காட்சியாளர்களை கௌணமாக்கப்பட்டிருக்கிறது. நற்காட்சியினை விளக்கும் போது எல்லா இடங்களிலும் இவ்விதமான கருத்துடனேயே அறிந்து கொள்ளவேண்டும். ''ஆதலால் ஐந்தாம் குணஸ்தானத்திற்கு மேலே வீதராகத் தன்மை ஆரம்பமாகிறது மற்றும் அப்படிப்பட்ட வீதராகிகளுக்காக ஸமய சார நூல் எழுதப்பட்டிருக்கிறது.

23. அத்யாத்மனில் சொரூபாசரணம் மற்றும் சுத்தோபயோகத்திற்கு சமமான சுத்தாத்ம அனுபவம் நிர்கிரந்த மற்றும் நற்காட்சியுடைய முனிவர்களுக்குமட்டுமே கிடைக்கிறது; அப்பொழுது நிர்விகல்ப சமாதி, சுவானுபூதி (தன் ஆத்ம அனுபவம்) மற்றும் அபேத மும்மணி வடிவ ஆத்ம தியானம் கிடைப்பது கூட அப்படிப்பட்ட முனிவர்களுக்கே ஏற்படுகிறதா அல்லது புலனடக்கம் விரதம் இல்லாத ஐம்புலனின்பங்களை விட முடியாத ஆசையுடன் கூடிய இல்லறத்தார்களுக்கும் ஏற்படுகிறதா?

அரே! நீ எவ்வளவு அறியாதிருக்காய், ஏனெனில் நான்காம் மற்றும் ஐந்தாம் காலங்களில் ஆகியிருக்கிற நிர்கிரந்த பாவலிங்கி சகல ஸம்யமி முனிவர்களின் வாழ்க்கையில் வைராக்கியம் மற்றும் பற்றினை விட்டுவிட்ட மகிமையினால் கிடைக்கப் பெற்றிருக்கின்ற இந்த நிர்விகல்ப சமாதி முதலிய நிலைமைகளினால் பற்றுடன் இருக்கின்ற இல்லறத்தார் வாழ்க்கையில் ஏற்பட்டு இருந்தால் அந்த உலகத்தில் இல்லறத்தான் மற்றும் பரமேஷ்டியார்களில் எந்த வித்தியாசமும் இருப்பதில்லை, அல்லது பஞ்சபரமேஷ்டிக்கு கீழே ''ணமோ க்ருஹஸ்தானம்'' இப்படி ஒரு ஆறாவது மந்திரம் இந்த கலிகாலத்தில் ஆக்கப்பட்டிருந்தால் அது ஒரு பெரிய பொய் நம்பிக்கையினை வளர்ப்பதாகி விடும். அல்லது முனிவர்களை பிரயோசனமற்றவராகிவிடுவர் மற்றும் இல்லறத்தார்களை குருதேவர் எனக் கூறி அழைப்பது ஸம்யக் எனக் கருதுவது சரியில்லை. பவ்வியனே! மேலும் நீ இந்த மேலே கூறிய நிலைமைகளின் தகுதியினை அறிய வேண்டுமெனில் கேள்! துவாத்ந்திரிம் சதிகா (சாமாயிக பாடம்) வில் அமிதகதி ஆசாரியர் கூறுகிறார்.

ஆத்மானமாத்மன் யவலோகமானஸ் த்வம் தர்சனஞானமயோ விசுந்த:I
ஏகாக்ரசித்த: கலு யத்ர தத்ர, ஸ்திதோSபி ஸாதிர்லபதே ஸமாதிம II 25 II

ஏ ஆத்மனே! நீ உன்னுடைய ஆத்மாவில், தன்னுடைய ஆத்மனை பார்த்தால் ஒருமுக சிந்தனையில் இருக்கும் முனிவர் எங்கே வேண்டுமானாலும் கூட இருக்கலாம். அவர் அங்கேயே சமாதியினை அடைந்து விடுகிறார்.

அதனால் தியானவடிவ சமாதியின் நிர்விகல்ப நிலையினை சாது (முனிவர்) பெற்றுவிடுகிறார். இந்த வருணனை தானே தெளிவாக இருக்கிறது. இதுபோலவே நிர்விகல்ப சமாதி தன் ஆன்ம அனுபவம் முதலிய நிலைமைகளில் தியான வடிவமே இருக்கிறது. மேலும் எந்த தியானத்தின் புகழின் காரணம் பன்னிரண்டு தவங்கள், சுருத அறிவு மற்றும் மஹாவிரதங்களை ஏற்றுக்கொள்ளுவது அவசியமாகும். முனியாகாமல் தியான சமாதியின் விஷயங்கள் காகிதப்பூ போல சாரமற்றதாகும்.

திரவ்யசங்க்ரஹ நூலில் கூறப்பட்டிருப்பதாவது:–

தவ ஸுதவதவம் சேதா, ஜாணரஹதுரந்தரோ ஹவேஜம்ஹா ।
தம்ஹா தத்தியணிரதா, தல்லத்தீ ஏஸதா ஹோஹ ॥ 57 ॥

பொருள்: தியானம் ஏற்பதின் தகுதித்தன்மையானது புருஷார்த்தம் (முயற்சி) இல்லாமல் ஒழுக்கம் ஏற்படாது. அதாவது தவம், சுருதம் மற்று விரதங்களை ஏற்றிருக்கும் ஆத்மாவே தியான வடிவமான தேரின் அச்சினை ஏற்றுக் கொண்டவராக இருக்கிறார். ஆகையால் அதனை அடைவதற்காக எப்பொழுதும் அந்த மூன்றினை அதாவது தபம், சுருதம் மற்றும் விரதம் ஆகியவற்றிற்குத் தயாராகுவாயாக!

****

சீர்ப்பூர் – பார்ஸ்வநாதர்

அதிகாரம் – 20

அனேகாந்த பார்வை

இந்த ஹுண்டாவஸர்ப்பிணி காலத்தில் எந்த 363 மதங்கள், தோன்றியிருக்கின்றனவோ அவற்றில் அனேகாந்தத்தினை அறிந்திருக்கும் கொஞ்சம் பவ்வியாத்மாக்களே தர்ம வழியினை காப்பாற்றி வருகின்றனர். எவர் அனேகாந்தம் மற்றும் ஸ்யாத்வாதத்தின் மையக்கருத்தினை அறிந்து கொண்டிருக்கின்றனரோ அவர்கள் பெரிய புண்ணியாத்மாக்களாக இருக்கின்றனர். ஒவ்வொரு பொருளும் அனேக தர்மங்களுடையதால், அதன் எந்த ஒரு தர்மமும் பிரயோசனமற்றதாக இருக்க முடியாது. அனேகாந்த பார்வையில், ஏதோவொரு தர்மத்தினை முக்கியம் அல்லது கௌணம் எனக்கருதுவது அதனுடைய முக்கிய நோக்கமாக இருக்கிறது. பொருளின் இயல்பினை முழுமையாக அறிவதற்கு சப்த பங்கியனுடைய ஏழுவகையான வழியில் ஆய்வது கூட பெரிய பயனளிக்கக் கூடியதாகும். இதே போல நயநோக்கில் வியவகாரம் – நிச்சயம் நோக்குகளில் பொருளை ஆய்வது கூட நமக்கு ஒரு சிறந்த கருவியாக இருக்கிறது. பரியாய, (மாறுகை) திரவிய (பொருள்) பார்வை கூட பொருளின் முழுமையான சொரூபத்தினுடைய அறிவு பெறுவதற்காகும். மற்றும் புண்ணியம் எது வரை உதயத்தில் இருக்கிறதோ அதுவரை சாதனை, சாத்தியத்தில் முடியும் என எண்ணுவது கட்டாயமாகும். இந்த எல்லா அத்யாவசியமான விஷயங்களுடைய வருணனை செய்து கொண்டிருக்கும் நிகட (அருகில்) பவ்வியர்களின் கல்யாணம் (முக்திமார்க்கம்) முழுமை பெற அனேகாந்த பார்வை என்ற இந்த அதிகாரத்தில் மிகவும் மதிப்பில் உயர்ந்த ஆகமங்களுடைய விஷயங்கள் எளிமையாக விளக்கப்படுகிறது.

1. அனேகாந்த பார்வையினுடைய பொருள் (அர்த்தம்) என்ன?

இந்த உலகில் அனேக பொருட்கள் பார்க்கவும், அறியவும் வந்து கொண்டிருக்கின்றன, அவை அனேக தருமங்களுடன் இருக்கின்றன என்கின்ற பார்வை அல்லது ஏற்றுக் கொள்ளுவதினுடைய பெயர் அனேகாந்த பார்வை எனப்படும்.

ஏதாவது ஒரு பொருளை எடுத்துக் கொண்டு, ஏதாவது ஒரு தருமத்தைப் பற்றி விவரிக்கிற போது மற்ற தருமங்கள் கௌணமாக (சொல்லப்படாமல்) இருக்கின்றன, ஆனால் பிரயோகப்படாமல் இருப்பது இல்லை. ஏனெனில், அவையெல்லாம் (முக்கிய, முக்கியமில்லாத) தருமங்களுடைய

பொருளின் இயல்பினை எடுத்துக் காட்டுவதில் ஒன்று மற்றொன்றினை முழுமையாக மறுப்பதில்லை. பொருளின் ஏதாவதொரு தருமத்தினை எல்லா விதத்திலும் இல்லையெனக் கருதுவதினால் பொருளினுடைய இயல்பு நிலையினை அடைய முடிகிறது. மேலும் பொருளினுடைய இலக்கணம் அல்லது சொரூபம் மறுக்கப்படவில்லை. ஆதலால் பொருளின் எல்லா தருமங்களின் (பட்சம், பக்கம்) அறிவினைப் பெறுவதற்காக அனேகாந்தம் அல்லது ஸ்யாத்வாதத்தினுடைய உதவியை எடுத்துக் கொள்ளுவது மிகமிக அவசியமாகும்.

2. ஸ்யாத்வாதம் என எதைக் கூறுவர்?

ஸ்யாத் என்ற சொல்லிற்குப் பொருள் ஒரு வகையில் அல்லது ஏதாவதொரு நோக்குப் பார்வையினால் வாதம் அதாவது வசன (பேச்சு) முறையினுடைய பெயர் ஸ்யாத்வாதம் ஆகும். இதே போல ஏதாவதொரு நோக்கு, பார்வை, விவக்ஷா, அவிவக்ஷா, முக்கியம் – கௌணம் (முக்கியமில்லாத) சொல்லப்பட்டது – சொல்லப்படாதது, நயம் – நயமின்மை மற்றும் அர்பித – அனர்பித வடிவ பேச்சுமுறையினால் விளக்குவது ஸ்யாத்வாத வடித அனேகாந்தம் என அழைக்கப்படுகிறது.

3. சப்தபங்கி என எதைக் கூறுகின்றனர்?

ஒரு சொல்லினை அல்லது பேச்சினை ஏழு விதங்களாகப் பிரித்து ஆய்வது சப்தபங்கி எனப்படும்.

சிறப்பம்சம் :– ஒரு சொல்லினை அல்லது பேச்சினை ஏழு வகையில் ஆய்ந்து அதனின் உண்மையைக் கண்டறியலாம். அதற்கு அதிகமாக இல்லை. ஏனெனில் எட்டாவது வகையில் எந்த விதத்திலும் ஆய்வு செய்ய முடியாது. மற்றும் இந்த ஏழு வகைகளுக்கும் குறைவாகக் கூட ஒரு சொல்லினை அல்லது பேச்சினை ஆய்வு செய்ய முடியும் எனக் கருதினால் ஏதாவது விடப்பட்டு விடலாம். (அதாவது பொருள் தத்துவத்தினை முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் ஏதாவது ஒரு பொருளின் செய்தி கூறப்பட்டிருக்கிறதெனில் அந்தச் செய்தி மூன்று சொற்களை (வடிவங்களை) அடிப்படையாகக் கொண்டு இருக்கிறது அல்லது இருக்க வேண்டும். அவையாவன 1. உண்டு, (அஸ்தி) 2. இல்லை (நாஸ்தி) 3. கூற முடியாத (அவக்தவ்யம்) வடிவம். இந்த மேற்கூறிய மூன்று பங்கிகளும் ஒன்றுக்கொன்று சேர்ந்து மூன்று ஜோடி சொற்கள் வடிவில் உண்டாகின்றன. 1. உண்டு இல்லை, (அஸ்தி – நாஸ்தி) வடிவம், 2. உண்டும் – கூறமுடியாது (உண்டு மற்றும் உரைக்க இயலாத அல்லது தகுதியில்லாத தன்மை வடிவம். 3. இல்லையும் மற்றும் கூற இயலாத தன்மை வடிவம்.

இவ்விதமாக ஒரு பங்கியில் மூன்றும் சேர்ந்து உண்டு, இல்லை மற்றும் கூறமுடியாது (அஸ்தி நாஸ்தி அவக்தவ்யம்) இவ்விதமாக பங்கி ஏழு விதங்களாக இருக்கின்றன. இந்த ஏழு பங்கிகளும் சேர்ந்திருப்பதனை ''சப்த பங்கி' எனப்படுகிறது. இதுபோலவே 'ஸ்யாத்' என்னும் சொல் (ஒரு வகையில் இப்படியும் உள்ளது) சேர்ந்தது அந்த ஏழு பங்கிகளின் பெயர்கள் இவ்விதம் உள்ளன.

1. ஸ்யாத் அஸ்தி (ஒரு வகையில் உண்டு)
2. ஸ்யாத் நாஸ்தி (ஒரு வகையில் இல்லை)
3. ஸ்யாத் அஸ்தி நாஸ்தி (ஒரு வகையில் உண்டும் இல்யும்)
4. ஸ்யாத் அவக்தவ்யம் (ஒரு வகையில் கூற முடியாதது)
5. ஸ்யாத் அஸ்தி அவக்தவ்யம் (ஒரு வகையில் உண்டு, கூற முடியாதது)
6. ஸ்யாத் நாஸ்தி அவக்தவ்யம் (ஒரு வைகயில் இல்லை கூற முடியாதது)
7. ஸ்யாத் அஸ்தி நாஸ்தி அவக்தவ்யம் – (ஒருவகையில் உண்டு, இல்லை, கூற முடியாதது)

(இப்பொழுது இந்த ஏழு விதமான பங்கிகளையும் இராமணின் உதாரணத்தை வைத்து விளக்கப்படுகிறது)

1. ஸ்யாத் அஸ்தி (ஒரு வகையில் உண்டு) : ஒவ்வொரு பொருளைத் தன் தன்மையால் அதாவது முன்னிலைப்படுத்தப்படுகிறது. உதாரணமாக – இராமன் தன் தந்தை தசாரதர் நோக்கில் மகன் ஆகும்.

2. ஸ்யாத் நாஸ்தி (ஒரு வகையில் இல்லை) ஒவ்வொரு பொருளும் பிற பொருள்களின் அல்லது பிற (விவரிக்கப்படாத) கோணங்களின் நோக்கு இல்லாமல் நாஸ்தி (இல்லை) வடிவமாக இருக்கிறது. உதாரணமாக இராமன் அரசர் ஜனகர் நோக்கில் மகனில்லை.

3. ஸ்யாத் அஸ்தி, நாஸ்தி (ஒரு வகையில் உண்டும், இல்லையும்) : இரண்டு கோணங்களின் வரிசைப்படிக் கூறுவதினால் பொருள் உண்டும், இல்லாமையும் காணப்படுகிறது. உதாரணமாக இராமன் தசரதன் மகன், ஆனால் ஜனகர் மகனில்லை.

4. ஸ்யாத் அவக்தவ்யம் (ஒரு வகையில் உரைக்க இயலாதது) : ஒன்றுக்கொன்று முரண்பாடான (உண்டு மற்றும் இல்லை என்கிற வடிவம்) இரண்டு பார்வைகளின் கோணங்களிலிருந்து ஒன்றாக ஒரு பொருளின் தன்மையினை உரைக்க இயலாது போய்விடும். ஆதலால் அந்த நோக்கினால் பொருள் தன்மையினை உரைக்க முடியாது அல்லது உரைக்கும் தன்மையினை உடையதாக இருக்காது. உதாரணமாக இராமன், அரசர் தசரதன் மற்றும் அரசர் ஜனகரையும் சேர்ந்து (ஒரு சொல்லாக) ஏதும் உரைக்க இயலாது.

5. ஸ்யாத் அஸ்தி அவக்தவ்யம் (ஒரு வகையில் ''உண்டு'' என உரைக்க இயலாது) : பொருளின் தன்மையினை உரைக்க முடியாத போதும் தன்னுடைய கோணத்தில் இருக்கிறதென அறிந்து கொள்ள வேண்டும். உதாரணமாக இராமன் இருந்த போதிலும் தசரதன் மற்றும் ஜனகரின் நோக்கில் ஒரே சொல்லில் உரைக்க இயலாத தன்மையுடையதாக இருந்த போதிலும் கூட அரசர் தசரதன் நோக்கில் மகனாவார்.

6. ஸ்யாத் நாஸ்தி அவக்தவ்யம் (ஒரு வகையில் இல்லையென உரைக்க இயலாமை) பொருள் தன்மையினை உரைக்க இயலாத போதும் கூட பிற பார்வை நோக்கில் ''இல்லை'' என்கிற வடிவில் உரைக்க இயலாததாக இருக்கிறது. உதாரணமாக இராமர் தசரதர் மற்றும் ஜனகர் ஒன்றாக இருக்கும் நோக்கில் ஒரே சொல்லின் மூலமாக உரைக்க இயலாது இருந்த போதிலும் கூட அரசர் ஜனகரின் நோக்கில் மகனில்லை.

7. ஸ்யாத் அஸ்தி நாஸ்தி அவக்தவ்யம் (ஒரு வகையில் உண்டும் – இல்லையும் என உரைக்க இயலாமை) : ஒன்றுக்கொன்று, முரண்பாடான (''உண்டு'' மற்றும் ''இல்லை'' யென்கிற வடிவம்) பார்வை நோக்கில் (ஒன்றாக ஒரே சொல் மூலமாக) உரைக்க இயலாததாக இருந்த போதிலும் கூட பொருள் வரிசையில் அந்த முரண்பாடு பார்வை நோக்கில் உண்டும் – இல்லையும் என்ற உரைக்க இயலாத வடிவில் இருக்கிறது. உதாரணமாக இராமர், அரசர் தசரதர் மற்றும் அரசர் ஜனகரின் நோக்கில் இரண்டும் சேர்ந்த வடிவில் எதுவும் உரைக்க இயலாததாக இருக்கிறது. ஆனால் ஒன்றான நோக்கில் உரைக்க இயலாததாக இருந்தும் கூட வரிசையினால் இராமர் அரசர் தசரதருடைய மகன், அரசர் ஜனகரின் மகனில்லை.

இவ்விதமாக ஒவ்வொரு பொருளின் விஷயத்தில் ஆய்வு செய்வதையே ஸ்யாத்வாதம் அல்லது அனேகாந்த பார்வை வடிவ உயரிய தருமம் ஆகும்.

ஒரு சமயத்தில் எத்தனை விஷயங்கள் பார்க்கப்படுகின்றனவோ, அவற்றினை எளிய முறையிலேயே கூறப்படுவதினால் அறிதல் மற்றும் பார்த்தல் நோக்கில் பல மடங்கு நேரம் ஆகிறது. உதாரணமாக

ஒரு அழகிய தோட்டத்தினைப் பார்ப்பதற்கு கொஞ்சம் நேரமே ஆகிறது. ஆனால் அதே தோட்டத்தில் பார்த்ததனை விவரிக்க பல நிமிடங்கள் ஆகின்றன. பல மணிநேரம் கூட ஆகின்றன. அப்பொழுது அந்த தோட்டத்தின் ஒவ்வொரு பக்கத்தையும் வரிசையாக விவரிக்க முடிகிறது. ஒரு பொருளின் ஏதாவதொரு பக்கத்தை விவரிக்கும் சமயம் மற்ற பக்கங்களின் விஷயங்கள் விடப்பட்டு விடுகின்றன. ஆனால் மற்ற பக்கங்களின் விஷயங்கள் அதில் அவசியம் இருக்கின்றன.

எப்படி என்பது இங்கு கூறப்படுகிறது. அதாவது – இராமன் அரசர் தசரதனுக்கு மகனாக இருந்தார். அந்த சமயம் இராமருடன் இருந்த சீதை, இலக்குமணன், லவ, குசலர் முதலிய பிற நபர்களின் நோக்கில், கணவன், சகோதரன் முதலியவர்களின் தொடர்பு கூறப்படாமல் விடப்பட்டிருக்கின்றன என்பது தான் உண்மை. இவ்விதம் அந்த விடப்பட்டிருக்கும் தொடர்பினை எப்பொழுதும் விட்டு விட்டால் அப்பொழுது இராமர் தொடர்பான அறிமுகம் முழுமையாகாமல் போய் விடும். மற்றும் இதே காரணத்தில் அந்த அறிமுகமும் உண்மையல்லாததாகவும், சாட்சியாகவும் இல்லாததாகி விடும்.

இந்த உண்மையற்ற அல்லது முழுமையற்ற தன்மையினை விலக்குவதற்காக ஜைன சித்தாந்தத்தில் ஒவ்வொரு வாக்கியத்துடன் ஸ்யாத் என்ற சொல்லினை வைத்து நிர்ணயம் செய்து கொடுக்கப்படுகிறது. ஸ்யாத் என்ற சொல்லிற்கு ''ஒரு வகையில்'' அதாவது ''ஏதாவது ஒரு பார்வையின் கோணத்தில்'' அல்லது ஏதாவதொரு நோக்கில்'' என்று பொருள் காணப்படுகிறது. அதாவது எந்தவொரு விஷயம் சொல்லப்பட்டு இருக்கிறதோ, அது ஏதாவதொரு நோக்கில் (ஏதாவதொரு பார்வையின் கோணத்தில்) கூறப்பட்டிருக்கிறது. இதிலிருந்து நன்கு தெரிய வருவதாவது: இந்த விஷயம் மற்ற பார்வையின் கோணங்களினாலும் அல்லது மற்ற நோக்கினாலும் மற்ற பல விதங்களில் கூட கூற முடியும்.

உண்மையான விளக்கத்தில் இராமரது விஷயத்தில் நாம் இப்படியும் கூறலாம். அதாவது ஒரு வகையில் (அரசர் தசரதர் நோக்கில்) இராமர் மகனாக இருக்கிறார். ஒரு வகையில் (சீதையின் நோக்கில்) இராமர் கணவனாக இருக்கிறார். ஒரு வகையில் (இலக்குமணன் நோக்கில்) இராமர் சகோதரனாக இருக்கிறார். ஒரு வகையில் (இலவ, குசலர்கள் நோக்கில்) இராமர் தந்தையாக இருக்கிறார். ஒரு வகையில் (அரசர் ஜனகரின் நோக்கில்) இராமர் மருமகனாக இருக்கிறார். கருத்து இதுதான் :– இராமர் மகனாக இருக்கிறார். ஆனால் அவர் எல்லா வகையிலும் மகனாக இல்லை. அவர் கணவராகவும், சகோதரனாகவும், தந்தையாகவும், மருமகனாகவும் கூட இருக்கின்றார். ஆம் அவர் அரசர் தசரதனது நோக்கில் மகனாகவே இருக்கின்றார், மற்றவர்களுக்கு இல்லை. இந்த ''ஒரு வகையில்'' என்ற சொல்லினால் பிற உறவுகளாகிய கணவர், சகோதரர், தந்தை, மருமகன் முதலியன நன்கு காப்பாற்றப்பட்டிருக்கிறது.

இரண்டாவது எடுத்துக்காட்டு : ஒரு வகையில் (இமயமலை நோக்கில்) பாரதம் தெற்கில் இருக்கிறது. மேற்கூறிய வருணனை வாக்கியத்திலிருந்து ஒரு வகையில் என்ற சொல்லிலிருந்து இதுவே ஒலிக்கப்பட்டு இருக்கிறது. அதாவது பாரத தேசம் எல்லா விதத்திலும் தெற்கில் இல்லை. ஆனால் அல்லது சொல்லப் போனால் மற்ற பார்வை கோணங்களிலிருந்து வேறு திசைகளிலும் கூட இருக்கிறது. அதாவது ஒரு வகையில் (இந்து மகா சமுத்திர நோக்கில் பாரத தேசம் கிழக்கு திசையில் இருக்கிறது. ஒரு வகையில் (ஆப்கனிஸ்தான் நோக்கில்) பாரத தேசம் கிழக்கு திசையில் இருக்கிறது. ஒரு வகையில் (மியான்மார் தேசத்தின் நோக்கில்) பாரத நாடு மேற்கு திசையில் உள்ளது.

மூன்றாவது எடுத்துக்காட்டு – ஒரு வகையில் (முக்காலத்திலும் அழியாதிருக்கிற பொருள் நோக்கில்) உயர் நிலையானது. இதிலிருந்து கூறப்படுவதாவது உயிரின் நிலைத்தல் தன்மையானது வேறு

ஏதாவதொரு கோணத்தின் (நோக்கில்) நிலையாமை தன்மையும் கூட கிடைக்கப் பெறுகிறது. அதாவது ஒரு வகையில் பரியாய (பிறவி) நோக்கில் (மனித, விலங்கு முதலியன அழியும் உடல்கள் நோக்கில்) உயிர் நிலையற்ற தன்மையுடையதாகும். இந்த உண்மையும் கூட காப்பாற்றப்பட்டிருக்கிறது.

முடிவு : இது போல மேற்கூறிய வருணனைகள் ''ஒரு வகையில் (நோக்கில்) என்ற பதம் இருப்பதினால், பொருளில் உள்ள மற்றும் கௌணமான, (பேசப்படாத) விஷயங்களின் இருப்புத் தன்மையினை ஏற்கப்படுகிறது. இதனால் உலகத்தின் எல்லா விஷயங்களும் விவாதம் முடிவுக்கு வருகிறது அல்லது அமைதி ஏற்படுகிறது. இதுவே ஸ்யாத்வாத மயமான அனேகாந்த தருமத்தின் சாரமாகும்.

4. சிலர் வியவகாரம் உண்மையல்லாதது எனக் கூறுகின்றனர், ஆதலால் விடக்தக்கது என்கின்றனர். இதற்கு விளக்கம் தரவும்.

இதற்குத் தெளிவான பதில் பின்வருமாறு:– உலகியல் தொடர்பான பாபங்களைக் கட்டிக் கொள்ளப்படும் வியவகாரத்தில் உன்னுடையது – என்னுடையது முதலான பொய் நம்பிக்கைக் கொள்வதினால் வினைக் கட்டிற்கு காரணமாக இருப்பதைப் போன்ற உண்மையல்லா வியவகாரங்களை அவசியம் விடத் தகுந்தவையாகும். இப்படிப்பட்ட வியவகாரம் ஒரு நாள் உலகியல் தொடர்பு, பற்று ஆகியவற்றினை தியாகம் செய்து தீட்சை ஏற்றுக் கொள்வதினாலும் மற்றும் தரும தியான வடிவமான சாமாயிகம் மற்றும் ஆறு ஆவஸ்யங்களைச் சார்ந்து இருப்பதினால் தானே இழக்கப்படுகிறது. ஆனால் வியவகார நயம் அனேகாந்த மயமான பொருளின் இயல்பினை அறிவதற்குக் காரணமாக இருக்கின்றது எதுவோ அல்லது எது பன்னிரண்டு அங்கங்களின் விஷயமாக இருக்கிறதோ, எந்த வியவகாரத்தினால் சுத்தோபயோகம் அல்லது சுக்கில தியானத்திற்கு விஷயமாக இருக்க முடியுமோ மற்றும் எது கேவலியின் திருமொழியினால் கூறப்பட்டிருக்கிறதோ, அது முக்கியம் கௌணம் தவிர விடக் கூடிய பொருளாக இல்லை. ஏனெனில் வியவகார நயம் ஏழு நயங்களில் அடங்கியிருக்கிறது. அது இல்லாமல் அனேகாந்த தருமத்தினை அறிந்து கொள்ள முடியாது. ஆதலால் அதனை எப்படி விட முடியும்? ஏனெனில் இந்த வியவகார நயம் விடத் தகுந்தது அல்லது விலக்க முடியாததாக இருந்தால் பூர்வ ஞானி ஆசாரியர் மற்றும் குந்த குந்தாசாரியர் கூட நிச்சயத்துடன் தன்னுடைய சுருதத்தில் அல்லது ஜினாகமத்தில் வருணனை ஏன் செய்துள்ளார்? ஆதலால் வியவகார நயத்தினை மறந்தும் கூட விட்டு விடக் கூடாது. அதனின் உதவியுடன் பொருளது இயல்பினை அல்லது தத்துவத்தினை ஆழ்ந்து தெரிந்து கொள்ளவும். உனது – எனது என்பது போன்ற உலகியல் தொடர்பான வியவகாரம், முனிவர்கள் மூலமாக ஏற்கனவே விடப்பட்டிருக்கிறது மற்றும் யோகிகள் எப்பொழுது ஆத்மாவை சார்ந்திருக்கின்றாரோ அப்போது அவர்களுடைய உண்மையான அல்லது ஆன்மீயம் தொடர்பான செயல் எது உண்மையான வியவகாரமோ, அதுகூட தன்னுடைய சாமாயிகம் அல்லது தியான வடிவ நிச்சய நிலையினை சார்ந்திருக்கும் நேரத்தில் தானாகவே விடப்பட்டு விடுகிறது.

ஆதலால் முதலாவதாக உண்மையல்லாத வியவகாரத்தினை விடுவதே அறிவுடமையாகும்.

5. ஆன்மீயத்தினை ருசிப்பவர்களில் சிலர் பரியாயப் பார்வை விட வேண்டுமென்கின்றனர். எந்த பரியாயத்தினை விட வேண்டும் என்று அவர்கள் விளக்கவில்லை. அல்லது பரியாயாரித்திக நயத்தினையே அவர்கள் ஏற்கவில்லையா? அல்லது பரியாயத்தில் விருப்பு, வெறுப்பினை விட்டு விடுகிறார்களா? இதற்குத் தகுந்த பதில் வழங்கவும்.

எந்த மனிதர் பரியாயப் பார்வையினை விட்டுவிட்டு இந்த விளக்கத்தினால் பரியாயம் அல்லது பரியாயார்த்திக நயத்தினுடைய விளக்கத்தினையே ஏற்கக் தகுந்தல்ல அல்லது பொய்யானது எனக்

கருதுகிறாரோ அவர் பெரிய அஞ்ஞானியாகும். ஏனெனில் பொருளின் இலக்கணமே ''குண பர்யாயவத்திரவ்யம்'' (த.சூ.அ–5–சூ38) எனக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது பொருள், குணம், பரியயங்களுடனிருக்கிறது. பரியாயத்தினை ஏற்காவிடில் அப்பொழுது பொருளினுடைய இலக்கணமே முற்றுப் பெறாததாகிவிடும். மற்றும் பரியாயார்த்திக நயத்தினை ஏற்காவிடில், உயிரினுடைய நிகழ்கால நிலைமை என்னவாக இருக்கிறது, அல்லது நர, (மனித) நாரக முதலிய நிலைமைகளுடைய விளக்கம் அல்லது அறிவு கூட ஏற்பட முடியாது. மேலும் நான்கு கதிகளுடைய விளக்கங்களைக் கொடுக்கின்ற அல்லது தூய்மையற்ற உயிரின் (வினை) ஊற்று, பந்தம் முதலிய நிலைமைகளின் விளக்கங்களைத் தருகின்ற ஷட்கண்டாகமம், கஷாய பாகுடம், கோமடசாரம் மற்றும் திரிலோகசாரம் முதலிய ஆகமநூல் பயன்படாது மற்றும் பொய்மை விலகாது. ஆதலால் பரியாயம் (மாறுகை நோக்கு) பார்வையினை விடுவது அதாவது பரியாயத்தில் விருப்பு – வெறுப்பு அல்லது புற்கலம் முதலிய திரவியங்களின் பரிவர்த்தனையில் (மாறுதலில்) விருப்பு – வெறுப்புகளை விடவும் என்று பொருள் கொள்ளுவதே உத்தமம் ஆகும். மற்றும் ஆற்றல் நோக்கில் விதையிலிருந்து மரமும் அல்லது பாலிலிருந்து நெய்யும் இலக்காக இருப்பதைப் போல, இந்த தூய பொருளின் இலக்கு வைத்திருக்கின்ற தன்னுடைய தூய்மையற்ற பரியாய வடிவ பொருளினை தூயதாக்குவதற்கான பிரயாசை அல்லது புருஷார்த்தத்தினைச் (முயற்சியினை) செய்யவும் என்கின்ற விளக்கம் கூட, கூற முடியும்.

பரியாயப் பார்வையினால் பொருளது ஒரு தருமம் அல்லது நிலைமை காணப்படுகிறது. இந்தப் பார்வை கேவலி பகவானுக்குக் கூட எப்பொழுதாவது இருக்குமென்கின்ற விளக்கம் பன்னிரண்டு அங்க ஜினவாணியில் வருகிறது. சுக்கில தியானத்தில் கூட (ப்ருதக்த்வ விதர்க வீசாரத்தில்) பொருளிலிருந்து பொருளது இடைவெளி, பரியாயத்திலிருந்து பரியாய இடைவெளி முதலானவற்றின் சிந்தனை ஓடுகிறது. ஆதலால் இந்த பரியாயத்தினுடைய விஷயம் சுக்கில தியானத்தில் கூட இருக்கிறது. பிறகு எப்படி இந்த பரியாயச் சிந்தனையினை விட முடியும். இந்த சிந்தனையினை விடுவதில் அல்லது பரியாய நயத்தினை விடுவதில் ஏகாந்தப் பார்வை ஏற்படுவதால் நற்காட்சி அல்லது நன்நம்பிக்கையும் கூட விலகி விடும், மற்றும் பொய்மை எனும் பகைவன் வந்து பயமுருத்துவான். ஆகையினால் பரியாயத்தில் விருப்பு வெறுப்பு கொள்ளுவது சரியல்ல.

திரவிய சங்க்ரஹ நூலில் கூட, விருப்பு, வெறுப்புகளுக்கு பரிகாரம் செய்து கொண்டிக்கும் முனிவர் ஒருவர் பரியாயம் முதலியவற்றினை சிந்தனை செய்து நிச்சய தியானத்தினை அடைகிறார்.

ஜம் கிஞ்சிவி சிந்தந்தோ, ணரீஹவித்தீ ஹவே ஜதா ஸாஹு ।
லப்தத்வாவூணய ஏயதம், ததாஹ தம் தஸ்ஸ ணிச்சயம் ஞாணம் ॥ 55 ॥

எப்பொழுது சாதுவானவர் ஒருமுக சிந்தனை கிடைக்கப் பெற்று ஏதாவது ஒரு பொருளினை அல்லது பரியாயத்தினை சிந்தனை செய்து இச்சையில்லாதவராக வளர்ச்சியடைந்திருக்கிறரோ, அந்த சமயம் அவருடைய தியானம் நிச்சய தியானம் எனக் கூறப்பட்டிருக்கிறது.

6. விரதம், புலனடக்கத்தினை புறக்கணிக்கின்ற நிச்சய ஆபாஸிகள் கூறுகின்றனர், அதாவது சிராவக நிலைமையிலும் புண்ணியத்தையும் விட்டு விடு, புண்ணியம் விடத் தக்கது, புண்ணியம் பிறவிக்குக் காரணமாக இருக்கின்றது, புண்ணியம் பொன் விலங்காகும் என இவ்வாறு பிரச்சாரம் கூட செய்கின்றனர். அவர்களுடைய இவ்வாறான மனோபாவம் சரியா? தவறா? அல்லது சிராவக நிலையில் இவ்விதம் கூறுவது பெரிய அறியாமையாக இல்லையா?

தீவிரமான விருப்பப் பார்வை இல்லாமல் அவற்றினை இவ்வாறு விளக்குவது ஒருபோதும் சரியில்லை. இப்படிக் கூறுவதினால் அவர்களுக்கு சாஸ்திர அறிவே இல்லை என்றாகிறது.

ஏனெனில் **"சுப:புண்யஸ்யாசுப: பாபஸ்ய"** என தத்வார்த்த சூத்திரம் (அத் 6/3) கூறுகிறது. அசுபயோகம் (மனம், மொழி, மெய் ஆகியவற்றின் அசுபச் செயல்) பாப பிரக்ருதிகளின் (வினைகளின்) கட்டிற்குக் காரணமாகும். மற்றும் சுப யோகம் (மனம்–மொழி – மெய் ஆகியவற்றின் சுபச் செயல்) புண்ணிய பிரக்ருதிகளின் (வினைகளின்) கட்டிற்குக் காரணமாகும். புண்ணிய பிரக்ருதிகளின் பலத்தினால் உத்தம கதி, உத்தம ஸம்ஹனனம் (உடல் அமைப்பு) ஜைன குலம், மற்றும் விரதம், புலனடக்கத்திற்குக் தகுதியான விசுத்தி பதவி, ஐம்பெரும் கலியாணங்களை செய்யக்கூடிய பிறவியில் அவதரிக்கும் சௌதர்மன் மற்றும் இந்திரன் முதலான பதவி மேலும் சமவ சரணத்தில் அறங்கேட்கும் சக்கரவர்த்தி பதவி முதலியன தனிச் சிறப்புடைய புண்ணியத்தின் பலனாக இருக்கின்றன. இதுவரை அதாவது அரகந்த நிலை மற்றும் சமவசரண சிறப்பு கூட அதிசய புண்ணியத்தினுடைய பலன் என அறியத் தகுந்தது ஆகும் என ஆகமத்தில் **"புண்ண பலா அரஹந்தா"** எனக் கூறப்பட்டிருக்கிறது. இதனைத் தவிர பாப வினையினுடைய பலம் நரகம், நிகோதம் முதலிய தாழ்ந்த கதி, ஹுண்டக ஸம்ஸ்தானம் (சிறிதும் பெரியதுமான உடல் உறுப்புகளை ஏற்றத் தாழ்வு அடைந்த உருவம்), நீச கோத்திரம், ஜகன்ய (குறைவான) ஸம்ஹனனம் (உடலமைப்பு) தீயகுலம் மற்றும் ஆர்த்த, ரௌத்ர தியானத்தில் இருந்து கொண்டிருப்பதினால் அடைந்த பாபவினையின் பலன் என அறிந்து கொள்ள வேண்டும். மேற்கூறிய விளக்கத்தினை தியானத்தில் இருத்தாதவர்கள் புண்ணியத்தினை விட்டு விடு எனக் கூறுகிறார்கள். அவர்களுடைய கருத்தாவது :– புண்ணியச் செயல்களாகிய விரதம், தானம் மற்றும் பூசை முதலியன தார்மீகச் செயல்கள் எனவும், அவற்றினால் புண்ணிய கரும பந்தம் உண்டாவதாகக் கருதுகின்றனர். மேலும் காரணத்தில் காரியத்தினை ஏற்றி அந்த விரதம் முதலியவற்றினையே **"அன்னமேவப்ராணம்"** என்பதற்குச் சமமாக புண்ணியம் என்ற சொல்லினைக் கூறியிருக்கிறார்கள். அவற்றினை விட்டுவிட வேண்டும் என அறிந்திருக்கிறார்கள். ஆனால் புண்ணியத்தினை விட்டு விடுவதினால் பாபத்தில் தான் செல்ல வேண்டியிருக்கும். ஏனெனில் புண்ணியம் – பாபம் என இந்த கருமங்கள் இல்லாமல் மூன்றாவதான கருமம் எதையும் காண்பிக்க முடியாது. மற்றும் இப்படிப்பட்ட புண்ணியம் அதாவது தருமத்தை விட்டு விடு எனக் கூறுவதினால் எங்கேயும் அவற்றினுடைய எந்த அசுப ஆயுள், கதி முதலியவற்றினுடைய பந்தம் அப்போது ஏற்படுவதில்லை. இந்தக் காரணத்தினால் அவர்களிடம் இப்படிப்பட்ட பரிணாமம் (எண்ணம்) அதாவது தருமத்தை விட்டு விடும் எண்ணம் தோன்றியிருக்கின்றது.

புண்ணிய கருமத்தினுடைய அழிவினை எவர் செய்கிறார் அல்லது புண்ணிய விலங்கினை (தளையினை) எப்பொழுது யார் குறைக்கின்றார்? இதற்குப் பதில் இதுதான். அதாவது அரகந்த நிலைமையினை அடைய முதலில் காதி வினைகள் அழிக்கப்படுகின்றன, அதில் ஒரு நோக்கில் முக்கியமாக எல்லா பாபப் பிரக்ருதிகளே இருக்கின்றன. காதி வினைகளை அழித்த பிறகு கேவலி பகவானே புண்ணியப் பிரக்ருதிகளையும் அழிக்கின்றார். அல்லது அந்த கேவலி அரகந்தர் விதிப்படி அதே பிறவியிலேயே மோட்க்ஷத்தினை அடைகிறார். மோட்க்ஷமடைவதற்கு முன்னர் கடைசி இரண்டு சுக்கில தியானங்கள் மூலமாக அகாதிவினைகள் (அதில் புண்ணிய வினைகளும் இருக்கின்றன) நான்கையுமே விதிப்படி கழிவதையும் அடைகின்றார். ஆனால் இவ்வளவு சிறப்பு அங்குள்ளது. அதாவது அந்த அரகத்த தேவரானவர் எப்பொழுது இல்லற வாழ்க்கையினைத் துறந்து முனி தீட்க்ஷையினை ஏற்றிருந்தாரோ அப்பொழுது புண்ணியத்தினை விடாமல் புண்ணியத்தின் பலனை அதாவது ஐம்புல விஷயங்களை (பரிக்ரஹம் – பொருள் பற்று முதலியனவற்றினை) அவசியம் விட்டுவிட்டு இருக்கிறார். (அந்த விஷயங்கள் அல்லது பரிக்ரஹத்தினைப் பற்றி தங்களால் எதுவும் பேச முடியாது. ஏனெனில் அந்த புலனின்ப விஷயங்கள் முதலியன அனந்தானந்த முறை கிடைக்கப் பெற்று நரகம் நிகோதம் முதலியவற்றிற்குக் காரணமாக இருந்திருக்கின்றன) ஆதலால் நாம் முதலில்

புண்ணியத்தினை மோட்சத்திற்கு உதவி புரிவதாகக் கருதி, அனந்த காலத்திலிருந்தே கிடைக்கப்பெற்று வந்திருப்பதினை மலத்திற்கச் சமமான பாவங்களை மற்றும் புலனின்ப விஷயங்களை முதலில் விடுவது அறிவுடைமையாகும். பிறகு புண்ணியம் தானே கழிந்து விடும். இதனை சிந்தனை செய்வது விலக்க முடியாததாக இல்லை. புண்ணியம் செய்! இப்படி அறவோர்கள் மூலமாக சொல்லப்படுகிறபொழுது தருமம் செய்! எனப் பொருள் கொள்ள வேண்டும் ஏனெனில் அறச்செயல் செய்வதினாலேயே புண்ணியம் கிடைக்கிறது. இப்படிப்பட்ட புண்ணியம் **"புனத்யாமானம் பூயதேநேநதி வா புண்ணியம்"** (ஸ.ஸி. 613) எது ஆத்மாவினை தூய்மையாக்குகிறதோ அல்லது எதனால் ஆத்மா தூய்மையாகிறதோ, அது புண்ணியம் என அழைக்கப்படுகிறது. நன்நம்பிக்கையுடன் செய்யப்பட்ட புண்யானுபந்தி புண்ணியம் நம்மை மோட்சத்திற்கு தகுதியடையச் செய்யும் கருவியாக இருக்கிறது. இவ்வளவு மட்டுமல்ல. புண்ணியம் செய்யும் போது ஒன்றாகவே நான்கு செயல்கள் நிகழ்கின்றன. அவை என்னவெனக் கேட்டால், எந்த சமயம் புண்ணியச் செயல் செய்யப்படுகிறதோ அப்பொழுது புண்ணிய வினையின் ஊற்றும் அதே சமயம் புண்ணிய வினைக்கட்டும் கூட ஏற்படுகின்றன. இது போலவே பாப வினை அந்த சமயம் வருவதில்லை, ஆதலால் பாப வினையின் செறிப்பும் கூட ஏற்படுகிறது. மேலும் முன்னர் பந்திந்த வினைகளின் உதிர்ப்பும் கூட நிகழுகின்றது.

ஆகையினால் புண்ணிய கருமம் செய்வதுடன் பாபகருமங்களின் செறிப்பும், உதிர்ப்பின் இலாபம் கூட ஏற்படுகிறது. ஆதலால் முதலில் புண்ணியத்தினை இல்லாமல் பாபத்தினையும் விடப்பட்டு விடுகிறது. ஜெயதவளா என்னும நூலின் 13ம் பகுதியில் கூறப்பட்டிருப்பதாவது :– **"ஸம்மாதிட்டிவஸத்த கம்மாணம் அணுபாகம் கதாபி ண ஹணதி"** நற்காட்சியாளன் (பிரசஸ்த) புண்ணிய பிரக்ருதிகளின் அனுபாகத்தின் (பலன்களைக் கொடுக்கும் சக்தி) எப்பொழுதாவது கூட உதிர்ப்பு நிகழ்வதில்லை. அதாவது முதலாவதாக பாபவினைகளின் உதிர்ப்பே நிகழ்கின்றது.

அந்தரிக் பார்ஸ்வநாதர் – சீர்ப்பூர்

அதிகாரம் – 21
ஒழுக்கமும் பண்பான நடத்தையும்

சிஷ்ட (பண்பு) அதாவது நல்ல உயர்ந்த அறவோர்களுடைய நியாயமான மற்றும் நீதியான வழிகளில் செல்லுவதையே அவர்களுடைய ஒழுக்கத் தன்மை மற்றும் பண்பான நடத்தை எனக் கூறப்படுகிறது. அதற்காக, எல்லாவற்றிற்கும் முதலாக நம்முடைய வணங்கத்தக்க ஜினாலயம், ஜினேந்திர தேவர், ஆகமம் மற்றும் உண்மையான குருமார்கள் ஆகியவர்களுக்கு முன்னால் பணிவுள்ளவராக இருக்க எப்படி தெரிந்து கொள்ளுவது? எப்படி என்னென்னக் கூறவேண்டும்? மற்றும் தரும க்ஷேத்திரங்களில் எதிலிருந்து விலகியிருக்க வேண்டும்? எதனால் தருமச்சாதனை ஏற்படாது? இவ்விதமாக தருமசபாவில் நம்முடைய செய்கை எப்படி இருக்கும்? அங்கு நிலைமையை நாம் எப்படி ஒழுங்கு படுத்தி அழகாக அமைக்க முடியும்? மேலும் சாதாரணமாக உலகத்தில் அல்லது சமுதாயத்தின் நடவடிக்கைகள் மீது நம்முடைய பார்வையும், செயலும் எப்படி இருக்கவேண்டும்? மற்றும் அந்த நடவடிக்கைகளினால், சமுதாயத்தில் வேர் ஊன்றி இருக்கும் தீய பழக்க வழக்கங்கள் அழியவும் மற்றும் ஜைனர்களின் அல்லது ஞானியர்களின் கடமை அல்லது அறிவில் தேடுதல் அல்லது ஆராய்ச்சி நடக்கச்செய்ய முடியும். இந்த விஷயத்தினை கவனத்தில் கொண்டு தன்னுடைய பேறு கிடைப்பதினாலேயே ஏற்றுக் கொண்ட தன்னுடைய வாழ்க்கையினை செம்மைப்படுத்துவதற்குக் காரணமான குருகுலங்களின் வழக்கப்படி இந்த கடைசி இருபத்தொன்றாவது அதிகாரமாக ''ஒழுக்கமும் பண்பான நடத்தையும்'' சிந்தனை செய்து அமைக்கப்பட்டிருக்கிறது.

1. ஜிநாலயம் தொடர்பான ஒழுக்கங்களும் நடைமுறைகளும் யாவை?

ஜிநாலயம் தொடர்பான ஒழுக்கங்களும் நடைமுறைகளுமாவன:–

1. ஜிநாலயத்திற்கு வெளியே கை, கால்கள், முகம் முதலிய உடலுறுப்புகளை கழுவிக் கொண்டு, தூய்மையுடன் ஜினாலயத்தில் நிஸ்ஸஹி–நிஸ்ஸஹி–நிஸ்ஸஹி எனக் கூறிக் கொண்டே உள்ளே நுழைய வேண்டும். ஜினாலயத்திலிருந்து வெளியேறும் போது அஸ்ஸஹி–அஸ்ஸஹி –அஸ்ஸஹி எனக் கூறிக் கொண்டே வெளிவர வேண்டும்.
2. ஜிநாலயத்திற்கு உள்ளே தோல் பொருட்கள் (பர்ஸ், பெல்ட்), நகப்பூச்சு, உதட்டுப்பூச்சு ஆகிய பொருட்களுடன் செல்லக் கூடாது.
3. ஜிநாலயத்திற்குள் பகவானுக்கு நேராக நிற்காமல் வழிவிட்டு பிறர் எவருக்கும் பகவானை தரிசனம் செய்ய இடையூறு விளைவிக்காமல் நிற்க வேண்டும்.
4. ஜிநாலயத்தில் பூஜை என்ற பெயரில் தூய்மையற்ற பூஜைப் பொருட்களை வைக்கக் கூடாது மற்றும் தேங்காயினை உடைக்கக் கூடாது அல்லது துருவக் கூடாது. ஏனெனில் தூய்மையற்ற பொருட்களைக் கொடுப்பதினால் இம்சை மற்றும் தேங்காய் உடைப்பதினால் பலி கொடுக்கும் குற்றம் வந்துவிடுகிறது.
5. ஜிநாலயத்திற்குள் சுவரில் சாய்ந்து கொண்டு உட்காரக் கூடாது. ஏனெனில் இது சோம்பலுக்கு அடையாளமாகும். மேலும் இப்படி உட்கார்ந்து இருப்பதினால் தூக்கம் வரக்கூடும்.
6. ஜிநாலயத்தில் வீட்டுச் சமாச்சாரங்கள், உண்ணல், குடித்தல் அல்லது வியாபாரம்

தொடர்பான பேச்சுக்கள் பேசக்கூடாது. ஏனெனில் வீண்பேச்சுகளினால் பாபம் பந்தமாகிறது.

7. ஜிநாலயத்தில் பரிகாசமாகச் சிரிக்கக் கூடாது ஏனெனில் இது நாகரீகமற்ற தன்மைக்கு அடையாளம் ஆகும்.
8 பூஜை, தோத்திரப் பாடல், ஜபம் செய்து கொண்டு ஒருமுக சிந்தனையில் இருக்க வேண்டும். இங்குமங்கும் பார்த்துக் கொண்டு இருக்கக் கூடாது.
9. ஜிநாலயத்தில் பகவான் முன் தூங்கக்கூடாது. ஏனெனில் இது பகவானிடம் பணிவின்மையைக் காட்டுகிறது.
10. வீதராக பகவானின் ஜினாலயத்தில் தன்னையோ அல்லது மற்றவர்களையோ சிருங்காரம் செய்யக் கூடாது. ஏனெனில் அதனை ஆகமங்களில் 'ஆஸாதனா (மதிக்காமை) குற்றம் இருப்பதாகக் கூறப்பட்டிருக்கிறது.
11. ஜிநாலயத்தில் எவரிடமும் சண்டையோ மற்றும் வசவுச் சொற்களையோ உபயோகிக்கக்கூடாது. இப்படிச் செய்வதினால் மிகப் பெரிய பாபம் ஏற்படுகிறது.
12. ஜிநாலயம் தொடர்பான எந்தப் பொருளையும் வீட்டுப் பணிக்காக எடுத்து வரக்கூடாது. மேலும் தம்மால் கொடுக்கப்பட்ட பூஜைப் பொருள்கள் முதலியவற்றினை வீட்டு உபயோகத்திற்காக கொண்டுவரக் கூடாது.
13. ஆலயம் தொடர்பாக தம்மால் வாக்களிக்கப்பட்ட செல்வம், பணம் முதலானவற்றினை சீக்கிரமாக அல்லது அதிகப்படியாக ஒரு மாதத்திற்குள் ஏற்பாடு செய்து கொடுத்து விட வேண்டும்.
14. ஜிநாலயத்தில் பகவான் மற்றும் உண்மையான திகம்பர முனியினை சாஷ்டாங்கமாக அல்லது பஞ்சஅங்க நமஸ்காரமும், மற்றும் ஆர்யிகா, ஐலக், சுல்லக், சுல்லிகா ஆகியவர்களை பஞ்சஅங்க நமஸ்காரம் செய்ய வேண்டும்.
15. மேற்கூறிய வேடங்கள் தரித்திருப்பவர்களைத் தவிர்த்து குலிங்கியர்கள் மற்றும் அலங்காரம், வண்ண உடைகள் முதலியவற்றுடன் உலகியலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் தேவ, தேவியர்களை, சாஷ்டாங்க, பஞ்சஅங்க நமஸ்காரம் மற்றும் பூஜை, அர்க்கியம் சமர்பிப்பது, ஆரதி, அலங்காரம் முதலியச் செயல்களைச் செய்யக்கூடாது. ஏனெனில் பொய்நம்பிக்கையினுடைய குற்றம் வருகிறது. ஜிநாலயம், புலடைக்கமுடையவர், தபஸ்வீகளை ஆராதனை செய்யும் இடமாகும், அதாவது புலனடக்கமில்லாதவர்களுக்கு அல்ல.
16. புலனடக்கமில்லாத சராகியர்களை (விருப்புவெறுப்புடையவர்களை) அல்லது இல்லறத்தார்களை வாருங்கள்–வாருங்கள் மற்றும் ஜெய்ஜினேந்திரா என விளித்து அழைப்பதனை ஜிநாலயத்திற்கு வெளியே வைத்துக் கொள்ள வேண்டும். வீதராகி குரு முன் அழைக்கக்கூடாது.
17. எவராவது மயில் பீலியுடன் தனக்காக கார், தொலைபேசி, செல்வம், பணம், பாதரட்சை (செருப்பு), தலைப்பாகை முதலியவற்றினை வைத்திருந்தால், ஒரு முறைக்கு அதிகமாக உண்பவர், சோப்புக் குளியல், முடி திருத்தம், தாடி மழித்தல் முதலியன செய்து கொண்டும், தந்திரம், மந்திரம், ஜோதிடம் திருமணத்திற்காக தாலி, வளையல் முதலியன தயார் செய்வது போன்ற செயல்களை செய்து கொண்டிருக்கின்ற விபரீதமான வேடதாரிகள் ஜிநாலயம் அருகில் வந்தால் அல்லது வேறு இடங்களில் சந்தித்தால் அவர்களை கல்லால் ஆன படகு போன்றவர்கள் என அறிந்து தூரத்திலேயே விட்டு விட வேண்டும். வீதராகத்தன்மையினை ஆராதிப்பதால், அவர்களை வணங்குவது, பணிவு காட்டுவது போன்றவைகளைச்

செய்தால், அப்போது சாது நிலைக்குத் தகுதியான செயல்களை ஆமோதிப்பதுடன் அவற்றினால் குரு மூடமாகிய பொய் நம்பிக்கையினுடைய குற்றம் வருகிறது.

2. வீதராகி தேவர் (ஜினேந்திர பகவான்) முன் நம்முடைய நடைமுறை ஒழுக்கங்களை எவ்விதம் கடை பிடிக்க வேண்டும்?

ஜினேந்திர பகவான் முன் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை ஒழுக்கங்களாவன:–

1. உடல் மற்றும் ஆடைகள் சுத்தமில்லாமலும் மற்றும் அசுத்தமான பொருட்களுடன் ஜிநேந்திரபகவான் அருகில் (கர்ப்பகிரஹத்தில்) செல்லக் கூடாது.
2. பெண்கள் பகவானைத் தொடக் கூடாது.
3. மூக்கு, காது, தொடர்பான எந்த விதமான அழுக்கையும் ஜிநேந்திர பகவான் முன் அல்லது ஆலயத்தில் எறிதல் கூடாது.
4. பகவானின் கந்தோகத்தினை எடுக்கும்போது கந்தோகத்தின் ஒரு துளி கூட தரையில் படக்கூடாது, மற்றும் தலை, நெற்றி போன்ற உயர்ந்த அங்கங்களைத் தவிர மற்ற அங்கங்களில் கந்தோதகம் முதலியன இட்டுக் கொள்ளக் கூடாது.
5. பகவானின் முன்போ அல்லது ஜினாலயத்திலோ வைத்தியம், தந்திரம், மந்திரம், ஜோதிடம் முதலியச் செயல்களைச் செய்வதும் அல்லது திருமணம் போன்ற உலகியல் தொடர்பான பேச்சுகள் பேசக்கூடாது.
6. சொத்து, பணம் பற்றிய சர்ச்சை மற்றும் உரத்த குரலில் பேசும் கூட்டங்கள் சபை பகவான் முன் நடத்தக் கூடாது.
7. பகவானின் முன் அல்லது ஜிநாலயத்தில் செருப்பு, ஷூ, சாக்ஸ், அணிந்து கொண்டு செல்லக் கூடாது.
8. பகவான் முன் அல்லது ஜிநாலயம் பக்கம் காலை நீட்டிக் கொண்டு தூங்கக் கூடாது.
9. விலங்குகளின் தோலினால் ஆன ஆடைகள் மற்றும் கம்பளி ஆடைகளுடன் பகவான் அருகில் செல்லக் கூடாது
10. பகவானின் முன் தலை வாரக் கூடாது மற்றும் எண்ணெய், குங்குமம், பொட்டு, போன்ற அலங்காரங்கள் செய்து கொள்ளக் கூடாது.
11. தானியங்கள் மற்றும் வற்றல், வடாம் போன்ற உணவுப் பொருள்களை பகவான் முன்னரோ அல்லது ஜிநாலயத்திலோ காய வைக்கக் கூடாது.
12. மாமிசம் சாப்பிடுபவர்கள், மது குடிப்பவர்கள் மற்றும் உண்ணத் தகாத பொருட்களை உண்பவர்கள் ஜிநாலயத்திற்குள் புகக் கூடாது. அப்படிப்பட்டவர்கள் ஆலயத்திற்கு வெளியே இருந்து தரிசனம் செய்ய வேண்டும்.
13. பகவான் முன்பு அல்லது ஆலயத்தில் பிரசாதங்களை பங்கிடக்கூடாது மற்றும் பிரசாதங்களை சாப்பிடவும் கூடாது.
14. பகவான் முன் அல்லது ஜிநாலயத்தில் ஹோலி (காமன் பண்டிகை) கொண்டாடக்கூடாது. பாட்டாசு வெடிக்கக்கூடாது. இப்படிப்பட்டச் செயல்களை முற்றிலுமாக தியாகம் செய்துவிடல் வேண்டும். அப்படிச் செய்வதினாலேயே நாம் இம்சை, மரபு வழக்கங்களை விலக்க முடியும்.
15. ஜிநாலயத்தில், அரசனுக்கு அல்லது அரசுக்குப் பயந்து, ஆயுதங்கள், அம்பு போன்ற கருவிகள் வைத்திருக்கக்கூடாது.
16. பகவானின் முன்பு அல்லது அருகில் அல்லது ஜிநாலயத்தில் கால்நடைகளை கட்டிவைக்கக் கூடாது.

17. பகவானின் முன்பு கடன் கொடுக்கல், வாங்கல், இலஞ்சம் வாங்கக் கூடாது.
18. கையைக் கழுவாமல் ஆகமம் மற்றும் கந்தோகந்தினை தொடக் கூடாது.
19. பகவான் அல்லது வீதராகி தேவன், ஆகமம், குரு ஆகியவர்களைக் காட்டிலும் உயர்வான ஆசனங்களில் அமரக் கூடாது.
20. பகவானின் முன்பு அல்லது ஜிநாலயத்தில் மனதில் விகாரத்தைத் தோற்றுவிக்கும் சித்திரம் முதலியன வைத்திருக்கக்கூடாது.
21. பகவான் முன்பு முதுகைக் காட்டிக்கொண்டு உட்காரக் கூடாது.
22. பகவானின் படிமத்தை ஒரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு, எடுத்துக் செல்லும் சமயம் தொப்பிளுக்கு கீழே வைத்து எடுத்துச் செல்லக் கூடாது.
23. பகவானின் மூர்த்தி வரும் போது உட்கார்ந்திருக்கக் கூடாது. அதாவது பணிவுடன் எழுந்து நின்று ஜெய! ஜெயா! எனக் கோஷமிட வேண்டும்.

3. ஆகமம் (சாஸ்திரம்) தொடர்பாக செய்யக் கூடாதவைகள் அல்லது சாஸ்திரத்திற்கு பணிவு காட்டுவது தொடர்பான நடைமுறை ஒழுக்கங்கள் யாவை?

சாஸ்திரத்திற்கு (ஆகமம்) பணிவு காட்டுதல் தொடர்பான ஒழுக்கங்களாவன:–

1. சாஸ்திரத்தினை சபைக்கு கொண்டு வரும்போதும், எடுத்துச் செல்லும்போதும் உட்கார்ந்திருக்கக் கூடாது. அதாவது எழுந்து நின்று கொண்டு பிரணாம முத்திரையில் (தலைவணங்கி) ஜயகோஷம் எழுப்ப வேண்டும். அதாவது ஜினவாணி மாதாவிற்கு ஜே! என கோஷம் எழுப்ப வேண்டும்.
2. சாஸ்திரத்தினை (ஆகமத்தினை) கை, முகம், முதலியவற்றினை சுத்தம் செய்யாமல் தொடக்கூடாது.
3. தோல் சாமான் மற்றும் பட்டு முதலியவற்றினால் ஆன ஆடைகளுடன் சாஸ்திரம் படிக்கக் கூடாது அல்லது கேட்கக் கூடாது.
4. சாஸ்திரம் படிக்க ஆரம்பிக்கும் முன், ணமோகார மந்திரம் அல்லது மங்கலாசரணம் படிக்காமல் ஆரம்பிக்கக் கூடாது. (அதாவது) சாஸ்திரம் படிக்க ஆரம்பிக்கும் முன்னரும், பின்னரும் ணமோக்கார மந்திரம் அல்லது சாஸ்திர பக்தி அவசியம் படிக்க வேண்டும்.
5. சாஸ்திரத்தினை தன்னுடைய தொப்பிளுக்குக் கீழே வைத்துக் கொண்டு செல்லக் கூடாது. அதாவது எடுத்துச் செல்லும் சமயம் தனது தொப்பிளுக்கு மேலே வைத்து எடுத்துக் செல்ல வேண்டும்.
6. சாஸ்திரங்களை மடியில் வைத்து படிக்கக் கூடாது.
7. சாஸ்திரத்தின் பக்கங்களை எச்சில் தொட்ட கையினால் புரட்டக் கூடாது.
8. சாஸ்திரத்தினை சுவற்றில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு படிக்கக்கூடாது.
9. சாஸ்திரப் பயிற்சி படுக்கையில் படுத்துக் கொண்டே செய்யக் கூடாது. ஏனைனில் படுக்கை கூட அசுத்தமாக இருக்கக் கூடும். மற்றும் தற்செயலாக தூக்கம் வந்து சாஸ்திரம் கைநழுவி கீழே விழுந்து விடலாம்.
10. ஆகமத்தை நோக்கி காலை நீட்டிக் கொண்டு படுக்கக் கூடாது.
11. சாஸ்திரம் முன்பு அல்லது சாஸ்திரப்பயிற்சியில் மற்றும் சாஸ்திர தொடர்பான அறச்பையில் காலை நீட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கக் கூடாது.
12. சஸ்திரம் படிக்கும்போது விகதா (உலகியல் அல்லது வீட்டு தொடர்பான பேச்சுகள்) பேசக் கூடாது.

13 சாஸ்திரம் படிக்கும் போது பரிகாசமாகச் சிரிக்கக் கூடாது.

14 சாஸ்திர நூல்களை தரை மீது வைக்கக் கூடாது. அதாவது சிக்குப்பலகை, ஸ்டூல் முதலிய உயர்வான இடத்தின் மீது வைக்க வேண்டும்.

15 பயங்கரமான கால்வலி போன்ற நோய்கள் இருக்கும் சமயம் தவிர நாற்காலி, பெஞ்ச் முதலியவற்றின் மீது கால்களை கீழே தொங்க விட்டுக் கொண்டு சாத்திரம் படிக்கக் கூடாது. அதாவது பர்யாங்காசனம் (இரண்டு முழங்கால்களையும் சேர்த்து மேலும் கீழுமாக அமைத்தல்) அல்லது பத்மாசனம் (இரண்டு முழங்கால்களையும் சேர்த்து சமமாக அமைத்தல்) முதலிய சிறந்த ஆசனங்களுடன் அமர்ந்து சாத்திரம் படிப்பதினால் சாத்திரத்திற்கு விநயம் (பணிவு) செலுத்துவதுடன் நம்முடைய அறிவும் வளர்ச்சியடைகிறது.

16 சாத்திரத்தின் பாதுகாப்பிற்குக் காரணமாக இருக்கின்ற அட்டை போடாமல் நீண்ட நாட்கள் வரை படிக்கக் கூடாது. அதாவது முதலிலேயே சாஸ்திரத்திற்கு நல்ல அட்டை, போட்டு பாதுகாக்காமல் விட்டால் அதன் அட்டையை எடுத்து விட்டுப் படிக்க வேண்டும். ஏனெனில் அப்படிச் செய்யாவிட்டால் சாஸ்திரம் விரைவிலேயே கிழிந்து விடும்.

17 சாஸ்திரத்திற்குள் ரூபாய் நோட்டு, பைசா மற்றும் வீட்டு சம்பந்தமான திருமணப் பத்திரிகை போன்றவைகளை வைக்கக் கூடாது.

18 புலால், மது முதலிய அசுத்தமானைவகளை உண்ணுபவர் கையில் ஆசாரியர்களால் இயற்றப்பட்ட சாஸ்திரங்களை தானமாகக் கொடுக்கக் கூடாது. அதாவது அப்படிச் செய்வது சாஸ்திரத்திற்கு பணிவின்மை காட்டுவதாகும். அவர் அசுத்தப் பொருள்களை விலக்குவதாக உறுதி எடுத்துக் கொண்டு சாஸ்திரத்தினை நல்ல விதமான உரிய மரியாதையும், உபயோகம் செய்ய முடியுமெனில் பிறகு சாஸ்திர தாணம் அளிக்கலாம்.

19 சாஸ்திரத்தினை படிக்கும் போது மற்றும் வெளியிடும் போதும் சாஸ்திரத்தில் பொய் நம்பிக்கை வடிவமான உலக வழக்குத் தொடர்பான வாதம் மற்றும் பற்றுடன் கூடிய தேவ தேவியர்களின் படங்கள் இருக்கக் கூடாது.

20 சாஸ்திரம் வெளியிடும் சமயம், சாஸ்திரத்தில் ஏழு வியசனங்கள் மற்றும் இம்சை தொடர்பான பொருட்கள் பற்றிய விளம்பரமோ, வியாபாரத்தின் பெயரோ இருக்கக் கூடாது.

4 உண்மையான திகம்பர முனிமகராஜ் முன்னால் செய்யத் தகாத செயல்கள் மற்றும் நடத்தைகள் எவை ?

1. முனிமகராஜ் அருகில் வரும் போது உட்கார்ந்திருக்கக் கூடாது. அதாவது எப்பொழுது சிராவகர் சாமாயிகம், பூஜை முதலிய முக்கியமான செயல் செய்யாமல் இருந்தால் அந்த சமயம் குரு அருகில் வருவதைப் பார்த்தால் எழுந்து நின்று கொண்டு வணக்கம் செலுத்தும் நிலையில் தகுந்த பணிவு, நமஸ்காரம் முதலியன செய்ய வேண்டும்

2. முனிமகராஜினை கை, கால், முகம் முதலியவற்றினை சுத்தம் செய்யாமலும், சாக்ஸ், ஷூ, செருப்பு, தோல் முதலிய பொருட்களுடன் தொடக் கூடாது.

3. பெண்கள் முனிமகராஜினை தொடக்கூடாது.

4. முனிமகராஜ் தியானம், சாமாயிகம், பிரதிக்ரமணம் முதலிய முக்கியமான அவசியமான செயல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அவரிடம் எவரும் பேசக் கூடாது மற்றும் அவரை தொடவும் கூடாது.

5. முனிமகராஜினை தரிசக்க அல்லது அவரிடமிருந்து நியமம் (விரதம்) ஏற்க, மற்றும் சந்தேகத்தினை விளக்கிக் கொள்ள, பெண்கள் தனியாகச் செல்லக் கூடாது. அதாவது குறைந்தது இருவராவது செல்ல வேண்டும்.

6. முனிமகராஜினை தரிசிக்க அல்லது அவரிடமிருந்து நியமம் ஏற்க, கேள்வி பதில் முதலிய ஆண்மீகம் தொடர்பான செயல்களை அருகில் உட்கார்ந்துக் கொண்டோ அல்லது நின்று கொண்டோ நமஸ்காரம் செய்யக் கூடாது. அதாவது குருவிடமிருந்து குறைந்தது 5,6,7 முழம் தூரம்) கீழே அமர்ந்து கொண்டு நமஸ்காரம் செய்து கொண்டு தரிசனம் மற்றும் ஆன்மீகச் செயலைச் செய்ய வேண்டும்.
7. முனிமகராஜ் முன்னால் உரக்கவோ அல்லது விகாரமான பேச்சுக்களையோ பேசக் கூடாது.
8. முனிமகராஜினை நிந்தனை செய்யக் கூடாது நிந்தனை செய்து எழுதக்கூடாது மற்றும் கேட்கவும் கூடாது.
9. முனிமகராஜின் சாஸ்திரத்தில் உள்ள உண்மையான விஷயத்தினை, திரிபுடன், விபரீதமாக (எதிர் மறையாக) எடுத்துப் பேசக்கூடாது.
10. முனிமகராஜின் முதுகு பக்கம் நிற்கக் கூடாது.
11. முனிமகராஜின் பக்கம் முதுகைகாட்டிக் கொண்டு உட்கார்ந்து கொண்டும், நின்று கொண்டும் இருக்கக் கூடாது.
12. முனிமகராஜினை கெட்ட எண்ணங்களுடன் பார்க்கக் கூடாது.
13. முனிமகராஜிடமிருந்து ஏற்றுக் கொண்ட விரதத்திற்கு பங்கம் (தடை) வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அதாவது தான் ஏற்றுக் கொண்ட எல்லை வரை கடைபிடிக்க வேண்டும்.
14. முனிமகராஜிக்காக அசுத்தமான அல்லது அநியாயத்தினால் பெறப்பட்ட ஆகாரம் அல்லது உபகரணத்தை சமர்பிக்கக் கூடாது.
15. முனிமகராஜிற்கு முன்னால் வீட்டுத் தொடர்பான, வியாபாரம், மக்கள், அரசியல், தொடர்பான சர்ச்சை செய்யக் கூடாது.
16. உயிரினங்களின் இம்சையுடன் கட்டப்பட்ட புதிய வீடு, தொழிற்சாலை திறத்தல், கடை திறப்புவிழா, வாங்கப்பட்ட பாத்திரங்களை உபயோகிக்க ஆரம்பம் முதலிய செயல்களை, உயிரினங்களின் இம்சையினையும், பொருள் பற்றினையும் துறந்த சாதுக்கள் மூலமாக செய்யக் கூடாது.
17. முனிமகராஜ் மற்றும் சீடர் எதிரெதிரே உட்கார்ந்து கொண்டிருக்கும் பொழுது ஏதாவது தார்மீகத்திற்கு அவசியமான செயலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அவர்களை விட்டு விட்டு நடுவில் புறப்பட்டுச் செல்லக் கூடாது.
18.. திகம்பர சாதுக்களுக்கு வீட்டு வேலையாட்கள், தீய பழக்கவழக்கங்களை உடையவர்கள் மற்றும் குரு தரும சேவைக்குப் பதிலாக செல்வம் முதலியவற்றின் ஆசை மற்றும் லோப முடையவர்களினால் அளித்த தானம் முதலியவற்றின் மூலமாக வையாவிருத்தியம் அல்லது சேவை செய்யக் கூடாது. அதாவது தானே சுயமாக பாவனையுடன் முனிச் சேவை செய்ய வேண்டும்.
19. குருவிற்கு முன்னால் உயர்ந்த ஆசனத்தில் உட்காரக் கூடாது.

5. தருமசபை (அற மண்டபம்) தொடர்பான ஒழுக்கமும், பண்பான நடத்தைகளும் ஏவை?

1. தரும சபையில் மங்கலாசரணம் பாடுவதற்கு முன்னரே சென்றடைய வேண்டும். மற்றும் மிகவும் அவசியமான செயலைத்தவிர வேறு எதற்கும் இடையில் சபையினை விட்டு வெளியே செல்லக் கூடாது. ஏனெனில் இப்படிச் செய்வது சாஸ்திரம் மற்றும் அறங்கூறுபவருக்கும் பணிவு காட்டாமை யாகும்.
2. அறச்சபையில் உண்மையான சாது அல்லது தகுதியுடைய உண்மையான அறங்கூறுபவர்

வருகிறபொழுது எழுந்து நின்று கை கூப்பி அவரவர்களுக்குரிய தகுதியான வணக்கங்களைச் செலுத்த வேண்டும்.

3. அறச்சபையில் ஆத்மீக விஷயங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது, அவற்றினைக் கவனமாகக் கேட்க வேண்டும். மற்றும் அவற்றினைத்தவிர வேறு விஷயங்கள் பற்றிப் பேசிக் கொண்டிருக்கக் கூடாது.
4. அடுத்து மீண்டும் நினைவு கூறுவதற்காக அறச்சபை தொடர்பான ஆகம கருத்துக்களை தனது நோட்டு புத்தகத்தில் குறித்துக் கொள்ள வேண்டும்.
5. அறச் சபையில் அறங்கூறுபவர் பார்வையில் அமர்ந்திருக்க வேண்டும்.
6. அறச்சபையில் பரிகாசமாகச் சிரிக்கக்கூடாது. இங்கும் அங்கும் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது. ஏனெனில், இதனால் அறங்கூறுபவருக்கும், அறங்கேட்பவருக்கும் பாதை (தடங்கல்) உண்டாகும்.
7. உண்மையான அறங்கூறுபவர் மூலமாக அறச்சபையில் நடந்து கொண்டிருக்கும் விஷயங்களில் ஏதேனும் அறிய விரும்பினால் அறங்கூறுபவரின் ஆணைக்காக எழுந்து நின்று, ஆணை கிடைத்தவுடன் மென்மையான குரலில் உடனடியாக விஷயத்தை விட்டுவிடாமல் கேட்க வேண்டும்.
8. அறச் சபையில் பயமின்றியும், ஆசையில்லாமலும், சுயநலமில்லாமலும் மற்றும் தற்காலிக சூழ்நிலைக்கு ஏற்றவாறு, பவ்விய உயிர்களின் முன்னேற்றத்தின் எண்ணத்துடன், தார்மீக விஷயங்களை ஆகமத்திற்கு ஏற்ப தெளிவான விளக்கம் தரவேண்டும்.
9. அறச்சபையில் மேற்கூறியபடி தெளிவாக விளக்கமளிக்க சாமர்த்தியம் இல்லையெனில் மௌனம் காப்பது நல்லது.
10. அறச்சபையில் பொய் நம்பிக்கையினை வளர்க்கின்றவர் அதாவது விருப்பு – வெறுப்புடன் கூடிய தேவ, தேவியர்களுக்கு பூஜை செய்ய மற்றும் பொய்ம்மையை விவரிக்கின்றவர் எவரேனும் இருந்தால், பொய்ம்மையைக் கூறுவதினால் நமது அந்தரங்கத்தில் பொய்ம்மைக் கருத்தினைக் கொண்டிருக்கும் பாவனை இல்லாமல் இருந்தாலும் மற்றும் அப்படிக்கேட்பதினால் பொய்ம்மை வளரும் என்கிற பயமிருந்தால் சபையை விட்டு வெளியே சென்று விட வேண்டும்.

6. உலகத்தில் உண்மையான வியவகாரம் உண்டாகி இருப்பதற்காக பொதுவான நடவடிக்கைகள் எப்படி இருக்க வேண்டும்?

பொதுவான நடவடிக்கைகள் :

1. ஏதாவது ஒரு நிறுவனம் அல்லது சொந்தக்காரர் தார்மீக புனித இடத்தில் தங்குவதற்கு அல்லது அங்குள்ள பொருட்களை உபயோகப்படுத்துவதற்கு அந்த நிறுவனத்தினை நிர்வகிக்கின்ற மேலாளர் போன்றவர்களிடம் அனுமதி பெறல் வேண்டும்.
2. ஏதாவது ஒரு புனிதமான இடத்தின் அல்லது நிறுவனத்தின், எவராவது பொருள்களை உபயோகித்த பிறகு, சிராவகர்கள் அந்த நிறுவனம் நிர்ணயித்த கட்டணத்தைச் செலுத்தி கணக்கினை தீர்வு செய்ய வேண்டும்.
3. புனித இடத்தில் அல்லது பொது இடத்தில் குப்பைக் கூளங்களை சேர்க்கக்கூடாது. தம் மூலம் ஏதாவது குப்பை கூளங்கள் சேர்ந்து விட்டால் அதனை கவனமாக சுத்தம் செய்தல் வேண்டும்.
4. கேட்காமல் அல்லது அனுமதி பெறாமல் எவரது வீட்டிலேயோ அல்லது அலுவலகத்திலோ

அல்லது கடையிலோ குறிப்பிட்ட எல்லைக்கப்பால் அல்லது எல்லைக்குள் செல்லக் கூடாது.

5. எவரும், பெட்டி, அலமாரி அல்லது காகித பொட்டலம் முதலியவற்றிற்குள் கட்டிவைத்திருக்கும் பொருட்களை அனுமதி இல்லாமல் திறந்து பார்க்கக் கூடாது. ஏனெனில் அப்படிச் செய்தால் திருட்டுக் குற்றம் வருகிறது.

6. மலம் கழிக்கச் செல்லுகிற பொழுது தன் கையில் தூய்மையான நீரினை எடுத்துக் கொண்டு தூரமாகச் சென்று மறைவில் உட்கார்ந்து கொண்டு கழிக்க வேண்டும். பிறகு நீரினால் கைகளை குறைந்தது மூன்று முறையாவது மண் துகள்களைக் கொண்டு சுத்தப்படுத்த வேண்டும். சிறு நீர் கழிக்கச் சென்ற பிறகும் கூட கைகால்கள் முதலிய அங்கங்களை நீரினால் அவசியம் சுத்தம் செய்ய வேண்டும். அதற்குப் பிறகே சாஸ்திரம் முதலிய புனிதமானப் பொருள்களைத் தொட வேண்டும்.

7. மற்றவர்களால் வைக்கப்பட்டிருந்த, அடகு வைக்கப்பட்ட, மறந்து விட்ட, சிறிய – பெரிய, விலைகுறைந்த அல்லது விலை அதிகமான முதலான எப்பொருளாயிருந்தாலும் அவற்றினை பொருளது சொந்தக்காரரின் அனுமதியில்லாமல் எடுத்துக் கொள்ளக் கூடாது அல்லது மற்றவர்களுக்குக் கொடுக்ககூடாது. மேலும் அப்பொருளினை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்தில் மாற்றி வைக்கக் கூடாது. ஏனெனில் அப்படிச் செய்வதினால் திருட்டுக் குற்றம் அல்லது திருடும் ஆசை ஏற்படக் கூடும்.

8. தன்னுடைய அல்லது பிறர் வீட்டிலிருந்து வெளியே செல்லும் போது, தாய் – தந்தையரிடம் அல்லது வீட்டுச் சொந்தக் காரரிடம் நான் (இவ்வளவு காலம் இந்த ஊருக்கு அல்லது இடத்திற்குச்) செல்லுகிறேன் எனக் கூறிச்செல்ல வேண்டும்.

9. சாலையில் செல்லும் போது சாலையின் இடது புறத்தில், அதிக வேகமில்லாமலும் மிகக் குறைவான வேகமும் இல்லாமல், மெல்ல மீண்டும் மீண்டும் நன்கு பார்த்துக் கொண்டே கருணை உணர்வுடன் நடந்து செல்ல வேண்டும்.

10. சாலையில் நடுவில் நிற்கக் கூடாது அல்லது உட்காரக்கூடாது. வாகனத்தையும் நிறுத்தக் கூடாது. மேலும் மலம், மூத்திரம் கழிக்கக்கூடாது, ஏனெனில் இப்படிச் செய்வதினால் ஆண்கள், பெண்கள் அல்லது விலங்கு முதலான உயிர்களுக்கு பாதை ஏற்படக்கூடும்.

11. இரவில் ஒவ்வொரு நாளும் 9–10 மணிக்குப் பிறகு காலங்கடந்து வீடு முதலியவற்றிற்கு வரக்கூடாது. ஏனெனில் அதிக ஒலி ஏற்படுவதினால் வீட்டிற்கு அக்கம் பக்கத்திலுள்ளவர்களுக்கு தொந்திரவு ஏற்படுகிறது.

12. அழுக்கான உருவமுடையவர், சினிமா நடிகர் ஆகியோர்களைப் பார்க்கக்கூடாது ஏனெனில் இப்படிப்பட்ட படங்களைப் பார்ப்பதினால் குழந்தைகளின் தாய் –தந்தையர் மற்றும் குழந்தைகள் முதலானோர் ஒழுக்கங்களை விட்டு விட முடியும். மேலும் குழந்தைகள் தாய், தந்தையர்களிடம் காட்டும் பணிவும் காணாமல் போய்விடுகிறது.

13. தன்னுடைய முக்கியமான உறவினர்களை விட்டு விட்டு, மற்ற தனியாக இருக்கின்ற பெண், ஆணிடமும் மற்றும் தனியாக இருக்கின்ற பெண்ணிடம், ஆணும் தனிமையில் பேசக் கூடாது. ஏனெனில் ஒழுக்கத்தில் பயமேற்படாது போய்விடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

14. அந்நியர் எவருடையவரது வீட்டில் வற்புறுத்தி அழைத்தப் பிறகே உணவு உண்ணல் வேண்டும் விரதமில்லாத சிராவகர் எவருடைய வீட்டிலாவது அதிகநாட்கள் தங்க நேரிட்டால் அந்த வீட்டின் முக்கிய அங்கத்தினரிடம் செல்வம், பணம் அல்லது உணவுப் பொருட்களை வழங்க

வேண்டும். அந்த இல்லறத்தார் அங்கு தனது சக்திக்கு ஏற்ப குறைந்த அல்லது அதிகமான, ருசியுள்ள அல்லது ருசியற்ற ஆகாரம் தயாரித்து அளித்தாலும் முடிவில் அவருக்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும். அதனால் வருங்காலத்தில் வாத்சல்யம் உண்டாகும். ஏனெனில் நாகரீகம் கருதி இதுவும் கூட ஒரு பண்பான நடத்தையாகும்.

15. ஒருவருடைய சமையலறையில் கூட, அதன் சொந்தக்காரரின் அனுமதி இல்லாமல் உள்ளே செல்லக் கூடாது. மேலும் எந்தப் பொருளையும் எடுக்கவும் கூடாது மற்றும் சாது முதலானவர்களுக்கு கொடுக்கவும் கூடாது.

16. சாஸ்திர நூலிற்கு மேலே உலகியல் புத்தகங்கள், பத்திரிகைகள் வைக்கக் கூடாது.

17. எவரிடமாவது ஏதாவது ஒரு பொருளை இவ்வளவு நாட்களில் திருப்பிக் கொண்டு வந்து விடுகிறேன் என எடுத்துக் கொண்டு வந்தால், அதனை அந்த வரையறுத்த நாட்களுக்குள், எச்சரிக்கையின்மையால் சிறிது காலதாமதமாகிவிட்டால், பொருளின் சொந்தக்காரரிடம் நல்லவிதமாக மன்னிப்பு கோரவேண்டும். இதனால் எதிர்காலத்தில் கொடுக்கல், வாங்கலில் பரஸ்பரமான தடங்கல் மற்றும் மனக்கசப்பு ஏற்படாது.

18. பிற சாதி திருமணம், விதவை மறுமணம், இரவு உண்ணல், விருந்தில் பூமிக்கடியில் விளைந்த கிழங்கு முதலியவற்றின் உபயோகம், சாவு விருந்து, வரதட்சனை முறை, கருச்சிதைவு, முதலியவை இருக்குமானால் ஜைன ஆசாரப் (ஒழுக்கம்) படி மற்றும் அகிம்சைக்கு ஊறுவிளைவிப்பதனை விலக்கி தருமத்தினைப் பரப்ப வேண்டும்.

19. தன்னைக் காட்டிலும் பெரியவர்களான தாய், தந்தை, சகோதரன், உறவினர் முதலியவர்களிடம் சர்ச்சை செய்ய வேண்டுமெனில் வணக்கமாக பணிவாக கீழே பார்த்துப் பேச வேண்டும். ஏனெனில் இது அவர்களுக்கு வணக்கம் செலுத்துவது ஆகும். மேலும் இது ஒரு பண்பான நடத்தையும் ஆகும்.

20. மகன், மகள் பிறப்பதற்காக திருமணம் செய்ய ஏற்பாடு செய்வது தரும மார்க்கம் ஆகாது. பிரம்மசரிய விரதம் ஏற்பதே உண்மையான தரும மார்க்கமாகும்.

21. எப்பொழுது தன்னைக் காட்டிலும் வயது முதியவர்கள், தியாகி, விரதிகளிடமும், சம வயதுள்ளவர்களிடம் பேசும் பொழுது அவர்களை ஒருமையில் விளித்து அழைக்கக் கூடாது. ஏனெனில் இது அவிநயம் அல்லது மரியாதையின்மையின் அடையாளமாகும். அவர்களை எப்பொழுதும் பண்மையில் அழைக்க வேண்டும். இதுதான் நாகரீகமான பண்பான நடத்தையாகும்.

22. நன்டைத்தையுடையவர்களை தன்னுடைய கைகளினால் அணைக்கக் கூடாது ஏனெனில் அவர்கள் ஸ்வ–பர (தான் மற்றும் பிறவற்றினை) கெடுக்கக் கூடியவர்களாகும். மேலும் அவர்களிடம் இருக்கும் அழுக்கு ஏதாவது ஒரு வியாதியினை தோற்றுவிக்கக் காரணமாக இருக்கும்.

23. மகான்களின் ஜன்ம பூமி பாரத தேசத்தின் சிறந்தவர்களுக்கு மரியாதை செலுத்துவதற்கு ஏதுவாக ஆண்களை பெண்கள் போலவும், பெண்களை ஆண்கள் போலவும் வேடமேற்பது கூடாது.

சிறப்புரை : இங்கு தார்மீகம் மற்றும் சமுதாய இடம் தொடர்பான சிறந்த அனுபவத்திலிருந்து பண்பான நடத்தைகள் (நைதீக சாஸ்திரம்) எழுதுப் பட்டிருக்கின்றன. அவற்றினை எவர், நன்கு கடைபிடித்து ஒழுகுகின்றாரோ, அவர் பாபத்திலிருந்து தப்பிக்கிறார் மேலும் சமுதாய இடத்தை உயர்ந்த நிலையை அடையச் செய்கிறார். பழைய காலத்து குருகுலங்களில் இவ்விதமான பண்பாண நடத்தைகளின் மற்றும்

ஒழுக்கங்களின் கல்வியே போதிக்கப்பட்டு வந்திருக்கிறது.

7. பாபத்தினை விட்டுவிடவும் தீய கதியினை தடுக்கவும் இலட்சியமாகக் கொண்டுள்ள ஜைன ஆத்மாக்களை அடையாளங்காணுவதற்கு பவ்விய ஆத்மாக்கள் செய்ய வேண்டியது யாது?

எல்லா ஜைன பவ்வியதாத்மாக்கள் கீழ்கண்ட கடமைகளை கடை பிடிக்க வேண்டும்.

1. அகிம்சையினை கடை பிடிக்கவும் மற்றும் பாபங்களிலிருந்து தப்பிக்கவும் எட்டு மூல குணங்களை (சாராயம், மது, மாமிசம் மற்றும் ஆலன், அரசன், கள்ளி, அத்தி, கல்அத்தி ஆகிய பால் உள்ள மரங்களின் பழங்கள்) உண்ணுதலை தியாகம் செய்ய வேண்டும்.
2. பாபத்திலிருந்து தப்பிக்கவும், உலகம் பழிப்பதிலிருந்து தப்பிக்கவும் அகிம்சையினை கடைபிடிக்க வேண்டும். மற்றும் அரச தண்டனையிலிருந்து தப்பிக்க ஏழுவியசனங்களை (தீய பழக்க வழக்கங்களை) அதாவது சூதாடுதல், திருடுதல், வேட்டையாடுதல், புலால் உண்ணுதல், கள் குடித்தல், பிறர்மனை விரும்புதல் மற்றும் பரத்தையர் தொடர்பு ஆகியவற்றினை தியாகம் செய்ய வேண்டும்.
3. ஆண்கள் பிற பெண்களை அதாவது தன் வயதிற்கு மேற்பட்டவர்களை தாயாகவும் அல்லது சகோதரியாகவும், சம வயதுள்ள பெண்களை சகோதரிகளாகவும், குறைவான வயதுள்ளவர்களை சகோதரி அல்லது மகளாகவும், பாவிக்க வேண்டும். இது போலவே பெண்களும் ஆண்களை தந்தையாகவும், சகோதரனாகவும் மற்றும் மகனாகவும் பார்க்க வேண்டும்.
4. பாபவினை அழிப்பதற்காகவும், முக்தி கிடைப்பதற்காகவும், தினம் ஆலயத்திற்கு வந்து வீதராக பகவானின் அல்லது வீதராக தேவ – சாஸ்திர – குரு ஆகியவர்களை தரிசனம் செய்ய வேண்டும்.
5. குளித்து விட்டு, கை கால்கள் முகங்களை சுத்தம் செய்து கொண்டு, தூய ஆடைகளுடன் ஆலயம் வர வேண்டும்.
6. ஜைன தருமத்தினை கடைபிடிப்பதற்காக ஆலயத்தில் இம்சையினால் வருகின்ற தோலினால் ஆன பொருட்கள் மற்றும் நகப் பூச்சு, உதட்டுப் பூச்சு முதலியவற்றினை உபயோகிப்பதிலிருந்து விலகி விட வேண்டும்.
7. ஆலயத்தில் பகவான் முன்னர் இருக்கும் வரை உலகியல் தொடர்பான பேச்சுகளை விட வேண்டும்.
8. பகவான் மற்றும் முனி மகான்களை வணங்கும் போது நமோஸ்து – நமோஸ்து – நமோஸ்து எனக் கூற வேண்டும் மற்றும் ஐலக், சுல்லக் ஆகியவற்களை வணங்கும் சமயம் இச்சாமி எனச் சொல்ல வேண்டும். இது போலவே ஆர்யிகைகளுக்கு வந்தாமியும், சுல்லிகியர்களுக்கு இச்சாமி எனக் கூறவேண்டும். ஜைன பாடசாலையில் படிக்கும் மாணவர்கள், இல்லறத்திலிருக்கும் குருஜியிலிருந்து மாணவர்கள் மற்றும் சிராவகர்கள் ஒருவருக்கொருவர் ஜெய் ஜினேந்திரா எனச் சொல்லிக் கொள்ள வேண்டும்.
9. சாஸ்திரம் (ஜினவாணி)க்கு விநயத் (பணிவுகாட்டல்) திற்குக் காரணம் மற்றும் தன்னுடைய ஞானம் விரைவில் வளர்ச்சியடைய காரணமாக இருக்கும தார்மீக (ஆன்மீயம்) புத்தகங்களை பூமி மீது வைக்கக் கூடாது. தாண்டிச் செல்லக்கூடாது. மற்றும் அசுத்தமான நிலைமையில் தேவ– சாஸ்திர – குரு மற்றும் ஜபமாலையினை தொடக்ககூடாது.
10. பெண்கள் பகவானை மற்றும் குருவினை தரிசனம் செய்யும் போது ஐந்து, ஏழு முழம் தூரத்திலிருந்து தரிசனம் செய்ய வேண்டும்.
11. சிராவகர்கள் தினந்தோறும் விடியற்காலை, மதியம் மற்றும் சாயங்காலம் ஆகிய மூன்று காலங்களிலும் ஆலயம் வர வேண்டும். இம் மூன்று காலங்களில் விடியற்காலையிலும் ஆலயம்

வருவது மிகச் சிறந்ததாகும்.

12. சூரியன் மறைந்த பிறகு காற்றில் அநேக நுண் உயிர்களின் தோற்றம் மிக அதிகமாக இருக்கும். அவ்வுயிர்கள் உணவினை அசுத்தமாக்கி விடுகிறது மற்றும் இவ்வசுத்த உணவினை தயார் செய்யும் போது அதிகமாக இம்சையின் குற்றம் வருகிறது. மற்றும் இன்றைய விஞ்ஞானம் (அறிவியல்) படியும் இரவில் உண்பதால் உடல் சௌக்கியமில்லாமல் போய் விடுகிறது. ஆகையினால் இரவு உண்ணுதலை தவிர்க்க வேண்டும்.

13. இரவில் 9–10 மணிக்கு முன்னர் உறங்குவது உசிதமில்லை, ஏனெனில் ஆறு மணியிலிருந்து 9 மணி வரை ரௌத்ர (பயங்கரமான) ஜாமம் நடக்கிறது. ரூந்த்ர (அழுகை) உணர்வு மற்றும் ரௌத்ரம் அதாவது குரூரமான மற்றும் பயங்கரமான உணர்வு ரௌத்ரம் எனப்படுகிறது. இப்படிப்பட்ட குரூரமான உணர்வு ஆறுமணியிலிருந்து ஒன்பது மணிவரை தூக்கத்தில் ஏற்படுகிறது. ஆதலால் 9 மணியிலிருந்து 12 மணிவரை ராட்சஸ ஜாமத்தின் சிறு பகுதி கழிந்த பிறகு அதாவது 10.00 லிருந்து 10.30 மணியில் தூங்கச் செல்ல வேண்டும். விடியற்காலை 6.00 மணிக்கு முன்னர் மனோஹர ஜாமத்தில் தூக்கத்திலிருந்து விழித்தெழ வேண்டும்.

14. பூசையின் போது கந்தோதகம் (சந்தனம் மற்றும் நீர் கலந்தது) தவிர வேறு சப்பிட, குடிக்கக் கூடிய பொருட்களை பகவான் அல்லது பஞ்ச பரமேட்டியர்களிடமிருந்து இரண்டு நான்கு முழங்கள் தொலைவில் காண்பிக்க வேண்டும்.

15. உண்மையான தேவர், சாஸ்திரம், குரு ஆகியவர்களுக்கு பூஜையில் தானமாகச் சமர்ப்பிக்கப்பட்ட பொருள்களை (நிர்மால்யம்) எடுத்து பயன்கொள்ளக் கூடாது.

16. தினந்தோறும் ணமோக்கார மந்திரத்தினை துன்பத்திலிருந்து விலகவும் மற்றும் புண்ணியம் வந்தடையவும் மேலும் வினை உதிர்ப்பிற்காகவும் ஜபம் செய்ய வேண்டும்.

சுபம்..

திங்கள் மும்மாரி பெய்க; திருவறம் வளர்க செங்கோல்
நன்கினிது அரசன் ஆள்க; நாடெல்லாம் விளைக மற்றும்
எங்குள அறத்தினோரும் இனிதூழி வாழ்க எங்கள்
புங்கவன் பயந்த நன்னூல் புகழொடும் பொலிக மிக்கே!



ஸ்ரீ அகளங்கர் அநேகாந்த மன்ற வெளியீடுகள்

1. அனேகாந்தமும் ஸ்யாத்வாதமும்
2. தமிழக ஜைன க்ஷேத்திரமாலை (முதல் பாகம்)
3. நற்கட்சி
4. குணஸ்தானம்
5. இல்லற நெறி
6. தமிழக ஜைன க்ஷேத்திரமாலை (இரண்டாம் பாகம்)
7. உயிரின் இயல்பு
8. ஜம்பு நாமர் சரிதம்.